ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே வரவரமுநயே நம:

பரமகாருணிகரான

திருவரங்கத்தமுதனாரருளிச்செய்த

இராமாநுசநூற்றந்தாதி மூலமும்

இதற்கு

பெரியஜீயர் அருளிச்செய்த உரையும்,

பிள்ளைலோகாசார்ய ஜீயரருளிச்செய்த
வ்யாக்யாநமும்;

சித்ரகூடம்,
கந்தாடை — திருவேங்கடாசார்யரால்
பரிசோதிக்கப்பட்டு

சென்னை மெமோரியல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன

1891

மறுபதிப்பு : 1999

பகுதான்ய வருஷம் பங்குனி மாதம் விசாக நக்ஷத்திரத்தன்று
(4–4–99) ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமியது
ஷஷ்டி அப்தபூர்த்தி நினைவு மலராக வெளியிடப்படுகிறது.

வெளியீடு :

ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ

214, கீழ உத்தர வீதி, ஸ்ரீரங்கம்

விலை:—80/— தபால்செலவுதனி.

http://acharya.org

இராமானுசார்ய திவ்ய சரிதை

இந்த நூலில் இராமானுசர் சரித்திரத்தை மிகவும் விரித்து அருளிச்செய்துள்ளார் பிள்ளைலோகம் சீயர். இவ்வாசிரியருக்கு மூலம், இராமானுசர் காலத்திலேயே கருட வாகன பண்டிதர் எழுதிய திவ்யசூரி சரிதம் முதலான வடமொழிநூல்களும், பெரிய திருமுடி அடைவும், பின்பழகிய சீயருடைய ஆறாயிரப்படி குருபரம் பராப்ரபாவமும். இராமானுசர் வரலாற்றையே விரித்துக் கூறும் பல பாடல்கள் இதில் அமைந்துள்ளன. இவை இவரே செய்தனவா, அல்லது வேறு ஏதேனுமொரு நூலிலிருந்து மேற்கோளாக எடுத்துத் தருகிறாரா என்பது சொல்ல முடியவில்லை. இரண்டொன்றைக் கீழே தருகிறோம். பேரருளாளர் (அத்திகிரி வரதராசப் பெருமாள்) இராமானுசர் கோயிலுக்கு (திருவரங்கத்துக்குப்) போக விடை கொடுத் தனுப்புகிறார்

சந்ததியில்லா மனைமகள் போலே
        நடமுலையில்லாமடமகள் போலே
செந்தனலில்லா ஆகுதிபோலே
        தேசிகனில்லாவோதுகைபோலே
சந்திரனில்லாத்தாரகை போலே
        இந்திரனில்லா உலகம்போலே
எங்கள் இராமானுசமுனி போனால்
        இப்புவிதானினி எப்படி ஆமோ?.

இராமானுசர் பிரிய மனமின்றிப் பிரிந்து செல்கிறார்.

திக்கு நோக்கித் திரும்பித் திரும்பியே
        தேவராசர்தம் கோயிலை நோக்கியே
செக்கர் மேனி மிகப்பெருங் கைகளால்
        சேர்ந்த கண்கள் பனிநீர் சொரிந்திட
மிக்க கோயில் பெருவழி தன்னிலே
        வேதம்வல்ல மறையோர்கள் தம்முடன்
புக்க கத்துக்குப் போகிற பெண்கள் போல்
        போயினார் பெரும் பூதூர் முனிவனார்.

http://acharya.org

இவையன்றி, இராமானுசரைப் புகழும் பாடல்கள் மிகப்பல உள்ளன. யாவும் பிரபந்த அமைப்பு உடையவை. சில பின் வருவன:

தாலாட்டுப் பாடல்;

அத்திரிசூழ் ஞால மனைத்தவ தாரமெனச்
சித்திரையில் ஆதிரைநாள் வந்துதித்த தேசிகனே,
கேசவனார் வாழக் கிளைவாழக் கீர்த்தி மிகும்
ஆசூரி வந்துதித்த ஆரியனைச் சொன்னாரா?.

திருமஞ்சனக் கவி:

சூத்திரப் பரசமய நிரசநத் தால்வந்த
கொடுவிடாய் தீருகைக்கோ
கூற்றம் பெருங்கலியை மாற்றிப் புகட்ட கொடுஞ்
சந்தாப மாறுகைக்கோ
மத்தளத் தொடு முரசுடக்கை மல்லரி
பேரிகைகள் திமிதிமெனவே
விண்ணவர்கள் மலர்தூவ ஆவலொடு கின்னரர்கள்
தனாதன என்றேத்தவே
எத்திசையு மெண்ணில் எழுபத்து நால்வருடன்
எந்தை கந்தாடையாண்டான்
எப்பொழுது மினிதாக ஏற்றகைங் கர்யங்கள் செய்து
இணையடி தொழுதேத்தவே
பத்தியுடை யடியவர்கள் சுற்றி நீராகவே
பண்ணுறும் பரந்தாமனே
பரவாதி மத்தகஜ பஞ்சானனப் பெரிய
பாபத்ரி வச்ராயுதா
முத்திதனை வித்தார மாகவரு ளண்ணலே
முடிமன்னர் பணிபாதனே
முனிவரி பரிவொன்ற எதிராசனே நீந்
நின்ற திருமஞ்சனம் செய்வதே.

திருமஞ்சனக் கவி, வாகனக்கவி, கட்டியம் முதலாயின விருத்த மாயிருக்கும். நான்கடியின் மிகுந்து போதலுமுண்டு.

http://acharya.org

திருச்சின்னம்.

யதிராசன் வந்தான் யதிராசன் வந்தான்
யதிராசன் வந்தான்
எதிராரு மில்லாதான் வந்தான்
மதிராசி இராமாநுசன் வந்தான்
ஆமா றறியும் பிரான் வந்தான்
சீமான் சரணாகதி தந்த பிரான் வந்தான்
அரணாகும் கழலோன் வந்தான்
முரணாகும் வாதியரை வெல்லுமவன் வந்தான்
மாநிலத்தில் வேதியரில் மிக்கமகன் வந்தான்.
வாய்த்த பெரும்பூதூரில் மன் வந்தான்
ஏத்து மிளையாழ் வாரென்று மெம்பிரான் வந்தான்
வளையாழி ஏந்திய மால் வந்தான்
நளினமுக வெம்பெருமான் எங்கள்
எதிராசன் வந்தான்
வம்பொருநாட் செய்மம மாவலன் வந்தான்
உம்பரெல்லாம் நோக்கும் இராமாநுச
முனிவனோ வந்தான்
வாக்கிலுயர் சூரியில் மன்னவன் வந்தான்
பாக்குளுடையவரா மென்று மொரு
முதல்வன் வந்தான்.

வாழித்திருநாமம்.

நிழல் கொடுத்துப் புகழ்படைத்து நின்றபிரான் வாழியே
நின்றிருந்து பட்டோலை கொண்டபிரான் வாழியே
களிக்குமறைப் பொருள் விரித்துக் கீண்ட பிரான் வாழியே
கேள்வமிகு மாறன் செந் தமிழ் செய்தான் வாழியே
அழித்தலுற்ற வன்றிசைக ளாக்கினான் வாழியே
ஆளவந்தா ராக்கினையை அறவளர்த்தோன் வாழியே
கொழிக்குமணி மாடம்சூழ் பூதூரான் வாழியே
துரைகழந்துப் பாதுகமாய்க் கூடினான் வாழியே.

பல்லாண்டு முதலான பாடல்களும் உள்ளன.

http://acharya.org

சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் இந்நூலாசிரியர் இராமானுசர் பாடியதாக அனேகம் பாடல்கள் பாடியிருக்கிறார். திருக்குருகூரை நண்ணியதும், 'இதுவோ திருநகரி' என்று இராமானுசர் பாடியதாக வரலாறு. இராமானுசர் ஆண்டாளைப் பின்வரும் பாடல் சொல்லி மங்களாசாசனம் பண்ணினார் என்று சொல்கிறார்.

வாழி திருப்பாவை பாடு மடப்பாவை
வாழி யரங்க மணவாளன் – வாழியவள்
மாடுநிற்கும் புள்ளரையன், வாழி பெரியாழ்வார்
பாடுநிற்கும் வேதாந்தப் பா.

கிடாம்பிப் பெருமாளைப் புகழ்ந்த ஒரு பாடல்.

வேதாந்தங்கொண்டு வடதிசைப் போதந்து மீண்டுவந்தவன்
போதன் பொழிற்றும்பை சூழ்வந்த கொண்டுதன் புன்மைகெட
யாதானு மாகிறு மெய்ப்பேற்றை யெய்தென் றெழுதிவருள்
தாதாருமையன் கிடாம்பிப் பெருமாள் தயாநிதியே.

இராமானுசர் முதலிகளை அழைத்துக் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லுங்காலை அவர்கள் சோர்ந்து போனார்கள் போலும். அவர் 'இடமணித்து' என்ற அகத்துறையில் தலைவன் தலைவிக்குக் காட்டுவது போல் காட்டுவதாக ஒரு பாடல்.

முத்தாரும் வெள்ளைகைகளை நடந்தோம் முதுபாலை நிலம்
எத்தூரம் போதும்முன் செல்லுகின்ற தூரம் எளிதின்று
செய்த்தூரம் போருந் திருமல்லிநாட் டுறைந்த வில்லி
புத்தூரும் பச்சைத் துழாய்மணம் நாறிய பொய்கைகளுமே.

ஆண்டாளைப் பாதாதி கேசமாக சேவிக்குமிடத்தில் ஒரு பாடல்.

மெல்லிய பஞ்சடி யுந்துவ ளாடையும் மேகலையும்
வல்லினை வென்ற மருங்குமுத் தார வளமுலையும்
சொல்லியல் வண்மையும் வில்லிபுத்தூரம்மை தோளுதும்
முல்லையை வென்ற நகையுமெல்லாமென்றன் முன்னிற்குமே.

http://acharya.org

கோவிந்தப் பெருமாள் எம்பார் ஆகியபின் அவர் நிலையைக் கண்ட முதலிகள் அவரைப் போற்ற அவர் தம்மையே சிலாகித்துப் பாடியதாக ஒரு பாடல்:

பற்பமெனத்திகழ்பைங்கழலுன்றன் பல்லவமேவிரலும்
பாவனமாகிய பைந்துவராடை பதிந்த மருங்கழகும்
முப்புரிநூலொடு முன்கையிலேதிகழ் முக்கோல் தன்னழகும்
முன்னவர்தந்திடு மொழிகள் நிறைந்த முறுவல் நிலாவழகும்
கற்பகமேவிழி கருணைபொழிந்திடு கமலமுகத்தழகும்
காரிசுதன் கழல்சூடியமுடியுங் கனநற் சிகைமுடியும்
எப்பொழுதும் எதிராசன் முகத்தழகென்னிதயத்துளதால்
இல்லையெனக்கெதிரில்லையெனக்கெதிரில்லையெனக்கெதிரே

இராமானுசர் மேல்நாட்டிலிருந்து (திருநாராயணபுரத்திலிருந்து) கோயிலுக்கு(திருவரங்கத்திற்கு)த் திரும்பியபோது கோயிலார் அவரைப் போற்றுகிறார்கள்:

வையம் குருடன்றோ மாமறையும் பொய்யன்றோ
ஐயனுரைத்ததமிழ் ஆரறிவார் – வையத்துக்
கூன்றுரகோ லெந்தை எதிராசர் ஆதரித்த
மூன்றுரகோல் காண்பதற்கு முன்.

இவர் மங்களாசாசனம் பெற்ற தலங்கள் யாவும் சென்று வழிபட்டார் என்று ஒவ்வொன்றாய் விரித்துக் கூறுகிறது. இதில் மிகைப்படுத்திய செய்திகளும் உண்டு. இவருடைய சித்தாந்தத்தை பிரமாணத்திலே தர்சிப்பித்ததைப் பிரத்தியட்சத்திலும் தரிசிப்பிக்க வேண்டும் என்று கேட்ட அரசன் வித்வான்களின் பொருட்டாக ஒரு ராத்திரியிலே வேதாந்த சாரத்தைத் தம்முடைய திருக்கைகளிலே விரித்தெழுதி அதைச் சரசுவதியின் கரத்திலே வைத்துக் கதவைச் சாத்தி மறுநாள் திறந்து பார்க்க, அது சரசுவதியின் சிரசிலே சிரோ பூஷணமாயிருந்ததாம் கண்டு இராமானுசர்

நாம்பெற்ற தன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்து
ஓம்பியிருந்தெம்மையோதுவித்து – வேம்பின்
பொருணீர்மையாயினும் பொன்னாழி பாடென்று
அருள்நீர்மை தந்த அருள்.

http://acharya.org

என்று பாடித் துதித்தாராம். பெரியநம்பியிடம் இவர் இரண்டாம் முறையும் துவயார்த்தம் கேட்கிறார். உடையவர் திருவேங்கட யாத்திரை சென்றபோது, பருத்திக் கொல்லையம்மாள் என்ற பக்தர் திருமாளிகைக்கு எழுந்தருளினார் அவர் அந்நேரம் தெருவில் உபாதானம் எடுக்கச் சென்றிருந்தார். அவருடைய தேவிகள் மிகவும் கந்தலான புடவை மட்டுமே அணிந்திருந்த படியால், வெளியிலே வந்து இவரை உபசரிக்க லச்சித்து ஒளிந்திருந்தார். உடையவரும் தெரிந்து ஒரு புடவையை எறிய அவ்வம்மையார் அதை அணிந்து வெளிவந்து இவரை உபசரித்துச் சமையல் செய்து உண்பித்தார் என்பது ஒரு வரலாறு. அக்காலத்துப் பாகவதர்களின் வறுமை நிலையை விளக்கிக் காட்டுகிறது இச்செய்தி.

உடையவரின் ஆசாரியர்களுள் ஒருவரான பெரியதிருமலை நம்பிகள் இவர் வருவதை அறிந்து, வழியில் எதிர் சென்று தீர்த்தப் பிரசாதம் கொடுத்து வரவேற்றபோது, இவர் "தேவரீரே எழுந்தருள வேண்டுமோ, ஒரு சிறியார் இல்லையோ?" என்று கேட்டார். அவரோ, "நாலு வீதியிலும் ஆராய்ந்தவிடத்து என்னில் சிறியாரைக் கண்டிலேன்" என்றாராம். எத்துணைப் பணிவும் அதனாலேயே உயர்வும் சிறப்பும் பொருந்திய சொற்கள்.

ஒருநாள் கோவிந்தப் பெருமாள் நந்தவனத்தில் ஒரு பாம்பின் வாயில் கைவிட்டுப் பிறகு தன் பின் வருவதைக் கண்டு உடையவர், 'இதுவென்ன' என்று கேட்டபோது, அவர் "ஒரு பாம்பு நாக்கை நீட்டிக் கொண்டு நோவுபடும்படி கண்டு, சமீபத்திலே போய்ப் பார்க்குமளவில், அதன் நாக்கிலே முள்ளிருக்கக் கண்டு அந்த முள்ளை வாங்கினேன்" என்று விண்ணப்பம் செய்ய, உடையவரும், "இவருடைய தயை இருந்தபடி என்!" என்று மிகவும் உகந்தருளினாராம்.

'பின்னையுமொருநாள் கோவிந்தப்பெருமாள், திருமலை நம்பிக்குத் திருப்படுக்கை படுத்துத் தாம் முதலடியிலே படுத்துக் கொண்டு பார்க்க; உடையவரும் இத்தை ஒருநாள் கண்டருளி திருமலை நம்பிக்கு விண்ணப்பஞ் செய்ய; திருமலை நம்பியும் கோவிந்தப்பெருமாளை அழைத்தருளி, "நீர் நமக்குப் படுத்த படுக்கையிலே படுத்துக் கொண்டிருந்தீர் என்று கேட்டோம், இப்படி

http://acharya.org

செய்யலாமோ? இதுக்குப் பலமேது?" என்று கேட்டருள, கோவிந்தப்பெருமாளும், 'நரகம்' என்ன; கோவிந்தப் பெருமாளும், "தேவரீர் திருமேனியிலே ஒன்று உறுத்துதல், கடித்தல் செய்யாமல் கண் வளர்ந்தருளப்புக்கால் அடியேனுக்கு நரகமே அமையும்" என்று விண்ணப்பம் செய்ய, நம்பியும் 'இதொரு ப்ரதிபத்தி இருந்தபடியென்' என்று மிகவும் உகந்தருளினார். சபரியின் செயல் இங்கு நினைவு கூரத்தக்கது.

இராமானுசர் வீதியில் 'சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்' என்று திருப்பாவையை அனுசந்தானம் பண்ணிக்கொண்டே நின்றவளவில் பெரியநம்பி திருமாளிகையில் அவர் மகள் அத்துழாய் கதவு திறக்கவும் கண்டு மூர்ச்சித்து விழுந்தார் என்பது திருப்பாவை அரும்பதவுரை. வார்த்தா மாலையில் உள்ளது போல் இந்நூலிலும் திருக்கோட்டியூர் நம்பி குமாரத்தியாகிய தேவகிப்பிராட்டி கதவு திறக்க நேர்ந்தது என்று சொல்லப்பட்டுள்ளது.

கோவிந்தப் பெருமாளைத் திருத்திப் பணி கொண்டு சந்நியாச ஆசிரமம் கொடுத்து உடையவர் தம்முடைய திருநாமத்தையும் கொடுத்தாராம். அப்போது அவர் "உமது திருவடி நிழலையே பற்றி இருந்த அடியேனுக்குத் திருவடி நிழலே போதும்" எனவும், இவர் தம் பெயரின் (எம்பெருமானார் என்பதன்) ஆத்யந்தத்தை மட்டும் வைத்து 'எம்பார்' என்று பெயரிட்டாராம்.

சுவையான வழக்குக்களும் பல இந்நூலின் கண் உள்ளன. திருமலைமேல் இராத் தங்கல் கூடாது என்பது ஒன்று; இன்றும் கூட உள்ளது. 'திருச் சித்ரகூட கிரியிலே பெருமான் பிராட்டி கையைப் பிடித்துக் கொண்டு உலாவியருளினாப் போலே, அத்திகிரியிலே திருக்கச்சி நம்பிக்கு த்ருஷ்டி கோசரமாய் இவர் ஆனந்திக்கும்படி பெருந்தேவியாரான பெரியபிராட்டியின் திருக்கையைப் பிடித்துக் கொண்டு வையமாளிகையிலே பேரருளாளர் தாம் வளைய வளைய உலாவியருள்வது' என்று குறிப்பிட்டுள்ளார். இதுவும் இருபதாம் நூற்றாண்டுக் கண்ணோடு பார்த்துச் சுவைக்கக் கூடிய செய்தி. தேசாந்தரகதனான புத்ரன் வருகிறான் என்றால் மாதா பிதாக்கள் கான

http://acharya.org

ஆசைப்படுமாப் போலே திருவரங்கநாதன் இராமானுசரைக் காண ஆசைப் பட்டான் என்கிறார்.

கோவிந்தபட்டர் உடையவருடைய சிறிய தாயார் புதல்வர். காசியிலே கங்கையில் இவர் நீராடியபோது கையில் ஒரு சிவலிங்கம் வர அதைப் பூசை செய்துகொண்டு இவர் காளத்தியில் தங்கியிருந்தார். உள்ளங்கை கொணர்ந்த நாயனார் என்பது பெயர். இவரை வைணவத்துக்கு மாற்றினால், தம் சமயத்துக்குப் பலம் என்று உடையவர் கருதினார். அக்கருத்தை முற்றுவிக்கும்படி திருமலையி லிருந்த பெரியதிருமலை நம்பிக்குச் சொல்லியனுப்பினார். உள்ளங்கை குளிர்ந்த விடத்தே சுருள் நாற்றம் எழும்பிற்று. அவர், “ருத்ராபிஷேகக் குடமெடுத்து வரக்கண்டு, நம்பியும் கோவிந்தப் பட்டரைப் பார்த்து ‘கொன்றைச் சடைமுடி யானைக் குளிர நீராட்டினால் இன்றுனக்கு உண்டாகும் பயனென்?’ என்றருளிச் செய்ய, அவனும் இப்பாசுரம் கேட்டு விஸ்மயமானமுகனாய், இவரையும் ஏறப்பாரா நின்று கொண்டு போனான்.

திருமலைநம்பியும் அவனிடம் பக்குவமாகப் பேசக் கொடுத்தார். பின் ‘தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே’ என்ற பாசுரத்தை நம்பி சொல்லியபோது அவனும் திடுக்கென்று குதித்துக் கையில் படலிகையையும் கழற்றி எறிந்து. தரித்திருந்த ருத்ராக்ஷமா வடங்களையும் அலங்கலழிய வீசிப்போகட்டு ‘தகாது, தகாது’ என்று நம்பி திருவடிகளிலே அடைவு கெட விழுந்து புலம்பினான், பின்னால் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும்போது இவர் ‘இலந்தைக் கொட்டையும் ருத்ராக்ஷவடமுமாய் எளிவரவு பட்டு நின்ற நிலைமை’ என்கிறார்.

திருமலைமேல் நின்ற சிலை வடிவத்தை இராமானுசர் திருமாலாக நிரூபித்தார் என்ற நிகழ்ச்சியும் இதில் தெரிவிக்கப்படுகிறது.

வருணனை

பல இடங்களில் இவர் வருணனைப் பகுதிகளைப் பெரும் பான்மையும் வடமொழி விரவாமல் அடுக்கிச் சுவைபடச் செய்யுளோ சையாய்ச் சொல்வது படித்து இன்புறத் தக்கது.

http://acharya.org

கலியனுடைய திருவுருவ வருணனை :

அணைத்த வேலும் தொழுத கையும்
அழுந்திய திருநாமமும் ஓமென்ற வாயும்
உயர்ந்த மூக்கும் குளிர்ந்த முகமும்
பரந்த விழியும் இருண்ட குழலும்
சுருண்ட வளையமும் வடிந்த காதும்
அலர்ந்த காதுகாப்பும் தாழ்ந்த செவியும்
சரிந்த கழுத்தும் அகன்ற மார்பும்
திரண்ட தோளும் நெளிந்த முதுகும்
குவிந்த இடையும் அல்லிக் கயிறும்
அழுந்திய சீராவும் தூக்கிய கடுங்கோவையும்
தொங்கலும் தனி மாலையும் சாத்தின திருத்தண்டையும்
சதிரான வீரக் கழலும் குந்தியிட்ட கணைக்காலும்
குளிர வைத்த திருவடி மலரும் வாய்த்த மணங்கொல்லையும்
வயலாலி மணவாளன் வாடினேன் வாடி வாழ்வித்தருளிய
நீலக் கலிகன்றி மருவலர் தமுடல் துணிய வாள் வீசும்

பரகாலன் மங்கை மன்னனான வடிவே. (இது மணவாள மாமுனிகள் அருளிச்செய்தது என்பர் ஆன்றோர்).

ஆண்டாள் திருவுருவ வருணனை

பாடகமே பென்னப்படுமதான பாடகஞ் சேர் மெல்லடிகளையும், ஆடையுடுப்போம் என்று அவனுடுத்த மீதுக வண்ண ஆடையையும் அன்றிக்கே, மந்திரக் கோடியுடுத்த படியையும், என்கைப்பற்றி அவன் கையைப் பற்றப்படுமதாய் சூடகத்தோடே கூடின வெள்ளை வளைக் கைகளையும், அதிலே கழுநீர் பிடித்த அழகையும், அத்தோபாதி தோள்வளையோடே கூடி அழகிதாய் மருங்கிலே நீட்டி நேரே போகட்ட மற்றத் திருக்கை யழகையும், கொம்மை முலையுமிடையும், "என்னுடைய ஆழி சங்குத்தமற் கென்று உன்னித்தெழுந்தவென் தடமுலைகள்" என்று கொண்டாடுமதான திருமுலைத் தடங்களையும், அதின் மேலே பல்கலனும் யாம் அணிவோம் என்கிறபடியே அதில் அவன் தங்கும்படியான குங்குமக் குழம்பின் எழிலையும், அவன் பூட்டப்பூட்டின பல ஆபரணங்களையும் அதில் மேலாய்க் காரை பூணும் கண்டத்தினழகையும், அதுக்கு மேலே

http://acharya.org

'செவிப்பூவே' என்று அவன் தோள்களுக்கு அடைவான மாலையுற்றோடே கூடின திருச்செவி மலர்களையும், அவன் விரும்பிப் போடுமதான முத்தன்ன வெண் முறுவல் செய்ய வாயையும், அதிலழகுக்கு மேலே குமிழுமுகைக் கொள்ளை கொள்ளும் கொடி மூக்கையும் அத்தோடே சேர்ந்து செவியளவும் வளர்ந்து 'இளவேல் நெடுங்கண்கள்' என்றும் 'என்பொருகயல் கண்ணிணை' என்றும் சொல்லப்படுகிற திருக் கண்களையும், அதுக்கு மேலான நன்னுதலையும் திங்கள் திருமுகத்தையும், குழற்கோதை என்றும் படியான மயிர் முடியையும் மணமாலை சூடின கோலத்தோடே நிற்கிற சூடிக் கொடுத்த சுடர்க் கொடியை, பதிணம்மாணித்த மான வடிவழகைப் பாதாதி கேசாந்தமாக சேவித்தாள்.

காவிரிச் சோலைகளின் வருணனை

பொன்னுமாமணியும் முத்துமும் சுமந்து பொருதிரை மாநதி புடை சூழ்ந்தபடியையும் சந்தினோடு மணியும் கொழிக்கும் புனல் காவிரி என்றும், வண்டு பாடும் மதுவார் புனல் வந்திழி காவிரி என்றும், துளைக்கை யானை மருப்பும் அகிலும் கொணர்ந்துந்தி முன் திளைக்கும் செல்வப் புனல் காவிரி என்றும். பரந்த பொன்னிரந்து நுந்திவந்தலைக்கும் வார்புனல் என்றும், புண்ணந்துழாமே பொருநீர் என்றும், இப்படி ப்ரவஹிக்கிற திருக்காவேரியின் ஜல ஸம்ருத்தியையும், அதில் நண்டையுண்டு நாரை பேரவாளை பாய நீலமே அண்டை கொண்டு கெண்டை மேயும் படியையும், அதனருகில் அண்ட நாறும் பொழில்களையும். பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழில் களையும் அதில் போதில் வைத்த தேன் சொரியும் படியையும். அதனருகில் அங்கயல் பாய் வயலையும் அதில் சேவலொடு பெடையன்னம் செங்கமல மலரேறி ஊசலாடும்படியையும், திருமுகமாய்ச் செங்கமலம் திருநிறமாய்க் கருங்குவளை பொருமுகமாய் நின்றலரும் படியையும், திருவடி தன் திருவுருவும் திருமங்கை மலர்கண்ணும் காட்டி நின்று உருவுடைய மலர் நீலம் காற்றோட்டவோசலிக்கும் படியையும் - உரம் பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடி போலுயர்ந்து காட்ட வரம்புற்ற கதிர்ச் செந்நெல் தாள் சாய்த்துத் தலைவணங்கும் படியையும்-புது நாண்மலர்க் கமலம் எம்பெருமான் பொன்வயிற்றில் பூவே போல்வான்

http://acharya.org

வாதுநாயகம் பாவித்திருமாந்து பொற்சாய்க்கும் படியையும், அதில் பூமருவு புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும்படியையும், யாழினிசை வண்டினங்கள் ஆளம்வைக்கும்படியையும், எல்லியம் போதிருஞ் சிறைவண்டெம்பெருமான் குணம் பாடும் படியையும், மற்றும் வண்டினம் முரலுஞ்சோலை இத்யாதியான ஆராமங்களையும் கரை வழியே கண்டு கேட்டு அநுபவியா நின்றார்.

சொற்கள்

இந்நூல் அக்காலத்து வைணவ சமூகத்தில் வழங்கிய சொல்லாட்சிகளைக் காட்டும் கண்ணாடி போல் உதவுகிறது. முந்தை வைணவர் சொல்லாட்சிகளை இவர் அப்படியே காட்டுகிறார். போர என்பது ஒரு சொல். மிகவும் என்ற பொருளுடையது. இராமாயணத்தின் பகுதிகளை இவர் ஸ்ரீமத் ஆரணிய காண்டம், ஸ்ரீமத் சுந்தர காண்டம் என்றே வழங்குவார். அரங்கத்து அமுதனாரைப் பிள்ளைய முதனார் என்பார். வீராணத்தேரியை வீரவணத் தேரி என்பார். மனைவி என்ற சொல்லை மிகவும் மரியாதையாகவே குறிப்பிடுவது வைணவ மரபு. கூரத்தாழ்வானுடைய தேவிகள் என்று சொல்லும் போது பொருள் மனைவி என்பது பன்மையல்ல. ஒருமையே, விளியாக எப்போதும் சொற்கள் முதலிகாள் என்றே வரும்: முதலிகாள், வாரிகோள், அறிவிலிகோளே, போந்திகோளே, கேட்டிகோளே, பாரிகோள் (முதலிகளே. வாருங்கள், அறியுங்கள், போந்தீர்களோ, கேட்டீர்களோ, பாருங்கள் என்பது பொருள்). மூன்றாம் வருணத்தில் பிறந்த திருக்கச்சி நம்பிகள், தம்மைத் தளிகை (அமுது) செய்ய அழைத்திருந்த இராமானுசர் திருமாளிகை அடைந்து அவருடைய தேவிகளை விளித்து 'மதினியாரே! தளிகை படையுங்கள்' என்கிறார். இராமானுசர் முதலாம் வருணம்: இவரினும் ஆண்டில் மிகவும் இளையவர் மதினியார் என்பது உரிமை பாராட்டி அழைக்கும் சொல் என்று அறிகிறோம். ஸ்ரீபாஷ்யத்தை ஓரிடத்தில் சீபாட்சியம் என்று சொல்கிறார்.

உடையவர் வைபவத்தை முன்னிருந்தவர்களும் சொல்கிறார்களாம். அவர் பெருமையை அவர் சாதனைகளாலும் பிற்காலத்தார் வாக்காலும் உணர்தல் போதாது என்று ஆசிரியர் கருதியிருக்கிறார். எம்பெருமான்களில் நம்பெருமாள், திருவேங்கடமுடையான்,

http://acharya.org

பேரருளாளர், திருநாராயணப் பெருமாள், அழகர், திருக்குறுங்குடி நம்பி. இவர்கள் தமிழில் : பின் ரிஷிகள் வடமொழியில் சொல்கிறார்கள். நம்மாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், பெரியநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமலை நம்பி, திருமாலை யாண்டான், திருவரங்கப் பெருமாள், அரையர்: பிறகு இராமானுசருக்குப் பின் வந்தவர்கள், பின் சரசுவதி : நூலைப் பின்வரும் சொற்களால் முடிக்கிறார்.

"சக்கரவர்த்தித் திருமகன் வைபவம் போலே ஸ்ரீராமானுஜாரியர் வைபவமும் அவாங்மனஸகோசரமிறே. சாகரத்தைக் கை நீச்சினால் நீஞ்சினாலும் உததியைச் சிறாங்கிச்சாலும் உடையவர் வைபவம் அடையச் சொல்லப் போகாதிறே. யதாமதி யதாச்ருதமாகச் சொன்னேனத்தனை, பஹுச்ருதராய் புத்தி பாஹுள்யமுண்டானவர்கள் விசதமாகக் கண்டு கொள்வது. இப்படி எல்லோருக்கும் ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களை நியமித்துக் கொண்டு எம்பெருமானார் ஜகதாசாரியராய், யதிஸார்வ பௌமராய் நம்பெருமாள் கோயிலிலே நூற்றிருபத்தைந்து திருநட் சத்திரங்கள் எழுந்தருளியிருந்தார்."

யதீந்திரப் பிரவணப் பிரபாவம்

இது மணவாள மாமுனிகளுடைய வரலாற்றைக் கூறும் மணிப் பிரவாள உரைநடை நூல். (யதீந்திர ப்ரவணர் - யதிராசராகிய இராமானுசரிடம் ஈடுபாடு கொண்ட மணவாளமாமுனிகள்). மாமுனிகள் வரலாற்றைக் கூறத் தொடங்கி, இவர் முனிகளிடம் ஆசாரியப்பரம்பரை வந்த வரலாற்றைச் சொல்லுகிறேன் என்று பிள்ளைலோகாசாரியர் நம்பிள்ளை அனுக்கிரகத்தினால் வடக்குத் திருவீதிப் பிள்ளை புதல்வராகப் பிறந்த செய்தி தொடங்கியுரைக்கிறார். முன்னர்த் தோன்றியிருந்த ஆறாயிரப்படி குருபரம்பராப் பிரபாவம் பரமபதநாதன் தொடங்கி, நம்பிள்ளை வரையிலுள்ள ஆழ்வார் ஆசார்ய வரலாற்றைக் கூறுவதாக, நம்பிள்ளையின் மாணாக்கரான பின்பழகிய பெருமாள் ஜீயரால் 13ம் நூற்றாண்டின் இறுதியில் செய்யப்பட்டது. நம்பிள்ளையின் சீடர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. அவருடைய புதல்வரும் சீடருமாயி ருந்தவர் பிள்ளைலோகாசாரியர் என்ற ஆசாரியர். இவருடைய

http://acharya.org

மாணாக்கர் பலராயினும் அடுத்த ஆசாரியராக வந்தவர் திருமலை ஆழ்வார் என்னும் திருவாய்மொழிப் பிள்ளை. இவருடைய மாணாக்கரே மணவாள மாமுனிகள் என்ற ஆசாரியர் (கி.பி. 1370 - 1444). இவரை ஆதிசேஷ அவதாரம் என்பது வைணவ மரபு. இவருக்குப் பின் ஆசாரிய பீடங்கள் பலவாய்ப் பிரிந்தன. மணவாள மாமுனிகளுக்குப் பின், அவர் சீடரும் அட்டதிக் கஜங்களில் ஒருவருமான பரவஸ்து பட்டர்பிரான் சீயருடைய பெயரராக வந்தவர் பிள்ளைலோகம் சீயர். நம்பிள்ளைக்குப் பின் மணவாளமாமுனிகள் வரையிலுள்ள ஆசாரியர் வரலாற்றுக்கு இந்த யதீந்த்ரப் பிரவணப் பிரபாவமே ஆதாரம். முதல் குருபரம்பரை செய்த பின்பழகிய பெருமாள் சீயர், தாம் அறிந்தனவும், கேட்டனவுமாகிய செய்திகளை மட்டும் முறையாகத் தொகுத்துச் சொல்லிக் கொண்டு போகிறார். ஆனால் பிள்ளைலோகமோ, தம் நூலில் பின்னும் பல செய்திகளைச் சேர்த்தும் புனைந்தும் இலக்கிய நயத்தை அதிகம் புகுத்தியும் நூல் செய்து கொண்டு போகிறார். முக்கியமான சிலவற்றைப் பின்னே கூறுவோம்.

பிள்ளை லோகாசார்யர் தாய் கர்பத்திலே பன்னிரு மாதம் தங்கிப் பிறந்தார். அவர் திருவாய் மொழிக்குப் பல வியாக்கியானங்கள் பிறந்தமைக்குக் காரணத்தை உணர்த்தினார். பலர் தங்கள் புத்திக்குத் தோன்றின பிரகாரம் வியாக்கியானம் இட்டமையால், எம்பெருமானார். ஸகஸ்ரசாகோபநிஷத் ஸமாகமத்வம் விளங்கும்படி ஒரு பிரபந்தமி டும்படி திருக்குருகைப் பிரான் பிள்ளானைக் கடாட்சித்தார். பின்னர் பெருமாள் அர்ச்சகமுகேந, நஞ்சீயரை, பட்டர் திருவுள்ளப் படிக்கு ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம் செய்யும் என்று நியமித்தருள. ஆறாயிரப்படிக்கு கனகாபிஷேகம் என்னும்படி அவர் செய்தார். இதைப் பட்டோலை கொள்ள ஒரு நல்ல லேகரியை நஞ்சீயர் தேடியிருந்த சமயம் தேவராஜர் என்பவரை அழைத்துச் செய்க என்று ஸ்வப்ன மாயிற்று. அவர் 'நஞ்சீயர் திருவடிகளே சரணம் பட்டர் திருவடிகளே சரணம்' என்று எழுத்து எழுதிக் காட்டினார். அவருக்கு இழந்த ஒன்பதி னாயிரப்படியை எழுத ஸ்ரீரங்கராஜரே முன்னின்று உதவினார். 'நம் இராமானுசன் தரிசனத்தை வளர்த்துக் கொண்டு போரும்' என்று நஞ்சீயர், பட்டர் சரம காலத்திலே தமக்கு சாதித்திருந்த தர்சனப்ர வர்த்தகருக்குரிய மோதிரத்தை நம்பிள்ளை திருவிரலிலே இட்டார்.

http://achaya.org

பெரியவாச்சான் பிள்ளை செய்தது போலவே ஐயரும் (வடக்குத் திருவீதிப் பிள்ளை) செய்திருக்கக் கண்டு நம்பிள்ளை முதலில் கோபித்துப் பின் தெளிந்தார். (நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர் திருவாய் மொழிக்கு உரை எழுதிய வரலாறு இங்கு குறிப்பிடப்படவில்லை) நம்பிள்ளை இவர் வியாக்கியான ஏட்டைப் பலவாகப் பெருக்கி, 'உம் வழியில் முப்பத்தாறாயிரப் பெருக்கராய் ஒருவர் வருவார்' என்று கூறினார்.

பிள்ளைலோகாசாரியர் செய்த ஸ்ரீவசநபூஷணம் பற்றி சிலர் 'பெருமாளிடம் போய்க்கோள் சொல்ல அவரும் அழகிய மணவாளப் பெருமாள் மூலம் இதன் சிறப்பை கேட்டுப் பாராட்டினார்.

துருக்கர் கலகத்தின் போது, ஆழ்வாரை ஒரு பள்ளத்தில் இட்டு வைத்திருந்து பின் திருமலையாழ்வார் உதவி கொண்டு எடுக்க முற்பட்ட போது, ஆழ்வார் வரவும் தோழப்பர் சங்கிலி அறுந்து காலமானார் என்ற செய்தியைச் சொல்லுகிறார். கூரகுலோத்தம தாசர் சென்று திருமலையாழ்வாரை ஆட்கொண்ட வரலாற்றை மிகவும் விரித்துச் சொல்லுகிறார்.

விளாஞ்சோலைப் பிள்ளை ஸ்ரீவசனபூஷண தாத்பர்யத்தை ஏழு காதையாகச் சங்கிரகித்து அருளிச்செய்தார் என்பர்.

இன்றோ எதிராசர் இவ்வுலகில் தோன்றிய நாள்

இன்றோ கலியிருள் நீங்கியநாள்

என்று பாடி, அதற்கு மேல் வராமல் நிற்க, அப்போது அங்கிருந்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்ற மணவாளமாமுனிகள்

- இன்றோதான்

வேதியர்கள் வாழ விரைமகிழோன் தான் வாழ

வாதியர்கள் வாழ்வடங்கு நாள்

என்று பாடி முடித்தாராம்.

இவர் திருமலையை தரிசிக்கச் சென்ற செய்தியைப் பிள்ளைலோகம் எழுதும்போது பல செய்திகள் இன்று போலவே இருப்பதை அறிகிறோம். மொண்ணைக் கோபுரம்; ஸ்ரீபாதரேணு, அன்றும் உண்டியிருக்கிறது. அதில் சேவார்த்திகள் காணிக்கை சமர்ப்பிக்கிறார்கள்.

http://acharya.org

மாமுனிகளுடைய தந்தை பெயர் திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணரையன். திகழக் கிடந்தான் என்ற தொடர் மறைந்து போயிருந்த நாலாயிரமும் வெளிப்படுத்துவதற்குக் காரணமாயிருந்த குடந்தைப் பாசுரம்-'ஆராவமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே' என்பதில் வரும் 'திகழக் கிடந்தாய் கண்டேன்' என்ற தொடரிலிருந்து எடுத்ததாகும். அண்ணன் என்றாலும் ஐயன் என்றாலும் பொருள் ஒன்றே. இருப்பிலும் இரண்டையும் சேர்த்துப் பெயரில் வழங்கும் வழக்கு அக்காலத்தில் இருந்திருக்கிறது. அக்காலத்தில் கிருஷ்ண தேவராயர் ஆதரவில் வாழ்ந்தவர் அரிதாசர் என்ற புலவர்; இருசமய விளக்கம் என்ற பெரு நூல் செய்தவர். அவருடைய தமையன் பெயர் வடமலை அண்ணகளரையன் என்பதும் காணத் தக்கது.

பெரியாழ்வார் திருமொழிப் பகுதிக்கு பெரியவாச்சான் பிள்ளை செய்திருந்த வியாக்கியானம் மணவாளமாமுனிகள் காலத்திலேயே எப்படியோ மறைந்து போய்விட்டது; அதுபற்றி இதற்கு மட்டும் மாமுனிகள் வியாக்கியானமிட்டார் என்று பிள்ளைலோகம் சீயர் எழுதுகிறார். வெவ்வேறு காரணங்களாலும் சூழ்நிலைகளாலும் திருவாய்மொழி போன்ற பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் பல ஏற்பட்டிருந்த போதிலும் ஒருவர் வியாக்கியானம் செய்த நூலுக்கு மற்றவர் வியாக்கியானம் செய்வதில்லை என்ற மரபு வைணவரிடையே போற்றப்பட்டு வந்திருக்கிறது.

ஆண்டான் திருவரங்கப்புரத்து நம்பியைப் பார்த்து, 'உனக்கு இன்னும் முரட்டு சம்ஸ்க்ருதம் விட்டபாடு இல்லையே' என்கிறார். பெரியவாச்சான் பிள்ளை திருமாலை வியாக்கியானத்தில், 'வடக்குத் திக்கு ஆரிய பூமியாகையாலே சம்ஸ்க்ருத முரணர் நடையாடுமிடம், ஆழ்வார்கள் ஈரச் சொல்லும் நடையாடாத தேசம்' என்கிறார். நஞ்சீயருக்கு பட்டரும், நம் பிள்ளைக்கு நஞ்சீயரும் 'சம்ஸ்கிருதத்தில் பலகால் கண் வையாதீர்' என்றே தம் ஆயுள் இறுதிக் காலத்தில் கடைசி உபதேசமாகச் செய்கிறார்கள்.

அந்த மரபிலேயே இங்கும் திருவாய்மொழிப்பிள்ளை தம் இறுதி நாளில் திருநாட்டுக்கு எழுந்தருளும் சமயம் மணவாளமாமுனிக்கு உபதேசம் செய்கிறார் என்று பிள்ளைலோகம் எழுதுகிறார். 'காலம்

http://acharya.org

கலிகால மாகையாலே ஆழ்வார்கள் திவ்ய ஸூக்திகளான அருளிச் செயலிலே ருசி விச்வாசங்களை உடையராய் இந்தை வளர்த்துப் போருவார் யாரென்று மிகவும் க்லேசமாயிரா நின்றது.' என்ன, பின்பு நாயனாரும் திருவடிகளிலே ஸேவித்து, அடியேன் 'அப்படியே செய்கிறே னென்ன', கேவலம் வார்த்தை போராதென்ன, நாயனாரும் திருவடிகளைத் தொட்டு சபத பூர்வகமாக அப்படியே செய்கிறேன் என்றருளிச் செய்ய, பின்பு திருவுள்ளம் தேறி நாயனாரை அழைத்தருளி, 'ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களிலே பலகாலும் கண் வையாமல் ஸ்ரீபாஷ்யத்தை ஒருக்கால் கேட்டு நமக்கும் எம்பெரு மானார்க்கும் ப்ரியமாக திருவாய்மொழி முதலான அருளிச் செயலிலே அநவரதம் பரிசீலநம் பண்ணிக்கொண்டு பூர்வர்களைப் போலே பெரு மாளுக்கு மங்களாசாஸ நபரராய்க் கொண்டு கோயிலிலே நித்ய வாஸமாக எழுந்தருளியிரும்' என்று நியமித்தருளினார்.

சொல்லாட்சிகள்

மணிப்பிரவாள நூல்கள் யாவும் தனித்த சொல்லாட்சி யுடையவை. இவை 12ம் நூற்றாண்டு தொடங்கி, அதிக அளவில் மணிப்பிரவாள வியாக்கியானங்களில் காணப்படுகின்றன. பல வடசொல்ல டியாகப் பிறந்தவை, சில சிறப்புடைய தமிழ்ச் சொற்கள், இவை யாவும் வடமொழிக் கலப்பு என்று ஒதுக்கி விடுவது விவேகமன்று. சிலவற்றை மட்டும், யதீந்திரப்பிரவணப் பிரபாவத்தி லிருந்து கீழே விளக்குகிறோம். அமுது என்பது உணவுக்கு வழங்கும் பொதுச் சொல். எல்லா உணவுப் பொருளும் அமுதென்றே வழங்கக் காண்கிறோம். அமுதுபடி, பருப்பமுது, கறியமுது, பழ அமுது, பாலமுது, நெய்யமுது, தயிரமுது, உப்புச்சாற்றமுது என. சாதம் என்ற சொல்லும் அருமையாக வருகிறது - திருவுற்ற சாதம். சாதம் என்பது பிரசாதம் என்பதன் தலைக்குறையென்று கருதுகிறார்கள். இங்கு இச்சொல் பயில்கிறது. அரவணையென்பது ஒரு சொல்; சர்க்கரைப் பொங்கல் நிவேதனத்துக்கு வழங்குகின்ற அபூர்வமான ஆட்சி. தோசைப்படி என்ற சொல்லையும் காண்கிறோம். தோசை என்ற சொல் ஓர் அப்ப வகையின் பெயராக முதல் முதல் திவாகரத்தில் காணப்படுகிறது. சர்க்கரைப் பொங்கலுக்கு அக்கார அடிசில் என்ற பெயர் உண்டு. அக்கார அடிசில், அக்காரக்கனி என்ற தொடர்கள் நாலாயிரத்திலும், அக்காரடலை சிந்தாமணியிலும்

http://acharya.org

வருகின்றன. படிமா என்பது விரதமிருந்து உண்ணும் உணவின் பெயராக வருகிறது.

தமப்பனார் என்பது ஒரு சொல்; தம் - அப்பனார். இச்சொல் தந்தையென்று பொருள்படும். ஆனால் இது முதல் நிகண்டுகளில் காணப்படவில்லை. திருவாசகம் முதலாகத் தகப்பன் என்ற சொல் ஆட்சிக்கு வந்துவிட்டது. அன்றாடும் - அன்றாடம், சயிக்க விடுதல் - சயனிக்க விடுதல், ஞாயிறுபாடு - காலை; நாயன் - தலைவன்; நாயன்தே, நாயன்றே - தெய்வமொத்த தலைவன்; வேளையம் - வெற்றிலை பாக்கு என்ற பொருளில்; இது ஓர் அபூர்வப் பிரயோகம்; பிற்காலத்தில் இதுவே விடையம் என்றாகியிருக்கலாம்.

கிடுதல் என்பது ஒரு சொல்; காணுதல் என்ற பொருளுடையது போலும். இவர் கிடாய்-இவர் கண்டாய்; நாமே கிடீர்-நாமே கண்டீர். இவை போல்வன பல. இவை காண் என்பதனடியாகப் பிறந்த அசைச் சொற்கள், மிடறு செய்தல்-வருந்துதல். நினவு கெடுதல்-அறிவுத் தாகம் அடங்குதல். இந்த நூலில் ஐயங்கார் என்றும் சொல்லாட்சி மிகவும் அதிகமாய் உள்ளது. ஐயர்-அவர்கள் எனச் சொற்கள் (அவர்கள்-தெலுங்கில் காரு) ஐயன்கார், ஐயங்கார் என ஆன்றோர் கருதுவர்.

அசூயாளுக்கள் - பொறாமையுடையவர்கள்; உபலாளித்தல் - கொண்டாடு தல்; த்வரை - வேகம்; இதிலிருந்து வந்ததே துரை என்ற சொல்; துரை மாண்டவர் பாடி என்ற திருவாசகத்துக்கு வேகம் கெட்ட தன்மையைப் பாடி என்பது பொருள். லேகரி - எழுதுபவன். வியாக்கியானங்களெங்கும் பெண்மைக்குப் பெரு மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கக் காணலாம். எந்த ஆசிரியரும் மனைவி என்று சொன்ன தில்லை; மனைவி என்றால் தேவிதான்; அதுவும் ஒருமையல்ல. எப்போதும் தேவிகள் என்று பன்மையிலேயே சொல்வார்கள். இது வைஷ்ணவத்தின் சிறப்பு. ப்ரவணம் - ஈடுபாடு.

இராமானுச நூற்றந்தாதிவியாக்கியானம்

திருவரங்கத்தமுதனார் பிரபன்ன காயத்ரி என்னும் பெயருடைய 108 பாடல் கொண்ட இராமானுச நூற்றந்தாதிக்கு முதலில் மணவாளமாமுனிகள் உரைசெய்தருளினார். பிறகு பிள்ளை லோகம் சீயர் விரிவான வியாக் கியானம் அருளிச்செய்தருளினார். இது மிகவும்

http://acharya.org

விரிந்தது. அதிகமும் எழுதிப் பழக்க முடைய இவர் இதை விரிவாக எழுதியதில் வியப்பில்லை. மேற்கோள்கள் நிரம்பத் தருகிறார்.

பல இடங்களில் நயம்பட உரை எழுதுவார். ஈரத்தமிழ் சம்சார தாபமெல்லாம் ஆறும்படியான ஈரப்பாட்டை உடையது. ஸ்ரீபராங்குச நம்பி என்பார். கார்த்திகையானும் என்ற பாடலுரையில், பாணாசுரன் வரலாறு விரிவாகக் கூறுகிறார். அநிருத்தனைக் குறிப்பிடும்போது, அநிருத்த ஆழ்வான் என்கிறார். 99ம் பாடல் உரையில் தர்க்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் என்பதை விளக்கும் போது பல சமயத்தாரை விரிவாகக் குறிப்பிட்டுப் பேசுகிறார். சாக்கியர், சைனர், சாருவாகர், நையாயிகர், வைசேடிகர், பாசுபதர், சூனியவாதர், வைபாடிகர், சௌத்திராந்திகர், யோகாசாரர், மாத்யமிகர் என்ற நால்வகைப் பௌத்தர், சங்கரன், பாஸ்கரன், யாதவன், ருத்ரன், பாட்டப் பிரபாகரர், ஏகாயநர் என்கிறார்.

இவருடைய போக்குக்கு எடுத்துக்காட்டாக, 98ம் பாடல் அவதாரிகைப் பகுதியை இங்குக் குறிப்பிடலாம்; "இப்படி எம்பெருமானார் தம்மை சர்வோத்கிருஷ்டமான அதிகாரத்திலே மூட்டின உபகாரத்தை அனுசந்தித்து ஹ்ருஷ்டரானவாறே இவருடைய திருவுள்ளமானது, நீர் இப்படி சொன்னீரேயாகிலும் சர்வ நியந்தாவான சர்வேச்வரன் அநாதி காலந் தொடங்கி தத்தத் கர்மாநுகுணமாகப் பலத்தைக் கொடுப்பதாகச் சங்கல்பித்துக் கொண்டிருக்கிறான் ஒருவன் ஆகையாலே இவ்வளவும் ஸ்வர்க்க நரக கர்ப்பங்களிலே இடைவிடாதே அடைவே தட்டித் திரிய விட்டிருந்தது. நம்முடைய கர்மத்தைக் கடாக்ஷித்தன்றோ, அக்கர்மங்களை உண்டாக்கக் கடவதான பிரகிருதி சம்பந்தம் நமக்கு இன்னும் கிடக்கையாலே. தூர்வாசனை மேலிட்டு திரும்பவும் நிக்ரகத்துக்கு உடலான துஷ்கார்யங்களிலே அன்வயிக்கவும் யோக்யதையுண்டே. ப்ராப்தியர்யந்த மானாலிறே நீர் இப்படி நிர்ப்பரராய்ச் சொல்லக் கடவது என்று தளரா நிற்க; எம்பெருமானார் தம்மைச் சரணமென்றார் அப்படி ஸ்வர்க்க நரகாதிகள் ஒன்றிலும் விட்டுக்கொடுக்கும் ஸ்வபாவரல்லராகையாலே இனி ப்ராப்தி நிமித்தமாக நீ கிலேசிக்க வேண்டாம் என்கிறார்".

http://acharya.org

அர்த்த பஞ்சக வியாக்கியானம்

பிள்ளை லோகாசாரியர் அட்டாதச ரகசியம் என்று 18 நூல்கள் செய்தார். அவற்றுள் அர்த்த பஞ்சகம் என்பது ஒரு நூல்; அறிய வேண்டிய பொருள்கள் ஐந்து; இவையே அர்த்த பஞ்சகம் எனப்படும். இவையாவன; ஸ்வ ஸ்வரூபம் (ஆன்மாவின் இயல்பு - தன் நிலை) பர ஸ்வரூபம் (இறை நிலை), விரோதி ஸ்வரூபம் (உயிர் இறைவனை அடையாது தடை செய்து நிற்கும் வினையின் இயல்பு), புருஷார்த்த ஸ்வரூபம் (புருஷனால் வேண்டப்படும் பேற்றின் நிலை), உபாய ஸ்வரூபம் (பேற்றிற்குத் தடையைப் போக்கி இறைவனை அடைதற்குரிய உபாயத்தின் நிலை) என்ற ஐந்து. இப்பெயரில் வேதாந்த தேசிகர் ஒரு பிரபந்தமே பாடியிருக்கிறார். லோகாசாரியர் நூலுக்குப் பிள்ளை லோகஞ்சீயர் ஒரு வியாக்கியானம் அருளிச்செய்துள்ளார். இதன் விரிவான அவதாரிகையில், பகவான் வேதங்களையும், சாஸ்திரங் களையும், நாலாயிர திவ்ய பிரபந்தங்களையும், உபதேசித்த தோடமை யாது. பிள்ளைலோகாசாரியர் முகமாக அர்த்த பஞ்சக ரஹஸ்ய சாஸ்த்ரத்தை வெளிப்படுத்தியருளினான் என்று கூறுகிறார். அர்த்த பஞ்சகமானது 49 வாக்கியங்களாக அமைந்து உள்ளது. இவர், வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு தொடராக எடுத்து விரிவாக உரை எழுதிக் கொண்டு செல்கிறார். உரை மணிப் பிரவாள நடை,

சப்தகாதை வியாக்கியானம்

பிள்ளைலோகாசாரியரின் மாணாக்கர் விளாஞ்சோலைப் பிள்ளை. இவரது இயற்பெயராக 'சப்தகாதை'த்தனியனில் நலந்திகழ் நார(ரய)ணதாத(ச)ர் எனப்பெயர் குறிப்பிடப்பட்டது. தமக்குப் பின் ஆசாரியராய் வரத்தக்கவரான திருமலை ஆழ்வாருக்குத் திருவாய் மொழியைக் கற்பிக்கும்படி பிள்ளைலோகாசாரியர் இவருக்கு நியமி த்திருந்தார். திருமலையாழ்வார் இவரிடம் கற்றபின் திருவாய் மொழிப் பிள்ளை என்றே பெயர் பெற்றார். விளாஞ்சோலைப் பிள்ளையின் வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. சில செய்திகள் சீயர் உரையால் மட்டுமே தெரிய வருகின்றன: இவர் "உடையவருக்குப் பிள்ளையுறங்காவில்லி தாசரைப் போலவும், நம்பிள்ளைக்கு ஏறு

http://acharya.org

திருவுடையாள் தாஸரைப் போலவும், நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டருடக்குப் பிள்ளை வானமாமலை தாஸரைப் போலவும் பிள்ளை லோகாசாரியருக்கு ஆத்ம ஸமராயும், ப்ராண ஸமராயும், த்ருஷ்டி ஸமராயும், பாஹு ஸமராயும், ஆபரண ஸமராயும், பாத ஸமராயும், பாதரேகா ஸமராயும், பாதச்சாயா ஸமராயும், பாதுகா ஸமராயும், பாதோபதாந ஸமராயுமெழுந் தருளியிருக்கும வராய் இருந்தவர் இவர். அன்றியும் தீதற்ற ஞானத் திருவாய்மொழிப்பிள்ளை என்னும்படி ஸமஸ்த சாஸ்திர பாரங்கதராயும், ஸர்வஜ்ஞராயும் பெருமதிப்பராயும் போருகிற திருவாய் மொழிப் பிள்ளையுங் கூடத் தம்மருகே சென்று சரமார்த்த விசேஷங்களைக் கேட்டுப் போரும்படி மிகவும் ஸர்வஜ்ஞராய் இருந்தார். பிள்ளை லோகாசாரிய ருடைய திருவோலக்க வாழ்வைத் தியானித்துக் கொண்டு தம் திருமேனியில் சிலந்தி நூல் இழைக்கும் படியாகவும் நாலாறு நாள் சமாதியிலே எழுந்தருளியிருந்தார்."

உரையில் இராமானுசர் நூற்றிருபதாண்டு குறைவு நிறைவு களின்றிக்கே யிருந்தார் என்பதையும் சொல்லுகிறார். பிள்ளைலோகா சாரியருடைய திருவுருவ வர்ணனை.

"தேமருவும் செங்கமலத் திருத்தாள்களும் திகழும் வான் பட்டாடை பதிந்த திருமருங்கும் முப்புரி நூலின் தாமமணி வடமமர்ந்த திருமார்பும், முன்னவர் தந்தருள் மொழிகள் நிறைந்த திருமுறுவலும், கருணை பொழிந்திடுமிணைக் கண்களும், கன நல்ல சிகை முடியும், திங்கள் போலும் திருநுதலும், திருக்கன்னும், செவ்வாயும், பொங்கொளி சேர் பொன்மொழியும், புரிநூலும், பொற்றோளும், மங்கலமான மலர்மார்பும், மணிவடமும், மருங்குதனில் பரிபட்டமும், கமலப் பதயுகமும், அழகிய பத்மாஸநமும், ஈராறு திருநாமம் அணிந்த எழிலும், இனிதிருப்போடெழில் ஞான முத்திரையும், தாமுமாக எழுந்தருளியிருக்கிற பிள்ளை லோகாசார் யருடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப் பாதாதி கேசாந்தமாகவும், கேசாதி பாதாந்தமாகவும், உருவு வெளிப்பட்டாலே விசத விசததர விசததமமாக த்யானித்து......."

சப்தகாதைக்கு இவர் வியாக்யானமும் தனிப் பதவுரையும் எழுதியிருக்கிறார். அவதாரிகையின் தொடக்கத்தில் இவர் சப்த காதைக்குக் கூறும் தனியன்:

http://acharya.org

வாழி நலத்திகழும் நாரண தாதனருள்
வாழி அவனமுத வாய்மொழிகள் – வாழியே
ஏறுதிருவுடையான் எந்தை உலகாரியன் சொல்
தேறுதிருவுடையான் சீர்.

சப்தகாதை என்பது விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச்செய்த ஏழு வெண்பா. இது தென்கலையாருக்கு நித்யாநுஸந்தானமாக உள்ளது. இந்த உரையின் இறுதிப் பகுதி இவர் வாக்குக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளத் தகும். "ஆக இப்பிரபந் தத்தால் - அர்த்த பஞ்சக உபதேசஷ்டாலே ஆசார்யனாகிறான் என்னுமிடத்தையும், அவனிடத்தில் பிரேமமற்றிருப்பார் ஸ்வாத்மகாதக ரென்னுமிடத்தையும், அவர்கள் ஜ்ஞானவிசேஷ யுக்தரேயாகிலும் நித்ய ஸம்ஸாரிகளாய்ப் போருவர் என்னுமிடத்தையும், அதுக்கு க்ருதக்நரான இவர்கள் அதிக்ரூரர் என்னுமி டத்தையும், ஸ்வோத்கர்ஷத்தைத் தேடுகை ஆசார்யனுக்கு அழுக் கென்னுமிடத்தையும், இவ்வழுக்குக்கு அடியான தோஷத்தைப் பெரியபெருமாள் தாமே தமக்குப் போக்கியருளவேணும் என்னுமி டத்தையும், ஆசார்யன் பக்கல் ப்ரேமயுக்தனானவன் அர்ச்சிராதி மார்க்கதாலே பரமபதத்திலே சென்று முக்தைச்வர்யத்தைப் பெற்றுக் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திலே மூர்த்தாபிஷிக் தனாய்க் கொண்டு யாவதாத்மபாவியாக இருப்பன் என்னுமிடத்தையும் அருளிச்செய்து நின்றாராய்த்து."

சில கருத்துக்கள் : அரங்கத்தின் சிறப்பு: இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கம் என்று சொல்கின்ற நீர் வாய்ப்பும், நிழல் வாய்ப்பும் நிலவாய்ப்புமாகிற இவை. விரோதி : அபரவஸ்துக்களில் பரத்வபுத்தியும், அரக்ஷ்யரி டத்தில் ரக்ஷகத்வபுத்தியும், அசேஷி களிடத்தில் சேஷித்வ புத்தியும், அனுபாஸ்யரி டத்தில் உபாஸ்ய புத்தியும், அனாத்மாவில் ஆத்மபுத்தியும், அஸ்வதந்த்ரனான தன்னி டத்தில் ஸ்வதந்த்ரபுத்தியும், அனுபாயங்களில் உபாயத்வ புத்தியும், அபந்துக்களில் பந்துத்வ புத்தியும், அபோக்யங்களில் போக்யதா புத்தியும், பகவத் கைங்கர்யத்தில் ஸ்வபோக்த்ருத்வ புத்தியும், இவை எல்லாவற்றுக்கும் வேர்ப் பற்றான அகங்கார மமகாரங்களும்.

http://acharya.org

இம்மாலை மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது. பண்டைத் தனியன்களோடு 73 வெண்பாக்கள் உடையது. இறுதியில் உள்ள தனியன் பிள்ளைலோகம் சீயர் செய்தது.(எறும்பியப்பா செய்ததாகவும் கூறுவர்)

மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன்
பொன்னடியாஞ்செங்கமலப்போதுகளை – உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்.

சுவையான செய்திகளும் இங்குக் காணப்படும். 'நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு எஞ்சாமை யாவைக்கு மில்லையே' (47) என்ற தொடருக்கு வியாக்கியானம் அருளிச்செய்திருப்பது காணத்தக்கது. 'பெரியவாச்சான் பிள்ளையைப்போல திவ்யப்பிரபந்த முழுமைக்கும் இவர் வியாக்கியானம் எழுதவில்லை. நாலிரண்டுக்கே செய்தார். நாலிரண்டுக்கு என்பது ஒரு முழுச்சொல் (மரபுத் தொடர்). சில என்பது பொருள். இவர் செய்தவை திருப்பாவை கண்ணிநுண் சிறுத்தாம்பு (வியாக்கியானங்கள்). பின்னையும் உண்டாகில் கண்டு கொள்வது' என்று எழுதுகிறார். நாலிரண்டு என்பது எட்டு அல்லது ஆறு என்று பொருளல்ல. சில என்றே பொருள்படும் என்று இவர் குறிப்பிடுவது மரபு விளக்கமாகும். இவர் இந்நூலுக்குரிய இரண்டு தனியன்களுக்கும் சேர்த்தே வியாக்கியானம் எழுதியுள்ளார்.

முதற்பாடலுரையில் 'பேசுகின்றேன் மன்னியசீர் வெண்பாவில் வைத்து' என்பதன் உரை: தமிழுக்கு வெண்பா கலித்துறை என்னுமாபோலே அனேகம் பாக்களுண்டிறே, அதிலே கலித்துறையாலே ப்ரவ்ருத்தமாய்த்து சரம ப்ரபந்தமான நூற்றந்தாதி. அதிலும் அப்யசிக்க எளிதாயிருக்கிற வெண்பா என்கிற சந்தஸ்ஸிலே வைத்தாய்த்து சதிருடைய தமிழ் விரகரான தாம் அருளிச்செய்தது. கற்கவிறே தாம் உபதேசிக்கிறது. 'வெண்பா இருகாலிற் கல்லானை' என்றிறே இதன் எளிமை இருப்பது. அதுக்குச் சீர்மன்னுகையாவது, முச்சீர் நாற்சீர் என்று சொல்லப்படுகிற சீரோடே பொருந்தியிருக்கை. அன்றிக்கே புகழ் மலிந்த பா என்னுமா போலே இதுவும் சீர்

http://acharya.org

மன்னியிருக்கிறது என்னவுமாம். எண்ணருஞ்சீர்ப் பொய்கை முன்னோருடைய சீரோடே பொருந்தியிருக்கிறது.

பின்னும் சில செய்திகள் : திருவிருத்தம் முதலான நம்மாழ்வார் பிரபந்தம் நாலுக்கும் திருமொழி முதலான பிரபந்தங்கள் ஆறும் அங்கங்களாயிறே இருப்பது. அது திராவிட வேதமானால், இதுவும் திராவிட ரூபமான அங்கங்களென்னக் குறையில்லை.

வேதம் தமிழ் செய்கையாவது : எய்தற்கரிய மறைகளை ஆயிரம் இன்தமிழால் செய்தற்கு உலகில் வரும் சடகோபனை என்கிறபடியே, வேதமானால் அதிக்ருதாதிகாரமாயிருக்குமாகையால் அகில சேதநர்க்கும் அப்யசித்து உஜ்ஜீவிக்கை அரிதென்று ஸர்வாதிகாரமாய் ஸர்வோபஜீவ்யமு மாயிருக்கும்படி த்ராவிட பாஷாரூப சந்தர்ப்பத்தாலே வேதார்த்தத்தை விசதீகரித்து அருளிச்செய்தா ரென்கை. (பாடல் 14) இவர்கள் கலை த்ராவிட ப்ரம்ம வித்தை.

மற்றோரிடம் : ஆண்டாள் பிறக்கைக்கு அடியான அவருடைய (பெரியாழ் வாருடைய) பெருமை இருக்கிறபடி, திருமாலை கட்டுகையே தொழிலாக இருக்கிற இவர் திருத்துழாயடியிலே அவதரித்த இவளை எடுத்துக் கொண்டு போய்த்தம்தேவிகள் கையிலே காட்டிக் கொடுக்க, வந்தலையயாகையாலே அவரும் அரும்பெறல் பெண்ணாயிருக்கிற இப்பெண் பிள்ளையை அதி ப்ரீதியுடனே எடுத்துக் கொள்ள அப்போது வனமுலைகள் சோர்ந்து பாய என்னும்படியிறே ஸ்தன்யம் பிரவஹித்தது. (23).

ஆதித்யோதயத்துக்கு அருணோதயம் போலே வகுள பூஷண பாஸ்கரோதயத்துக்கு முன்னே வந்து அவதரித்த மதுரகவியாழ்வார். திருமங்கையாழ்வார் அவதரித்த குறையலூர் மண்ணியாற்றின் ஜலஸம்ருத்தியை உடையது.

ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்ற வியாக்கியானங்கள் நான்கும் முறையே புராண ரத்நமான விஷ்ணுபுராணம், ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீராமாயணம், சுருதப் ப்ரகாசிகை ஆகியவற்றின் எண்ணிக்கையால் செய்யப்பட்டன என்று சொல்லுகிறார். 'நம் சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமான் விஞ்சிய வாதரத்தாற் கேட்ப என்றாய்த்து' என்று சடகோபரந்தாதித் தனியனைக் குறிப்பிடுகிறார். வரதராசர், நஞ்சீயர் ப்ரசாதித்த ஒன்பதினாயிரப் படியைக் காவேரியிலே விட்டு விட்டுப் பின் நம்

http://acharya.org

நினைவாற்றலால் முழுமையும் எழுதி நம்பிள்ளை என்று பெயர் பெற்ற செய்தியைச் சொல்லுகிறார். இவையன்றி, இராமானுசருக்கு முன் தொடங்கி, மணவாளமாமுனிகள் வரையுள்ள ஆசாரியர் வாழ்க்கையிலும் உபதேசத்திலும் கண்ட பல செய்திகளையும், கருத்துக்களையும் தம் உரையெங்கும் சொல்கிறார். இவ்வுரைகள் யாவுமே குறித்த நூலின் உரைகள் மட்டுமல்ல: உரை என்ற வியாஜத்தால் அளவற்ற செய்திகளைத் தெரிவிக்கும் ஒரு சமய வரலாற்றுக் களஞ்சியம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி வியாக்கியானம்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் ஒவ்வொரு திருவாய்மொழிக்கும் (பதிகத்துக்கும்) முதற் பாடலின் தொடக்கச் சொல்லையும் இறுதிப்பாடலின் இறுதிச்சொல்லையும் ஒரு வெண்பாவின் தொடக்கமாகவும், இறுதியாகவும் முறையே அமைத்து மணவாள மாமுனிகள் ஒரு நூல் செய்தார். திருவாய்மொழி முழுமையும் அந்தாதி ஆனமையால், இந்நூலும் அந்தாதியாக உள்ளது. இது திருவாய்மொழி நூற்றந்தாதி என்று பெயர் பெறும். இதன் பாடல்கள் ஒவ்வொன்றும் நம்மாழ்வார் புகழைக் கொண்டது. பாடல் தொகை 100. இந்நூலுக்குப் பிள்ளைலோகம் சீயர் விரிவான வியாக்கியானம் செய்தார். இப்பாடல்களில் அமைந்த சில வரையறையை இவரே பின் வருமாறு கூறுகிறார்: "இப்பிரபந்தங்களுக்கு அநேக நிர்ப்பந்தங்களுண்டாயிறே இருப்பது. அதெங்ஙனே என்னில், வெண்பா என்கிற சந்தஸ் ஆகையும், இப்படியான இப்பாட்டில் முற்பாதியிலே ஓரோர் திருவாய்மொழியின் தாத்பர்யமும், தத்சங்கதி களடைகையும், பாட்டுக்கள் தோறும் ஆழ்வார் திருநாமங்கள் வருகையும், அதில் தாத்பர்யங்களைத் தத்பர்யந்தமாகப் பேசுகையும், அந்தாதியாக நடக்கையுமாகிற ஐந்து நிர்ப்பந்தம் உண்டாகியிருக்குமாயிற்று." (அவதாரிகை)

இந்நூற்றந்தாதியின் தனியன் இரண்டுக்கும் இவர் உரை எழுதவில்லை.

ஆர்த்திப்ரபந்த வியாக்கியானம்

மணவாளமாமுனிகள் செய்த மூலம் பெருபகுதி வெண்பா. சிறுபகுதி விருத்தம்,கலித்தாழிசை, கலிப்பா கொண்டது. பாடல் எதிராசைப் புகழ்வது. ஆயுள் இறுதியில் பரமபதத்தில் ஆசை பிறந்து

http://acharya.org

இந்நூல் பாடிப் பரமபதம் அடைந்தார் என்பர். பிள்ளை லோகஞ்சீயர் இந்நூலுக்குத் தாம் செய்த வியக்கியானத் தொடக்கத்தில் இரு தனியன்களைக் குறிப்பிடுகிறார். இவை முன்னமே உண்டாயிருந்தன என்கிறார்.

பிள்ளைலோகம் இந்நூலுக்குத் தமிழில் பதவுரையும், மணிப் பிரவாளத்தில் விரிவான வியாக்கியானமும் செய்திருக்கிறார். பாடல் தோறும் விரிவான அவதாரிகை கூறிப்பொருளைத் தொடர்பு படுத்துகிறார்.

சிலகருத்துகள் : அஞ்சு வயசுக்குட்பட்ட ப்ரஜையுடைய துர்மரணமெல்லாம் மாதாவினுடைய அனவதானத்தாலே வந்ததாக அவனுக்கு சாஸ்திரம் தோஷம் விதிக்கையால் கண்ணிலே வெண்ணெயிட்டு நோக்க வேணுமிறே : பிரஜையைக் கிணற்றின் கரையில் நின்றும் வாங்காதொழிந்தால் தாயே தள்ளினாள் என்னக் கடவதிறே. உடைமைக்கொரு முழுக்கு உடையவனுக்கு உடைமையைப் பெறுந் தனையும் முழுக வேண்டும்படியிறே இருப்பது. ஓலமிடுதல், வாக்காலே பெருமிடறு செய்து கூப்பிடுதல், வாழி - நித்யமங்களமாய்ச் செல்ல வேணும். ஆழ்வார்கள் பதின்மர் என்கிறார். அருளுவீர் - ஆருளுவதீர் என்கிறார்.

தனியன் வியாக்கியானம்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் இருபத்து நான்குக்கும் தனித்தனியான பல தனியன்கள் (சிறப்புப் பாயிரம் போன்றவை) செய்யப் பெற்றுள்ளன: அவற்றை ஓதியே பாசுரங்களை ஓதுவது வைணவ சம்பிரதாயம். இவற்றுள் வடமொழிச் சுலோகங்கள் சில, தமிழ்ப் பாடல்கள் 34. இவற்றுள் இரண்டொரு பாடல்கள் நீங்கலாகச் சம்பிரதாயமாக வழங்கும் ஏனையவற்றுக்குப் பிள்ளைலோகஞ்சீயர் வியாக்கியானம் எழுதி இருக்கிறார். இவ்வியாக்கியானங்கள் பொதுவாய் அவ்வப்பிரபந்தங்கள் தமக்குரிய பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் அரும்பதம் முதலியவற்றோடு தனி நூல் எனப் பதிப்பிக்கப்பட்ட இடங்களில், முற்சேர்க்கை யாகச் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. தனி நூல் வடிவத்தில் அச்சிடப் பெறவில்லை போலும். இத் தனியன் வியாக்கியானங்களில் பிள்ளைலோகம் மூலத்தில் பொருளை மட்டும் விளக்கிக் கொண்டு போகிறார்.

http://acharya.org

உபதேச திருநாமம்

இப்பெயருடைய ஒரு செய்யுள் நூல் ஏட்டு வடிவில் உள்ளது. நூலில் ஆசிரியர் பெயர் குறிக்காவிட்டாலும் இந்நூல் தொடக்கத்தில் எழுதப்பெற்றுள்ள வடமொழித் தனியன், 'தம் லோகதேசிகமுநிம் சரணம் ப்ரபத்யே' என்று கூறுவதால் இந்நூல் பிள்ளைலோகம்ஜீயர் (லோகதேசிகர்) செய்ததாயிருக்கலாம் என்று கொள்ளப்படுகிறது. இது 89 பாடல் கொண்டது : வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம் முதலான பல பாவினங்களும் உள்ளன. இப்பாடல்கள் அனைத்தையுமே சீயர் செய்யவில்லை: தமக்கு முன்னே வழங்கிய பிள்ளை லோகாசாரியர், மணவாளமாமுனிகள் பற்றிய பாடல்கள், சில உபதேச ரத்தினமாலைப் பாடல்கள் ஆகியவற்றோடு தாமும் சில புதுப்பாடல்கள் புனைந்து இந்நூலாகச் செய்தார் என்று தெரிகிறது. பிள்ளை லோகாசாரியர், அவர் சீடரான கூரகுலோத்தமதாசர், திருமலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப்பிள்ளை, இவர் சீடரான மணவாள மாமுனிகள், இவர் தந்தையான திகழக்கிடந்தான் திருநாவிருடைய பிரான் தாதரண்ணரையன், மாதாமகரான குரவை மணவாளர் ஆகியோர் இங்குப் போற்றப் பெறுகின்றனர். (குரவை மணவாளர் - திருக்கோட்டியூர் அழகிய மணவாளர் என்பவர்) பல இடங்களிலிருந்து பாடல்கள் தொகுக்கப்பட்டன என்று தெரிகிறது. இதன் முதல் பாடல், யதீந்திர ப்ரவண ப்ரபாவத்தின் தொடக்கத்திலுள்ள பாடல்:

குலநாதனெங்கள் மணவாள யோகி குணக்கடலைப்
பலநாளும் மண்டிப் பருகிக் களித்திந்தப் பாரிலுன்னே
உலகாரிய முனிமேகம் முன்னாள் என் உள்ளங்குளிர
நலமான நீர்மழை நாளும் பொழியுமிந் நானிலத்தே.

திருமந்திரார்த்த அரும்பத விளக்கம்

வைணவத்தின் மூன்று மந்திரங்கள் மந்திரத்ரயம் எனப்படும். அவற்றுள் முதலாவது திருமந்திரம்: ஓம் நமோ நாராயணாய என்பது : இதுவே அஷ்டாக்ஷரம், எட்டெழுத்து: நான் கண்டு கொண்டேன் என்று திருமங்கையாழ்வார் பாடுவது. இதன் பொருளை விளக்கிப் பிள்ளை

http://acharya.org

லோகாசாரியர் முமுட்சுப்படி என்று எழுதினார். இது அவர் எழுதிய அட்டாதச ரகசியங்களில் ஒன்று. முமுட்சு என்றால் வீடு பேற்றில் விருப்பம் உள்ளவன் என்றுபொருள். முதல் திருமந்திர அர்த்தப் பகுதிக்கு, மணவாளமாமுனிகள் வியாக்கியானம் எழுதியிருக்கிறார். இவ்வியாக்கியானத்திற்கு, பிள்ளைலோகம் சீயர் சுருக்கமாயும், சுத்தசத்துவம், தொட்டாசாரியர் சற்று விரிவாயும், அரும்பத விளக்கம் எழுதியிருக்கிறார்கள். பின்னர் எம்பாலவையங்கார் மிகவும் விரிவான மற்றொரு வியாக்கியானம் எழுதினார். இவை யாவும் ஒரு நூலாக 1893-ல் அச்சிடப் பெற்றன.

பிள்ளைலோகஞ்சீயர் தம் அவதாரிகை உரையில் பல செய்தி களைச் சொல்லுகிறார். 'சர்வேச்வரன் பெரிய பிராட்டியாருக்கு உபதேசம் பண்ணினாரென்கிறது மந்திர த்வயத்துக்கும் உபலக்ஷண மாய், அவள் சேனைமுதலியாருக்கு உபதேசிக்க, அவர் பிராட்டி நியோகத்தாலே நாதமுனிகளுக்குப் பிரசாதித்தார்... நாதமுனிகளுக்கு ஸ்வப்னமுகேந உபதேசித்தார் என்றும் அருளிச் செய்வார்கள். ஒருநாள் ரகஸ்ய அர்த்தமும் மற்றைநாள் திருவாய்மொழி முதலான ப்ரபந்தமும் அதின் மற்றைநாள் அவற்றினுடைய அர்த்தமும் ஆக மூன்று நாளாக அருளிச் செய்தருளினார் என்று அருளிச்செய்வர். கண்ணிநுண்சிறுத்தாம்பைப் பன்னீராயிரம் உருப்புரச் சரணம் பண்ணப்பிரத்தியட்சமாய்த் திருத்திரை வளைத்துக் கொண்டிருந்து விசத விசததர விசததமமாகப் பிரசாதித்தார் என்று அருளிச் செய்தருளுவர். 'பிராட்டி பிரம்மாவுக்குப் பிரசாதிக்க, பிரம்மா இவ்வரு குண்டான சிஷ்யாதிகளுக்கு ரகஸ்ய த்ரயோபதேசம் பண்ணினார் என்று ரிஷிகளுக்கு ரகஸ்யத்தினுடைய வரலாறு என்று அருளிச் செய்வது'..... 'நாதமுனிகள் தொடங்கி நயக்கு சம்பிரதாய மாயிருக்கும்; பிரம்மா முதலாக, ரிஷிகளுக்கு சம்பிரதாயமாயிருக்கும்' - என்றெல்லாம் கூறியிருக்கும் வரலாறுகள் காணத் தக்கன.

இவருடைய அரும்பத விளக்கம் பெயருக்கேற்றாற் போல் மிகவும் சுருக்கமாகவே இருக்கும்; சுவையான பகுதிகளும் நிரம்ப உள்ளன.

http://acharya.org

ஸ்ரீ வைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷம்

இது மிகவும் விரிந்த நூல். பரதத்துவ விவேகம், சதாசார்ய விவேகம், சித்தோபாய விவேகம், பாஞ்சராத்ர ப்ரமாண வைபவ விவேகம், பகவத் பக்த துர்ஜாத்யபகம விவேகம், வர்ணாச்ரமாசார விவேகம், ஸ்ரீவைஷ்ணவ யதிக்ருஹஸ்தாதி அந்யோந்ய வந்தநாதி சமர்த்தனம், ப்ரபந்ந தினசர்யை, பகவத் ப்ரசாத போக்யாபோக்யதாதி நிர்ணயம், சிஷ்டாசார்ய ப்ராதான்ய நிருபணம் என்ற பத்துப் பிரகரணங்களைக் கொண்டது. இதன் நடையைப் பார்க்கும் போது இவ்வாசிரியர் இதை முதலில் எழுதியிருக்கலாமோ என்று கருதத் தோன்றுகிறது. முழுமையும் வரிவரியாக வாக்கியம் வாக்கியமாக வடமொழியாகவே எழுதியிருக்கிறார். 200 சொற்கள் கொண்ட ஒரு பக்கம் முழுமையும் எடுத்துக் கொண்டால், 28 சொற்களே தமிழ்ச் சொற்கள், ஏனைய யாவும் வட சொற்களே, பக்கம் 369 தமிழ்ச் சொற்கள் - மட்டும் சொல்லுகிற, ஆவது, ஆகையாலே, அனைவர்க்கும், என்று சொல்லக் குறையில்லை, ஆகையால், என்கிற இதன்படியே, கீழ்ச் சொன்ன, என்று விவேகிகள் கண்டு கொள்வது, இன்னமும், யதிகளுக்குச் சொல்லிபி ராமையாலும், அவற்றில், அந்த, அவர்களைப் போலன்றிக்கே, அந்த, உண்டாகச் சொல்லியிருக்கையாலே, இல்லை யென்றுமதுவே - இவையே தமிழ்ச் சொற்கள். ஏனைய யாவும் வடசொற்கள், கிரந்த எழுத்து. ஒருகால் பொருளானது சமயாசாரமானபடியால், முழுமையும் இங்கு வடமொழியாகத் தந்து இடைச் சொற்களை மட்டும் தமிழாகப் பெய்து தந்தார் போலும். ஓரிடத்தில் இவர் (பக்கம் 497) 'விப்ரயதி என்றுமத்தாலே வர்ணாந்த்ர யத்திநும் யதிகள் உண்டென்னுமதும் அவர்களுக்குண்டான தண்டபேதங்களும் சுப்ரசித்தம்' என்று எழுதியிருப்பது கருதத்தக்கது. 16ம் நூற்றாண்டில், பிராமணருக்கு மட்டுமே சந்நியாசமும் ஆசாரிய பதவியும் உண்டென்று அத்வைதிகள் கூறிய கூற்றை மறுத்துச் சிவாக்கிர யோகிகள், மற்ற வருணத்தாருக்கும் சந்நியாசமும் ஆசாரிய பதவியும் உண்டென்று நிலைநாட்டிச் சைவ சந்நியாச பத்ததி (வடமொழியில்) எழுதியமை போல வைணவ பரமாக இந்த ஜீயரும் இதைச் சொல்வது காணத்தக்கது.

ஒவ்வொரு பத்தியின் முடிவிலும் இவர் இப்படி விவேகிகள் கண்டு கொள்வது (அல்லது நிச்சயித்துக் கொள்வது) என்று முடிப்பார். இது பெருந்தேவனார் பாரத வெண்பாவின் உரைநடைப் பகுதியின்

http://acharya.org

இறுதியிலும் 'இவ்வாறு செய்தாராகக் கண்டு கொள்வது' என்று வரும் தொடரை நினைவூட்டுகிறது.

காலம்

மணவாளமாமுனிகள் 15ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் (கி.பி. 1443) பரமபதம் அடைந்தார். அக்காலத்தில் பட்டர்பிரான் ஜீயர் பிரசித்தமாய் விளங்கிய சீடர். அவர் வழியில் மூன்றாம் தலைமுறையில் வந்தவரே பிள்ளைலோகஞ்ஜீயர். எனவே இவர் காலம் கி.பி. 1525 - 50 எனக் கொள்ளுதல் பொருத்துவதாகும்.

நடுவிலாழ்வான் தனியன்

யேநப்ரோத்ஸ்கலதே நித்யம் கார்க்யவம்சமஹாம்புதி:
மந்மஹே தம் ஸதா சித்தே மத்யமார்யம் கலாநிதிம்.

பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர் தனியன்

ஸௌம்யஜாமாத்ருயோகீந்த்ர பாதஸேவைகதாரகம்
பட்டநாதமுநிம் வந்தே வாத்ஸல்யாதி குணார்ணவம்

பிள்ளைலோகம் ஜீயர் தனியன் வாழித்திருநாமம்

ஸ்ரீசடாரி குரோர் திவ்ய ஸ்ரீபாதாப்ஜ மதுவ்ரதம்
ஸ்ரீமத்யதீந்த்ரப்ரவணம் ஸ்ரீலோகார்ய முநிம் பஜே
சீராரும் கச்சிநகர் சிறக்கவந்தோன் வாழியே
சித்திரையில் ஓணத்தில் உதித்தசெல்வன் வாழியே
ஏராரும்குழல்மடவார் இன்பறுத்தோன் வாழியே
யதீந்த்ரப்ரவணப்ரபாவம் எடுத்துரைத்தான் வாழியே
நீராருவரங்கத்தில் நிறைவேற்றினான் வாழியே
நீரேலோகாரியனென்று நியமனம் பெற்றான் வாழியே
தாராருமறையடி தினம் தொழுவோன் வாழியே
தாரணியில் லோகமுனி தாள்கள் என்றும் வாழியே

பிள்ளைலோகம்ஜீயர் திருவடிகளே சரணம்

http://acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமங்கையாழ்வார் - குமுதவல்லிநாச்சியாருடன்

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவரங்கத்து அமுதனார் வைபவம்

ஸ்ரீரங்கே, மீநஹஸ்தே ச ஜாதம் ரங்கார்ய நந்தநம்!
ராமாநுஜ பதாஸக்தம் ரங்கநாத குரும் பஜே ||

(ஸ்ரீரங்கத்தில், பங்குனி ஹஸ்தத்தில் அவதரித்தவராய், அணியரங்கத்தமுதனாரின் குமாரராய், எம்பெருமானாரின் திருவடியைப் பற்றியவரான திருவரங்கத்தமுதனாரை ஆஸ்ரயிக்கிறேன்)

ஆசாரியர்களில் தலையானவர்—எல்லோரிடமும் கருணை கொண்டு அவர்களை உயர்த்திடவல்லவர் நம் இராமாநுசனே யாவர்.

நாலாயிரதிவ்யப்ரபந்தத்தில் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" நம்மாழ்வார் விஷயமாக அமைந்தது போல எம்பெருமானார் விஷயமாக இராமாநுச நூற்றந்தாதி எனப்படும் திவ்யப்ரபந்தம் அமைந்துள்ளது.

இந்த பிரபந்தத்தைப் பாடியருளியவர் திருவரங்கத்தமுதனார்.

இந்த அமுதனாரை பிள்ளை என்று மிகவும் கொண்டாடி அழைப்பதால் இவர் எவ்வளவு கௌரவத்துக்குரியவர் என்பது தெரிகிறது. எம்பெருமானார் திருவடிகளிலே அன்புடையோர்க்கு ஸாவித்ரீ போலே (காயத்ரீமந்த்ரம் போலே) இதனைத் தினந்தோறும் நினைவில் கொள்ள வேண்டும் என்று பாட்டு தோறும் இராமாநுச என்னும் திருநாமத்தை வைத்து 108 பாசுரங்களாக அருளிச்செய்து நமக்குப் பேருதவி புரிந்துள்ளார் அமுதனார். இந்த நூற்றந்தாதியை நமதாசாரியர்கள் "ப்ரபந்நஸாவித்ரீ" என்றருளிச் செய்வர்கள்.

இவர் "மூங்கில் குடி" என்றழைக்கப்படும் திருவம்சத்தில் ஒரு பங்குனி ஹஸ்தத்தில் திருவரங்கத்தில் அவதரித்தவர். இவர் பல்கலைகளையும் பயின்று திருவரங்கம் பெரியகோயிலில் புரோஹிதராய் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்திருந்தார். இவருடைய இயற்பெயர் யாதோ தெரியவில்லை. இவரது கைங்கர்யத்தினை இட்டு பெரிய கோயில்நம்பி என்றே அழைக்கப்பட்டார். அமுதனார் என்ற திருநாமம் பின்பு இவரால் பெறப்பட்டதாகும்.

'அமுதன்' என்று பெயர் பெற்ற இவர் திருவரங்கத்தமுதனார் என்று அழைக்கப்படுவாராயினர்.

கூரத்தாழ்வானால் திருத்தப்பெற்று பெரியகோயில் நம்பி உடையவர் திருவடிகட்கு ஆட்பட்டவராய் வந்த பின்னர், ஒரு ஐப்பசி மாதத்தில் அவரின்

http://acharya.org

தாயார் பரமபதிக்க, பத்தாம் நாள் கர்மங்கள் ஆகி—பதினோராம் நாளன்று ஏகாஹச்ராத்தத்தில். உடையவரிடம் எல்லா சிறப்புகளையும் உடையவராய் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அமைய வேண்டிய குணநலன்கள் நிறையப் பெற்றவராய் ஒரு ஸ்ரீவைஷ்ணவரை நிமந்த்ரணத்திற்கு (க்ஷணமனார்த்தம்) நியமித்தருளும்படிக் கேட்டுக் கொண்டார். இப்பணியை யாரும் ஏற்க முன் வரவில்லை. ஆனால் உடையவர் நியமனப்படியாக கூரத்தாழ்வான் ஏற்று ச்ராத்தத்தில் அமுது செய்தார். அமுதனாருக்குத் தனது ஆசார்யனே போக்தாவாக வந்ததில் பரம ஸந்தோஷம்; எதை இவருக்குப் பரிசாகக் கொடுக்கலாம் என்று பார்த்திருக்கையில் ச்ராத்த முடிவில் திருப்தி கூறுகையில் ஆழ்வான் அவருடைய கோயில் புரோஹிதம், புராணபடனம் ஆகியவற்றை தானமாகக் கேட்க, அவரும் அவற்றை உகந்து ஸமர்ப்பித்தார். அவற்றை பெற்று ஆழ்வான் எம்பெருமானாரிடம் ஸமர்ப்பிக்க, ஆசார்யரும் இக்கைங்கர்யங்களில் அவரையே (ஆழ்வானையே) நியமித்தருளினார்.

எம்பெருமானார் நியமனப்படி கோயிற் புரோஹிதம் முதலானவை ஆழ்வானாலேயே நிர்வஹிக்கப்பட்டு வந்தபோது அமுதனார் கோயில் கைங்கர்யங்களில் அந்வயமில்லாமல் ஒட்டற்றிருந்தது கண்ட எம்பெருமானார், ''இவர் இப்படி ஒழிந்திருக் கலாகாது'' என்று திருவுள்ளம்பற்றி, பிள்ளைதிருவரங்கப் பெருமாள் அரையரிடம் இயற்பா ஸ்ரீகோசத்தை பிக்ஷையாகப் பெற்று, ''இன்றுமுதல் ஸந்நிதியில் இயற்பா ஆயிரத்தை நீங்கள் இசைக்கவேண்டாம்'' என்று அரையரை நியமித்து, அமுதனாரை 'இயற்பாவை' ஸந்நிதியில் அரையருக்கு பதில் விண்ணப்பிக்கும்படி நியமித்தார். அப்படி ஸேவிக்கும் நாட்களில் அரையர் பெறும் சிறப்புக்கள் அனைத்தையும் அமுதனார் பெறும்படி ஏற்பாடும் செய்தருளினார். திவ்யப்ரபந்தங்களில் இயற்பா அல்லாத மற்ற மூவாயிரமும் பெரியபெருமாள் நம்பெருமாள் திருமுன்பு அரையராலும், இயற்பா ஆயிரம் அமுதனாராலும் அநுஸந்திக் கப்படுகிறது. மற்ற ஸந்நிதிகளில் அரையரே, அமுதனாரே அரையர்களுக்கு இட்ட மரியாதைகளுக்கு இணங்க தொடங்க, ஸாது ஸ்ரீவைஷ்ணவர்கள் (அத்யாபகர்கள்) ஸேவிப்பார்கள்.

அமுதனார் எம்பெருமானாருடைய நியமனம் பெற்று இராமாநுச நூற்றந்தாதி ப்ரபந்தம் இட்டருள்வதற்கு அடையவளைந்தான் திருமதிலுக்கு அருகேயிருந்த ஒரு தென்னஞ்சோலைத் திருமண்டபத்தில் வீற்றிருந்து பட்டோலை கொண்டிருக்கும் போது, அவ்வளவில் எம்பெருமானார் அழகியமணவாளனது நியமனப்படியாக ஆழ்வான், ஆண்டான், எம்பார் முதலிய அந்தரங்க சிஷ்யர்களோடு அவ்விடத்தே யெழுந்தருள, அப்போது ''செழுந்திரைப்பாற்கடல்'' என்ற 105—ம் பாசுரம் எழுதவேண்டிய தருணமாயிருந்த தென்றும், அது முதலான மூன்று பாசுரங்களும் எம்பெருமானார் திருமுன்பே விண்ணப்பிக்கப் பட்டனவென்றும், பிறகு அரங்கேற்றம் ஆனபின், ''இந்த நிகழ்ச்சியின் நினைவாக இப்பிரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றும் பாசுரங்கள் மூன்றாயிருக்க வேணும்'' என்று ஆழ்வான்

http://acharya.org

நியமித்தருளினாரென்றும், ஆனது பற்றியே மற்றைப் பிரபந்தங்கட்கு இரண்டு பாசுரங்கள் சாற்றுப்பாசுரங்களாகவும் இராமானுசநூற்றந்தாதிக்கு மட்டும் 3 பாசுரங்கள் சாற்றுப்பாட்டுகளாக அமைந்துள்ளது. (இருப்பிடம் வைகுந்தம்....,106) (இன்புற்ற சீலத்து.....107,) (அங்கயல்பாய்வயல்.... 108). திருவரங்கத்தமுதனார் எம்பெருமானார் விஷயமாக கலித்துறை நூற்றந்தாதியை விண்ணப்பம் செய்து அருளியபிறகு, நம்பெருமாள் ஒரு ஸப்தாவரணத்திருநாளிலே உடையவரைத் தம்முடனே கூடவர வேண்டாம் என்று நியமித்தருளி, திருவீதியிலே ஸகலவாத்யங் களையும் நிறுத்தி, ஸ்ரீவைஷ்ணவர்கள் (இந்த நூற்றந்தாதியை) அநுஸந்திக்கக் கேட்டருளி போரவுகந்தருளினார். (இன்றைக்கும் ஸப்தாவரணத் திருநாளிலே திருவீதிகளில் வீதிகள் கூடுமிடம் தவிர நம்பெருமாள் புறப்பாட்டில் வாத்தியங்கள் இசைக்கப்படுவதில்லை. அதற்கு முக்கியமான காரணம் இராமானுசநூற்றந்தாதியினை ஸ்ரீவைஷ்ணவர்கள் இயலாக ஸேவிக்க நம்பெருமாள் திருச்செவிசாத்தும் வைபவத்திற்காக).

நம்பெருமாள் நியமனத்தாலே பெரியஸந்நிதியில் இயற்பா அநுஸந்தித்தவுடனே நூற்றந்தாதியை வரிசையுடன் கேட்டருளுகிறார். நாச்சியார் கோயிலிலேயும், (ஸ்ரீரங்கநாச்சியார் திருமுன்பு) அப்படியே ஆண்டாள், ஆழ்வார் ஸந்நிதிகளிலே அமுதனார் வாழுமனாரைத் தொடங்க ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்தித்துத் தலைக்கட்ட, உடையவர் நூற்றந்தாதி தொடக்கத்திலே அரையரைப் போலே வரிசைகளை உடையவர் நியமனத்தினாலே (அமுதனாருக்கு) சாற்றுகிறது. உடையவர், நூற்றந்தாதியை இயற்பாவோடே — முதலாயிரத்தில் கண்ணிநுண்சிறுத்தாம்பைப் போலே— சேர்த்து ஸகல ஸ்ரீவைஷ்ணவர் களுக்கும் ப்ரபந்த காயத்ரியாக நித்யாநுஸந்தேயமென்றும், இந்த அமுதனாருக்கும் திருப்பணி செய்வாருக்கும் மடமும் திருமாளிகைகளிலே அத்யயன ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் முன்னே பஹுமானமும் திட்டம் செய்து அருளினார்." இவை (கோயிலொழுகு) தரும் செய்திகள்.

அமுதனாரது புலமையும், அருளிச்செயலுக்குப்பொருள் கூறும் திறனும்.

இராமானுசநூற்றந்தாதி "பூமன்னுமாது பொருந்திய மார்பன்" என்று மிகவும் மங்களகரமாகத் தொடங்குகிறது.

திருப்பல்லாண்டு, திருவிருத்தம், திருவாய்மொழி, பெரியதிருமொழி உரைகளில் அமுதனாரது நிர்வாஹங்களாக பல இடங்களில் பெரியவாச்சான்பிள்ளையால்காட்டப்படுகிறது.

திருப்பல்லாண்டில் " ஏடு நிலத்தில்" (4) பாசுரத்தில் ஏடு என்ற சொல்லுக்கு மூன்று விளக்கங்கள் பெரியவாச்சான் பிள்ளையினால் அருளப்பட்டுள்ளன.

"ஏடு என்பது பொல்லாங்கு; 'உங்களைப் பொல்லா நிலத்திலேயிடுவதற்கு முன்னம்' என்று பிள்ளையமுதனார்" என்று காட்டியருளுகிறார். (பொல்லாநிலம்—ச்மசாநபூமி—இடுகாடு). இப்பாசுரத்தில் ஆழ்வார் ஸ்வாத்மாநுபவத்தில் குறியுள்ள கேவலனை பகவத் மங்களாசஸனபரனாக

http://acharya.org

ஆகும்படி அழைக்கிறார் என்னுமிடம் தோற்றவிருக்கிறதிறே'' என்று வியாக்கியான ஸ்ரீஸூக்திகள்.

இவரது உரைநயங்கள் காட்டப்பட்டிருக்கும்
இடங்களிற் சிலவருமாறு

1) பெரிய திருமொழி — 3-7-1— "கரியான் ஒருகாளை............''
2) '' — 6-8-7— "வந்துநுமரை நட்டனை______''
3) '' — 7-1-1— ''கறவா மடநாகு ....''
4) '' — 8-1-8— "கொற்றப்புள்ளொன்றேறி......''
5) '' — 9-2-1— "பொன்னிவர்மேனி.............''
6) '' — 9-5-1— "தவளவிளம்______மல்லலையந்தும்''
7) திருவிருத்தம் சு — 7ம் பாட்டு "குழற்கோவலர்..............''
8) திருவாய்மொழிக்கான நம்பிள்ளை உரை. — 1-5-2 — "நீசனேன் நிறைவொன்றுமிலேன்''
9) '' — 4-9-2— "ஏமாறிக் கிடந்தலற்றும்.''
10) '' — 5-1-7— "அவன் என்விடத்தான் மாய்ப்பது ?''
11) '' — 6-1-6— "போற்றியானிருந்தேன்''
12) '' — 6-8-1— "பொன்னுலகாளீரோ_நன்னலப்புள்ளினங்காள்''
13) '' — 10-3-4 — "தொழுதுதொழுதேன்தனிமையும்_____''

நம்பிள்ளையினுடைய சிஷ்யரான பின்பழகராம் பெருமாள் சீயரது "வார்த்தாமாலை," 'ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்' பெரியவாச்சான் பிள்ளையது அபிமான திருக்குமாரர் நாயனாராச்சான் பிள்ளையது 'சரமோபாய நிர்ணயம்', திருமாலையாண்டானது வம்சத்தில் உதித்த யாமுனாசாரியரது 'ப்ரமேய ரத்னம்', நிகமாந்த மகாதேசிகனது 'ரஹஸ்யத்ரய ஸாரம்' ஆகிய நூல்கள் வழி இவரது பெருமையினை நாம் மேலும் அறிந்துகொள்ளலாம்.

இவர் வாழ்ந்தது 108 ஆண்டுகள். அருளிச்செய்த ப்ரபந்தமான இராமாநுசநூற்றந்தாதி 108 பாசுரங்கள் கொண்டது. இந்த இராமாநுசநூற்றந்தாதிக்கு 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த மணவாள மாமுனிகள் உரையிட்டருளினார். அந்த உரைக்கு தெளிவுரை 16 ம் நூற்றாண்டில் அவதரித்த பிள்ளைலோகம்சீயரால் அருளப்பெற்றது.

அந்த உரை ஏடுகளிலிருந்து 1891ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. அதன் பிறகு 108 ஆண்டுகளுக்குப் பிறகு 1999 ம் ஆண்டு இந்த உரை மறுபதிப்பாக அச்சிடப்படுகிறது. 108 பாசுரங்களும் 108 ஆண்டு தவமிருந்து நம்மிடையே கலந்து வருவதுபோல் இது அமைந்துள்ளது. இவ்வுரையினை ஒவ்வொரு பண்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களும் படித்து இன்புறவேண்டும்.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே வரவரமுநயே நம:

இராமானுச நூற்றந்தாதி

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை:— ப்ராப்தகர்ம நிவ்ருத்யர்த்தமாக, அபிஜாதரான அமுதனார் திருவடிகளைச் சிரோ பூஷணமாகத் தரித்தேன்: ஆகையால் கர்மபலாநுபவம் பண்ணுவிக்கும் யமாதிகளுக்கு என்னோடு என்ன ப்ராப்தி யுண்டு என்கிறது.

வேதப்பிரான் பட்டர் அருளிச் செய்த தனியன்கள்

முன்னை வினையகல மூங்கிற் குடியமுதன்
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும் – என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்.

வ்யா:— (முன்னை வினையகல) "முன்னைவினை மாரியனாய்" என்றாரிறே யாதிசேகரி அழகிய மணவாளச்சீயரும்; அப்படியே அநாதிகாலார்ஜிதகர்மங்கள் அகன்று போக, பாபமெல்லாம் அகன்று என்னை விட்டுப் போக அது எத்தாலேயென்ன, அமுதன் கால் தலைப்பட்டதாலேயென்கிறது. மூங்கில்குடியமுதனித்யாதியாலே, மூங்கில் குடியாவது— 'வேயர் தங்கள் குலம்' (பெரியா—திரு—5—4—10) என்னு மாபோலே இவர்க்கு மூங்கில் குடியாயிற்று. அக்குடியிலே அவதரித்த அமுதனாருடைய, (பொன்னம் கழல் கமலப் போதிரண்டும்) ஸ்ப்ருஹணீயமாய் அழகியதாயிருக்கிற திருவடித்தாமரைப் பூவிரண்டையும் (என்னுடைய சென்னிக்கணியாகச் சேர்த்தினேன்) அவருடைய சென்னிக்கணி இராமாநுசனடிப்பூ (105) என்னுடைய சென்னக்கணி இவையாயிற்று. (சென்னிக்கணியாகச் சேர்த்தினேன்) தலைக்கலங்காரமாகச் சேர்த்தேன். "செம்பாதம் பற்றித்தலை சேர்த்து" (திருவாய் 2—6—1) என்னுமாபோலே. அங்கு ப்ரார்த்தனை; இங்கு க்ருதார்த்ததை. அத்தால், (தென்புலத்தார்க்கு) யமபுரவாஸிகளான யமகிங்கரர்களுக்கு, (என்னுக் கடவுடையேன்) இனியேதுக்காகக் கர்மபலாநுபவத்துக்குக் கடவேன்? கர்மமுண்டாய் பிறந்தவாறே பலாநுபவம் பண்ணவிறே. ஆகையாலே கர்மபலாநுபவம் பண்ணுவிப்பார்க்குக் கர்த்தவ்யமில்லை. "நீதிவானவர்ப் பிரானார் பிரமகுருவாகி வந்து, என்சென்னித் திடரில் பாதவிலச்சினை" வைக்கையாலே (பெரியா—திரு—5—2—8) "தென்புலக்கோன் பொறிபொற்றி வைத்த விலச்சினை மாற்றித் தூதுவரோடி யொளித்தார்" (பெரியா—திரு—5—2—2) அத்தாலே "என்னுக்கடவுடையேன்யான்" என்கிறது. "என் பெய்வினை தென்புலத்தில் பொறித்த அப்பத்தகச் சும்மை பொறுக்கியபின்" (34) என்னக்கடவதிறே. (யான்) பொன்னங்கழற்கமலப் போதிரண்டும் என்னுடைய சென்னிக்கணியாகச் சேர்த்தயானென்றபடி.

http://acharya.org

(என்னைக்கடவுடையேன்) என்றுக்குளன்றெருகரம் கடைக்குறைத்தலாயிருக்கிறது. கடவுடையேன் - ஏதுக்காகப்ராப்தியுடையேனென்றபடி. அம்ருதத்துக்கும் விஷத்துக்கும் சேர்த்தியில்லாதாப்போலே திருவரங்கத்தமுதனார் திருவடிகளில் ஸம்பந்தமுடையார்க்கும் தென்புலக்கோனடியார்க்கும் என்னசேர்த்தியுண்டு. "அரங்கமாநகருளானே - மின்னுமங்கற்ற வாவலிப்புண்டமைகண்டாய் - நமன்தமர்தலைகள்மீதே - பாவலிட்டுழிதருகின்றோம்" என்றும், "அரங்கமென்றழைப்பராகில் பொதியில்லாம்நாகமெல்லாம்புல்லெழுந்தொழியுமன்றே" என்றும், "[illegible]" "நாஜ்ஞாரகல்லைவ்கோசம் பைசாவமகோசாம், நன்மாத்ரங்களும்ஜாபுண்யமகோகவேவேதபுத்திமாக்" என்றும், "[illegible]" "கைனுபாகவதா யமவிஷயகச்சந்தி" என்றும்சொல்லக்கடவதிறே.

அ.—(நயக்தருபேரின்பமெல்லாம் பழுதென்று) ப்ராப்யதுபாஸங்களை ஹேயமென்றபுத்திபண்ணி தம்திருவடிகளை ஆச்ரயித்தவர்கள்விஷயமாக ஸௌசாஜ்யத்தைப்பண்ணித்தருமத்தகேவ வஷ்டயசஸ்ஸையுடைய எம்பெருமானார்திருவடிகளிலே உத்தமகுணத்தையுடையதிருவரங்கத்தமுதனார், தம்முடையகிரவதிசயபக்தியாலேபணிக்கும் அந்தாதியை ஓதவம்மநினென்று மநஸ்ஸை அர்த்திக்கிறது.

மூ.—நயக்தருபேரின்பமெல்லாம்பழுதென்றுநண்ணினர்பால்
சயந்தருகீர்த்திஇராமாநுசமுனிதாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்குமன்பால்
இயம்புங்கலித்துறையந்தாதியோதவிசைநெஞ்சமே.

வ்யா.—(நயக்தருபேரின்பமெல்லாம்) விஷயங்களாலேவரும் நிரவதிகஸுகங்களையெல்லாம். நயம் - விஷயம். "சாறுவமைகள்வேனயம்" என்கிறவிடத்துக்கு - விஷயங்களை என்றிறே வ்யாக்யாநம்பண்ணியருளிற்று. அநுராகப்ராசுரத்தாலே நிரதிசபத்தைப் பேரின்பமென்கிறது. (பழுதென்று) அவற்றைஹேயமென்று விசாரித்துவிட்டு. (நண்ணினர்பால்) ஆச்ரயித்தவர்கள்விஷயத்திலே. (சயந்தருகீர்த்திஇராமாநுசன்) அவர்களுக்கு ஸௌசாஜ்யத்தைப்பண்ணித்தருகிற எம்பெருமானார். இப்படி ஆபாஸஸுகங்களைவிட்டு ஆச்ரயித்தவர்கள் ஆழ்வானும்அமுதனுருமாய்த்து. "[illegible]" "ராமாநுஜார்யவிஷயீக்ருதம்" என்றும், "அக்காதலைத்தழுத்திமாயமென்றுனியை வக்கெதித்தான்" என்றுதிறே. "[illegible]" "ராமாநு

தோஷஜ்ஞராமாத்ம பதாச்ரிதாசாரராமாநுஜயதிபதிம்'' என்றும், "[illegible]" "மந்நகதனைர்க்கவிச்ரவக்தே வநிச்வரணைச்ரயா:" என்னக்கடவதிறே. இதுவாய்த்துச் சயந்தரு கீர்த்தி. "சயப்புகழார்" என்னுமாப்போலே.

(இராமாநுசமுனிதாளிணைமேல்) இப்படி ஆச்ரிதஜநவப்ரா தரான யதிராஜரான ஸ்ரீராமாநுசமுனி சரணத்வயவிஷயங்களிலே வாசிக கைங்கர்யமாகச்செய்த ப்ரபந்தத்தை அப்யஸிக்க ஸம்மதி என்று ஜென்மகஸ்வமுண்டாம்படிமநஸ்ஸைப்ரார்த்திக்கிறது. "ராமாநுசன் சரணாரவிந்தம்" என்றும், "ராமாநுசன்றனிணையடி" என்றும், "இராமாநுசனடிப்பூமன்னவே" என்றுமிறே ஆதி மத்யாவஸாநம் அங்க்ரித்வயவிஷயமா யிருப்பதாய்த்து - இப்ர பந்தந்தான்.

அன்றிக்கே, "நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றிநண்ணினர்பால் சயந்தருகீர்த்தியிராமாநுசமுனி" என்று இத்தனியனருளிச்செய்தவ ரபிப்ராயமாகவுமாம். அதாவது, நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணினர்பால் - நன்மையைப்பண்ணுமதான நிரதிசயஸுகங்களெல்லாம், பழுதின்றி - ஸங்கோசமின்றிக்கே, நண்ணினர்பால் - "தந்தைநற்றாய்தாரம் தமர் பெருஞ்செல்வம் என்றனக்கு நீயே மதுரவாசா" என்கிறபடியே ஸர்வபந்துக்களும் நீயேயென்று ஆச்ரயித்த நம்முடையவிஷயமாக என்று இவ்வளவும் யோஜிக்கவுமாம். மேல்பூர்வவத்.

அன்றிக்கே, நயந்தருபேரின்பமெல்லாம் பழுதென்று - நிர தசங்களை த்ருணவத்கரித்து, நண்ணி - காஷாயவாஸந்நண்ணினவருமாய் என்று எம்பெருமானார்க்கு விசேஷணமாகவுமாம். நன்பால் - நல்லஸ்வபாவத்தாலே, பரமார்த்திலே பெருநல ஸ்வபாவத்தாலே. (சயந்தருகீர்த்தியிராமாநுசன்) தாம் நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணினமாத்ரமன்றிக்கே, தம்மை யாச்ரயித்தவர்களும், "நரகத்தை நகுநெஞ்சே" என்கிறபடியே ஸம்ஸாரத்தை வெல்ல வல்லராம்படி பண்ணி அத்தாலேவந்த ஜயத்தையுடையவரென்றுமாகவுமாம். "[illegible]" "த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குசவிபூதய: ராமாநுஜபதாம்போஜ ஸமாச்ரயணசாலிந:" என்னக்கடவதிறே.

அ.—(சொல்லின்தொகைகொண்டு) இது அமுதனாருளிச்செய்ததாதல், அவரபிப்ராயத்தாலே [illegible] அருளிச்செய்ததாதலாயிருக்கும்.

http://acharya.org

அமுதனாரருளிச்செய்ததனியன்.

மூ.—சொல்லின்தொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டு செய்யும், நல்லன்பரேத்துமுன்னாமமெல்லாமென்றன்னா வினுள்ளே, அல்லும்பகலுமமரும்படிநல்கறுசமய, வெல் லும்பரமவிராமாநுசவிதென்விண்ணப்பமே.

வ்யா.—(சொல்லின்தொகைகொண்டு) இவ்வளவாகச்சொல் லக்கடவோமென்று ஸங்க்யாநிர்த்தேசம்பண்ணி. அன்றிக்கே, சப் தஸமூஹங்களைக் கொண்டென்னவுமாம். (உனதடிப்போதுக்கு) தேவரீருடைய திருவடித்தாமரைகளுக்கு. (தொண்டுசெய்யும்) வாசிககைங்கர்யமாக இருக்கிற கவிகளைப்புனையும். (நல்லன்பர்) ஏத்தும் "நல்லார்பரவும்" என்கிறபடியே அநந்யப்ரயோஜநபக்தியுக்தர் ஏத்தும். (உன்நாமமெல்லாம்) அந்தபக்திபாரவச்யத்தாலே ஸ்தோ த்ரம்பண்ணும் தேவரீருடைய திருநாமமெல்லாம். (என்றன்னாவி னுள்ளே) அந்தத்திருநாமங்களை அநுஸந்திக்கவேணுமென்கிருக் கிற என்றன்நாவினுள்ளே.

(அல்லும்பகலுமமரும்படிநல்கு) "நன்னிருளளவும் பகலும் நானழைப்பன்" என்னும்படி நிரந்தரம் விச்சேதமறப் பொருந் தியிருக்கும்படி உபகரித்தருளவேணும். (அறுசமயம்வெல்லும்ப ரம) ஷட்ஸமயங்களை நன்குலையும்படியிறே வெல்லுகிறது; இப் படி (வெல்லும்பரம) வெல்லுகிறமேன்மையனவரே ச்ரேஷ்டரானவ ரே. (இராமாநுச) நாலெழுத்தாய் நாராயணநாமத்திலும் அதிக மான திருநாமத்தையுடையவரே. உன்நாமமெல்லாம் என்றன் நாவினுள்ளே அல்லும்பகலு மமரும்படிநல்கு, இதென்விண்ணப் பம் - இது என்விஜ்ஞாபநம். தேவரீர் நாலெழுத்துடைய திரு நாமம் என்நாவிலே அமரும்படி நல்கியருளவேணும். "ராமாநு சன்" என்றிறே முடியவருளிச்செய்தது.

(சொல்லின்தொகைகொண்டு) நூற்றெட்டுப்பாட்டாகச்சொ ல்லவேணுமென்று, சொல்லின்தொகையை - ஸங்க்யாநிர்த்தேசத் தைத் திருவுள்ளத்திலேகொண்டு. (உனதடிப்போதுக்கு) "ராமாநு சன்சரணாரவிந்தம் நாம்மன்னிவாழ" "ராமாநுசனடிப்பூமன்ன வே" என்றிறே இவர் ராமாநுசனடிப்போதுக்கு வாசிகமாகத் தொண்டுசெய்தது. இப்படிதொண்டுசெய்யும் நல்லன்பர் அமுத னாரிறே. (ஏத்துமுன்னாமம்) அவர்களாலே ஸ்தோத்ரம்பண்ண ப்பட்ட தேவரீர்திருநாமமான நூற்றெட்டுப்பாட்டும். (என்றன் நாவினுள்ளே அல்லும்பகலு மமரும்படிநல்கு) இத்தை நிரந்தர மநுஸந்திக்கவேணுமென்கிற என்னாவினுள்ளே நிரந்தரம்

http://acharya.org

திருநாமமமரும்படி அநுஸந்திக்கவேணும். (இதென்விண்ணப்பம்) = ([illegible]) "இதம்மமவிஜ்ஞாபநம்" "அடியேன் செய்யும் விண்ணப்பமே.) இது அமுதனார் ஸ்ரீஸூக்தத்தை அநுவதித்துச் சொன்னபடி.

அ.—(இனியென்குறைநமக்கு எம்பெருமானார் திருநாமத்தினால்) ஸகலவேதஸாரமான ஸாவித்ரியின் ஸாரமாய் ப்ரபந்ந காயத்ரியாம்படி நூற்றெட்டுப்பாட்டிலும் "ராமாநுசன்" என்னும் திருநாமத்தை யருளிச்செய்து உபகரிக்கையாலே த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டிலும் ஒருகுறைகளுமில்லையென்று பெற்றலாபத்தைப்பேசுகிறது.

சோமாசியாண்டானருளிச்செய்தது.

மூ.—இனியென்குறைநமக்கெம்பெருமானார்திருநாமத்தால்
முனிதந்தநூற்றெட்டுச்சாவித்திரியென்னுநுண்பொருளை
கனிதந்தசெஞ்சொற்கலித்துறையந்தாதிபாடித்தந்தான்
புனிதன்திருவரங்கத்தமுதாகியபுண்ணியனே.

வ்யா.—(இனியென்குறைநமக்கு) ஒன்றுங்குறையில்லை-த்ருஷ்டத்தில் சொல்லப்புகில். "வாயமுதம்பரக்கும்-ராமாநுசனென்றுசொல்லுமின்" - அமுதன்வாயிலேயிறே அமுதமுண்டாவது. [illegible] "த்ரைலோக்யம் ஸகலபாவிமஸ்ப்ரஜ்ஞாதநாமிச । ஸமேவ ஸ்வாருஹநாந்யபாதவ்யகதாமகுரு:-" இவரும் ராமாநுசனிறே; ஆகையாலே த்ருஷ்டாநுகூல்யமுண்டு; மோக்ஷஹேதுவாகையாலே அத்ருஷ்டாநுகூல்யமுண்டு; அத்தாலே இனியென்குறை யென்கிறது. (எம்பெருமானார் திருநாமத்தால்) "ராமாநுசன் திருநாமம் என்றிறே யருளிச்செய்தது, அத்திருநாமத்தாலே. நம்பெருமாளை நாராயணன் நாமத்துக்கு ஒரு குறையுண்டு பந்தத்துக்கு ஹேதுவாகை; எம்பெருமானார்ராமாநுசனென்னுந் திருநாமம் மோக்ஷத்துக்கே ஹேதுவாகையாலே அக்குறையுமில்லை. ஏவம்விதவைலக்ஷண்யத்தையுடைய திருநாமத்தினாலே பாடித்தந்தானென்கிறது.

(முனிதந்த) "[illegible]" "தவத்யாகாத்தந்நதவ்ய" என்றும், "முனிமாப்பிரம்முதல்வித்தாய்" என்றும், "முனியே" என்றுமிறே ஸ்ருஷ்ட்யுந்முகனை ஸர்வேச்வரனைச் சொல்லுவது. அப்படிப்பட்ட ஸர்வேச்வரன்ப்ரஹ்மாவைஸ்ருஷ்டித்து. [illegible] "வேதப்ரதாநபூர்வகமாகாயத்ரீவேதமாதாம்" என்னும்படியான காயத்ரியையும் ப்ரணவபூர்வகமாக

http://acharya.org

உபதேசித்தான்; அது அஷ்டாக்ஷரமாயிறே [உச்சரித்துப் போருவது, அப்படியே அதனைக்கிக்கும்படி, அதின் நன்பொருளை - ஸ்ரீலக்ஷ்மணார்த்தரை. அக்ஷரகாயத்ரிக்கும் மந்த்ரமாயிறே ப்ரணவமிருப்பது.

அதில் அகாரத்தாலே - எம்பெருமானையும், உகாரத்தாலே - பிராட்டியையும், மகாரத்தாலே தச்சேஷபூதனான சேதநனையுமிறே சொல்லுவது. "ஸர்வாத்மகோ ஸர்வம்" "மகாரஸ்து தயோர்தாஸ:" "அகார:" "அக்ஷர:" இத்யாதியாலே - அகார உகார மகாரார்த்தங்கள் சப்தார்த்தஸ்வாரஸ்யங்களோடே கூடியிறே இருக்கிறது; இவரும் ராமாநுஜனிறே. "ஸ்ரீமாநநுஜ:" "ஸுமித்ராத்மஜ:" என்று - சப்தஸ்வாரஸ்யத்தாலே சேதநப்ராதாந்யமுண்டிறே ப்ரணவத்துக்கு; அதிறே நன்பொருளாவது. "ராமாநுசன்" என்றிறே பாட்டுத்தோறும் பதந்தமாயிருப்பது. * உய்வானவ னிறே - உடையவர். தன் நாமத்திலும் நியோகமிறே அவன்றனக்கும் இஷ்டமாயிருப்பது.

இனித்தான், "ஸூர்யமண்டல" "தத்வமிதுர்வசெண்பம்" என்று - ஆதித்யமண்டலாந்தர்வர்த்தியான நாராயணனையிறே அங்கு ப்ரதிபாதிக்கிறது; "ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே" "ஸஹஸ்ராம்ஶு: ஸர்வாத்மா" "யஏஷோந்தராதித்யே ஹிரண்மய புருஷோ த்ருஶ்யதே" "யஶ்சாயம்புருஷே யஶ்சாஸாவாதித்யே ஸ ஏக:" என்கிறபடியே - * அவையுந்தன்னொடும் ஒக்கவிருப்பிடம் மாயனிராமாநுசன் மனமிறே; அத்தாலே ஸேவ்யத்வம் இவர் வடிவிருப்பது. இவரும் * ராமாநுஜிவகாரிறே. * கடலவைய கடோர்வியாலேயிறே அவ்விருளைத்துரத்தது. இப்படியாய்த்து * சாவித்ரியென்னும் நன்பொருளைப்பாடித் தந்தது. ஸகலவேதஸ்ஸாரமான திருமந்த்ரத்தின் தாத்பர்யமிறே ததீயசேஷத்வம். "நின்திருவெட்டெழுத்துங் கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை."

நன்பொருளைப்பாடித்தந்த ப்ரகாரஞ்சொல்லுகிறது (கவி தந்தசெஞ்சொல் இத்யாதியாலே) கவிதருகையாவது - மிடுக்கைத் தருகை. அன்றிக்கே ஆஸ்வாஸமாதல்; அபூர்வமாதல். இப்படி, கவியைத்தந்த-சப்தசக்தியைத்தந்த. (செஞ்சொல்) செவ்வியசொல். "செவிக்கினியசெஞ்சொல்" என்னக்கடவதிறே. (கவித்துறையைக் தரிபாடித்தந்தான்) "கவித்துறை" என்கிறபாவிலேயாய்த்துப் பாடித்தந்தது. (செஞ்சொல்கவித்துறை) சாஸ்த்ரமான கவித்துறையிலேயாய்த்து அந்தாதிபாடித்தந்தது. அந்தாதிப்பாட்டு அடியெடுத்து ஸம்பமாயிறேயிருப்பது (பாடித்தந்தான்)

http://acharya.org

அநுபவபரிவாஹமாகப்பாடி பின்புள்ளார்க்கு முபகரித்தார். (புனிதன்) பரிசுத்தன். பாடித்தந்தசுத்தி. அத்தனையும் சுத்தராக்க வல்ல சுத்தி. உ போற்றும் புனிதனைப்போற்றுமவிறே.

(திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே) திருவரங்கத்தமுதனாரென்ற நாமமிகன். "ராமாநுசன்மிக்கபுண்ணியன்" என்னுமாப்போலே மிக்கபுண்ணியனாடியாராகவந்த புண்ணியம். திருவரங்கத்தமுதாகிய புண்ணியன் - எம்பெருமானார் திருநாமத்தால் - கலித்துறையந்தாதி பாடித்தந்தான்; இனியென்குறை நமக்கு என்று கிளை. "ஹஸ்தே ஸூர்ஷமஹாபுரவாசிகமலஸூநுநா ஸூநு: | ஸர்வஸ்வமபஹ்ருத்ய ஸம்ஸ்ருதிமஹாரண்யே ஸதஸ்ரீநிதே:" "அஷ்டோத்தரசதநாமஸ்ரக்வா ஸதமஷ்டமைரபித்:| லக்ஷ்மணஸ்யமதுர்ஜப்யா: முமுக்ஷுபரிதக்ஷிணை:" என்றும், "யோஸௌ ஸ்ரீலக்ஷ்மணார்யஸ்ய நாமாஷ்டஸதஸம்ஸ்திதை: | ப்ரபத்யேத ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி" "வேதஜூபே லக்ஷ்மணமுநிநித்யமோதந்தஸந்ததி:| முச்யதே ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகஞ்ச கச்சதி" என்றுமிறே அதந்த்யமஹிமையில் ப்ரமாணப்ரசர்த்யமிருப்பது. இவரும் "லக்ஷ்மண முனி" என்று சொல்லப்படும் ராமாநுசனிறே.

பிள்ளைலோகாசார்யஜீயர்திருவடிகளேசரணம்.

---

http://acharya.org

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவரங்கத்தமுதனாரருளிச்செய்த

இராமாநுச நூற்றந்தாதி.

பெரியஜீயரருளிச்செய்தவுரையின்வதாரிகை.

ஸகலசாஸ்த்ரஸங்க்ரஹமான திருமந்த்ரத்திலுடைய தாத்பர்யமாய், பகவதாகஸ்மிகக்ருபாலப்த பரிகதஜ்ஞாநரான ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தஸாரார்த்தமாய், பரமகாருணிகரான நம்மாழ்வாருடைய பரிபூர்ணகடாக்ஷபாத்ரபூதரான ஸ்ரீமதுரகவிகளுடைய உக்த்யநுஷ்டாநங்களாலே ப்ரகடிதமாய், ஆழ்வார்தம்மாலே நாதமுனிகளுக்கருளிச்செய்யப்பட்டதாய், அவர் தம் திருவடிகளையாச்ரயித்த போக்யவிஷயங்களுக்கு உபதேசித்தருள

பிள்ளைலோகாசார்யஜீயரருளிச்செய்த வ்யாக்யாநாவதாரிகை.

ஸ்ரீயப்பதியாய் பரமகாருணிகனான ஸர்வேச்வரன், ([illegible]) ([illegible]) (வைகுண்டே து பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந:। உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேச்வர:) (வைகுண்டே து பரே லோகே ஸ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:। ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ்ஸஹ) என்கிறபடியே நித்யவிபூதியிலே போகோபகரணனாயிருக்க லீலாவிபூதியில் த்ரிகுணப்ரக்ருதிஸம்ஸர்க்கத்தாலே ஜீவவர்க்கங்களுக்கு நித்யஸூரிகளைப்போலே இந்த ஆநந்தாநுபவத்தை யநுபவிக்கைக்கு போக்யதையுண்டாயிருக்கச்செய்தேயும் ஒழிக்க வொழியாத நம்மோடுறவறியாதே ஸம்ஸாரஸாகரத்தின் பெருக்குச்சுழியிலே அகப்பட்டு கரைமரஞ்சேரப்பெறாதேயிருக்கிறதுக்கு போரநொந்து இவர்களுக்கும் அந்தவநுபவத்தை யளித்து ஸம்ஸாரஸாகரத்தினின்றும் உத்தரிப்பிக்கவேணுமென்று நினைப்பிட்டு கலியுகாதியிலே நம்மாழ்வாரை யவதரிப்பித்து அவருக்கு மயர்வறமதிநலமருள,

அவரும் அந்த ஜ்ஞாநத்தாலே ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை நன்றாக அநுபவித்து அதுஉள்ளடங்காமே எதிர்பொங்கி மீதளிப்ப, அதுக்குப்போக்குவிடாக திவ்யப்ரபந்தங்களை நிர்மித்தும் மதுரகவியாழ்வார்தொடக்கமானவர்களுக்கு உபதேசித்தும், அதுக்கநுஸாரமாய் தத்வஹித புருஷார்த்த யாதாத்ம்யாவபோதகமாய் ஸகலவேதஸங்க்ரஹமான திருமந்த்ரத்திலே முக்யதமமாக ப்ரதிபாதிக்கப்பட்ட சரமோபாயத்தை

http://acharya.org

அவர்கள்தாங்களும் இப்படியே உபதேசிக்கையாலே உபதேசபரம்பராப்ராப்தமாய், அகிலசேதநர்க்கும் ஸ்வரூபோபாய புருஷார்த்தயாதாத்ம்யரூபேண அவச்யாபேக்ஷிதமாய், பரமரஹஸ்யமாயிருந்துள்ள சரமபர்வநிஷ்டாப்ரகாரத்தை, எம்பெருமானார், கேவலக்ருபையாலே தம்மை ஆழ்வான்திருவடிகளிலே ஆச்ரயிப்பித்து தம்முகேந உபதேசித்தருளக்கேட்டு அவ்வர்த்தத்தை யதாதர்சநம்பண்ணி, அநவரதம் எம்பெருமானார்திருவடிகளிலேஸேவித்துக்கொண்டுபோராநின்றுள்ள பிள்ளையமுதனார், அவருடைய திவ்யகுணங்களைத் தம்முடையப்ரேமத்துக்குப் போக்குவீடாகப் பேசி அநுபவிக்கவேண்டும்படியானதசைதமக்கு விளைகையாலும் இவ்வர்த்தஜ்ஞாநம் சேதநர்க்குஜ்ஜீவநமாம்படி பண்ணவேணுமென்கிறதம்முடைய பரமக்ருபையாலும், தாம்எம்பெருமானாருடைய திவ்யகுணங்களைப்ரேமாநுகுணமாகப்பேசுகிற பாசுரங்களாலே, தத்ப்ரபாவத்தை எல்லார்க்கும் ப்ரகாசிப்பியாநின்றுகொண்டு, முன்பு ஆழ்வார்திருவடிகளுக்கு அநந்யார்ஹரான ஸ்ரீமதுரகவிகள்,

---

மதுரகவியாழ்வாரொருவர்க்கு முபதேசிக்க, (மிக்கவேதியர்வேதத்தினுட்பொருள்நிற்கப் பாடியென்னெஞ்சுள் நிறுத்தினான்) என்றும், (தேவுமற்றறியேன்) என்றும்- உக்தபாஷ்டாரங்களாலேபூர்ணனபின்பு அந்த அர்த்தவிசேஷங்களெல்லாம் தமக்குப்ரஸாதிக்கவேணுமென்று ஸ்ரீமந்நாதமுனிகள் ப்ரார்த்திக்க, அவருக்கு அச்சாய்யவஸ்த்தையையதிக்ரமித்து திருவாய்திறந்து உபதேசிக்கஅவராடியாகவாய்த்து இத்தஸம்ப்ரதாயம்வந்தது;

இவ்வர்த்தவிசேஷங்களெல்லாம் • இருள்தருமாஞாலமான பூலோகத்திலே ஜநங்களுக்குபதேசித்துஎல்லார்க்கும் மோக்ஷத்தை கரதலாமலகமாக்கவேணுமென்று, ([illegible]) (பத்யுர்கமலவாஸிந்யா: ப்ரேரணாத்ப்ரஹீதலே, அஹீந்த்ரமீஸ்வரஸ்ஸேவயமாஸீத்ராமாநுஜோமுநி:) என்கிறபடியே ஸர்வேச்வரன் திருவநந்தாழ்வானை யேவ, அவர்வந்து ஸ்ரீபெரும்பூதூரிலேயவதரித்து ஸகலசாஸ்த்ரப்ரவீணராய் திருக்கச்சிநம்பிமுகமாக தேவப்பெருமாளதிவித்த அதிலேயேதத்வஹிதங்களெல்லாம்விசதமாகத்தெரிந்தும், பெரியபெருமாள்க்ருபையாலே உபயவிபூதி ஸாம்ராஜ்யத்தை நிர்வஹியுமென்றுசெங்கோலைக்கொடுக்கப்பெற்றும், ஆதயாமுனாஸம்ப்ரதாயபரம்பராப்ராப்தமானதத்வஹித புருஷார்த்த தத்வயாதாத்ம்யஜ்ஞாநமான அர்த்தவிசேஷத்தை லபித்தும், தமக்கு அந்தரங்கரான ஆழ்வான்முதலான முதலிகளுக்கு அவ்வர்த்தவிசேஷத்தை உபதேசித்துக்கொண்டும் வாழுநிறகாலத்திலே.

http://acharya.org

ஸ்வநிஷ்ட்டாநுஷ்டாநரூபேணவும் பரோபதேசரூபேணவும் உஜ்ஜீவநார்த்தத்தை லோகத்துக்கு வெளியிட்டருளினாப்போலே, நாமும் ஸ்வநிஷ்ட்டாநுஷ்டாநரூபத்தாலும் பரோபதேசத்தாலும் அவரைப்போலே ஸர்வேச்வரனை பற்றுப்பாட்டாக வன்றிக்கே, பற்றக்கொண்டு ஆசார்யாபிமாநநிஷ்டர்க்குஜ்ஜீவநோபாயார்த்தங்களையெல்லாம் இப்ப்ரபந்தமுகேந அருளிச்செய்கிறார். எம்பெருமானார் திருவடிகளிலே ப்ரேமமுடையவர்களுக்கு "ஸாவித்ரிபோலே இதுவித்யாநுஸந்தேயவிஷயமாகவேணும்" என்றிட்டுப்பாட்டுத்தோறும் திருநாமத்தைவைத்துத் தொடுப்பாட்டாகவருளிச்செய்தது; ஆகையாலே இத்தைப்ப்ரபந்நஸாவித்ரியென்றிட்டு நம்முதலிகள் அருளிச்செய்வது.

அ.—முதற்பாட்டு. தம்திருவுள்ளத்தைக்குறித்து எம்பெருமானாருடையதிருவடிகளோ நாம் பொருந்திவாழும்படியாக அவருடையதிருநாமங்களைச்சொல்லுவோம்வாவென்கிறார்.

திருவரங்கத்தமுதனார் ஸகலசாஸ்த்ரபரிபூர்ணராயிருந்தும் ஸத்ஸம்ப்ரதாயம்தெரியாதேயிருக்க, எம்பெருமானார் தம்முடைய நிர்ஹேதுககிருபையாலே ஆழ்வானையிட்டு அவரைத்திருத்துவிக்க, அவரும் ஆழ்வானை யாச்ரயித்து அவர் காட்டிக்கொடுக்க எம்பெருமானார் திருவடிகளைக்கண்டு அதிலே அத்யந்தாபிநிவிஷ்டசித்தராய் ஸர்வதா அநுபவம்பண்ணிக்கொண்டு போந்து அவ்வநுபவம் உள்ளடங்காதே பரீவாஹரூபேண, "கலித்துறை" என்கிற சந்தஸ்ஸிலே அந்தாதியாக தொடுத்தப்பாட்டாய், பாட்டுத்தோறும் எம்பெருமானார் திருநாமத்தைச்சேர்த்து ப்ரபந்நிகரித்துப்போந்தாராகையாலே இது ப்ரபந்நஸாவித்ரியென்று அத்யவஸிக்கப்பட்டு, நம்முதலிகளெல்லார்க்கும், ([illegible]) (குரோர்நாமஜபோபேத) என்கிறபடியே நித்யாபிஜப்யமாயிருக்கிறதாய்த்து.

அ.—முதற்பாட்டு பின்பையமுதனார் தமக்கு ஆசார்யப்ரஸாதத்தாலே லப்தமாய் மந்த்ரரத்நகண்டத்வயார்த்த யாதாத்ம்யஜ்ஞாநரூபமாய் பரமரஹஸ்யமாயிருக்குமன்ன அர்த்தவிசேஷங்களை, ([illegible]) (ஏகஸ்வாதுநபுஞ்ஜீத) என்கிறபடியே இன்னைகத்திலிருவர்க்குத்துணைத்தேட்டமாமாப்போலே எம்பெருமானாருடைய கல்யாணகுணஸாகரத்திலே யிழிவதுக்குத்துணைத்தேட்டமாய், உபயவிபூதியிலும் ஆராய்ந்தால் நித்யவிபூதியிலேயிருக்குமவர்ன நித்யஸூரிகளும் முக்தரும், ([illegible]) (ஸதாபச்யந்தி) ([illegible], [illegible]) என்கிறபடியே பகவத்தை முற்றூட்டாக வநுபவித்து ஸாமகாநம்பண்ணிக்கொண்டு களித்து, ([illegible])(ஏதத்ஸாமகாயந்நாஸ்தே) என்கிறபடியே-லீலாவிபூதியிலே கண்வையாதேயிருந்தார்களாகையாலும், லீலாவிபூதியிலுள்ள

http://acharya.org

மூ.—பூமன்னுமாதுபொருந்தியமார்பன்புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன்பல்கலையோர்
தாமன்னவந்தவிராமாநுசன்சரணாரவிந்தம்
நாமன்னிவாழநெஞ்சேசொல்லுவோமவன்நாமங்களே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	(ஸ்ரீஸ்தநே) (பத்மே ஸ்திதாம்) என்கிறபடியே,		(கவியமுதம் நுகர்ச்சியுறுமோ முழுவதும்) என்னும்படி,
பூ	தாமரைப்பூவை,	மன்னு	திருவுள்ளத்தில் ஊற்றத்தையுடையரான,
மன்னு	இருப்பிடமாகவுடைய,	மாறன்	ஆழ்வாருடைய,
மாது	பெரியபிராட்டியார், இந்த போக்யதையைக்கண்டபின்பு அத்தை உபேக்ஷித்து, (இறையும் அகல கில்லேன்) என்று, [னும்,	அடி	திருவடிகளை,
பொருந்திய	நித்யவாஸம் பண்	பணிந்து	ஆச்ரயித்து,
மார்பன்	திருமார்பையுடையவனுடைய,	உய்ந்தவன்	உஜ்ஜீவித்தவராய்,
புகழ்	கல்யாண குணங்களால்,	பல்கலையோர் தாம்	அநேக சாஸ்த்ரங்களை அதிகரித்திருக்கச்செய்தேயும் தத்வஹித புருஷார்த்த நிர்ணயம்பண்ணவறியாதே ஒன்றிலும் ஒருநிலையற்றிருக்குமவர்கள், அவற்றினுடைய யாதாத்ம்ய வேதநத்தாலே,
மலிந்த	ஸம்ருத்தமாயிருக்கின்ற,	மன்ன	ஸுப்ரதிஷ்டிதராம்படியாக,
பா	திருவாய்மொழியிலே,	வந்த	அவதரித்த,

ஸைகதநிஜகல்கப்ரகர்த்தத்வேக அங்குராகையாலே, (ஈத்ருஶம் [illegible]) (சுத்தக்கவுமிதஆமிதமே கத்தத்தியஸ்தமிதோவென) என்றும், (உண்டியேயுடையேயுகந்தோடுமிம்மண்டலம்) என்னும்சொல்லுகிறபடியே உண்டுடுத்து, * (புறமே புறமே ஆடி.) என்கிறபடியே லீலாவிபூதியிலே லௌகிகராய் விஷயாந்தரங்களிலே மண்டியிருக்கையாலும், எம்பெருமானார் ஸம்பந்தமுடையஞ்ஞானாதிகரெல்லாரும், (பாலேபோல்சீர்) என்கிறபடியே பரமபோக்யமானவருடைய கல்யாணகுணங்களை யநுபவித்து அ(காலாழும்நெஞ்சழியும்) இத்யாதிப்படியே அவ்வநுபவத்திலே ஆழ்ந்தால்பட்டு குமிழ்நீருண்டிகின்றார்களாகையாலும், இக்காலவரும் துணையல்லாத தொழிலாகையாலே தம்முடைய ஸஜாதீயர்களுக்கு எப்போதும் பொதுவாயிருக்கிற திருநாமங்களே துணையாக வேணுமென்று திருவுள்ளம்பற்றி அதுதன்னையே ஸம்போதித்துச் சொல்லுகிறார்.

http://acharya.org

பதம்.	உரை.
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
சரணாரவிந்தம்	திருவடித் தாமரைகளை,
நாம்	இதுவே ப்ராப்யமென்றறிந்த நாம்,
மன்னிவாழ	பொருந்தி வாழும்படியாக,
நெஞ்சே	நெஞ்சே!,
அவன்	அவனுடைய,

பதம்.	உரை.
நாமங்கள்	திருநாமங்களைப்
சொல்லுவோம்	சொல்லுவோம்.

நாம்மன்னி என்றது - தாங்களே வந்தாச்ரயிக்கும்படி யென்னுமாம். நாமென்றது - அநாதிகாலம் இதரவிஷயங்களின் கால்கடையிலே துவண்ட நாமென்னவுமாம். மன்னுதல் - பொருந்துதலும், மிகைப்பாடும். ... (க)

வ்யா.— (பூமன்னுமாதுபொருந்தியமார்பன்) ([illegible]) (பத்மேஸ்த்திதாம்) என்றும், (மலர்மேல்மங்கை) என்றும், ([illegible]) (அரவிந்தவாஸிநீ) என்றும் சொல்லுகிறபடியே-ஸௌகந்த்ய ஸௌகுமார்யங்களாலே அத்யந்தபோக்யமான தாமரைப்பூவின் பரிமளந்தானே ஒருவடிவுகொண்டாப்போலே அதிலேயவதரித்த பெரியபிராட்டியார் ஸ்வயம் "பத்மிநீ" என்கிறபேரை யுடையளாய், அவ்வீட்டின்போக்யதையாலே அத்தைவிடமாட்டாதே இருப்பிடமாக அதிலேயிருந்து அதுவே நிரூபகமாகச் சொல்லப்பட்டபின்பு, உலகளந்தமந்தமகனான ஸர்வேச்வரன், தன்னை தனக்குப் பத்நியாக பரிணயித்து பரிஷ்வங்கம்பண்ணவே அவன் திருமார்வை யநுபவித்து அந்தபோக்யதையிலே யீடுபட்டு நின்றபின்பு தாமரைப்பூவின் போக்யதையும் அருவருத்து ஒருக்காலும் அத்தைநினையாதே (இறையும் - அகலகில்லேன்) என்று நித்யவாஸம் பண்ணப்படுகிற திருமார்வையுடையனான ஸர்வேச்வரனுடைய. (பூமன்னுமாது பொருந்தியமார்பன்) என்று - விசேஷ்யபூதனான ஸர்வேச்வரனுடைய நாமநிர்த்தேசம்பண்ணாதே, அவனுக்கு விசேஷணபூதையான பெரியபிராட்டியாரைமாத்ரமே யருளிச் செய்தது, "அகஸ்த்யப்ராதா" என்னுமாப்போலே யிருக்கிறதாகவும்; அப்படியேயிதே ச்ருதிஸ்ம்ருதிகளிலும், ([illegible]) (ச்ரத்தயாதேவோதேவத்வமச்நுதே) என்றும், ([illegible]) (அப்ரமேயம்ஹிதத்தேஜோ யஸ்யஸாஜநகாத்மஜா) என்றும்-இவளைவிட்டு அவனுடைய அதிசயம் சொல்லப்படுகிறது. ([illegible]) ([illegible]) என்று பர்த்தாவுக்கு இப்படிப் போ ப்ரதிபத்தியுண்டாகவேண்டியிருக்குமிறே.

(புகழ்மலிந்த) ॰ (உயர்வறவுயர்நலமுடையவன் - அயர்வறுமமரர்களதிபதி) (இடவிசும்பெரிவளிநீர் நிலமிவைமிசை படர்பொருள்முழுவதுமாயவையவைதோறும் உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன் சுடர்மிகு சுருதியுளிவையுண்டகரன்,)

http://acharya.org

• (சீர்த்தொடையாயிரம்பாக்களுள்ளன் பாக்கவண்டமிழ்தன்னை) (ஒன்றுந்தேவு முலகுமுயிரும் மற்றும்யாது மில்லாவன்று நான்முகன்றன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்) (உலகமுண்ட பெருவாயா வுலப் பில்கீர்த்தியம்மானே,) (புணராநின்ற மரமேழன்றெய்த வொருவி ல்வலவாவோ புணரேய்நின்றமரமிரண்டின்நடுவேபோன முதல் வாவோ) (கோலநாற்றேறுளபாதம் காணவென்று நண்ணு வார்சில் சீலர் கண்டத்தம்மானும் நிறைநான்முகனுமிந்திர னும்) (செந்தாமரைக்கட்செங்கனிவாய் நாற்றோளமுதே யெனது ஆவியே) (முனியேநான்முகனே முக்கண்ணப்பா.) • (சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில்பெரும்பாழேயோ சூழ்ந்ததனில் பெரிய பரநன்மலர்ச்சோதியோ! சூழ்ந்ததனில் பெரியசுடர் ஞானவின்ப மேயோ) என்று தலைக்கட்டுகையாலே, (உயர்வற) என்று தொட ங்கி, (உயர்ந்தே) என்னுமளவும்-ஆதிமத்யாவஸாநங்களிலே ஒரு படிப்பட்ட கல்யாணகுணங்களால் ஏற்பட்ட.

(பா) பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி விசததம மாகவநுபவிக்கவநுபவிக்க அதுஉள்ளடங்காமே, பக்திபலாத்காரத் தாலே வந்ததாகுதலும், ([illegible]) (பாதபத் தோக்ஷரஸமதந்த்ரீலயஸமந்வித:) என்னுமாப்போலே சீர்தொ டைபகவத் விஷயீகாரத்தாலே ஸர்வலக்ஷணோபேதமாய், (கவியமு தம்) என்றும், (தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள் சொன் னேன்) என்றும்தாமேசொல்லவிக்கும்படியான திருவாய்மொழியிலே; (மன்னு) ஸர்வதாநிஸ்சலமாயிருக்குமவர். (மாறன்) (அரங்கர்வண் புகழ்மேலான்றதமிழ்மறைகளாயிரமும் ஈன்றமுதல்தாய் சடகோ பன் • குழல்மலியச்சொன்னவோராயிரமிறே.

(மாறன்) இதுவாய்த்து ப்ரதமோபாத்தமானதிருநாமம். ([illegible]) (விநாஸாயசதுஷ்க்ருதாம்) என்னுமாப்போ லே பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸித்து அவர்களுடைய ஸம்ஹாரக காரரானவர். (மாறன்) அஜ்ஞாநத்துக்கு மாரகர். அன்றிக்கே, ([illegible]) (ஸாக்ஷாத்க்ருததர்மாண:) என்கிறபடியும் பிச் சேறி ஸமஸ்தங்களை நின்றவனைப்போலே • மின்னிடைமடவா ரில் வ்யாமுக்தரும்படி பண்ணவல்லராய் பெண்பிள்ளைத்தனத் தையும், • ஊனில்வாழுயிரிலே ஒரு நீராகக்கலந்து வ்யாமுக்த ரும்படி பண்ணவல்லஜ்ஞாநாதிக்யத்தையுமுடையவராகையாலே (மாறன்) என்னவுமாம். இப்படிப்பட்ட ஆழ்வாருடைய. (அடி) ஆழ்வாரபர்யந்தமல்ல இவர் தம்முடையஸ்வாமித்வாத்யவஸாயம். ஆக தமக்கு நிருபாதிகஸ்வாமியானவனென்னுதல், தம்முடையஹிதி க்கைக்கு மூலமானவனென்னுதல், இப்படிப்பட்ட திருவடிகளை. (பணிந்து) ஆச்ரயித்து. ([illegible]) (ஸ்ரீம த்தத்தங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா) என்று ஆளவந்தாரருளி ச்செய்தது. அடியிலே யிப்படி யருளிச்செய்கையாலே இப்ப்ரபந்த ம் சரமபர்வநிஷ்டர் விஷயமென்று தோற்றுகிறது.

http://acharya.org

(உய்த்தவன்) உஜ்ஜீவிப்பித்தவன். இவருக்கு உஜ்ஜீவகம் அந்த பாசுரங்களையேயன்றிக்கேயும், ஆழ்வார் தம்முடைய திருவடிகளை இவருக்குப்படியாகவிட்டுப்போந்தாரிறே. அவ்வாழ்வார் திருவடிகளைப்பணிந்தபின்பு இவர் அவையனைத்தையும் அனுபவித்துப்போந்தார். ஆழ்வார்க்கும் இவர்க்கும் காலவிப்ரக்ருஷ்டமானாலும், முதலிலே ஆழ்வார் நாதமுனிகளுக்கு உபதேசம்பண்ணும்போது இவரை த்வாரம்பண்ணி, ([illegible]) (மண்ணவபகவலே கருணாகரண்ணைப் பவிஷ்யதாசார்யஸ்வரூபம் - ஸத்ஸம்ப்ரதாய மநோஹரம் [illegible]) என்றபடியே இவருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை ஸ்வப்நமுகேந நாதமுனிகளுக்குக் கொடுத்திட்டபடியை யபிமானித்து, ப்ரகாஶீகாரத்தாலே அவருக்கு ஆசார்யனாகையாலே இவரும் அவ்வாழ்வார் திருவடிகளைப்பற்றி, அவர், (உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனெம்பெருமான்) என்று அத்யவஸித்த பகவத்ப்ராவண்யத்தை ஸ்ரீபாஷ்யமுகேந ப்ரகாஶிப்பித்து, வேங்கடாசல யாதவாசலஸ்தலங்களை, ([illegible]) (குத்ருஷ்டிகுஹநாமுகே நிபததப்பரப்ரஹ்மண: கரக்ரஹணவிசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முனி:) என்றபடியே நிர்வஹித்து வைதிகதேஶங்களையுந்திருத்தி இதுவே உஜ்ஜீவகமாகவிருக்கிறவரென்றபடி.

(பல்கலையோர்) ஸகலஶாஸ்த்ரபாரீணரான கூரேஶ குருகேஶ கோவிந்த நடாதூராழ்வான் முதலிகளும் ப்ரத்யக்ஷாசார்யம்பண்ணி ப்ரணமித்தபின்பு எம்பெருமானார் தம்முடைய விஷயீகாரத்தாலே தத்வஹிதபுருஷார்த்த யாதாத்ம்யஜ்ஞானத்தைப்பெற்ற யாதவப்ரகாச யஜ்ஞமூர்த்த்யாதிகளும். (தாம்மன்ன) ஸமாஶ்ரயித்த திருஜ்ஞாநத்தாலே ஸுப்ரதிஷ்டிதராம்படி. மன்னுதல்-பொருந்துதலும், நிலைப்பாடும். (வந்த) பரமபதத்தினின்றும் ஸர்வேஶ்வரனுடைய நியமனத்தாலே யெழுந்தருளின. (இராமாநுசன்) இவர் சக்ரவர்த்தித் திருமகனை அநுகரித்து ஜநித்தாராகையும்; அவன், ([illegible]) (அபயம்ஸர்வபூதேப்யோ ததாம்யேதத்வ்ரதம்மம) என்று ஸர்வருக்கும் அபயப்ரதானம்பண்ணினாப்போலே இவரும் மோக்ஷோபாயமான மந்த்ரத்தை பூர்த்தாநம்பண்ணினாரிறே. இப்படிப்பட்ட எம்பெருமானாருடைய. (சரணாரவிந்தம்) அரவிந்தமென்கிற, மகரந்தபானம் போலேதம்மை மோக்ஷிப்பித்தவையாகையாலே சரணங்களுக்கு அரவிந்தத்தைப் போலியாகச்சொல்லுகிறார். ஆர்த்தருக்கு பாவநத்வ போக்யதைகளாலே ஏகரூபமாயிருக்கையாலே ஏகவசநப்ரயோகம் பண்ணுகிறார். (மன்னி) ஆச்ரயித்து. நிர்ஹேதுகத்தை [illegible] பண்ணி.

http://acharya.org

(நாம்வாழ) நானொருத்தனுமே ஆச்ரயிக்க என்னுடைய ஸம்பந்திஸம்பந்திகளெல்லாம், ([illegible]) ([illegible]) ([illegible]) என்றும், ([illegible]) ([illegible]) என்றும் சொல்லுகிறபடியே உஜ்ஜீவிக்கும்படியாக, ([illegible]) என்று அவன் சொன்னானிறே. (நாம்மன்னி) ([illegible]) என்றபடி. (வாழ) (ஸ்ரீமதே ராமாநுஜாய நம:) என்றபடி. (நெஞ்சே) ஒருமஹாராஜனிலைபத்தால் அந்தரங்கராயிருப்பார்க்குச் சொல்லுவர் லௌகிகர், அப்படியே தமக்கு அந்தரங்கமான மனஸ்ஸை லக்ஷித்துத் தாம் பெற்ற பேற்றைச் சொல்லுவதாக ஸம்போதிக்கிறார்.

(சொல்லுவோமவன்நாமங்களே) நாமிருவருங்கூடி அவர் திருநாமங்களைச் சொல்லுவோம். [illegible] - வாசாதர்மமவாப்நுஹி என்கிறார். ஒருக்கிமந்த்ரத்தாலே ப்ராப்யப்ராபகங்களிரண்டும்தர்மபூதமான சரணாகதித்திலே அத்திருநாமத்தாலே நம்மைச்சேர்க்கும். ஸ்வயமான பதார்த்தம் வசித்தால், ([illegible]) என்கிறபடியே அக்போக்யம்ஸவித்துக் கொண்டு அநுபவிக்கக் கடவோமென்றபடி. (அவன்நாமங்களே) (தேவுமற்றறியேன்) என்று - அநந்யபராகக்கொண்டு அவருடைய திருநாமங்களைச் சொல்லுவோம். த்ரிவிதகரணங்களால் இல்லையாகிலும் நாமஸங்கீர்த்தநமே யமையும். ([illegible]) (குசோத்தமமனுஜபேத்) என்னக்கடவதிறே. (நெஞ்சேசொல்லுவோம்) என்றது - தமக்கு உபகரித்த உபகாரத்தைப் பாராட்டித்து சேதநமாகியாகச்சொல்லுகிறார். (நசேத்ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ। காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருசா:) என்றாரிறே ஆழ்வான். (வேதமொருநான்கினுட் பொதிந்தமெய்ப்பொருளும் கோதில்மநுமுதல்நூலவையும், இதில், சாரமாகிறதத்தன்னிலையன்றேனே, அருளுமென்னுமது) என்று அருளாளப் பெருமானெம்பெருமானார் அருளிச்செய்தாரிறே. (பூமகள்கோன் தென்னரங்கன் பூங்கழற்குப்பாதுகமாய்த், தாமமூன்செல்வச்சடகோபர், தேமலர்த்தாட்கு, ஏய்ந்தினியபாதுகமாமெந்தை யிராமாநுசனை, வாய்க்கொண்டு நெஞ்சமேவாழ்) என்றிறே ஜீயருமருளிச்செய்தது. ([illegible]) என்னக்கடவதிறே. ... ... (க)

அ.—இரண்டாம்பாட்டு. என்னுடையநெஞ்சானது எம்பெருமானாருடைய சீலகுணமொழியவேறொன்றை நினையாதபடியாய்த்து, இது எனக்கு வாய்த்திருந்தபெருமைக்கு ஒன்றுமதிரேதிலேனென்கிறார்.

http://acharya.org

மூ.—கள்ளார்பொழில்தென்னரங்கன்கமலப்பதங்கணெஞ்சில்
கொள்ளாமனிசரைநீங்கிக்குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாதவன்பனிராமாநுசன்மிக்கசீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சொன்றறியேனெனக்குற்றபேரியல்வே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கள்ஆர்	மதுமிக்க,	குறையல்	திருக்குறையலூரைத்திருவவதாரஸ்தலமாகவுடையராய்,
பொழில்	பொழிலையுடைத்தாய்,	பிரான்	திவ்யப்ரபந்த நிர்மாணமுகத்தாலே லோகோபகாரகரான திருமங்கையாழ்வாருடைய,
தென்	தர்சநீயமாயிருக்குன்ன,	அடிக்கீழ்	திருவடிகளின்கீழ்,
அரங்கன்	கோயிலிலே கண்வளர்ந்தருளுகையாலே அத்தேசம் பக்தத்தை விட்டு தம்மையிருப்பிக்கலாம்படியிருக்கிற பெரிய பெருமாளுடைய,	விள்ளாத	விட்டுநீங்காத,
		அன்பன்	ஸ்நேஹத்தையுடையராயிருக்குன்ன,
கமலப்பதங்கள்	விகாஸாதிகளால் தாமரை போலே போக்யமான திருவடிகளை,	இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
		மிக்கசீலமல்லால்	நிரவதிகமான சீலகுணத்தைத்தவிர,
நெஞ்சில்	தங்கள் மநஸ்ஸிலே	என்நெஞ்சு	என்னுடைய நெஞ்சானது,
கொள்ளா	ஒருக்காலும் வையாத,	உள்ளாது	வேறொன்றையும் நினைக்கிறதில்லை;
மனிசரை	சாஸ்த்ரவச்யமான ஜந்மத்திலே பிறந்து வைத்து நிர்ப்பாக்யரா யிருக்குமவர்களை,	எனக்குற்ற பேரியல்வு	இது எனக்குவாய்த்த பெரியவிரகு,
		ஒன்றறியேன்.	ஒன்றுமறிகிறிலேன்.
		விள்ளுதல்	நீங்குதல். இயல்வு-விரகு ... (௨)
நீங்கி	விட்டகன்று,		

அ.—இரண்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டில், (நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே) என்று-தம்முடைய மநஸ்ஸோடேகூடி உபதேசித்தவாறே மநஸ்ஸானது அவருடைய சீலகுணத்திலே ஆழங்கால்பட்டு, ([illegible]) ([illegible]) என்கிறபடியே அவர்திருவடிகளை அநுபவித்துக்கொண்டு தத்வ்யதிரிக்தமானவற்றை விரும்பாதேயிருக்கிறது, இதென்ன ஆச்சர்யமென்கிறார்.

http://acharya.org

வயா.—(கன்னார்பொழில்) "மதுவிருக்தொழுகின மாமலரெல்லாம் - கொழுங்கொடிமுல்லையின் கொழுமலரணவிக் கூர்ந்தது, குணதிசை மாருதமிதுவோ, எழுந்தன மலரணைப்பள்ளிகொண்டன்னமீர்பனிநனைந்த தமிருஞ்சிறகுதறி - பைம்பொழில் கமுகின் மடலிடைக் கீறிவண்பாளைகள் நாற வைகறைகூர்ந்தது மாருதமிதுவோ) என்றும், (வான்றிகழுஞ்சோலைமதிளரங்கர்) என்றும், ([illegible]) (பூக்கண்டத்வயளரைவலக்ஷித்த கேரபண்டம் ஆவிர்மோதன்நியிதச குகாநாதிதப்ராஹ்மகோஷம்) என்றும் சொல்லுகிறபடியே மதுஸ்யந்தியான புஷ்பவிசேஷங்களாலே வ்யாப்தங்களான உத்யாநங்களாலே சூழப்பட்ட.

(தென்னரங்கன்) அத்தாலே தர்சநீயமான திருவரங்கமே தனக்கு நிருபகமாம்படி நித்யவாஸம்பண்ணுகிற ஸ்வாமியுடைய திருப்பதியென்றபடி. இவ்விடத்துக்கு இது மூலமான திருநாமங்களாலும். (கமலப்பதங்கள்) கமலப்பதமிதித்தவாச்சமாய்ப் பாவனமானவென்னுதல்; ஸௌகுமார்யாதிசயத்தாலுடைய ச்ரமஹரமானவென்னுதல். பாதக்கமலம் என்னுதே முக்தமுன்னம் (கமலம்) என்றது - ஸர்வேச்வரன் திருவடிகளை ஸேவிக்கும்போது பாவகத்வாதிகளுக்குமுன்னே போக்யதையைக்கண்டு முற்றூட்டாக அநுபவித்தவராகையாலே. (நெஞ்சில்கொள்ளுமனிசரை) ([illegible]) (விசித்ரதேஹஸம்பத்தி ரீச்வராயநிவேதிதும் - பூர்வமேவக்ருதா ப்ரஹ்மந்தஸ்தபாதாநிவ்யுதா) ([illegible]) என்கிறபடியே அவப்யலாபமாக பகவச்சரண கமலபரிசரணத்துக்கு இட்டுப் பிறந்த மநுஷ்யதேஹத்தைப்பெற்றும் திருவடிகளைநெஞ்சிலேகொள்ளாதே இருக்கிற கர்ப்பநிர்ப்பாக்யர் கோஷ்டியில் நின்றும், (நீக்கி) அகன்று. ([illegible]) என்று ஸர்வரும் சலாகிக்கும்படி பாஹ்யகுத்ருஷ்டிகளை பராஜிதராகப் பண்ணுவித்து.

(குறையல்பிரான்) திருக்குறையலூரிலே அவதரித்து, திவ்யப்ரபந்தநிர்மாணத்தாலும் திருவத்யயநத்துக்கு ஏகாதசியிலே திருநாள் ஏற்படுத்தபடியாலும், அவ்விடத்திலே பெருமாளுக்காகத் திருமதிளை நிர்மாணம்பண்ணிவைத்தபடியாலும், குபாஹ்யாதிகளான குத்ருஷ்டிகளோடே தர்க்கித்து அவர்களைஜயித்து அவர்களாலே பழிக்கப்பட்ட திவ்யதேசங்களை நிர்வஹித்தபடியாலும், இப்படிகளாலே உபகாரகரான திருமங்கையாழ்வாருடைய.

http://acharya.org

இவ்விடத்திலே இன்னமொருயோஜனையுமுண்டு;-(குறையல்பிரான்) (குறையொன்றுமில்லாத கோவிந்தா) என்கிறபடியே தோஷப்ரஸங்களையில்லாத கோவிந்தன். கோவர்த்தநோத்தரணம் பண்ணினபோது இந்த்ரன் கோவிந்தாபிஷேகம்பண்ணினவாறே கோகோபிஜனங்களை ரக்ஷித்த உபகாரகன். அந்த அவதாரத்திலே, பூதனா சகட யமளார்ஜுந அரிஷ்ட ப்ரலம்ப தேநுக காளியகேசிகுவலயாபீட சாணூர முஷ்டிக கம்ஸாதிகளை நிரஸித்து ஸ்வாச்ரிதர்களான பாண்டவர்களுக்கு தௌத்யஸாரத்யங்களைப்பண்ணி, ([illegible]) என்று தொடங்கி ([illegible]) என்னுமளவும் தத்வோபதேசம்பண்ணியும், இப்படி விமலமநுஜமசோகவபுஷாரி திவ்யசேஷ்டிதங்களைப் பண்ணின உபகாரகன். இதில் சரமச்லோகத்தை உபதேசிக்கை உபகாரத்திலே ப்ரதாநம். இப்படி ஒரு அர்த்தவிசேஷம் தோன்றினாலும் நம்மாசார்யர்கள் திருமங்கைமன்னன்விஷயமாக அருளிச்செய்கையாலே பேசிற்றே பேசுகையே அவர்களுக்கேற்றமென்று முதல்சொன்னபொருளே ஸங்கதமாகக்கடவது. (அடிக்கீழ்) திருமங்கையாழ்வாருடைய திருவடிகளின்கீழே.

(விள்ளாதவன்பன்) இவ்வாழ்வார் ப்ரதமபர்வ நிஷ்டராகையாலே, அணிபொழில் திருவரங்கத்தம்மானை ப்ரார்த்தித்துக்கொண்டேயிருப்பர்; இவ்வெம்பெருமானார் சரம பர்வத்திலே ஊற்றமுடையவராகையாலே அவ்வாழ்வாருடைய திருவடிகளின் கீழ் ஒருக்காலும்விடாதே ஸக்தமான பக்தியை யுடையவராயிருப்பர். விள்ளுதல்-நீங்குதல். அன்பு-பக்தி. (இராமாநுசன்) பூர்வாவதாரத்திலே சரமாநுவர்த்தநம்பண்ணினவரானவர் இப்போதும் அநுவர்த்திகையாலே இதுக்கு சரமபர்வமானவிதிலே ஈடுபட்டார்களும். (மிக்கசீலமல்லால்) தாம் மநுஷ்யபாவராயிருந்துவைத்தும் எம்போலாம் மக்கமதிகளோடே புரையறக்கலந்து பரிமாறின சீலகுணம் ஒன்றிலுமே ஈடுபட்டு, அதொழிய வேறொன்றிலும் போகமாட்டாது. உள்ளுதல்-சிந்தித்தல். (என்னெஞ்சு) என்மனஸ்ஸு. என்றுலே உபதேசிக்கப்பட்ட நெஞ்சு. ([illegible]) என்னும்படியாய்த்து.

(ஒன்றறியேனெனக்குற்றபேரியல்வே) என்னவாச்சர்யம், இப்படி ப்ரவணமானதைக்குவிஷயகொண்டாமதியிலேன். (எனக்கு) ([illegible]) என்றுப்போலே பஞ்சேந்த்ரியங்கள் தன்னிஷ்டபோக்ஞானமாதிகளைப் பண்ணவேண்டியிருக்க, அங்ஙனன்றியே, (சொல்லுவோமவன் நாமங்களே) என்று அத்யவஸாய மாத்ரம் பண்ணினபடி. எனக்கு, உற்ற-ஸித்தித்த. (பேரியல்வே) [[illegible]] மென்னுமபாயங்களைக்காட்டிலும் பெரியதாய் விலக்ஷணமான ஸ்வபாவவிசேஷம்.

http://acharya.org

அ.—மூன்றும்பாட்டு. ப்ராக்ருதரோட்டை ஸம்பந்தத்தை நீக்கி எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தமுடையவர்கள் திருவடிகளில் ஸம்பந்தமுடையவர்கள் திருவடிகளிலே என்னைச்சேர்த்தவுபகாரத்துக்கு நெஞ்சே! உன்னை வணங்கினேனென்கிறார்.

மூ.—பேரியல்நெஞ்சேயடிபணிந்தேனுன்னைப்பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ளசுற்றம்புலர்த்திப்பொருவருஞ்சீர்
ஆரியன்செம்மையிராமாநுசமுனிக்கன்புசெய்யுஞ்
சீரியபேறுடையாரடிக்கீழென்னைச்சேர்த்ததற்கே. (கஅ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேரியல் நெஞ்சே	பெரிய வ்யவஸாயத்தையுடைய மனமே,	இராமாநுசமுனிக்கு	எம்பெருமானார் விஷயத்திலே,
பேய்ப்பிறவி	தேஹாத்மாபிமானிகளாய்,	அன்புசெய்யும்	ப்ரேமத்தைப் பண்ணுகையாகிற,
பூரியரோடுள்ள	அஹங்காராதி தோஷதுஷ்டரானவர்களோடுண்டான,	சீரியபேறுடையார்	பரம புருஷார்த்தத்தையுடையவர்களுடைய,
சுற்றம்புலர்த்தி	ஸம்பந்தத்தைநீக்கி,	அடிக்கீழ்	திருவடிகளின்கீழே,
பொருவருஞ்சீர்	உபமான ரஹிதமான குணங்களையுடையராய்,	என்னைச்சேர்த்ததற்கு	என்னைச் சேர்த்த இந்தமஹோபகாரத்துக்கு,
ஆரியன்	ஸமஸ்தவைஷ்ணவாசார்யராய்,	உன்னை அடிபணிந்தேன்	உன்னை வணங்கினேன்.
செம்மை	ஆச்ரிதருடைய கௌடில்யம்பார்த்துக் கைவிடாதே அவர்களுக்கு இடாகத்தன்மை யமைத்துப் பரிமாறும் ஆர்ஜவ குணயுக்தரான,		

பேய்ப்பிறவி - நீசப்பிறவி. பூரியர் - பொல்லாதவர்கள். பூரி - பொல்லாங்கு. புலர்த்தல் - நீக்கல். ... ... (கஅ)

(ஒன்றறியேன்) எத்தாலே இத்தைச்செய்தீரென்கிறீர் என்ன, நான் ஒன்றுமறிகிறிலேன். என் முக்குற்றநெஞ்சே! நீயறிந்தபாகில் சொல்லிக்காணு என்ன; ([illegible]) என்னுமாப்போலே நிர்ஹேதுக மாகவிறே செய்தது. இயல்வு—ஸ்வபாவம். ... (உ)

அ.—மூன்றும்பாட்டு. கீழ்ப்பாட்டிலே தம்முடைய நெஞ்சானது எம்பெருமானாருடைய சீர்குணத்திலே ஈடுபட்டமாத்ரமன்றிக்கே இப்படி யநுபவிக்கவநுபவிக்க அபிநிவேசங்கொண்டு என்னைக்கொண்டுபோய்த் தமருடைய திருவடிகளின்கீழே சேர்த்தது, இந்தமஹோபகாரத்துக்குத்தக்கஸமர்ப்பணம்தம்பக்கல் ஒன்றுமில்லையென்று நெஞ்சினுடையகாலிலேவிழுகிறார். ()

http://acharya.org

வ்யா.—(பெரியல்நெஞ்சே) பெரியவ்யவஸாயத்தை யுடைய மனஸ்ஸே. முதலிலே எம்பெருமானுடைய சீலகுணத்திலேயிழிந்து அதிலே அத்யபிநிவிஷ்டமாய் உன்னோட்டை ஸம்பந்தமே பேறாக என்னையும் ததீயபர்யந்தமாக அத்யவஸிப்பித்தவ்யவஸாயத்தையுடையமனஸ்ஸேயென்கிறபடி. (பெய்ப்பிறவிப்பூரியரோடுள்ள சுற்றம்புலர்த்தி) அஜ்ஞாநத்துக்கத்திலே ருசித்து நீசஜனங்களோடேசேர்ந்துண்டான ஸம்பந்தத்தை ஸவாஸனமாகப்போக்கி. ([illegible]) என்றுசொல்லப்பட்ட நீசருடைய ஸம்பந்தத்தை, ([illegible]) என்னும்படி பண்ணுவித்து. (கூழாட்பட்டு நின்றீர்களை யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம்) என்னும்படியே பண்ணுவித்ததென்கிறபடி. (பெய்ப்பிறவி) நீசஜன்மம். பூரியர்-பொல்லாதவர்கள். புலர்த்தல்-நீக்குதல்.

(பொருவருஞ்சீர்) ([illegible]) என்கிறபடியே உபமாநரஹிதமாகையாலே ஏவம்பூதமென்று நிரூபித்துச் சொல்ல வரிதாயிருக்கிற கல்யாணகுணங்களையுடையராய். (ஆரியன்) ஸகலசாஸ்த்ரபாரீணராய். ([illegible]) என்கிறபடியே இவ்விபூதியிலே யிருந்துள்ள ஸகலசேதநருக்கும் திருவேங்கடமுடையானுக்கும் ஆசார்யராய். (தன்னுரியனுக்கு) என்ற ஆர்யபதத்தை ஆசார்யபத வாசகார்த்தமாக ஜீயர்ப்ரயோகித்தருளினாரிறே. (செம்மை) தாம்ஸங்கல்பித்தபடியே அநுஷ்டித்தும் உபதேசித்தும் இப்படிகரணத்ரயஸாரூப்யத்தை யுடையரான. ([illegible]) என்கிற ஆசார்யலக்ஷணமிருக்கும்படி.

(இராமாநுசமுனிக்கு) ([illegible]) என்னும்படியான தம்முடைய அவதாரப்ரயோஜநத்திலே எப்போதும் மநநம்பண்ணிக்கொண்டிருக்கிற எம்பெருமானார்விஷயத்திலே. (அன்புசெய்யுஞ்சீரியபேறுடையார்) அத்யபிநிவிஷ்ட சித்தராய் அதுதானே விலக்ஷணமென்று அத்யவஸித்திருக்கும் ஆழ்வான்முதலான ததீயருடைய. (அடிக்கீழ்) திருவடிகளின்கீழே. (என்னைச்சேர்த்ததற்கே) என்னுடையசென்னியிலே அத்திருவடிகள் பூஷணமாம்படி. பூர்வகாலத்திலே சரமபர்வத்திலுடைய ப்ரபாவத்தை யறியாதேயிருக்கிற என்னை அணைத்துவைத்ததற்கே. தனக்கு நானுபதேசிக்கவேண்டியிருக்கத் தானே யெனக்கு புருஷகாரமாய் என்னைக் கொண்டுபோய் ததீயருடைய ஸ்ரீபாதத்திலே சேர்த்ததற்கு.

http://acharya.org

இத்தமஹோபகாரத்துக்குச் சேர்ந்ததை ப்ரத்யுபகாரமாகப்பண்ணுவது என்று ஆராய்ந்து பார்த்தால், ([illegible]) என்றிருக்கச் செய்தே, ([illegible]) என்றும், ([illegible]) என்றும் சொல்லுகிற படியிலே, (அடிபணிக்தேனுன்னை) உன்னுடைய திருவடிகளிலே ஆச்ரயித்தேன்; உனக்கொரு நமஸ்காரம் பண்ணுகிறேனென்றபடி. ([illegible]) என்று - பெருப்பெருக ஸ்ரீயப்பதித்திருவின தசியப்ரஸாதத்தைக்காணும் இவருக்கு இவருடைய மனஸ்ஸாம் முதலிலே யுண்டாக்கிற்று. ... ... (௨)

அ.—மூன்றாம்பாட்டு. இப்படித்திருவுள்ளத்தைக்கொண்டாடினவாறே இன்னமும் ஸர்வரையும்போலே தேஹாதரன் நழுவ நிற்கு மதிலும் உம்முடைய இழவுக்கு ஹாநியாகாதேயென்ன; எம்பெருமானார் தாமே நிர்ஹேதுகமாக அங்கீகரிக்கப்பெற்ற வெனக்கு ஒருஹாநியும் வாராதென்கிறார்.

மூ.—என்னைப்புவியிலொருபொருளாக்கிமருள்சுரந்த
முன்னைப்பழவினைவேரறுத்தூழிமுதல்வனையே
பன்னப்பணித்தவிராமாநுசன்பரன்பாதமுமென்
சென்னித்தரிக்கவைத்தானெனக்கேதுஞ்சிதைவில்லையே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஊழி	காலோபலக்ஷிதமான ஸகல பதார்த்தங்களுக்கும்,	மருள்சுரந்த	அவித்யா வர்த்திதமாய்,
முதல்வனையே	காரணபூதனான ஸர்வேச்வரனையே,	முன்னைப்பழவினை	அநாதியாகையாலே மிகவும்பழையதாய்ப்போருகிற கர்மங்களை,
பன்ன	ஸர்வரும் விவேசித்து அனுஸந்திக்கும்படி,	வேரறுத்து	வாஸனையோடேபோக்கி,
பணித்த	ஸ்ரீ பாஷ்யமுகேந அருளிச்செய்த,	பாதமும்	தம்முடையதிருவடிகளையும்,
பரன்	ஸர்வோத்க்ருஷ்டரான,	என்சென்னித்தரிக்க	என் தலையிலே தரிக்கும்படி வைத்தருளினார்;
இராமாநுசன்	எம்பெருமானார்,	வைத்தான்	ஆனபின்பு,
என்னை	அவஸ்துவான வென்னை,	எனக்குஏதும்சிதைவில்லை	எனக்கு ஒரு பரிஹாநியுமில்லை.
புவியில்	லோகத்திலே,		
ஒருபொருளாக்கி	ஒரு வஸ்துவாம்படி பண்ணி,		

(௩)

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
	அன்றிக்கே, (பரம்பரனுமெய்செஞ்சொல் நிக்கலைத்தான்) என்கிறவித்தையுமேலே கூட்டி-ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேச்வரனுடைய திருவடிகளையும் என்		சென்னிதரிக்கவைத்தானென்னவுமாம். (பரம்பரனுமெய்செஞ்சொல் நிக்கலைத்தான்) என்றும் பாடமாம். பன்னுதல் - ஆராய்தல். நினைவு - அறிவு. ... ... (௪)

அ.— தாலாம்பாட்டு. இப்படி மூன்றுபாட்டாலும் தம்முடைய அபிநிவேசாதிசயத்தைச் சொல்லிறுல் இதுவ்யக்தமாக வந்தது. அந்யத்பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்குச் சேருமோ, பாகமாகவந்ததேயாகிலும் அதுக்குப்ராயச்சித்தமில்லையோவென்ன அருளிச்செய்கிறார்.

வ்யா.—(என்னை) இதற்பூர்வகாலத்திலே (ந்த்யாதா) என்றிருந்தவென்னை. ([illegible])என்கிறபடியே ஒருபொருளல்லாத வென்னைவென்றபடி. (புகுவில்) ஈ இருள்தருமாஞாலத்திலே. (ஒருபொருளாக்கி)([illegible]) என்கிறபடியே ஒருவஸ்துவாகப்பண்ணி. ப்ரஹ்மவித்துக்களிலே அக்ரிமனாகப்பண்ணி யென்றபடி. (மருள்கொண்டமுன்னைப்பழவினை) ([illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible])என்றும் சொல்லுகிறபடியே அநாதியவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தாத்மகமாயிருக்கிற புண்யபாபரூபமான கர்மங்களை. (வேரறுத்து) வேரோடேதான் நிரவசேஷமாக அறுத்து களைந்துவருமென்று அதுவோர்க்ஷமாகச் சேர்த்து.

(ஊழிமுதல்வனையே) ஸகலலோகபதியான ஸர்வகாரணபூதனான ஸர்வேச்வரனை. ([illegible])என்றதிறே ச்ருதி. ([illegible]) என்றும், (புறம்புண்டான பற்றுக்களையடைய வேரோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும்) என்றும் சொல்லுகிறபடியே இச்சேதநருடைய ப்ராப்திப்ரதிபந்தகங்களெல்லாவற்றையும் விடுவித்து, ([illegible])என்கிறவனை.(முதல்வனையே) என்கிற ஏவகாரத்தாலே - ([illegible]) ([illegible]) ([illegible]) ([illegible]) என்கிறபடியே அந்யயோகவ்யவச்சேதம்பண்ணினபடி.

http://acharya.org

(பன்னப்பணித்த) ஸர்வரும் விரும்பி விவேகித்து அநுபவிக்கும்படி ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யமுகேந அருளிச்செய்த ஸர்வோத்க்ருஷ்டரான. பன்னுதல் - விவேகித்தல். (இராமாநுசன்) எம்பெருமானார். ([illegible]) என்று தலவோபநிஷத்திலும், ([illegible]) என்று மஹாபாரதத்திலும், ([illegible]) என்று வரதாசார்யராலும், ([illegible]) என்று வேதாந்தாசார்யராலும், ([illegible]) என்று வரதாசார்யராலும், ([illegible]) என்று அபியுக்தோக்திகளாலும் அக்லவய்யவிசேஷணங்களாலே சொல்லப்பட்டவராலே, தம்மை ஸகலஜகத்காரணபூதனான எம்பெருமான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்த வெம்பெருமானார்.

(பரன்பாதமுமென் சென்னித்தரிக்க) ஸர்வோத்க்ருஷ்டரான வெம்பெருமானார் என்னுடைய சிரஸ்ஸிலே தரிக்கும்படி தம்முடைய ஸ்ரீபாதத்தை, ([illegible]) என்று இவ்விஷயத்திலே பரத்வப்ரதிபத்தி பண்ணினவர்களையாலே (பரன்பாதம்) என்கிறார். அன்றிக்கே, (பரன்பாதமுமென்சென்னித்தரிக்க) ஸர்வஸ்மாத்பரனுடைய ஸ்ரீபாதத்தை என்சிரஸ்ஸிலே தரிக்கும்படி யென்னவுமாம். (வைத்தான்) நிர்ஹேதுகமாக பாகதஸ்வீகாரமாய்த்தானே வைத்தான். இப்படிஸ்வரூபாநுரூபமானபேற்றைநான் பெறும்படி உபகரித்தாரென்றபடி. (எம்மாவீட்டுத்திறமுஞ்செப்பம் நின், செம்மா பாதபற்புத்தலைசேர்த்தொல்லைக், கைம்மாதுன்பங் கடிந்தபிரானே, அம்மாவடியேன் வேண்டுவதீதே) என்று மயர்வறமதிநலமருளப்பெற்ற நம்மாழ்வாரும்ப்ரதமப்ரபந்தத்திலே அருளிச்செய்தாரிறே.

இப்படிபண்ணினபின்பு (எனக்கேதும் சிதைவில்லையே) ([illegible]) என்கிறபடியே பாகவதஸ்வீகாரபாத்ரபூதனான வெனக்கு ஏதேனுமொருஹாநியுண்டோ. சிதைவு - அழிவு. ([illegible]) ([illegible]) என்று வேதபுருஷன் சொன்னானிறே. (சிதைவில்லையே) ஆகையாலே எனக்கொருகுறையுமில்லையென்கிறார். இவர் அடியேபிடித்து பாட்டுக்கள்தோறும், (சரணாரவிந்தம்) என்றும், (கமலப்பதங்கள்) என்றும், (பாதம், அடி) என்றும் இடைவிடாதே வாய்விட்டுப் புலம்புகிறார். [illegible], ஆகிலும் இவர் தம்முடைய காதலிருக்கும்படி ஒருக்காற்சொன்னத்தை ஒன்பதின்கால்சொல்லிக்கொண்டு போந்தாரென்கை. ... ... (௪)

http://acharya.org

அ.—அஞ்சாம்பாட்டு. இப்படி எம்பெருமானாருடைய விஷயீகாரகார்ப்பத்தை யருளிச்செய்த வநந்தரம் அவன் திருநாமங்களைச் சொல்லுவோமென்று முன்பு உபக்ரமித்தபடியே ஸ்தோத்ரம்பண்ணுவதாக உத்யோகித்தவர், அதில் விஷயத்தயமாகச்செய்கையாலே லௌகிகர் நிந்திப்பார்களேயென்று நிர்த்தயுக்துசாய், மீளவும் தாமெடுத்தமைதாகம்பண்ணிக்கொண்டு ப்ரவர்த்திக்கிறார்.

மூ.—எனக்குற்றசெல்வமிராமாநுசனென்றிசையகில்லா
மனக்குற்றமாந்தர்பழிக்கில்புகழவன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன்திருநாமங்கள்சாற்றுமென்பா
வினக்குற்றங்காணகில்லார்பத்தியேய்ந்தவியல்விதென்றே.

பதம்.	உரை.
எனக்கு	நமக்கு,
உற்ற	ஸ்வரூபாநுரூபமான,
செல்வம்	ஸம்பத்து,
இராமாநுசனென்று	எம்பெருமானாரென்று.
இசையகில்லா	இசையாத,
மனக்குற்றம்	மநோதோஷத்தையுடைய,
மாந்தர்	மநுஷ்யர்,
பழிக்கில்	நிந்தித்தார்களாகில்
புகழ்	அதுஸ்துதியாமித்தனை;
அவன்	அவருடைய,
மன்னியசீர்தனக்கு	நித்யஸித்த கல்யாணகுணங்களுக்கு,
உற்ற	தகுதியான,
அன்பர்	ப்ரேமத்தையுடையவர்கள்,
பத்தியேய்ந்த	பக்தியோடே கூடின,
இயல்விதென்று	ப்ரவ்ருத்தியையுடையதென்று.

பதம்.	உரை.
அவன்	அவருடைய,
திருநாமங்கள்	திருநாமங்களை,
சாற்றும்	சொல்லாநின்றன,
என்	என்னுடைய,
பாவினம்	சந்தஸ்ஸமூஹத்தினுடைய,
குற்றம்	குற்றத்தை,
காணகில்லார்	காணமாட்டார்கள்.

இயல்வு-ப்ரவ்ருத்தி. இயல்விதென்றது-இயல்வையுடையதென்றபடி. "பத்தியேய்ந்த வியல்விது" என்று பாடமானபோது-இது பக்தியோடே கூடினசொலென்றுகொண்டு குற்றங்காணகில்லாரென்கை. பா-சந்தஸ்ஸு. இனம்.-ஸமூஹம். தாழிசை, துறைவிருத்தமென்று இனத்தின் வகையான கலித்துறை பாவகையாலே பாவினமென்று சாகவுமாம். (௫)

அ.—அஞ்சாம்பாட்டு. (எனக்குற்றசெல்வம்) கீழ்ப்பாட்டிலே - எம்பெருமானார் தம்மை நிர்ஹேதுகமாக விஷயீகரித்தாரென்று கொண்டாடினார்; இதில் - அத்தப்ரீதியாலே ப்ரேரிதராய்க்கொண்டு அவருடையகுணகீர்த்தனம்பண்ண உத்யோகித்து, குதர்ஷ்டிகளாயிருப்பார் இதில் ஏதேனுமொரு குற்றத்தை ஆரோபித்து தூஷித்தார்களாகில் அதுவேயெனக்கு பூஷணமென்றுசொல்லாநின்றுகொண்டு, இதின்ரஸமறிந்தவர்கள் குணமாகவிரும்புவர்களென்கிறார்.

http://acharya.org

பத:—(எனக்குற்றசெல்வம்) ([illegible]) என்கிறபடியே அப்ராப்தமாய் அறி
கிற்பாரைப் அறிவிலேனான நம்போல்வார்க்கு, ([illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible]) என்றும் சொல்லப்பட்ட இவருடைய திரு
வுடைய சரமபர்வமான தத்வ தாத்பர்யமானது, ([illegible])
என்று அனுதாரணமான தத்வப்ரதிபத்தி பூர்வகமாகவே நிஷ்கர்ஷிக்கப்
பட்டதால் எனக்கு ஸ்வரூபப்ராப்தமாயிருக்குமன்ன ஸம்பத்து.

(இராமாநுசனென்று) (தன்னைச்சேர்ந்தார் தாஸம் தவிரப்பெரு
ஞ்செல்வமென்றனுக்கு நீயேயெனக்கிராசா) என்கிறபடியே எம்பெரு
மானாரே தந்தாருக்கு மஹாநிதியென்று அத்யவஸித்து. ([illegible]) என்கிறபடியே ஸகலஸம்பத்துக்களை
யெல்லாம் அனுக்கப்பமாக நிர்ணயித்து, நாம் அவருடைய குண
ஸேர்த்தனமொன்றுமே பண்ணக்கடவோமென்று கணிசித்திருக்க,
(இசையகில்லா மனக்குற்றமாந்தர்) ஸம்மதிக்கமாட்டாதபடியான
மஹாபாதகத்தையுடைய மந்தமதிகள்.

(பழிப்பில்) இவர்கள், குணங்களை யறியமாட்டாதே தோஷ
த்திருக்கவனையாமே, ([illegible]) என்று சொல்லப்
படுகிற அன்னர்க்கங்களையும் தைவதித்யத்தாரையும் குதர்க்கங்களை
யுமுடைய தோஷங்களைப்பேற்றிட்டு மிக்கிருக்கால் ([illegible])
என்றும், ([illegible]) என்றும், ([illegible]) என்றுஞ்சொல்லுகிறபடியே அவர்கள் அந்தரங்களையாமே
(மாந்தர்) என்கிறார். ([illegible] । [illegible]) என்றதே இவர்களை சண்டாளர்சொல்லுகிறது.

(பழிக்கில்புகழ்) ([illegible]) என்று பலதோஷ
ஸ்யாப்தங்களான காம்யகர்மங்களை விழுந்தவென்றதே அவர்
கள் பழிசொல்லுவது, அவை தன்னை தூஷிக்கால், ([illegible]) ([illegible]) ([illegible]) ([illegible]) ([illegible]) என்றவையாமே ஸாதாரண்ணதங்களின்
தோஷமறிந்தவர்கள்சொல்லும்பழியவைகளையாமே அதுவேயாமக்கு
ப்புகழாம். ([illegible] । [illegible] । [illegible] । [illegible]) என்றும

http://acharya.org

சொல்லப்படுகிறவிஷயத்தைப் பற்றிருக்கு, ([illegible]) என்னையாலே பலபரித்திரில் கண்ணுதிலுண்டாகிருக்கும், அப்படியன்றிக்கே, ([illegible]) என்கிற தரிவலையைத்தை பரிபாதயர்கள் சொல்லும்படியாலையாலே எனக்கு அதுவேபுகழாம். (ஞானம்தட்டாரமிலை நன்ஞுலே புடையருன ஞுருலையைடைத்தக்காள், மாவிலத்திர், தேனுக்கமலத் திருமாமகள்கொழுனன், தானேயைலருக்கதரும்) என்னும், (உய்ய வினைவுண்டாகில் உள்ருருக்காள் தம்பதத்தே, வையுமன்புதன்னே வித்தமாகிலத்திர், மெய்புரைக்கேன், பையாவின்மையன் பரமபத முக்கருக்காம், வைவிவன்ருகெல்விக்கணீ) என்னும் சொல்லப்படும் விஷயத்திலேயிறே அவர்கள் பழிசொல்லுவது, அதுபுகழேயாய்த் தலைக்கட்டுகிறதிலே. ([illegible]) என்னும், (அவனைருமேகைலைத்தாக் கன்பாதுக்கன்பர் இனதமெனத்திரியவா தம்மை, உலகப்பழிதூற நில்குதியாரும்) என்னும் சொல்லக்கடவதிறே.

(அவன் மன்னியசீர்தனக்குற்றவன்பர்) (அவன்) ([illegible]) என்ற ப்ரஸித்தரான எம்பெருமானுருடைய, (மன்னியசீர்) நித்யஸித்தங்களாய் ஸ்வாபாவிகங்களாய், ([illegible]) என்கிற ச்லோகத்திலே சொல்லப்பட்ட இருமரக்திகள் தொடக்கமான கல்யாணகுணங்கள்.

(தனக்கு உற்றவன்பர்) தனக்குத்தகுதியான ப்ரேமத்தையுடையரான மஹாத்மாக்கள். (அவன் திருநாமங்கள் சாற்றுமென்பாவினைக்குற்றம்) அவர் விஷயமாகபக்தி வைத்தனைப்பண்ணதப்ரேரிதனுக்கொண்டு அவருடைய திருநாமங்கள் பத்யருபேணவமாக்ப பிப்பதாக என்றுலேசொல்லப்பட்ட சந்தன்ஸுமதத்திலே அவத்யத்தை. அன்றிக்கே, (அவன் திருநாமங்கள் சாற்றுமென்பாவினைக் குற்றம்) அவருடையதிருநாமங்களைச் சொல்லாகின்றன என்னுடைய சப்தஸுமத்திலே குற்றத்தையென்னவுமாம். பாஸ்தனை இடம்-ஸுமம்.

(கலையில்லாதர்) லக்ஷணவ்யாபகைலயாலேதோஷூடத்தி னையப்பொருவர்கள். இல்லாதர் - ஸமர்த்தரல்லாதார்; மந்தமதிகளானவர்கள் தந்தாமுடைய அறிவுகேட்டாலே இதையெல்லாம்பகர் மயமித்யாகம் பண்ணினுமென்னும் லக்ஷணத்தில் குறைச்சலைச் சொன்னுமென்னும் இப்படியான தோஷங்களைக் கலையில்லாதமென் றபடி. அதுக்கு மூலமேதென்ன (பத்திலேலத்தவியவிதென்றே) பக்திலோடேகூடின வ்ருத்தியையுடையதென்னவுமாம். இயல்வு-ப்ரவ்ருத்தி. மெத்தல்-கூடுதல். ... ... (க)

http://acharya.org

அ.—ஆரும்பாட்டு. "பத்திஏய்ந்த இயல்விதென்று - என் பாவினக்குற்றம்காணகில்லார்" என்றார் - கீழ்; அந்தபக்திதான் தமக்குண்டோ வென்று பார்த்தவிடத்தில் அதுவும் விஷயாநுகுணமாகத்தமக்கில்லாமையாலே [illegible] தம்மை கர்ஹிக்கிறார்.

மூ.—இயலும்பொருளுமிசையத்தொடுத்தீன்கவிகளன்பால்
மயல்கொண்டுவாழ்த்துமிராமாநுசனைமதியின்மையால்
பயிலுங்கவிகளில்பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் அவன்றன்பெருங்கீர்த்திமொழிந்திடவே.()

பதம்.	உரை.
இயலும்	சப்தமும்,
பொருளும்	அர்த்தமும்,
இசையத் தொடுத்து	பொருந்தத் தொடுத்து,
ஈன்கவிகள்	விலக்ஷணமான கவிகள்,
அன்பால்	ப்ரேமத்தாலே,
மயல்கொண்டு	அறிவழிந்து,
வாழ்த்தும்	ஏத்தாநின்றுள்ள,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
பயிலும்	ப்ரதிபாதகத்வேன செறிந்திருப்பதான,
கவிகளில்	கவிகளிலே,
பத்தியில்லாத	பக்தி யின்றிக்கே யிருக்கிற,
என்	என்னுடைய,
பாவிநெஞ்சால்	பாபிஷ்டமான மனஸ்ஸாலே,
அவன்தன்	அவருடைய,
பெருங்கீர்த்தி	நிரவதிகீர்த்தியை,
மொழிந்திட	பேசுவதாக,
மதியின்மையால்	அறிவுகேட்டாலே,
முயல்கின்றனன்	உத்யோகியாநின்றேன்.

இப்படி துச்சைப்ரவர்த்தியிலேயிழிந்த மூர்க்கனான நான் இவ்வளத்தைச் செய்யப்போனேனென்று கருத்து. "பாவிநெஞ்சால் அவன்றன் பெருங்கீர்த்திமொழிந்திட" என்று - இப்படியிருக்குமுள்ள மனஸ்ஸோடே கூடிக்கொண்டு அவருடைய கீர்த்தியைப்பேசுவதாக வென்கை. பயிலுதல்-செறிதல். முயலுதல்-உத்யோகித்தல்.(௬)

அ.—ஆரும்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-மந்தமதிகள் பழிசொன்னார்களாகில் அதுவே தமக்குபூஷணமென்றார்; இப்பாட்டிலே-என்னைப்பார்த்து, கீழ்ப்பாட்டிலே ப்ரஸ்துதரான அஜ்ஞர்சொல்லும்பழிக்கு ஒருபடிஸமாதாநம்பண்ணிக்கொண்டு போனதாம், என்னைப்பார்த்தால், ஸர்வலோகப்ரஸித்தரான எம்பெருமானாருடைய வைபவத்துக்குத் தகுதியாயிருக்குமுள்ள பக்திப்ரேமங்களிலே ஒன்றுமிதும் என்பக்கலிலேயில்லை, ஆகிலும் அவர்தம்மை ஏத்துவதாக உத்யோகியாநின்றேன், எத்தனைஸாஹஸம்பண்ணத்தொடங்கினேனென்று, "([illegible]) என்றாப்போலே தம்மை கர்ஹிக்கிறார்.

http://acharya.org

வ்யா.—(இயலும்)(சப்தமும்) பொருளும்-அர்த்தமும். ஸமுச்சயத்தாலே-ஸகமும். (இசைய) பொருந்தும்படி.(தொடுத்து) ப்ரதிபாதகத்துக்கும் ப்ரதிபாத்யத்துக்கும் ஒருகுறையில்லாதபடி ஸந்தர்ப்பித்து. (ஈன்) அவதரிப்பித்து. ப்ரபந்த நிர்மாணம்பண்ணுகிற. (கவிகள்) ([illegible]) என்று இப்படிப்பட்டகவிகள். (ஈன்கவிகள்) விலக்ஷணமான கவிகளென்னவுமாம். (அன்பால்) ப்ரேமப்ரகர்ஷத்தாலே.

(மயல்கொண்டு) அறிவழிந்து. ஜ்ஞாநவிபாககார்யமான அஜ்ஞாநம் தலையெடுத்து. (வாழ்த்தும்) ([illegible]) என்றும்;(வாழியெதிராசன்வாழியெதிராசன்வாழியெதிராசனெனவாழ்த்துவர், வாழியெனவாழ்த்துவர், வாழியெனவாழ்த்துவர் வாழியெனவாழ்த்துவர்தாளிணையில் தாழ்ந்தவர்கள்கொண்டேர்தமே)என்றும், (அறசமயச்செடியதனையடியறுத்தான்வாழியே)என்றுதொடங்கி, (அரமிருக்கப்பெரும்பூதூரவதரித்தான்வாழியேயழகாருமெதிராசரடியிணைகள்வாழியே)என்றும்; (சீராருமெதிராசர் திருவடிகள்வாழி என்றுதொடங்கி, இனிதிருப்பொழுதேழில் ஞானமுத்திரைவாழி) என்றும், (வாழியரோ, தக்கோர்பரவுந் தடஞ்சூழ்பெரும்பூதூர் முக்கோல்பிடித்தமுனி)என்றும், இப்படி அவர்களாலே மங்களாசாஸநம் பண்ணப்படும்.

(இராமாநுசனை) எம்பெருமானாரை. (மதியின்மையால்)(ஸ்ரீ [illegible]) என்கிறபடியே அவருடைய கல்யாணகுணவைபவத்தை யறியாமையாலே. (பயிலும்) அடைவுகெடச்சொல்லும். (கவிகள்) கவிகளிலே-பாட்டுக்களிலே; அன்றிக்கே, பயிலுங்கவிகள்-எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களையே ஸர்வகாலமும் அநுபவியாநிற்கிற ஆழ்வான், ஆண்டான், எம்பார்தொடக்கமானார்திறத்திலே யென்னவுமாம். (பத்தியில்லாத) ஜ்ஞாநமில்லாவிடிலும் கூடபக்திதானே என்மனஸ்ஸிலே யுண்டோவென்னில்; அந்தபக்தியும் என்மனஸ்ஸிலேயில்லை.

(பாவிநெஞ்சால்) ஜ்ஞாநபக்த்யாதிகள் இன்றிக்கே யொழிந்தாலும் மனஸ்ஸை பரிசுத்தமானால் க்ரமேண இவற்றையுண்டாக்கிக்கொள்ளலாமிறே, அந்த சுத்தியில்லாமையாலே ஸ்வமனஸ்ஸை அத்யந்தம்பாபிஷ்டமாயாய்த்திருப்பது, இப்படிப்பட்டமனஸ்ஸாலே. (அவன் றன்பெருங்கீர்த்தி மொழிந்திடவே) (அவன் றன்) (அடையார்கமலத்தலர்மகள் கேள்வன்கையாழியென்னும், படையோடு நாந்தகமும் படர்தண்டுமொண் சார்ங்கவில்லும், புடையார்புரிசங்கமும் இந்தப்பூதலங்காப்பதற்கென்றிடையேயிராமாநுசமுனியாயின இந்நிலத்தே) என்றதம்மாலேயும்,

http://acharya.org

(ஆன்ற தமிழ்மறைகளாயிரமுமீன்ற முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாயிராமாநுசன்) என்று மற்றுள்ள ஆசார்யர்களாலும் கொண்டாடப்பட்டு ப்ரஸித்தரானவருடைய, (பெருகீர்த்தி) அவருடைய கீர்த்தியும் அவருக்குறுதியாகக் காணுமிருப்பது. ([illegible]) ([illegible]) (எப்பெருங்கீர்த்தி) (எண்டிசையுமேத்துமெதிராசன்) என்கிறபடியே மஹாத்மாவாகையாலே கீர்த்தியை. (மொழிக்கிடவே) ஜ்ஞாநபக்திகளில்லாத வென்மனத்திலே வாசாகைங்கர்யமாக ஸங்கீர்த்திகரித்து ஸமர்ப்பிக்கக்கடவேனென்று. (மூவலின்றனன்) உத்ஸவமியமின்றேன். ([illegible]) என்றாப்போலே எத்தனையாவது பண்ணுகின்றேனென்று ஸ்வசக்தியை அநுஸந்திக்கிறாராய்த்து. (௬)

அ.—ஏழாம்பாட்டு. இப்படி தம்முடைய அயோக்யதையைப்பார்த்து "நமக்கு இது அஸம்பவம்" என்று மீள நினைத்தவர், ஆழ்வான் திருவடிகளில் ஸம்பந்தமுண்டானபின்பு எனக்கு அசக்யமொன்றுமில்லையென்று ஸ்தோத்ரத்திலே ப்ரவ்ருத்தராகிறார்.

மூ.—மொழியைக்கடக்கும்பெரும்புகழான்வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும்நங்கூரத்தாழ்வான்சரண்கூடியபின்
பழியைக்கடத்துமிராமாநுசன்புகழ்பாடியல்லா
வழியைக்கடத்தலெனக்கினியாதும்வருத்தமன்றே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மொழியைக்கடக்கும்	பேச்சுக்கு நிலமல்லாத,	கூரத்தாழ்வான்	கூரத்தாழ்வானுடைய,
பெரும்	பெரிய,	சரண்	திருவடிகளை,
புகழான்	புகழையுடையராய்,	கூடியபின்	ஆச்ரயித்தபின்பு,
வஞ்சம்	ஆத்மாபஹாரத்தை விளைப்பதாய்த்தனித்தனியே ப்ரபலமாய்க்கொண்டிருளையடியே கடத்தவரிதான,	பழியைக் கடத்தும்	பழிபோலே அவச்யமநுபோக்தவ்யமான பாபகர்மங்களில் மக்க ளாகாதபடி, நிவர்த்திப்பிக்கும்,
முக்குறும்பாம் குழியை	அபிஜநவித்யாவ்ருத்தங்களாகிறபடுகுழியை,	இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
		புகழ்	திவ்யகுணங்களை,
		பாடி	ப்ரீதி ப்ரேரிதராய்க்கொண்டுபாடி,
கடக்கும்	கடந்திருப்பாராய்,	அல்லாவழியை	ஸ்வரூபாநுரூபமல்லாதமார்க்கங்களை,
நம்	நமக்குநாதரான,		

http://acharya.org

பதம்.	உரை.
கடத்தல்	தப்புகை,
எனக்கு	எனக்கு,
இனி	இனி,
யாதும்	ஒன்றும்,
வருத்தமன்று	அருமையில்லை.

"குழியைக்கடத்தும்" என்று பாடமானபோது - தம்முடைய அபிமாநாந்தர்ப்பூதரையும் இப்படுகுழியில் விழாமல் கடத்துமவனென்கை. "எங்கூரத்தாழ்வான்" என்றும் பாடம் சொல்லுவர்கள். ... ... (௭)

அ.—ஏழாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - ஜ்ஞாநபக்த்யாத்யநுபவரூபமான தம்முடைய அபேக்ஷிதத்தை நினைத்து ப்ரபந்த ஸம்பத்திலே ப்ரவர்த்தித்து, இப்பாட்டிலே – ஆழ்வான் திருவடிகளின் ஸம்பந்தமாகிற ஸகுளமாஹாத்ம்யத்தை அநுஸந்தித்து, இப்ப்ரபந்தோத்யோகம் கடினமல்ல, ஸுலபமாயேயிருக்குமென்று அதிலே ஒருப்படுகிறார்.

வ்யா.—(மொழியைக்கடக்கும் பெரும்புகழான்) ஒருசப்தத்தையிட்டு வர்ணிக்கவொண்ணாத திவ்யகீர்த்திகளைக்கொண்டு பரமபதத்தையும் பெருகிவருகிற கல்யாணகுணங்களையுடையவன். ([illegible]) என்னக்கடவதிறே. (வஞ்சமுக்குறும்பாம்) வஞ்சகஹேதுக்களாய்ப் பரவிஷயத்திலே வைராக்யத்திலேயும் வ்யக்தியாதிக்யபுத்தியேயும் பிறப்பித்து ஸ்வரூபநாசகங்களாயிருக்கின்ற அபிஜநவித்யாவ்ருத்தங்களாகிற அஹங்காரத்ரயமும். (முக்குறும்பு)([illegible]) என்கிறபடியே ஜகத்ப்ரதாரகங்களான இம்மூன்றுமாகிற.

(குழியைக்கடத்தும்) தம்முடைய அபிமாநாந்தர்ப்பூதரை அந்தப்படுகுழியிலே விழாதபடி தம்முடைய உபதேசத்தாலே தத்வஹிதபுருஷார்த்த யாதாத்ம்யஜ்ஞாநத்தைப் பிறப்பித்து அதில் நின்றும் கடத்துமவன். கடத்துகை - தாண்டுவிக்கை. (குழியைக் கடக்கும்) என்று பாடமானபோது இம்மூன்றுமாகிற படுகுழியைக்கடந்திருக்குமவரென்றபடி. (நங்கூரத்தாழ்வான்) நம்முடைய கூரத்தாழ்வான். இவரைத்தலைப்பிடிக்கைக்குக்காரணமும் அவருடைய வைபவம். ஆகையாலேயிறே (நங்கூரத்தாழ்வான்) என்கிறார். (கூரம்) என்கிற திவ்யதேசத்துக்கு நிர்வாஹகராய் ஸ்வாமியுடைய திருநாமத்தை வஹித்தவர். (எங்கூரத்தாழ்வான்) என்றும் பாடஞ்சொல்லுவர்கள். (சரண்கூடியபின்) இப்படிப்பட்ட வைபவத்தையுடையரான ஆழ்வானுடைய திருவடிகளை ஆச்ரயித்த பின்பு. இப்படிப்பட்ட ஸகுளமாஹாத்ம்யத்தை யாம்பெற்ற பின்பு.

http://acharya.org

(பழியைக்கடத்தும்) இவ்வளவாக நான் நூஷேடிவேடைத்துபோரகையாலே வந்தேறியாய் லோகக்ஷதிமாய் தம்முடைய குணகீர்த்தனம் பண்ணுகைக்கு விரோதியான வென்னுடைய பாபத்தை லவணமாக நிவர்த்திப்பிக்கும். (இராமாநுசன்) எம்பெருமானுடைய. (புகழ்பாடி) ஏவம்பெருங்கீர்த்தி இராமாநுசமுனிவன், தமிழ்மறைகளாயிரமும் மொய்ம்பால் வளர்த்த இதத்தாயிராமாநுசன் என்னும்படியான அவருடைய கல்யாணகுணங்களை இப்ப்ரபந்தமுகேந கீர்த்தநம்பண்ணி. (அல்லாவழியைக்கடத்தல்) என்னுடைய அபதப்ரவ்ருத்தியைத் தப்புகை. அன்றிக்கே கர்ப்பயாம்ய தாமஸிகளை ஆக்ரமிக்கையாலென்னுதல். எம்பெருமானாருடைய திருவடிகளைக்கிட்டி அநுபவிக்கையிலென்றபடி.

(எனக்கினியாதும் வருத்தமன்றே) (எனக்கினி) இப்படி எம்பெருமானாருடைய கைங்கர்யத்திலே அதிகரித்து க்ருதார்த்தனானவெனக்கு இத்தனைநாளும் சிலவுபத்ரவமுண்டாயிருந்தாலும் இன்றுமுதலாக மேலுள்ளகாலமெல்லாம். (யாதும்) எத்தனிவுயத்திலேயாகிலும். (வருத்தமன்றே) அனாயாஸமானதில்லை. (அல்லாவழியை) என்று - அம்மார்க்கங்கள் அநிஷ்டங்களானவையாலே தம்முடைய திருப்பவளத்தாலே இன்னதென்று நிர்த்தேசிக்க அருவருத்துனையாகப்பொதுவாகவருளிச்செய்தார். (அல்லாவழியைக்கடத்தல் எனக்கினியாதும் வருத்தமன்றே) ([illegible]) என்கிறபடியே ஸகலபாபவிமோசனபூர்வகமான பரமபதத்தைப் பெறுகையிலும் இவருக்கு ஒருகண்ணழிவின்றிக்கே அத்யந்தஸௌலப்யமாய்க்காணுமிருப்பது. (வருத்தமாகச் மற்றதுவையதுவே) என்னக்கடவதிறே. ... (எ)

அ.—எட்டாம்பாட்டு. முதலிலே எம்பெருமானார் திருநாமங்களைச்சொல்லுவோம்வாவென்று தம்திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து, அநந்தரம் தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானாருடைய சீலகுணமொழிய மற்றொன்றறியாதிருக்கிறபடியைப் பேசி; அநந்தரம் தம்முடைய திருவுள்ளம் தமக்குப்பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து அதின்காலிலேவிழுந்து; அநந்தரம் தம்முடைய திருவுள்ளத்தினுடைய ஆந்த்ரைர்யத்தைச்சொல்லி, இன்னமும் உமக்கு நினைவின்றவாரேதென் என்றவர்களைக்குறித்து எம்பெருமானார் தம்முடைய விஷயீகாரகார்ட்யத்தை தர்ஸிப்பித்தார், ஆகையாலே நமக்கொருகுறையுமில்லையென்று; அநந்தரம் தத்விஷயஸ்தோத்ரப்ரவ்ருத்தரானவர், லௌகிகர் நிந்திக்கில்செய்வதென்னென்று நிர்த்துக்கராய், மீளவும்தாம், எம்பெருமானாரளவில் ப்ராப்யபுத்தியில்லாதார் நிந்திக்கிற்றார்களாகில் ஸ்துதியாமித்தனை, தத்விஷயப்ரேமயுக்தர் இவனுடைய ப்ரேமகார்யமன்றோ வென்று இதில் தோஷதர்சனம் பண்ணமாட்டார்க ளென்று

http://acharya.org

ப்ரவ்ருத்தர்களாய்; அநந்தரம் அந்தப்ரேமத்தின் நிருபித்தவிடத்தில் அதுவும் நமக்குவிஷயாநுரூபமாகப்போராமையாலேதமக்குண்டோத்ராதிகாரமில்லாமையைச்சொல்லி வெறுத்து; அநந்தரம் ஆழ்வான் திருவடிகளில் ஸம்பந்தபலத்தை யநுஸந்தித்து, இதுவுண்டானபின்பு நமக்கு அசக்யமாயொன்றுமில்லையென்று ஸமாதாநிதராய் நின்றார்-இம்; இனி மேலெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்.

பொய்கையாழ்வாரருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தைத்தம்முடைய திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்கும்பெருமையையுடைய எம்பெருமானார் எங்களுக்கு நாதரென்கிறார்.

மூ.—வருத்தும்புறவிருள்மாற்றவெம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையுஞ்செந்தமிழ்தன்னையுங்கூட்டியொன்ற
திரித்தன்றெரித்ததிருவிளக்கைத்தன்திருவுள்ளத்தே [த்
இருத்தும்பரமனிராமாநுசனெம்மிறையவனே. ... (அ)

பதம்.	உரை.
வருத்தும்	“[illegible]” இத்யாதிப்படியே பகவதாஜ்ஞாநுவர்த்திகளையிருக்கிற அவஸ்துக்களிலே ஸ்வதந்த்ர புத்தியைப்பண்ணுவித்து அஜ்ஞவிஷயமான ஸம்ஸாரத்வப்ராப்தியாலே சேதநரை வருத்தப்பண்ணுமதாய், ப்ரத்யக்ஷான ஆத்மாவும் தத்சரீரமான ஈச்வரனும்போலன்றிக்கே,
புறம்பிருள்	சப்தாதிவிஷயமாய்க்கொண்டு புறம்பே தோற்றுகிற விபூதியை விஷயீகரித்

பதம்.	உரை.
	இருக்கும் அஜ்ஞாநாந்தகாரத்தை,
மாற்ற	போக்கும்படியாக,
எம்	ப்ரபந்நகுலோத்தேச்யராய்,
பொய்கைப்பிரான்	பரமோதாரரான பொய்கையார்,
மறையின் குருத்தின் பொருளையும்	வேதாந்தத்தினுடைய அர்த்தத்தையும்,
செந்தமிழ் தன்னையுங்கூட்டி	அவைகளுக்குத்தமிழான சொல்லையுங்கூட்டி,
ஒன்றத்திரித்து	தன்னிலே சேரும்படி ஸம்பந்தித்து,
அன்று	திருவிடைகழியிலே ஸர்வேச்வரன் வந்து நெருக்கின போது,
எரித்த திருவிளக்கை	“வையந்தகளியா” என்று தொடங்கி ப்ரகாசிப்பித்த திருவிளக்கை,

http://acharya.org

பதம்	உரை.	பதம்.	உரை.
தம்திருவுள்ளத்தே	தம்முடைய திருவுள்ளத்திலே,	பரமன்	நிரதிசயப்ரபாவரான,
இருத்தும்	வைத்துக்கொண்டிருக்கும்,	இராமாநுசன்	எம்பெருமானார்,
		எம்	எங்களுக்கு,
		இறையவன்	நாதர். ... (அ)

அ.—எட்டாம்பாட்டு. முதலிலே எம்பெருமானாருடையதிருநாமங்களைச்சொல்லுவோம்வாவென்று தம்திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்து, அனந்தரம்தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானாருடைய ஸௌகுண்யத்திலே ஆழங்கால்பட்டு மற்றொருவிஷயத்தைபதியாதபடியைக்கண்டு ஆச்சர்யபட்டு, அனந்தரம் தம்முடையதிருவுள்ளம் தனியேப்ரவர்த்தமாகத் தம்மைச்சேர்த்த மஹோபகாரத்துக்குத்தோற்று அதின்காலிலேவிழுந்து, அனந்தரம்எம்பெருமானார் தம்மை நிர்ஹேதுகமாக விஷயீகரித்த ஸௌஜந்யமஹாத்ம்யத்தைப்ரகடீகரித்துக்கொண்டு நமக்கொருகுறையுமில்லையென்று தம்முடையக்ருதார்த்ததையையருளிச்செய்து, அனந்தரம்தத்விஷயஸ்தோத்ரத்திலே ப்ரவ்ருத்தரானவர், அதுக்கு ஸஹுபாதப்ரதிகூலரை நிந்தித்தநாமிதில்செய்வதென்னென்று நிவ்ருத்தப்ராயராய், மீளவும் தாமே எம்பெருமானாரளவிலே ப்ராப்யபுத்தியில்லாதார் நிந்தித்தார்களேயாகிலும் அதுவே நமக்குள்ளுறுபயமந்தனே, தத்விஷயப்ரேமயுக்தர் இவருடைய ப்ரீதிப்ரேரிக்கவந்த சொல்லன்றோவென்று இதில்தோஷதர்சனம் பண்ணமாட்டாதே இதுதன்னை குணமாக நினைப்பவரென்று வ்யவஸிதராய் ஸ்தோத்ரம்பண்ண ஒருப்பட்டு, அனந்தரம் இப்படியானாலும் அத்தப்ரேமத்தன்னை நிரூபித்தவிடத்தில் அது நமக்குவிஷயாநுகுணமாகப் போராமையாலும் அப்படியே விஷயாநுகுணமாகச் சொல்லவரிதாகையாலும் நமக்கு ஸ்தோத்ராதிகாரமில்லையென்று சொல்லி ஆக்ஷேபித்து, அனந்தரம்தமக்குண்டான ஆழ்வார்திருவடிகளின் ஸம்பந்தத்தை யநுஸந்தித்து, இது உண்டானபின்பு நமக்கு அசக்யமாமொன்றுமில்லையென்று வ்யவஸிதமநஸ்காராகிறார் - மேல்; இவ்வளவும் ஸ்தோத்ரோபோத்காதம்; இனிமேலெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணுகிறார்.

லோகத்தாருடைய அஜ்ஞாநாந்தகாரத்தை நிவர்த்திப்பித்து அவர்களுக்கு ஹேயோபாதேயவிவேகத்தையுண்டாக்கி உபகரிப்பதாக ஜ்ஞாநதீபத்தையெடுத்து பொய்கையாழ்வாரருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தைத் தம்முடைய திருவுள்ளத்திலே ஸுப்ரதிஷ்டிதமாம்படிவைத்த பெருமையையுடையரான எம்பெருமானார் நமக்குநாதரென்கிறார்.

http://acharya.org

வ்யா.—(வருத்துமென்றதொடக்கமி) (வருத்தும்புறவிருள் மாற்ற) வருத்தும் என்கிறது இருளுக்குவிசேஷணம். வருத்தத்தைப்பண்ணக்கடவதான இருளென்றபடி. புறவிருள்-பாஹ்யவிஷயப்ராவண்யத்துக்குடலான அஜ்ஞானம். அதுதான் லோகத்திலே வருத்தங்களைப் பண்ணக்கடவதாயிருக்குமே சிக்ஷித்தவிஷயங்களிலே ஸக்தனானவனுக்கு அவற்றைப்பெறும்போதும்பெற்ற பின்பும் ஐஹிகாமுஷ்மிகங்களிலும் ஸெதுக்கங்களுண்டிறே;- ஒரு வேச்யாஸக்தனானவன் அவளுக்குஒருவ்யாதிப்ராப்தமாய்ப்ராண ஸம்சயம் வந்தவாறே இவன்பிழைத்தானாகில் நான் அக்நிப்ரவேசம்பண்ணுகிறேனென்று க்ஷுத்ரதேவதைகாலிலேவிழுந்து அப்படியே செய்தானென்று லோகப்ரஸித்தமிறே. லௌகிகபலங்களைக்குறித்து க்ஷுத்ரதேவதைகளை ஆராதிக்கப்போனால், ஆட்டையறுத்துத்தாவென்றும், உன்தலையையறுத்துத்தாவென்றும், செடிவாட்டம்பண்ணச்சொல்லியும் அதிகோரமான பூஜைகளை அபேக்ஷிக்க அப்படியே அவனும் பண்ணிக்கொண்டுபோவானிறே; ராவணன் தன்தலைகளையறுத்து ருத்ரனை ஆராதித்தானென்றும் ப்ரஸித்தமிறே. ராஜாவுக்கு ஒருவன் புத்ரனைக்கொடுத்து அந்த புத்ரனை விநாசம்பண்ணி யாகம்பண்ணவேணுமென்று சொல்ல அந்த ராஜாவும் அப்படியே பண்ணி அபதானம்ப்ரஸித்தமிறே. ([illegible])பல் மோத்துணக இடாதாரண மலவேபக ஸம்ஸாரும்பஸ்த்ராபக கக்தவோர்த்தவபாஹு த்வாநிரூபமான வருத்தத்தை த்ருஷ்டத்திலும், நரகாநுபவரூபமான வருத்தத்தை ஆமுஷ்மிகத்திலும் பண்ணக்கடவதாயிறே பாஹ்யவிஷய ப்ராவண்யத்துக்குடலான அஜ்ஞானமிருப்பது.

(புறவிருள்) ப்ரத்யக்ஷமான ஆத்மாவையும் தத்ஸ்வாமியான ஈச்வரனையும் போலன்றிக்கே அவ்விருவரிலுங்காட்டிலும் பாஹ்யமாய் ப்ரக்ருதிவிஷ்தமாய் அபரிச்சேத்யமாய், ([illegible]) என்றும், ([illegible]) என்றும்சொல்லுகிறபடியே ஸம்ஸாரத்திலே ப்ராப்தமான ஐச்வர்யத்தைப்பெற்றும் ஜந்மமோக்ஷஸாதாரணமே அந்தமாத்தும் அஹங்காரக்ராந்தராய்ப்போருகிற ஸாமாந்யதேவதைகளை க்ஷுத்ர பலங்களுக்காக ஆராதிக்கவாறே, ([illegible]) என்னும்படியான வ்யக்தியை யாகிக்கப்பண்ணும் அஜ்ஞானாந்தகாரமென்னவுமாம். (மாற்ற) அத்தையடையவாய்ப் போக்குகைக்காக.

(எம்பொய்கைப்பிரான்) தம்மொருவர் பொருட்டன்றிக்கே நம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகள் பொருட்டும் அவதரித்தாரென்னைக்காணும் இவருடைய அபிநிவேசம். (எம்பொய்கை) என்னுடையபோஸ்யமான ப்ரபந்நஜனங்களுக்காக காஞ்சிநகரத்திலே பொய்கையென்னும்பேரையுடைத்தான புண்டரீகஸரஸ்ஸிலே அவதரித்து, அதுதன்னையே நிரூபகமானதிருநாமமாகவுடையரான.

http://acharya.org

அஜ்ஞாநாந்தகார நிவர்த்தகமாய் ப்ரதீபம்போலே தத்வார்த்த ப்ரகாசகமாயிருக்கிற இப்ப்ரபந்தத்தை நிர்மித்து உபகரித்த உபகாரகர்

(மறையின்குருத்தின்பொருளையும்)([illegible]) என்றும், ([illegible]) என்றுஞ்சொல்லப்படுகிற வேதாந்தார்த்தங்களையும். (செந்தமிழ்தன்னையும்) இவருடையப்ரபந்தத்துக்குச் செம்மையாவது - தத்வஹித புருஷார்த்தங்களை அடைவே ப்ரதிபாதிக்குமளவில் ஆதிமத்யாவஸாநங்களிலே ஏகரூபமாயிருக்கை. (தமிழ்தன்னையும்) த்ரவிடரூபமான இப்ப்ரபந்தத்தன்னையும். (கூட்டி) வேதாந்தார்த்தங்களையும் உடையவனக்குதமிழான சொல்லையும் தன்னிலே சேரும்படி ஸந்தர்ப்பமாக்கி.

(ஒன்றத்திரித்து) அவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று சேரும்படி ஒப்பித்து. (அன்று) திருக்கோவலூரிலே ஒருராத்ரி அந்தகாரத்திலே முதலாழ்வார்கள் மூவரும்வந்து அதிஸங்குசிதமான வொருநிருவிடை கழியிலே ஒருவரையொருவர் அறியாமல்நிற்க இவர்களை நெருக்கவேண்டிக்கைக்காக ஆயனார்வந்து மூவர்நடுவிலும் புகுந்து அவர்களைநெருக்கினவளவிலே. (எரித்ததிருவிளக்கை) (வையந்தகளியாவார்கடலேநெய்யாகவெய்யகதிரோன்விளக்காக) என்று-ச்சதுர்த்தச புவனாத்மகமானலோகமெல்லாம் தகளியாகப் பண்ணியும், ஜலதத்வத்தையெல்லாம் ஒருபடியாகக்கொண்டவப் தைலஸ்தாநங்களி(லெ)நெய்யாகப்பண்ணியும், உஷ்ணகிரணனுனைவர்த்தி யாகவிளக்காகச்சேர்த்தும், லோகத்திலிருந்தபதார்த்தங்களென்றும் மிகுதிப்படாதபடி எல்லாவற்றையும் ப்ரகாசிக்கும்படி யிட்டருளின இப்ப்ரபந்த ரூபதீபத்தையென்றபடி.

(தன்திருவுள்ளத்தேயிருத்தும்) அத்தீபத்தை ஸ்வேதரவ்யாவ்ருத்தப் பரமான தம்முடையதிருவுள்ளத்திலே ஸ்த்தாவரப்ரதிஷ்டையாம்படி நிறுத்தவல்ல. (பரமன்) ([illegible]) ([illegible]) என்றும், ([illegible]) என்றுஞ்சொல்லப்பட்ட பெருமையையுடையவரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (எம்மிறையவனே) எங்களுடையநாதர். ஸ்வாமியென்றபடி. ([illegible]) ([illegible])([illegible]) என்னக்கடவதிறே. ... ... (அ)

http://acharya.org

அ.—ஒன்பதாம்பாட்டு. பூதத்தாழ்வார் திருவடிகளைத் தம் திருவுள்ளத்திலே வைத்தநுபவிக்கும் எம்பெருமானார் திவ்யகுண ங்களைச் சொல்லுமவர்கள், வேதத்தை ரக்ஷித்து லோகத்திலே ப்ரதிஷ்டிப்பிக்குமவர்களென்கிறார்.

மூ.—இறைவனைக்காணுமிதயத்திருள்கெடஞானமென்னும்
நிறைவிளக்கேற்றியபூதத்திருவடிதாள்கணெஞ்சத்
துறையவைத்தாளுமிராமாநுசன்புகழோதுநல்லோர்
மறையினைக்காத்திந்தமண்ணகத்தேமன்னவைப்பவரே.( )

பதம்.	உரை.	பதம்.	உரை.
இறைவனை	வகுத்த சேஷியானவனை,	நெஞ்சத்து	திருவுள்ளத்திலே,
காணும்	ஸாக்ஷாத் கரிக்கைக்குஉபகரணமான	உறையவைத்து	நித்யவாஸம்பண்ணும்படியாக வைத்து,
இதயத்து	ஹ்ருதயத்தைப் பற்றிக்கிடக்கிற,	ஆளும்	அநுபவிக்கும்,
இருள்	அஜ்ஞாநாந்தகாரமானது,	இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
கெட	நசிக்கும்படியாக, "அன்பேதகளியா" என்று தொடங்கி, "ஞானச் சுடர்விளக்கேற்றினேன்" என்று,	புகழ்	கல்யாண குணங்களை,
		ஓதும்	ஸதோச்சாரணம்பண்ணும்,
		நல்லோர்	ஸத்துக்களானவர்கள்,
ஞானமென்னும்	பரிஜ்ஞானமாகிற,		பாஹ்ய குத்ருஷ்டிகளால் அழிக்கவொண்ணாதபடி,
நிறைவிளக்கு	பரிபூர்ண தீபத்தை,	மறையினைக்காத்து	வேதத்தை ரக்ஷித்து,
ஏற்றிய	ப்ரகாசிப்பித்த,	இந்தமண்ணகத்தே	இந்த லோகத்திலே,
பூதம்திருவடி	ஸ்ரீபூதத்தாழ்வாரென்ஸ்வாமிகளுடைய,	மன்னவைப்பவர்	ஸுப்ரதிஷ்டிதமாக வைக்குமவர்கள். (கூ).
தாள்கள்	திருவடிகளை,		

அ.—ஒன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே – பேயாழ்வாருடைய ஸம்பந்தத்தாலே ஸர்வோத்க்ருஷ்டரான எம்பெருமானார் தமக்கு ஸ்வாமியென்றருளிச்செய்து, இப்பாட்டிலே–ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரனைக் காண்கைக்கு ஸர்வர்க்கும் உபகரணமாயிருக்கிற ஹ்ருதயம் அஜ்ஞாநாந்தகாரத்தாலே போதுகித்துப்

http://acharya.org

போலவ்வளவிலே அத்தை கழிப்பிப்பதாக பரஜ்ஞாநமாகிற பரிபூர்ண தீபத்தையேற்றியருளின பூதத்தாழ்வாருடைய திருவடிகளை மனஸ்ஸிலே வைத்துக்கொண்டு அநுபவிக்கிற எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை பஹுமானித்து, அத்துக்கனானவர்கள் இந்தலோகத்திலே வைதிகமதங்களையும் பாஹ்யகுத்ருஷ்டிகளால் அழிக்கவொண்ணாதபடி ரக்ஷித்து ஸுப்ரதிஷ்டிதமாக வைக்கவல்லவர்களென்கிறார்.

வ்யா.—(இறைவனை) ஸர்வலோகத்துக்கும் ஸ்வாமியானவனை. (காணும்) தர்சநம்பண்ணுகைக்கு உபகரணமான. (இதயத்து) ஹ்ருதயத்தைப்பற்றிக்கிடக்கிற. (இருள்கெட) (సర్వస్య చాహం హృది సన్నివిష్టో మత్తః స్మృతిర్జ్ఞానమపోహనం చ। ఈశ్వరః సర్వభూతానాం హృద్దేశేఽర్జున తిష్ఠతి) என்றும், ([illegible]) என்றுஞ்சொல்லுகிறபடியே ஸர்வேச்வரனுக்கு இருப்பிடமான ஹ்ருத்யஸ்தானமாயிறே - அவனை யறிகைக்கடவதான ஜ்ஞாநத்துக்கு ப்ரகாசத்வாரம். ([illegible]) என்றும், ([illegible]) என்றுஞ்சொல்லப்படுகிற ஜ்ஞாநத்துக்கு வாதகமாய் இவர்களுடைய பூர்வகர்ம வாஸனையாலே வந்திருப்பதொரு அஜ்ஞாநமுண்டு; (అజ్ఞానేనావృతం జ్ఞానం తేన ముహ్యంతి జంతవః) என்னக்கடவதிறே, அதுகெட. ([illegible]) ([illegible]) (నాశయామ్యాత్మభావస్థో జ్ఞానదీపేన భాస్వతా) என்கிறபடியே பாரதந்த்ர்ய ஜ்ஞாநரூபமான அஜ்ஞாநாந்தகாரமானது வாஸனையோடே நசிக்கும்படியாக.

(ஞானமென்னும் நிறைவிளக்கு)(యథాగ్నిరుద్ధతశిఖః కక్షం దహతి సానిలః। తథా చిత్తస్థితో విష్ణుర్యోగినాం సర్వకిల్బిషమ్) என்றாப்போலே ஜ்ஞாநத்துக்கு வாதகமான அஜ்ஞாநம் உடனே ப்ரகாசிக்குமிறே. இப்படிப்பட்ட பரஜ்ஞாநமாகிற பரிபூர்ணதீபத்தை. ([illegible]) என்னுமிறே [illegible]ஆசார்யனும். (ஏற்றிய) (அன்பேதகளியா ஆர்வமே நெய்யாக, இன்புருகுசிந்தை இடுதிரியா, நன்புருகி, ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு) என்று தம்முடைய பக்தியைத் தகளியாகப்பண்ணி, அபிநிவேசவிசேஷத்தை நெய்யாக்கி, பக்தி பரவசத்தாலே உருகிக்கிடக்கிற மனஸ்ஸைத் திரியாக்கி, நாரணற்கு ப்ரகாசகமாகிற பரிபூர்ணதீபத்தை ஏற்றினேன் நானென்று தொடங்கி தாமிட்டருளின இவ்வபரஜ்ஞாநமாகிற பரிபூர்ணதீபத்தை ஏற்றி ஸர்வர்க்கும் ஸுப்ரகாசமாம்படி ப்ரகாசிப்பித்த. (பூதத்திருவடி தாள்கள்) பூதத்தாழ்வாரென்கிற ஸ்வாமியினுடைய திருவடிகள். (அந்தமிழால் நற்கலைகளைப் படைத்த வாழ்வார்கள் இந்தவுலகில் இருள் நீக்கவைத்தித்த) என்றும் அருளிச்செய்தாரிறே.

http://acharya.org

(நெஞ்சத்துறையவைத்தாளும்) தம்முடைய மநஸ்ஸிலே நிரந்தரவாஸம்பண்ணும்படியாகவைத்து அவர்வைபவமும் அநுபவித்துக்கொண்டிருக்கிற. ஆளுகை - உபதேஷ்டவிதிப்ரகாரஸ்தமரம்படி விதிப்ரகம் சொல்லுகை. (இராமானுசன்) எம்பெருமானாருடைய. (புகழ்மொழியும்) கல்யாணகுணங்களை ஸ்தோத்ரம் பண்ணும். (நல்லோர்) (கலியுங்கெடுங்கண்டுகொண்மின்) என்றருளிச்செய்த நம்மாழ்வார். அவ்வாழ்வாருடைய ப்ரஸாதத்தாலே லபித்த பவிஷ்யதாசார்யவிக்ரஹத்தைத் தம்முடையகாலமெல்லாமாராதித்துக்கொண்டுபோந்த ஸ்ரீமந்நாதமுனிகள். இவரவதரித்த பின்பு இவருடையகல்யாணகுணங்களைக்கேட்டருளி வித்தராய்த் திருப்புற்றுக்குக்கிழக்காகக்கரியமாணிக்கப்பெருமான்திருமுன்பே இவரைக்கடாக்ஷித்து, (ஆமுதல்வன்) என்று ப்ரார்த்தித்தருளின ஆளவந்தார்போல்வாரானவைத்துக்கள்.

(மறையினைக்காத்து) (பிபேத்யல்பச்ருதாத்வேத:) என்றும், (...) என்றும் சொல்லுகிறபடியே அல்பச்ருதரானபாஹ்யகுத்ருஷ்டிகளாலே கலங்காதபடி வேதத்தையெல்லாம் ரக்ஷித்து. அவர்கள்தானேதென்னில் (...) என்னும்படியாகச்சொல் இவையனைத்துமாக்கின ஆழ்வார்தொடக்கமானாரும், (மறையினை) என்றுபொதுவாகச்சொல்லுகையாலே-த்ரமிடவேதத்துக்கும்பிற்காலத்திலே அல்பச்ருதரானகுத்ருஷ்டிகளால்அழிவுவாராதபடி அத்தைவ்யாக்யானம்பண்ணியருளின பிள்ளான்தொடக்கமானாருமென்றபடி. அவர்கள்செய்தது அவ்வளவேயல்லாதாலும் (இத்தமண்ணகத்தேமன்னவைப்பவரே) விரோதிபூயிஷ்டமான இந்த மஹாப்ருதிவியிலே அவ்விரண்டையும் ஸம்ப்ரதிஷ்டிதமாம்படி ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு போந்தார்களென்கிறார். ... (௯)

உரை.—அ.—பத்தாம்பாட்டு. பேயாழ்வார்திருவடிகளை ஸ்துதிக்கும் ஸ்வபாவரான எம்பெருமானார்விஷயத்திலே ஸ்நேஹயுக்தர்திருவடிகளை சிரஸாவஹிக்குமவர்கள், எல்லாக்காலத்திலும் சீரியரென்கிறார்.

மூ.—மன்னியபேரிருள்மாண்டபின்கோவலுள்மாமலராள்
தன்னொடுமாயனைக்கண்டமைகாட்டுந்தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றுமிராமானுசற்கன்புபூண்டவர்தாள்
சென்னியிற்சூடுந்திருவுடையாரென்றுஞ்சீரியரே. (௪௦)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மன்னிய	பேர்க்கப்போகாதபடிநின்ற,	மாண்டபின்	மூற்பாடானஆழ்வார்கவிருவருமேற்றின திருவிளக்காலேவிச்சேதமாகப்போனபின்பு,
பேரிருள்	அஜ்ஞாநமாகிற மஹாந்தகாரமானது.		

பதம்.	உரை.
	"நீயுந் திருமகளும்" என்கிற பாட்டிற் படியே,
கோவலுள்	திருக்கோவலூரிலே
மாமலராள் தன்னொடும்	திருமா மகளாருடனே,
ஆயனை	க்ருஷ்ணாவதாரத்தில் ஆச்ரித பவ்யதை யடங்கலுந்தோற்றும்படி வந்து நின்ற ஸர்வேச்வரனை,
கண்டமை	ஸாக்ஷாத்கரித்தப்ரகாரத்தை,
காட்டும்	தர்சிப்பித்த,
தமிழ்த்தலைவன்	தமிழுக்குத் தலைவரான பேயாழ்வாருடைய,
பொன் அடி	ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை,

பதம்.	உரை.
போற்றும்	புகழும் ஸ்வபாவரான,
இராமாநுசற்கு	எம்பெருமானார் விஷயத்தில்,
அன்பு	ப்ரேமத்தை,
பூண்டவர் தாள்	தங்களுக்கு ஆபரணமாக தரிக்குமவர்களுடைய திருவடிகளை,
சென்னியில் சூடும் திருவுடையார்	தங்கள் சிரஸ்ஸிலே தரிக்கும் ஸம்பத்தை யுடையவர்கள்,
என்றும் சீரியர்	ஸர்வகாலத்திலும் சீரியர்.

போற்றுதல்-புகழுதல். அன்பு பூண்டவரென்றது - அன்பிலே பூட்கையுடையவர்கள்; அதிலே யூன்றியிருக்குமவர்க ளென்னவுமாம். ... ... (௧௦)

வ்யா.—அ.—பத்தாம்பாட்டு. கீழிரண்டுபாட்டாலும்-பொய்கையாழ்வார் பூதத்தாழ்வாரென்கிற இருவராலேயுமெடுக்கப்பட்ட பரிபூர்ணதீபமான இவ்வுபப்ரபந்தங்களிரண்டாலும் லோகத்திலே ஒருவராலும் பரிஹரிக்கவரிதாம்படி வ்யாப்தமாய்நின்ற அஜ்ஞானமாகிற மஹாந்தகாரம் கழிந்தபடியை யருளிச்செய்து, இப்பாட்டிலே - அவ்வந்தகாரம் கழிந்தபின்பு தாம் திருக்கோவலூரிலே நின்றிருந்த ச்ரிய:பதியை ஸாக்ஷாத்கரித்து அத்தலாபத்தை எல்லார்க்கும் இவ்வுபப்ரபந்தரூபேண உபதேசிக்கும் பேயாழ்வாருடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை ஸ்துதிக்கிற எம்பெருமானார் விஷயமான ப்ரீதியாலே பரிஷ்கரிக்கப்பட்டவர்களுடைய ஸ்ரீபாதங்களைத் தங்களுடைய தலைமேலே தரிக்கும் ஸம்பத்தையுடையவர்கள் ஸர்வகாலத்திலும் ஸ்ரீமான்களென்கிறார்.

வ்யா.—(மன்னியபேரிருள்மாண்டபின்) (மன்னியபேரிருள்) தத்வஜ்ஞானலேசமொழிய மற்றொன்றால் போக்குகைக்கு அரியதாய் ஆத்மாவைப்பற்றிக்கிடக்கிற அஜ்ஞானமாகிற மஹாந்தகாரம்.

http://acharya.org

(अविवेकघनान्धदिङ्मुखे बहुधा सन्ततदुःखवर्षिणि भगवन्भवदुर्दिने)(அவிவேககநாந்ததிங்முகே பஹுதாஸந்ததது:க்கவர்ஷிணி பகவந்பவதுர்த்திநே) என்று சொல்லுகிற இருளானது. (மாண்டபின்) இந்தப்பேயாழ்வாருக்குமுன்னே ஜ்ஞாநதீபத்தை யெடுத்தருளினபொய்கையாழ்வார் பூதத்தாழ்வாரென்கிற இருவராலேயும் நசிப்பித்தபின்பு. (गुशब्दस्त्वन्धकारः स्यात् रुशब्दस्तन्निरोधकः । अन्धकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते) (குசப்த்தஸ்த்வந்தகாரஸ்யாத் ருசப்த்தஸ்தந்நிரோதக:-அந்தகாரநிரோதித்வாத்குருரித்யபிதீயதே) என்னும்படி. அஜ்ஞாநத்வாந்தத்தை வாஸனையோடேப் போக்கினபின்பு.

(கோலமுள் மாமலராள் தன்னொடும்)(ஒண்டொடியாள் திருமகளும் நீயுமேநிலாநிற்ப) என்றும், (அகலகில்லேனிறையுமென்றலர்மேல்மங்கையுறைமார்பா) (रुक्मिणीकृष्णजानी) (ருக்மிணீக்ர்ஷ்ணஜாநீ) என்கிறபடியே புருஷகாரபூதையான பெரியபிராட்டியாருடனே. (மாயனை) க்ர்ஷ்ணனுடைய தரித்ர ஸ்வாச்ரிதரான பாண்டவர்களுக்குக் கழுத்திலே ஓலையைக்கட்டிக்கொண்டு போந்த தௌத்யமும், அர்ஜுநன் தன்காலாலே ப்ரேரிக்கப்பண்ணின ஸாரத்யமுமாகிற நீசக்ருத்யங்களைப் பண்ணுகையும், ஆயுதமெடேனென்று ஆயுதமெடுக்கையும், பகலை இரவாக்குகையும், கோவர்த்தநோத்தாரணம் பண்ணுகையும், அர்ஜுநனை நித்யவிபூதியருகே கொண்டுபோகையும், அவனுக்கு சரமோபாயத்தை யுபதேசிக்கையுமாகிற இவ்வாச்சர்யகுணங்களையுடையனான ஸர்வேச்வரனை. (ஆயனை) ஆயனானவனென்னவுமாம். மேற்சொன்ன குணசேஷ்டிதங்களையுடையனான க்ர்ஷ்ணனை யென்னவுமாம். (கண்டமை) அவ்வந்தகாரத்தைப்போக்கின ஜ்ஞாநதீபத்தாலே ஸாக்ஷாத்கரித்து அந்தத்தாழ்ச்சிப்ரகாரத்தை யெல்லாம். (காட்டும்) (திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழுமருக்கனணி நிறமும்கண்டேன், செருக்கிளரும், பொன்னாழிகண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன், என்னாழிவண்ணன்பாலின்று) என்றுதொடங்கி தாமிட்டருளின திவ்யப்ரபந்தத்தாலே காட்டியருளும்.

(தமிழ்த்தலைவன்) (பாலேய்தமிழர்) என்றும், (இன்கவி பாடும் பரமகவிகள்)என்றும், - மயர்வறமதிநலமருளப்பெற்றநம்மாழ்வாராலே கொண்டாடப்பட்ட த்ரமிடசாஸ்த்ரப்ரவர்த்தகரில் மூலபூதரான பேயாழ்வாருடைய. (பொன்னடிபோற்றும்)ப்ரபந்நஜநங்களுக்கெல்லாம் ஸ்பர்சநீயமான திருவடிகளை மங்களாசாஸநம்பண்ணுகிற சேஷத்வாநுரூபமாக வடிமைத்தொழில்செய்கைதவிர்ந்து, ஸ்பர்சநீயமாகையாலே ப்ரேமபரவசராய்க்கொண்டு மங்களாசாஸநம் பண்ணத்தொடங்கினார் காணும். போற்றுதல் - புகழ்தல். (இராமாநுசற்கு) எம்பெருமானார்விஷயமான.

http://acharya.org

(அன்புபூண்டவர்தாம்) ப்ரீதியையுடையவர்களுக்கு ஆபரணமாம்படி அலங்கரித்துக்கொண்ட மஹாத்மாக்களுடைய திருவடிகளை. (செவ்வியில்லுழும்) தங்களுடைய சிரஸ்ஸிலே செவ்விப்பூவைச்சூடு வாரைப்போலே தரிக்கும். (திருவுடையார்) ([illegible]) ([illegible]) ([illegible]) (கைங்கர்யஸம்ஸ்ரீமாந்) (லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்ந:) (அந்தரிக்ஷகதஸ்ஸ்ரீமாந்) என்கிற ஸம்பத்துக்கு ஸீமாபூமியான ஸம்பத்தையுடையவர்கள்.

(என்றும் சீரியரே) நித்யப்ராவண்யத்தை யுடையவராகையாலே அவர்கள் காலதத்வமுள்ளதனையும் ஸ்ரீமான்கள். ([illegible]) (ஸ்ரீமத்பகவதர்ச்சநம் பகவதங்க்ரியுகளிலே நெருங்கிநகம் ஸ்ரீவிஷ்ணோரவமாநநாத் குருதரம் ஸ்ரீவைஷ்ணவோல்லங்கநம்-தீர்த்தாதச்யுதபாதஜாத் குருதரம் தீர்த்தம் ததீயாங்க்ரிஜம் தஸ்மாந்நித்யமதந்த்ரிதோ பஜத பா தேஷ்வேவ ஸாதுதே) (தஸ்மாத்குருதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் த்பர:மமமத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகாபவேத்-தஸ்மாத்மத்பக்த பக்தாஸ்ச பூஜநீயாவிசேஷத:) என்னக்கடவதிறே. (திருமாலடியார்களைப் பூசிக்கநோற்றார்கள்) என்று ஆழ்வாரு மருளிச்செய்தாரிறே. அப்படியே, ([illegible]) (வாசாயதீந்த்ர) என்று தொடங்கி, ([illegible]) (பாதாரவிந்தபர ஸ்வைதநபுலேவம்) என்று இதொன்றையுமே ப்ரார்த்தித்தருளினாரிறே ஜீயரும்.

உரை.—ஆ.—பதினோராம்பாட்டு. திருப்பாணாழ்வார் திருவடிகளை சிரஸாவஹிக்கும் எம்பெருமானாரைத் தங்களுக்கு அபாச்ரயமாகப்பற்றியிருக்குமவர்களுடைய கார்யவைலக்ஷண்யம் இந்தலோகத்தில் என்னால்சொல்லித் தலைக்கட்டவொண்ணாதென்கிறார்.

௰௧.—சீரியநான்மறைச்செம்பொருள்செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப்பாண்பெருமாள்சரணாம்பதுமத்
தாரியல்சென்னியிராமாநுசன்றன்னைச்சார்ந்தவர்தம்
காரியவண்மையென்னாற்சொல்லொணாதிக்கடலிடத்தே.()

பதம்.	உரை.	பதம்.	உரை.
சீரிய	பகவத் ஸ்வரூப ரூப குணவிபூதிகளையுள்ளபடி ப்ரதிபாதிக்கையால் வந்த சீர்மையை யுடைத்தாய்,	நால்	சீரோதி பேதத்தாலே நாலுவகைப் பட்டிருக்கின்ற,
		மறை	வேதத்தினுடைய,
		செம்பொருள்	ஸ்வரஸமான அர்த்தத்தை,

http://acharya.org

பதம்.	உரை.
செந்தமிழா லளித்த	நடைவிளங்குதமிழ்மாலையாலே உபகரித்தருளினவராய்,
பாரியலும்	பூமியிலேவர்த்தியா நின்றுள்ள,
புகழ்	கீர்த்தியையுடைய,
பாண்பெரு மாள்சரணும்	திருப்பாணாழ்வார்திருவடிகளாகிற,
பதுமத்தார்	தாமரைப் பூவாலே,
இயல்சென்னி	அலங்க்ருதமான திருமுடியையுடைய,
இராமாநுசன்றன்னை	எம்பெருமானாரை,
சார்ந்தவர்தம்	அபாச்ரயமாகப் பற்றியிருக்குமவர்களுடைய,
காரியவண்மை	அநுஷ்டான வைலக்ஷண்யம்,
இக்கடலிடத்து	இந்தக்கடல்சூழ்ந்த பூமியில்,
என்னால்சொல் லொணாது	என்னால் சொல்லித் தலைக்கட்டவொண்ணாது.

இக்கடலிடத்தே - இராமாநுசன்றன்னைச்சார்ந்தவர் என்றதுக்கு வயித்து - பகவத்ஸமாச்ரயணத்துக்குக்கூட இசைவாகில்லாத இக்கலோகத்திலே, அதிலுடைய எல்லையிலத்தனையும் வந்து எம்பெருமானாரை ஆச்ரயிக்கப்பெற்றவர்களென்னவுமாம். பாரியல் என்றவிடத்தில், இயல்தல்-நடத்தல். தாரியல் என்றவிடத்தில், இயல்தல்-அலங்கரித்தல். தார்-பூ. காரியம்-க்ருத்யம். "காரியவண்மை" என்றுபாடமானபோது-காரினுடையஇயல்வையுடைத்தானஔதார்யமென்கை. அதாவது-ஜலஸ்தலவிபாகம்பாராதே அதுவர்ஷிக்குமாப்போலே ஸர்வவிஷயமாக எம்பெருமானாருடைய திவ்யகுணங்களைவர்ஷிக்கை. (கக

வ்யா.—அ.—பதினோராம்பாட்டு. இவ்வளவாக மூன்றுபாட்டாலும் முதலாழ்வார்கள்மூவருடையவும் ஸம்பந்தத்தையுடைய எம்பெருமானாரைக்கொண்டாடி, இப்பாட்டிலே-தமக்கு இவ்வளவான அதிகாரமுண்டாம்படி முதலடியிலேதம்மை விஷயீகரித்த பெரிய பெருமாளுடைய திருவடிகளிலே திருவவதாரமே பிடித்து இடைவிடாதே நிரவதிகப்ரவணராய், (இசைகாரர்) என்று நம்மாழ்வாராலே கொண்டாடப்பட்ட மதுரகவியவைபவத்தையுடையரான திருப்பாணாழ்வார்திருவடித்தாமரைகளிலே நிரவதிகப்ரவணரான எம்பெருமானாரை ஆச்ரயித்தவருடைய அநுஷ்டானம் இத்தமஸ்ஸாப்ரக்ருதியிலே என்னால் சொல்லித்தலைக்கட்டப்போகாதென்கிறார்.

வ்யா.—(சீரியநான்மறைச்செம்பொருள்) (ஸ்ரீமத்ருக்ஸாமாதிநோ) (ஸாரஸ்ரீமத்ரத்னதாம்) என்று ஸத்துக்களுக்கு ஸம்பத்தாய், நிரவத்யஸ்வரமாதர்வணரூபேண நாலுவகைப்பட்டிருக்கிற

http://acharya.org

வேதங்களிலுள்ளவைத்துக்கொண்டு, ([illegible]) (அகாரமகாரவுகாரங்க ளாகாரஸாரதாரத்வமேதத் - பவேத்தாகாரதாரஸாந்த்ரம் ஈத்காரகாரஇவ ம்சத்தம் - அநுப்யஸ்சமனுதத்ப்யஸ்ச சாஸ்த்ரேப்யோ ஸமாமித்யக்ஷர- னர்வதன்னாசமாதத்வாத்புஷ்பேப்ய இவஷட்பதா:) என்றும், ([illegible]) (ச்ருதிபதவிபரீ தம் க்ஷ்வேளகல்பம் ச்ருதெளச ப்ரக்ருதிபுருஷெளஸ்ரபரம்ஸேசஸ ந்தப்ப:-தநிஹனிப்பருப்தம் ம்ர்த்யுபிஸ்ரவிஜ்வக்த்யுபவிஷ்டம்ஸ்ரப் த்தெருத்தமமுனாஸமார்யா:) என்றுஞ்சொல்லுகிறபடியே பசதேவ னாதமமா யிருக்குமன்ன திருமந்த்ரத்தினுடைய ப்ரக்ருதியான ப்ர ணவத்தினுடைய அவயவங்களான அகார உகார மகாரங்களுடைய அர்த்தவிசேஷங்களை.

(செந்தமிழால்) (அமலனாதிபிரான்) என்றும், (உவந்தவுள்ளத்தனாய்) என்றும், (மந்திபாய்வடவேங்கடமாமலை) என்றும் தம்முடைய ப்ரபந்தமியான மூன்றுபாட்டுக்களுடைய முதலடியிலே ஸாரமாக அர்த்தவிசேஷப்ரதிபாதகங்களாயிருக்கையாலே லைவேதலாரமென்று சலமிக்கப்படுகிற அஷரத்தையுங்கூட்டி ஸந்தர்ப்பித்த ப்ரபந்தத்தாலே. (அளித்த) ஸர்வரையும் ரக்ஷித்தருளினவராய். (பாரியலும்புகழ்) அகண்டமான பூமண்டலத்திலே வ்யாபித்த கல்யாணகுணங்களையும் கீர்த்தியையுமுடையராய். இயலுதல்-நடத்தல். (பாண்பெருமாள்) (இசைகாரர்) என்கிறபடியே தந்த்ரீலயங்களை அடையவறிந்து, ([illegible]) (எதத் ஸாமகாயந்நாஸ்தே) என்றாப்போலே பெரியபெருமாளுக்கு உகப்பாம்படி இனிதாகப்பாடுமவராகையாலே அந்தஇசைகளை தமக்கு நிரூபகமாகவுடையராய் மதுராநுபாவரான திருப்பாணாழ்வாருடைய.

(சரணாம் பதுமத்தாரியல்சென்னி) ([illegible]) (திருப்பாதாம்புஜம்தலைவைத்) என்றும், ([illegible]) (பவத்பதாப்ஜே ஸ்ரீர்ஷ்டரஜ்ஞநீதம்மனுஷ்யமமஸ்யப்ருத்வி:) என்றுஞ்சொல்லுகிறபடியே போக்யதமமான பாதபத்மத்தாலே, ஸ்ரீடாதிஸேரஷணங்களாலே தந்தாமுடைய சென்னிக்களை அலங்கரித்துக்கொள்ளுமாப்போலே அலங்கரிக்கப்பட்ட உத்தமாங்கத்தையுடையராய். (இராமாநுசன்தன்னை) இப்படி தீயப்ரபாவவ்யலிமாபூமியான எம்பெருமானாரை. (சார்ந்தவர்தம்) அபாச்ரயமாகப் பற்றியிருக்குமவர்களுடைய.

http://acharya.org

(காரியவண்மை) (ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நாந்) (ஸம்ப்ரதாயபரா ந்குருந்ஸேவேத) என்கிறபடியே ஸம்ப்ரதாயவித்தமாகக்கொண்டு, (கர்த்தவ்யம் ஆசார்யகைங்கர்யமும், பகவத்கைங்கர்யமும்) என்று உபதேசிக்கப்பட்ட அநுஷ்டாநமெனுஷ்டவம். ஸர்வப்ரபந்நருக்க ளுக்கும் இதொன்றுமே கர்த்தவ்யமென்று தெரியும்படி வெளிச் செறிப்பாகப்பண்ணினவர்களைப்போலே அவர்களுடைய இப்படி ப்பட்ட ஔதார்யத்தை யென்றபடி.

(என்னாற்சொல்லொணாதிக்கடலிடத்தே) சதுஸ்ஸமுத்ரபரிவே ஷ்டிதமான பூலோகத்திலே அவர்களுடைய ப்ரபாவத்தை என்னபடி யறியமாட்டாத என்னாலே சொல்லித்தலைக்கட்டவரிதாயிருக்கும். பதுமத்தார்-தாமரைப்பூ. இயல்தல்-அலங்கரித்தல்-காரியம்-கர்த்தவ்யம். (இக்கடலிடத்தே) என்கிறவாக்யத்தை, (இராமாநுசன்றன்னைச்சார்ந்தவர்தம்) என்கிறவாக்யத்தோடே கூட்டி அந்வயித்த போது பகவத்ஸமாச்ரயணத்துக்கும்கூட இசைவாரில்லாத இந் த்தருமாநுஷலத்திலே அறிவுடைய எல்லைநிலமான எம்பெருமானார்திருவடிகளை ஆச்ரயிக்கப்பெற்றவர்களுடைய ப்ரபாவம் என்னால் சொல்லித்தலைக்கட்ட அரிதாயிருக்குமென்றபடி. (காரியவண்மை) என்று பாடமானபோது, கார்-வர்ஷாகாலமாம்; அறிவுடைய இயலாவது-இலக்கண விபாகம்பாராதே ஏகரூபமாக வர்ஷிக்கை. வண்மை-அம்மேகம்போலே ஸர்வஸுலபமாகவும் எம்பெருமானுடைய திவ்ய குணங்களை வர்ஷிக்கையாகிற ஔதார்யத்தையென்றபடி.

இராமாநுசன்றன்னைச்சார்ந்தவர்தம்காரியவண்மை என்றது. போதாயநவ்ருத்தியை ஸக்ருத்ச்ரவணத்தாலே ஆநுபூர்வ்யமாக க்ரஹித்தும், க்ருமிகண்டன் நதியிலேசென்று குத்ருஷ்டிகளை ப்ரமாண முகத்தாலே ஜயித்தும் கீர்வாணபோஷகராயிருந்துள்ள ஆழ்வானும், எம்பெருமானார் மேல்நாட்டிலே திக்விஜயம்பண்ணியருளி கோயிலேறவெழுந்தருளுகிறபோது மார்க்கத்திலே ஒரு அக்ரஹாரத்திலே மாயாவாதி வித்வாக்கள் அநேகம்பேர் திரண்டிருக்க அவர்களைக்கடாக்ஷித்து எல்லாரையும் ஸ்ரீவைஷ்ணவராம்படி திருத்தவேணுமென்று திருவுள்ளம்பற்றி, ஆண்டானைக்கடாக்ஷித்து, நீர் போய் அவர்கள் ஸ்நாநம்பண்ணுகிற துறையிலே நித்யம் ஸ்ரீபாதத்தை விளக்கிக்கொண்டுவாரும் என்றருளிச்செய்ய; அவரும் அப்படியே பண்ண; பின்பு அத்தீர்த்தபாநத்தாலே அத்தமாயாவாதிக ளெல்லாருக்கும் துர்வாஸனைபோய் ஆபிமுக்யம்பிறந்து எம்பெருமானார்திருவடிகளிலே ஆச்ரயித்தார்களென்று குருபரம்பராப்ரபாவத்திலே சொல்லப்பட்ட முதலியாண்டானும், கைங்கர்யதாக்ஷ

http://acharya.org

ஸாரமான திருவாய்மொழிக்கு வ்யாக்யாநம்பண்ணின பின்பானும், திருவேங்கடமுடையான் விஷயமாக, (ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்) என்று ஆழ்வார் ப்ரார்த்தித்தருளின கைங்கர்யத்தைப் பண்ணிக்கொண்டு போர நாமாக ஒருதடாகநிர்மாணம்பண்ணுகிறபோது, திருவேங்கடமுடையான்தானே நம்மோடொக்க மண்தட்டைச்சுமந்துகொண்டுவந்து ஸஹாயம்பண்ணும்படி அப்ரதிமப்ரபாவரான அநந்தாழ்வானும், ஒருகால்வரையிலே எம்பெருமானுடைய கோஷ்டிக்குப்போரும்படியாக ததீயாராதநம்பண்ணின பருத்திக்கொல்லையம்மாள்தேவிகள் முதலானவர்களுடைய ப்ரபாவத்தை பாகமிட்டுச் சொல்லப்போமோ? வாசாமகோசரமென்றபடி.()

உரை.—அ.—பன்னிரண்டாம்பாட்டு. திருமழிசைப் பிரானுடைய திருவடிகளுக்கு ஆவாஸமான திருவுள்ளத்தையுடைய எம்பெருமானாரை யாச்ரயிப்பார்க்கொழிய ஸ்நேஹியாதவர்கட்கோ தான் ஸ்நேஹித்திருப்பதென்கிறார்.

மூ.-இடங்கொண்டகீர்த்திமழிசைக்கிறைவனிணையடிப்போ
தடங்குமிதயத்திராமாநுசனம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சுந்திருமுனிவர்க்கன்றிக்காதல்செய்யாத்
திடங்கொண்டஞானியர்க்கேயடியேனன்புசெய்வதுவே (சஉ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இடங்கொண்ட	பூமியெங்கும் வ்யாப்தையான	என்றும்	ஸர்வகாலத்திலும்,
கீர்த்தி	குணவத்தா ப்ரதையையுடையரான,	கடங்கொண்டு	ஸ்வரூபப்ராப்தமென்றநுஸந்தித்து,
மழிசைக்கிறைவன்	திருமழிசைப் பிரானுடைய,	இறைஞ்சும் திரு	வணங்குகை யாகிற ஸம்பத்தை யுடையராய்,
இணை	சேர்த்தியழகையுடைத்தான,	முனிவர்க்கன்றி	தத்விஷயமநநசீலராயிருக்குமவர்களுக்கொழிய,
அடிப்போது	திருவடிகளாகிற செவ்விப்பூக்கள்,	காதல்செய்யா	ஸ்நேஹத்தைப்பண்ணாத,
அடங்கும்	தன்னுள்ளே யடங்கும்படியான,	திடங்கொண்ட ஞானியர்க்கே	த்ருடதாஜ்ஞாந யுக்தர்க்கே,
இதயத்து	திருவுள்ளத்தை யுடைத்தாயிருக்கிற,	அடியேன் அன்புசெய்வது	அடியேன் ஸ்நேஹத்தைப் பண்ணுவது.
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,		
அம்	விலக்ஷணமாய்,		
பொன்	ஸர்வ ஸமாச்ரயணீயமான,		
பாதம்	திருவடிகளை,		

கடம் - கடன்; ப்ராப்தம். திடம் - த்ருடம். கொள்கை - உடைத்தாகை. ... ... (சஉ)

http://acharya.org

அ.—பன்னிரண்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டாலும்-ஆழ்வாருடைய ஸம்பந்தத்தைவிட்டு எம்பெருமானை அநுபவிக்கும்ப்ரகாரமாகையாலே முதலாழ்வார்களோடே ஸமகாலராய் பேயாழ்வாருடையப்ரஸாதத்தாலே தத்வஹிதபுருஷார்த்தயாதாத்ம்யஜ்ஞாநரான திருமழிசையாழ்வாருடைய பரஸ்பர ஸத்ர்சமான திருவடிகளைத் தம்முடைய திருவுள்ளத்திலே சிறந்திக்கொண்ட எம்பெருமானாருடைய பரமபோக்யமான திருவடிகளை ஆச்ரயித்தவர்களுக்கொழிய வேறொருவர்க்கு விதேயமாகாத த்ர்டாத்யவஸாயபரரான ஜ்ஞாநிகளுக்கு அடியேன் பக்தனாகின்றேனென்கிறார்.

வ்யா.—(இடங்கொண்டகீர்த்தி) பூமியெங்கும் வ்யாப்தமான ஜ்ஞாநவைராக்யத்தையுடைய மாஹாத்ம்யத்தை சோதிப்பதாக ருத்ரன் பார்வதியோடேகூடக்கொண்டுவந்து அநேகமாக ஸம்வாதித்து இவருடைய ப்ரபாவத்தைக்கண்டு ஆச்சர்யப்பட்டுப்போனானென்றும், காஞ்சிநகரத்திலே ஒருவ்ருத்தஸ்த்ரீ இவரை அநுவர்த்தநம்பண்ணினவாறே அவளுக்கு யௌவநஸௌந்தர்யாதிகளைக் கொடுத்தாரென்றும், அப்படியே இவ்வாழ்வாருடைய நகரத்தில் நின்றும் க்ஷுத்ரோபத்ரவ வ்யாஜேந தங்களை நிக்ஷேபப்போகத் தொடங்க அக்காலத்திலே அங்கேபள்ளிகொண்டருளின எம்பெருமானும் இவருடனேயெழுந்தருளுவதாகப்புறப்பட அவரும் அதைக்கண்டு அவ்விடத்திலேதானே யிருக்கவேணுமென்றருளிச்செய்ய, அப்படியே அந்த எம்பெருமானும் இவர்சொன்னபடிசெய்து, "சொன்னவண்ணஞ்செய்த பெருமாள்" என்று ஸர்வலோகப்ரஸித்தமாய்க்கொண்டு அதுவே நிரூபகமாம்படி யிருந்தானென்றும், சோழமண்டலத்திலே ஒரு அக்ரஹாரத்திலே இவரெழுந்தருள; வீதியிலே அத்யயநம்பண்ணுகிற சில ப்ராஹ்மணர்கள் இவரைக்கண்டு அத்தைநிறுத்தி இவர் புறம்பேசென்றவாறே அந்தப்ராஹ்மணருக்கு தாலயம் தெரியாதேபோக, இதென்ன என்று ஆச்சர்யத்துடனே இவரைப்போயழைக்க, இவரும் கறுப்புநெல்லையெடுத்து உகிராலே உரிக்க அத்தைக்கண்டு அந்த ப்ராஹ்மணருக்கு மேல்தோற்றித்து என்றும் ப்ரஸித்தமிறே; இவ்வ்ருத்தாந்தங்களையெல்லாம் அநுஸந்தித்து "இடங்கொண்டகீர்த்தி" என்கிறார்.

(இடங்கொண்டகீர்த்தி)(கிற்பதுமோர்வெற்பகத்து) என்கிற பாசுரப்படியே ஸர்வதிக்குக்களிலும் வ்யாப்தையான கீர்த்தியையுடையரான. (மழிசைக்கிறைவன்) திருமழிசையென்கிற திவ்யதேசத்துக்கு ஸ்வாமியாய் அதுவே நிரூபகமாகவுடையரான திருமழிசைப்பிரானுடைய. (இணையடிப்போது) பரமபோக்யமாய்

http://acharya.org

பரஸ்பரஸத்ருசமான திருவடிகளாகிற பத்மங்கள். பொற்பதம்-பத்மம். (அடங்குமிதயத்து) அனுபவஸமயத்திலே மறைந்தான அத்திருவடிகள் அடங்கும்படி அமைத்துக்கொள்ளுகிற ஹ்ருதயப்ரதேசத்தையுடையரான. (இராமாநுசன்) எம்பெருமானாருடைய.

(அம்பொற்பதமென்றும்) ஸௌந்தர்யத்துக்கு கொள்கலமாகையாலே அதிவிலக்ஷணமாய் ஸ்ப்ருஹணீயமாகையாலே ஸர்வர்க்கும் ஸமாச்ரயணீயமாயிருக்கிற திருவடிகளை ஸர்வகாலத்திலும். (கடங்கொண்டிறைஞ்சும்) ([illegible]) ([illegible]) (கவலையால் அதத்பக்ஷபரிச்சய ஸதாத்மாசம்) (குரு சேவாபரமோ தர்ம) என்றும், "(நீக்கமில்லா அடியார் தம் அடியார் அடியார் எங்கோக்கள் அவர்களுக்கே குடிகளாய்ச் செல்லும் நல்லகோட்பாடே) என்றும் சொல்லுகிறபடியே ப்ராப்யமென்று அத்யவஸித்து ஆச்ரயிக்கும். கடம்-ப்ராப்யம். கொள்கை-அத்யவஸிக்கை. (திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யா) இப்படிப்பட்ட ஸ்வபாவத்தையுடையராய்க்கொண்டு, அதில் உபகாரஸ்ம்ருதியாலே அத்தையே மநஸ்ஸிலே பண்ணிக்கொண்டிருக்கிற ஜ்ஞாநாதிகர், ([illegible]) (தீர்விக்கவின்றிஞ்சாநிதிஸ்வகாவிபூதய:- ராமாநுஜபதாம்போஜ ஸமாச்ரயணசாலிந:) என்னும்படியானவர்களுக்கொழிய மற்றொருவருக்கு ச்ருதிஸ்ம்ருதிஇதிஹாஸ புராணங்களிலே அதிசயேனமான ஸாமாந்யவிஷயத்திலே பண்ணப்படும் ஸ்தோத்ரத்தைப்பண்ணாது. (இடங்கொண்டஞானியர்க்கே) ஸ்தைர்யத்தையுடையரான ஜ்ஞாநாதிகர்க்கே. இடம்-ஸ்தைர்யம். கொள்கை-உடைத்தாகை. ஒருநாள் வாரையிலே அழகியமணவாளர் வாஹனத்துடனே எம்பெருமானார் மடத்தருகே எழுந்தருள எம்பெருமானாரும் திருவீதியிலே யெழுந்தருளி அவரைத் திருவடித்தொழுது மடத்திலே யெழுந்தருளவும் நம்பி அவரைத் திருவடித்தொழாதே அங்கே தானே யிருக்கையாலே அத்தைக்கடாக்ஷித்து, "நம்பெருமானை சேவிக்க ஏங்காணும்வரவில்லை, என்ன; அவரும் தேவரீருடையபெருமானை சேவிக்கப்போனால் அடியேனுடைய பெருமானுக்குக்காய்ச்சின பால் பொங்கிப்போகாதோ என்றார்" என்று ப்ரஸித்தமிறே.

க்ருமிகண்ட உபத்ரவத்துக்காக எம்பெருமானார் மேல்நாட்டுக்கெழுந்தருளினபின்பு ஆழ்வான் அக்ரப்ரயாணுடைய கைதவ்விலே புகுந்து அங்குண்டானதுர்ச்சேஷ்டிதங்களை ஸஹித்து திரும்பவும் கோயிலுக்கெழுந்தருளி அங்கேயிருக்கிறகாலத்திலே ஒருநாள் பெரியபெருமாளை சேவிப்பதாகக் கோயிலுக்குள்ளே எழுந்தருள, திருக்கோபுரத்வாரத்திலே யிருக்கிற ராஜபடர் இவரைப்

http://acharya.org

பார்த்து,"ராமாநுஜஸம்பந்தமுடையா ரொருவரையாகிலும்கோயி லுக்குள்ளே புகவிடவேண்டா" என்றுராஜாஜ்ஞையைத்தான்சொல்ல, வேறுசிலர் அப்படியேயாகிலும் இவர் ஞானாதிகர், உள்ளேபு குரவிடுங்கோளென்ன; இவரும் அவர்களுடைய உக்திப்ரகாரத் தைக்கேட்டருளி தம்மைப்போரவெறுத்து உடனே காலடியிற் காலித்து, எம்பெருமானார் ஸம்பந்தத்துக்குப்புறம்பான ஞானா திகளும் இந்தப்பகவத்சேவையும் நமக்குவேண்டாவென்று அன்று முதலாகக்கொண்டு எம்பெருமானார் திரும்பவும் கோயிலுக்கெழுந் தருளுமளவாக்கும் பெரியபெருமாளைத் திருவடித்தொழாதே இருந் தாரென்றும் ப்ரஸித்தமிறே. இப்படிப்பட்ட க்ருதஜ்ஞதையையுடைத் தான ஞானாதிகருக்கென்றபடி. (அடியேனன்புசெய்வதுவே) (அடியேன்) இப்படி ததீயபர்யந்தமான சேஷத்வஜ்ஞானமுடையவனா னேன். (அன்புசெய்வதுவே) ஸ்நேஹித்துக்கொண்டிருப்பதென் கிறார். ([illegible] [illegible]) (வாசாயதீந்த்ர மனஸாவபுஷாசயுஷ்மத் பாதாரவிந்தயுகளம் பஜ தாம்குரூணாம்-கூராதிநாதகுருகேசமுகாத்யபும்ஸாம்பாதாநுசிந்தன பரஸ்ஸததம்பவேயம்) என்று இத்தையே ஜீயரும் ப்ரார்த்தித் தாரிறே. ... ... (கங)

உரை.—அ.—பதின்மூன்றாம்பாட்டு. ஸ்ரீதொண்டரடிப்பொ டியாழ்வார் திருவடிகளையொழிய மற்றொன்றில் ஆதரமற்றிருக்கும் எம்பெருமானார் திருவடிகளே நமக்குப்ராப்யமென்கிறார்.

கச.—செய்யும்பசுந்துளபத்தொழில்மாலையுஞ்செந்தமிழில்
பெய்யும்மறைத்தமிழ்மாலையும்பேராதசீரரங்கத்
தையன்கழற்கணியும்பரன்றாளன்றியாதரியா
மெய்யனிராமாநுசன்சரணேகதிவேறெனக்கே. (கச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செய்யும்	* மிக்க சீர்த்தொண்டரான தம்மாலே செய்யப்பட்ட தாய்,	தொழில்	வகுப்புண்டாகச் சமைத்த,
		மாலையும்	திருமாலையும்,
		செம்	ஸ்வார்த்த ப்ரகாசகமான,
பசும்துளபம்	தம்முடையகளில் பச்சைத்தாலேயர்த்து துக்கணிப் பெல்லாம் சிறந்திலே கணைமைப்படி யிருக்கிற திருத்துழாயாலே,	தமிழ்	தமிழிலே,
		பெய்யும்	உண்டாக்கப் பட்டதொரு,
		மறை	வேதமென்னலான,
		தமிழ்மாலையும்	தமிழ்த் தொடையும்,

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
பேராத	"வீடில்சீர்" என்கிறபடியே நித்யஸித்தமான,	பரன் தாளன்றி	சேஷத்வத்துக்கு தமக்குமேற் பட்டாரில்லை யென்னும்படி யிருக்கிற ஸ்ரீதொண்டரடிப் பொடியாழ்வாருடைய திருவடிகளையொழிய,
சீர்	கல்யாணகுணங்களை யுடையராய்க் கொண்டு,	ஆதரியா	விரும்பாத,
அரங்கத்து ஐயன்	"ஐயனே யரங்கனே" என்னும்படி பரம பந்துவாய்த் தோற்றக் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமானுடைய,	மெய்யன்	ஸத்யசீலரான,
		இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
		சரணே	திருவடிகளே,
கழற்கு அணியும்	திருவடிகளுக்குச் சாத்துமவராய்ச் சேஷத்வ காஷ்டையிலே நிலைநிற்கையாலே,	எனக்கு	எனக்கு விசேஷித்து
		வேறுகதி	ப்ராப்யம்.

பெய்தல் - உண்டாக்குதல். பேராமை-நீங்காமை. ... (கங)

அ.—பதின்மூன்றும்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-திருமழிசையாழ்வாருடைய ஸம்பந்தத்தைவிட்டு எம்பெருமானாரைக் கொண்டாடி, இப்பாட்டிலே நாம் முக்குற முன்னம் தொண்டுபட்ட பெரியபெருமான்திருவடிகளிலே அதிப்ரவணராய், "மற்றுமோர்தெய்வமுண்டே" என்று-அவனையொழிந்த எம்பெருமான்களைவிரும்பாத பாதிவ்ரத்யத்தையுடையரான ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாருடையதிருவடிகளையொழிய வேறொன்றிலே ஆதரமற்றிருக்கிற எம்பெருமானார்திருவடிகளே எனக்கு ப்ராப்யமென்கிறார்.

வ்யா.—(செய்யும் பசுந்துளபத்தொழில்மாலையும்) * மிக்க சீர்த்தொண்டராய தம்மாலே, வைஜயந்திவநமாலையென்றும், வம்பவன்மாலையென்றும் அநுபோக்தாக்களாலே உல்லேகிக்கும்படி ஸந்தர்ப்பிக்கப்பட்டதாய் தம்முடைய ஸாம்பர்சத்தால் வந்த புதுக்கணிப்பெல்லாம் நிறத்திலே காணலாம்படியான பசுமையையுடைத்தான திருத்துழாயாலே வகுப்புண்டாகச்சமைத்த திருமாலையும். * தொடையொத்த துளபமுங்கூடையும்பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடி என்னுமிவர், தம்மைத் தாமே நிரூபித்துக்கொள்ளவல்லரிறே. (செந்தமிழிற்பெய்யும் மறைத்தமிழ்மாலையும்) * அருமறைகள்போலே த்ரைவர்ணிகாதிகாரமாயிருக்கையன்றிக்கே பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கலாம்படி ஸர்வாதிகாரமாய் அக்லேசபோப மதர்த்தவைக்க

http://acharya.org

களாலே ப்ரமத்தை விகஸிப்பித்தும் ஸ்வார்த்தத்தை யறிவதற்கு றுசவலாதுங்களையு மிருக்கையன்றிக்கே, ஸாரதமார்த்தப்ரகாசகமாய் த்ராவிடபாஷையாலே நிர்மிக்கப்பட்ட திருவேதமென்னு மிருக்கும்படியாயிருப்பதாய் திருமாலையென்னும் பேரையுடைத்தான தமிழ்மாலையையும். செய்தல் - உண்டாக்குதல்.

(பேராதரிசக்கத்தையன்) ([illegible]) ([illegible]) ([illegible]) (பராஸ்யசக்திர்விவிதைவச்ரூயதே ஸ்வாபாவிகீஜ்ஞாநபலக்ரியாச) (யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்) (நித்யோநித்யாநாம்சேதநச்சேதநாநாம் ஏகோபஹூநாம்யோவிததாதிகாமாந்) என்றும், (ஈறில வண்புகழ் நாரணன்) என்றும் சொல்லுகிறபடியே ஹேயப்ரதிபடங்களாய் நித்யங்களாயிருக்கிற கல்யாணகுணங்களையுடையவனாய், ([illegible])(மாதாபிதாப்ராதாநிவாஸஶ்ஶரணம்ஸுஹ்ருத்கதி:) என்றும், ([illegible])(பிதாஸிலோகஸ்யசராசரஸ்ய) என்றும், ([illegible]) (பிதாப்ராதாசமாதாசமாதுல:) என்றும் (தாயாய்த்தந்தையாய்) என்றுஞ் சொல்லுகிறபடியே ஸர்வவிதபந்துத்வம் தோற்றும்படி. கோயிலிலே கண்வளர்ந்தருளின பெரியபெருமாள். (ஐயனே அரங்கனே) என்று இவரும் தம் ப்ரபந்தத்திலே யருளிச்செய்தாரிறே.

(அரங்கத்தையன்) அந்தஸ்தலத்தைவிட்டு அவர்தம்மை பிரிக்கவேண்டும்படி காணும் இவர்தமக்கு அதிலே ப்ராவண்யாதிசயமிருப்பது. பேராமை - நீங்காமை. அப்படிப்பட்டவருடைய (கழற்கணியும்) திருவடிகளுக்கு அலங்காரமாக வமைப்பித்த. (பரன்) சேஷத்வத்துக்கு தமக்குமேற்பட்டாரில்லையென்னும் படி அதினுடைய சரமாவதியிலே நிற்கையாகிற அதிகாரத்தைப் பெற்று உத்க்ருஷ்டரான ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாருடைய. (தொண்டரடிப்பொடியென்னு மடியனை அளியனென்றருளி உன்னடியார்க்காட்படுத்தாய்) என்று சேஷத்வத்தினுடைய சரமாவதியை யிறே இவர் ப்ரார்த்தித்தது. (தாளன்றி) திருவடிகளை யொழிய. இவர்கோடியான ஆழ்வார்களுடையவும் பெரியமுதலியார்தொடக்கமான ப்ரபந்நருடையவும் திருவடிகளையொழிய வென்றபடி. (ஆதரியாமெய்யன்) வேறொருவரைத் தாரகத்ர கிஞ்சிட்டனை விரும்பாத ஸத்யசீலரான. யதாத்ருஷ்டார்த்தவாதித்வம் ஸத்ய சீலத்வம். ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை தாம் அவனுக்கு பர்யங்கமாயிருக்கிற தசையிலே கண்டபடியே அவதாரத்திலே ஸ்ரீபாஷ்யத்தை யருளிச்செய்த ஸத்யசீலராகையாலே (மெய்யன்) என்கிறார்.

http://acharya.org

(இராமாநுசன்) எம்பெருமானாருடைய. (சரணேகதிவேறெனக்கே) திருவடிகளே என்ற அவதாரணத்தாலே - அநந்யகதித்வஞ்சொல்லிற்று. (எனக்கே) வேறொருத்தர்க்கும் விசேஷித்தைப் பண்ணமாட்டாத அகிஞ்சநனான அடியேனுக்கு திருவடிகளே விசேஷித்து உபாயமும் உபேயமுமென்றபடி. ([illegible]) (உபாயோபேயபாவேந தத்வதஸ்ஸர்வதேஹிநாம் - ஸேவ்யம்ஸ்ரீமத்பதாம்போஜம் யதிராஜபாதயுகளம்) என்னக்கடவதிறே. ... ... (கங)

உரை.—அ.—பதினாலாம்பாட்டு. ஸ்ரீகுலசேகரப் பெருமாளுடைய திவ்யஸூக்தியைப் பாடுமவர்களையேத்துமெம்பெருமானார் என்னைப்பிரியாமையாலே புருஷார்த்தலாபத்துக்காக ஆரம்பங்களை தங்களை அநுஷ்டிக்கும் ஸ்வபாவம்போகப்பெற்றேனென்கிறார்.

மூ.—கதிக்குப்பதறிவெங்கானமுங்கல்லுங்கடலுமெல்லாங்,
கொதிக்கத்தவஞ்செய்யுங் கொள்கையற்றேன் கொல்லிகாவலன்
சொல், பதிக்குங்கலைக்கவிபாடும் பெரியவர்பாதங்களேதுதிக்கும்
பரமனிராமாநுசனென்னைச்சோர்விலனே. (கச)

பதம்.	உரை.
கொல்லிகாவலன்	ஸ்ரீகுலசேகரப் பெருமாள்,
கலைச்சொல் பதிக்கும்	சத்தங்களைப் பதித்தாப்போலே சந்தரச்சொற்களைப்பதித்த,
கவி	கவிகளை,
பாடும்பெரியவர்	ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடாநின்றுள்ள வைபவத்தை யுடையவர்களுடைய,
பாதங்களே துதிக்கும்	திருவடிகளை ஏத்துமவராய்,
பரமன்	பாகவத விஷயப்ராவண்யத்துக்கு மேற்பட்டார் இல்லாதபடி யிருக்குமவர்,
இராமாநுசன்	எம்பெருமானார்,

பதம்.	உரை.
என்னைச் சோர்விலன்	என்னைவிட்டு நீங்குகிறிலர்; ஆதலால்,
கதிக்குப் பதறி	ப்ராப்ய லாபத்தைப் பற்றத்வரித்து, (பொருப்பிடையே நின்றும் புனற்குளித்தும் ஐந்து நெருப்பிடையே நிற்கவும்) என்றபடியே
வெம்	அத்யுஷ்ணமான,
கானமுங் கல்லுங்கடலும்	காட்டோடு மலையோடு கடலோடு வாசியற, எல்லாவிடத்திலும்,
எல்லாம் கொதிக்க	எல்லா வஸ்துக்களும் ஒக்கநின்று கொதிக்கும்படியாக,
தவஞ்செய்யுங் கொள்கையற்றேன்	தபஸ்ஸுக்கள் பண்ணும் ஸ்வபாவம் போகப் பெற்றேன்

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.

அன்றிக்கே, (வெங்கானமும் கல்லும் கடலும் எல்லாங்கொதிக்கத்தவஞ்செய்யும் கொள்கை) என்றதுக்கு - இவனுடையதபஸ் க்ஷேத்ரத்தைக்கண்டு அவைதானும் வெந்து பரிதபிக்க அவ்வவ ஸ்தலங்களிலே தபஸ்ஸைப்பண்ணும் வ்யாபாரமும் என்றுஞ்சொல்லுவர்கள். (கொல்லிகாவலன் சொல் பதிக்குங்கலைக்கவி) என்றதுக்கு-ஸ்ரீகுலசேகரப்பெருமாள் அநுபவபரீவாஹரூபமான ஸூக்திகளை ரத்நங்களைப்பதித்து வைத்தாற்போலே சேர்த்து வைத்தாய் சாஸ்த்ரரூபமா யிருக்கின்ன கவிகளென்னவுமாம். கொள்கை-வ்யாபாரம். சோர்வு - பிரிவு. சோர்விலன் - பிரிவிலனென்றபடி. ... ... (௧௪)

அ.—பதினாலாம்பாட்டு. இவ்வெம்பெருமானார் தம்முடைய பூர்வாவதாரத்திலே தாம் ஈடுபட்ட சக்ரவர்த்தித்திருமகன் விஷயத்திலே அதிவ்யாமுக்தரான ஸ்ரீகுலசேகரப்பெருமாள், ([illegible]) (ஸூத்ரேமணிகணாஇவ) என்னும்படி முகமறிந்தவர்கள் மாணிக்கங்களைக் கோக்குமாப்போலே சாஸ்த்ரஞ்சொல்லுங்களைப்பதித்து தம்முடைய திவ்யஸூக்திகளாலே நிர்மித்த திவ்ய ப்ரபந்தங்களை அநுஸந்திக்கும் பெரியோர்களுடைய திருவடிகளை ஸ்துதிக்கும் எம்பெருமானார் என்னைவிடமாட்டார், ஆனபின்பு புருஷார்த்தஸாதநத்துக்காக அப்ராப்தங்களான ஸாதநாந்தரங்களை அநுஷ்டிக்கும் வ்யாபாரம்போகப் பெற்றேனென்கிறார்.

வ்யா.—(கொல்லிகாவலன் சொல்பதிக்கும் கலைக்கவி) கொல்லிநகரென்று சொல்லப்படுகிற திருவஞ்சிக்களத்துக்கு ரக்ஷகரான ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சாஸ்த்ரச்சொல்லுக்களினுடைய தாத்பர்யவிஷயபூதங்களா யிருக்கிற பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளையும் தத்வஹிதபுருஷார்த்தங்களையும், முத்துக்களையும் ரத்நங்களையும் முகமறிந்துகோக்கும் வித்தரைப்போலே விசதமாக தத்தத்ஸ்தாநங்களிலேசேர்த்து, (இருளிரியச்சுடர்மணிகள்) என்றுதொடங்கி, (நலந்திகழ்நாரணனடிக்கீழ் நண்ணுவார்) என்றுமளவாக திவ்யப்ரபந்தரூபேண அருளிச்செய்த போக்யமானகவிகளை. காவலன் - ரக்ஷகன். (பாடும்பெரியவர்பாதங்களே) தங்களுடைய ப்ரீதிக்குப் போக்குவீடாகப் பாடாநின்றுள்ள வைபவத்தையுடையரான நாதமுநிகள், ஆளவந்தார், பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருவரங்கப்பெருமாளரையர், திருமாலையாண்டான்முதலான ஆசார்யர்களுடைய திருவடிகளையே. (துதிக்கும்பரமன்) ([illegible]) (குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர்நாம ஸதா ஜபேத்-

http://acharya.org

குபேரைச்வர்யதாஸ்சகநபேத் குபேராக்ஷயமப்யலபேத்-அர்ச்சிஷ்யம் சவர்த்யஸ்ஸமேர்த்தகீயஸ்ஸர்வதா) என்கிறபடியே ஐச்வர்யத்தை ஸம்பன்னிக்கொண்டுபோக்க, அத்தபாகயதிஷ்டைக்கு மேற்பட்டதில்லையென்னும்படி உத்கர்ஷ்டரான. (மயமேதும்-எம்மையாளும்பரமர்) என்றும், (நம்மையளிக்கும் பிரானர்) என்றும் மயர்வறமதிநல மருளப்பெற்றவரும் அப்படியே யருளிச்செய்தாரிறே. (இராமாநுசனென்னைச்சோர்விலனே) (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னை) பாகதஸ்வீகாரமாக அங்கீகரிக்கப்பட்ட என்னை. ((சோர்விலன்) இவிவிடமாட்டார். சோர்வு - பிரிவு. சோர்விலன் என்றது - பிரிகிறிலனென்றபடி. அனபேம்பு ப்ராப்யத்திலே த்வரித்து ப்ராபகாந்தரங்களிலே கண்வைக்கும் ஸ்வபாவத்தைத் தவிர்த்தேனென்கிறார். ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூபவிரோதமே ப்ரதாநஹேது. "ப்ராபகாந்தரம் அஜ்ஞர்க்குபாயம், ஜ்ஞாநிகளுக் கபாயம்" என்னக்கடவதிறே.

(கதிக்குப்பதறி) பரமபுருஷார்த்தத்துக்கு த்வரித்து. (வெங்கானமும் கல்லும் கடலும்)(பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்துநெருப்பிடையே நிற்கவும் நீ வேண்டா) என்றும், (ஊன்வாட வுண்ணாதுயிர்காவலிட்டு உடலில் பிரியாப்புலனைந்தும் நொந்து, தாம் வாடவாடத்தவஞ்செய்யவேண்டா) என்றும், (காயோடுநீடுகனியுண்டு வீசுகடுங்கால்நுகர்ந்துநெடுங்காலமைந்து நிலையோடுநின்று தவஞ்செய்யவேண்டா) என்றுஞ் சொல்லுகிறபடியே அதிக்ரூரங்களான காடுகளிலே யிருந்தும் பர்வதாக்ரங்களிலே வஸித்தும், சீதளமான தீர்த்தங்களிலே அவகாஹித்தும், பஞ்சாக்நிமத்யத்திலே நின்றும். (எல்லாம் கொதிக்கத் தவஞ்செய்யும்) எல்லா அவயவங்களுக்கும் மொக்க பரிதபித்துக்கொதிக்கும்படியாக தபஸ்ஸுகளைப்பண்ணியும். (கொள்கையற்றேன்) ஸ்வபாவம் போகப்பெற்றேன். கொள்கை - ஸ்வபாவம்.

அன்றிக்கே, (வெங்கானமும் கல்லுங்கடலு மெல்லாங்கொதிக்கத் தவஞ்செய்யுங்கொள்கையற்றேன்) என்றது - ([illegible] [illegible] [illegible]) (ஏதாம்த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மாநோல்பபுத்தய:- ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோஹிதா: - காமமாச்ரித்ய துஷ்பூரம் டம்பமாநமதாந்விதா: - மோஹாத்க்ருஹீத்வா ஸத்க்ராஹாந்ப்ரவர்த்தந்தேசுசிவ்ரதா:) என்றுமிவைதவிரும், ([illegible] [illegible]

http://acharya.org

[illegible] (பஹுபிர்நிகரணைஸ்தேவ விச்வா மித்ரோ மஹாமுநி: | லோபிதஸ்லோபிதம்சைத பணாசாபேர்த்த தே | [illegible] | கதி யதே யதிந்த்வயமலோலயதபிப்விதம் | விகாசயேதத்கைலோ க்யநதபணாஸாசாரகம் | வ்யாகுலஸ்ஸதிமாஸ்வர்யா: கரிஷ்யதி ப்ரகாசதே | காகா:ஷுதாஸ்வர்ஹேவிதிர்யக்தேச வர்யதா: | ப்ரகம்பதேச ப்ருதிவீ வாயுர்வாதி ப்ரசாகுலா: | பாஞ்சரோதிஷ் ப்ரபாஸ்சையதுர்லேக்ஷ்யாந்தயதேஜஸா) என்று ஸ்ரீராமாயணத்தி லும், ([illegible]) (தஸ்யதாமஸம்ஸமுத்பக்ஷ ஆ மோக்கிரைதோமய:| நிர்யகூர்த்தவமதோலோகா நதபந்திஷ்ய கிதா:| இவீந்த்ரா ஸுரகசத்ரவ:) என்று பாகவதத்திலும் சொல் லுகிறபடியே இப்படிப்ராசப்யாக்ஷங்களுக்காக தபஸ்ஸுக்களைப் பண்ணி லோகத்துக்கெல்லாம் க்ஷோபத்தைப்பண்ணும் ஸ்வபாவம் போகப்பெற்றேனென்கிறதென்னவுமாம். ... (௧௫)

உரை.—அ.—பதினஞ்சாம்பாட்டு. பெரியாழ்வார் திருவடிக ளிலே ப்ரவணசித்தரான எம்பெருமானார் குணங்களில் அநர் விதரைச்சேரேன், எனக்கு என்ன தாழ்வு உண்டென்கிறார்.

மூ.—சோராதகாதல்பெருஞ்சுழிப்பால்தொல்லைமாலையொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும்பான்மையன்
பேராதவுள்ளத்திராமாநுசன்தன்பிறங்கியசீர் [தாள்
சாராமனிசரைச்சேரேனெனக்கென்னதாழ்வினியே. (௧௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சோராத	அல்ப சிதிலமில்லாத,	ஒன்றும்பாராது	ஏகதேசமும் நிரூபியாதே,
காதல்	பக்தியினுடைய ப்ரவாஹத்தில்,		அதிப்ராக்ய ஸர்வ பூதராயிருப்பார்க்கு ஆயுஸர்த்தமாக மங் களாசாஸநம் பண் ணுவாரைப்போலே
பெருஞ்சுழிப்பால்	பெரியசுழியில் அக ப்படுகையாலே,		
தொல்லை	நித்யனாய்,		
மாலை	ஸ்வேதர ஸமஸ்தவ ஸ்துக்களுக்கும் சேஷியானகையாலே வந்த பெருமையை யுடையவனை,	அவனை	அவனைக்குறித்து,
		பல்லாண்டென்று	பல்லாண்டு பல்லா ண்டென்று காவ [illegible]

http://acharya.org

பதம்.	உரை.
காப்பிடும்	"உன்செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்று மங்களாசாஸனம்பண்ணுகின்ற இத்தையே
பான்மையன்தான்	தமக்கு ஸ்வபாவமாகவுடையவரான பெரியாழ்வாருடைய திருவடிகளை,
பேராத	விட்டு நீங்காத,
உள்ளத்து	திருவுள்ளத்தை யுடையரான,
இராமாநுசன்தன்	எம்பெருமானாருடைய,
பிறங்கியசீர்	கீர்த்திகுணங்களை,
சாராமனிசரை	தங்களுக்கு அபாச்ரயமாகப் பற்றியிராத மநுஷ்யரைச்
சேரேன்	சேரேன்;
இனி	இந்நினைவு பிறந்தபின்பு,
எனக்குஎன்னதாழ்வு	எனக்கு என்னகுறையுண்டு.

பிறங்குதல்-மிகுதி, ப்ரகாசமுமாம். சோராதகாதலென்றது-அஸங்குசிதமான காதலென்னவுமாம். அப்பொழுதைக்கு, சோர்தல்-வாடுதல்; அதாவது - ஸங்கோசம். சோராமை-அஸங்குசிதமாயிருக்கை. இத்தால்-பரிபூர்ணபக்தியென்றபடி. ... (கரு)

அ.—பதினஞ்சாம்பாட்டு. இப்பாட்டிலே-குலசேகரப்பெருமாளுடைய ஸம்பந்தத்தையிட்டுத் தம்மாலேகொண்டாடப்பட்ட வெம்பெருமானார் தம்மைப்பரிக்ரஹித்த வைபவத்தைச்சொல்லி, இப்பாட்டிலே - ஸர்வபூதஸுஹ்ருத்தாய் ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரனை ரக்ஷ்யத்தக்கித்து அவனுடைய ரக்ஷகத்வாதிகளிலே கண்வையாதே ப்ரேமதசைதலையெடுத்து அவனுக்கு என்வருகிறதோவென்று மதிசங்கையாலே திருப்பல்லாண்டாலே மங்களாசாஸநம்பண்ணி அவனுக்குக் காப்பிட்ட பெரியாழ்வாருடைய திருவடிகளுக்கு ஆச்ரயமாக்கின திருவுள்ளத்தையுடையரான வெம்பெருமானாருடைய கல்யாணகுணங்களைத் தங்களுக்கு ஆச்ரயமாகப்பற்றியிராத மநுஷ்யரை நான்கிட்டேன், ஆகையாலே எனக்கு இனி என்னகுறையுண்டென்கிறார்.

போற்றும்	போஷித்துக்கொண்டு போரும்,
புலச்சமயங்கள்	நீசஸமயங்கள்,
நிலத்தவிய	விளக்குப் பிணம் போலே நசிக்கும்படியாக,
கைத்த	நிரஸித்த,
மெய்ஞ்ஞானத்து	யதார்த்தஜ்ஞாநயுக்தரான,
இராமாநுசனென்னும் கார்தன்னை	எம்பெருமானாராகிற பரமோதாரனை,
கண்டு	தம்முடைய ஔதார்யத்தாலே காட்டக்கண்டு,
இன்றுயர்ந்தேன்	இன்று உத்க்ருஷ்டனானேனென்கை.

"மொய்த்தவெந்தீவினையாற் பல்லுடல்" என்று பாடமானபோது - திரண்ட க்ரூரகர்மங்களாலே நிறைந்துள்ள அநேக தேஹங்களென்கை. மொய்த்தல் - திரளுதல். கைத்தல் - கடிதல். கார்தன்னை யென்றது - மூற்றுவமை. ... ... (உச)

வ்.—இருபத்துநாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே மஹாப்ரபாவரான எம்பெருமானாரை என்னுடைய வஞ்சகமான மநஸ்ஸிலே வைத்து ஸ்துதியாநின்றேனென்று நிர்வேதப்பட்டார்; இப்பாட்டிலே - இப்படிப்பட்ட வுமக்கு ஸ்தோத்ரம்பண்ணுகைக்குத்தான்

http://acharya.org

அநிகாசமுண்டோவென்ன; தேன்கூண்டை ஈமொய்த்துக்கிடக்கு மாப்போலே ஆத்மாவைச்சுற்றிக்கொண்டிருக்கிற கோரமான பாபகர்மங்களாலே அநாதிகாலந்தொடங்கி நாநாவித தேஹபரி க்ரஹம் பண்ணி கர்ப்பஜந்மாத்யவஸ்தாஸப்தகத்தாலே இவ்வள வும் இளைத்துப்போந்தேன், சாஸ்த்ரவிஹிதமான தபஸ்ஸுக்களைப் பண்ணும் நீசஜநமயிஷ்டர்களெல்லாம் பக்ஷாம்படி ஸ்ரீபாஷ்யாதி களைப் பண்ணும் யதார்த்தஜ்ஞாநத்தையுடையரான எம்பெருமா னார் என்னுடைய காளமேகமானார், அவரைக்கண்டு உத்கர்ஷ்ட னானேன், ஆகையாலே ஸ்தோத்ரம்பண்ணுகிறேனென்கிறார்.

வ்யா.—(மொய்த்த) அநாதிகாலமேதொடங்கி என்னாலே பண்ணப்பட்ட பாபங்களெல்லாம் என்னாத்மாவை மொய்த்துக் கிடக்குமே. மொய்த்தல் - நிரளுதல். தண்டகாரண்யத்திலே சக்ர வர்த்தித் திருமகனை கரதூஷணாதிபதிநாலாயிரம் ராக்ஷஸர்கள் மொயித்தாப்போலேகாணும் இவரைமொயித்தபடி. (ஆவிதிகைக்க ஐவர்குமைக்குஞ் சிற்றின்பம், பாவியேனைப் பலநீகாட்டிப் படுப்பாயோ) என்று க்லேசிக்கும்படி சூழ்ந்துகொண்டிருக்கிற. (வெம்) அநுகூலமாகவும் அநுபவமாகவும் மொயித்தால் ஒருபடி ஸஹிக்கலாம், அப்படியன்றிக்கே அதிக்ரூரமான. (தீவினையால்) புண்யபாபங்களிரண்டுமன்று நான்செய்தது, எல்லாம் பாபமே யாய்த்து. அன்றிக்கே, ஒரு புண்யங்களுண்டாகிலும் அதுவும் ப்ராப்தி ப்ரதிபந்தகமாய்த் தன்னைக்கட்டுகையாலே இவரபிப்ராயத் தாலே தீவினையாயிற்று. ([illegible]) (அதபாதகமித்யேவம்) என்று- புண்யங்களெல்லாம் பாதகசப்தத்தாலே சொல்லப்பட்ட திறே. ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலும் அப்படியே, ([illegible]) ([illegible])என்கிற ஸ்ரீராமாயணச்லோகபதத்துக்கு ததீயபாரதந்த்ர்யமன்றிக்கே யிருக்கிற ராமபக்தியும் அகமென்னுமத்தை நட்டுக்காசருமருளிச்செய்தா ரிறே.

(மொய்த்தவெந்தீவினையால்) சரவணபவநத்திலே பிராட்டி யைச்சுற்றிலும் வளைத்துக்கொண்டு, "தஹ, பச" என்று கோர பாஷணங்களைப்பண்ணும் ஏகாக்ஷி ஏககர்ணிமுதலான ராக்ஷ ஸ்த்ரீகளைப்போலே சூழ்ந்துகொண்டு தபகஹேதுக்களான என்னு டையபாபங்களாலே தப்தனானேனென்றபடி. (பல்லுடல்தோறும்) தேவதிர்யங்மநுஷ்ய ஸ்தாவரரூபமான நாநாவித சரீரங்கள்தோ றும், சரீரஸம்பந்தமடியாகவிறே பாபங்களைப்பண்ணுவது. (மூத் து)அவ்வவசரீரங்களிலே ஜராவஸ்தையாகவளித்து. இது கர்ப்பவாஸ ஜந்மாதிகளுக்கும் உபலக்ஷணம். (வேதநூல்பிராயம்நூறு மனிசர் தாம்புகுவரேலும், பாதியுமுறங்கிப்போகும் நின்றதிற்பதினையா ண்டு பேதைபாலகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்) என்று

http://acharya.org

• மைக்காயமமதிலை மருளைப்பெற்றவரும் அருளிச்செய்தாரிறே. ([illegible]) (கர்ப்பஜந்மாத்யவஸ்த்தாஸு து:கமத்யந்தது:ஸ்ஸஹம்। அநிஷ்டமிக்கனத்யபராமக்த்ரியசோரசா:॥ ஏவமேவ அத்யாத்மிகங்க்லேசம் ஸ்வர்க்கஸ்த்தாநேபி தேஹிநாம் ...ஸம்) என்று அபியுக்தரும் சொன்னார்களிறே. ([illegible]) என்று ஸ்ரீபராசரபகவானும் சொன்னபடியும் ஜ்ஞாநமையும் அருப்பணிக்க.

(அருளுமெய்த்தொழிக்கேன்) இப்படி ஸம்ஸாரமானவை தெரிந்துப்போனேன். ([illegible]) (அநேகஜந்மஸாஹஸ்ரீம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந்। மோஹச்ரமம் ப்ரயாதோஸௌ வாஸநாரேணுகுண்டித:॥ யதா ஸமுத்பந்நமிதம் ஜ்ஞாநம் ப்ராதுர்பவேத்ததா। ஸம்ஸாரஸ்ய அதிக்ஷயஸ்ஸ்யாந்ந்ருணாம்। தத:ப்ரப்ருதி ஸம்ஸாரபாக்கோ நைவ ஜாயதே॥ ஸம்ஸாரம் ஸம்ப்ரபத்யைவ ஸ்வாதீநமம் ப்ரகல்பயேத்॥) என்று அபியுக்தரும் சொன்னார்களிறே. (முன்னாள் நமெல்லாம்) இது அநாதிகாலமே தொடங்கி இவ்வளவான காலமெல்லாம், ஐக்யஜ்ஞாநமானதிகளையுடையருப்புக்கொண்டு அவைகளுக்கிட்டேனென்றபடி.

(இன்று) இப்போது. (பொய்த்தவம்) சாஸ்த்ரவிருத்தமான தபஸ்ஸை, தவலையைக்காலங்கள், காலதேயம் நுபம்பொசெ

http://acharya.org

(பொய்த்தவம்) ([illegible]) (அசுரர்களிடத்திலேகோரமாகத் தபஸ்ஸைச்செய்தபோது [illegible]) என்கிறபடியே அசுரர்களைப், அவதாரங்களான விஷ்ணுவிரக்தி பாஷண்டநிவர்த்தி குருவேஷமிவர்களை நடைமுறைக்கு ஆசரித்துக்கொண்டு போரும். இவர்கள்தான் வெளிக்கு நல்லசெய்கைப்பொலிக்கடைப்போலே பொய்த்தவத்தவர்போலேயாயிருப்பது.

(புலைச்சமயங்கள்) நீசமதங்கள். சைவ மாயாவாத சாக்யோலூக்ய சார்வாக பௌத்தாதிமதங்கள். (நிலத்தவிய) பூலோகத்திலே பரம்பாதபடி. ([illegible]) ([illegible]) ([illegible]) ([illegible]) (பதிவிரதாபசங்காரிதர்வ:) (சதுராநநாதரகம்) இத்யாதிகளில் சொல்லுகிறபடியே - அவையெல்லாம் இந்த பூலோகத்திலே அழியும்படி. யஜ்ஞமூர்த்தி, யாதவப்ரகாசன் முதலானவரை ஜெயித்து அநுகூலராக்கப்பண்ணியும், திருநாராயணபுரத்திலே பௌத்தரை நிரஸித்தும், அவற்றை பஸ்மமாக்கும்படி பண்ணியருளினாரென்று ஸர்வலோகப்ரஸித்தமிறே. (கைத்த) ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய வேதார்த்தஸங்க்ரஹாதிகளை யருளிச்செய்து வ்யாக்யானம்பண்ணியருளின. அன்றிக்கே, கைத்தல்-அவற்றை விளக்குப்பிணம்போலே நசிக்கும்படியாக நிரஸித்த வென்னவுமாம்.

(மெய்ஞ்ஞானத்து) யதாவஸ்த்திததத்வவிஷயஜ்ஞானயுக்தரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னும் கார்தன்னையே) இவராகிறமேகத்தை. வேதமார்க்கப்ரதிஷ்டாபநம் பண்ணி ஸர்வலோகத்தையும் ரக்ஷித்தது ஒருஔதார்யமாக நினைத்திலர், ஆர்த்தரக்ஷணாதிபாவனை [illegible] சக்ரவர்த்தித்திருமகன் ரக்ஷித்தாப்போலே அப்படிப்பட்ட தம்மையும் ரக்ஷித்தருளினபடியாலே நிலந்தவிமாசமற வர்ஷிக்கும் வர்ஷாகாலதுணம்போலே நிருநா சென்று [illegible]கின்றார். கார்தன்னையே என்றது-ஔதார்யம்.என்று - இப்படிப்பட்ட பரமோதாரரைக்கண்டு கோயிலிலே சென்று. ஆழ்வான் புருஷகாரமாக ஆச்ரயித்தேன்படி. அவர்விஷயீகரித்தபின்பு, உயர்ந்தேன் - உத்க்ருஷ்டனானேனென்றபடி. அத்தாலே ஸ்தோத்ரம்பண்ணத் தொடங்கினேனென்று கருத்து. ... ... (உக)

http://acharya.org

உரை.—அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானார் தம் பக்கல்பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து அந்தாலே அவர் திருமுகத்தைப்பார்த்து தேவரீருடைய க்ருபாஸ்வபாவம் இந்த லோகத்தில் ஆர்தானறிவாரென்கிறார்.

மூ.—காரேய்கருணையிராமாநுசவிக்கடலிடத்தில்
ஆரேயறிபவர்நின்னருளின்றன்மையல்லலுக்கு
நேரேயுறைவிடம்நான்வந்துநீயென்னையுற்றபின்னுன்
சீரேயுயிர்க்குயிராயடியேற்கின்றுதித்திக்குமே. (௨௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காரேய்	ஜலஸ்த்தலவிபாகம் பாராதே வர்ஷிக்கும் மேகம்போலே ஸர்வவிஷயமாக வுபகரிக்கும்,	உன்சீரே	தேவரீருடைய கல்யாணகுணங்களே,
கருணை	க்ருபையையுடைய,	உயிர்க்குயிராய்	ஆத்மாவுக்கு தாரகமாய்,
இராமாநுச	உடையவரே,	அடியேற்கு	அடியேனுக்கு,
அல்லலுக்கு	து:க்கத்துக்கு,	இன்றுதித்திக்கும்	இன்றாயிற்று தின்றது;
நேரேயுறைவிடம்நான்	நேரே ஆவாஸபூமியாயிருப்பானொருவன் நான்;	நின்	தேவரீருடைய,
என்னை	இப்படியிருக்கிறவென்னை,	அருளின்றன்மை	க்ருபையின் ஸ்வபாவத்தை,
நீவந்து	தேவரீர்தாமேவந்து,	இக்கடலிடத்தில்	இக்கடல் சூழ்ந்த பூமியில்,
உற்றபின்	ப்ராபித்தருளினபின்பு,	ஆரறிபவர்	ஆர்தான் அறிவார்.

காரேய் கருணையென்றது-காரேய்ந்தகருணையென்றபடி. ஏய்கை-ஒப்பு. ... ... (௨௫)

வ்யா.—அ.—இருபத்தஞ்சாம்பாட்டு. மேகம்போலே ஸர்வவிஷயமாக உபகரிக்கும்க்ருபையையுடைய எம்பெருமானாரே!, ஸமுத்ரபரிவேஷ்டிதமான இந்த பூப்ரதேசத்திலே தேவரீருடையக்ருபாஸ்வபாவத்தைத்தெளிந்தவர் ஆர், ஸகலது:க்கங்களுக்கும் ஸதாதாரமான வென்னை தேவரீரே யெழுந்தருளி ஸங்கேசித்தபின்பு, தேவரீருடைய கல்யாணகுணங்கள் என்னுடைய ப்ராணனுக்கு ப்ராணனும் அடியேனுக்கு ஸவியாகின்றதென்று எம்பெருமானார் திருமுகத்தைப்பார்த்து நேர்கொடுநேரே விண்ணப்பம் செய்கிறார்.

வ்யா.—(காரேய்கருணை) ஜலஸ்த்தலவிபாகமற வர்ஷுகவலாஹகம்போலே. உ அநாலோசிதவிசேஷா லோகசரண்யமான க்ருபை. (ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம் ௩௯)(விசேஷிதத்தை

http://acharya.org

ஸர்வார்த்தாஸ்ஸம்பவந்திஹி) என்னக்கடவதிறே. கார் - மேகம். எய்கை-ஒப்பு. இப்படிப்பட்ட க்ருபையையுடைய. (இராமாநுசா) எம்பெருமானாரே. (இக்கடலிடத்தில்) சதுஸ்ஸமுத்ர பரிவேஷ்டிதமான இந்த ௳ இருள்தருமாஞாலத்திலே. (மின்னருளின்) பரதுக்காஸஹிஷ்ணுத்வ க்ருபாதிசேஷத்வாதிலக்ஷணங்களோடே கூடியிறே க்ருபையிருப்பது. அப்படிப்பட்ட க்ருபைக்கு.

(மின்னருளின்) என்று - ஆச்ரயப்ரபந்நத்தாலேவந்த வெளிச்செறிப்பு ஸ்வர்ணத்துக்கு பரிமளம்வந்தாற்போலேகாணுமிருப்பது. (தன்மை) இப்படிப்பட்ட க்ருபாஸ்வபாவத்தை. (ஆரேயறிபவர்) தெளிந்தவர்தான் ஆர். நித்யவிபூதியிலிருந்தவர்களாயில், ([illegible]) (ஸதாபச்யந்தி) என்றும், ([illegible]) (விப்ராஸ:) என்றும், ([illegible]) (ஜாகர்வாம்ஸ:) என்றும்-ஸர்வஜ்ஞருமுடையவராகையாலே அறியக்கேட்டவர்களித்தனை; ([illegible]) (யாநிசாஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்திஸம்யமீ) என்னும்படி அஜ்ஞாநத்தை விளைப்பிக்கும் பூலோகத்திலிருந்தவர் தெரிவிலரென்றபடி.

(அல்லலுக்கு) ([illegible]) (கர்ப்பஜந்மஜராவ்யாதிதுக்கமத்யந்தது:ஸ்ஸஹம்) என்னும்படியான துக்கங்களுக்கு. (நேரேயுறைவிடம்நான்) ஸாக்ஷாத் ஆவாஸபூமியாயிருப்பானொருவன் நான். (சரீரஸம்பந்திகளுக்கு வந்த துக்கங்களெல்லாம் தத்ஸம்பந்தத்தாலே எனக்கு ப்ராப்தமானாலும் நீத்து வருவாயிருக்கும்; அப்படியன்றிக்கே, ஸாக்ஷாத் எனக்கு வந்ததாகையாலே அவற்றுக்கெல்லாம் நான்த்ருடமான ஆச்ரயமாயிருக்கிறேனென்றபடி. (வந்துநீ) (நீ-வந்து) தேவரீர் பரதுக்காஸஹிஷ்ணுவாகையாலே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தத்வநி கேட்டவாறே ஸர்வேச்வரன் அரைகுலையத் தலைகுலைய வந்தாற்போலே பரமபதத்திலின்றும் இவ்வளவாக எழுந்தருளி. (என்னை) அநேகாச்ரயமான வென்னை. (உற்றபின்) ([illegible]) (த்வயாபிலப்தம்பகவந்நிதாநீமநுத்தமம்பாத்ரமிதம்தயாயா:) என்றாப்போலே அலப்யலாபமாக என்னைப்பெற்றபின்பு.

(உன்சீரே) தேவரீருடைய கல்யாணகுணங்களே. ([illegible]) (குணாசாமாகரோமஹாந்) என்றாப்போலே சீர் என்னும்படியான வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகுணங்களே. (உயிர்க்குயிராய்) ஆத்மாவுக்கு தாரகமாய், லோகத்தில் எல்லார்க்கும் தந்தாமுடைய ப்ராணன் ஜீவநஹேதுவாயிருக்கும், இங்கு அப்படியன்றிக்கே இவருடையப்ராண ஆத்ருக்கும் ஜ்ஞாநங்களுக்காலும் அவருடைய

http://acharya.org

யிருப்பது. (அடிபெற்ற) சேஷபூதனான எனக்கு. (இன்று) ([illegible]) (ஸாம்யேவாபலப்த்யா நந்தப்ரதி) ([illegible]) (ஜோக்து ஜேனவாக்காயாக்ஷறு) என்னுஞ்சொல்லப்படுகிற ப்ரஹ்மத்தினுடைய கல்யாணகுணங்களின் நா னுபவமும், (அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்றுகொ லோ) என்றுதிருவேங்கடமுடையானைக்கடவேனென்று ப்ரார்த் தித்தபடி நமக்கட்டுவது பரமபதத்திலேயாயிருக்கும்; அப்படி யன்றிக்கே எனக்கு இது இந்த பத்ததசையிலேதானே. (இந்நிக் குமே) ஸம்ஸாரத்துக்கு ஆகத்தாலறுமா யிருக்குமென்றதாய்த்து. தேனும் பாலும் கன்னலு மமுதுமாகித் தித்தித்தாப்போலே யாய்த்தென்றபடி. (அன்னவிக்கு மமுதுனுமென்னுயிர்க்கே) என் னக்கடவதிறே. ... ... (உ௫)

உரை.—அ.—இருபத்தாறும்பாட்டு. எம்பெருமானார் விஷயீ கரித்தருளின பின்பு அவருடைய குணங்களை தமக்கு தாரக போஷக போக்யங்களாய்த்தென்றார் - கீழ்; அவ்வளவன்றிக்கே அவர்திருவடிகளுக்கு அநந்யார்ஹராயிருக்கும் மஹாப்ரபாவரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பூர்வவ்ருத்தைகளில் ஒரோவொன்றே என்னை எழுதிக்கொள்ளாகின்றதென்கிறார்.

மூ.—திக்குற்றகீர்த்தியிராமானுசனையென்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கிவிளங்கியமேகத்தைமேவும்நல்லோர்
எக்குற்றவாளரெதுபிறப்பேதியல்வாகநின்றோ
ரக்குற்றமப்பிறப்பவ்வியல்வேநம்மையாட்கொள்ளுமே.()

பதம்.	உரை.
என்செய்வினையாம்	"[illegible]" (த்விஷத்தாபாபக்ர்த்யாம்) என்கிறபடியே பிறராய் அசல்பிளந்து ஏறிட்டவந்ததன்றிக்கே என்னுலே செய்யப்பட்ட வினையாகிற,
மெய்க்குற்றம்நீக்கி	கிடக்கின்றதோஷத்தைப்போக்கி, இவன் விரோதியைப்போக்கப் பெற்

பதம்.	உரை.
	றோம் என்னும் ப்ரீதியாலே,
விளங்கிய	தாம்உஜ்வலரான ப
மேகத்தை	ரமோதாரராய்,
திக்குற்ற	திக்குகள்தோறும் வ்யாப்தமான,
கீர்த்தி	குணவத்தா ப்ரதையையுடையராயிருக்கிற,
இராமானுசனை	எம்பெருமானாரை
மேவும்	"[illegible]" (ராமாநுஜ பதச்

http://acharya.org

பதம்.	உரை.
	சாயா) என்கிறபடியேயாதச் சாயாநிகள் அபர்தக்ஷித்தமாம்படி பொருந்தியிருக்கும்,
நல்லோர்	விலக்ஷணரானவர்கள்,
எக்குற்றவாளர்	யாதொரு குற்றத்தை யுடையவராகவும்,
எது பிறப்பு	யாதொரு ஜந்மத்தையுடைய ராகவும்,
ஏதியல்வாக	யாதொருவ்ருத்தத்தையுடைய ராகவும்,
நின்றோர்	முன்புநின்றார்கள்,
அக்குற்றம்	அந்தக்குற்றமும்,
அப்பிறப்பு	அந்தப்பிறப்பும்,
அவ்வியல்வே	அந்த இயல்வுமே,
நம்மை	(இராமானுசர்) என்னலாம்படி மஹாப்ரபாவரான இவர்கள் அபக்ருஷ்ட ஜந்மாதிகளை பரிக்ரஹித்தது தாத்பர்யமானது நம்போல்வாரும் இவ்விஷயமாச்ரயணீயர் என்னுமத்தை தர்சிப்பிக்கைக்காகவென்று நினைத்திருக்கிறநம்மை,
ஆள்கொள்ளும்	அநுவர்த்திக்கும்தோறும் எழுதிக்கொள்ளா நின்றது;

பதம்.	உரை.
	இவ்வளவான ப்ரதிபத்தி பிறந்தாலிறே ஸ்ரீவைஷ்ணவர்கள்பக்கல் ஸஜாதீயப்ரதிபத்தி குலைந்ததாவது.

அதவா, அவர்கள்விஷயத்தில் அதிமாத்ரப்ரவணரான நம்மை என்னவுமாம். அன்றிக்கே, எக்குற்றவாளர் எது பிறப்பேதியல்வாக நின்றோர் என்றது- "அஹங்காரதோஷாவான ஐச்வர்ய தந ஞாநங்கள் தோஷம்" என்கிற ஞானம்பிறந்த பின்பு, அந்தவ்ருத்தஞானங்களையுண்டானவ்வ லக்ஷணத்தை யுணைத்தித்து நின்றவிவ்யாய், அவ்வவ்வை பாவங்களே என்னை எழுதிக்கொள்ளா நின்றதென்கிறார் என்னவுமாம், மெய்யாவது-நிலைநிற்குமது. இது நிலைநிற்கையாவது-அநுபவவிநாச்யமாதல், ப்ராயச்சித்தவிநாச்யமாதலன்றிக்கே யிருக்கை. என் செய்வினையாம் மெய்க்குற்றம் நீக்கி என்றது-மத்க்ருதகர்மமடியாகவுண்டான தேஹாத்மாபத்த ப்ரயுக்தாஹங்காராதி தோஷங்களைப் போக்கியென்னவுமாம். அப்போதைக்கு வினையாம் என்றது-வினையாலே யுண்டானவென்றபடி. ஐச்வர்யதநங்களோடே ஸஹபடிக்கையாலே, எக்குற்றவாளர் என்கிறவிடத்தில், குற்றமென்றது-ஞானத்தில் குறையாகக் கடவது. இயல்வு-வ்ருத்தம்.(உக)

http://acharya.org

வ்யா.—அ.—இருபத்தாறும்பாட்டு. மேகம்போலே உதாரரான எம்பெருமானார் தம்மை விஷயீகரித்தபின்பு அவருடைய கல்யாணகுணங்கள் தமக்கு தாரகமாயிருக்கபடியைக் கீழ்ப்பாட்டிலே சொல்லி, இப்பாட்டிலே - அவர்க்கு அநந்யார்ஹராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஜந்மவ்ருத்தாதிகளில் ஒரான்றே அடிமையே யெழுதிக்கொள்ளாநின்றது என்கிறார்.

வ்யா.—(என்செய்வினையாம்) ([illegible]) (த்ரிவிதக் கர்ம்மபாபக்ஷயம்) என்கிறபடியே அசல்பிளந்து ஏறிடவக்கரன் நிக்கே என்றுலே செய்யப்பட்ட அக்ருத்யகரணாதிரூபமாய் ப்ராயச்சித்தாதிகளாலே நிவர்த்திக்கப்படாதே, ([illegible]) (காபுக்தம் க்ஷீயதே கர்மகல்பகோடிசதைரபி) என்னும்படியான கர்மமாகிற. (மெய்க்குற்றம்) நிலைநின்றதோஷம். ([illegible]) (வாசாமகோசரமஹாகுணதேசிகாக்ர்ய கூரநிராதகநிரதிலைக ஸ்வபாசத்ரம்! யஸ்யோஹமேவபுனர்ஜந்மநித்ரம) என்றும், ([illegible]) (பூர்வைஸ்ஸ்வமைசய மதாவலம்பமாசர்யார்யமாமேவஸி க்ஷ்யமநுதாக்ந தன்நிதேநம்! கைச்யத்விந ஸடரிபோமமதயமேவ மத்தபோராமயிநோ யதநுவிசஸ்திர பாவச்யசதநிதமைகலம்பநக்தோ: தாவச்சதத் தநநிகஸ்ருசமமாஸ்நிலத்யம்) என்றும் சொல்லுகிறபடியே ப்ரத்யயம்பண்ணிச் சொல்லுகிறார். மெய்யானது - நிலைநிற்குமது. இது நிலைநிற்கையாவது - அநுபவவிநாச்யமாதல், ப்ராயச்சித்த விநாச்யமாதலன்றிக்கே யிருக்கை. இப்படிப்பட்ட பாபத்தை நீக்கி. (வாரேறுமுதிகடலோ மாருதமோ நியவமோ, காரேறிவெள்ளைத் கிற்குங் கண்டிலமால்) என்கிறபடியே போனவிடம் தெரியாதபடி யவரணமாகப் போக்கி. (விளங்கிய) அத்தாலே அத்யுஜ்வலமான. இவன் விரோதியைப் போக்கப்பெற்றோமே யென்றும் ப்ரியமாலோகாநும் அவர்தாம் உஜ்வலரானது. (மேகத்தை) வர்ஷுகவலாஹகம்போலே பரமோதாரரான். மேகத்தை என்றது - மூற்றவமை.

(திக்குற்றகீர்த்தி) (எட்டுத்திக்கும் பெரும்கீர்த்தி) என்கிறபடியே அஷ்டதிக்கிலும் வ்யாபித்திருக்கிற குணயத்தர ப்ரதையையுடையரான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (மேவும்) (மேவினேனவன்பொன்னடிமெய்ம்மையே) என்கிறபடியே ([illegible]) (ராமாநுஜம் யதிபதிம் சரணம் ப்ரபத்யே) என்னும்படி-அவரு

http://acharya.org

டைய திருவடிகளிலே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் அத்யவஸித்திருக்கிற. (நல்லோர்) (நன்மையால்மிக்க நான்மறையாளர்கள்) என்கிறபடியே அநந்யப்ரயோஜநரான மஹாத்மாக்கள். அன்றிக்கே (மேவும்நல்லோர்) ([illegible]) (ராமாநுஜ பதச்சாயா) என்கிறபடியே பாதச்சாயாதிகள்போலே அப்ருதக்ஸித்தமாம்படி பொருந்தியிருக்கும் விலக்ஷணரானவர்களென்னவுமாம்.

(எக்குற்றவாளர் எதுபிறப்பேதியல்வாககினின்றோர்) அந்த மஹாத்மாக்கள் ஆச்ரயணபூர்வகாலத்திலே யாதொரு ஜ்ஞாநஸங்கோசமாகிற குற்றத்தையுடையராகவும், யாதொரு உத்க்ருஷ்டாபக்ருஷ்டஜாதியையுடையராகவும், யாதொரு நிஷித்தாநுஷ்டாநமாகிற வ்ருத்தியையுடையராகவும் நின்றோர்கள். குற்றம்-ஜ்ஞாநஸங்கோசம். இயல்வு - வ்ருத்தம். அவர்களுடைய, (அக்குற்றமப்பிறப்பவ்வியல்வே) (இவையெல்லாம் அப்படியாகவே ஆச்ரயண பூர்வபாவிகளாகையாலும், அந்தசரீரத்தோடே தானே ஆச்ரயணத்தைப் பண்ணினார்களாகையாலும், (நிகமாமனிசர்) என்னலாம்படி மஹாப்ரபாவரான இவர்களுடைய பூர்வதசையிலுண்டான விசேஷங்களான வினையே.

(நம்மையாட்கொள்ளுமே) இவ்வளவும் ப்ரதிகூலித்துப்போந்த நம்மையும், தாஸபூதராய் க்ரயவிக்ரயார்ஹராம்படி எழுதிக்கொள்ளக்கடவன். அன்றிக்கே, (நம்மையாட்கொள்ளுமே) இப்படி மஹாப்ரபாவரான இவர்கள் நிக்ருஷ்டஜந்மாதிகளை பரிக்ரஹித்தது தாத்பர்யமான நம்போல்வாரும் இவ்விஷயமாச்ரயணுக்கு ஹோன்றுமிடத்தை தர்ஸிப்பிக்கைக்காக வென்று நினைத்திருக்கிற நம்மை யநுஸந்திக்குந்தோறும் எழுதிக்கொள்ளாநின்ற வென்னவுமாம். ([illegible]) (ஸர்வாசாரேபிணோர்வாபி க்ருதக்நோ நாஸ்திகோபுரா। ஸமாச்ரயேதாதிதேவம் ச்ரத்தயா சரணம் யதி। நிர்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத்பரமாத்மந:) என்கிற வசநம் இவ்விடத்துக்கு ப்ரமாணம்.

அப்போது, ஆதிதேவசப்தத்தாலே - ப்ரதமாசார்யனென்று தோற்றினாலும் அந்த ஸர்வேச்வரனே சேஷியென்றபடியிலே உபதேசித்து உபகரித்த வராகையாலே, ஆதிதேவசப்தமும் - எம்பெருமானாரைச் சொல்லுமென்னக் குறையில்லை. அன்றிக்கே எம்பெருமானாருக்கு அநந்யார்ஹரான மஹாத்மாக்கள் எந்தவர்ணமுடையரானாலும், எந்த வ்ருத்தமுடையரானாலும், எந்தஸ்வபாவமுடையரானாலும் அந்தந்தவர்ண வ்ருத்தஸ்வ

http://acharya.org

பாவங்களை நமக்கு உத்தேச்யமாயிருக்குமென்னவுமாம். அந்த மஹாத்மாக்கள் எந்த வர்ணத்திலே ஜநித்தாலும் ப்ரக்ருதிஸம்பந்தமடியாகக்கொண்டு அதுக்கு அநுரூபங்களான ஸ்வபாவ வ்ருத்தங்களுண்டாயிருக்குமிறே.

குற்றங்களில்லையேயாகிலும் மணிதர்ப்பணமிவ்வச்சந்த்ரங்களிலே எதிரிருந்த பதார்த்தங்களெல்லாம் தோற்றுமாப்போலே நிர்மலரான அவர்களைக்கொண்டு தந்தாருடைய ஸ்வபாவ வ்ருத்தங்களை அவர்கள்பக்கலிலே ஏறிட்டுக்கொண்டு அநுஸந்திப்பார்களிறே சிலர், அப்படிப்பட்ட ஸ்வபாவ வ்ருத்தங்களையாகிலும் நமக்கு உத்தேச்யமென்னுதல்; அங்ஙனுமன்றிக்கே, அவர்களுக்கு சரீரஸம்பந்தத்தாலே ப்ராமாதிகமாய்க்கொண்டு சில குற்றங்களுண்டாயிருந்தாலும், (பத்மபத்ரமிவாம்பஸா) (பத்மபத்ரமிவாம்பஸா) என்கிறபடியே அவற்றோடு அவர்கள் ஒட்டற்றிறே யிருப்பது. அப்படியேயானாலும் அவர்களுக்கு அவையும் உண்டாகையாலே நம்மை உத்தரிப்பிக்கைக்கு அவையேபோரும்; இப்படியே எம்பெருமானார்க்கு அநந்யார்ஹராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜந்மவ்ருத்தாதிகளால் குறையுண்டானாலும் அவர்கள் நமக்கு ஆச்ரயணீயரென்று கருத்து.

(பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம்) (யஸ்மிந்ம்லேச்சேபிவர்த்ததே-தஸ்மைதேயம் ததோக்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம்) என்று ம்லேச்சனானாலும்பக்தனாகில் என்னைப்போலே பூஜ்யன், அவன்பக்கல் ஜ்ஞானோபதேசம்கொள்ளவாமென்றானிறே. (அபிசேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக்| ஸாதுரேவ ஸ மந்தவ்ய:) (அபிசேத்ஸுதுராசாரோ பஜதேமாமநந்யபாக்| ஸாதுரேவ ஸமந்தவ்யஸ்ஸம்யக்வ்யவஸிதோஹிஸ:) [illegible] திருத்தேர்த்தட்டிலே அஜ்ஞாநதஜ்ஞாபகம் பண்ணி நின்றுகொண்டு ஸர்வேச்வரனான வென்னை அநந்யப்ரயோஜனனாய்ப் பஜித்தானாகில் அவன் எப்படிப்பட்ட குற்றத்தை யுடையவனாகிலும். [ஸாதுரேவ ஸ மந்தவ்ய:] என்றானிறே. இத்தால் - அவர்களுடைய ப்ராமாதிகமான ஸ்வபாவ வ்ருத்தங்களெல்லாம் அகிஞ்சித்கரம், ஆச்ரயப்ராபல்யமே ப்ரதானமாக அவர்கள் பூஜ்யரென்றபடி. (தஸ்மாந்மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:) (தஸ்மாந்மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:) என்றானிறே. (பயிலும் திருவுடையார் யவரேலு மவர்கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறெம்மையாளும் பரமரே) (நம்மையளிக்கும்பிராக்களே) (எந்தொழுகுலந்தாங்களே) (படியாதுமில் குழிப்படி பெற்றபிரான்றனக்கு அடியாரடியார் தம்மடியாரடியார்

http://acharya.org

தமக்கடியாரடியார் தம்மடியாரடியோங்களே) (சிறுமாமனிசரா யென்னையாண்டாரிங்கேதிரியவே) (தமர்கள்தமர்கள்தமர்களாம் சதிரேவாய்க்கதமியேற்கே) (அவர்களுக்கே குடிகளாய்ச்செல்லும் நல்லகோட்பாடே) என்று இவ்வர்த்தத்தை பத்தும் பத்தாக நம்மாழ்வாரருளிச்செய்தாரிறே. (प्रत्यक्षितात्मनाथानां नैषां चिन्त्यं कुलादिकम्) (ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம்நைஷாம்சிந்த்யங்குலாதிகம்) என்னுமிறே-ஸ்ரீபாரத்வாஜஸம்ஹிதையிலும்.

இனி, (அக்குற்றம்) என்றதுக்கு ப்ராமாதிகமாய் வந்ததல்லிக்கே ஆச்ரயணாநந்தரபாவி புத்திபூர்வகபாபமாய் அர்த்தஞ்சொல்லில், (निपूर्वोत्तरपापमका मजकनात्) (நிபூர்வோத்தரபாபமகாமஜகநாத்) என்றும், (புண்யத்துக்கு அஞ்சுமிறையவன் பாபத்தைப் பண்ணுமிறே) என்றுஞ் சொல்லுகையாலே இவர்களுக்கு அது புத்திபூர்வகமாகவர வழியில்லை, (ஜாதேபி) என்கிறபடியே ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே புத்திபூர்வகமாக ப்ரஸக்தமானாலும், (என்னடியாரதுசெய்யார் செய்தாரேல்நன்றுசெய்தார்)என்னுஞ்சொல்லப்படுகிற பகவதபிமதிவிசேஷத்தாலும், (वात्सल्यात्) (வாத்ஸல்யஜலதே) என்கிறபடியே அவன்ஸ்வாச்ரிதருடைய குற்றத்தை போக்யமாகக்கொள்ளும் ஸ்வபாவனாகையாலும், (இறையும்-அகலகில்லேன்)என்று-அவனைப்பிரியாதே நித்யாநபாயிநியாயிருக்கிறபெரியபிராட்டியாருடைய புருஷகாரபலத்தாலும் குற்றத்தை அவனாலேபொறுப்பித்துக்கொள்ளத்தட்டில்லை, ஓரஞ்சலிமாத்ரத்தாலே நசிக்கக்கடவதானபாபத்தை.

(सर्वपापेभ्यो मोक्षयिष्यामि) (ஸர்வபாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி) என்று கீதாசார்யனும், (तवैव मुष्णात्यघभाग्यशेषतः) (தவைவ முஷ்ணாத்யகபாக்யசேஷத:) என்று ஆளவந்தாரும், ஸர்வசப்தநாடசேஷபத்தனாயமானாநிகால்வேறவந்தபாபத்தை நிர்த்தேசிக்கையாலே அந்த சப்தங்களிலே புத்தி பூர்வோத்தராகமும் அந்தர்ப்பவிக்குமிறே. ஸர்வேச்வரன் இவனுடையகுற்றத்தை அபேக்ஷிக்கானுமிலும் அவனுக்குஒருகுற்றமடையாதபடி ப்ரபந்நனும் ஸாவதாநமாயிருக்கவேணும், இப்படிப்பட்ட ப்ரபாவம் அவர்கள் பக்கல் உண்டாயிருக்கையாலே அத்தைவிட்டு அவர்களை அநாதரியாதே அவர்கள் எனக்கு சேஷிகளென்று அநுஸந்திக்கவேணுமென்றதாய்த்து. இவ்வளவான ப்ரதிபத்திபிறக்காவிறே இவனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள்பக்கலிலே ஸஜாதீயதாப்ரதிபத்தி குலைக்கடவது. ... ... (உஎ)

உரை.—அ.—(இருபத்தேழாம்பாட்டு.) இப்படி இவர்தமக்கு அக்கபார்த்துஷாளனிலே வென்றினவரேறு எம்பெருமானார் இவர்

http://acharya.org

நெஞ்சுக்கு தம்மை ஸர்வகாலமும் விஷயமாக்கிக்கொடுக்க, பாபிஷ்டனான என்னெஞ்சிலே புகுந்தருளின இது தேவரீர்ப்ரபாவத்துக்கு அவத்யமன்றோ வென்று என் னெஞ்சு தளரா நின்றதென்கிறார்.

மூ.—கொள்ளக்குறைவற்றிலங்கிக்கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால்வல்வினையேன்மனம்நீபுகுந்தாய்;
வெள்ளைச்சுடர்விடுமுன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்குமிராமாநுசவென்தனிநெஞ்சமே. (௨௭)

பதம்.	உரை.
இராமாநுச	உடையவரே,
கொள்ள	வேண்டுவோர்க்கு வேண்டுவதெல்லாம் கொள்ளலாம்படி
குறைவற்று	ஒருகுறைவு அற்றிருப்பதாய்,
இலங்கி	கொடுக்கப்பெற்றால் உஜ்வலமாய்,
கொழுந்துவிட்டு	மேன்மேலும் இளகிப்பித்து,
ஓங்கிய	வளர்ந்திருப்பதான,
உன்வள்ளல்தனத்தினால்	தேவரீருடைய ஔதார்யத்தாலே,
வல்வினையேன்	மஹாபாபியான என்னுடைய,
மனம்	மனஸ்ஸிலே
நீபுகுந்தாய்	தேவரீருடைய பெருமையைபாராதே வந்து புகுந்தருளிற்று; வஸிஷ்டன் சண்டாளச்சேரியிலே புகுந்தாற்போலே புகுந்தவிது,
வெள்ளை	பரிசுத்தமாய்,
சுடர்விடும்	விளங்காநின்றுள்ள,
உன்பெருமேன்மைக்கு	தேவரீருடைய நிரவதிகப்ரபாவத்துக்கு,
இழுக்கிதென்று	அவத்யமென்று,
தனி	ஒருதுணையின்றிக்கே தனிப்பட்டிருக்கிற,
என்னெஞ்சம்	என்னெஞ்சானது,
தள்ளுற்று	தளர்ந்து,
இரங்கும்	ஈடுபடாநின்றது.

தள்ளுதல்-தளர்தல். இரக்கம்-ஈடுபாடு. ... (௨௭)

வ்யா.—அ.—இருபத்தேழாம்பாட்டு. இப்படி இவர் தமக்கு அநந்யார்ஹர்பக்கலிலே ப்ரதிபத்திபண்ணினவாறே எம்பெருமானார் இவருடைய நெஞ்சு, குற்றமே ஸர்வகாலமும் விஷயமாக்கிக் கொடுக்க பாபிஷ்டனான என்னெஞ்சிலே புகுந்தருளின இது தேவரீருடைய ப்ரபாவத்துக்கு அவத்யமன்றோ வென்று என்னெஞ்சு தளராநின்றதென்கிறார்.

வ்யா.—(கொள்ளக்குறைவற்று) வேண்டுவார் வேண்டுவதெல்லாம் கொண்டாலும், ஒருகுறைவின்றிக்கே - குறைப்பட்டிராதே. மஹாமேருவானாலும் நித்யவ்யயம் பண்ணத்தொடங்கினால்

http://acharya.org

காருக்கு ஏன் குறைப்பட்டு அழிந்து போயிற்றே; இந்த அப்படியன்றிக்கே புஷ்கலாவர்த்தகாதி மேகங்கள் பொழிந்தாலும் ஸமுத்ரஜலம் குறைப்படாதே நிச்சலமாய் பூர்ணமாயிருக்குமாப்போலே யிருந்தது. (இலங்கி) இந்தப்ரபாவத்தாலே ([illegible]) (ஆசிரபூர்த்ஸமாநுஜதிவாகர:) என்றாப்போலே அத்யுஜ்வலமாய். (கொழுந்துவிட்டோங்கிய) ஸூர்யசந்த்ரர்க்கும் இவருடையவண்மைத்தனத்துக்கும் ஒருவராயிருந்தும்; - அது அதிகம்பீரமாய்ப் பொருந்தி இருந்தபடியே யிருக்கும்; இந்த வண்மையாலும் லோகத்திலே இவருடைய க்ருபாவிஷய பூதரெல்லாரும் வாழ்க்கொண்டுபோகத்தால் அதுவேறொருவகை ப்ரகாசித்து பல்லவித்து பரமபதபர்யந்தமாகப் படராநிற்கும்; இப்படி ஓங்கியவனாகவிருக்க

(உன்வண்மைத்தனத்தினால்) இவர்தாம் தம்முடைய அவதாரத்தையேபிடித்து எல்லாருக்கும் பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை, (அறியாதனவறிவித்த) என்கிறபடியே விசதமாகத் தெளியும்படி உபதேசித்து, இப்படி பண்ணினேறுமேயென்று ஆறியிருக்கையன்றிக்கே ஸர்வரும் ஸர்வகாலமும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி ஸ்ரீபாஷ்யகீதாபாஷ்யாதி ப்ரபந்தங்களைப் பண்ணியருளி உபகரித்தாரிறே. க்ரந்தகரணத்தை (வண்மை) என்பாரோ வென்னில்; ([illegible]) (தத்வேநயச்சிதசிதீச்வரதத்ஸ்வபாவ போகாபவர்க்கததுபாயகதீருதார:। ஸந்தர்சயந்நிரமிமீதபுராண ரத்நம்) என்று ஆளவந்தாருமருளிச்செய்தாரிறே.

(உன்வண்மைத்திறனால்) லோகத்திலே கர்ண சிபி மாந்தாதாதிகள் வதாந்யராய் அநேகம்பேருண்டு, அவர்கள் ஸகாசத்திலே பாத்ரஜூனைஅர்த்திகளால் அர்த்தங்களைக் கொடுப்பார்களென்று ப்ரஸித்தமாயிருக்கும், அப்படியன்று தேவரீருடைய வண்மைத்தனம்; - அர்த்தித்வநிரபேக்ஷமாக பாத்ராபாத்ரங்களைப் பாராதே ஆகிஞ்சந்யமாத்ரத்வங்களையேபற்றாசாகக்கொண்டு பரமபுருஷார்த்தத்தையே கொடுக்கக்கடவதாயிருக்கும்; இப்படிப்பட்ட தேவரீருடைய ஔதார்யத்தாலே, என்னுடைய மநோரதம்பலிக்கச் செய்வீரே, இது உமக்குத் தெளிந்தபடியென்னென்ன; கண் புறம்பே எங்கேயாகிலும் சென்று கற்று கற்வியாய்க்கேட்டுத் தெளிந்தேனோ இது ஸ்வபாவத்தால் வந்ததன்றோ வென்கிறார்.

(வல்வினையேன்மனம்) நன்மையென்று பேரிடலாவதொரு நிலையுமின்றிக்கே யொழிந்தாலும், (இருவடி தன்காமம் மறந்தும் புறந்தொழாமாந்தர்) என்கிறபடியே நடந்தாளுமிருந்தேனோ. நான் அறியும்படியே மஹாகோரமான பாபங்களைப்பண்ணினேனே ன், இப்படி பாபிஷ்டனான என்னுடையமநஸ்ஸிலே. ([illegible]

http://acharya.org

ரங்கராஜ்ஞீ) (பத்ராபிஷேகங்கி) என்னப்பட்ட மகஷியிலே. (நீபுகுந்தாய்) உபயவிபூதி ஸாம்ராஜ்யத்துக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட தேவரீர் புகுந்தீர், உம்மை எம்மவர்களுக்கு விஷயமாக்கியே இருந்தினீரென்றபடி. இத்தைப்பார்த்தால் அத்யந்த பாபிஷ்டனான நான் எங்கே, (ஸ்ரீமத்ரங்கேஶ்வரநாயகீ) (ஸ்ரீ விஷ்ணுலோகமணிமண்டப மார்க்கதாயீ) என்னும்படியான அப்ரதிமப்ரபாவத்தையுடைய தேவரீர் எங்கே, இதுசேரச்சேர்த்தியன்றே. சண்டாளவாடிகைக்குள்ளே வஸிஷ்டன் புகுந்தாப்போலே இது அநுசிதமான ப்ரவ்ருத்தியாயிருக்குமென்றபடி. (இராமாநுசா) எம்பெருமானாரே.

(வெள்ளைச்சுடர்) லோகோபகாரமாய் சீதளமுமான சந்த்ர தேஜஸ்ஸுக்கும் ஒருகளங்கமுண்டு, அப்ரச்சந்தமாய் பகவத்கடாக்ஷவிசேஷத்தாலே வந்ததாகையாலே தேவரீருடைய தேஜஸ்ஸு அப்படிப்பட்டதன்றே, (அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன்) என்கிறபடியே ஆழ்வானைவிட்டு என்னைத் திருத்துவித்து அவருக்கு சேஷபூதனாம்படி க்ருபைபண்ணி வருகைகையாலே அதிநிர்மலமாயிருக்குமென்றபடி. இப்படிப்பட்ட தேவரீருடைய பரோபகார ஸாமர்த்யமாகிற தேஜஸ்ஸை. (விடும்) லோகத்திலே மாம்பழமிருக்கிற தேப்பை கொள்ளுவாகவிடும் தாயைப்போலே. ([illegible]) (சவுரிநலதுரதபராவுநினைவபவ) என்று சொன்னபடியே ஸம்ஸாரிகளுக்கு முற்றூட்டாகக்கொடுத்தருளுகிற. (உன்பெருமைக்கிழுக்கிதென்று) ஸகலலோகமும் நிலவொளி பூர்ணசந்த்ரனாகையாலே எல்லாருக்கு மொக்க பவ்யராயிருக்கும் தேவரீருடைய மஹாத்மான அப்ரதிமவைபவத்துக்கு அவத்யமென்றுகொண்டு.

(இழுக்கிதென்று) பிராட்டி தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக ராவணபவனத்திலே புகுந்தால் அது லோகத்தாருக்கும் ஈச்வரனுக்கும் அவத்யமாயிருந்தாப்போலே அவரும் இவர்தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருளின்றால் அது அவருடைய மேன்மைக்கு அவத்யமாய் அதுக்கு அவத்யத்தை விளைக்குமென்றுகாணும் இவருடைய அத்யவஸாயம். (என் தனிநெஞ்சமே) மகன்வழியிலே ஒருக்லேசமுண்டானவாறே தனக்கு ஆப்தராயிருப்பாரோடே சொன்னால் செய்தது சமமாயிருக்கும், அதுக்கு நமக்கு ஒருஸஹாயபூதருண்டோ. இப்படி பாபமினைக்கு தன்போல்வாரொருவரும் இல்லாமையாலே அத்விதீயமான மனஸ்ஸென்னவுமாம். இத்தப்ரகரணமான மனஸ்ஸானது. (தன்றுந்திரங்கும்) தளர்ந்து ஈடுபடாகின்றதென்று போரவிசேஷப்படுகிறார்ப்ப்து. தன்றுதல் - தளும்புதல். இரக்கம் - ஈடுபாடு.

http://acharya.org

(என்தனிநெஞ்சமே) இத்தனைகாலமும் தான் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு தன்னோடு ஸத்ருசரில்லையென்றிருக்கிற என்னுடைய மனஸ்ஸென்னவுமாம். ... ...(௫௭)

உரை.—அ.—இருபத்தெட்டாம்பாட்டு. ([illegible]) ([illegible]) என்னும் மஹான்களுக்கு அசக்தமான வாக்குக்கு அவர் விஷயத்தில் உண்டான ப்ராவண்யத்தைக் கண்டு ப்ரீதராகிறார்.

கூ.—நெஞ்சில்கறைகொண்டகஞ்சனைக்காய்ந்தநிமலன்நங்கள்
பஞ்சித்திருவடிப்பின்னைதன்காதலன்பாதம்நண்ணா
வஞ்சர்க்கரியவிராமாநுசன்புகழன்றியென்வாய்
கொஞ்சிப்பரவகில்லாதென்னவாழ்வின்றுகூடியதே(௫௮)

பதம்.	உரை.
நெஞ்சில்	"தீயபுந்திக்கஞ்சனுன்மேல் சினமுடையன்" என்கிறபடியே நெஞ்சத்திலே,
கறைகொண்ட	சீற்றத்தை யுடையவனான,
கஞ்சனை	கம்ஸனை,
காய்ந்த	சீறின,
நிமலன்	ஹேயப்ரத்யநீகனாய்,
நங்கள்	ஆச்ரித ஜநாபிமானியாய்,
பஞ்சி	"பஞ்சிய மெல்லடிப்பின்னை" என்கிறபடியே பஞ்சுபோலே ம்ருதுவான,
திருவடி	திருவடிகளையுடைய
பின்னைதன்	நப்பின்னைப் பிராட்டிக்கு
காதலன்	ஸ்நிக்தனானவனுடைய,
பாதம்	திருவடிகளை,
நண்ணா	ஆச்ரயியாத,
வஞ்சர்க்கு	ஆத்மாபஹாரிகளுக்கு,
அரிய	துர்லபனான,
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,

பதம்.	உரை.
புகழன்றி	குணங்களையொழிய,
என்வாய்	என்னுடைய வாக்கானது,
கொஞ்சிப்பரவகில்லாது	முக்தஜல்பமாகக் கொண்டு அடைவுகெட ஏத்தாது;
இன்றுகூடியவாழ்வு,	இன்று எனக்குக் கூடின தொருவாழ்வு,
என்	இருக்கும்படியென்,

"நிமலன்" என்று - "[illegible]" (தேவாகாரம் நாகலாசாஞ்ச லாமர்த்யமதிசைலதம்) என்கிறபெருமையான ஸம்பத்தும் இடக்கச்செய்தே ஆச்ரித விரோதி யென்னுமாகாரத்தாலே அவனைசீறவிக்கையால் வந்த நைர்மல்யத்தைச் சொல்லுகிறது. கறை-கறுப்பாய்-சீற்றத்தைச்சொல்லுகிறது. அன்றிக்கே, கறையென்று - தோஷமாய், மனஸ்ஸிலே தோஷத்தையுடையவனானவென்னவுமாம். பஞ்சு-பஞ்சு. கொஞ்சுதல்-அவ்யக்தமாகச் சொல்லுதல். ( )

http://acharya.org

வ்யா.—அ.—இருபத்தெட்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-மகஷியினுடைய ஸம்ருத்தியைச்சொல்லி, இதிலே - ஸாக்ஷாத்துன்ன ஸம்ருத்தியைச்சொல்ல ஒருப்பட்டு, ஸத்புத்ரியான கலவியை ஸம்ஹரித்து, அதிகோமளமான ஸ்ரீபாதங்களையுடைய நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்நேஹியான க்ருஷ்ணனுடைய ஸ்ரீபாதங்களை ஆச்ரயியாத ஆத்மாபஹாரிகளுக்கு அகோசரரான எம்பெருமானுடைய கல்யாணகுணங்களையொழிய வேறொருவிஷயத்தை என் வாக்கானது ஸ்துதிக்கமாட்டாது, ஆகையாலே இப்போது எனக்கொரு அலப்யலாபம்சேர்ந்ததென்று விஸ்தரிக்கிறார்.

வ்யா.—(செஞ்சில்கரைகொண்ட கஞ்சனை) கம்ஸன் அசரீரிவாக்கிச்சொன்ன வார்த்தையைக் கேட்டவன்றுதொடங்கி மனஸ்ஸிலே க்ரோதத்தை வைத்துக்கொண்டிருந்தான், அந்தக்க்ரோதமானது தமக்கார்யமென்கையாலே அத்தைக் கதுப்பாக வருணிச்செய்கிறார். (நியபுக்திக்கஞ்சனுள்ளேசல் விளைவுடையவன்) என்கிறபடியே ஹ்ருதயத்திலே சீற்றத்தையுடையவனுன கம்ஸனை (కంసస్తూద్విగ్నమనాః ప్రాహ సర్వానేవ మహాసురాన్ | ప్రలమ్బకేశిప్రముఖానాహూయాసురపుఙ్గవాన్ | హే ప్రలమ్బ మహాబాహో కేశిన్ ధేనుక పూతనే | అరిష్టాద్యైస్తథా చాన్యైః శ్రూయతాం వచనం మమ | మాం హన్తుమమరైర్యత్నః కృతః కిల దురాత్మభిః | మద్వీర్యతాపితాన్వీరాన్న త్వేతాన్గణయామ్యహమ్ | కిమిన్ద్రేణాల్పవీర్యేణ కిం హరేణైకచారిణా | హరిణా వాపి కిం సాధ్యం ఛిద్రేష్వసురఘాతినా) என்றுதொடங்கி, ([illegible]) என்று சொல்லிக்கொண்டுபோந்து, ([illegible] యత్రోద్రిక్తం బలం బాలే స హన్తవ్యః ప్రయత్నతః) என்று இவ்வர்த்தங்கள் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே பரக்கச்சொல்லப்பட்டதிறே.

(காய்ந்த)([illegible]) (உத்ப்லுத்யாருஹ்ய தம்மஞ்சம் கம்ஸம் ஜக்ராஹ கேசவ: | கேசேஷ்வாக்ருஷ்ய விகளத்கிரீடமவநிதலே | கம்ஸம் பாதயாமாஸ தஸ்யோபரி பபாத ச | [illegible]) என்கிறபடியே ஸம்ஹரித்த. (நிமலன்) கல்மஷரஹிதன். முன்னே ஒருமாசிருக்க அத்தைப் போக்கிக்கொண்டபடியன்று, ஸ்வதஸ்ஸித்தமான நைர்மல்யத்தையுடையவன். ஹேயப்ரதிபடனென்றபடி. அன்றிக்கே, கம்ஸனைக்கொல்லுமளவும் மாதாபிதாக்களைச் சிறையிலேயிருக்கக் கேட்டுப் பொறுத்திருந்த தோஷமுமின்றிக்கே, அவனைக்கொன்று

http://acharya.org

மாதாபிதாக்களைச் சிறையில் நின்றும் விடுவித்தபின்பு நிர்மலனானானென்னவுமாம். (தந்தைகாலில் விலங்கறவந்து தோன்றியதோன்றல்) என்னக்கடவதிறே. அங்ஙனுமன்றிக்கே, (அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன்) என்கிறபடியே - நம்மை எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயார்ஹராம்படி பண்ணினானாகையாலே (விமலன்) என்கிறாராகவுமாம்.

(நங்கள்பஞ்சித்திருவடிப்பின்னைதன்காதலன்) (நங்கள்பஞ்சித்திருவடி) (பஞ்சியமெல்லடிப்பின்னை) என்கிறபடியே - பஞ்சுபோலே ஸௌகுமார்யமான திருவடிகளையுடையவளை. அன்றிக்கே, அத்யந்த புஷ்பஹாஸ ஸௌகுமார்யையாகையாலே கடினமான பூமியிலே திருவடிகளைவைத்தால் வாடுமென்று நினைந்து, பஞ்சமேல் அடியைவிட்டுத் திரியும்படியான திருவடிகளையுடையாளென்னவுமாம். (பின்னைதன்) இப்படிப்பட்ட ஸௌகுமார்யத்தையுடையவளான நப்பின்னைப்பிராட்டிக்கு. (பின்னைதன்காதலன்) என்போல்வாரெல்லாருடையவும் ஸர்வாதிக்ரமஹேதுவான அபராதங்களை அவளாலே பொறுப்பித்து நம்மையாச்ரயிப்பிக்கைக்காக அவளோடே அநேகாவதாரங்களைப் பண்ணினானாகையாலே நமக்காயே இருக்கிறானென்று நினைந்து, (நங்கள்) என்கிறார். ஆக, ஆச்ரிதரக்ஷணார்த்தமாக அவதரித்து அதிஸௌகுமார்யத்தை யுடையவளான நப்பின்னைப்பிராட்டிதனக்கு ஸக்தனானவனென்றபடி.

ஸ்ரீஜநகராஜன், தன்பூமியிலுள்ள இடையர்க்கெல்லாம் தலைவனும் கும்பனென்னும் பேரையுடையனானவன், இடையர்கோஷ்டியிலே ஏழ்வ்ருஷபங்கள் அஸுராவேசத்தாலே மதபலவீர்யவத்துக்களாய்க்கொண்டு, இருந்த ராஜ்யங்களையெல்லாம் பாதிக்கத் தொடங்கினவாறே, அவன் கும்பனையழைத்து பயப்படுத்த; அவனும் நப்பின்னைப்பிராட்டியென்று எனக்கு ஒருபெண்பிள்ளை யுண்டு, இந்த வ்ருஷபங்களை ஸம்ஹரித்தவனுக்கு இந்தப்பெண் பிள்ளையைக் கொடுக்கக்கடவேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணினேன் என்ன; ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் கும்பன் மாதுலனாகையாலே இந்த வ்ருத்தாந்தத்தைக்கேட்டு சடக்கென அங்கேசென்று நப்பின்னைப் பிராட்டியைப் பார்த்து அவள்திறத்திலே அதிவ்யாமோஹத்தையுங் கொண்டு அவளோட்டை ஸம்ச்லேஷத்துக்கு ப்ரதிபந்தகங்களான அந்த வ்ருஷபங்களையும் ஒருக்காலே கட்டியாகத் தழுவி ஸம்ஹரித்தாரென்று புராணங்களிலே ப்ரஸித்தமான இந்த அபதானத்தைக்கொண்டு, (காதலன்) என்று அருளிச்செய்கிறார். (தளவேழ்முறுவல் பின்னைக்காய்வல்லானாயர்தலைவனாய் இளவேறேழுந்தழுவியவெந்தாய்) என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தாரிறே. இப்படிப்பட்ட க்ருஷ்ணனுடைய.

http://acharya.org

(பாதம் நண்ணாவஞ்சர்க்கு) திருவடிகளை ஆச்ரயியாத வஞ்சகருக்கு.(योऽन्यथा सन्तमात्मानमन्यथा प्रतिपद्यते। किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा) (யோந்யதாஸந்தமாத்மாந மந்யதாப்ரதிபத்யதே। கிம் தேநநக்ருதம்பாபம்சோரேணாத்மாபஹாரிணா)என்கிறபடி."சோர்த்வமே" என்றால், "அதமமே" என்னும்படியான ஆத்மாபஹாரிகளுக்கு.(न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यन्ते नराधमाः। माययापहृतज्ञाना आसुरं भावमाश्रिताः) (நமாம்துஷ்க்ருதிநோமூடா: ப்ரபத்யந்தே நராதமா:। மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம்பாவமாச்ரிதா:) என்றுவிசேஷிதராயும்; அப்படிப்பட்ட வஞ்சகருக்கு.

(அரியவிராமாநுசன்) ஆச்ரயிக்கைக்கு அரிதான ஸ்வபாவனான எம்பெருமானாருடைய. (புகழன்றி) கீழ்ப்பாட்டிலே வஞ்சகமான என்மனதிலே என்னுடைய தோஷத்தைப்பாராதே அதுவே போக்யமாக அங்கீகரித்துப் புகுந்திருக்கிற அத்தாலே ப்ரகாசிக்கின்ற வாத்ஸல்யமென்கிற கல்யாணகுணங்களையொழிய. (என்வாய்) இத்தனைநாளும் ப்ரதிகூலனாய்ப்போந்த வென்னுடைய வாக்கானது. (கொஞ்சிப்பரவகில்லாது) அக்குணங்களை ஸ்தோத்ரத்துக்கு ஸங்கோசித்து அத்தை ஸ்தோத்ரம்பண்ணமாட்டாது. முக்தாநுபவமாய்க்கொண்டு அறியுமெடமாட்டாது. கொஞ்சுதல் - [அபூர்ணோக்தியாகச்சொல்லுதல். (என்னவாழ்வின்று கூடியதே) இப்போது இந்த ஸம்ருத்தி நமக்குச்சேர்ந்ததுவன்றோ, இதுபெரும்பேறென்று வியக்கிறார். இராமாநுசன்புகழன்றி, என்வாயிலே - பகவத்குணங்களையும்ஸ்தோத்ரம்பண்ணமாட்டாதென்று தம்முடைய ஸமயநிஷ்டையை வெளியிட்டருளினாரென்றதாய்த்து. ... ... (உஅ)

உரை — அ. — இருபத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார் திவ்யகுணங்களை உள்ளபடி அறிந்திருக்குமவர்கள் திரளை என் கண்கள்கண்டு களிக்கும்படி கூட்டக்கடவ ஸுக்ருதம் என்று கூடுமோவென்கிறார்.

மூ.—கூட்டும்விதியென்றுகூடுங்கொலோதென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப்பசுந்தமிழ்தன்னைத்தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்தவிராமாநுசன்புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னையென்னாட்டங்கள்கண்டின்பமெய்திடவே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
தென்	தர்சநீயமான,	பாட்டு	பாட்டென்று ப்ரஸித்தமாய்,
குருகைப் பிரான்	திருநகரிக்கு நாதனான ஆழ்வாருடைய,	என்னும்	
		வேதம்	வேதரூபமாய்,

http://acharya.org

பதம்.	உரை.
பசுந்தமிழ் தன்னை	செந்தமிழா யிருக்கிற திருவாய்மொழியை,
தன்பத்தியென்னும்	தம்முடைய பக்தியாகிற,
வீட்டின்கண் வைத்த	வாஸஸ்தாநத்திலே வைத்த,
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
புகழ்	கல்யாணகுணங்களை,
மெய்	யதாவாக,
உணர்ந்தோர்	அறிந்திருக்குமவர்களுடைய
ஈட்டங்கள் தன்னை	ஸமூஹங்கள் தன்னை,
என் நாட்டங்கள்	என்னுடைய த்ருஷ்டிகளானவை
கண்டு	கண்டு,
இன்பம்	ஸுகத்தை,
எய்திட	ப்ராபிக்கும்படியாக,
கூட்டும்	என்றுகூடியும் இப்பேற்றை நமக்குச் சேர்விப்பதான,

பதம்.	உரை.
விதி	அவருடைய க்ருபை,
என்றுகூடுங்கொலோ	என்று கூடவற்றோ.

விதி-ஸுக்ருதம். இவர் தமக்கு பேற்றுக்கடியான ஸுக்ருதமாக நினைத்திருப்பது அத்தலையில் க்ருபையையிறே. * இராமாநுசன் புகழ் மெய்யுணர்ந்தோரீட்டங்கள் தன்னை தங்காலத்திலே காணுகிற்கச்செய்தே இவ்வஸ் சொல்லுவானென்னென்னில்; காண்கிறவிலன்று இவர்க்கு இப்போது அபேக்ஷை, கண்டால் கண்கள் அமிர்தமா யிருக்கை யன்றிக்கே இன்பமெய்துகை. இன்பம்-ப்ரேமம். அதுக்கடியானப்ரேமம் எம்பெருமானாருளாலே விளையவேணுமிறே; அத்தாலே சொல்லுகிறார். "உன் தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி என்னையாக்கியங்காட்படுத்தே" என்றிறே மேலும் இவர்ப்ரார்த்தனை. ஈட்டம் - திரள். நாட்டம் - த்ருஷ்டி. ... ... (உகூ)

வ்யா.—அ.—இருபத்தொன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே- தம்முடையவாக்கானது எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களுக்கு அநர்ஹமாய்விட்டதென்று அஸாமர்த்த்யத்தைச் சொல்லி, அவ்வளவிலே வடிப்போகாதே மேல்மேல் பெருகி வருகிற அபிநிவேசாதிசயத்தாலே, இப்பாட்டில் - தர்சநீயமான திருக்குருகைக்கு நிர்வாஹகராய் திருவாய்மொழி முகத்தாலே தத்வஹிதபுருஷார்த்தங்களை ஸர்வருக்கும் உபகரித்தருளின நம்மாழ்வாருடைய திவ்யஸூக்திமயமான வேதமாகிற செந்தமிழ் தன்னை தம்முடைய பக்தியாகிற கோயிலிலே ப்ரதிஷ்டிப்பித்துக்கொண்டிருக்கிற எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை உள்ளபடி தெளிந்திருக்கும் ஜ்ஞாநாதிகர்களுடைய திரள்களை என்கண்கள் கண்டு ஆநந்தித்துக்களிக்கும்படி சேர்க்கடவதான பாக்யம்

http://acharya.org

எப்போது ஸித்திக்குமோவென்று அதிமாத்ரமான ப்ரீதியைப்ரார்த்தித்தருளுகிறார்.

வ்யா.—(தென்குருகைப்பிரான்) (தென்) தர்சநீயமானதென்னுதல்; தெற்குதிக்கிலேயிருக்கிறதென்னுதல். (குருகை) பரமபதத்தைச் சேர்க்குமூரென்னுதல்; பரமபதத்தோடே ஸமமான வைபவத்தையுடைய ஊரென்னுதல். (பிரான்) இப்படிப்பட்ட திருநகரியிலே அவதரித்து லோகத்தாரெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படி தத்வஹித புருஷார்த்த தத்பாதாத்ம்யங்களை திவ்யப்ரபந்தமுகேந உபகரித்த நம்மாழ்வாருடைய. அன்றிக்கே, அவ்வூரிலேஅவதரிக்கையாலே எல்லாருக்கும் அவர்உத்தேச்யராயிருக்கிறவழியாலே அவ்வூருக்கு உபகாரகரென்னவுமாம். (பாட்டென்னும் வேதப் பசுந்தமிழ்தன்னை) (அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்சொன்ன) என்றும், (தமிழ்மறைகளாயிரமுமீன்றமுதல் தாய்சடகோபன்) என்றுஞ் சொல்லுகிறபடியே தென்குருகைப்பிரானருளிச்செய்த பாட்டென்று ப்ரஸித்தமாய்ஸாமவேதரூபமாய் செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியை.

(தன்பத்தியென்னும்) அத்தைவிஸ்மரித்தால்ஒருக்ஷணம் ஒரு கல்பம்போலேயிருக்கும்படி பண்ணக்கடவதான பரமபக்தியாகிறவதுவும். (தன்பத்தி) எல்லாருடையபக்தியைப்போலன்றிக்கே பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி அறிந்த எம்பெருமானாருடைய ப்ரேமம் அவருடைய ஜ்ஞாந வைசத்யத்துக்குத் தகுதியாயிருக்குமிறே, இப்படிப்பட்ட பக்தியாகிற. (வீட்டின்கண் வைத்த) கண் - ஸப்தமி. வீடு - ஆவாஸஸ்தாநம். அனர்க்யமான ரத்நத்தைச் செப்பிலே வைத்துக்கொண்டிருப்பாரைப்போலே தம்முடைய பக்தியாகிற மஹாகோசத்திலே வைத்துக்கொண்டிருக்கிற. (இராமாநுசன்புகழ்) திருவாய்மொழியை ஸதா காலக்ஷேபம் பண்ணியும், அர்த்திகளுக்கு ஸார்த்தமாக அர்த்தத்தை உபதேசித்தும், அந்தப் பாசுரங்களைக்கொண்டு சாரீரகஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநம் பண்ணியும், பிள்ளானைவிட்டு அதுக்கு வ்யாக்யாநம் பண்ணுவித்தும் இப்படிப்பட்ட வைபவத்தையுடையரான எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை.

(மெய்யுணர்ந்தோர்) மெய்யாகத் தெளிந்துகொண்டிருக்கிற பெரியோர்களுடைய. (ஈட்டங்கள்தன்னை) ([illegible]) ([illegible]) என்கிறபடியே - ஸப்தஸதியைக்யாதாரான பதிகளும், ஆழ்வான்முதலான முதலிகளும் ஆசார்யர்களும், அனைக்யாதரான

ஸ்ரீவைஷ்ணவர்களும், ஆண்டாள்முதலான ஸ்ரீவைஷ்ணவ ஸ்த்ரீகளுமாய்க்கொண்டு திரளாயிருக்குமுள்ள ததியருடைய திரள்களை. ஈட்டம் - திரள்.

(என் கண்கட்கள்) ஸமாச்ரயணபர்யந்தம் ஸ்வாதந்த்ர்யத்தையே பற்றி ஸேவிக்க நினைத்திருக்கிற என்னுடைய த்ருஷ்டிகள். கட்டம், த்ருஷ்டி. (கண்டு) கண்ணாரக்கண்டு ஸேவித்து. (இன்பமெய்திடவே) பண்ணின பின்பு, பூர்வகாலத்திலே தேஹாத்மபக்தியையாய்க்கொண்டு வருகிற வாஸநைகளைக் கற்கடைக்கொண்டு இந்த ஜ்ஞாநிகளுடைய திரள்களைக்கண்டு ஆநந்தத்தைப் பெறும்படி. (கூட்டும் விதி என்றுகூடுங்கொலோ) சேர்க்கும் பாக்யம் எப்போது ஸித்திக்கவல்லதோ. விதி-பாக்யம். இவர் தமக்குப் பேற்றுக்கடியான ஹேதுவாக நினைத்திருப்பது அத்தலையில் க்ருபையையிறே.

இராமாநுசன்புகழ் மெய்யுணர்ந்தோரீட்டங்கள்தன்னை நக்காலத்தில்காணாநிற்கச்செய்தேயிங்ஙனே சொல்லுவானென்னென்னில்; காண்கிறதிலன்று இப்போது இவருக்கு அபேக்ஷை, கண்டால் கண்கள் விச்ரமமாகையன்றிக்கே, இன்பமெய்துகை-ப்ரேமம், அதுக்கடியான ப்ரேமம் எம்பெருமானார் அருளாலேயிலேயே வேணுமிறே, அத்தாலே சொல்லுகிறார். அன்றிக்கே, மெய்யுணர்வாவது - அவனுக்ருஹஜ்ஞாநம். அது ஒருதேச விசேஷத்திலே சேர்ந்தபின்பு வரக்கடவதாகையாலே அப்படிப்பட்ட ஜ்ஞாநவைசத்யத்தையுடையரானவர்களுடைய திரளை இங்கேகண்டு பரிபூர்ணாநுபவம்பண்ணும்படியாக இப்பேற்றை நமக்குச் சேர்விப்பதான அவருடைய க்ருபை எக்காலத்துக் கூடவல்லதோ என்னவுமாம். அத்திரள்கள் இவருக்கு ஸாதரவிஷயங்களாயிருந்தாலும் நித்யஸூரிகளையே நினைக்குங்காணும். (உன் தொண்டர்களுக்கே அன்புற்றிருக்கும்படி என்னை யாக்கியங்காள் படுத்தே) என்கிறபோதும் இவருடைய ப்ரார்த்தனை. ... ... (௩௯)

உரை.—அ.—நாற்பதாம்பாட்டு. இப்படி இவர்ப்ரார்த்தித்த இத்தைக்கேட்டவர்கள், இவ்வளவேயோ உமக்கு, இனி பரமபத ப்ராப்திமுதலானவையும் அபேக்ஷிக்க வேண்டாவோ என்ன; எம்பெருமானார் என்னை அடிமைகொண்டருளப்பெற்றபின்பு ஸுகரூபமான மோக்ஷம் வந்து ஸித்திக்கிலென், துக்கரூபமான நரகம் வந்து சூழிலென் என்கிறார்.

மூ.—இன்பந்தருபெருவீடுவந்தெய்திலென்னெண்ணிறந்த
துன்பந்தருநிரயம்பலசூழிலென்தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன்மாயனெனமொழிந்த
அன்பனனகனிராமாநுசனென்னையாண்டனனே. (௪௦)

http://acharya.org

பதம்.	உரை.
தொல்லுலகில்	ப்ரவாஹரூபேண பழையதாய்ப் போருகிற ஜகத்திலே,
மன்	நித்யராய்,
பல்	அஸங்க்யாதரான,
உயிர்கட்கு	ஆத்மாக்களுக்கு,
இறையவன்	சேஷியானவன்,
மாயனென	ஸ்வரூபகுணங்களால் ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரனென்று,
மொழிந்த	ஸ்ரீபாஷ்யமுகேந அருளிச்செய்த,
அன்பன்	ஸ்நேஹத்தையுடையராய்,
	இப்படி ஸ்நேஹரூபமாக உபதேசிக்கும்தொழிய,
அனகன்	ஸ்வாதிலாபாதிகளில் விருப்பத்தாக் கடியான பாபஸம்பந்தமின்றிக்கேயிருக்கிற,

பதம்.	உரை.
இராமானுசன்	எம்பெருமானார்,
என்னை ஆண்டனன்	என்னை யடிமைகொண்டருளினார்; ஆனபின்பு,
இன்பம் தரு	ஆநந்தாவஹமாய், ஆத்மாநுபவ மாத்ரமன்றிக்கே,
பெருவீடு	பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷமானது,
வந்தெய்திலென்	வந்து ஸித்திக்கிலென்;
எண்ணிறந்த துன்பம் தரு	அஸங்க்யேய துக்காவஹமான,
நிரயம் பல	நரகங்கள் பலவும்வந்து,
சூழிலென்	தப்ப வொண்ணாதபடி வளைத்துக் கொள்ளிலென்; இவற்றை ஒன்றாக நினைத்திரேனென்று கருத்து. (௬௰)

வ்யா.—அ.—றுபதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-எம்பெருமானாருடைய கல்யாணகுண வைபவத்தை உள்ளபடி யறியும் பெரியோர்களுடைய திருவடிகளின்கீழ் ஆச்ரயத்தைப் பெறுவிக்குமதான பாக்யம் உண்டாவதெப்போதோவென்று இவர் அபேக்ஷிக்க, இத்தைக் கண்டவர்கள் உம்முடைய அபேக்ஷை இவ்வளவேயோ பின்னையுமுண்டோவென்ன; அநாதியான ஸம்ஸார ஸாகரத்திலே ப்ரமித்துத்திரிகிற ஜந்துக்களுக்கெல்லாம் ஸ்வாமியாய் ஆச்சர்யகுண சேஷ்டிதங்களையுடையனான ஸர்வேச்வரனென்று ஸ்ரீபாஷ்யாதிமுகேந அருளிச்செய்து, ப்ரயோஜநாந்தர கந்தரஹிதமான ப்ரீதியோடே உபகரித்தருளும் எம்பெருமானார் அடியேனை அடிமைகொண்டருளினார், இனி ஆநந்தாவஹமான பதம்வந்து ப்ராபித்தாலென், அஸங்க்யாதங்களான துக்கங்கள்வந்து ப்ராபித்தா

http://acharya.org

யெலன், இவற்றை ஒன்றாக நினைக்கிறேனேயென்று தம்முடைய அத்யவஸாயதார்ட்யத்தை யருளிச்செய்கிறார்.

வ்யா.—(தொல்லுலகில்மன்பல்லுயிர்கட்கு) ([illegible]) (ஸம்ஸாரசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:) என்கிறபடியே - அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தமுடைய ஸம்ஸாரத்திலே நித்யமாய் அஸங்க்யாதமாய்க் கொண்டு வர்த்திக்கிற ஆத்மாக்களுக்கு. (இறையவன்) ([illegible]) (யஸ்ஸர்வேஷு பூதேஷு திஷ்டன் ஸர்வேஷாம் பூதாநாமந்தர:, யம்ஸர்வபூதாநி ந விது:, யஸ்ய ஸர்வாணி பூதாநி சரீரம், யஸ்ஸர்வாணி பூதாந்யந்தரோ யமயதி, ஏஷ த ஆத்மா அந்தர்யாம்யம்ருத:) ([illegible]) (பீஷாஸ்மாத்வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:, பீஷாஸ்மாதக்நிஸ்சேந்த்ரஸ்ச, ம்ருத்யுர்தாவதி பஞ்சம இதி) (அந்த:ப்ரவிஷ்டஸ்ஸாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா) என்று இத்யாதிகளில் சொல்லப்படு கிறபடியே வகுத்த சேஷியானவன்.

(மாயனென) த்ரிவிக்ரம க்ருஷ்ணாவதாராதிரூபேணாவிர்ப்பாவ ஜடாயுமோக்ஷப்ரதாந [illegible] கோவர்த்தநோத்தாரணாதி ஆஸ்சர்ய சேஷ்டிதங்களை யுடையனான ஸர்வேஸ்வரனென்று. (மொழிந்த அன்பன்) ஸ்ரீபாஷ்யாதிமுகேந லோகத்தார்க்கெல்லா மருளிச்செய் தும் உபதேசித்தும் போந்த பரமப்ரீதியையுடையவன். (அநகன்) இந்த உபதேசங்களிலே சில வ்யாஜங்களைப் பூஜைகளை அபேக்ஷித் திருந்தால் அது அரணமைத்தல் கட்டும், அப்படியன்றிக்கே, ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டு அவற்றைப் பண்ணியருளினாகை யாலே (அநகன்) என்று அருளிச்செய்கிறார். (இராமானுசன்) எம்பெருமானார். (என்னை) அதிகாரமில்லாத வென்னை. இவ்வள வும் ப்ரதிகூலித்துப்போந்த வென்னை. (ஆண்டனனே) பரகத ஸ்வீகாரமாக என்னை யாளாக்கினார். ஆத்மாந்ததாஸ்யத்திலே அங்கீகரித்து உஜ்ஜீவிக்கும்படி என்னை யடிமைகொண்டருளி னார். இப்படிப்பட்ட புருஷார்த்தகாஷ்டையைப்பெற்றபின்பு.

(இன்பந்தருபெருவீடு வந்தெய்திலென்) ([illegible]) ([illegible]) (ஆமந்தணவைகுண்டேதது:) ([illegible]) என்றும்,

http://acharya.org

([illegible]) (நிரந்தரமெப்பாலுமுடைத்தான சுகங்களையுடையது) என்றும், (கலக்கமில்லாதொக்கொடு) என்றும் (அந்தமில் பேரின்பம்) என்றும் சொல்லுகிறபடியே ஆனந்தாவஹமாய் ஆத்மானுபவம்போலே பரிமிதமாயிருக்கையன்றிக்கே பரம புருஷார்த்த லக்ஷணமோக்ஷமானது இங்கேயுண்டு மேலிருந்தாலென், அத்தை லகுவாகக் கணிசித்திருக்கிறேனோ.

(எண்ணிறந்த துன்பம்) எல்லையற்ற நிமலமல்லாத துக்கம். ([illegible]) (யாம்யகிங்கரபாசாதி க்ரஹணந்தண்டதாடனம்। யமஸ்யதர்சனஞ்சோக்ர முக்ரமார்க்க விலோகனம்। கரம்பவாலுகாவஹ்னி யந்த்ரசஸ்த்ராதி பீஷணா:। ப்ரத்யேகநரகே யாஸ்ச யாதநாத் த்விஜதுஸ்ஸஹா:। க்ரகசை: பாட்யமானானாம் மூஷாயாஞ்சாபி தஹ்யதாம்। குடாரை: க்ருத்யமானானாம் பூமௌ சாபி நிகந்யதாம்। சூலமாரோப்யமாணானாம் வ்யாக்ரவக்த்ரே ப்ரவேச்யதாம்। க்ருத்ரைஸ்ஸம்பக்ஷ்யமாணானாம் த்வீபிபிஸ்சோபபுஜ்யதாம்। க்வாத்யதாம் தைலமத்யே ச க்லித்யதாம் க்ஷாரகர்த்தமே। உச்சாந்நிபாத்யமானானாம் க்ஷிப்யதாம் க்ஷேபயந்த்ரகை:। நரகே யானி து:கானி பாபஹேதூத்பவானி வை। ப்ராப்யந்தே நாரகைர்விப்ர தேஷாம் ஸங்க்யா ந வித்யதே;) என்னும்படியான துக்கங்களை.

(தருமிடரம்பலகுழியென்) கொடுக்கும் நரகங்கள் ஒன்றும் செய்யாதபடியாக நினைத்துக்கொண்டதுமென், இப்படிப்பட்ட நரகங்களை ஒருதுகைமாக நினைத்திருக்கிறேனோவென்று தம்முடைய த்ருடாத்யவஸாயத்தை யருளிச்செய்தாராய்த்து. ([illegible]) (தர்வீக்ஷ க்தவிசிந்தாமி நிரங்குசவிபூதய:। ராமானுஜபதாம்போஜ ஸமாச்ரயணசாலிந:) என்று எம்பாரருளிச்செய்தாரிறே. ... (௯௦)

உரை.—அ.—முப்பத்தொராம்பாட்டு. அநாதிகாலம் அனேகவாதமான பேரிகள்தோறும் தட்டித்திரிந்தாலும் இன்று நிர்ஹேதுகமாக எம்பெருமானாரைச்சேரப்பெற்றேனென்னும் ப்ரீதிப்ரகர்ஷத்தாலே திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

http://acharya.org

மூ.—ஆண்டுகணாள்திங்களாய்நிகழ்காலமெல்லாமனமே, ஈண்டு
பல்யோனிகள்தோறுழல்வோமின்றோரெண்ணின்றியே
காண்டருதோளண்ணல்தென்னத்தியூர்கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளனிராமாநுசனைப் பொருந்தினமே. (௬௨)

பதம்.	உரை.
மனமே	பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவாயிருக்கையாலே இரண்டுதசையிலும் கூடிநிற்கு நெஞ்சே,
நாளாய்	திநமாய்,
திங்களாய்	மாஸமாய்,
ஆண்டுகளாய்	ஸம்வத்ஸரங்களாய்க்கொண்டு,
நிகழ்கால மெல்லாம்	வர்த்திக்கின்றகாலமெல்லாம், தேவாதி பேதத்தாலும் அவாந்தர பேதத்தாலும் பரிகணிக்கவொண்ணாதபடி,
ஈண்டு	திரண்டு,
பல்	பலவகைப்பட்ட,
யோனிகள் தோறு	யோநிகள் தோறும்,
உழல்வோம்	ஒருகால் நுழைந்தவிடத்தே ஒன்பதின்கால் நுழைந்து தட்டித்திரிந்தநாம்,
இன்றுஓர் எண்ணின்றியே	இன்று ஒரு நினைவின்றிக்கேயிருக்கச்செய்தே,

பதம்.	உரை.
காண்தரு	காணத் தருகிறவையாயிருக்கின்ற,
தோள்	திருத்தோள்களை யுடையவராகையாலே ரூபகுணத்தாலும் உத்தேச்யராய்,
அண்ணல்	நமக்கு ஸ்வாமிகளாய்,
தென்	தர்சநீயமான,
அத்தியூர்	திருவத்தியூரிலே நித்யவாஸம் பண்ணுகையாலே அவ்வூரைத் தமக்கு நிரூபகமாகவுடைய பேரருளாளப் பெருமாளுடைய,
இணை கழற்கீழ்	பரஸ்பரஸத்ருசமான திருவடிகளின் கீழே,
பூண்ட	பிணிப்புண்ட,
அன்பாளன்	ஸ்நேஹத்தையுடையவரான,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
பொருந்தினம்	சேர்ந்துகொண்டு நிற்கப் பெற்றோம்.

நிகழ்தல்-வர்த்தித்தல். ஈண்டுதல்-திரளுதல். யோநி-ஜாதி. ( )

வ்யா.—அ.—மூப்பத்தேசாம்பாட்டு. லோகத்திலே ஒருவனுக்கு ஒருநிதி லபித்தால் தன்னுடைய அந்தரங்கனுக்குச் சொல்லுமாப்போலே, இவரும் தம்முடைய பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான மநஸ்ஸை ஸம்போதித்து காலமுகூர்த்தாதிரூபமாய்க்கொண்டு வர்த்திக்கிறகாலமெல்லாம் தேவாதிதேஹங்

http://acharya.org

கன்றோதாம் வஞ்சித்து இவ்வளவும் போந்தோம், இப்போது ஒருவாதகமின்றிக்கே வைத்தமாநிதியாய் நமக்கு உபகாரகனான பேரருளாளன் திருவடிகளின் கீழே அக்குற்றத்துக்கு ஒரு ஆபரணம்போலேயிருக்கிற ப்ரேமத்தையுடையரான எம்பெருமானாரைச்சேர்த்துக்கொண்டு நிற்கப்பெற்றோம் கண்டாயே! என்று சொல்லி ஹ்ருஷ்டராகிறார்.

வ்யா.—(ஆண்டுகள்நாள்திங்களாய் நிகழ்காலமெல்லாம்) ([illegible]) (கலாமுஹூர்த்தாகாஷ்ட்டாஸ்ச ஹோராத்ராஸ்ச ஸர்வஸ:, அர்த்தமாஸாமாஸாருதவ: ஸம்வத்ஸரம் ஜகல்பதாம்)என்றும், ([illegible]) (நிமேஷோமாநுஷோயோஸௌ மாத்ராமாத்ராப்ரமாணத:। தைகாஷ்டாநிமேஷாஷ்டாதஸ காஷ்டாத்ரிம்ஸத்கலா:। காஷ்டாப்ரமாணேனகலா நமுஹூர்த்த:। கலாப்ரமாணத்வயப்ரமாணம் முஹூர்த்தோதத்விதம்। அஹோராத்ரமுஹூர்த்தாஸ்து த்ரிம்ஸன்மாஸஸ்து தைஸ்ததா। மாஸைர்த்வாதசபிர்வர்ஷ மஹோராத்ரம்துதத்திவி) என்றும் சொல்லப்படுகிற ஸர்வகாலமும். ஆண்டுகள்-ஸம்வத்ஸரங்கள். நாள்-திவஸம். திங்கள்-மாஸம். நிகழ்தல்-வர்த்தித்தல்.

(ஈண்டு பல்யோநிகள்தோறுழல்வோம்) தேவமநுஷ்யாதி ஜாதிகள் ஒவ்வொன்றிலேதானே அநேகமநேகமாக அவாந்தரஜாதிகளுண்டு, அவையெல்லாவற்றிலும் ஒருக்கால் புகுந்ததிலே ஒன்பதின்கால் புகுந்து, (மாறி மாறிப் பலபிறப்பும்பிறந்து) என்கிறபடியே அநாதிகாலமெபிறந்து ஸஞ்சரித்துப்போந்தோம். ஈண்டுதல் - திரளுதல். யோநி - ஜாதி. உழலுதல் - தட்டித்திரிகை. (மநமே)பந்தமோக்ஷங்களிரண்டுக்கும்பொதுவாய் அறிவுக்கு ப்ரதாநபூதமாந அதிக்ரமங்கள் அந்தரங்கமானமநஸ்ஸை ஸம்போதித்தருளிச்செய்கிறார். ([illegible]) (ஏவமஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணேஸ்வகர்மபி: ஜீவே து:காகுலே) என்கிறபடியே இவ்வளவும் ஸஞ்சரித்துப் போந்தோம்.

(இன்று) இப்போது. (ஒரெண்ணின்றியே) நான் ஒன்றை யெண்ணிக்கொண்டிராதே யிருக்க, எம்பெருமானார்திருவடிகளிலே நான் ஒரு ஸாதநாநுஷ்டாநத்தையும் பண்ணாதேயிருக்க, (காண்டுகோளண்ணல்) ([illegible]

http://acharya.org

[illegible])(ஆயதாஸ்சஸுவ்ருத்தாஸ்சபாஹவஃபரிகோபமாஃ- ஸர்வபூஷணபூஷார்ஹாஃ) என்கிறபடியே இருக்குமவ்வ திருத்தோள்களையுடையராய் வித்யாடவியில் நின்றும் காஞ்சீபுரத்துக்குத் துணையாகவந்து, ([illegible])(அநுமேயபராக்ரமம்) என்று திருக்கச்சிநம்பிமுகமாக உபதேசித்த உபகாரகனும்.

(தென்னத்தியூரர்) தர்சநீயமாய், ([illegible]) (கசேசஞ காஞ்சி) என்னப்பட்ட காஞ்சீநகரத்திலே, ([illegible]) (ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்வல பாரிஜாதம்) என்று தாமே அருளிச்செய்யும்படி ஹஸ்திகிரியிலேயெழுந்தருளியிருக்கு மருந்த சேவியான பேரருளாளப் பெருமாளுடைய. (கழலிணைக்கீழ்) பாவநத்வ போக்யத்வங்களுக்கு பரம்பராவதிசமான திருவடிகளின்கீழே.(பூண்டவன்பானன்)பிரேமபூஷணமான திருவடிசேஷத்தை அலங்கரிக்குமவர்களைப்போலே தம்மாலே அலங்கரிக்கப்பட்ட பக்திப்ரகர்ஷத்தையுடையரான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (பொருந்தினமே) (உன்னைநெஞ்சமர்ந்து புகுந்தேனே) என்றும், ([illegible]) (ராமாநுஜ பதச்சாயா) என்றும் சொல்லுகிறபடியே பொருந்தி விட்டோம் கண்டாயே! யென்று தாம்பெற்ற வாழ்வுக்கு ஹர்ஷித்துக்கொண்டு நின்றாரய்த்து. ... ...(௩௧)

உரை.— அ.— முப்பத்திரண்டாம்பாட்டு. "இராமாநுசனைப் பொருந்தினம்" என்று இவர்ஹர்ஷிக்கிற இத்தைக்கண்டவர்கள், நாங்களும் இவ்விஷயத்தை லபிக்கப் பார்க்குமளவில் எங்களுக்கு உம்மைப்போலே ஆத்மகுணங்களொன்றுமில்லையேயென்ன;எம்பெருமானாரைச்சேருமவர்களுக்கு ஆத்மகுணங்களெல்லாம் தன்னடையேவந்துசேருமென்கிறார்

மூ.—பொருந்தியதேசும்பொறையுந்திறலும்புகழுநல்ல
திருந்தியஞானமுஞ்செல்வமுஞ்சேருஞ்செறுகலியால்
வருந்தியஞாலத்தைவண்மையினால்வந்தெடுத்தளித்த
அருந்தவனெங்களிராமாநுசனையடைபவர்க்கே. (௩௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செறு	அபிபவியாநின்றுள்ள,	வண்மையினால்	தம்முடைய ஔதார்யத்தாலே
கலியால்	கலிதோஷத்தாலே,	வந்து	வந்து,
வருந்திய	துக்கப்பட்ட,	எடுத்து	விமக்கோத்தாரணம் பண்ணி,
ஞாலத்தை	பூமியை, இத்தலையில் அர்த்தித்வ நிரபேக்ஷமாக,	அளித்த	ரக்ஷித்தவராய்,
		அரும்	ப்ரபந்நருக்கடுத்த ஸரணையாலே,

http://acharya.org

பதம்.	உரை.
	“[illegible]” (ஸ்மர்த்தவ்யரான மேஷாப்தபஸாமநிநித்தமாஞு:) என்கிறபடியே ஸர்வதபஸ்ஸுக்களிலும் மேலாய்க்கொண்டு அர்க்யமாயிருக்கிற,
தவன்	சரணாகதி ரூபதபஸ்ஸையுடையராய்,
எங்கள் இராமானுசனை	எங்களுக்குத் தம்மை முற்றூட்டாகத் தந்த எம்பெருமானாரை,
அடைபவர்க்கு	சேருமவர்களுக்கு
பொருந்திய தேசும்	ஸ்வரூபாநுரூபமான மதிப்பும்,
பொறையும்	ஸ்வஜனங்களில் அநவதாநத்தால் ஹேதுவான க்ஷமாகுணமும்,
திறலும்	ஸ்ரீதேசத்ப்பிபத்வரூபமான பராபிபவ ஸாமர்த்யமும்,
புகழும்	குணவத்தா ப்ரதையும்,
நல்ல	தத்வஹித புருஷார்த்தங்களை விஷயமாக வுடைத்தாகையாலும் அவை தன்னை யதாவஸ்த்திதமாக தர்சிக்கையாலும் விலக்ஷணமாய்,
திருந்திய ஞானமும்	கட்டளைப் பட்டிருக்கின்ற ஜ்ஞானமும்,
செல்வமும்	தத்கார்யமான பக்திரூப ஸம்பத்தும், “ஸநுச்ரு:” (ஸநிச்ரமிஹ) இத்யாதி ச்லோகத்தின்படியே பிராட்டிகடாக்ஷலக்ஷ்யமாமவர்களுக்கு அவைதானே வந்து மேல் விழும் என்னும் போலே இங்கும் இவர்கள் அபேக்ஷியாதிருக்க,
சேரும்	தானே வந்து சேரும்.

பொருந்துதல் - சேருதல்.
அதாவது - ஸ்வரூபாநுரூபத்வம்.
தேசு-மதிப்பு. ... ... (௩௨)

வ்யா.—அ.—முப்பத்திரண்டாம்பாட்டு. (இராமாநுசனைப் பொருந்தினமே!) என்று இவர் ஹ்ருஷ்டராகிற இத்தைக் கண்டவர்கள் நாங்களும் இவ்விஷயத்தை லபிக்கப்பார்க்குமளவில் எங்களுக்கு உம்மைப்போலே ஆத்மகுணங்களொன்றுமில்லையேயென்ன; எம்பெருமானாரைச் சேருமவர்களுக்கு ஆத்மகுணங்கள் முதலானவையெல்லாம் தன்னடையேவந்து சேருமென்கிறார்.

வ்யா.—(செறுகலியால் வருந்திய ஞாலத்தை) ([illegible]

http://acharya.org

[illegible] । [illegible] । [illegible] । [illegible]) (கலெளலெளவருபமைத்தேசபதியாச்சோகறுமிச்சலி। தக்கிபோதமைமாலைகளைத்தேபக்மஹாரமுகேசவர்களுச்சமாசாரவதிப்ராயர்த்திர்கவெலைச்சொம்। கமாமயதூமிர்க்கர்மவிக்கிஷ்ப்பாதலெறதுமி। வியாஜோககவெலதர்ம்பாக் கவிஷ்வருகுணைஸ்த்திதி: । தராம்பத்வசமோசைகவவதுந்திதேவாத்மகர்மம:) என்றுதொடங்கி, ([illegible] । [illegible] । [illegible]) (பசித்வஷ்வந்திபர்த்தாரமுத்தவிகமுதாஸ்த்ரியா। பர்த்தாபவிஷ்யதிகலௌ வித்தவானேவயோஷிதாம்। ஸ்த்ரியஃகலௌபவிஷ்யந்தி ஸ்வைரிண்யோலலிதஸ்ப்ருஹா: । அதாயர்ஷ்டிபயப்ராயா: ப்ரஜா:க்ஷுத்பயகாதரா: । பவிஷ்யந்திததாஸர்வா ககனாஸக்தத்ருஷ்டய:। அல்பாகமேபாஜிநோகாசம் தேவதாதிபூஜநம்। கவிஷ்யந்திகலௌப்ராப்தே ஸமைபத்ர்யாதிகைஃஃியாஃ।பாஷண்டஸஞ்சிதாசார்த்தி ஆச்ரமிஷ்யந்த்யஸஞ்ஜ்ஞாஃ। ய தாயதா ஹிபாஷண்ட வ்ருத்திர்மைத்ரேயலக்ஷ்யதே । ததாததாகலேர்வ்ருத்தி ரநுமேயாவிசக்ஷணை:) என்னுமளவும் ப்ரதிபாதித்தபடியே அதிபாவியாயின்னல் கலியாலே க்லேசப்படுகிற பூலோகத்தை. இருள் தருமாஞாலமான பூலோகத்திலேயிருந்தசேதநரையென்றபடி.

(வன்மையிருள்) ([illegible] ।[illegible]) (நல்லபோமாநுலேஷாதேதேஹாதேதுவிகாரஷணபங்குரா:। தத்ராபிதுர்லபம்மந்யே வைகுண்டப்ரியதர்சநம்)என்னும்படிக்குமாநுஷத்வத்தாலே இத்தலையில் அபேக்ஷையின்றிக்கேயிருக்க, தம்முடைய பரதுக்காஸஹிஷ்ணுத்வலக்ஷணக்ருபாமூலமான ஔதார்யத்தாலேவந்து பரமபதத்தில்நின்றும்க்ருபமாத்ரப்ரஸந்நராய்க்கொண்டு இத்தலோகத்திலேயெழுந்தருளி. ([illegible] । [illegible]) (புண்யாம்போஜவிகாஸாய பாபத்வாந்தக்ஷயாயச । ஸ்ரீமாநாவிராபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:) என்னக்கடவதிறே. (வெளிதே யருள்செய்வர்) என்கிறபடியே கீர்த்தனுகமாகவந்தருளி.

(எடுத்தளித்த) ([illegible]।[illegible])(ஸம்ஸாரஸாகரமக்நேஹ்யோ லோகாக்ரபதமீடர்த்தாம்। மக்நாநுத்தரதேலோகாந் காருண்யாச்

ஸந்த்ரபாவிநீ) என்கிறபடியே லோகத்தாரெல்லாரையும் அர்த்தித்வநிரபேக்ஷமாக ஸம்ஸாரத்தில்நின்றும் உத்தரிப்பித்து ரக்ஷித்தவராய், திருக்கோட்டியூர்நம்பி குஹ்யதமமாக உபதேசித்துப் போந்த சரமச்லோகார்த்தத்தை எல்லார்க்கும் பூரிதாநம்பண்ணியும், ஸ்ரீரங்கநாயகியார் முன்னிலையாக அழகிய மணவாளன் திருவடிகளிலே ப்ரபத்திபண்ணியும் ரக்ஷித்தருளினரென்று ப்ரஸித்தமிறே.

(அருந்தவன்) ([illegible]) (தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:) என்றும், ([illegible]) (ஸத்கர்மநிரதாஶ்ஶுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா | நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம்கோடிதமீமபி | யத்வேகாக்ரமநோமேக ஸர்வத்யாகாதராக்தநா:| முமுக்ஷுணாயத் ஸாங்க்யயோகேசபக்தித: | தேநதேநாப்யதேதத்தத் ந்யாஸேநைவமஹாமுநே) என்னும் சொல்லுகிறபடியே தபஸ்ஸுக்க ளெல்லாவற்றிலும்வைத்துக்கொண்டு உத்தமமான தபஸ்ஸாய் வ்யவஸாயிகளுக்கு துர்லபமாய், ([illegible]) (ப்ரபத்தேர்ந்யக் கலேகல்பகோடிஸஹஸ்ரேணாபி ஸாதநமந்நிதிமக்யாஸ:) என்று தம்மாலே நிஷ்கர்ஷிக்கப்பட்ட சரணாகதிரூப தபஸ்ஸையுடையவராய்.

(எங்கள்) எங்களுடைய ஸ்வாமியான. எங்களுக்குத் தம்மை முற்றூட்டாகக்கொடுத்தருளின வென்றுதல், ஞாலத்தையெடுத் தருளுகை ஒருப்பாடுமாய் தம்மையெடுத்தருளுகைக்கே வந்தா ரென்றாகாநும் இவரபிஸந்தி. அன்றிக்கே, ([illegible]) (விநாசாயசதுஷ்க்ருதாம்) என்று பகவானுக்குத்தானே சொல்லி அநேகம்பேரை ஸம்ஹரித்தாலும் ஒருவனான ராவணஸம்ஹாரத்திலே ப்ராதாந்யத்திலும் ப்ரதாநமாயிருக்குமாப்போலே, லோகத் தாரை யெல்லாம் உத்தரிப்பிக்கவேணுமென்று அவதரித்தாராகி லும் தம்மையொருவரையும் உத்தரிப்பிக்கவேணுமென்று அவ தரித்தாராகக்காணும் இவர்நினைத்திருப்பது. (இராமாநுசனை) இப் படிப்பட்ட எம்பெருமானாரை. (அடைபவர்க்கே) ஸமாச்ரயணம் பண்ணினவர்களுக்கே. ([illegible]) (க்ஷேமஸ் ஸவிஷ்யதித்ரபவச்சிதாநாம்) என்னக்கடவதிறே.

(பொருந்தியதேசம்) ஸ்வரூபத்துக்குத் தகுதியான பராபி பவந ஸாமர்த்தியமும், ஸர்வஜ்ஞபண்டாரத்திலிருந்த மாயாவாதி களையும், திருநாராயணபுரத்திலிருந்த பௌத்தரையும், யாதவ

http://acharya.org

ப்ரகாசன், பஞ்சமூர்த்திதொடக்கமானவனவையும் ப்ரஸங்கமுகத்தாலே அபிபவித்தவருடைய மதிப்புக்குப்போலியான மதிப்பென்றபடி. பொருந்துதல் - சேருதல். அதாவது - ஸ்வரூபாநுரூபத்வம். தேசு - மதிப்பு. (பொறையும்) எத்தனை வ்யஸநங்கள்வந்து மேல்விழுந்தாலும் அவைஸாதாரணுத்தர்ஷங்களுக்குடலாய், ([illegible]) (விபதிதைர்யமதாப்ப்யுதயேக்ஷமா) என்னும் படியான க்ஷமாகுணமும்.

(திறலும்) பகவத்பாகவதாசார்யவிஷயங்களிலே, ([illegible]) (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) என்றாப்போலே ஸகலவித கைங்கர்யங்களையும் பண்ணித் தலைக்கட்டுகைக்குறுப்பான மநோ பலமும். (புகழும்) சமதமாத்யாத்மகுணமென்னுதல்; ஸகலதிக்வ்யாப்தையான கீர்த்தியென்னுதல். (நல்லதிருத்தியஞானமும்) சேதநராயிருப்பார்க்கெல்லாம் ஸாதாரணமாயிருப்பதொரு ஜ்ஞாநமுண்டு - ஐஹிகாமுஷ்மிகவிஷயங்களிலே அநுகூலமாயும் ப்ரதிகூலமாயுமிருக்கிற விஷயங்களையும் அவற்றுக்கு ஸாதநமாயிருக்குமவற்றை அறிவிப்பிக்கக்கடவதாய், அப்படியன்றிக்கே, ஸதாசார்ய ஸமாச்ரயணம்பண்ணி குருகுலவாஸாதிகளாலே அவனுக்கு முகமலர்த்தியுண்டாக்கி அவனால் உபதேசிக்கப்பட்ட தத்வஹித புருஷார்த்த தத்வயாதாத்ம்ய ஜ்ஞாநமும். ([illegible]) (தத்வித்திப்ரணிபாதேந பரிப்ரச்நேநஸேவயா। உபதேக்ஷ்யந்திதேஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்சிந:) (ஸமித்பாணிபரிப்ரச்ச ப்ரணிபாத்யாபிவாத்யச) என்றும், ([illegible]) (ஏதத்ஜ்ஞாநமிதிப்ரோக்தம்) என்றும், (செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்) என்றும் சொல்லுகிறபடியே - ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே கட்டளைப்பட்ட ஸம்யக்ஜ்ஞாநமும். (செல்வமும்) ([illegible]) (ஸாநுரிச்ரீரமர்த்தாஸதாம்) என்னுஞ் சொல்லப்படுகிற வேதவேதாந்த பாரகத்வமாகிற ஸ்ரீயும். ([illegible]) (லக்ஷ்மணோலக்ஷ்மிஸம்பந்ந:) என்கிற கைங்கர்யஸ்ரீயுமென்னுதல்; (நல்லபதத்தால்மனைவாழ்வர் கொண்ட பெண்டிர்மக்கள்) என்கிறபடியே ஐஹிகஸ்ரீயுமென்னுதல். இவையெல்லாம் அறமனுமிசையவைக்க தன்னடையே சேருமென்றதாய்த்து. ( )

உரை.—அ.—முப்பத்துமூன்றாம்பாட்டு. அஸ்த்ரபூஷணாத்யாயத்தில் சொல்லுகிறபடியே மகத்தத்வாதிகளுக்கு அபிமாநிகளாயிருக்கிற திருவாழிமுதலான திவ்யாயுதங்களினுடைய ப்ரஸாதத்தாலே இந்த்ரியஜயாதிகள் உண்டாகவேண்டியிருக்க எம்பெருமானாரை ஆச்ரயிக்கவே இவையெல்லாமுண்டாமென்கிறது

னன்றென்றபடி; அந்த ஸ்ரீபஞ்சாயுதங்களும் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானார் பக்கலிலே யாயினவென்கிறார். அதவா, அவையெல்லாம் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானாராய்வந்து திருவவதரித்தனவென்னவுமாம்.

மூ.—அடையார்கமலத்தலர்மகள்கேள்வன்கையாழியென்னும்
படையோடுநாந்தகமும்படர்தண்டுமொண்சார்ங்கவில்லும்
புடையார்புரிசங்கமுமிந்தப்பூதலங்காப்பதற்கென் (று)
இடையேயிராமாநுசமுனியாயினவிந்நிலத்தே. (கக)

பதம்.	உரை.
அடையார் கமலத்தலர்மகள்	இதழ்நெருக்கத்தை யுடைத்தான தாமரையிலுண்டான பூவை ஜந்மபூமியாக வுடையளான பிராட்டிக்கு,
கேள்வன்	வல்லபனானவனுடைய,
கை	திருக்கையிலே வர்த்திப்பதாய், “[illegible]” (சலஸ்வரூபமத்யந்தஜவேநாந்தரிதாநிலம், சக்ர ஸ்வரூபஞ்ச மநோதத்தே விஷ்ணுகரேஸ்திதம்) என்கிறபடியே மனஸ்தத்வாபிமானியாயிருக்கிற,
ஆழியென்னும்	திருவாழியென்று ப்ரஸித்தமான,
படையோடு	திவ்யாயுதத்தோடே, “[illegible]” (பிபர்த்தியச்சாஸிரத்னமச்யுதோத்யந்த நிர்மலம்| வித்யா மயந்து தஜ்ஞானம்) என்கிறபடியே,
நாந்தகமும்	ஜ்ஞாநமயமான திருவாளும், “[illegible]” (புத்திரப்யாஸ்தே கதாரூபேண மாதவே) என்கிறபடியே புத்த்யபிமாநியாய்,
படர்	ஸஞ்சாரத்திலே பரக்கிருக்கும்,
தண்டும்	ஸ்ரீகதையும், “[illegible]” (பூதாதிமிந்த்ரியாதிஞ்ச த்விதாஹங்காரமீச்வர:| பிபர்த்தி சங்கரூபேண சார்ங்கரூபேண ச

http://acharya.org

பதம்.	உரை.
	ஸ்த்திரம்)என்கிற படியே இத்திவ்ய காரணமான ஜ்ஞா விகாஸங் காரணமாயிருக்கிற,
ஒண்	விலக்ஷணமான,
சார்ங்கவில்லும்	ஸ்ரீசார்ங்க மென்னும் திருநாமத்தை யுடைய திருவில்லும்,
	பூதகாரணமான நாமரூபங்காரணமாகியாய் மிகமுமுங்கு கைக்குறுப் பரம்படி,
புடையார்	புடைபெருத்து,
புரி	தர்சநீயமான வக்ர வேஷத்தையுடைய,
சங்கமும்	ஸ்ரீபாஞ்சஜந்யமும்,
இந்தப்பூதலம்	இந்த பூதலத்தை,
காப்பதற்கென்று	ரக்ஷிக்கைக்காக வென்று,
இங்கிலத்தே	இந்தபூதலத்திலே,

பதம்.	உரை.
இராமாநுசமுனி இடையே ஆயின	எம்பெருமானார் பக்கலிலே ஆயின.

இவர்பக்கலிலே ஆகையாவது - இவர்திருமேனியைக் கடாக்ஷித்து நின்று இவர் அதிகரித்த கார்யத்துக்கு ஸஹகரிக்கை. அடையார் கமலமென்று தொடங்கி, புடையார் புரிசங்கமும் இந்தப்பூதலம் காப்பதற்கென்று - இங்கிலத்தே - இராமாநுசமுனி - இடையே - ஆயின என்று அந்வயம்.

மற்றைப்பக்ஷத்தில், அடையார்கமலமென்று தொடங்கி, புடையார் புரிசங்கமும் இந்தபூமியை ரக்ஷிக்கவேணுமென்று இந்த பூமிதன்னிலே நடுவே எம்பெருமானாராய் வந்து அவதரித்தன வென்கை. இத்தால் - இவருடைய விரோதி நிரஸநஸாமர்த்யத்தைப்பற்ற ஸ்ரீபஞ்சாயுதாவேசாவதார மென்று ப்ரபாவகத்தைப் பண்ணிற்றாய்த்து. அடை - இலை. படை - ஆயுதம். படர்தல் - பரம்புதல்.... ... ... (௩௩)

வ்யா.—அ.—முப்பத்துமூன்றும்பாட்டு. இலைகளாலே செருக்கியிருக்கிற தாமரைப்பூவிலே அவதரித்த பெரியபிராட்டியார்க்கு வல்லபனான ஸர்வேச்வரனுடைய திருக்கையிலே ஸ்த்தாவரப்ரதிஷ்டையாயிருக்கிற திருவாழியாழ்வானும், அவனோடு ஒருகோவையாயிருக்கிற ஸ்ரீநந்தகமென்னும் பேரையுடைத்தான கட்கமும், ஆச்ரிதரக்ஷணத்தில் பொறுப்பையுடைத்தான ஸ்ரீகதையும், அதிச்லாக்யமான ஸ்ரீசார்ங்கமும், புடையாலே தர்சநீயமாய் வலம்புரியென்னும் பேரையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யமும், கலிதோஷாபிபூதமாய்க் காணப்படுகிற இந்தலோகத்தை ரக்ஷிப்பதாகவே எம்பெருமானார் அதிகரித்த கார்யத்துக்கு ஸஹகாரிகளாய்க்கொண்டு அவர்பக்கலிலேயாய்த்தென்கிறார். அன்றிக்கே, பஞ்சாயுதங்களும் எம்பெருமானாராய் வந்து திருவவதரித்தனவென்கிறாரென்னவுமாம்.

http://acharya.org

வ்யா.— (அடையார்கமலத்தலர்மகள்கேள்வன்) தாமரை தான் உ கம்பீராம்பஸ்ஸமுத்பூதமாகையால், செவ்வி நாற்றம் குளிர்த்தி முதலான குணங்களெல்லாம் மிருக்கு இலைநெருக்கத்தையுடைத் தாயிருக்குமிறே; அப்படிப்பட்ட தாமரைப்பூவினுடைய பரிமளந் தான் ஒருவடிவுகொண்டாப்போலே இதிலேயொடுபட்டுவிடமாட்டா தேதிருவவதரித்த பெரியபிராட்டியாருக்கு வல்லபனான ஸ்ரீயபதியா னாதேவனுடைய. அடை-இலை. (கையாழியென்னும்படையோடு) திருக்கையிலே நிரந்தரமாகவிருக்குமன்ன திருவாழியென்கிற ஆயுத விசேஷத்தோடே. ([illegible]) (சலஸ்வரூபமத்யந்த ஐவேநாக்ரதிநாயிலம்। சக்ரஸ்வரூபஞ்சமனோ தத்தேவிஷ்ணுகரேஸ்த்திதம்) என்று அஸ்த்ரபூஷணாத்யாயத்தில் சொல்லுகிறபடியே மனஸ்தத்வாபிமாநியாய்ச் சம்பிரஸ்வயாவனுன திருவாழியாழ்வானோடே ஒருகோவையாகக் கணிக்கப்படவென்றபடி. விரோதிகளாலே ஆச்ரிதர் கலிவுபட்டு ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்போலே கூப்பிட அக்கூப்பீடு கேட்டு ஆயுதம்வரக்கொள்ளில் பணிப்படுமென்று எப்போதும் ஆழிலைகையை வைத்துக்கொண்டே யிருக்கிறவன்காணும். படை-ஆயுதம்.

(நாந்தகமும்) ([illegible]) (பிபர்த்தியச்சாஸிரத்நமச்யுதோத்யந்தநிர்மலம்| வித்யாமயந்துதஜ்ஞாநமவித்யாசர்மஸம்ஸ்த்திதம்) என்கிறபடியே ஜ்ஞாநாபிமாநியாய் நந்தகமென்னும் பேரையுடைத்தான திருவாளும். (படர்தண்டும்) ([illegible]) (புத்திஸ்வாஸ்தே கதாரூபேணமாதவே) என்கிறபடியே புத்த்யபிமாநியாய் ஆச்ரிதவிரோதிகளைப்ரதிபக்ஷத்தை நெரிக்கும்போது அறிவிபுலமாய்த்தோன்றும் ஸ்ரீகதையும். படர்தல்-விபுலத்வம்.

(ஒண்சார்ங்கவில்லும் புடைபார்ப்புரிசங்கமும்) ([illegible]) (பூதாதிமிந்த்ரியாதிஞ்ச த்விதாஹங்காரமீச்வர:| பிபர்த்தி சங்கரூபேண சார்ங்கரூபேண ஸ்த்திதம்) என்கிறபடியே இந்த்ரிய காரணமான ஸாத்விகாஹங்காராபிமாநியாய் அத்யந்த விலக்ஷணமாய் சார்ங்க மென்னும் பேரையுடைத்தான திருவில்லும். பூதகாரணமான தாமஸாஹங்காராபிமாநியாய், மிகவும் முழங்குகைக்கு ஏற்பாம்படி புடைபெருத்து தர்சநீயமான ஸம்ஸ்தாநத்தையுடைய வலம்புரியான ஸ்ரீபாஞ்சஜந்யமும். ஒண்மை-அழகு. புடை-இடம். புரி-வலம்புரி. அதாவது-தக்ஷிணாவர்த்தம்.

http://acharya.org

(இந்தப்பூதலங் காப்பதற்கென்று) பரித்ராணார்த்தமாய் நிதிஸ் பாட்டில்போலே கலிஸாம்ராஜ்யம்பண்ணி வேதமார்க்கத்தை ரூஸ்யடிபேடத்திக்கொண்டுபோருகிற • இருள்தருமாஞாலத்தை ரக்ஷிக்கைக்காகவென்று. (இடையே) மத்யேவந்து. (இந்நிலத்தே) நித்யஸூரிகளான இவர்கள் அத்யந்த ஹேயமாய் அருவருக்கும் படியான இந்தலோகத்திலே.(இராமாநுச முனியாயின) எம்பெருமானார்தாம் மநநம்பண்ணிக்கொண்டிருக்கிற இந்தஜநத்ரக்ஷண ஸர்வத்துக்கு நாங்கள் ஸஹகரிக்கைக்காக இவர்பக்கலிலே ஆயின. எம்பெருமானார்க்குக் கையாளாயிருந்தனவென்றபடி. அன்றிக்கே, இந்தலோகத்தை ரக்ஷிக்கைக்காக ஸ்ரீபஞ்சாயுதங்களும் தாங்களே வந்து இந்தலோகத்திலே எம்பெருமானாராய் அவதரித்தனவென்னவுமாம். ([illegible]) (ப்ரதமவக்திமதேஜஸ்ஷ்மீகணபாவப்ரபுசம்மத் பரிரக்ஷணேயதீந்த்ரா: | அப்ரதிப்ரதிபக்ஷமயந்த்வை வர்வர்த்தேபஞ்சபி சாயுதாதிமூர்த்தய:) என்று இவ்வர்த்தத்தை அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே. ... (௬௬)

உரை.—அ.—(மூப்பத்துநாலாம்பாட்டு) கலிதோஷாபி பூதமான ஜநத்தை ரக்ஷித்தமையைச்சொல்லி, இவரை ஆச்ரயிப்பார்க்கு ஆத்மகுணங்கள் தாமேவந்து சேருமென்று மத்தையும், இவருடைய ஆத்மகுணப்ரதாநத்வஹேதுவான ஸௌசீல்யத்தையு மருளிச்செய்தார்-கீழிரண்டுபாட்டாலே; இப்பாட்டில் - இப்படிகாலதோஷத்தைப் போக்கி லோகத்தை ரக்ஷித்தவளவிலும் எம்பெருமானார்குணங்கள் ப்ரகாசித்ததில்லை, என்கர்மத்தைக் கழித்தபின்பு வைலக்ஷண்யத்தை பெற்றதென்கிறார்.

மூ.—நிலத்தைச்செறுத்துண்ணும்நீசக்கலியைநினைப்பரிய
பலத்தைச்செறுத்தும்பிறங்கியதில்லையென்பெய்வினைதென்
புலத்திற்பொறித்தவப்புத்தகச்சும்மைபொறுக்கியபின் (ந
லத்தைப்பொறுத்ததிராமாநுசன்றன்நயப்புகழே. (௬௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இராமாநுசன்றன்	எம்பெருமானாருடைய,	நீசக்கலியை	ஹேயமானகலியை,
நயம்	ஸ்ப்ருஹணீயமான,	நினைப்பரிய	மநஸ்ஸாலே பரிச்சேதிக்க அரிதாயிருக்குன்ன,
புகழ்	குணஜாதம்,		
நிலத்தை	லோகத்தை,		
செறுத்து	அபிபவித்து,	பலத்தை	பலத்தை,
உண்ணும்	ஜீவியாநின்றுள்ளன,		தேஜஸ்ஸாதத்தில் ஜிகிரம்போலே

http://acharya.org

பதம்.	உரை.
செறிந்தும்	அபிமதமானபடி பண்ணினவளவிலும்
பிறங்கிய இல்லை	ப்ரகாசித்ததில்லை,
என்	என்னுடைய,
செய்	உண்டாக்கப்பட்ட,
வினை	பாபங்களை,
தென்புலத்தில்	யமலோகத்திலே,
பொறித்த	எழுதிவைத்த,
அப்புத்தகச் சும்மை	அந்தபுஸ்தக பாரத்தை,
பொறுக்கியபின்	தவிர்த்தபின்பு,
இலத்தை	ஒளஜ்ஜ்வல்ய ரூபமாக
பொறுத்தது	ஸௌலப்யத்தை தரித்தது.

பிறங்குதல் - ப்ரகாசித்தல். தென்புலம்-யமபுரம். சும்மை-சுமை. பொறுக்குதல் - தவிர்த்தல். சயம்-விருப்பம். ... (உச)

வ்யா.—அ.—மூப்பத்துகாலாம்பாட்டு. மூன்றாம்பாட்டிலே-தனியினுடையக்ரௌர்யத்தாலே க்லேசப்பட்ட லோகத்தைரக்ஷித்தஎம்பெருமானுடை ஆச்ரயித்தவர்களுக்கு ஸ்வரூபாநுரூபமான ஸம்பத்துக்கள் தன்னடையே வந்துசேருமென்றும், அவர்தாம் அத்ரஷணத்துக்குதப்பான ஸௌலப்யத்தையுடையவரென்றும் ப்ரதிபாதித்தது, இப்பாட்டிலே- அப்படிப்பட்டரக்ஷணத்தாலே எம்பெருமானுடையப்ரபாவம்ப்ரகாசித்ததில்லை,என்னுடைய ஆன்ருசம்ஸ்யங்களை யமலோகத்திலே யெழுதிவைத்த புஸ்தகபாரத்தை யெல்லாம் தவிர்த்தபின்புதானும் அவருடைய கல்யாணகுணவைபவத்துக்கு ஒருப்ரகாசம் லபித்ததென்கிறார்.!

வ்யா.—(இலம்) தர்மார்த்த காமமோக்ஷ புருஷார்த்தங்களுக்கெல்லாம் விளைநிலமான மநுஷ்யப்ரஜை. கர்மக்ஷேத்ரத்வப்ரசித்தியுக்களிலே, ([illegible]) (சாதுர்வர்ண்யம்மயாஸ்ருஷ்டம் குணகர்மவிபாகசः) என்று சொல்லப்படுகிறதத்தர்மமர்யாதைகளிலே நடக்க. ([illegible]) என்கிறபடியே ஸேவோத்தமமாக பகவதாஜ்ஞாபரிபாலநம்பண்ணிக்கொண்டுபோருகிற பூமியென்றபடி.

(இலத்தை) அந்தபூமியிலே வர்த்திக்கிற சேதநரை. (செறிந்து) அந்த மர்யாதையையெல்லாம் மூலைபடியே நடத்திக்கொண்டு பூர்வகாலத்துக்கு விபரீதமாக எல்லாரையும் துர்கதிகுலைசாம்படிபண்ணி. (உன்றும்) லோகத்தாரை யெல்லாம் ஸ்வவசமாக்கிக்கொண்டு ஸாமராஜ்யம்பண்ணி நிற்கிற. கலிதானே லோக

http://acharya.org

த்தை அழித்த ப்ரகாரத்தை இதில் பாட்டுகளிலே பரக்கச்சொன்னோம். (நீசக்கலியை) மநுஷ்யரிலே சண்டாளரைப்போலே சதுர் யுகங்களிலே அதிஹேயமான கலியுகமும். (நீசக்கலியை) நீசமான கலியுகத்திலுடைய. (நினைப்பரியபலத்தை) ([illegible]) (அப்ராப்யமநஸாஸஹ) என்னுமாப்போலே எத்தனையேனும் தாமுடையார்க்கும் அத்யுகத்திலுடைய வ்சௌர்யம் நட்டாதபடி வர்த்திப்போ மென்றுநினைத்திருக்கவு மரிதாயிருக்கிற பலத்தை. மனஸ்ஸால் பரிச்சேதிக்கவரிதா யிருக்கிற பலத்தை யென்றபடி. ([illegible]) (மதுராபலா) என்றுசொல்லப்படுகிற ஸர்வேச்வரனுடைய பலத்தை பரிச்சேதிக்கிலும் இதினுடையபலத்தை பரிச்சேதிக்கவொண்ணாதென்றும்.

(செற்றும்) பரமகாருணிகனான அந்தகாரத்தை ஸவிதாவானவனப்போக்குமாப்போலே கலிதோஷத்தைநிவர்த்திப்பித்தவனாயும் (பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம், கலியும் நரகமும் கைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை, கலியும் கெடும் கண்டுகொண்மின்) என்று நம்மாழ்வார் மதிசய மருளப்பெற்றவரும் இவருடைய அவதாரத்தைக் கொண்டாடுகிறதே. ([illegible]) ([illegible]) (ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததியம: கில தஸ்யகர்ணமூலே। பரிஹர மதுஸூதனப்ரபன்னாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் நவைஷ்ணவாநாம்) (பலசாஸமிந்த்ரயந்தி [illegible]) ([illegible]) என்கிறபடியே இவரவதரித்து எல்லாரையும் ப்ரபத்திமார்க்கத்திலே நடப்பித்து பாகவதராகப்பண்ணி, (கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து காவலிட்டுழிதருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே) என்கிற ப்ரகாரத்திலே கலியினுடைய வெக்காயம் நட்டாதபடி லோகத்தையெல்லாம் ரக்ஷித்தவனாயுமென்றபடி.

(இராமாநுசன்றன் நயப்புகழே) எம்பெருமானாருடைய ஸ்ப்ருஹணீயமான கல்யாணகுணங்கள். நயம் - விருப்பம். (பிறக்கவில்லை) ப்ரகாசித்ததில்லை. பின்னை எத்தாலே ப்ரகாசித்ததென்றால் (என்பெய்வினை) அநாதிகாலமே தொடங்கி இவ்வளவாக, ([illegible]) ([illegible]) என்றும், ([illegible]) ([illegible]) என்றும் சொல்லுகிறபடியே ஹேயோபாதேயவிவேக [illegible]

http://acharya.org

வென்றாலே உண்டாக்கப்பட்ட அசத்யங்களையும் க்ஷேத்ரங்களையும் தொடக்கமான பாபங்களை, பெய்கை-உண்டாக்குகை.

(தென்புலத்தில்) தக்ஷிணதிக்கிலே பாதகஸ்தலமாய்க்கொண்டிருக்கிறயமலோகத்திலே. தென்புலம் - யமபுரம். பொறித்த - சித்ரகுப்தனாலே எழுதப்பட்ட.(அப்புத்தகச்சும்மை) அந்தபுஸ்தகபாரங்களை. சும்மை-பாரம். இத்தால் - பகவதபசாரபாகவதாபசாரானந்யாபசாரரூபமாய், ஸஞ்சிதப்ராரப்தரூபமாயிருக்கிற கர்மங்களுடைய அபரிமிதத்வத்தைச்சொல்லிற்றாய்த்து.(பொறுக்கியபின்) அந்தபாபங்களெல்லாவற்றையும் பிதிகேறி படாதபடி தவிர்த்தபின்பு. பொறுக்குதல் - தவிர்த்தல். (நலத்தைப் பொறுத்தது) (ஸம்ஸாரிணாம் ...) (பரபத்வாத்தலையாய ஸ்ரீமாதானிரூபூமென ராமாநுஜமுநிர்யாதீ:) என்கிறபடியே ப்ரகாசத்தைப்பெற்றது அப்போதென்றபடி.(கச0)

உரை.—அ.—முப்பத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானார் உம்மளவில் செய்தவிஷயீகாரத்தைப் பார்த்து கர்மமெல்லாம் கழிந்ததென்றிராநிறும் ப்ரக்ருதியோடே யிருக்கையாலே இன்னமும் அவையவர்ந்து ஆக்ரமிக்கிலேவென்ன; இனி அவற்றுக்கு வந்து என்னை படருகைக்கு வழியில்லையென்கிறார்.

ரூ—நயவேனொருதெய்வம்நானிலத்தேசிலமானிடத்தைப்
புயலேயெனக்கவிபோற்றிசெய்யேன்பொன்னரங்கமென்னில்
மயலேபெருகுமிராமாநுசன்மன்னுமாமலர்த்தாள்
அயரேனருவினையென்னையெவ்வாறின்றடர்ப்பதுவே.(கரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒருதெய்வம்	புறம்பொரு தெய்வத்தை,	பொன்	ஸ்ப்ருஹணீயமான,
நயவேன்	விரும்பேன்;	அரங்கமென்னில்	கோயிலென்னும்ப்ரஸங்கத்திலே,
நானிலத்தே	இந்தலோகத்திலே,	மயல்பெருகும்	காதல் மையல் அபிவ்ருத்தமாகா நிற்கும்,
சிலமானிடத்தை	க்ஷுத்ர மநுஷ்யரை,	இராமாநுசன்	எம்பெருமானாருடைய,
புயலேயென	புயலேயென்று, அவர்களுடைய ஔதார்யத்துக்கு மேகத்தையொப்பாக	மன்னு	பரம்பரம்பொருந்தி
		மா	பரமபூஜ்யமாய்,
		மலர்	போக்யமான,
		தாள்	திருவடிகளை,
கவிபோற்றிசெய்யேன்	கவிகள்சொல்லித் துதியேன்;	அயரேன்	விஸ்மரியேன்;
			ஆதலால்,
		அரு	அறுக்கவரிதான,

http://acharya.org

பதம்.	உரை.
வினை	கர்மங்கள்,
எவ்வாறு	எவ்வழியாலே,
என்னை இன்று அடர்ப்பது	என்னை இன்று அடர்ப்பது.

அப்ராப்த தேவதா ப்ராவண்யமும், அவேஷ்யஸேவையும் அப்ராப்த விஷயஸம்ச்லேஷமுமாகி த்து கர்மமடருகைக்கு வழி; இவையொன்றும் எனக்கில்லாமையால் கர்மத்துக்கு என்னை ஒருவழியாலும் அடர்க்கப் போகாதென்று கருத்து. கவிபோற்றிசெய்வேனென்றவிது - கவிசெய்வேன், போற்றிசெய்வேன் என்றபிரித்து யோஜிக்கவுமாம். அப்போது, கவிசெய்கையாவது - அவர்களைக் கவிபாடுகை; போற்றுகையாவது - கேவலம்புகழுகை. நயவேனென்றது - விரும்பேனென்றபடி. புயல்-மேகம். மயல்-ப்ராந்தி. அயர்வு-மறப்பு. ... (௯௬)

வ்யா.—அ.—முப்பத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானாருடைமை நிர்ஹேதுகமாக அங்கீகரித்தருளின ஸாஜுகூல்யமானாத்ம்யத்தாலே களித்து அநாதியான கர்மங்களென்னை பாதிக்கமாட்டாதென்றீர், நீர்ப்ரக்ருதிஸம்பந்தத்தோடே யிருக்கிறகாலமெல்லாம், (नाभुक्तं क्षीयते कर्म) (நாபுக்தம்க்ஷீயதேகர்ம) என்கிறபடியே கர்மபலாநுபவமா யன்றோ யிருப்பதென்ன; தேவதாந்தரபஜநம் அவேஷ்யஸேவை தொடக்கமான விருத்தகர்மங்களை அநுஷ்டித்தாலன்றோ அநாதிகர்மம்மேலேறுகைக்கு அவகாசமுள்ளது, அவற்றையெல்லாம் ஸவாஸநமாக விட்டேன், எம்பெருமானார் திருவடிகளை ஸர்வகாலமும் விஸ்மரியாதேயநுஸந்தித்தேன்; இப்படியானபின் ப்ராக்ருதகர்மங்கள் என்னை வந்துபாதிக்கைக்கு வழியில்லையென்கிறார்.

வ்யா.—(நயவேனொருதெய்வம்) எம்பெருமானாரையொழிய மற்றொருவரை பரதேவதையென்று ஆதரிக்கிறேனல்லேன். நயவேனென்றது - விரும்பேனென்றபடி. (नान्यं वदामि न भजामि न चिन्तयामि नान्यं स्मरामि न समाश्रयामि । मुक्त्वा त्वदीयचरणाम्बुजमादरेण श्री श्रीनिवास पुरुषोत्तम देहि दास्यम्) (நாந்யம்வதாமிநபஜாமிநசிந்தயாமி நாந்யம்ஸ்மராமிநஸமாச்ரயாமி । முக்த்வாத்வதீயசரணாம்புஜமாதரேண ஸ்ரீ ஸ்ரீநிவாஸபுருஷோத்தமதேஹிதாஸ்யம்) என்றும், (நின்றவாதிப்பிரானிற்க மற்றைத்தெய்வங்காடுதிரே) (மற்றைத்தெய்வம் விளம்புதிரே) என்றுஞ் சொல்லுகிறபடியே ப்ரதமபர்வ பர்யந்தமான்வயமின்றிக்கே, ([illegible]) (குலேசாக்யம ஸ்வாவபேத்) (தேவுமற்றறியேன்) என்கிறபடியே எம்பெருமானாரை பரதேவதையாக அத்யவஸித்திருக்கிறேனென்றபடி. (உன்னையொழிய வொருதெய்வம்மற் றறியா, மன்னுபுகழ்ச்சேர் வடுகநம்பி, தன்னிலைமை, என்றனக்கு நீதந்தெதிராசா வெக்காலும், உன்றனக்கே யாட்கொள்ளுகந்து) என்று இது தன்னை

http://acharya.org

ஜீயரும் ப்ரார்த்தித்தருளினாரிறே. ([illegible]) (த்ருஶ்யமாநங்களிலே ... [illegible] ஷுதயா: । ஸமாநரூபதாம்போது ஸமாச்ரயணாஸீத்:) என்னக்கட வதிறே.

(நானிலத்தே சிலமானிடத்தைப் புயலேயெனக் கவிபோற்றி செய்யேன்) (என்னாவில் இன்கவி யானொருவர்க்குங் கொடுக்கிலேன்) (மானிடம்பாட வந்தகவியேனல்லேன்) என்றும், ([illegible]) (தேஹாவஸானகோணே ஸதாரமே பரமைகாந்திதுர்வாஸகர்வாக ஸஸுரப்யர்த்தவாசரக்ரேக்த்ரஸலேச ஸாதக்வாக்மக்யாமதோ। ப்ரமோமுத்ர புருஷார்த்தமோக்ஷ பயக்ரமே ஸம்ப்ரார்த்தநம்) என்றுஞ் சொல்லுகிறபடியே சதுர்முகப்பரிவேஷ்டிதையான மநுஷ்ய ஸ்ருஷ்டியிலே ஒருத்தனைக்குறித்து ஜலஸ்த்தலவிபாகமற ஸர்வவிஷயத்திலும் வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகம்போலே யிருப்பானொருவனென்று அவனுடைய ஔதார்யத்தைக் கவிபாடி ப்ரபந்தீகரித்தும் வாசா ஸ்துதித்தும் இப்படி அப்ராப்த்தரை ஸேவியேன். புயல்-மேகம். போற்றுதல்-புகழ்தல். அன்றிக்கே, நாம் ஸமாஸ்ரயணீயரானவராலே ஸர்வேச்வரனையுங் கூட தேவதாந்தரத்தோடொக்க அநாதரிக்கக் கணிசித்து, ([illegible]) (ஸ்ரீவேங்கடாத்ரிநிலய கால மேகம்) என்று அவனைப்போலே ஸ்துதியாதே, (தேவுமற்றறியேன்) ([illegible]) (குரோரந்யம்பரம் நவேத்) என்கிற படியே இருக்கவிடவே வேண்ணுமாம்.

இப்படி இவ்வளவும் தேவதாந்தரங்களும் ஈசமநுஷ்யரும் அப்ராப்த்தராகையாலே அவர்களை நிரஸித்தும், ப்ராப்த்த விஷயமான ஸர்வேச்வரன் ஸ்வதந்த்ரனாகையாலே பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவானவனென்னும் ஸம்சயத்தாலே அவனை அநாதரித்தும், ப்ராதிகூல்யவர்ஜநம் பண்ணினீர், ஆனாலும் சிறிது ஆநுகூல்யாசரணமென்று பேரிடலாவதொரு வ்யாஜம் உம்மிடத்திலே யுண்டோவென்ன உண்டென்கிறார்; அதேதென்னென்ன (பொன்னரங்கமென்னில் மயலே பெருகுமிராமாநுசன் மன்னுமாமலர்த்தாளயரேன்) (பொன்னரங்கமென்னில் மயலேபெருகும்) வாழும் மன்னும் நிறையப் புகுந்தீண்டிவணங்குகல்தேனும் பாலுங்கலந்தன்னவர்சேர் தென்னரங்கமே) என்கிறபடியே தத்விஷயமான பக்தி நதிய ப்ரவாஹமாய், திருவரங்கமென்னு மாத்ரத்தைச் சொன்னாலும் தத்பக்திபாரவச்யத்தாலே காதல்மையல் மேன்மேலும் பெருகி வர்த்திக்கும். மையல் - ப்ராந்தி. (இராமாநுசன்)

http://acharya.org

இப்படிப்பட்ட எம்பெருமானாருடைய. (மன்னுமாமலர்த்தாள்) இவருடைய திருவடிகளுக்கும், (மன்னுமாமலர்) என்று - நித்யமாய் மஹத்தாய் விகஸிதமான புஷ்பத்தைப்போலியாக வருளிச் செய்தது, லோகத்தில் ஸாதாரண புஷ்பத்தையெடுத்துச் சொல்லி த்தன்று, லோகத்தில் புஷ்பத்துக்கு விகாஸம் செவ்வி குளிர்த்தி நாற்றந் தொடக்கமானவை ஒருகாலவிசேஷத்திலே யுண்டாய் ஒருகாலவிசேஷத்திலே யில்லாதே யொழியுமிறே, அப்படியன்றிக் கே யாவதாத்மபாவியாய்க்கொண்டிருப்பதாய், விகாஸமும்பரிமள மும் மாறாதே மேன்மேலும் பெருகிவரும்படி அவற்றையுடைய தாய் லோகத்தாரையெல்லாம் ஸ்வவசமாக்கிக்கொள்ளுகைக்கீடா ன மஹத்வத்தை யுடைத்தானதொரு புஷ்பமில்லாமையால் அத் தை அவர்திருவடிக்கு ஒருபடிபோலியாகச்சொல்லலாமென்றபடி. (அயரேன்) ([illegible]) ([illegible]) (குருபாதாம்புஜம்த்யாயேத்) (த்யாயேத்ஜபேத்நமேத்பக்த்யா) என்கிறபடியே அத்திருவடிகளை ஸர்வதா த்யானம்பண்ணிக்கொண்டு விஸ்மரியேன். அயர்வு - மறப்பு. ([illegible]) (யோகதவத்தோஹிபயத்திலோகேநாத்யகார்யவாஸி விஸ்மாரயந்தே) என்கிறபடியே என்னுடைய பரத்தையெல்லாம் எம்பெருமானார் பரித்தபின்பு நிர்ப்பரனாயிருக்கிறேனென்று கருத்து. ஆனபின்பு (அருவினையென்னை யெவ்வாறின்றடர்ப்பதுவே) (அருவினை) அநுபவப்ராயச்சித்தங்களாலும் போக்கவரிதாய் அநாதிகாலமே தொடங்கி பண்ணப்பட்ட புண்யபாபரூபகர்மங் கள்வந்து. (என்னை) ([illegible]) (யேநயத்ரசபோக்தவ்யம் ஸுகம்வா து:கமேவ வா - ஸதத்ர ரஜ்வா பத்வேவ பலாத்தேவேந நீயதே) என்கிறபடியே - இத்தனைநாளும் ஸ்வஸ்வபலங்களை யநுபவிப்பித்து ஸம்ஸா ரத்திலே மூட்டினாலும் இப்போது எம்பெருமானாருடைய ஸம்பந்த மாகிற ஸஜ்ஜுலமானாத்மவ முடைய என்னை. (இன்று) இப்போ து.(எவ்வாறடர்ப்பது) எந்த உபாயத்தாலே பாதிப்பது. (வாளெ ழுநிலா மாருதமோ நிலமோ, காளொருவொருக்கெற்றுக் கண்டி லமால்) என்கிறபடியே - ஸிம்ஹத்தைக்கண்ட ஆனைக்கூட்டங்களை ப்போலே கண்டு ஓடிப்போகிற கர்மங்களுக்கு, (கம்மெனுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே) என்கிறபடியே இருசெ வியுநியாதபடி போகவேண்டியிருக்கையொழிய என்னை பாதிக்க வழியில்லையென்றதாய்த்து. (மயலேன் பிறர்பொருளை) என்கிற பாட்டிலே இவ்வர்த்தத்தை ப்ரதமபர்வ நிஷ்டரும் அருளிச்செய் தாரிறே. ... ... (௯௩)

http://acharya.org

உரை.—அ.—றுபத்தொன்றாம்பாட்டு. (இராமாநுசன் மன்னு மாமலர்த்தாளயரேன்) என்றீர், நாங்களும் அவரை ஆச்ரயிக்கும்படி அவர்தம்முடைய ஸ்வபாவமிருக்கும்படி சொல்லீரென்ன; அத்தையருளிச்செய்கிறார்.

மூ.—அடல்கொண்டநேமியன் ஆருயிர்நாதனன் றாரணச்சொல்,
கடல்கொண்டவொண்பொருள் கண்டளிப்பப்பின்னுங்
காசினியோர், இடரின்கண்வீழ்ந்திடத்தானுமவ்வொண்
பொருள்கொண்டவர்பின், படருங்குணனெம்மிராமாநுசன்
றன்படியிதுவே. (௬௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அடல்கொண்ட	விரோதிநிரஸநசக்தியையுடைத்தான,	ஒண்பொருள்	விலக்ஷணமான அர்த்தங்களை,
நேமியன்	திருவாழியை யுடையனும்,	கண்டு	தர்சித்து,
ஆருயிர்	ஸகலாத்மாக்களுக்கும்,		ஸகல சேதநோஜ்ஜீவநார்த்தமாக,
நாதன்	சேஷியானவன்,	அளிப்ப	ஸ்ரீகீதாரூபேணவுபகரித்தருள,
	* அஸ்தாநஸ்நேஹகாருண்யதர்மாதர்மதியாகுலம் - அஸ்தாநஸ்நேஹகாருண்யதர்மாதர்மதியாகுலனாய்க்கொண்டு,	பின்னும்	பின்னையும்,
		காசினியோர்	பூமியிலுள்ளவர்கள்,
		இடரின்கண்	ஸம்ஸாரதுக்கத்திலே,
		வீழ்ந்திட	அழுந்தித்தளைப்படா,
அன்று	அர்ஜுநன்சோகாவிஷ்டனானவன்று, அவனை வ்யாஜீகரித்து பெருங்கடலிலே மறைந்துகிடக்கும் பெருவிலையனான ரத்னங்கள்போலே,	தானும்	தானும்,
		அவ்வொண்பொருள்கொண்டு	முன்பு ஸர்வேச்வரனருளிச்செய்த அந்த விலக்ஷணமான அர்த்தந்தனைக் கொண்டு, இது கைக்கொள்ளுமளவும்,
ஆரணச்சொல்	வேதசப்தமாகிற	அவர்	அவர்களை,
கடல்	ஸமுத்ரத்துக் குள்ளே,	பின்படரும்	பின்தொடரா நின்ற
		குணன்	குணத்தையுடைத்தவிருப்பாராய்,
கொண்ட	ஒருவர்க்குந்தெரியாதபடி மறைந்துகிடக்கிற,	எம்	எங்களுக்குத் தம்மை முற்றூட்டாகத் தந்த,

http://acharya.org

பதம்.	உரை.
இராமாநுசன்றன்	எம்பெருமானுடைய,
படியிது	ஸ்வபாவம் இது.

"ஆருயிர்காத் தென்றுமா ச்சொல் லடல்கொண்ட வொண் பொருள்கண்டளிப்ப" என்றுபாடமானபோது - அடல்கொண்ட நேமியனை ஸர்வேச்வரனு னே ஆத்மாக்களுக்கு சேஷியே ன்று கொண்டு வேதத்தில் மறைந்துகிடக்கிற அர்த்தத்தை தர்சித்து ஸ்ரீகீதாமுகேந அருளிச்செய்ய என்று பொருளாகக்கடவது. அடல் - மிடுக்கு. காசினி - பூமி. இடரின்கண் என்றது - இடரினிடத்திலே யென்கை. படி - ஸ்வபாவம். ... ... (கக)

வ்யா.—அ.—முப்பத்தாறும்பாட்டு. (இராமாநுசன் மன்னுமாமலர்த்தாளையபோன்) என்றீர், நாங்களும் அவரை ஆச்ரயிக்கப்பார்க்கிறோம், அவருடையஸ்வபாவமிருக்கும்படிசொல்லிக்காணீர் என்று கேட்க; ப்ரதிபக்ஷத்துக்கு பயங்கரனுமாய்திருவாழியாழ்வானை ஆயுதமாகவுடையனுமாய்ஸகலாத்மாக்களுக்கும் சேஷியானவன், உபயஸேனாமத்யத்திலே பக்ஷன்கோதத்தாலே அர்ஜுநன்யுத்தாக்கியர்த்தனுமாயன்று கடலிலேயமுக்கித் தரைப்பட்டுக்கிடக்கிற ரத்நங்களைக்கொண்டுவந்து உபகரிப்பாரைப்போலே வேதாந்தஸமுத்ரத்திலே குப்தங்களாய் ச்லாக்யங்களான அர்த்தங்களை ஸ்ரீகீதாசாஸ்த்ரமுகேந உபகரித்தருளினபின்பும் இத்தகலிகாலத்திலே ஜனங்கள் அவனாதத்தாலே கிடக்க; அந்த கீதாரூபமான அத்யாத்மசாஸ்த்ரத்தை வ்யாக்யாநம்பண்ணி உபதேசிக்கைக்கு அந்த ஜனங்களை ஸ்ரீபதரிகாச்ரமத்தளவும் பின்தொடர்ந்த மஹாகுணமுடையபேர் இல்லையென்றுகொண்டு இப்படியிருக்குமின்ன எம்பெருமானுடைய ஸ்வபாவமிதுவென்றருளிச்செய்கிறார்.

வ்யா.— (அடல்கொண்டநேமியன்) மடுவின்கரையிலே ஸ்ரீகஜேந்த்ராழ்வானை பரிஹரித்தருளினதும், அச்வத்தாமப்ரேரிதமாயக்கொண்டு பரிக்ஷித்தை பாதிக்கவந்த ப்ரஹ்மாஸ்த்ரமும் அடக்கமான ஆச்ரிதவிரோதிகளுக்கு அத்யந்தபயங்கரமான ஆகாரத்தையுடையனுமாய், (வடிவார்சோதிவலத்துறையும்சுடராழி) என்கிற திருவாழியாழ்வானைப்ரதாநாயுதமாகவுடையனுமாய். அடல்-மிடுக்கு. (ஆருயிர்காதன்) ([illegible])([illegible]) (பதிம்விச்வஸ்யாத்மேச்வரம்)(உதாம்ச்ரத்வஸ்யேசா:) என்றும், (அமரருமமரர்க்கணிப்பதி) என்றும் சொல்லுகிறபடியே ஸகலாத்மாக்களுக்கும் நாதனுமாய். ([illegible]) (தாத்பர்யசந்த்ரிகா) என்கையாலே ஸகலாத்மாக்களையும்பாலிக்கப்படுமவனுமாய், ([illegible]) (ஏகோபஹூநாம்யோவிததாதிகாமாந்) என்கிறபடியே ஸமஸ்தாபேக்ஷிதப்ரதனுமானவன்.

http://acharya.org

(அன்று) ([illegible]) என்கிறபடியே - குருபாண்டவர்கள் யுத்தத்துக்கு சந்நத்தரானவளவிலே, (పితౄనథపితామహాన్ మాతులాన్భ్రాతౄన్పుత్రాన్పౌత్రాన్సఖీంస్తథా) (பித்ரூநதபிதாமஹாந், மாதுலாந்ப்ராத்ரூந்புத்ராந் பௌத்ராந் ஸகீம்ஸ்ததா) இத்யாதியாலே சொல்லப்படுகிற பந்துவர்க்கத்தையெல்லாம் உபயஸேநையிலும் அர்ஜுநன் பார்த்து, (యేషామర్థే కాంక్షితం నో రాజ్యం భోగాస్సుఖాని చ। త ఇమేఽవస్థితా యుద్ధే ప్రాణాంస్త్యక్త్వా ధనాని చ। ఆచార్యాః పితరః పుత్రాస్తథైవ చ పితామహాః)(யேஷாமர்த்தே காங்க்ஷிதந்நோ ராஜ்யம்போகாஸ்ஸுகாநி ச, தஇமேவஸ்திதா யுத்தேப்ராணாம்ஸ்த்யக்த்வா தநாநி ச। ஆசார்யா: பிதர: புத்ராஸ்ததைவ ச பிதாமஹா:) என்று பந்துஸ்நேஹத்தாலே தர்மத்திலே அதர்மபுத்தியைப்பண்ணி, (విసృజ్యసశరంచాపంశోకసంవిగ్నమానసః) (விஸ்ருஜ்ய ஸசரஞ் சாபம் சோகஸம்விக்நமாநஸ:) என்று சோகித்து புத்தாந்நிவ்ருத்தனானவன்று.

(ஆணைச்சொல்கடல்கொண்டொழிந்தபொருள்கண்டளிப்ப) ஸூத்ரமத்யத்திலே, மறைந்துகிடக்கிற - நழைப்பட்டுக்கிடக்கிற மஹாரத்நங்களை யெடுத்துக்கொண்டுவந்து உபகரிப்பாரைப் போலே கடல்போலே கம்பீரமாயிருக்கும் வேதார்த்தவர்க்கங்களிலே, (తావాన్సర్వేషు వేదేషు బ్రాహ్మణస్య విజానతః) (தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:) என்னும்படியான ஸாரதமமாய், ([illegible]) ([illegible]) ([illegible]) ([illegible]) என்னும்சொல்லப்படுகிற விலக்ஷணார்த்தங்களை அடைவே கடாக்ஷித்து ஸாரஸங்க்ரஹரூபேணோபதேசித்து ஸங்க்ரஹித்தருள.

அந்நிக்கே, (அன்று) (కార్పణ్యదోషోపహతస్వభావః పృచ్ఛామి త్వాం ధర్మసమ్మూఢచేతాః। యచ్ఛ్రేయస్స్యాన్నిశ్చితం బ్రూహి తన్మే శిష్యస్తేఽహం శాధి మాం త్వాం ప్రపన్నమ్) (கார்ப்பண்யதோஷோபஹதஸ்வபாவ: ப்ருச்சாமித்வாந்தர்மஸம்மூடசேதா:। யச்ச்ரேயஸ்ஸ்யாந்நிச்சிதம்ப்ரூஹிதந்மே சிஷ்யஸ்தேஹம் சாதிமாந்த்வாம்ப்ரபந்நம்) என்று அர்ஜுநன் உபஸத்திபண்ணினவாறே அவனுக்கு மோக்ஷோபாயமாக கர்மயோகத்தையும்ஜ்ஞாநயோகத்தையும், பக்தியோகத்தையும், அவதாரரஹஸ்யத்தையும், புருஷோத்தமவித்யை தொடக்கமானவற்றையும் உபதேசிக்க, அவையெல்லாம் துஷ்கரங்களென்றும் ஸப்ரமாதங்களென்றும் விளம்பபலப்ரதங்களென்றும் ஸ்வரூபவிரோதிகளென்றும்நினைத்து அர்ஜுநன் சோகாவிஷ்டனானவன்று. (ஆணைச்சொல்கடல் கொண்டொழிந்தபொருள்கண்டளிப்ப) வேதார்த்தவர்க்கங்களாகிற

http://acharya.org

ஸமுத்ரத்திலே, ([illegible]) ([illegible]) ([illegible]) (தஸ்மாத்பாலநமேஷாம் நபஸ்யாமிதிக்தமாநஸ:) (வேதாந்தவிஜ்ஞாநஸுநிஸ்சிதார்த்தாஸ் ஸந்ந்யாஸயோகாத்யதயஸ்ஸுத்தஸத்வா:| தேப்ரஹ்மலோகேதுபராந்தகாலே பராம்ருதாத்பரிமுச்யந்திஸர்வே) (நகர்மணாநப்ரஜயாதநேநத்யாகேநைகே அம்ருதத்வமாநஸு:) இத்யாதிகளாலே ஜ்ஞாநபூர்வமாக ப்ரதிபாதிக்கப்படுகிற விலக்ஷணார்த்தங்களையெல்லாம் கண்டுவிட்டு, ([illegible]) (மந்மநாபவமத்பக்த:) என்றும், ([illegible]) (ஸர்வதர்மாந்பரித்யஜ்ய) என்றும் இரண்டுச்லோகத்தாலே ஸகலசேதநருடையவும் உஜ்ஜீவநார்த்தமாக அர்ஜுநவ்யாஜேநப்ரபத்த்யுபதேசம் பண்ணி லோகத்தையெல்லாம்ரக்ஷிக்கவென்னவுமாம்.

(பின்னும்) பிற்காலமான கலியுகத்திலேயும். (காசினியோர்) பூலோகத்திலேயிருக்கிற சேதநரெல்லாரும், காசினி-பூமி. (இடரின்கண்வீழ்ந்திட) ஸம்ஸாரதுக்கத்திலேவிழுந்து அழுந்தித்தரைப்பட்டுக்கிடக்க. த்வாபரத்தில் அர்ஜுநனொருவனே யிடர்ப்பட்டான், இந்தக்கலிகாலத்திலே ஒருலோகமாகச்சாரும் இடர்ப்பட்டது, இதைக்கண்டுபொறுக்கமாட்டாததம்முடையக்ருபையாலே, (தானும் அவ்வொண்பொருள்கொண்டு) எம்பெருமானாரும் அர்த்தச்லாக்யமான சரமச்லோகத்துக்குவ்யாக்யாநம்பண்ணியருளி அத்தைக்கொண்டு. அன்றிக்கே, திருக்கோட்டியூர்நம்பியைப்பதினெட்டுத்தரம் அநுவர்த்தித்து பரமகுஹ்யமென்று அவருபதேசிக்கப்பெற்ற சரமச்லோகார்த்தத்தைக் கொண்டென்னுமாம். (அவர்பின்படருங்குணன்) ஸ்ரீபதரிகாச்ரமமீறாக இந்த பூலோகத்திலுள்ள சேதநரை யெல்லாம் போதித்துப் பின்தொடர்ந்தவருடைய ஸம்ஸாரதுக்கத்தைப் போக்கக்கடவதான க்ருபாகுணத்தையுடையரான.

அங்ஙனன்றிக்கே, (பின்னும் - தானும் அவ்வொண்பொருள்கொண்டு) பின்னும், தானும், என்றஇரண்டுபதத்திலும்சகாரங்களை ப்ரயோகித்தது - அந்தத்வாபரகாலம் புண்யப்ரசுரமானது, அதிகாரி ஜ்ஞாநாதிகனான அர்ஜுநன், உபதேஷ்டா பரமப்ரஹ்மபூதனானவன் ஆகையாலே அது அரிதன்று; இந்தக்கலிகாலம் பாபப்ரசுரமானது, அதிகாரிகள் தோஷபூயிஷ்டரான ஸர்வஜநங்களும், ஆகையாலே இவர் லோகத்தையெல்லாம் ரக்ஷித்ததுவே யரிதென்னுமிடம்தோற்றுகைக்காக.

(தானும்) எம்பெருமானாரும். (அவ்வொண்பொருள்கொண்டு) திருக்கோட்டியூர்நம்பிபக்கலிலே பதினெட்டுத்தரம்

எழுந்தருளினவளவிலே அவரும் ஆச்ரயணங்கொண்டு குருபரமமெ ன்று நியமித்து சரமச்லோகார்த்தத்தை உபதேசித்தவளவிலே, அந்தச்லோகார்த்தத்தைக் கொண்டு, (அவர்பின்படருங்குண ன்) தரணியிலுள்ள ஜநங்களை அதிகாராநதிகார விபாகமற தாமேவந்து தொடர்ந்து அந்த சரமச்லோகார்த்தத்தை பூர்த்தமாகக்கொடுத்த க்ருபாவாத்ஸல்யௌதார்யாதி கல்யாணகுணங்களை யுடைய. (எம்பிராமாநுசன்றன்) இப்படிப்பட்ட கல்யாணகுண மான திவ்யமங்கள விக்ரஹத்தை நமக்கு முற்றூட்டாகக்கொடுத் தருளின எம்பெருமானார்தம்முடைய. (படியிதுவே) ஸ்வபாவமி துவே. படி-ஸ்வபாவம். (ஸ்வாபாவிகீ) (ஏதாவாநஸ்யமஹிமா) என்கிறபடியேயாய்த்து. ... ... (௩௬)

உரை.—அ.—(முப்பத்தேழாம்பாட்டு.) இப்படியிருக்கிற இவர்தம்மை, நீர்தாம் அறிந்துபற்றினபடி யென்னென்ன; நான அறிந்துபற்றினேனல்லேன், அவர் திருவடிகளில் ஸம்பந்தமுடைய வர்களே உத்தேச்யரென்றிருக்குமவர்கள் என்னையும் அங்குத் தைக்கு சேஷமாக்கினார்களென்கிறார்.

மூ.—படிகொண்டகீர்த்தியிராமாயணமென்னும்பத்திவெள்ளம்
குடிகொண்டகோயிலிராமாநுசன்குணங்கூறுமன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள்கலந்துள்ளங்கனியும்நல்லோர்
அடிகண்டுகொண்டுகந்தென்னையுமாளவர்க்காக்கினரே ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
படிகொண்ட	பூமியடங்கக்கொண்டிருக்கும்,	அன்பர்	ப்ரேமயுக்தருடைய,
கீர்த்தி	கீர்த்தியை யுடைத்தான,	கடிகொண்ட	பரிமளத்தை யுடைத்தாய்,
இராமாயணமென்னும் பத்திவெள்ளம்	ஸ்ரீராமாயணமாகிற பக்திஸாகரம்,	மா	ச்லாக்யமாய்,
		மலர்	போக்யமாயிருக்கிற
		தாள்	திருவடிகளிலே,
		உள்ளங்கலந்து	நெஞ்சுகலந்து,
		கனியும்	ஸ்நேஹித்திருக்கும்
குடிகொண்ட	நித்யவாஸம்பண்ணுவதொரு,	நல்லோர்	விலக்ஷணராயவர்கள்,
கோயில்	திவ்யஸ்தாநமாயிருக்கிற,		இவ்வாத்ம வஸ்துவும் அங்குத்தைக்கு சேஷமன்றோவென்றுகொண்டு,
இராமாநுசன்	எம்பெருமானாருடைய,		
குணங்கூறும்	குணங்களைப் பேசாநின்றுள்ள,	அடிகண்டு	இதினுடைய அடியை தர்சித்து,

http://acharya.org

பதம்.	உரை.
உகந்து	அந்த ஸம்பத்தையே தொழுவார்களிரும்பி அங்கீகரித்து,
என்னையும்	தங்களைப்போலே என்னையும்,
அவர்க்கு ஆளாக்கினர்	அவர்க்கு சேஷமாம்படி பண்ணினார்கள்.

பதம். உரை.

ஆகையாலே நானறிந்து இவ்விஷயத்தைப் பற்றினேனல்லேன், ஸ்ரீவைஷ்ணவர்கள் சேர்க்கச்சேர்ந்தேனித்தனையென்று கருத்து. ஸ்ரீராமாயணத்தை பக்திஸாரமென்றது - ஸீதாதேவிபக்தி யுக்தத்வத்தாலே. கடி-மணம். ( )

வ்யா.—அ.—முப்பத்தேழாம்பாட்டு. இத்தப்படி ஆச்சர்யமான வைராக்ய பாரதங்களான ஸ்ப்பாதிருணங்களை கீர்த்திதமின் பிறே ஆச்ரயித்தது, உமக்கு இப்படித்தெளிவுபிறந்தது என்னென்று கேட்டவர்களைக்குறித்து, முதலிலே நானறிந்து ஆச்ரயித்தேனல்லேன், எம்பெருமானுடைய கல்யாணகுணங்களை யறிந்து அநுபவிக்கும் ப்ரியதமருடைய திருவடிகளிலே அவகாஹித் தநுபவிக்கும் ஸஜ்ஜநர் தங்களுடைய பரமார்த்த்யைப ப்ரயோஜநதையாலே என்னைப்பார்த்து அவர்க்கு ஆளாக்கி அநந்யார்ஹசேஷம்படி பண்ணினார்கள், அத்தாலே நானறிந்தே னென்கிறார்.

வ்யா.—(படிகொண்டகீர்த்தி) ([illegible]) என்றும், ([illegible]) (சதகோடிப்ரவிஸ்தரம்) என்றும், ([illegible]) (வேதப்ராசேதஸாதாஸீத்ஸாக்ஷாத் ராமாயணாத்மநா) என்றுஞ்சொல்லுகிறபடியே பூலோகத்தையெல்லாம் வ்யாபித்திருக்கிறகீர்த்தியை யுடைத்தான. (படிகொண்ட) என்றவிது உபலக்ஷணம்; ஸத்யலோகத்தில் நின்றும் ப்ரஹ்மாவும் நாரத்ச்சரான நாரதபகவானும் பூலோகத்திலேவந்து வால்மீகியைக்குறித்து நியமித்தும் உபதேசித்தும் போருகையாலே இதினுடைய கீர்த்தி ஸர்வலோகங்களிலுமிறே ப்ரஸித்தமாயிருப்பது.

(ராமாயணமென்னும் பக்திவெள்ளம்) ([illegible]) (காவ்யம்ராமாயணம்க்ருத்ஸ்நம்ஸீதாயாஸ்சரிதம் மஹத்) என்றிருக்கையாலும், ([illegible]) (மன்னையே தன்ய நந்தநம்) என்கிறபட்டாலேயிலே அவளுடைய ஸம்பத்தெல்லாம் சேவிக்கையானதாகையாலே ராமவிஷயமா யிருக்குமென்று சொல்லத்தட்டில்லையிறே. ராத்ர்சமான ராமாயணமென்கிற ஸா

http://acharya.org

புரண்ட பக்திரஸத்தை. இதிலே ப்ரதிபாத்யமாயிருக்கிற அர்த்தத்தையே பக்திரஸமென்று சொல்லவேண்டியிருக்க இதுதன்னை, (பக்திவெள்ளம்) என்றது-([illegible]) (தத்குணஸாரஸ்யாத்துதத்ஸ்வபத்தேஃ) என்றாப்போலே அதுக்கு உத்பாதகமாகையாலே.([illegible])(ஏஷைகமஸ்ரேப்போக்ஷமமஸாபாதகமாசகம்) என்ற ப்ரகாசத்திலே அர்த்தபர்யந்தம் போகவேண்டாதே சப்தத்தாலேயே ஸவித்திருக்குமென்னுதல்.

இப்படிப்பட்ட பக்திதான் அங்கே வாஸமித்திருக்கும் ஸ்தானம் அத்தைப்பெறுகைக்கென்னென்றால் (குடிகொண்ட கோயிலிராமாநுசன்) எம்பெருமானுமே ஒருகோயிலாக அவர்திருவுள்ளத்தை ஒருக்ஷணமும் பிரியாதே இவ்விடமே குடியாக நித்யவாஸம்பண்ணியிருக்கிறது. [இருப்பிடம்வைகுந்தம்வேங்கடம் மாலிருஞ்சோலையென்னும் பொருப்பிடம்மாயனுக்கென்பர்நல்லோர்] ஏதத்ப்ரதிபாத்யனான பரமபுருஷனுக்கு அவையெல்லாம் கோயில்களாமாப்போலே தத்ப்ரதிபாதகமான ஸ்ரீராமாயணமென்கிற பக்தி ப்ரவாஹத்துக்கு இவரும் ஒருகோயிலாகக்கடவ ரிருப்பது. (இராமாநுசன்) அந்தராமாவதாரத்திலே திவ்யதம்பதிகள்விஷயமாக ஸர்வவிதகைங்கர்யங்களையும்பண்ணி வளர்த்தப் பெருக்கி பக்தியினுடைய ஸமைதிக்கலிறே எம்பெருமானாரவதரித்தது.

(குணம்) அவருடையகல்யாணகுணங்களை. (கூறுமன்பர்) இந்த லோகத்தாரெல்லார்க்கும் உபதேசிக்கும் ப்ரேமயுக்தர். ([illegible]) என்கிறபடியே, (கவியும்நாகரும்கைய்த்த கமனுக்கிலியோதொன்றமில்லை, கவியுள் கெடுக்கண்டுகொண்மின்) என்றருளிச்செய்த நம்மாழ்வாரும், அவர்கொடுத்த பவிஷ்யதாசார்யவிக்ரஹத்தையே ஆராதித்துக்கொண்டு போந்தஸ்ரீமந்நாதமுனிகளும்,(ஆமுதல்வனிவன்) என்று ப்ரதிபத்திபண்ணின ஆளவந்தாருமென்றபடி. (கடிகொண்டமாமலர்த்தான்)அவர்களுடைய பரிமள ப்ரசுரமாய் விலக்ஷணமாய் பரமபோக்யமான திருவடிகளிலே. கடி - பரிமளம், மா - மஹத்வம். யாவத்தர்ம பாவியாக அநுபவித்தாலும் ஸமபர்யவஸிஷ்டர்க்குக் குறைப்பட்டிராதே; மேன்மேலும் பெருமையுடைத்தாயிறேயிருப்பது. (மலர்) லோகத்திற்புஷ்பம்போலே ஒருக்கால் விகஸிதமாயிருக்கையன்றிக்கே ஸர்வதாவிகஸத்தோடே யிருக்குமென்றபடி. ([illegible]) (அத்ரபாத்ரஸயேதித்யம் யதிபசரணௌபாரணமதியம்) என்னக்கடவதிறே. (தாள்) ([illegible]) (பாதிசாஸர்வபூதாநாம்தத் பாதௌதாசரத்திஸேவயே) என்னும்படியிருக்கிற அவர்களுடைய திருத்தாள்களிலே. (கலந்துள்ளம்) திருவுள்ளங்கலந்து.

http://acharya.org

(கனியுநல்லோர்)பக்வபலம்போலே கனிந்திருக்கும்ஸம்யக்ஜ்ஞா னத்தையுடையரானவர்கள்; - கூரத்தாழ்வானென்றபடி.

(அடிகண்டுகொண்டுகந்து) இவ்வாத்மவஸ்து அவருக்கு சேஷமானதன்றோ வென்று கொண்டு இவனுடைய படியை தர்சித்து அத்தஸம்பந்தமே ஹேதுவாக விரும்பி அங்கீகரித்து. ஒரு ராஜபுத்ரன் வழிதப்பிப்போய் ஒருவேடன்கையிலே சேர்ந்திருக்க அந்தப்ரகாரத்தை யறிந்திருக்கும் தார்மிகரானவர், இருவருடையவும் ஸம்பந்தத்தையறிவித்து இருவரையும் சேர்க்குமாப்போலே. (என்னையுமாளவர்க்காக்கினரே) (என்னையும்) அவருக்குத் தம்மைப்போலே என்னையும் எம்பெருமானார்க்கு. சக்ரவர்த்தித் திருமகன் பக்கலிலே ப்ரேமயுக்தரானவரென்று (அவர்க்கு) என்ற தச்சப்தத்தாலே தோற்றுகிறது. ஆள் ஆக்கினர் - அவருக்கு ப்ராப்தமான ஆகாரத்தோடே கூட்டினார்கள். சேஷபூதனாம்படி பண்ணினார்களென்றபடி. ஆகையாலே நான்வருந்தவிஷயமென்றறிந்து ஆச்ரயித்தேனல்லேன், எனக்குபுருஷகார பூதரான ஆழ்வான் ஆச்ரயிப்பிக்க ஆச்ரயித்தே னென்றதாய்த்து. (௩௭)

உரை —அ.—(முப்பத்தெட்டாம்பாட்டு) இப்படி ஸ்ரீவைஷ்ணவர்கள் சேர்க்கும்போதும் அத்வேஷாதிகள்வேண்டுகையாலே தத்ப்ரவர்த்தகனான ஸர்வேச்வரனிறே இப்பேற்றுக்கடியென்று நினைத்து, (ஸர்வஜ்ஞாநஸ்வ:) (ஸாக்ஷாத்காரபயேஹேது:) இதுவ இப்படியே எம்பெருமானார்தம்மை ஈச்வரனாக ப்ரதிபத்திபண்ணி, (இன்றென்னைப்பொருளாக்கி) என்கிறபாட்டிலே ஆழ்வாரருளிச் செய்ததைப்போலே இவரும் அருளிச்செய்கிறார். அன்றிக்கே, இவர்களை முன்னிட்டுத் தம்மை அங்கீகரித்தருளினார் எம்பெருமானாராகையாலே இவர் திருமுகத்தைப்பார்த்து இத்தனைநாள் இவ்வுலகிலே வர்த்திக்கச்செய்தே என்னை அங்கீகரியா திருக்கைக்கும் இப்போது அங்கீகரிக்கைக்கும் ஹேதுவென்னென்று கேட்கிறாராகவுமாம்,

மூ.—ஆக்கியடிமைநிலைப்பித்தனையென்னையின்றவமே
போக்கிப்புறத்திட்டதென்பொருளாமுன்புபுண்ணியர்தம்
வாக்கிற்பிரியாவிராமாநுசநின்னருளின்வண்ணம்
நோக்கில்தெரிவரிதாலுரையாயிந்தநுண்பொருளே.(௩௮)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்னை	அநாதிகாலம் "நச்வரோஹம்" என்றிருந்தவென்னை,	ஆக்கி	சேஷத்வத்துக்கு இசையும்படி பாக்கி,

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
அடிமை	அதுதன்னைநிபசேஷத்வகாஷ்டையளவும்செலுத்தி,		பாக்யாதிசருடைய,
நிலைப்பித்தனை	ஸ்திரிப்பித்தருளினீர்;	வாக்கில்பிரியா இராமாநச	வாக்குக்கு நித்யவிஷயமாயிருக்குமவரே,
இன்று	இன்று இப்படிசெய்யவல்லவிருக்கச் செய்தே,	நின்	தேவரீருடைய,
		அருளின்வண்ணம்	க்ருபாப்ரகாரம்,
முன்பு	பூர்வகாலமெல்லாம்	நோக்கில்	தர்சிக்குமளவில்,
அவமே	வ்யர்த்தமே,	தெரிவரிது	துர்ஜ்ஞேயமா யிராநின்றது;
போக்கி	போக்கி,		
புறத்திட்டது	பாஹ்ய விஷயங்களிலே தள்ளிவிட்டு வைத்தது,	இந்நுண்பொருள்	இந்தஸூக்ஷ்மார்த்தத்தை,
என்பொருளா	என்னநிமித்தமாக;	உரையாய்	தேவரீர்தாமே அருளிச்செய்யவேணும்.
புண்ணியர்தம்	தேவரீரைஉள்ளபடி யறிகைக் கிடான		

தெரிவரிதென்றது-விவேகிக்க அரிதென்றபடி. ...(௩௮)

வ்யா.—அ.—முப்பத்தெட்டாம்பாட்டு. இப்படி ஆழ்வானை விட்டு அடியேனைத் திருத்திச்சேர்த்து சேஷத்வத்துக்கு இசைவித்து தத்யாதாத்ம்யவிமர்சரூபமான சரமபர்வத்திலே அத்யபிநிவிஷ்டனாம்படி பண்ணியருளின தேவரீர், இதுக்கு முற்காலமெல்லாம் அந்நாளைத்தை அடியேனுக்கு அநுபவிப்பியாதே வ்யர்த்தமே விஷயாந்தரங்களிலேவைத்ததுக்கு மூலமேது, பாக்யவான்களுடைய வாக்கிலே இடைவிடாதே ஸர்வகாலமும் ஸ்துதிக்கப்படும் எம்பெருமானாரே!, தேவரீருடைய க்ருபாப்ரகாரமுள்ளபடியறியப் பார்த்தால் எத்தனைஜ்ஞானமுடையார்க்கும் அரிதாயிருக்கும், தேவரீரே இந்த ஸூக்ஷ்மார்த்தத்தை அருளிச்செய்யவேணுமென்று நேரே கேட்கிறார்.

வ்யா.—(என்னை) அநாதிகாலமே தொடங்கி சிலநாள் தேஹமே ஆத்மாவென்று ப்ரமித்த அஜ்ஞாநத்தாலும், பின்பு தேஹவிலக்ஷணமாய்க்கொண்டொரு ஆத்மவஸ்துவிருக்கிறதென்று அறிந்தாலும், (அஸந்நேவ ஸ பவதி அஸத்ப்ரஹ்மேதி வேத சேத்) (நக்கலோகாயதமும் பேசிவித்தேசதேபலவாக்ஙாலி)என்னும்படியான அந்யதாஜ்ஞாநத்தாலும், பின்பு காமாதிகாரத்திலே விழுந்து, (காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தே) (காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தே

http://acharya.org

ஷ்யதேவதா:) என்னும்படியான விபரீதஜ்ஞாநத்தாலும் நிரீச்வ அனந்தகல்பமும் போக்க வடியேனை (இன்று) இப்போது.

(ஆக்கி) அப்படிப்பட்டவற்றையெல்லாம் விடுவித்து,முதலிலே, (தாயுமுனக்குப் பழவடியேன்) என்னும்படி பகவச்சேஷத்வத்திலே அந்வயிப்பித்து. (அடிமையிலேப்பித்தனே) பின்பு (அடியார்க்கென்னையாள்படுத்தவிமலன்) (உன்னடியார்க்காட்படுத்தாய்) என்னும்படி ஸர்வேச்வரன் உபகரித்தாப்போலே, ([illegible]) ([illegible]) (குருசேவாபராப்ரதம) (ஆசார்யவன்னநுஜீவ்ய சாருபிகளஸேஷ:) என்னும்படியான தேவரீர், அடியேனை சேஷத்வகாஷ்டாருபமான ததீயசேஷத்வத்திலே நிலைநிறுத்தினீர். (முன்பு) பூர்வகாலத்திலே. (அவமேபோக்கி) வ்யர்த்தமாகப்போகட்டு. (புறத்திட்டது) அப்ராப்தவிஷயங்களிலே ப்ரவணனாகப்பண்ணினது. (என்பொருளா) என்ன ப்ரயோஜநம். மூலமேது என்றுகேட்க;-([illegible]) (மக்நாநுத்தரதேலோகாந்) என்கிறபடியே ஸர்வரையும் உத்தரிப்பிக்கைக்காக அவதரித்த நீரும் ஸர்வேச்வரனைப்போலே என்னை உம்முடைய க்ரீடைக்கு இவ்வளவும் விஷயமாக்கிவைத்தீரோ என்ன; இவ்வளவும் உமக்கதிகாரமில்லாமையாலே அப்படிவைத்தோமென்ன;

* அதிகாரமுண்டேலரங்கரிரங்காரோ,அதிகாரமில்லாதார்க்கன்றோ வெதிராசாநிரங்கவேண்டுவது; ஆனாலும் இப்போது நீர் இரங்கவேண்டுவது எந்த அதிகாரத்தைப் பார்த்தென்று முன்பு தம்மை, (அவமேபுறத்திட்டதென்பொருளா) என்னும்படியைப் பிடிக்கிறார்களும். (இன்றென்னைப்பொருளாக்கி) என்கிறபாட்டிடியே ஆழ்வாரும் அவன்மடியைப்பிடித்தாரிறே. தம்முடைய க்ருபையாலே இன்று உம்மை இப்படிபண்ணினோமென்றீராகில் அக்க்ருபையினுடைய வ்யாபாரத்தைச் சொல்லவேணுமென்கிறார் (புண்ணியர்தம்) * மயர்வறமதிநலம் பெறுகைக்குடலான பகவந்நிர்ஹேதுககிருபாபாத்ரத்தையுடையவர்கள் (வாக்கிலப்பிரியா) அவர்களுடைய திருவாயிலே இடைவிடாதேயிருக்கிற. ([illegible]) (பூர்வேமூர்த்தாயஸ்வயம்வமுபகதா தேகிநா:) என்னும்படியான நம்மாழ்வார்முதலானவர்கள், (பொலிகபொலிகபொலிக) என்று மங்களாசாஸநம்பண்ணினார்களிறே.

அன்றிக்கே, ([illegible]) (குரோர்நாமஸதாஜபேத்। குரோர்வார்த்தாஞ்சகதயேத்) என்கிறபடியே, ([illegible]) (நித்யமயிக்ர தவதிவ்ய

வபுஸ்ம்ர்த்தனமேனக்தமமசோபலதுலாக்ருணமேத்தமேதனோ! க்ர்த்யஞ்சநாஸ்ரமேனேஹ ஜாதயபஸ்யஸ்யத்யக்ததே:) என்கிறபடியே ப்ராசரீத்தித்தருளும்; ([illegible] । [illegible]) (யாசசயுதேதக்ரமனனை வபுஷாசவுஷ்மத் பாதாரவிந்தயுகளம்பஜதாம்குருணாம்! கூராதிநாதகுருகேசமுகாத்யபும்ஸாம்) என்னும்படி ஆழ்வான் பிள்ளான் தொடக்கமான பாகவதர்களுடைய திருவுள்ளத்தாலே ஸர்வதா அநுஸந்தானம் பண்ணப்படுகிற.

(இராமாநுசா) எம்பெருமானாரே. (நின்னருளின்வண்ணம்)பக்தமோக்ஷங்களிரண்டுக்கும்பொதுவான அவனுடைய க்ருபைபோலன்றிறே மோக்ஷைகஹேதுவான தேவரீருடையக்ருபை. வண்ணம் - அதினுடைய ப்ரகாரம்-ஸ்வபாவமென்றபடி. (நோக்கில்) அத்தைச்ருகதர்சித்தால்.அறியவேணுமென்றுபார்த்தால், தெரியவரிது-அறிகைக்கு கடினமாயிருக்கும்.இத்தனைகாலும்பலியாதேபோய் இன்று நிர்ஹேதுகமாக பலித்த ப்ரகாரமென்னென்று விசாரித்தால் அத்தப்ரகார மின்னதென்று விவேகிக்கஅரிதாயிருக்குமென்றபடி.. ஆல் - ஆஸ்சர்யம். ஏவம்விதமான தேவரீருடைய க்ருபை என்னளவிலே மாத்ரம் ஆகாரத்வயத்தை பஜித்ததோவென்று ஆச்சர்யப்படுகிறார்களும். அன்றிக்கே, ஆல்-இன்று நிர்ஹேதுகமாக பலித்தக்ருபை முற்காலத்திலே பலியாதே, (போரவைத்தாய் புறமே) (அம்பசாதங்களை வைத்தகன்றொழிந்தேன்) என்று ஆழ்வார் நிர்வேதப்பட்டாப்போலே இந்த அநுபவத்தை இழந்து விஷயப்ரவணனாய்ப்போனேன் என்று இழந்தகாலத்தை நினைத்து நிர்வேதப்படுகிறார். (உரையாயிந்தநுண்பொருளே) இந்தவைலக்ஷண்யத்தை, உபயவிபூதியர்த்தாக்ஷத்தையும் ஸாக்ஷாத்கரித்தவனாகையாலே தேவரீர் அறிந்தருளுமே, ஆகையாலே தேவரீரே யருளிச்செய்யவேணும் என்றபடியாய்த்து. ... ... (௩௮)

உரை.—அ.—(முப்பத்தொன்பதாம்பாட்டு.) இப்படிகேட்டவிடத்திலும் ஒரு மறுமாற்றம் அருளிச்செய்யக் காணாமையாலே அத்தைவிட்டு, செய்தவுபகாரங்களை யநுஸந்தித்து ப்ரீதியாலே தம்திருவுள்ளத்தைப்பார்த்து, நமக்கு எம்பெருமானார் செய்யும் ரக்ஷைகள் வேறுசிலர் செய்யுமவையோவென்கிறார்.

மூ.—பொருளும்புதல்வரும்பூமியும்பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும் நமக்குநெஞ்சேமற்றுளார்தரமோ
இருள்கொண்டவெந்துயர்மாற்றித்தன்னீறில்பெரும்புகழே
தெருளுந்தெருள்தந்திராமாநுசன்செய்யுஞ்சேமங்களே. ()

http://acharya.org

பதம்.	உரை.
பொருளும்	அர்த்தமும்,
புதல்வரும்	புத்ரர்களும்,
பூமியும்	க்ஷேத்ரமும்,
பூங்குழலாருமென்றே	தாரங்களுமென்று இவற்றையே விரும்பி,
மருள்கொண்டு	அறிவுகெட்டு,
இளைக்கும் நமக்கு	அவஸந்நராய்ப்போகிற நமக்கு
இருள்கொண்ட	அஜ்ஞாநபுத்தமான,
வெந்துயர் மாற்றி	க்ரூரதுக்கங்களை நீக்கி,
தன்	தம்முடைய,
ஈறில்	நித்யமாய்,
பெரும்	நிரவதிகமான,
புகழே	கல்யாணகுணங்களையே,
தெருளும்	அறியும்படியான,
தெருள்தந்து	அறிவைத்தந்து,
இராமாநுசன்	எம்பெருமானார்,
செய்யும் சேமங்கள்	செய்யும் ரக்ஷைகள்
நெஞ்சே	நெஞ்சே,
மற்றுளார் தரமோ	மற்றுண்டானவர்களால் செய்யுமளவோ.

பூங்குழல்-அழகியகுழல். பூவையுடைத்தான குழலென்னவுமாம். மருள்-அறிவுகேடு. க்ஷேமம்-ரக்ஷை. தரம்-ஒப்பு. மற்றுளார்தரமோ என்றது-மற்றுளார்செய்யப்போமோவென்றபடி. ... (௩௯)

வ்யா.—அ.— முப்பத்தொன்பதாம்பாட்டு. (உரையாயிந்த நுண்பொருளே) என்றுஇவர் கேள்விகொண்டு கேட்கின்ற கேட்டவிடத்திலும் எம்பெருமானார் ஒருமறுமாற்றமருளிச்செய்யக் காணாமையாலே அத்தைவிட்டு, அவர்செய்தவுபகாரங்களை அநுஸந்தித்து அவற்றைத் தம்மருகேயிருக்கிறபாகவதரோடே சொல்லவொருப்பட்டாரே, இவ்வளவும் இவர்தாம் அவர்களைக்குறித்து எம்பெருமானாருடைய கல்யாணகுணவைபவத்தை ப்ரஸங்கித்தாராகையாலே அவர்களும் அத்குணங்களிலே ஆழங்காற்பட்டு சித்தராய் இவர் சொல்லுமத்தைக் கேட்கவும்மாட்டாதே பரவசராயிருக்க, தம்முடையதிருவுள்ளத்தை ஸம்போதித்து, புத்ர தார க்ஷேத்ராதி அப்ராப்தவிஷயங்களிலே மண்டி சிதிலராய்ப்போகிற நமக்கு அஜ்ஞானத்துக்குடலான துக்கத்தைப்போக்கி, நித்யமாய் நிரவதிகமாயிருக்கிற தம்முடைய கல்யாணகுணஜாதமெல்லாம்தெளியும்படியான அறிவைக்கொடுத்தருளின எம்பெருமானார்செய்த ரக்ஷைகள் பின்னை ஒருவராலே செய்யப்போமோவென்கிறார்.

வ்யா.—(பொருளும் புதல்வருமென்று தொடங்கி) (நெஞ்சே) கீழில் பாட்டுக்களிலே நமக்கு எம்பெருமானார்க்கு உபயவிபூதிப்ரதமான ஸம்பத்தியையும் அவருடைய கல்யாணகுணவைபவத்தையும் ஸமீபவர்த்திகளானபாகவதர்களோடே சொல்லிக்கொண்டு போருகிற வளவிலே, அவர்கள் அவற்றில் சித்தராய் பரவசராய் ஒரு

http://acharya.org

மறுமாத்ரமாகிலும் அருளிச்செய்யமாட்டாதே யிருக்கவாறே தம்முடைய நெஞ்சைப்பார்த்து தாம்பெற்றபலபரம்பரையை யருளிச்செய்கிறார்.(பொருளும்) ஸமஸ்தபுருஷார்த்தஸாதநமாய் ஸ்வருசிகளோடேகூடி யாவஜ்ஜீவம் ஜீவிக்கைக்குறுப்பாயிருக்குமதாய், தநவஸ்துவாகாதிஸ்தாவரத்ரவ்யங்களும்.(புதல்வரும்)([illegible]) (புத்ரோத்பத்தி விசேஷாப்யாஸப ரமானந்தஸ்நேஹோ:) என்கிறபடியே இனி இதுக்கவ்வருகே ஒருவ கையில்லையென்னலாம்படி நிரவதிகஸ்நேஹவிஷயருமாய், காலுடைபாடவத னையிலேபோதுகளுமாய், ([illegible]) (புந்நாம்நோ நரகாத்த்ராயதே)என்கிறபடியே அநிஷ்டோபகாரகளுமாயிருக்குமவ புத்ரரும். (பூமியும்) சலனபாலனங்களை வஸ்துக்களைப்போலன்றிக்கே ஸ்த்தாவரமானவையாலே புத்ரபௌத்ராதிபர்யந்தமாக ஜீவநஹேதுவான க்ஷேத்ரமும். (பூங்குழலாரும்) பரிமளப்ரசுரங்களான புஷ்பங்களாலே பரிஷ்கரிக்கப்பட்ட கபரீபந்தங்களையுடையவளாய், ([illegible]) ([illegible]) என்று ச்லாகிக்கப்பட்ட கலத்ரமும்.

(என்றே மருள்கொண்டிளைக்கும்) ([illegible]) (க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி| த்வத்பாதபத்ம ப்ரவணாத்மவ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா:) என்று சொல்லப்படுகிற ஆகாரத்தை மறந்து இவை தாரக போஷக போக்யங்களென்று இவற்றிலே ஊற்றமுப் ப்ரமித்து, அந்த அஜ்ஞாநத்திலே துவக்குண்டு அவஸந்நராய்ப் போந்த நமக்கு. (தாயே தந்தையென்றுந் தாரமே கிளை மக்களென்றும் நோயே பட்டொழிந்தேன்) என்றும்,([illegible]) (புத்ரதாரக்ருஹக்ஷேத்ரம்ர்ததர்ஷ்ணும்புபுஷ்கலோ| கர்த்தவ்யாகர்த்தவ்யவிவேகாந்தபரிப்ராந்தமிதஸ்தத:) என்றும் சொல்லக்கடவதிறே.

(இருள்கொண்டவெந்துயர் மாற்றி) ([illegible]) (அவிவேககநாந்ததிங்முகே பஹுதா ஸந்ததது:க்கவர்ஷிணி| பகவன் பவதுர்த்திநே பதஸ்கலிதம்) என்கிறபடியே அஜ்ஞாநமூலமாய்க்கொண்டு இருக்கிற து:க்கத்தை ஸவாஸநமாக நிவர்த்திப்பித்து. (தன்னீறில் பெரும்புகழ்) ஸ்வாபாவிகமாய் அவதியின்றிக்கே மேன்மேலும் பெருகிவருகிற மஹத்தான தம்முடைய கல்யாணகுணஜாதத்தை. (தெருளும் தெருள்தந்து) தெளியும்படியான ஜ்ஞாநத்தைக்கொடுத்து. (இராமாநுசன் செய்யும் சேமங்களே) இப்படி எம்பெருமானார்

http://acharya.org

செய்தருளும்ஸ்வபாவன். (மற்றுளார்தரமோ) எத்தனை நல்லுடையாராலும் செய்யசக்யமோ. (அறியாதனவறிவித்தத்தா நீசெய்தன அடியேனறியேனே) என்றாப்போலே சரமபர்வமான எம்பெருமானார்பக்கலிலே க்ருதஜ்ஞராயருளிச்செய்கிறார்.

(மற்றுளார்தரமோ) கழுத்திலே ஓலை கட்டிக் கொண்டு இரிந்தும், ஸாரத்யம்பண்ணியும், பதினெட்டுத்தரம் கீதையையுபதேசித்தும், ([illegible])(ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்றும், ([illegible]) (அபயம்ஸர்வபூதேப்யோ ததாம்யேதத்வ்ரதம்மம) என்றும் அநேகப்ரகாரமாக ப்ரதிஜ்ஞைபண்ணியும் ஒருவனையாகிலும் ஸர்வேச்வரன் ஸாதித்தானல்லன், ([illegible] । [illegible]) ([illegible] । [illegible]) என்கிறபடியே நெஞ்சே! கண்டாயே? எம்பெருமானார் எமக்குப்பண்ணின உபகார பரம்பரை வாசாமகோசரமாய்த்து. (தென்னரங்கர் தமக்காமோ தேவியர்கட்காமோ சேனையர்கோன் முதலான சூரியர்கட்காமோ, மன்னிய சீர்மாறனருள் மாறனுக்காமோ மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ, என்னுடைய பிழைபொறுக்கயாவருக்கு முடியும் எதிராசா வுனக்கன்றியாரொருவர்க்காமோ) என்று இவ்வர்த்தத்தை ஜீயருமநுஸந்தித்தருளினாரிறே. .. ... (கூ௯)

உரை.—அ.—நாற்பதாம்பாட்டு. எம்பெருமானார் தமக்குச் செய்த வுபகாரங்களை யருளிச்செய்தார் - கீழ்ப்பாட்டில்; இப்பாட்டில் - லோகத்துக்குச்செய்த உபகாரத்தை யநுஸந்தித்து வித்தராகிறார்.

மூ.—சேமநல்வீடும்பொருளுந்தருமமுஞ்சீரியநல்
காமமுமென்றிவைநான்கென்பர்நான்கினுங்கண்ணனுக்கே
ஆமதுகாமமறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான் [சே
வாமனன்சீலனிராமாநுசனிந்தமண்மிசையே. (௪0)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாமனன் சீலன்	இத்தலையில் அர்த்தித்வாதி நிரபேக்ஷமாகத் தாமேவந்துபகரிக்கைக்கு ஸ்ரீவாமனனுக்கு ஒப்பானவரான,	இராமாநுசன்	எம்பெருமானார், “[illegible]” (தர்மார்த்தகாமமோக்ஷாக்யா: புருஷார்

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
	த்ராடகாதஷர்தா:) என்கிறபடியே,		நி பாபக்ஷயஹேது வாகையாலும், அர்த்தம் தானமுகத்தாலே ஆஜ்ஞைக் கு உபகாரமாகை யாலும், மோக்ஷ ம் ததுபயத்தி ஹேதுவாகையா லும்,
சேமம்	க்ஷேமரூபமாய்,	இதற்கு என்று	இவைமூன்றும் காம ஸாத்யமாக பலத்துக்கு சேஷமாயிருக்கு மத்தை யென்று,
நல்	விலக்ஷணமாயிருக் கின்ற,	இந்தமண் மிசை	இந்தபூமியிலே,
வீடும்	மோக்ஷமும்,	உரைத்தான்	அருளிச்செய்தார்
பொருளும்	அர்த்தமும்,		அபேக்ஷாநிரபேக்ஷ மாக இவ்வர்த்தத் தை இப்படி உப தேசித்தருளுவதே! என்று கருத்து.
தருமமும்	தர்மமும்,		
சீரிய	இவைபோலே அவ் வளவு புருஷார்த் தமாயிருக்கையன் றிக்கே ஸ்வயம் புருஷார்த்தமாகை யாலே சீரிய தாய்,		
நல்	விலக்ஷணமாயிருக் கின்ற,		
காமமுமெ ன்று	காமமுமென்றகொண்டு,		
இவைநா ன்கு	இவைநாலும் புரு ஷார்த்தமாக,		
என்பர்	ப்ராமாணிகர் சொல் லுவர்கள்;		
நான்கினு ம்	இவைநாலினும்,		
காமம்	காமமானது,		
கண்ணனு க்கேயாம து	ஸர்வேச்வரன் விஷ யத்திலே உண் டானது;		
அறம்	தர்மமும்,		
பொருள்	அர்த்தமும்,		
வீடு	மோக்ஷமுமாகிற இவற்றில்,		
	தர்மமானது, “தர்மே ண பாபமபநுததி” (தர் மேணபாப மபநு ததி) என்கிறபடி யே ஏதத் விரோ		

“சேமநல்வீடு” என்றுபாசுரமானபோது-பூர்வோக்த ப்ரக்ரியையாலே புருஷார்த்தத்தை நிர்ணயித்து, இப்புருஷார்த்தத்தை லபிக்க வேண்டுமிடத்தில் வருந்தவேண்டுவதில்லை, எளிதாகப் பெறலாமென்று மிடத்தை தர்சிப்பிக்கைக்காக இத்தனையில் அபேக்ஷாநிரபேக்ஷமாகவந்து கலக்குமவன் காணுங்கோளென்று ஸ்ரீ ராமாநுஜனுடைய ஸ்வபாவத்தை யருளிச்செய்தாரென்கை. இதினுக் காட்டில் பூர்வபாசுரத்துக்கு ஸங்கதிஸ்வாரஸ்யமும் ‡அர்த்தகௌரவமும் உண்டு. ... ... (௪௰)

http://acharya.org

வ்யா.—அ.—நாற்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - எம்பெருமானார் தம்மை ரக்ஷித்தபடியைச்சொல்லி ஹ்ருஷ்டராய்க்கொண்டு போந்து, இதிலே - அர்த்தித்வநிரபேக்ஷமாக ஸ்ரீவாமநாவதாரத்திலே, (தான்பரப்பிமண்டாவியபிரானை) என்கிறபடியே ஸர்வருடையவும் சென்னிக்கணிலே ஸ்ரீபாதத்தைவைத்து உபகரித்தாப்போலே, இவரும் அதிகாராநதிகார விபாகமற எல்லார்க்கும் ஸ்வரூபாநுரூபமான அர்த்தத்தை உபகரித்தாரென்று வித்தராகிறார்.

வ்யா.—(சேமநல்வீடும்) மோக்ஷத்தைக்கொடுக்குமதாய், ([illegible]) (தமஸ:பரஸ்தாத்) என்கிறபடியே அப்ராக்ருதமாய், அயோத்யை என்றும் அபராஜிதை என்றும்சொல்லப்படுகிற பரமபதமும். (பொருளும்) அதுக்கு ஸாக்ஷாத்தாகவாதல், பரம்பரையாகவாதல், ஸாதநாநுஷ்டாநத்துக் குடலாகவாதல் விநியோகப்படுகிற த்ரவ்யார்ஜநமும். (தருமமும்) சித்தசுத்திநிரூபமாய் ஆராதநரூபமாய் வர்ணாச்ரம விஹிதமாயிருக்கிற தர்மமும். (சீரிய நற்காமமும்) சாஸ்த்ரங்களிலே ச்லாகிக்கப்பட்டதாய் போக்யமாய் விஹிதமாய் ஸ்வயம்புருஷார்த்தமான காமமும்.

(என்றிவைநான்கென்பர்) ஏவம்விதரூபேண நாலுவகைப்பட்டிருக்கும் புருஷார்த்தமென்று தர்மசாஸ்த்ரப்ரவர்த்தகரான வ்யாஸ பராசராதிகள் சொல்லுவர்கள். (ధర్మార్థకామమోక్షాఖ్యాః పురుషార్థా ఉదాహృతాః)(தர்மார்த்தகாமமோக்ஷாக்யா: புருஷார்த்தா உதாஹ்ருதா:) என்னக்கடவதிறே. இந்நாலிலும் தர்மார்த்தகாமங்கள் மூன்றும் ப்ராக்ருதங்களுமாய் ஸ்வரூபாநநுரூபங்களுமாய் இச்சரீரத்தோடே அநுபவிக்கப்படுமவையாயிருக்கும்; அந்திமபுருஷார்த்தமான மோக்ஷம் சேதநனுக்கு ப்ரக்ருதிவிமோசநாநந்தரம் இவன் தேஹாந்தரத்தை பரிக்ரஹித்து தேசவிசேஷத்திலே சென்று அநுபவிக்குமது அப்ராக்ருதமாயிருக்கும்; இது ஜ்ஞாநாநந்தஸ்வரூபனுக்கும் ஸ்வப்ரயோஜநமாயிருக்கும்; ஸ்வரூபஜ்ஞாநமுடைய அதிகாரிக்கு இவையெல்லாம் மாறுபடியிருக்கும். எங்ஙனேயென்னில்; சேதநன் அத்யந்த பரதந்த்ரனாய் தனக்கென்று ஒரு ப்ரயோஜநமுமின்றிக்கே பேறிழவுகள் ஸ்வாமியானவனுக்கே என்று அத்யவஸித்தவனுடையாலே யென்றபடி.

(நான்கினும்) நாலிலுமென்றபடி. புருஷார்த்தமான நாலிலும் வைத்துக்கொண்டு. (கண்ணனுக்கே ஆமது காமம்) ([illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible]

http://acharya.org

[illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible]) என்றும்சொல்லுகிறபடியே வருந்தசேஷியாய் ஸ்வபரரான ஸர்வேச்வரனுடைய ஸம்ச்லேஷத்தை அபேக்ஷிக்கும்படியான காமம் ப்ரதாநபுருஷார்த்தமாயிருக்கும்; அதிலேஸ்வார்த்ததையாகிற அஹங்காரத்தைத் தவிர்த்து அவனுடையமுகமலர்த்தியை உத்தேசித்துப்பண்ணும் பகவத்ஸம்ச்லேஷமே ப்ரதாநபுருஷார்த்தமென்றபடி.

(கண்ணனுக்கே) என்கிற அவதாரணத்தாலே, (தனக்கேயாக வெனைக்கொள்ளும்) என்றும், [(உற்றோமேயாவோமுனக்கே நாமாட்செய்வோம் மற்றைநங்காமங்கள் மாற்று) என்கிறபடியே அநந்யார்ஹமாக அநுபவிக்கவேணும் மென்றபடி. ஆக - இந்தஅதிகாரிக்கு பகவத்காமமே ப்ரதாநபுருஷார்த்தமாயிருக்கும். ([illegible]) (காமமாவார்த்ததர்மாப்யாம் கீயாமிதிமேமதி:) என்று பெருமாள் சொன்னது இத்தாற்பரியத்தையாலே விருத்தகாமத்தை வர்ஜித்த இத்தனை. ([illegible]) (அர்த்ததர்மௌபரித்யஜ்ய யக்காமமநுவர்த்ததே - ஏவமாபத்யதேக்ஷிப்ரம் ராஜாதசரதோயதா) என்றவிடையே இவ்வர்த்தத்தைச்சொன்னரிறே.

(அறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான்) அறம் - விசேஷதர்மம். ([illegible]) ([illegible]) (குளித்துமூன்றனலையோம்பும்) ([illegible]) (உனக்கேநாமாட்செய்வோம்) என்கிறபடியே-ஸம்மார்ஜநோபலேபநபுஷ்பமாலாகரணாதிகளான ஸம்ப்ரதிகைங்கர்யாதிகளுமென்றபடி. (பொருள்) தானத்துக்கு உபயுக்தமாய் அமுதுபடி சாத்துப்படி முதலானவற்றுக்கு ஸாதநமாயிருக்கிற அர்த்தம். (வீடு) தர்மார்த்தங்களை ஸம்பாதிக்கைக்குத் தகுதியாய் அவற்றினுடைய அபிவ்ருத்திக்குடலான ப்ராப்யதேசம். (இதற்கென்று) காமசப்தவாச்யமான இந்தபகவத்ஸம்ச்லேஷரூப ப்ரதாநபுருஷார்த்தத்துக்கு உபகரணமாய் சேஷமாயிருக்குமித்தனை யென்று. (இந்தமண்மிசையே) ஒருதேசவிசேஷத்திலேயன்றிக்கே, பரிதர்ச்யமானமாய் எல்லார்க்கும் அக்ஞானத்தை விளைக்குமதான இந்த மஹாப்ருதிவியிலேதானே. (வாமனன்சீலன்) இந்நிலையில் அர்த்திதவாதி நிரபேக்ஷமாகத்தானே வந்து உபகரிக்கைக்கு ஸ்ரீவாமநனுடையசீலனான. (இராமாநுசன்) எம்பெருமானார், (உரைத்தான்) ஒரு தேசவிசேஷத்தே பெறவேண்டியிருக்குமதான இவ்வர்த்தத்தை இங்கேதானே யருளிச்செய்தார்.

(வாமனன்சீலன்) ஸ்ரீவாமநாவதாரத்திலே அர்த்தித்வாதி நிரபேக்ஷமாகத் தானே [illegible]

http://acharya.org

ருடையவும் தலைகளிலே, (கல்லைப்பொருது) என்னும்படியான ஸ்ரீபாதத்தை வைத்தாப்போலே, (நமஸ்யந்தோ ...) (கிரித்வாரவிதவ்ய:) இத்யாதிவேதாந்த ஸம்ப்ரதாய விருத்தமாய், (ஸாந்தாநுகூலத்யு ...) (மது நீயவிஷயே ப்ரீதிர்ப்பக்தி:) என்கிறபடியே பக்திரூபமான இத்பகவத்காமத்தை ஸ்ரீபாஷ்யமுகேந அருளிச்செய்தாராகையாலும், லோகத்தாரெல்லார்க்கும் பகவத்ஸம்ச்லேஷ ஞானம் பிறக்கும்படி அவருடைய அதிகாரஸஹித காரங்களைப் பாராதே உபதேசித்தாராகையாலும், அவனுடைய ஸ்வபாவமே இவர்க்கும் ஸ்வபாவமாய் அவனோடு துல்யரானரென்றதாய்த்து. ... ... (௪௰)

உரை.—அ.—(காற்பத்தோராம்பாட்டு.) இப்பாட்டில் - எம்பெருமானார் உபதேசத்தாலே லோகம் திருந்தினபடியைக் கண்டு, ஸர்வேச்வரன் அநேகாவதாரங்கள் பண்ணித்தன்னைக்கண்ணுக்கிலக்காக்கினவளவிலும் காணமாட்டாத லௌகிகரெல்லாம், எம்பெருமானார்காலத்திலே யதார்த்தஞானம் பிறந்து பகவதீயரானார்க ளென்கிறார்.

மூ.—மண்மிசையோனிகள்தோறும்பிறந்தெங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலுங்காணகில்லாவுலகோர்களெல்லா
மண்ணலிராமாநுசன்வந்துதோன்றியவப்பொழுதே
நண்ணருஞானந்தலைக்கொண்டுநாரணற்காயினரே (௪௧)

பதம்.	உரை.
	"எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்கிறபடியே,
மண்மிசை	பூமியிலே,
யோனிகள் தோறும் பிறந்து	மநுஷ்யதிர்யக்ஸ்தாவர யோனிகள் தோறும் அவதரித்து,
எங்கள்	நமக்குநாதனான,
மாதவனே	ச்ரியப்பதியே,
	"ஸமாச்ரயணீய ..." (ஸமாச்ரயண விஷ்ய ப்ரியவிஷ்டோதம்) என்கிறதன்னை,
கண்ணுற நிற்கிலும்	கண்ணுக்கு விஷயமாக்கிக்கொண்டு நிற்கிலும்,

பதம்.	உரை.
காணகில்லா	இவன் நமக்குசேஷியென்று தர்சிக்கமாட்டாத,
உலகோர்களெல்லாம்	லௌகிக ரெல்லாரும்,
அண்ணல்	ஆச்ரிதருடைய இழவுபேறுகள் தம்மதாம்படியான ஸ்வாமித்வப்ராப்தியையுடையரான,
இராமாநுசன் வந்து	எம்பெருமானார் வந்து,
தோன்றிய அப்பொழுதே	பாஷ்யகாரணுதிகளை லேப்ரகாசகரான அக்காலத்திலே,
நண்ணரும்	ஸ்வயத்நத்தாலே துஷ்ப்ராபமான,

http://acharya.org

பதம்.	உரை.
ஞானம்தலைக்கொண்டு	ஞானமானது அதிசயித்து, ஸகலசேதநாசேதநங்களும்ப்ரகாசமாகத் தான் ப்ரகாசியாயிருக்கையாலே,
நாரணற்கு	நாராயணனென்னும் திருநாமத்தையுடையவனுக்கு,
ஆயினர்	சேஷமானார்கள்.

தோன்றல்-ப்ரகாசித்தல். அதயா, தோன்றிய வப்பொழுதே என்றது - ஆவிர்ப்பவித்த வப்பொழுதே யென்னவுமாம். அத்தப்பக்ஷத்தில், அப்பொழுதேயென்றது-அவதரித்தருளின அக்காலத்திலே யென்றபடி. அல்லது, தத்க்ஷணத்திலேயென்னவொண்ணுமிறே. கண்ணுறநிற்கையாவது - ஸாக்ஷாத்விஷயமாகநிற்கை. ஞானம் தலைக்கொள்ளுகையாவது-ஞானமதிசயிக்கை ... ...(௪௧)

வ்யா.—அ.—நாற்பத்தோராம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-எம்பெருமானார்பண்ணின உபதேச வைபவத்தைச்சொல்லி, இப்பாட்டிலே-பூலோகத்திலே ப்ரக்ருதி பரவசராயிருக்கிற சேதநரை ரக்ஷிக்கைக்காக ஸர்வேச்வரன் மநுஷ்ய திர்யகாத்யநேக தேஹ பரிக்ரஹம்பண்ணி எல்லார்க்கும் - ஸுலபனாய்க் கண்ணுக்கிலக்காய்நின்றாலும் இவன் ஸாதுபரித்ராணார்த்தமாக அவதரித்தவனென்று அறியமாட்டாத லௌகிகர்களே!, நமக்கு ஸ்வாமியான வெம்பெருமானார் அவதரித்தபின்பு அவர்ப்ரபாவத்தாலே ஸம்யக்ஞானவிஷ்டராய் நாராயணனே தங்களுக்கு ஸர்வப்ரகாரத்தாலும் வகுத்த சேஷியென்றுதெளிந்து அவனுக்குத் தங்களை சேஷமாக்கி வைத்தார்களென்று அருளிச்செய்கிறார்.

வ்யா.—(மண்மிசையோனிகள்தோறும்பிறந்து) ஜாதிஜாதிப் பலபிறப்பும்பிறந்த இச்சேதநரைப்போலே,(எத்தின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்) என்கிறபடியே, மநுஷ்யதிர்யக்ஸ்தாவரரூபங்களான பலயோனிகள்தோறும் ஸஜாதீயமான திருமேனியவதரித்து. (எங்கள்மாதவனே) இத்தனை ஸுலபமான யோனிகளிலே புக்கது உங்களுடைய இழவைக்காணமாட்டாத பரமக்ருபையாலேயிறே. உங்களை ரக்ஷிக்கைக்காக வென்றபடி. (மாதவனே) க்ருபாகுணத்துக்கு உத்தம்பகை பெரியபிராட்டியாராகையாலே அவருடைய சேர்த்தியை ஸ்மரிக்கிறார். ([illegible]) (ஸம்பாரஸத்யதநர்த்தே ஸே தேவாகருண்யருபயா-ரக்ஷைகஸர்வஸித்தாந்தே வேதாந்தேபி சகீயதே) என்று - ஈச்வரனுடைய ரக்ஷணமெல்லாம் பெரியபிராட்டியாரோடேகூடி ஆசரிக்கப்படுகிறதாகையாலும், அவளும் இந்த சேதநருடைய ரக்ஷணத்துக்காகவே, "அகலகில்லேன்

இறையும்'' என்று ஸர்வதா அநபாயிநியா யிருக்கையாலும் அத்தைப்பற்றி, (மாதவன்) என்றருளிச்செய்கிறார். அத்தஸ்ரீயாலே கிட்டுக்கொள்ளுகையன்றிக்கே, கேட்கொடுகேடநானே.

(கண்ணுறநிற்கிலும்) (எதிர்சூழல்புக்கெனைத்தோர்பிறப்பும்) என்கிறபடியே ஸர்வகாலத்திலும் ஸர்வதேசத்திலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஸர்வருடையவும் கண்ணுக்கு தன்னை விஷயமாக்கிக்கொண்டு நிற்கிலும். ([illegible]) (அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத்வ்ரதம்) என்றும், ([illegible]) ([illegible]) (மந்மநாபவமத்பக்தோ மத்யாஜீ மாந்நமஸ்குரு - மாமேவைஷ்யஸி ஸத்யந்தே ப்ரதிஜாநே ப்ரியோஸிமே) (அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:) என்றும், ([illegible]) (அஹம்ஸ்மராமிமத் பக்தம் நயாமிபரமாங்கதிம்) என்றும் இப்படி உபதேசித்து, படாதனபட்டு ஆத்மஸாத்யங்களைப் பண்ணிலும்.

(காணகில்லா) ([illegible]) (அவஜாநந்திமாம்மூடா: மாநுஷீந்தநுமாச்ரிதம் - பரம்பாவமஜாநந்த: மமபூதமஹேச்வரம்) என்கிறபடியே - இவன் நமக்கு ஒருத்த சேஷியென்று அறியமாட்டாதே. ([illegible]) ([illegible]) என்னும்படியான அவனுடைய ஸ்வரூபம், அவதரித்தவிடத்திலும் அப்படியேயாய்த்தனைக்கட்டிற்றுக்காணும். ([illegible]) (நதுமாம்சக்யஸேத்ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா - திவ்யந்ததாமிதேசக்ஷு:) என்று அவதாரத்திலும் அவன்படி யருளிச்செய்தாரிறே. (கண்கள் காண்டற்கரியனாய்) என்றாரிறே ஆழ்வாரும். இப்படி கேட்கொடுகேடே உபதேசித்தாலும் இருந்தார்களேபோனை.

(உலகோர்களெல்லாம்) லௌகிகரெல்லாரும். (அண்ணல்) ([illegible]) ([illegible]) என்கிறபடியே அச்ரேஷ்டமாயிருக்கிற ஐச்வர்யத்தைக் கொடுத்திருக்கிற. அன்றிக்கே, ஸ்வாமித்வப்ராப்தியையுடையவரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (வந்து) லோகத்தையெல்லாம் ரக்ஷிக்கைக்காக பரமபதத்தில்நின்றும் இறங்கியருளவந்து. (தோன்றிய வப்பொழுதே) அவதரித்தவக்காலத்திலே. அன்றிக்கே (வந்துதோன்றிய வப்பொழுதே) அவதரித்த

http://acharya.org

ஸ்ரீபாஷ்யகாரனுதிக்கையாலே தத்வஹித புருஷார்த்த ப்ரகாசகனான அக்காலத்திலே யென்றுமாம். தோன்றுதல் - ப்ரகாசித்தல்.

(நண்ணரு ஞானந்தலைக்கொண்டு) ஜ்ஞாநந்தலைக்கொள்ளுகையாவது - ஜ்ஞாநமதிசயிக்கை. ஸர்வவிலக்ஷணமாய் வ்யவஸ்தத்தாலே ப்ரகாசிக்கவிறே ஸம்பந்த ஜ்ஞாநமதிசயித்தென்றபடி. (நாரணற்காயினரே) ([illegible]) (மாதாபிதாப்ராதாநிவாஸஶ்ஶரணம்ஸுஹ்ருத்) என்றும், (சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய்தந்தையுமவரே) என்னுஞ் சொல்லுகிறபடியே ஸர்வவிதபந்துவாய் ([illegible]) (அந்தர்ப்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய) என்றும், (கரந்தெங்கும்பரந்துளன்) என்றும் சொல்லுகிறபடியே அந்தர்ப்பஹிஶ்சவ்யாபகனாய், ([illegible]) ([illegible]) (யஸ்யாத்மாசரீரம்) (ஏஷஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மா திவ்யோதேவஏக:) என்றும், (தானோருருவே தனிவித்தாய் தன்னின் மூவர் முதலாய வானோர்பலரும் முனிவரும் மற்றும்மற்றும் முற்றுமாய்) என்னுஞ் சொல்லுகிறபடியே ஸகலசேதநாசேதநங்களும் ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாய்க்கொண்டிருக்கிற நாராயணனுக்கே ஶேஷபூதரானார்கள். திருமந்த்ரார்த்தவிஶிஷ்டர்களானார்களென்றதாய்த்து. ... ... (சக)

உரை.—அ.—நாற்பத்திரண்டாம்பாட்டு. பகவதவதாரங்களில் திருந்தாதவர்களெல்லாரும் எம்பெருமானாருடைய அவதாரத்தாலே திருந்தினார்களென்றார் - கீழ்; விஷயப்ரவணராய் கிடந்தப் போகிறவென்னை தம்முடைய பரமக்ருபையாலே வந்து எடுத்தருளினாரென்று தம்மை விஷயீகரித்தபடியை அநுஸந்தித்துத் தலைச்சிக்கிறார் - இதில்.

மூ.—ஆயிழையார்கொங்கைதங்குமக்காதலளற்றழுந்தி
மாயுமென்னாவியைவந்தெடுத்தானின்றுமாமலராள்
நாயகனெல்லாவுயிர்கட்குநாதனரங்கனென்னும்
தூயவன்றீதிலிராமாநுசன்றொல்லருள்சுரந்தே. (சஉ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆய்	ஸ்ரக்வஸ்த்ராபர		அநுரூபமாகத்
	ணங்களாலே		தெரிந்து பூணப்
	தெஞ்சுதோஷம்பு		பட்ட,
	றம்புதோற்றுதப	இழையார்	ஆபரணங்களையுடை
	டிமனத்தைச்சேதந		யராய், அதுவே
	னை போகவிப்பிக்		நிருபகமாகவிருக்
	குமவர்க ளானை		கும் ஸ்த்ரீகளு
	யாலேதங்களுக்கு		டைய,

http://acharya.org

பதம்.	உரை.
கொல்லை நல்கும்	ஸ்நேகத்துக்கு அவ்வருகு ஒன்றில் போகாததாய்,
அஃ	வாக்குக்கு நிலமல்லாதபடி கைகழிந்திருக்கிற,
காதல் அளறு	ப்ராவண்யமாகிற அளற்றிலே,
அழுந்தி	அழுந்தி,
மாயும்	நசித்துப்போகிற,
என்னாவியை	என்னாத்மாவை,
	அனுபாயத்து முடியத் தேடுகிறவர்களை விரகறியும் தார்மிகர் வந்தெடுக்குமாப்போலே,
மாமலராள் நாயகன்	ச்ரிய:பதியான,
அரங்கன்	பெரியபெருமாளே,
எல்லாவுயிர்க்கட்கும்	ஸகலாத்மாக்களுக்கும்,
நாதன் என்னும்	சேஷியென்று உபதேசியா நின்றுள்ள,

பதம்.	உரை.
ஆயவன்	ஜ்ஞாநத்தையுடையராய், இப்படி உபதேசிக்குமிடத்தில்,
தீதில்	க்யாதி லாபாதி அபேக்ஷாரூப தோஷரஹிதரான,
இராமாநுசன்	எம்பெருமானார்,
தொல்அருள்	தம்முடைய ஸ்வாபாவிகக்ருபையை,
சேர்ந்து	இசைந்து,
வந்து	அந்த க்ருபாப்ரேரிதராய் வந்து,
இன்றடுத்தான்	இன்று எடுத்தருளினார்.
	இப்படி செய்தருளுவதே! என்றுகருத்து.

ஆய்தல் - தெரிதல். இழை - ஆபரணம். அக்காதலென்று - அதினுடைய தேவையைச் சொல்லிற்றாகவுமாம். மாய்தல் - நசித்தல். ... ... (சுஉ)

வ்யா.—அ.—அறுபத்திரண்டாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே- ஈச்வரனவதரித்து உபதேசித்தவிடத்திலும் திருந்தாத லௌகிகர், எம்பெருமானாரவதரித்தபின்பு திருந்தி விலக்ஷணராய் பகவத்விஷயரானார்களென்கிறார்; இப்பாட்டிலே- ஆபாதரமணீயவேஷைகளான தருணீஜநங்களுடைய ஸ்தநங்களிலே பத்தமான ப்ரீதியாலே ஆழங்காற்பட்டு நசித்துப்போகிற என்னாத்மாவை ச்ரிய:பதியான திருவரங்கச்செல்வனாரே ஸகலாத்மாக்களுக்கும் வகுத்த சேஷியென்று உபதேசிக்கும்படியான ஜ்ஞாநவைசத்யத்தை யுடையராய் தீர்த்தஜ்ஞரான எம்பெருமானார், இப்போது அந்தலௌகிகரெல்லாரிடத்திலேயும் பண்ணின தம்முடைய ஸ்வாபாவிக க்ருபையை அடியேனொருவனிடத்திலும் கட்டடங்கப்ரவஹித்து விஷயாந்தர ப்ராவண்யத்தில் கர்த்தத்தில் நின்றும் உத்தரித்தார் கண்டாயே! என்று ஹ்ருஷ்டிக்கிறார்.

http://acharya.org

வ்யா.—(ஆய்விழையார்) ([illegible]) (சர்மாஸ்ர்க்மாம்ஸமேதோஸ்த்தி மஜ்ஜாசுக்லாதிஸம்யுதே| தேஹே சேத்ப்ரீதிமாந்மூடோ) என்றும், ([illegible]) (க்ருமிகுலஸங்குலம்) என்றும், ([illegible]) (ஸ்வபாவதுர்கந்தமசௌசமத்ருவம் கலேபரம் மூத்ரபுரீஷபாஜநம்) என்றும், (மூடைத்தசையூன்) என்றும் சொல்லுகிறபடியே - அதிஹேயமாயிருக்கிற தேஹத்தினுடைய ஹேயதை தெரியாதபடி, ஸ்ரக்வஸ்த்ராபரணங்களாலே அலங்கரித்துக்கொண்டு ஆபாதரமணீயைகளான தருணிகளுடைய. ஆய்தல் - தெரிதல். இழை - ஆபரணம். இழையார்-ஸ்த்ரீகள். அகவாயில் தோஷமொன்றும் தோற்றாதபடி கைப்பாணியிட்டாப்போலே காணும் இவர்கள் தம்மை அலங்கரித்துக்கொண்டிருப்பது. (கொங்கைதன்னும்) ([illegible]) (ஸ்தநௌமாம்ஸக்ரந்தீ) என்கிறபடியே மாம்ஸமயமான ஸ்தநங்களிலே லக்நராய், அவற்றின் தோஷத்தைத் தெரியமாட்டாதே போக்யதாபுத்தியைப்பண்ணி அவற்றுக்கு அவ்வருகுபோக அசக்தராய், த்ருஷார்த்தனானவன் தண்ணீர்ப்பந்தலிலே விழுந்துகிடக்குமாப்போலே அவற்றிலே தானே நித்யவாஸம்பண்ணும்படியான.

(அக்காதலளற்றழுந்தி) அத்தவிஷயம்போலே அதிஹேயமான வ்யாமோஹமென்கிற அள்ளல்தரையிலே மக்நராய். அன்றிக்கே, (அக்காதல்) வாக்குக்கு விஷயமல்லாதபடி கைகழிந்த காதலென்னவுமாம். (மாயும்) நசித்துப்போகிற. (என்றுவிலை) இவையெல்லாரையு முத்தரித்தபடி யருளிச்செய்தீர்; இது உமக்குத்தெரிந்தபடியென், கர்ணாகர்ணியாய்க் கேட்டிருந்தீராகில் இது நமக்கு விச்வஸநீயமாயிருக்குமோ வென்ன; அப்படி கேட்டுச்சொன்னேனல்லேன், இதுக்கு நான் ஸாக்ஷியென்று தம்மைக்காட்டுகிறார் (என்றுவிலை) என்றாத்மாவை. இவ்வளவும் ([illegible]) ([illegible]) என்னும்படியாய்ப் போகிற என்றாத்மாவை. ஒரு கைம்முதலில்லாத என்றாத்மாவை.

(மாமலராள்நாயகன்) மாமலர் என்று-ஸமஸ்தபுஷ்பஜாதிக்கும் உத்க்ருஷ்டமாய் ஸ்லாக்யமாயிருக்கையாலே கமலத்தைச்சொல்லுகிறது. அந்தகமலந்தான் தன்னுடைய காசாநேத்ராதிகளுக்கு ஒருபடிபோலியாயிருக்கையாலும், பரிமளப்ரகர்ஷமாகையாலே போக்யதமமாகையாலும் அதிலே [illegible]யாய் அங்கே நித்யவாஸம் பண்ணுகையாலே (மாமலராள்) என்கிறார். (மாமலராள்நாயகன்) ப்ராப்யமுமிதி [illegible] ளிரண்டுக்கும் பொதுவாய் [illegible]

யாலே, ([illegible]) (ஞானிகளைச்சிக்கவே ஸர்வபேதத்யாக கீதாப்ர ஸத்தரபேதஞ்ஞானிநவிநிதப்ரதிஷ்டித்தாங்கல யத்தர்த்திப்ர) என்றிறபடியே-ஸகலசேதநர்களுடையவும் போக்யபோக்யதைகளை அடைவே கடாக்ஷித்து ததநுரூபமாக பலத்தைக்கொடுப்பனென்று பயப்படவேண்டாதபடி, ([illegible] | [illegible])([illegible] மத்ரிதநுக்கிரிபாம் | அநாக்ஷமமிஷுக்தே நித்யமந்த்ரநுஷக்தமாம்) என்றிறபடியே-தானும் அஜ்ஞாநமிக்கவனுமாய் அநுக்கரஹமியாய், ஈச்வரனுடைய நிதரத்தை ஸர்வேச்வரனுக்கு அறிவிப்பானாய், கண்ணைப்புரட்டுதல், கச்சையெழிக்குதல் முதலான தன்னுடைய ப்ருவிலாஸசேஷ்டிதங்களாலே அவனை வசீகரித்துத் தனக்குக் கையாளாகப்பண்ணிக்கொண்டு, தானும், (இறையும் - அகலகில்லேன்) என்று அபேக்ஷியாயிருக்குமவள் பெரியபிராட்டியார்க்குவல்லபனானவன். இவன்தான் ([illegible])(கேம்பீக்ஷாபஹாரத்வமி) என்றவனிறே.

(எல்லாவுயிர்கட்கும் நாதன்) ([illegible]) (பதிம்விச்வஸ்ய) என்றிறபடியே ஸகலாத்மாக்களுக்கும் பாலகன். வருத்தநேசஜிவேன்றபடி. ஆனால், ([illegible]) (விதியிவைகளாத்மயர்த்யாதமத்யக்தநாம்) என்றிறபடியே நமக்கு எட்டாத நிலத்திலேயிருக்கானென்னவேண்டா (அரங்கன்) நாமிருக்குமிடத்தே வந்திருந்துக்கொண்டு, ([illegible]) (அபயமளிக்கபூதேப்யோததாமி) என்றிறபடியே இருந்தவனன்றோ. (என்னும்) இப்படி உபதேசம்பண்ணும்படியான, (அருளன்) ([illegible]) (கருணையினாலேகலந்தச்சமவிக்ரயிதநுவிஷ்யதே) என்றிறபடியே தத்வயாதாத்ம்யஜ்ஞாந பூர்த்தியாலே என்போலவேதனையும் பாவகர்ரம்படிபண்ணுகிறார்.

ஆனால் நீர் அநுவர்த்தநம்பண்ணாதே விஷயாந்தரப்ரவணராயிருந்தீரேயென்ன (நீநில்) அப்படி சித்தமேயில் அதிகாரத்தைப் பார்க்கவொண்ணாதே தோஷாதிதர். உபதேசிக்குமிடத்தில் க்யாதியாப பூஜாத்யபேக்ஷாரூப தோஷாதிதரென்றபடி. (இராமாநுஜன்) இப்படிப்பட்ட எம்பெருமானார். (இன்று) அதுவும் காலாந்தரத்திலேயோ. (இன்றுவந்து) ஸகலஜநத்துக்கும் ப்ரத்யக்ஷமாகவே இப்போதுவந்து. (தொல்லருள்காத்து) உமக்கொருவர்க்கும் ஒரு காலவிசேஷத்திலே க்ருபைபண்ணினார், அவர்க்கெப்போதுமுண்டோவென்ன (தொல்) அந்தக்ருபை அவருக்கு ஸ்வாபாவிகம், (அருள்காத்து) அப்படிப்பட்ட க்ருபையினாலே. மேன்மேலும்

http://acharya

என்னுடைய துர்வாஸனைகளெல்லாம் அடிமாண்டுபோம்படி (ஸ்ரீ [illegible])(த்விபாயகாரே ஞானிவாஸனேநகம்)என்கிறபடியே அவதரித்து மேகம்வர்ஷித்தாப்போலே பண்ணியருளி. (எடுத்தால்) ஆற்றுவெள்ளத்திலே பாய்ந்துபோகிறவனை விரகறியுந்தார்மிகர் வந்தெடுத்து ரக்ஷிக்குமாப்போலேயும், கூபத்தில்விழுங்குழவியுடன்குதித்து அவ்வாபத்தை நீக்கு மத்தவனைப்போலவும் அர்த்தக்ஷபாப்ரஸாதங்கொண்டுவந்தெடுத்தருளினர். ... (௭௩)

உரை.—அ.—எழுபத்துமூன்றாம்பாட்டு. இப்படி தம்மை விஷயீகரிக்கையாலுண்டான ப்ரீதியாலே லோகத்தைப்பார்த்து எல்லாரும் எம்பெருமானார்திருநாமத்தைச் சொல்லுங்கோள், உங்களுக்கு எல்லாநன்மையு முண்டாமென்கிறார்.

சூ.—சுரக்குந்திருவுமுணர்வுஞ்சொலப்புகில்வாயமுதம்
பரக்குமிருவினைபற்றறவோடும்படியிலுள்ளீர்!
உரைக்கின்றனனுமக்கியானறஞ்சீறுமுறுகலியைத்
துரக்கும்பெருமையிராமாநுசனென்றுசொல்லுமினே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
படியிலுள்ளீர்	எம்பெருமானார் திருவவதரித்தருளுகையாலே, "[illegible]" (விச்வம்பார புண்யவதீ) என்கிறபடியே பாக்யவதியாயிருக்கிற பூமிக்குட்பட்டவர்களே,		தம்முடைய ஸம்பந்தமுள்ள விடத்திலே நில்லாதபடி,
		துரக்கும்	ஓட்டிவிடும்,
		பெருமை	ப்ரபாவத்தையுடையவரான,
யான்	நிஸ்சிதமாக அநுபவத்தாலே கைகண்டவன்,	இராமாநுசனென்று சொல்லுமின்	எம்பெருமானுடைய திருநாமோச்சாரணத்தைப் பண்ணுங்கோள்;
உமக்கு	இதில் வாசியறியாமல் இழந்திருக்கிற உங்களுக்கு,	திருவும்	பக்தியாகிற ஸம்பத்தும்,
		உணர்வும்	ஜ்ஞானமும்,
உரைக்கின்றனன்	சொல்லுகிறேன்;	சுரக்கும்	மேன்மேலும் வர்த்திக்கும்;
அறம் சீறும்	தர்மமென்பதொன்றுதான் நடையாடவொட்டாதே,		"என்றக்காலன்னிக்கு மமுதம்" என்னுமளவன்றிக்கே,
உறுகலியை	தானே ப்ரபலமாய் வந்து நிற்கிற கலியை,	சொலப் புகில்	சொல்லத் தொடங்கினபோதே,

20

http://acharya.org

பதம்.	உரை.
வாய்அமுதம்பரக்கும்	வாக்கிலே ரஸம்பரக்கும்,
	அநுபவ விரோதியமாதல் ப்ராபல்யஸித்திர விரோப்யமாதல் செய்யாது.
இருவினை பற்றறுக்கும்	புண்யபாபங்கள், தானேஅன்றி லவலேசமாக விட்டோடும்.

"தன்னேர்வண்ணத் தான்செ டவரினை குற்றியலிகரமும் குற்றியலுகரமும் அளபெடை யாவையும் அலகியல்பிலவே" என்கிற ஸ்வபாவத்தாலே, "உரைக்கின்றனனுமக்கியான் அறஞ்சீ றுமுறுகலியை" என்கிற பாட்டில், "உமக்கியான்" என்கிற இடத்தில் ககரத்தின் மேலேயின இகரம் குற்றியலிகரமானபடியாலே வண்ணம் கெடாமைக்குக் கழித்து உடலெழுத்தான ககரத்தைத் தொடே ஒன்றுவித்து, பூர்வோத்தரபாதங்களுக்கு ஒக்க பதினெழுத்தாக்கி எண்ணக்கடவது. "என்முடியாதேனக்கியாதே யறிது" என்று ஆழ்வார் நூற்றந்தாதியிலும் இப்படி ப்ரயோகிக்கப் பட்டதிறே. ஆகையாலே மநுஷ க்ஷிப்ரயோகங்கள் இப்படியாக்கடவதாகிருக்கும். ... (௭௩)

வ்யா.—அ.—எழுபத்துமூன்றாம்பாட்டு. இப்பாட்டிலே எம்பெருமானார், தம்முடைய தோஷங்களைப் பாராதே தம்மை விஷயீகரித்த வாத்ஸல்ய குணத்திலே ஈடுபட்டு அத்தப் ப்ரீதி தம்மைக் கடைவிட்டு லோகத்தாரெல்லாரையும் உஜ்ஜீவிப்பிக்கவேணுமென்னும் பாரார்த்யபாராய் அவர்களை ஸம்போதித்து, ஸம்ஸாரிகளான உங்களுக்கு கரைகண்டோர் உபதேசிக்கிறேன், தர்மப்ரத்வேஷியான கலியை வைதேசிகமாகப் போக்கக்கடவதான சதுராக்ஷரி மந்த்ரத்தை அதிகரியுங்கோள், உங்களுக்கு ஸகலபலங்களும் தன்னடையே வந்துசேருமென்கிறார்.

வ்யா.—(படியிலுள்ளீர்) = இருள்தருமாஞாலமான இந்தலோகத்தில் வர்த்திக்கிற அறிவிலிகளான மனிசரே. ஸுகதுக்கரூபமான புண்யபாபங்களுக்கு விளைநிலமாயிருக்கிற பூமியிலே இருக்கின்ற மநுஷ்யரேயென்றபடி. அன்றிக்கே, எம்பெருமானார் திருவவதரித்தருளுகையாலே, ([illegible]) (விச்வம்பரா புண்யவதீ) என்கிறபடியே பாக்யவதியாயிருக்கிற பூமிக்குட்பட்டவர்களேயென்னுதல். உள்ளபடி தத்வஹித புருஷார்த்தங்களை யறியப் பெறாதே ப்ரக்ருதிவச்யராய்த்தாலே திரியுமவர்களே என்னுதல். படி – பூமியும், ஸ்வபாவமும். (உமக்கு) அநாதிகாலமே தொடங்கி இன்று, [illegible] இவ்வளவும் சப்தாதிவிஷயங்களுக்கே சேஷமாய்ப்போந்த உங்களுக்கு. (யான்) முன்பு துர்விஷயங்களிலே மக்னனாய், பின்பு எம்பெருமானார் தம்முடைய க்ருபையாலே,

http://acharya.org

([illegible]) (மக்காதத்தாதேவோ காக்கருணபாச்சாந்த்ரபாவிராச) என்கிறபடியே- ஸம்ருத்தமிக்க, அவ்வருத்தத்துக்கு அக்ஷரங்களும் அங்கேயிருக்கிற ஸ்வத்தை புவித்துக்கொண்டவன். (உரைக்கின்றவன்) ([illegible]) (ஸ்வேதாச்சபுஜாமாஸாச்ச ஸமாஸவேத் வாஸனகிஷ்டவே) என்கிறபடியே உபதேசம்பண்ணுகிறவன்.

(அறம்) ([illegible] । [illegible]) (கலௌகார்த்த புருஷாக்ஷம் கர்த்துமிச்சதி யோநர: சாதுர்வர்ண்யம்மயாஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஸ:) என்கிறபடியே பகவதாஜ்ஞாரூபமாய் தத்தத்வர்ணாச்ரமதேசகாலாதிகாரிகளாலே நியதமாய் அதிக்ரியல்பாபாரநிர்வர்த்தமான ஸ்திதிஸேஷம். (சீறும் உறுகலியை) இப்படிப்பட்ட தர்மத்தையும் தத்கர்த்தாவையும் குறித்து, ([illegible]) (ஸ்வாமித்ரோஹிநிதமத்யா தன்மைப்ராத் வேஷபதேகலி:) என்கிறபடியே அத்யந்தகுபிதனும் இந்த அவ்யபாரத்திலே முதுகிறிருக்கிற கலிபுருஷனை. அன்றிக்கே, (உறுகலியை) ப்ரபலமாய் உறைத்து நிற்கிற கலியை யென்றுமாம்.

(துரக்கும்பெருமை) (கம்மெனறுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே) என்கிறபடியே அந்தக்கலிபுருஷனும் அவனாலே ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட அதர்மங்களும் ஓடிப்போம்படி பண்ணவல்ல அதிசயத்தையுடைய. (இராமானுசனென்று சொல்லுமினே) இராமானுசன் என்கிற திருநாமத்தைச் சொல்லுங்கோள். ஸகலஸம்ஸாரிமோக்ஷமந்த்ரத்தை ஐபிக்கவேண்டா. ([illegible] । [illegible]) (கலௌராமாநுஜோத்வேஷாசதுராக்ஷ்ய சாமயஸ்ந்தரம் ப்ரபத்யக்தே ஜித்வேஷாநாத்மார்த்த:) என்று-இவருடைய ஆசார்யரான ஆழ்வானும் அருளிச்செய்தாப்போலே லோகத்தாருடைய ஸம்ஸாரதுக்கத்தைப்பார்த்த இவர்க்கு கலைபுகன்று வந்தவரே, எம்பெருமானைப்போலே இவரும் இந்த அதிசயத்தை ஆவிஷ்காரமாக எல்லார்க்கும் வெளியிடுகிறார்காணும்.

இந்தளவேயல்லவென்கிறதென்னென்ன (காக்கும் இயல்வினன்) ([illegible]) ([illegible]) (லக்ஷ்மணோலக்ஷ்மி ஸம்பந்ந:)(அநுகூலவாஸ்ஸ்ரீமாந்) என்றும், (ஒழிவில்காலமெல்லாமுடனுமன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்) என்னும் சொல்லுகிறபடியே ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்ய ஸம்பத்தி அத்யந்த பரசேஷதைதானே

http://acharya.org

ஸ்வரூபஜ்ஞாநமும் மென்மேலென வர்த்திக்கும். (அடியாரடியார்தம் மடியாரடியார் தமக்கடியாரடியார் தம்மடியாரடியோங்களே) என்கிறபடியே பக்தியாகிற ஸம்பத்தும், அதில்நின்றும் ததீயபர்யந்தமாயிருக்கிற ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமும், ஸம்பத்தில்நின்றும் காவேரிபிறந்தாற்போலே சுரக்குமென்றபடி.

(சொலப்புகில்வாயமுதம்பரக்கும்) தேவஜாதியெல்லாம்திரண்டு அநேககாலமக்கிரியைக்கொண்டு நெடுங்காலம் உடைதனைபட்டபின்பிறே இந்த உப்புச்சாறுபிறந்தது, பிறப்பேபிடித்து போஜநாலமதியாதவர்களாகையாலே அத்தைஅம்ர்தமென்று பேரிட்டார்கள் அதுபோலன்றிக்கே, (தென்குருகூர்நம்பி யென்றக்காலண்ணிக்கும் அமுதூறுமென்நாவுக்கே) என்கிறபடியே ஆழ்வாருடைய திருநாமத்தைத் தாமநுஸந்தித்தபின்பிறே ஸ்ரீமதுரகவிகளுடைய நாவுக்கு ஸ்வாரஸ்யமான அம்ர்தம்பிறந்தது அதின்படியையுமன்றிக்கே, இந்த சதுரமான சதுராசாரியை யநுஸந்திக்கவேணுமென்னுடத்யேமிக்கவே அவர்களுடைய திருப்பவளத்துக்குள் ஸ்வரூபோஜ்ஜீவநமான அம்ர்தம் ஊற்றுப்போலே சுரவாநிற்கும். (இருவினை பற்றறவோடும்) ([illegible]) (தாரயித்வாக் புண்யபாபேவிதூய) என்கிறபடியே அநுபவத்தாலும் ப்ராயஸ்சித்தாதிகளாலும் நிவர்த்திப்பிக்க வரிதான மஹாபாபங்களெல்லாம் வாஸனையோடேகூடப் பிசுகறப்படாதேவிட்டோடும். வேதாந்தவிரோதம்வாராமைக்காக:- ([illegible]) (ஸுஹ்ருதஸ்ஸாதுக்ர்த்யாம் த்விஷந்தபாபக்ர்த்யாம்) என்கிறபடியே அவன்பினாக்கேநிட்டு இந்த அதிகாரிகளே நிர்மலராகப்பண்ணுமென்றதாய்த்து. ... ... (௪௩)

உரை.—அ.—நாற்பத்துநாலாம்பாட்டு. இப்படி உபதேசித்தவிடத்திலும் ஒருவரும் இதில் ருசியாமையாலே அவர்களுடைய படியை அநுஸந்தித்து இன்னாதாகிறார்.

மூ.—சொல்லார்தமிழொருமூன்றுஞ்சுருதிகணான்குமெல்லை
இல்லாவறநெறியாவுந்தெரிந்தவனெண்ணருஞ்சீர்
நல்லார்பரவுமிராமாநுசன்றிருநாமநம்பிக்
கல்லாரகலிடத்தோரெதுபேறென்றுகாண்பர்களே. (௪௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அகலிடத்தோர்	விஸ்தீர்ணமானபூமியிலுள்ளார்,	சொல்லார்	சொல் நிரப்பத்தையுடைத்தாய்,
ஏதுபேறு	புருஷார்த்தம் ஏது வென்று,	ஒரு	அத்விதீயமாய், இயல்இசை நாடகம்பத்தாலே
என்று			
காண்பர்	இச்சியா நிற்பர்கள்;		

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
மூன்றுதமிழும்	மூன்றுவகைப்பட்டிருக்குன்ன தமிழும்,	பரவும்	ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அடைவுகெட ஏத்தும்படியிருக்கிற,
சுருதிகள் நான்கும்	ரிகாதிசதுர்வேதங்களும்,	இராமாநுசன் திருநாமம்	எம்பெருமானாருடைய திருநாமத்தை,
எல்லையில்லா	அஸங்க்யேயமான	நம்பி	நாம்சொன்ன வார்த்தையை விச்வஸித்து,
அறநெறியாவும்	தர்மமார்க்கங்களானவைகளும்,	கல்லார்	கற்கிலர்கள்; ஐயோ! இவர்களை யிருந்தபடியென்னென்று கருத்து.
தெரிந்தவன்	அவைகளைக ஆராய்ந்திருக்குமவராய், எண்ணப்புக்கால்,		
எண்ணரும்	எண்ணித்தலைக்கட்டவரிதான,		
சீர்	கல்யாண குணங்களையுடையவராய்,		
நல்லார்	ஸத்துக்களுடைய,		

எண்ணருஞ்சீர் என்கிறவிது நல்லார்க்கு விசேஷணமாகவுமாம்; நம்புதல்-விருப்பமுமாம்.

வ்யா.—அ.— நாற்பத்தேழாம்பாட்டு. இப்பாட்டிலே லோகத்தாரெல்லார்க்கும் அவர்களுடைய அதிகாராநதிகார விபாகம் பாராதே அத்யந்தவிலக்ஷணமான உபாயத்தை உபதேசித்தாலும் அத்தை அத்யவஸிக்க மாட்டாதே புருஷார்த்த மேதென்று தேடியாநின்றுகொண்டு, விஹிதமானசப்தராசியாலே நிறையப்பட்டதாய் அத்விதீயமாய் இயலும் இசையும் நாடகமும் கூடிவிலக்ஷணமான இப்ப்ரபந்தமும், ரிகாதிவேதசதுஷ்டயமும், அபரிமிதமாய்த்ததுபப்ரும்ஹணமானதர்மசாஸ்த்ரமாகிறஇவற்றை அடைவேஆராய்ந்திருக்குமவராய், ஸத்துக்களாலே அடைவுகெடஸ்துதிக்கும்படியாயிருக்கிற எம்பெருமானாருடையதிருநாமத்தை அப்யஸியாதேபோனார்களென்று இன்னாதாகிறார்.

வ்யா.—(அகலிடத்தோர்)(அநந்தா)என்றும்(விபுலா)என்றும் பேரையுடைத்தானஇந்த மஹாப்ருதிவியிலுள்ளசேதநர்கள். (எது பேறென்று காமிப்பர்)என்றுஇவர்களுடைய இழவைக்கண்டுபொறுக்கமாட்டாதே, (மந்த்ரம் யத்நேந கோபயேத்)(மந்த்ரம் யத்நேந கோபயேத்) என்கிற சாஸ்த்ரத்தையும் அதிக்ரமித்து அத்யந்தஸுலபமாய், (ருசேச்சாமாத்ரதுபேத்)(ருசேச்சாமாத்ரதுபேத்) என்கிறபடியே-தநியவிசேஷதாரஸ்வரூபாநுரூபமாய் பரமபோக்யமான சதுரக்ஷரியை உபதேசித்தாலும் அதிலே விச்வஸிக்கமாட்டாதே அதிலு கெட்டுப்பின்னையும்நமக்கோர் சரணமேதென்று இக்குமக்கும்காடி

http://acharya.org

அந்த இச்சையோடே காலமெல்லாம் இப்படியே வ்யர்த்தமாகப்போக்குகிறார்கள், ஐயோ! இவர்களப்ராப்தத்திலுண்டான க்லேசமெல்லாம் இவ்வளவாய்த் தலைக்கட்டிற்றென்று இன்னாதாகிறார்.

ஆனால் அத்யயநம் பண்ணுவிக்குமவர்கள் மந்தமதிகளுக்கு பின்னையும் ஒருசந்தையைச்சொல்லி அவர்கள் தரிக்குமளவும் க்லேசிப்பண்ணுவர்களிறே, அப்படி நீரும்செய்யவேண்டாவோவென்ன; ([illegible]) (பச்சிமேசிஷ்யைகத்வர்யமுத்தர்ப்பயதே ச்ருபதேசியவா! அத்தரப்பஹரி ஸாதத்வர்யமுவ்யாப்ய காராயணஸ்திதா:) என்றும், (என்பெருக்கலத்தோண் பொருளீந்தில, வன்புகழ்நாரணன் இன்கழல்சேரே) என்றும் ப்ரபாவ புரஸ்ஸரமாக அம்மந்த்ரத்தை உபதேசித்தாப்போலே இவரும் தாம் முன்பருளிச்செய்த சதுரக்ஷரிமந்த்ரத்தை எதிரிட்டு ப்ரபாவவர்ணந பூர்வகமாக அருளிச் செய்கிறார் (சொல்லார் தமிழொரு மூன்றும்) (சீர்த்தொடையாயிரம்) என்றும், ([illegible]) (சடகோபவாங்மயம்) என்றுஞ் சொல்லுகிறபடியே - வேதங்களைத் தத்வார்த்த நிர்ணயங்களான சப்தங்களாலே நிறைவைப்பட்ட தமிழ்மறை-திருவாய்மொழி. ஒருவென்றபதம், காகாக்ஷிந்யாயேந பூர்வோத்தர பதங்களிலே அந்வயிக்கும்; லோகத்திலும்வேதத்திலும் அதுக்கு ஒத்ததான ப்ரமாண மில்லையென்றபடி. (மூன்றும்) அதுக்கு மூன்று ப்ரகாரமாகக் கணிக்கத் தக்கதாய் அத்விதீயமான மற்ற மூவாயிரப்ரபந்தமும். இப்படி ஆழ்வார்பதின்மாரும் அருளிச்செய்யப்பட்ட ஸமஸ்ததிவ்ய ப்ரபந்தங்களும். அன்றிக்கே, ஒருமூன்றென்றது - திருவிருத்தமும், திருவாசிரியமும், பெரிய திருவந்தாதியும் பொருளாகவுமாம்.

அன்றிக்கே, (சொல்லார்தமிழொருமூன்று) சொல் ஸ்ரப்பத்தையுடைத்தாய், அத்விதீயமாய், இயல் இசை நாடக ரூபத்தாலே மூன்று வகைப்பட்டிருக்குமன்ன தமிழென்னவுமாம். (சுருதிகள்நான்கும்) ப்ரமாணாந்தரங்களைப்போலே அநித்யமாயும் ஸாபேக்ஷமாயுமிருக்கையன்றிக்கே, ([illegible]) (வாசாவிருப நித்யயா) என்கிறபடியே நித்யமாய் அபௌருஷேயமாய் - ஸ்வத: ப்ரமாணமாய் புத்தக நிரீக்ஷணாதி ரஹிதமன்றிக்கே, ([illegible]) (ஸ்வரத்வயோபேதவ்ய:) என்கிறபடியே - ஆசார்யோச்சாரணானுச்சாரணத்தாலே கற்கவேண்டியதாய், ([illegible]) (நிசேயநுஸ்ருதிர்மாமி தந்தவாதர்வணீச) என்னும்படியான பேர்களை யுடைத்தாய்க்கொண்டு நாலுவகைப் பட்டிருக்கிற வேதங்களும். (எல்லையில்லா அறநெறி) அந்த வேதங்களுடைய அர்த்தப்ரகாசகங்களைத் தொகையிட்டுச் சொல்ல

http://acharya.org

ஷோன்றாதபடி அநந்தமான தர்மமார்க்கங்களை. (யாவுந்தெரிந்தவன்) வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யரோ பயவேதாந்தாசார்யராகையாலே இவையெல்லாவற்றையும் அலகலகாக ஆராய்ந்திருக்குமவராய்.

(எண்ணருஞ்சீர்) இவர் பகவதநுசாஸமாகையாலே, ([illegible]) (ஸங்க்யாதுமநைவசக்யந்தேகுணா:) என்னும்படி அநந்தகல்யாணகுணகராய். ([illegible]) (சதந்வேவேயஸ்சதுர்ண்யாமமதநந்த்யயா:) என்னும்படியான அவனுடைய கீர்த்தியை பரிச்சேதிக்கிலும் இவருடைய கீர்த்தியை பரிச்சேதிக்கவொண்ணாதாகிலும். அங்ஙனிக்கே; (எண்ணருஞ்சீர்) என்றது - (நல்லோர்) என்றபதத்துக்கு விசேஷணமாகவுமாம். அப்போது, ([illegible]) (வாசாமகோசரமஹாகுணதேசிகாக்ர்யகூராதிநாத) என்கிறபடியே எண்ணிறந்த கட்டளவிறந்த கல்யாணகுணங்களையுடையரான ஆழ்வான், பின்னான், எம்பார்தொடக்கமானவென்றபடி. (நல்லார்பரவும்) ([illegible]) ([illegible]) இத்யாதியாலும், ([illegible]) ([illegible]) இத்யாதியாலும், (வாழியெதிராசன்) இத்யாதியாலும் - அந்தவர்களுடைய ப்ரீதிப்ரகர்ஷத்தாலே அடைவுகெட ஏத்தும்படியிருக்கிற.

(இராமாநுசன்திருநாமம்) எம்பெருமானாருடைய திருநாமம். ராமாநுசன் என்கிற இத்திருநாமத்தை. (நம்பிக்கல்லார்) இவருடைய ப்ரபாவத்தையறிந்து விச்வஸித்து இவருக்குத் திருநாமமான சதுரக்ஷரிமந்த்ரத்தை அப்யஸியாதேபோனார்கள். ([illegible]) என்கிறபடியே குரக்களும் மஹாராஜர்ப்ரத்யயம் பண்ணினபின்பு விச்வஸித்தார்களிறே; இவர்கள் அதநத்திவேசம் பண்ணுகைக்கு யோக்யரான மநுஷ்யராயிருக்கும் நம்மை எம்பெருமானார்விஷயீகரித்தபடியைத் தெளிவித்து ப்ரத்யயம் பண்ணிக்கொடுத்தாலும் இவர்கள் விச்வஸிக்கமாட்டாதேபோனார்கள், இவர்கள் அபாக்யத்தின்கொடுமையென்னென்று இன்னாதாகிறார். ... (சுசு)

உரை.—அ.—காற்பத்தஞ்சாம்பாட்டு. இப்படி விமுகராயிருக்கு சேதநரிலே அந்யதமராயிருந்த நம்மை நிர்ஹேதுகமாக அங்கீகரித்து தம்திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்று விச்வஸித்திருக்கும்படி பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து, தேவரீர் செய்தருளின உபகாரம் வாசகமிட்டுச்சொல்லவொண்ணுதென்கிறார்.

http://acharya.org

மூ.—பேறொன்றுமற்றில்லைநின்சரணன்றியப்பேறளித்தற்
காறொன்றுமில்லைமற்றச்சரணன்றியென்றிப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்குமுனைத்தந்தசெம்மைசொல்லால்
கூறும்பரமன்றிராமாநுசமெய்ம்மைகூறிடிலே. (௯௪)

பதம்.	உரை.
இராமாநுச	உடையவரே,
நின்சரண் அன்றி	தேவரீர் திருவடிகளை யொழிய,
மற்றுப் பேறு	வேறுப்ராப்யம்,
ஒன்றில்லை	ஒன்றுமில்லை;
அப்பேறு	அந்த ப்ராப்யத்தை,
அளித்தற்கு	தருகைக்கு,
அச்சரணன்றி	அத்திருவடிகளை யொழிய,
மற்று ஆறு	வேறுஉபாயம்,
ஒன்றுமில்லையென்று	ஒன்று மில்லையென்று,
இப்பொருளை	இவ்வர்த்த தத்வத்தை,
தேறுமவர்க்கும்	யாதாத்ம்யஜ்ஞாநத்தாலே விச்வஸித்திருக்குமவர்களுக்கும்,

பதம்.	உரை.
எனக்கும்	அதில் விச்வாஸஹீநனான வெனக்கும் ஒருவாபோலே,
உனை	தேவரீரை,
தந்த	உபகரித்தருளின,
செம்மை	சேர்,
மெய்ம்மை கூறிடில்	உண்மைசொல்லில்,
சொல்லால் கூறும்பரமன்று	வாசா வ்யவஹரிக்கைக்கு சக்யமாயிற்றில்லை, அநுபவித்துக் குமிழ்நீருண்டு போமித்தனையென்று கருத்து.

சொல்லால்கூறும்பரமன்று என்றது-வாசகமிட்டுச் சொல்லும்படி பரிக்கத்தக்கதன்றென்கை. செம்மை-செவ்வை. தேறுதல்-விச்வஸித்தல். ... ... (௯௪)

வ்யா.—அ.—ஈரம்பத்தஞ்சாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-அஜ்ஞராய்ப்போருகிற மநுஷ்யர் படியைச்சொல்லி விஷண்ணராய், இதிலே-அப்படிப்பட்ட அஜ்ஞரிலே அக்ர்யதமராய்ப்போந்த நம்மை நிர்ஹேதுகமாக விஷயீகரித்து, தம்முடைய திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்று விச்வஸித்திருக்கும்படி பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து, அப்படிப்பட்ட ப்ராபவத்தைக்கொண்டாடுகிறேனென்று சொல்ல வொருப்பட்டால் அதுவே நமக்கு வாசாமகோசரமாயிருக்கிறதென்கிறார்.

வ்யா.—(பேறொன்றுமற்றில்லை நின்சரணன்றி) ([illegible]) ([illegible]) (ஆகச்சோப்ரதம்ம) ([illegible]) இத்யாதிகளாலே ஸர்வேச்வரனே யென்றும்ப்ராப்யம் என்று சொல்லுகையாலும், ([illegible]) ([illegible]) ([illegible]

http://acharya.org

[illegible]) இத்யாதிகளாலே ஸர்வேச்வரனே ஆசார்யனென்று நிஷ்கர்ஷிக்கப்படுகையாலும், ([illegible]) (பாஹிராஸ்யத்) என்கையாலே - ஆசார்யத்வம் எம்பெருமானுடைத்திலேதானே வ்யவஸ்திதமாயிருக்கையாலும், அவருடைய திருவடிகளே ப்ராப்யமென்று நிஷ்கர்ஷித்தருளினார்.

(பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி) ([illegible]) (குரோஸ்ஸபாதத்ராதா) என்கிறபடியே வருத்தமெய்யிலான தேவரீருடைய திருவடிகளே புருஷார்த்தமென்றிருக்கிற நமக்கு அத்திருவடிகளை யொழிய வேறொரு ப்ராப்யமில்லை. ([illegible]) ([illegible]) ([illegible]) (ப்ரஹ்மவேதப்ரஹ்மைவபவதி) (ஸாக்ஷாத்ப்ரஹ்மமயமதி) (ஸர்வஸ்வமேவாசார்யஸ்ய ப்ரஸாதேந பவதி) இத்யாதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்ட ப்ரதமபர்வத்துக்கும், ([illegible]) ([illegible]) (குருரேவபரம்ப்ரஹ்ம) (உபாயோபேயபாவேந தமேவசரணம் வ்ரஜேத்) இத்யாதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்ட சரமபர்வத்துக்குண்டான வாசியறியாதவர்களுக்கிறே ப்ரதமபர்வம் ப்ராப்யமாகிறது; ([illegible]) (அத்ரபரத்ராசாபி நித்யம்யதீயசரணௌ சரணம்மதீயம்) என்கிறே ஆளவந்தார் சந்தையும். ஸர்வத்ர அவதாரணத்தாலே இந்த அதிகாரிக்கு ஆசார்யன் திருவடிகளே ப்ராப்யமென்றதாய்த்து.

(அப்பேறளித்தற்கு ஆறொன்றுமில்லை மற்றச்சரணன்றி) ([illegible]) (உபாயோபாயபாவேந தமேவசரணம் வ்ரஜேத்) என்றும், ([illegible]) (ஸமாச்ரயேதாசார்யம் சரணம்ப்ரபத்யே) என்றும் நிஷ்கர்ஷித்தபடியே அந்தப்ராப்யத்தைப்பெறுகைக்கு அந்தத்திருவடிகளையொழிய வேறொரு உபாயமில்லை. ([illegible]) ([illegible]) (குரோஸ்ஸபாதத்ராதா) (குரோஸ்ஸமுபாயவேத்) என்கிறபடியே வேறொருப்ராப்யோபாயமில்லை. எம்பெருமானார் திருவடிகளைக் கண்டுகொண்ட நமக்கு, (எம்மாவீடு) என்கிறபடியே எத்தனைவிலக்ஷணமானதும் பரமபதமும் ப்ராப்யமன்று, ([illegible]) (பஜநைகமேகவிபுலம்) என்கிறபக்தியோகமும் உபாயமன்று, ([illegible]) (வித்திச்ப்பவிதியாதேதி ஸமோபோச்புதமேவிசம்) என்று சொல்லவேண்டும்படியான பகவத் ப்ரபத்தியும் உபாயமன்று. (வேதமொருநான்கினுள் பொதிந்த மெய்ப்பொருளும், கோதில் மனுமுதல் நூலவையும், நீதியால் நன்குரைத்த நல்வினையன்றோ, அளிக்குமென்றுமது) என்னுமிவ் வர்த்தத்தை அருளாளப் பெருமாளெம்பெருமானாரும் அருளிச்

http://acharya.org

செய்தாரே. (ஸாம்ப்ரதம்) (காலத்ரயேபி) இத்யாதியாலே இது தன்னை ஸ்ரீவசு மதுரகவிகள் மறுத்தருளினாரிறே.

(என்னைப்பொருளாக்கித் தேறுமவர்க்கும்) எம்பெருமானார் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்கிற இவ்வர்த்தத்தை, (ஸ்தூல ஸூக்ஷ்ம ...) (கரைமாயன்று தத்பக்தப்ரிசர்யா ரதாத்மகாம்) என்கிறபடியே ஸாரஸவிபர்யய பிரமைபூர்வமாகக்கொண்டு தத்வயாதாத்ம்யஜ்ஞானத்தாலே விச்வஸித்திருக்குமவருக்கும். (ஸாமாஸிக்ஷூ) (வசசாமிந்த்ர) இத்யாதியாலே சொல்லப்பட்ட அப்ரதிமப்ரபாவரான ஆழ்வான் பிள்ளான் தொடக்கமானவர்களுக்கு மென்றபடி. தேறுதல் - விச்வஸித்தல். (எனக்கும்) (ஸர்த்யாபமா:) இத்யாதிப்படியே அபிபாபிஷ்டரும் அதிலேயிச்சையலேசமில்லாத அடியேனுக்கும். (இராமாநுச) எம்பெருமானாரே.

(உன்னைத்தந்தசெம்மை) உன்னைத்தந்தசெம்மை, ஞானாதிகராயவர்களுக்கும் அஜ்ஞனான எனக்குமுண்டான வாபோரதே, ஒருவன்றலைக்கொடுக்குமிடத்தில் தரியமாயிருப்பதொரு வஸ்த்ரத்தைக் கொடுக்கையன்றிக்கே தேவரீர் தம்மையே கொடுத்தருளினீர். (...) என்றும், (...) என்றும் சொல்லுகிறபடியே தான் ஸ்வரூபஸமர்ப்பணம் பண்ணவேண்டியிருக்க தேவரீர்தம்மை அடியோங்களுக்காக்கின விது அதசோத்ரமாய்த்து. (...) (லோகாரதீபுரபூத்வா வைக்லியம்காதமிச்சதி) என்னுமாப்போலேயாய்த்து. (...) (ஏஷனேவஷ்டூதோமே பரிஷ்வங்கோ ஹநூமத:) என்று பெருமாள் திருவடிக்கு ஸர்வஸ்வதானம் பண்ணினாப்போலே நமக்கு இவரும் அப்படியே ஸர்வஸ்வதானம்பண்ணுகிறீர்காணும். (உன்னைத்தந்தசெம்மை) இப்படி ஸர்வஸ்வதானம்பண்ணுகைக்குடலான ஆர்ஜவகுணத்தை. (மெய்ம்மை கூறிடிலே) ஸத்யமாகச்சொல்லப்புக்கால், உள்ளபடி பேசப்புக்கால். (சொல்லால்கூறும்பரமன்று) ஒருவாசக சப்தத்தையிட்டு உள்ளபடி சொல்லவரிதாயிருக்கும், வாசாம்யவறுகிக்க சக்யமாகிறதில்லை, அநுபவித்துக் குமிழ்நீருண்டுபோமித்தனை என்றபடியாய்த்து. ... ... (௬௭)

உரை.—அ.—சாற்பத்தாறும்பாட்டு. எம்பெருமானார் செய்தருளின உபகாரத்தை யநுஸந்தித்து அதுக்குத்தோற்றுத் திருவடிகளிலே வணங்குகிறார்.

http://acharya.org

மூ.—கூறுஞ்சமயங்களாறுங்குலையக்குவலயத்தே
மாறன்பணித்தமறையுணர்ந்தோனைமதியிலியேன்
தேறும்படியென்மனம்புகுந்தானைத்திசையனைத்து
மேறுங்குணனையிராமாநுசனையிறைஞ்சினமே. ... (௬௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கூறும்	(விளம்புமாறு சமயமும்) என்கிறபடியே வேதத்தைச் சொல்லாநின்றால் தாங்களும் வே தர்க்கங்களைச் சொல்லாநின்று மந்தனைப்போக்கி ப்ரமாணாநுகூலதர்க்கமல்லாமையாலே கேவலம் உக்திமாத்ரமாயிருக்கிற,		ப்ரமாண ஸதிளாலே நசித்து விச்வஸிக்கைக்குறைப்பான,
		மதியிலியேன்	ஜ்ஞானமில்லாத நான்,
		தேறும்படி	கீழ்ப்பாட்டில் சொன்னபடியே ப்ராப்யப்ராபகங்கள் இரண்டும் தாமேயென்று விச்வஸித்திருக்கும்படி,
சமயங்கள்	பாஹ்ய ஸமயங்கள்	என்	என்னுடைய,
ஆறும்	ஆறும்,	மனம்	ஹ்ருதயத்திலே,
குலைய	நிலைமாய்ப்போம்படியாக,	புகுந்தானை	வந்து புகுந்தருளினவராய்,
குவலயத்தே	அவ்வவ ஸமயங்கள் தன்னரசாக நடந்தின இத்தேசத்திலே,		இப்படிகளாலே,
		திசையனைத்தும்	ஸர்வ திக்குகளிலும்,
		ஏறும்	ப்ரஸித்தமான,
மாறன்பணித்த	ஆழ்வார் அருளிச்செய்த,	குணனை	கல்யாணகுணங்களையுடையரான,
மறை	த்ராவிட வேதமான திருவாய்மொழியை,	இராமாநுசனை	எம்பெருமானாரை,
			இவ்வுபகாரத்துக்குத் தோற்று,
உணர்ந்தோனை	ஸாக்ஷாத்கரித்தருளினவராய்,	இறைஞ்சினம்	வணங்கினோம்.

வ்யா—அ.—ஏற்பத்தாரும்பாட்டு. கீழ்ப்பாட்டில் சொன்னபடியே ஸமஸ்தகல்யாண குணாத்மகரானவர், தம்மை இவர்க்கு முற்றூட்டாகக் கொடுக்கையாலே அந்த உபகாரத்தை யநுஸந்தித்து விஸ்மிதராய்க்கொண்டு துஸ்தர்க்கங்களாய் கேவலம் உக்திமாத்ரங்களாயிருக்கிற பாஹ்யஸமயங்களையும் குத்ருஷ்டி ஸமயங்களையும் அடியோடே தகிக்கும்படி பூலோகத்திலே நம்மாழ்வா

http://dondaryo.org

அருளிச்செய்த த்ராமிடவேதத்தை ஸார்த்தமாக அறிந்தவராய், ஸகல இக்ஷ்வாகுவம்ஶ்யரான ப்ரஜைகளையுமுடையராய், அறிவுகேடரான நான் விச்வஸிக்கும்படி என்னுடைய மனஸ்ஸிலே ஸ்தாவரப்ரதிஷ்டையாகப் புகுந்தருளின எம்பெருமானாரை ஆச்ரயிக்கிறோமென்கிறார்.

வ்யா.—(கூறுஞ்சமயங்களாறுங்குலைய) தேஹமே ஆத்மாவென்றும், தேஹபரிமாணமே ஆத்மாவென்றும், க்ஷணிகவிஜ்ஞானமே ஆத்மாவென்றும், ஜ்ஞானமொன்றுமே உள்ளது என்றும், சூந்யமே தத்வமென்றும், ப்ரஹ்மம் நிர்க்குணமென்றும், நிராகாரமென்றும், அத்விதீயமென்றும், அவிபூதிகமென்றும், நிஸ்ஸ்ரீகமென்றும், விக்ரஹகுணங்களெல்லாம் ஸ்வரூபவிகாரமென்றும், ப்ரஹ்மவ்யதிரிக்தமெல்லாம் மித்யை யென்றும், ருத்ரன் ஸர்வஸ்மாத்பரனென்றும், இப்படி ப்ரமாணதர்க்கராஹித்யமான ஸந்திக்கே ஸ்வல்பஜ்ஞாநவிஜ்ரும்பிதங்களான ப்ரலாபங்களை அநேகப்ரகாரமாகக் கத்திக்கொண்டு பொருகிறபாஹ்யகுத்ருஷ்டிமதங்களும்சிதிலமாய்க்குலைந்துபோம்படி.

(குவலயத்தே) (கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: | க்வசித் க்வசித் மஹாபாகா த்ராமிடேஷு ச பூரிச: || தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ | காவேரீ ச மஹாபுண்யா ப்ரதீசீ ச மஹாநதீ) (கலௌகலுபவிஷ்யந்தி நாராயணபராயணா: | க்வசித்க்வசின்மஹாபாகா த்ராமிடேஷுசபூரிச: | தாம்ர பர்ணீநதீயத்ரக்ருதமாலாபயஸ்விநீ - காவேரீசமஹாபுண்யா ப்ரதீசீச மஹாநதீ)என்றும், (ஜகதி) (ஜாயதே) என்றும் கொண்டாடும்படிக்கு மயர்வறமதிநலமருளப்பெற்றஆழ்வார்களுடையதிருவவதார ப்ரதேசமான பூலோகத்திலே கலியுகத்திலேயென்றபடி.

(மாறன்பணித்த) (உயர்வறவுயர்நலமுடையவன், அயர்வறுமமரர்களதிபதி) (உளன்சுடர் மிகுசுருதியுள்) (நான்முகன்றன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான்) (நாடிநீர்வணங்குந் தெய்வமும் உம்மையு முன்படைத்தான்) (அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கை யுறைமார்பா)(அவாவிலந்தாதி இப்பத்தறிந்தார்பிறந்தாருயர்ந்தே) என்று இப்படி நம்மாழ்வாராலே அருளிச்செய்யப்பட்ட. (மிக்கவிறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும், தக்கநெறியும் தடையாகித் தொக்கியலும், ஊழ்வினையும் வாழ்வினையுமோதுங்குருகையர்கோன், யாழினிசைவேதத்தியல்) என்கிறபடியே ஆழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதாய் அர்த்தபஞ்சகத்தையும் அடைவே ப்ரதிபாதிக்கிற திருவாய்மொழியென்றபடி. (மறையுணர்ந்தோனை) இப்படிப்பட்ட திருவாய்மொழியாகிற த்ராமிடவேதத்தை ஸார்த்தமாகத்தெளிந்துகொண்டிருக்கையாகிற பரிபூர்ணஜ்ஞானத்தையுடையராய்.

http://acharya.org

(திசையனைத்து மேறுங்குணனை) (திக்குற்றகீர்த்தி யிராமா நுசன்) இத்யாதிகளிலும், ([illegible]) (பாஷண்ட த்ருமஷண்டதாவதஹந:) இத்யாதிகளிலும், ([illegible]) ([illegible]) இத்யாதிகளிலும் சொல்லுகிறபடியே திக் குகளிலே வ்யாப்தமையான கீர்த்தியை யுடையராய், (மதியி லியேன் தேறும்படி என்மனம் புகுந்தானை) ப்ரமாணகதிகளாலே தர்சித்து விச்வஸிக்கைக்குடலான ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாந ருக்களுமுய் கஷ்டதசையிலும் அவிவேகியாய்ப் போகாதபடியே, கீழ்ச்சொன்ன ப்ரபாவத்தைத் தெளிந்து விச்வஸிக்கும்படி அடி யேனுடையமனஸ்ஸிலே ப்ரவேசித்து எனக்குவசுத்தசேஷியான, (இராமாநுசனை) எம்பெருமானாரை, (இறைஞ்சினமே) அவ்வுப காரத்துக்குத்தோற்று வணங்கினோம். அவருடையகுணசேஷ்டா ஸ்ரக்கொண்டிருக்குமிவர் அவர்திருவடிகளிலேவணங்குவது.

உரை.—அ.—(ஈசற்பதந்தேழுசம்பாட்டு) (மதியிலியேன் தேறும்படி யென்மனம்புகுந்தான்) என்றார்-கீழ்; லோகத்திலுள்ள வர்களுக்கு தத்வஸ்த்திதியை யருளிச்செய்து பகவத்ஸமாச்ரயண ருசியை ஜநிப்பிக்குமவர், தம்மனஸ்ஸிலே விசேஷிதஷ்பிர ஸத்தை யநுஸந்தித்து, இப்படி விஷயீகரிக்கப்பெற்ற வெனக்கு ஒத்தவரில்லையென்கிறார்-இதில்.

மூ.—இறைஞ்சப்படும்பரனீசனரங்கனென்றிவ்வுலகத்
தறஞ்செப்புமண்ணலிராமானுசனென்னருவினையின்
திறஞ்செற்றிரவும்பகலும்விடாதென்றன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தானெனக்காருநிகரில்லையே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
இறைஞ்ச	ஸர்வலோகாச்ரயணீயனாகு,	இவ்வுலகத்து	அதர்மாநுஸாரிகளான இந்தலோகத்திலே,
படும்	வேதாந்த ப்ரஸித்தனான,	அறம்	ஸாக்ஷாத்தர்மத்தை
பரன்	ஸர்வஸ்மாத்பரன்,	செப்பும்	அருளிச்செய்பவராய்,
ஈசன்	அகந்தசாஸித்ருத்வாதிகளாலே ஐச்வர்யத்தோற்றவைத்து,	அண்ணல்	ஆச்ரிதவிஷயமேதுவன் தம்மதாம்படியான ஸம்பந்தத்தையுடையராயிருக்கிற,
அரங்கனென்று	கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமானென்று,	இராமாநுசன்	எம்பெருமானார்,

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்	என்னுடைய,	என்றன் சிந்தையுள்ளே	என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே, [இ,
அரு	அநுபவத்தாலும் ப்ராயஶ்சித்தத்தாலும் போக்கவரிய,	நிறைந்து	பூர்ணமாய்க் கொண்டு
வினையின் திறம்	கர்மஸமூஹத்தை,	ஒப்பற	இவ்விருப்புக்குஸமமில்லை யென்னும்படி, [தான்;
செற்று	நிரஸித்து, "அல்லும் நன்பகலும் இடை வீடின்றி" என்கிறபடியே,	இருந்தான்	எழுந்தருளியிருந்
பகலும் இரவும்	நிரந்தர விபாக மற,	எனக்கு	ஸர்வவிஷயீகாரபாத்ரனான வெனக்கு,
விடாது	இடைவிடாதே,	ஆரும் நிகரில்லை	ஒருவரும் ஸத்ருஶரில்லை.

திறம் - ஸமூஹம். நிகர் - ஒப்பு. ... ...(௬௭)

வ்யா.—அ.—(அறுபத்தேழாம்பாட்டு)இப்பாட்டிலே - எம்பெருமானார், தம்முடைய திருவுள்ளத்திலே ப்ரகாசித்து உஜ்ஜ்வலராக அவரை வணங்கினேனென்று சொல்லி, இதிலே-லோகத்தாரெல்லாரையும் குறித்து ஸர்வஶேஷியானவன் ஸர்வேஶ்வரன் கோயிலிலே ஸந்நிஹிதனாயிருக்கிறான், அவனை ஆஶ்ரயியுங்கோளென்று பரமதர்மத்தை உபதேஶித்த உபகாரகரான எம்பெருமானார், என்னுடைய ஆத்மாபஹாரங்களை க்ஷபிப்பித்து நிரந்தரவிபாகமற என்னுடைய ஹ்ருதயத்திலே ஸுப்ரதிஷ்டிதராய் இவ்விருப்புக்கு ஸத்ருஶமொன்று மில்லையென்னும்படி யெழுந்தருளியிருக்கிறார்; இப்படியானபின்பு எனக்கு ஸத்ருஶரொருவருமில்லையென்கிறார்.

வ்யா.—(இறைஞ்சப்படும்) ([illegible]) ([illegible]) ([illegible]) ([illegible]) என்றும், (எழுவார்விடை கொள்வார் ஈன்துழாயானை, வழுவா வகைநினைந்து வைகல் தொழுவார்) என்றும் (மூழுவேழுலகுக்கும் நாதன்) என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஶேஷியானவனுக்கொண்டு ப்ரஸித்தனாய். (பரன்) ([illegible]) (பரமபுருஷனாலும்) என்கிறபடியே ஸர்வஸ்மாத்பரனான. (ஈசன்) ஸர்வேஶ்வரன். (அரங்கனென்று) ஆஶ்ரிதஸௌலப்யார்த்தமாக கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளென்று. அன்றிக்கே, (இறைஞ்சப்படும்) ஸர்வஶேஷியான.(ஈசன்) ஸர்வஸ்மாத்பரன். (ஈசன்)([illegible]) (ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களையும் நியமிக்குமவனாகை

http://acharya.org

ஷணத்யவிசம்ர்ஷ்யதி) என்கிறபடியே ஸர்வஸ்வாமியானவன். இத்தமநுவிமாயக் கூரேஸ்வரில் (அரங்கன்) அப்படிப்பட்டவன் ஏட்டாக்ஷரத்திலேயிராதே இன்று ஸர்வஹிதனும் ஸுலபனுமாய்க் கோயிலிலே யெழுந்தருளியிருக்கிற திருவரங்கச்செல்வனார். (என்று) இப்படிப்பட்டவனென்று. (இவ்வுலகத்து) அதர்மாநுஷ்டாநபரமான இந்தலோகத்திலே. அதர்மபூதமான ஃ இருள்தருமாஞாலத்திலே யிருக்குமஜ்ஞநங்களுக்கு. (அறஞ்செப்பும்) ஸாக்ஷாத் தர்மத்தை அருளிச்செய்யும். அன்றிக்கே, அப்படிப்பட்டவனே ஆச்ரயணீயனென்று ஸாராஸாரவிவேகஜ்ஞாநோபாயத்தை உபதேசித்தருளும்.

அன்றிக்கே, (இறைஞ்சப்படும்) தேவஜாதிக்கு ஒரு உபத்ரவம்வந்தால் அவர்களெல்லாருந் திரண்டு ப்ரஹ்மாவோடே கூடிப்போய்க் கூப்பிடும்கூப்பீடு கேட்கைக்காக வ்யூஹாவஸ்தாநமான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்து அவர்களாலே ஸேவிக்கப்படுமவன். இத்தால் - வ்யூஹத்வத்தைச்சொன்னபடி. (பரன்) ஃ அவர்களுக்குமமரர்களதிபதியான பரன். (ஈசன்) (𑌅𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌮𑍍) (அந்த꞉ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம்) என்கிறபடியே ஸர்வரையும் நியமிக்கைக்காக ஸர்வாந்தர்யாமியாயிருக்குமவன். இத்தால் - அந்தர்யாமித்வத்தைச்சொன்னபடி. (அரங்கன்) (𑌅𑌰𑍍𑌚𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑌰𑍍𑌚𑌕𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑌾𑌖𑌿𑌲𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃) (அர்ச்யஸ்ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி꞉) என்னும்படியான அர்ச்சாவதாரங்களிலே வைத்துக்கொண்டு ப்ரதாநனாயிருக்குமவன். இத்தால் - அர்ச்சாவதாரத்தைச்சொன்னபடி.

(என்றிவ்வுலகத்தறஞ்செப்பும்) (அறம்) (𑌰𑌾𑌮𑍋 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌵𑌾𑌨𑍍 𑌧𑌰𑍍𑌮𑌃) (ராமோ விக்ரஹவாந் தர்ம꞉) (𑌯𑍇 𑌚 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 𑌯𑍇 𑌚𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌜𑌨𑌾𑌃 । 𑌤𑍇 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍) (யேசவேதவிதோவிப்ரா꞉ யேசாத்யாத்மவிதோஜநா꞉ । தேவதந்திமஹாத்மாநம் க்ருஷ்ணம்தர்மம்ஸநாதநம்) என்கிறபடியே அவதாரங்களிலே ப்ரதாநமான விபவம் (என்று) என்கிறத்தை இத்தோடே அந்வயித்தபடி. அங்குவகைப்பட்டிருக்கும் ஸர்வேச்வரனை ப்ராப்யமும் ப்ராபகமுமென்று அருளிச்செய்யுமென்னவுமாம். (அண்ணல்) ([illegible]) (ஸ்வாமித்வபாரதந்த்ர்யஜ்ஞாபயிதச்ரேஷ்டம்) என்றும், (𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌮𑌾𑌤𑌾 𑌗𑍁𑌰𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾) (குருர்மாதா குருஷ்பிதா꞉) என்றுஞ் சொல்லுகிறபடியே இவ்வுபதேசமுகேந சேதநருக்கு ஸர்வவிதபந்துவுமாய் அவர்களுடைய இழவுபேறுகள் தம்மதாம்படியான ஸம்பந்தத்தையுடையராயிருக்கிற. (இராமாநுசன்) எம்பெருமானார்.

(என்னருவினையின்திறஞ்செற்று) ([illegible]) ஸ்ரீஅந மஸ்ம்பபாரதாராகாமாவய꞉) என்றும், ([illegible])

http://acharya.org

(அமர்யாதக்ஷுத்ரஸ்சலமதி:) என்றும், ([illegible]) (பாபாநாம்ப்ரதமோஸ்ம்யஹம்) என்றும், ([illegible]) (நநிந்திதம்கர்மததஸ்திலோகே ஸஹஸ்ர சோ யந்நமயாவ்யதாயி) என்றும், ([illegible]) (அஹமஸ்ம்யபராதசக்ரவர்த்தி) என்றும், ([illegible]) (யாவச்சயஸ்சகுதிதம் ஸகலஞ்ஜநக்தோ: தாவச்சதத்ரமதிஸேசமமாஸ்திலேத்யம்) என்றுஞ் சொல்லு கிறபடியே என்னாலே நிரக்ஷிபச்செய்யப்பட்டதாய் அநுபவத்தா லும் ப்ராயஸ்சித்தத்தாலும் போக்கவரிதான பாபஸமூஹத்தை, (வாதேனுமதிகடலோ) என்னும்படி கிளப்பித்து. திறம் - ஸமூஹம்.

(இரவும்பகலும்விடாது) (அல்லும்பகலுமிடைவீடின்றி) என்கிறபடியே - இவாராத்ரவிபாகமற இடைவிடாதே. (என்றன் சிந்தையுள்ளே)யண்டேல்லாம் ஆசாபாகுப்போக்கு இப்போது இவ்விஷயீகாரத்தைப்பெற்ற என்னுடைய ஹ்ருதயத்திலுள்ளே. (நிறைந்து) ஸ்பர்ஷ்டாஸ்பர்ஷ்டிமாத்ரமன்றிக்கே குணங்க ளோடும் விக்ரஹத்தோடும் விதிப்போடுங் கூட அதிலே பூர்ண னாய்ப் புகுந்து. அணுவான ஆத்மாவினுள்ளே விபுவான ஈச்வ ரன் ஸ்வரூபரூபகுணங்களோடே அனைந்திரமாக வ்யாபித்து நிற்குமாப்போலேகாணும்-எம்பெருமானாரும் அதிஸூக்ஷ்மமான இவருடைய திருவுள்ளத்திலே அனைந்திரமாக வ்யாபித்துநிற் கிறபடி. (ஒப்பறவிருந்தான்) இவ்வாத்ஸல்யத்துக்கு ஸாத்ருசமில் லாதபடி யிருந்தார். அதிலேதானேஸுப்ரதிஷ்டராய்எழுந்தருளி யிருந்தாரென்றபடி. ஒப்பு - ஸாத்ருச்யம்.

(எனக்கு) இப்படி எம்பெருமானாருடைய விஷயீகாரத்தைப் பெற்ற வெனக்கு. (ஆரும்நிகரில்லையே) ஸத்ருசராயுடையா ருண்டானாலும் ஸத்ருசராகமாட்டார்கள். ([illegible]) (அவித்யாக்ருதகாண்களேவ தேஹவியோகாநந்தே சாஸ:) என்று சொல்லப்படுகிறவர்கள் ஸத்ருசராவர்களோ. நிகர்-ஒப்பு. ([illegible]) (த்ரவிக்ரதவிப்ரஸாதிசீரக்குசவிஷ்டசமே। ஸமாநுஜபதாம் போஜ ஸமாச்ரயணசாலிந:) என்னக்கடவதிறே. ... (எஎ)

உரை.—அ—ஈற்பத்தெட்டாம்பாட்டு. (எனக்காரும் நிக ரில்லை) என்று இவர்சொன்னவாறே எம்பெருமானார் இவரைப்பார் த்து, நீர் நம்மைவிட்டு வேறொருவிஷயத்தை அவலம்பித்தல், நாம் உம்மைவிட்டு வேறொருவிஷயத்தை விரும்புதல் செய்யில் இத்தனைச்சும் உமக்கு நிலைநிற்கமாட்டாதே யென்ன; என்னு டைய வைச்யத்துக்கு தேவரீர்க்கியையும் அத்தக்கியைக்கு என்னு

http://acharya.org

கூட்டிய கைங்கர்யமுமொழியப் புகவில்லையாயிருக்க வ்யர்த்தமே நாம் இனி அகலுகைக்கு காரணமென்னென்கிறார்.

மூ.—நிகரின்றிநின்றவென்னீசதைக்குன்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லையருட்குமஃதேபுகல்புன்மையிலோர்
பகரும்பெருமையிராமாநுசவினிநாம்பழுதே
அகலும்பொருளென்பயனிருவோமுக்குமானபின்னே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
நிகரின்றி நின்ற	இந்தவிபூதியில் ஆத்மகுண ராஹித்யத்தாலும் அநாத்மகுண பாஹுள்யத்தாலும் ஸத்ருசன்மையையுடையவர்களை தனித்தனியே ஆராய்ந்து பார்த்தால் என்னைப்போலே ஆத்மகுணலேசரஹிதராய் அநாத்மகுணபரிபூர்ணராயிருப்பார் ஒருவருமில்லாமையாலே உபமாந ரஹிதமாய்க்கொண்டு நின்ற,	அஃதே	அந்நீசதையே பெறுந்தண்ணியவரே,
		புகல்	அநுரூபமான பாத்ரம்; ஆகையாலே என்னுடைய நீசதையொழியப் புகலில்லை;
		புன்மையிலோர் பகரும்	அஸ்ப்ருஷ்ட தோஷகந்தரான வர்கள் பேசுகைக்கு விஷயமான,
		பெருமை	ப்ரபாவத்தையுடைய,
		இராமாநுச	உடையவரே, எனக்கு ஸ்வரூபலாபமாய் தேவரீருக்கு குணலாபமாய், இப்படி,
என் நீசதைக்கு	என்னுடைய நீசதைக்கு,	இருவோமுக்கு	நமக்கிருவர்க்கும்,
உன்	அந்நீசதை தானே பச்சையாக ஸ்வீகரிக்கும் தேவரீருடைய,	பயனானபின்	ப்ரயோஜநமானபின்பு,
		நாம்	இதிலிருக்கிறநாம்
		இனி	மேலுள்ளகாலம்,
அருளின் கணன்றி	க்ருபையினிடத்திலொழிய,	பழுதே	வ்யர்த்தமே அகலுகைக்கு,
		அகலும்	
புகலொன்றுமில்லை	ஒதுக்க நிழலொன்றுமில்லை,	பொருளென்	காரணமென்,
அருட்கும்	அந்தக்ருபை தனக்கும்,		அகலுகைக்கு ஹேதுவில்லையென்று கருத்து. ... (சஅ)

வ்யா.—அ.—நாற்பத்தெட்டாம்பாட்டு. (இராமாநுசன் இர வும்பகலும்விடாதென்றன் சிந்தையுள்ளே நிறைந்தொப்பற விருக்

http://acharya.org

நான் எனக்காரும் நிகரில்லை) என்று இவர் சொன்னவாறே எம்பெருமானார் இவரைப்பார்த்து நீர், நம்மைவிட்டுகாலாந்தரத்திலே வேறொருவிஷயத்தை விரும்புதல், நாம் உம்மைவிட்டு வேறொரு விஷயத்தை பரிக்ரஹித்தல் செய்யில் இந்த நூற்றும் நிலைநிற்கமாட்டாதேயென்ன; என்னுடைய நைச்யத்துக்கு தேவரீருடைய க்ருபையும் அந்தக்ருபைக்கு என்னுடைய நைச்யமுமே யொழியப் புகலில்லையாயிருக்க வ்யர்த்தமே நாம் அந்யபரர்களாகைக்குக் காரணமென்னென்கிறார்.

வ்யா.—(நிகரின்றிநின்றவென்னீசதைக்கு) (நீசனேன் நிறைவொன்றுமிலேன்) ([illegible]) ([illegible]) (அஹமஸ்ம்யபராதாநாமாலய:) (அத்யபாபிஷ்டசபர:) இத்யாதிப்படியே ஆத்மகுணசாஹித்யத்தாலும் அநாத்மகுண பாஹுள்யத்தாலும் வந்த தன்மையையுடையவர்களை இந்தவிபூதியில் தனித்தனியே ஆராய்ந்துபார்த்தாலும் என்னைப்போலே ஆத்மகுண லவலேச ரஹிதரும் அநாத்மகுண பரிபூர்ணருமிருப்பா ரொருவராகிலும் இல்லாமையாலே ([illegible]) (கோத்பொன்றிலாத்சோமயா) என்கிறபடியே உபமாநரஹிதராய்க்கொண்டிருக்கிற என்னுடைய நீசபாவத்துக்கு. (உன்னருளின்கணன்றி) ([illegible]) (வ்யஸனேஷு மநுஷ்யாணாம் ப்ருசம்பவதி து:கித:) என்கிறபடியே பரது:க்க து:கித்வலக்ஷணமான தேவரீருடைய க்ருபாகுணமொழிய.

(புகலொன்றுமில்லை) வேறொருபுகலிடமில்லை. அந்தநீசதை தனையே பச்சையாக அங்கீகரிக்கும் தேவரீருடைய க்ருபையிவிடத்திலொழிய ஒதுங்கநிழலொன்றுமில்லையென்றபடி. கண்-இடம். ([illegible]) (அபராதங்களைச்சூர்ணகுஷேமலகாக்கவே க்ருபையிந்தி) என்னுமாப்போலே இவரும் வஹ்நிநிகரம்புகைக்காக எப்போதும் பூர்ணதோஷத்தை தேடித்திரிவு மவராகையாலும், ஸர்வேச்வரன் ஆர்த்தரபாரதியான காகாஸுரனை ரக்ஷித்ததுவும், ([illegible]) (பதிவாச்சயானல்வைபம்) என்றும் சொன்னதுவும் பாபிஷ்டனை ரக்ஷித்தால் பசல்லை அதிசயித்திருக்குமென்றத்தைப் பத்தையாகையாலும், சேஷபூதனுடையதோஷங்களெல்லாம் சேஷியினுடைய க்ருபாகுணத்துக்கு லக்ஷ்யங்களாயேறியிருப்பது. ஆகநம்முடைய நீசதைக்கு எம்பெருமானாருடைய க்ருபாகுணமொழிய வேறொருபுகலிடமில்லையென்று அருளிச்செய்யத்தட்டில்லையிறே. (அருட்குமஃதேபுகல்) தேவரீருடைய க்ருபாகுணத்துக்கு அடியேனுடைய நைச்யபாவனதையே லக்ஷ்யமாயிருக்கும். தோஷரஹிதர்களானவர்கள்

http://acharya.org

பக்ஷத்திலே கர்மாநுஷ்டாநத்துக்கு ப்ரயோஜநமில்லாமையாலே எத்தனையேனும் தன்னளவிலே அதுக்கு பாத்ரமாகையாலும் என்னைக்குறைத்தாரான பரமேஷ்டிக்கு ஒருவராமிருப்பில்லாமையாலே என்னுடையனைதச்சயமே அதுக்குப் புகலிடமென்றபடி.

(நிமஜ்ஜதோநந்த பவார்ணவாந்தஶ் சிராய மே கூலமிவாஸி லப்த:। த்வயாபி லப்தம் பகவந்நிதாநீம் அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:) [த்வயாபி-தேவராலும்] இப்படி நமக்கு கிடைக்கப்பட்ட தேவரீருக்கும். [இதாநீம்-இதாநீம்] இத்தனைகாலத்துக்கு இப்போது. [பகவந்-பகவந்] ஸர்வஜ்ஞனாயிருக்கிறவரே, நான் சொல்லவேணுமோ. [தயாயா:-தயையினுடைய] தேவரீருடைய க்ருபைக்கு. [அநுத்தமம் பாத்ரமிதம்-அநுத்தமம் பாத்ரமிதம்] ([illegible]) என்றும், (அபராதஸஹஸ்ர) ([illegible]) என்கிறபடியே பூர்ணபாத்ரமானதாலும். [லப்தம் - லப்தம்] தேவரீருக்குப் பெருப்பேறாக லபித்தேன்.

[அநந்தபவார்ணவாந்த:-அநந்தபவார்ணவாந்த:] ப்ரவஹித்தார்ணவத்துக்கு பரிகணநமுண்டு, என்னுடைய ஸம்ஸாரமாகிற அர்ணவத்துக்கு அந்தமில்லை. காலமும் அநாதியாய் ஜந்மங்களும் பலவாய் கர்மங்களும் விசித்ரங்களாய் பந்நலையிருக்கையாலே இந்த அர்ணவம் அநந்தமாயிருக்கும்; இப்படிப்பட்ட பவார்ணவத்தினுடைய அகாதஜலத்திலே. [நிமஜ்ஜத:-நிமஜ்ஜத:] அழுந்திக்கிடப்பன். [சிராய-சிராய] ([illegible]) (கேவலம் ஸ்வேச்சையாலே ரக்ஷித்தருளாக) என்கிறபடியே அநந்தமானகாலத்துக்கு. [மே-மே] அடியேனுக்கு. [கூலமிவ - கூலமிவ] கரைபோலே. [லப்தோஸி - லப்தோஸி] ப்ரவஹித்தார்ணவத்திலே விழுந்து அழுந்தினவொருவன் அப்போதே முடிய, முறுவலித்த மாத்ரத்திலே அர்த்தப்பிணைத்தைக் கொண்டுவந்து கரையிலே தள்ளிவிடுமென்று ஸர்வஜ்ஞ ப்ரஸித்தம்; இத்தனைமாத்ரத்திலே யமுநா, (அலைக்கேவ) என்கிறபடியே விருத்தவெல்லை சிரகாலத்துக்கு ஸத்தையுண்டாக்கி அந்த அர்ணவத்துக்கு பாரமாய்க் கைப்பட்டாய். (கண்டு கொண்டேன் கண்ணனைக் காரிமாறப்பிரான், பண்டை வல்வினை பாற்றியருளினான்) என்று - இருவர்க்கும் ப்ரயோஜநமா விருத்தமென்று அபியுக்தருமருளிச்செய்தாரிறே. (அத்தேசவடியே ஞானபாதமகல விலேவனிறைபுமே) என்றும், (புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே) என்றுமருளிச் செய்தாரிறே-நம் மாழ்வாரும். ([illegible]) (பரமகாருணிகோபவத்பர: பரமசோச்யதமோபவதிமத்பர:) என்னக் கடவதிறே.

http://acharya.org

(புன்மை) தோஷங்களுக்கு ஆகரமான ஸம்ஸாரம். அநாத்ய வித்யாகர்மவாஸநாருசிப்ரக்ருதி ஸம்பந்தரூபமான ஸம்ஸாரமென்றபடி. (இலோர்) ஸம்ஸாரிகளான பந்தத்தைப் பூண்கட்டிக்கொண்டு நிற்கையாலே அவர்களை இங்கே சொல்லவொண்ணாதிறே; முக்தர், நித்யர்களவும் ஸம்ஸாரத்தைப் பூண்கட்டிக்கொண்டு இரிக்க, பின்னை, "கரை கண்டோர்" என்னும்படி அத்தை ஸவாஸநமாகப் போகட்டு பகவத்குணாநுபவத்திலே ஆழங்கால் பட்டிருந்தார்களாகையாலும் நிருபாதிகமாகச் சொல்லுகையாலே அவர்களையும் இங்கே சொல்லக்கூடாதிறே. இனி, ([illegible]) ([illegible]) ([illegible]) என்கிறபடியே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளையாய்த்து (இலோர்) என்றருளிச்செய்தது.

(பகரும் பெருமை) ஏகதேசவஸ்த்ராக்ரத்தாலும் ஏகவிஷய அபவர்க்தாலும் அடியேபிடித்து இவருடைய ப்ரபாவத்தை அடைவேயறிந்துமவர்கள் - நித்யஸூரிகளாகையாலே அவர்களாலேஸ்தோத்ரம்பண்ணப்பட்ட ப்ரபாவத்தையுடையரான. (இராமாநுசா) எம்பெருமானாரே. (பயன் இருவோமுக்குமானபின்னே) தேவரீரும் அடியேனுமாகிற இருவருக்கும் ஸ்வரூபாநுரூபமும் குணாநுரூபமுமாகிற பரமப்ரயோஜனம் ஸித்தித்தபின்பு. இப்படி இருவர்க்கும்ப்ரயோஜனம் ஸித்திருக்க (இனி நாம் பழுதே அகலும் பொருளென்) இருந்திருக்கிற நாம் மேலுள்ளகாலம் வ்யர்த்தமே அகலுகைக்குக் காரணமென். நாம் என்றது - தம்மையும் எம்பெருமானாரையும். அன்றிக்கே, நாம் என்று பஹுவசநப்ரயோகம் பண்ணுகையாலே - எம்பெருமானாரும் இவருடைய ஸம்பந்தஸம்பந்திகளுமான எல்லாருமென்று பொருளாகவுமாம்.

(நாம் பழுதே அகலும் பொருளென்) (பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி அடிமைகொண்டாய்) (என்னைத் தீமனங்கெடுத்தாய்) (மருவித்தொழும் மனமே தந்தாய்) (அறியாதன அறிவித்தத்தா நீசெய்தன அடியேனறியேன்) என்கிறபடியே நாம் க்ருதஜ்ஞராய்ப்போமதொழிய நமக்கு அகலுகையென்று ஒருப்ரயோஜனமுண்டோ. (பரவித்தால் யான் பிறப்பேனேலும் இனி எந்தையெதிராசன்தான்பிறக்குமென்னையுய்ப்பதா) என்கிறபடியே ஸகிலுகை அவர்க்கு அவஸ்யமாய்த் தலைக்கட்டக்கடவதாகையாலும், பெருப்பெருக அடியோங்களை தேவரீர் விஷயீகரித்துக்கொள்ளுகையாலும், * கிழநாயடிநாயும்போலே அடியோங்களை ஆக்கியாசார்யராம்படி அங்கீகரித்திருக்கையொழிய தேவரீருக்கு அகலுகையென்று ஒருப்ரயோஜனமுண்டோவென்றாராய்ந்து. ()

http://acharya.org

உரை.—அ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார், விரோதிகளை நிரஸித்துக்கொண்டு தம்திருவுள்ளத்திலேயே நிரந்தரவாஸம் பண்ணிவருகிற மஹோபகாரகுணத்தாலே வந்த ப்ரீதியையும், அந்தப்ரீதியினுடைய அஸ்தமய ஹேது வில்லாமையையும் அருளிச்செய்தார் - கீழ் இரண்டுபாட்டாலே; இதில் - அவர் திருவவதரித்தருளினபின்பு லோகத்துக்குண்டான ஸம்ருத்தியை அநுஸந்தித்து இனியராகிறார்.

மூ.—ஆனதுசெம்மையறநெறிபொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றியிறந்ததுவெங்கலிபூங்கமலத்
தேனதிபாய்வயல்தென்னரங்கன்கழல்சென்னிவைத்துத்
தானதில்மன்னுமிராமாநுசனித்தலத்துதித்தே. (௫௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூ	அழகிய,	இராமாநுசன்	எம்பெருமானார்,
கமலம்	தாமரைப்பூக்களி லுண்டான,	இத்தலத்து	இத்தலத்திலே,
தேன் நதி	தேனாறானது,	உதித்து	அவதரித்தருளி,
பாய்	விஸ்தாரமாகப் பாயாநின்றுள்ள, [ய்,	செம்மை	வைதிகமாகையா லேசெவ்விதாயிரு க்கின்ற,
வயல்	வயல்களையுடைத்தா திருச் சோலைகளும் திருமதிள் களும் திருக்கோபுரங் களும் திருமாளிகை களுமான ஸமு தாய சோபையா லே,	அறநெறி	தர்மமார்க்கம்,
		ஆனது	முன்பு அழிந்துகிட ந்ததுமீண்டும் உ ண்டாயிற்று;
		பொய்ம்மை	வேதபாஹ்யமாகை யாலேஅஸத்யமான,
தென்	தர்சநீயமாயிருக்கிற,	அறுசமயம்	ஷட்ஸமயமும்,
அரங்கன்	கோயிலிலே கண்வ ளர்ந் தருளுகிற பெரியபெருமாளு டைய,	பொன்றிப்போனது	முடிந்து போயிற் று,
			வைதிகதர்மம் தலை சாய்த்து பாஹ்ய ஸமயம் மேலிடு கைக்குடலான,
கழல்	திருவடிகளை,		
சென்னி வைத்து	சிரஸாவஹித்துக் கொண்டு	வெங்கலி	க்ரூரமான கலியுக மானது,
தானதில்மன்னும்	தாம் அதிலே நித்ய ஸம்ச்லேஷம் பண் ணுகின்றவன,	இறந்தது	"கலியும்கெடும்" எ ன்கிறபடியே நசி த்தது.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
இவர் அவதரித்தருளின பின்பு லோகத்துக்குண்டான ஸம்ருத்தி இருந்தபடி யென்னென்று கருத்து. பொன்றுதல்-முடிதல்.		"பொய்ம்மையறுசமயம்" என்று பாடமானபோது-வேதபாஹ்யத்வேனபொய்யாயிருக்கிற ஷட்ஸமயமென்றபடி. ... (சகூ)	

அவ.—நாற்பத்தொன்பதாம்பாட்டு. எம்பெருமானார், தம்முடைய ப்ராப்திப்ரதிபந்தகங்களையெல்லாம் போக்கித் தம் திருவுள்ளத்திலே நிரந்தரவாஸம்பண்ணுகிற மஹோபகாரத்தால் வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தையும், அந்தப்ரீதி எப்போதுமுண்டாகக் கூடுமோவென்று அதிசங்கைபண்ணினவரைக்குறித்து அதினுடைய சாஞ்சல்யஹேதுவில்லாமையையும், கீழிரண்டுபாட்டுக்களாலே அருளிச்செய்து, இதிலே - எம்பெருமானார் திருவவதரித்தருளின பின்பு லோகத்துக்குண்டான ஸம்ருத்தியையும், பரமதங்களுக்கும் கலிதோஷத்துக்குமுண்டான விநாசத்தையும் அநுஸந்தித்து இனியராகிறார்.

வ்யா.—(பூங்கமலத் தேனதிபாய்வயல்) அழகியதாமரைப் பூக்களிலுண்டான தேனாகிற ஆறானது நீராகப்பாயாநின்றுள்ள வயலாலே சூழப்பட்ட. (தென்னரங்கன்) திருமதில்களும் திருக்கோபுரங்களும் திருச்சோலைகளுமான ஸமுதாயசோபையாலே தர்சநீயமான கோயிலே இருப்பிடமாக விருக்கிற பெரியபெருமாளுடைய. (கழல்சென்னிவைத்து) திருவடிகளைத் தம்முடைய சிரஸ்ஸிலே வைத்துக்கொண்டு. செக்கர்வாயும் படிகண்ணியும் இசைந்தாப்போலே பரந்துத் திருவடிகளும் திருமுடியும் சேர்ந்தபடி. அன்றிக்கே, ராஜாக்கள் ஸிம்ஹாஸனத்திலே ஆரோஹிக்கும்போது ஆதிராஜ்யஸூசகமான அபிஷேகத்தைத் தந்தாமுடையசிரஸ்ஸிலே வைத்துக்கொண்டாப்போலே, (உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேன்) என்னும்படி பரமப்ராப்யமான அவர்திருவடிகளை தம்முடைய உபயவிபூத்யைச்வர்ய ஸூசகமாம்படி திருமுடியிலே வைத்துக்கொண்டாரென்னவுமாம். (தானதில்மன்னும்) தாமும் அந்நிஷ்டையிலே ஸுப்ரதிஷ்டிதராய் திருவடிகளிலே நித்ய ஸம்ச்லேஷம் பண்ணாநின்றுள்ள. (இராமாநுசன்) எம்பெருமானார். (இத்தலத்துதித்தே) வேதோக்த தர்மங்களுக்கெல்லாம் ஸாங்கர்யம் வரும்படி வேதவிருத்தங்களான ஷட்ஸமயங்களும் ப்ரபலித்து கலியானது ஸாம்ராஜ்யம் பண்ணிக்கொண்டுபோருகிற இந்தமஹா ப்ருதிவியிலே திருவவதரிக்கவே.

(ஆனதுசெம்மையறநெறி) அறநெறிசெம்மையானது-முன்பு அழிந்துபோன வேதோக்தமான வைதிக தர்மமார்க்கம்பின்னையும்

http://acharya.org

டானது. ([illegible]) ([illegible]) ([illegible]) என்கிறபடியே அல்ப ச்ருதர்களாலே ப்ரதாரணம்பண்ணப்பட்ட வேதமெல்லாம் இவராலே முஜ்ஜ்வலாகத் திருத்தி தனக்கு நிர்மலமானது மஹிமையைப் ப்ரதிஷ்டிதமா யிராநின்றது. ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய ரிறே யிவர். (பொய்ம்மையுநசமயம் பொன்றுபொன்றி) வேத பாஹ்யமானவையாலே அபதரவான ஆட்சைமையரும் முடிந்துபோய்த்து. பொன்றுதல் - முடிதல். "பொய்ம்மையுநசமயம்" என்றது - பாஹ்யமானவை போது - ([illegible]) என்கிறபடியே பகவதந்யோபேக்ஷிலக்கம்பண்ணினவர்களை ப்ரம ப்ரமாதங்களாலே ஜனிப்பிக்கக் கடவதான அபயபீதார்த்த மென்றபடி. (நிறைந்தது வெங்கலி) மேல்சொன்னபடியே அஜ்ஞானத்தை விளைப்பிக்குமதானவையாலே அதிக்ரூரமானது கலித்துப்போய்த்து. (கலியுங்கெடும்கண்டுகொண்மின்) என்றருளிச்செய்தாரிறே நம்மாழ்வாரும். ([illegible]) (ஆசிநோதிஹிசாஸ்த்ரார்த்தான் ஆசாரேஸ்தாபயத்யபி। ஸ்வயமாசரதேயஸ்து ஸஆசார்ய உதாஹ்ருத:) என்கிறே ஆசார்யலக்ஷணமிருப்பது; அது இவரிடத்திலேசுறும் நிறம்பெற்றது. ([illegible]) (புண்யாம்போஜவிகாஸாயபாபத்வாந்தக்ஷயாயச। ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:) என்னக் கடவதிறே. ... ... (௫௯)

உரை.—அ.—ஐம்பதாம்பாட்டு. (தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்தானதில் மன்னும்) என்று எம்பெருமானாருக்கு பெரியபெருமாள் திருவடிகளிலுண்டான ப்ராவண்யாதிசயத்தை யநுஸந்தித்தார்-இம்; அந்தப்ராவண்யத்திலே தமக்குத்தேச்யமான எம்பெருமானார் திருவடிகளை அநுஸந்தித்து தத்ஸ்வபாவத்தை ஸாரத்தாலே விஸ்தரிக்கிறார்-இதில்.

மூ.—உதிப்பனவுத்தமர்சிந்தையுளொன்னலர்நெஞ்சமஞ்சிக்
கொதித்திடமாறிநடப்பனகொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தவென்புன்கவிபாவினம்பூண்டனபாவுதொல்சீர்
எதித்தலைநாதனிராமாநுசன்றனிணையடியே. (௬௦)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாவு	"இசைபரந்து மேவுகுணன்" என்கிறபடியே எங்கும் பரவியிருப்பதாய்,	தொல்	ஸ்வரூபாநுபந்தியாகையாலே பழையதாயிருக்கிற கல்யாணகுணங்களையுடையராய்,

http://acharya.org

பதம்.	உரை.
எதி	யதிகளுக்கு,
தலை	தலைவராய்,
நாதன்	நாதபூதராயிருக்கும்
இராமாநுசன்றன்	எம்பெருமானாருடைய,
இணை	சேர்த்தியழகை யுடைத்தாயிருக்குமவை,
அடி	திருவடிகளானவை,
உத்தமர்	அநந்ய ப்ரயோஜநராய் அநந்யஸாதநராயிருக்கும் உத்தமாதிகாரிகளுடைய,
சிந்தையுள்	திருவுள்ளத்திலே,
உதிப்பன	"எல்லியில் சிரீகரவிதிரண்டுபோல்" என்கிறபடியே ஆதித்ய னுதித்தாற்போலே ப்ரகாசியாநிற்கும் தன்மையையுடையன;
ஒன்றலர்	பாஹ்ய குத்ருஷ்டிகளாகப்ரதிபக்ஷபூதருடைய,
நெஞ்சம்	ஹ்ருதயமானது,
அஞ்சி	பீதமாய்,
கொதித்திட	அத்யந்தவ்யாகுலமாய் பரிதபிக்கும்படி,
மாறி	பரஸ்பரம்மாறிவிட்டு,
நடப்பன	நடவாநிற்கும் தன்மையையுடையன;
கொல்லை	ஸம்ருத்தமாய்,
வன்	ப்ரபலமாயிருக்குமவை,
குற்றமெல்லாம்	தோஷங்களெல்லாம்,
பதித்த	சேர அழுத்தினவைக்கப்பட்ட,
என்	என்னுடைய,
புன்கவி	புல்லிய கவிகளாகிற
பாவினம்	சந்தஸ்ஸமூஹத்தை
பூண்டன	அணிந்துகொண்டன

இவற்றினுடைய தன்மையிருக்கும்படி யென்னென்று கருத்து. இனத்தின்வகையான கவித்துறையாகையாலே பாவினமென்கிறாராகவுமாம். ஒன்றலர்-சத்ருக்கள். பாவுதல்-பரம்புதல். (௬0)

வ்யா.—அ.—ஐம்பதாம்பாட்டு. ((தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்தானதில்மன்னும்) என்று-எம்பெருமானார்க்கு பெரியபெருமான்திருவடிகளினுண்டான ப்ராவண்யத்தை யநுஸந்தித்தார்-கீழ்; இதில்-அந்தப்ராவண்யத்திலே நமக்கு உத்தேச்யரான எம்பெருமானார்திருவடிகளை யநுஸந்தித்து அவற்றினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை அடைவேயருளிச்செய்து கொண்டு வித்தாரிகிறார்.

வ்யா.—(பாவுதொல்சீர்) பாவுகை - பரம்புகை. (திசையனைத்தும் ஏறுங்குணன்) என்று இவர்தாமருளிச்செய்தபடியே ஸகல திக்குகளிலும் வ்யாப்த[illegible]ர்தேதியன்றிக்கே ஸ்வபா

http://acharya.org

விலக்ஷணராயிருக்குமவர்கள் கல்யாணகுணங்களையுடையராய்.(எதிந்த்ர நாதன்) அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார் தொடக்கமானவெல்லா ஜீவர்களுக்கும் வருத்த சேஷியாய், அவர்களுக்கு ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை தத்வதாதம்யபர்யந்தமாக உபதேசித்தருளி அவ்வழியாலே அவர்களுக்குத் தலைவராய், நாதபூதராயிருக்குமவர். (இராமநாதன்) எம்பெருமானார். (தன்னிணையடியே) இவ்வளவிசேதநரை அதில்நின்றும் மீட்திப்பிக்கைக்கும், அநுபாவ்யமாய்க்கொண்டு ரஸிப்பிக்கைக்கும், இத்திருவடிகளையொழிந்திருப்பாருண்டோ வென்று ஆராய்ந்துபார்த்தால், ([illegible], [illegible], [illegible]) ([illegible]) ([illegible]) என்று வேதபுருஷனாலும் தன்னாலும் சொல்லப்பட்ட ப்ரபாவத்தையுடையனான ஸர்வேச்வரனாலும், ([illegible]) என்கிறபடியே ப்ராப்யமுண்டோவில்லையோவென்று ஸம்சயிக்கவேண்டும்படி பண்ணக்கடவனவையாலும், ஸ்ரீபாததீர்த்தங்களுக்கு இரங்காதே போனபடியாலும், இவ்வுபாயத்துக்கு ஒப்பாகமாட்டாது.([illegible]) ([illegible] । [illegible]) ([illegible]) என்று மின்னாசயப்ரதிபாதகமாய் அந்யயோகவ்யவச்சேதகமாயிருக்கின்ற ப்ரமாணபலத்தாலே இவ்வுபாயம் அதிலும் ச்ரேஷ்டமாய்த்திருப்பது. ஆகையாலே அந்த அதிசயத்துக்கு, ஒன்றுக்கொன்றே-ஸத்ருசமாயிருக்கிற இரண்டுதிருவடிகளுமென்றபடி.

(உதிப்பன உத்தமர் சிந்தையுள்) உத்தமராவார் - அதம மத்யமரான வேதபாஹ்யருக்கும், வைதிகராய்க்கொண்டு காம்யதர்மத்திலேதானே மண்டியிருக்குமவர்களுக்கும், அவர்களுடைய ஜீவனத்துக்கும் ப்ரதிபடராய்ப்பரமவைதிகரான விசேஷசாஸ்த்ரைகநிஷ்டராய்முமுக்ஷுக்களாயிருக்குமவர்கள். உத்க்ருஷ்டராய்அநந்யதைவதராய் அநந்யப்ரயோஜநராயிருக்கும் உத்தமாதிகாரிகளென்றபடி. அன்றிக்கே, இதுசரமபர்வப்ரதிபாதகசாஸ்த்ரமாகையாலும், முமுக்ஷுக்களிலும் ஏகாந்திகளிலும்பரமைகாந்திகளிலும்வைத்துக்கொண்டுத்தமர் பரமைகாந்திகளாகையாலும், இவ்விடத்திலே (உத்தமர்)என்றது-பரமைகாந்திகளைச் சொன்னபடியென்னவுமாம்.(சிந்தையுள்) அவர்களுடைய திருவுள்ளங்களிலே.(உதிப்பன) (எல்லையில்சீரினரசுதிரண்டுபோல) என்கிறபடியே சக்ரவாளபர்வதத்திலேஇரண்டாதித்யர்கள்சேரவுதித்தாப்போலேயவர்களுடைய திருவுள்ளங்களிலே எம்பெருமானாருடைய திருவடிகளிரண்டும் எப்போதுமுதித்து ப்ரகாசியாநிற்கும் தன்மையையுடையன.

http://acharya.org

யிற் சொல்லப்பட்ட அத்யவஸாயாதிகர்க்கு ஒருகாலமு னும் ப்ரகாசிக்கிறவனல்லன். இப்படிப்பட்ட ப்ரேமவ்யவஸாயமுடையவர்களுக்கே ப்ரகாசிக்குமென்றபடி. [illegible] (பதித்தஸநாத! விஷ்டாக்ரகண்யஜநஸேவ்ய பதத்பதாப்ஜே) என்றிறே ஸ்ரீபட்டருமருளிச்செய்தது. ([illegible])(அஜ்ஞாநபோதயவதிராஜசந்த்ரம்) என்று அபியுக்தரு மருளிச்செய்தாரிறே.

(ஒன்றலர்நெஞ்ச மஞ்சிக்கொதித்திடமாதிகடப்பன) ஒன்றலர் என்றது - பாஹ்யகுத்ருஷ்டிகள் தொடக்கமான ப்ரதிபக்ஷிகளை. அவர்களுடைய ஹ்ருதயமானது ஸூர்யோதயத்தாலே இவை பீதங்கள் பயப்படுமாப்போலே, ([illegible]) (ஸம்ப்ரப்ரத்யர்த்திநி) என்னும்படியான அவர் திருவடிகள் தன் ஹ்ருதயத்தாலே பீதமாய், ஆதித்யனுடைய தேஜஸ்ஸாலே அவை பரிதபிக்குமாப்போலே ஸ்வதேஜஸ்ஸாலே பரிதபிக்கும்படி. ஆதித்யன் இவற்றுக்கு ப்ரதிபடருக்கொண்டு த்ராவண நக்ஷத்ரங்கள்தோறும் மாறிமாறி ஸஞ்சரிக்குமாப்போலே அதுக்கு ப்ரதிபடங்களைக் கொண்டு ஸர்வதிக்குகளிலும் பரம்பரம் மாதிகடவாநிற்கும் தன்மையை யுடையன. இத்தால் - பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸிக்கைக்காக வேங்கடாசலத்துக்கும் யாதவாசலத்துக்கும் சாரதாபீடம் முதலான ஸ்தலங்களுக்கும் இவர் எழுந்தருளினபடியை அருளிச் செய்தாராயிற்று.

(கொண்டலனையவன் குற்றமெல்லாம்பதித்த)([illegible]) என்றும், ([illegible]) என்றும், ([illegible]) என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஜ்ஞர் ஸர்வப்ரகாரத்தாலும் பண்ணப்பட்டவை யாகையாலே ஸம்ர்த்தங்களாய் ப்ரபலங்களாயிருக்குமன்ன தோஷங்களெல்லாம் திரட்டி ஒருகுப்பமாகவைக்கப்பட்ட. (என்புன்கவிபாவினம்) கவிபாடுகைக்குத் தகுதியான ஜ்ஞாநமும் காவ்யலக்ஷணபரிஜ்ஞாநமு மில்லாத வென்னுடையகவியாகையாலே புல்லியதாய் அஸமீசீநமான கவியாகிற சந்தஸ்ஸமூஹத்தைச்சாட்டுக்கவென்றபடி. அன்றிக்கே, அநேக சந்தஸ்ஸுக்களோடேகூடின கவித்துறையாகையாலே "பாவினம்" என்கிறதாகவுமாம். (பூண்டன) இவனுடைய அஜ்ஞாநத்தாலே சொன்ன சொற்களன்றோ விலையென்று அவற்றில் ஒரு குறைகளும் பாராதே கலம்பகன் மாலை அலங்கரித்துக் கொள்ளுமவனைப்போலே இவற்றை யலங்கரித்துக்கொண்டன. இவற்றினுடைய தன்மை யிருக்கும்படி. யென்னென்று விசாரிக்காதேயும். (௬௦)

http://acharya.org

உரை.—அ.—ஐம்பத்தோராம்பாட்டு. எம்பெருமானார் இந்த லோகத்தில் அவதரித்தருளிற்று என்னை அடிமை கொள்ளுகைக்காக, வேறொரு ஹேதுவு மில்லையென்கிறார்.

மூ.—அடியைத்தொடர்ந்தெழுமைவர்கட்காயன்றுபாரதப்போர்
முடியப்பரிநெடுந்தேர்விடுங்கோனைமுழுதுணர்ந்த
அடியர்க்கமுதமிராமாநுசனென்னையாளவந்திப்
படியிற்பிறந்தது மற்றில்லைகாரணம்பார்த்திடிலே. (௫௧)

பதம்.	உரை.
அடியைத் தொடர்ந்து	[illegible] "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்கிறபடியே திருவடிகளைப் பின்சென்று,
எழும்	கர்வோத்தரராயிருக்கிற,
ஐவர்கட்கா	பாண்டவர்களுக்காக, ஸர்வஜ்ஞனுடைய அவ்வே திரண்டு இவர்கள் தனிமைப்பட்டு,
அன்று	தன்னையொழிய வேறு துணையற்றிருக்கிறவன்று,
பாரதப் போர்	பாரதஸமரத்திலே,
முடிய	அவர்கள் ப்ரதிபக்ஷம் முடியும்படி, "ஆடியமாவெடுத்தேர்" என்கிறபடியே,
பரி	குதிரைபூண்ட,
நெடும்	நெடிய,
தேர்விடும்	தேரைநடத்தின,
கோனை	ஸர்வேச்வரனை,
முழுது	ஆச்ரித பக்ஷபாதம், ஆச்ரித பாரதந்த்ர்யம், ஆச்ரித விரோதிநிரஸநம் முதலான ஸர்வவ்யாபாரங்களையும்,
உணர்ந்த	அறிந்து
அடியர்க்கு	அவ்வவ்வ்யாபாரங்களுக்குத் தோற்று எழுதிக்கொடுத்திருக்குமவர்களுக்கு,
அமுதம்	போக்யபூதராயிருக்கும்,
இராமாநுசன்	எம்பெருமானார்,
இப்படியில்	இந்த பூமியிலே,
வந்துபிறந்தது	வந்தவதரித்தது,
என்னைஆள	என்னை ஆளுகைக்காக;
பார்த்திடில்	ஆராயில்,
மற்றுக்காரணமில்லை	வேறொரு காரணமில்லை.

எழுச்சி - கிளப்பம். அகாஷது-நாம "க்ருஷ்ணாச்ரயா:" என்கிற ஞானத்தத்வம். படி-பூமி. (௫௧)

http://acharya.org

வ்யா—அ.—ஐம்பத்தோராம்பாட்டு. பால்யமேபிடித்து மானுஷவேஷனென்று நினையாதே ரக்ஷகனென்று அத்யவஸித்திருக்கிற பஞ்சபாண்டவர்களுக்கு ப்ரதிபக்ஷம் மாளும்படி ஸாரத்யம் பண்ணின க்ருஷ்ணனுடைய ஆனைத் தொழில்களெல்லாந் தெளிந்த ஸ்வரூபஜ்ஞானமுடைய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆராவமுதாயிருக்கும் எம்பெருமானார், இந்த பாபப்ரசுரமான பூலோகத்திலே அவதரித்தது ஆராய்ந்து பார்த்தால் என்னை யாளுகைக்காகவேயன்றோ நிஸ்ஸீமமாய் இத்தனையொழிய வேறொரு ஹேதுவில்லையென்கிறார்.

வ்யா.—(அடியைத் தொடர்ந்தெழும்) பால்யமே பிடித்து வ்யாஸர், சுகர், மார்க்கண்டேயன் முதலானவர்களுடைய உக்தி விசேஷங்களாலும், ஆபத்து வந்தபோதெல்லாம் உதவி ரக்ஷித்தபடியாலும் க்ருஷ்ணனை மானுஷனென்று நினைக்கை யன்றிக்கே தங்களை ரக்ஷிக்கும் பரதத்வமென்று அத்யவஸித்து (க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:) (க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ண நாதாஸ்ச பாண்டவா:) என்கிறபடியே அவன் திருவடிகளை ஆச்ரயித்து ருத்ரேந்த்ராதிகளை வென்று காலகேய ஹிடிம்ப ஜராஸந்தாதிகளை ஸம்ஹரித்து லோகத்திலே தங்களுக்கு ஒருவரும் எதிரில்லை யென்று கர்வோத்தராயிருக்கிற ஔத்தத்யம். (ஐவர்கட்காய்) தர்ம பீமார்ஜுந நகுல ஸஹதேவரென்று அஞ்சுபேரான பஞ்ச பாண்டவர்களுக்காக. (அன்று) துர்யோதநனிடத்தில் பக்ஷபாதத்தாலே கர்ணசல்யாதி துர்வர்க்கமெல்லாந்திரண்டு இந்தபாண்டவர்களும் தனிமைப்பட்டு தன்னையொழிய வேறொருதுணையின்றிக்கே யிருக்கிற ஸமயத்தில்,

(பாரதப்போர்முடிய) உபய ஸேனையிலும் பரதவம்சத்தரசிற்பரி மிதரானாலும் துர்வர்க்கங்கள் இந்த உபயஸேனையிலும் அக்ரமித்து யுத்தம்பண்ணினார்களாகையாலே அந்த யுத்தத்துக்கு "பாரதயுத்தம்" என்று பேராயிருக்கிறது; அப்படிப்பட்ட உபயஸேனையிலும் திரண்டிருக்கிற பதினெட்டு அக்ஷௌஹிணி பலத்துக்குமாக பாண்டவர்களைவரும் சேஷித்து அவர்களுக்கு ப்ரதிபக்ஷபூதரானமற்றப்பேரெல்லாரும் முடியும்படி. (பரிநெடுந் தேர் விடுங்கோனை) (ஆடியமாநெடுந்தேர்) என்கிறபடியே - ச்வேதாச்வங்களாலே பூணப்பட்டு ஸர்வாலங்க்ருதமாய், தேவதா ப்ரஸாதத்தாலே வந்ததாகையாலே திவ்யமாய் மஹத்தான திருத்தேரை தானே ஸாரதியாய் நடத்தி, தன்னுடைய ஸர்வ ஸ்வாமித்வம் ஸர்வருக்கும் தெரியும்படி யிருக்கிற க்ருஷ்ணனை. ([illegible] [illegible] । [illegible] [illegible]

http://acharya.org

रथिनमात्मानञ्च सारथिं सर्वलोकसाक्षिकं चकार) (தத்ர பாண்டவாநாம் குருணாஞ்ச யுத்தே ப்ராரப்தே பகவாந் புருஷோத்தம:, ஸர்வேச்வர:, ஜகது பக்ருதிமர்த்ய:, ஆச்ரிதவாத்ஸல்யவிவச: பார்த்தம் ரதிநம் ஆத்மாநஞ்ச ஸாரதிம் ஸர்வலோக ஸாக்ஷிகம் சகார) என்று - கீதாபாஷ்யத்திலே இவ்வர்த்தத்தை எம்பெருமானார் அருளிச்செய்தாரிறே. இந்த க்ருஷ்ணன் யதுகுலத்திலே யவதரித்தாலும் ஸ்ரீருக்மிணிப் பிராட்டியினுடைய ஸ்வயம்வரத்துக்காக குண்டிநபுரத்துக் கெழுந்தருளின போது, இந்த்ரன், தேவஸபையிலே ஒரு ஸிம்ஹாஸநத்தை யனுப்புவித்து க்ருஷ்ணனை ராஜாவாம்படி அந்த ஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளப் பண்ணுவித்துத் திருவபிஷேகம் பண்ணுவித்தானென்று ப்ரஸித்தமிறே. ஆக, ராஜாவென்னக் குறையில்லை; இப்படிப்பட்டவனை.

(முழுதுணர்ந்த அடியர்க்கு) ஸ்வரூபரூபகுணவிபூதிகளையும், (एष नारायणः श्रीमान् क्षीरार्णवनिकेतनः। नागपर्यङ्कमुत्सृज्य ह्यागतो मधुरां पुरीम्॥) (ஏஷ நாராயணஸ் ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:, நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்) என்கிறபடியே-ஸர்வஸ்மாத்பரனும் அஜஹத்ஸ்வபாவனும் அவதரித்து, (उपसंहर विश्वात्मन् रूपमेतच्चतुर्भुजम्) (உபஸம்ஹர விச்வாத்மந் ரூபமேதச்சதுர்ப்புஜம்) என்று-தேவகியார் ப்ரார்த்திக்கயாலே ப்ராக்ருதரைப் போலே இருந்தபடியையும், யசோதைதனியைக் கால்கடையாகப் பண்ணினதும், உரலிலே கட்டுண்டபடியுண்டதும், பூதநா சகட யமளார்ஜுநாரிஷ்ட ப்ரலம்ப தேநுக காளிய கேசி குவலயாபீட சாணூர முஷ்டிக கம்ஸாதிகளாகிற ஆச்ரித விரோதிகளைக் கொன்றதும், அக்ரூர மாலாகாராதிகளை அநுக்ரஹித்ததும், கோவர்த்தநோத்தாரணாத்யமாநுஷ திவ்ய சேஷ்டிதங்களைப்பண்ணினதும், பாண்டவர்களுக்கு பரதந்த்ரனாய்க் கழுத்திலே ஓலை கட்டிக்கொண்டு சென்று தூத்யம் பண்ணினதும், கோலாலே ஏவிக் கார்யங் கொள்ளும்படியான ஸாரத்யத்தைச் செய்ததும், விச்வரூபத்தை தர்சிப்பித்ததும், அர்ஜுநவ்யாஜேந லோகோபகாரார்த்தமாக அத்யாத்மசாஸ்த்ரத்தை வெளியிட்டதும் முதலானவற்றையும் அறிந்தவர்களாய் அவ்வவஸ்வபாவங்களுக்குத் தோற்றுத் தங்களை எழுதிக்கொடுத்து சேஷத்வ ஸ்வரூபத்திலே நிஷ்டரான ஆழ்வான், ஆண்டான் பிள்ளான், எம்பார் முதலானவர்களுக்கு. (அமுதம்) ஸ்வரூபோஜ்ஜீவநத்தைப் பண்ணுமவராகையாலே நித்யாபூர்வமாய் ரஸிக்குமவரான.

(இராமாநுசன்) எம்பெருமானார். (என்னை ஆளவந்து) பரமபதத்திலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க அத்தைக் காற்கடைக

http://acharya.org

கொண்டு அதில் இன்றும் அடியேனை அடிமை கொள்ளுகைக் காகவே எழுந்தருளி. (இப்படியில்) ([illegible]) (பகவத்ஸ்வரூப திரோதாநகரீம் விபரீதஜ்ஞாந ஜநநீம் ஸ்வவிஷயாயாஶ்ச போக்ய புத்தேர்ஜநநீம்) என்னும்படியான ப்ராக்ருத பூமியிலே. (பிறந்தது) ([illegible]) (ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ) என்கிற படியே அவதரித்தருளினது. (என்னையாள) ([illegible]) ([illegible]) (அநுமன்யபராத சக்ரவர்த்தி) (பாபாநாம்ப்ரதமோஸ்ம்யஹம்) என்னும்படியான அடியேனை ரக்ஷிக்கவே யாய்த்து. (மற்றில்லை காரணம் பார்த்திடிலே) பின்னையும் இவ் வவதாரத்துக்கு மூலமேதென்று ஆராய்ந்துபார்த்தால் வேறொரு காரணமில்லையென்று அருளிச்செய்தாராயிற்று. ... (௫௧)

உரை.—அ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு. (என்னை யாளவந் திப்படியில் பிறந்தது) ஒருவராலும் ஆளவரியனான வென்னை ஆளுகைக்காக வந்து அவதரித்தாரென்றீர், அவர் தாம் இப்படி அகடிதகடநமைச்சமைத்ததேயென்ன ; அவர் செய்த அகடிதகடநங் களை யருளிச்செய்கிறார்.

மூ.—பார்த்தானறுசமயங்கள்பதைப்பவிப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டுபுன்மையினேனிடைத்தான்புகுந்
தீர்த்தானிருவினைதீர்த்தரங்கன்செய்யதாளிணையோ [டா
டார்த்தானிவையெம்மிராமாநுசன்செய்யுமற்புதமே.(௫௨)

பதம்.	உரை.
அறுசமயங்கள்	வேதபாஹ்யங்களான ஷட்ஸமயங்களும்,
பதைப்பப் பார்த்தான்	நடுங்கும்படியாகக் கண்டார்;
இப்பார்முழுதும்	இந்த பூமியெங்கும்,
புகழ்கொண்டு	தம்முடைய திவ்ய கீர்த்தியாலே,
போர்த்தான்	மூடிவிட்டார்;
புன்மையினேனிடை	அநாத்மகுணங்களை நிருபகமாக வுடையனாயிருக்கிற என்பக்கலிலே,

பதம்.	உரை.
	என்னுடைய அர்த்தித்வாதி நிரபேக்ஷமாக,
தான்புகுந்து	தாமே வந்து புகுந்து,
	"[illegible]" "யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவேப்யநாஶ்யம்" என்கிறபடியே காலதத்வமுள்ளதனையும் அநுபவித்தாலும் தொலையாத என்னும்படியான,

http://acharya.org

பதம்.	உரை.
இருவினை தீர்த்தான்	புண்ய பாபங்களைப் போக்கினார்;
தீர்த்து	இப்படி பாபங்களைப் போக்கி,
அரங்கன்	பெரிய பெருமாளுடைய,
செய்ய	அழகிய,
தாளிணையோடு	திருவடிகளோடே,
ஆர்த்தான்	ஸம்பந்திப்பித்தார்;
எம்மிராமானுசன்	எங்களுக்கு நாதரான எம்பெருமானார்,
செய்யும் அற்புதம் இவை	செய்யும் ஆச்சர்யங்கள் இவை.

அற்புதம்-அத்புதம். அதாவது-அகடிதகடநாப்ரயுக்தமான ஆச்சர்யம். பதைத்தல்-அடித்தல். போர்த்தல்-மூடுதல். இருமை-பெருமை. ஆர்த்தல்-பந்தித்தல்.

வ்யா.—அ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு. (என்னையாளவந்திப் படியில் பிறந்தது) என்று ஒருவராலும் ஆளவரியவென்னை ஆள வுக்தவதரித்தாரென்று அவரைக்கொண்டாடாகின்றீர், இந்த அவதாரத்திலே உம்மை யொருவரையே ஆள நின்றதோவென்ன; முதல்முன்னம்தேசித்தவதரித்தது என்னை யாளுகைக்காகவே; ஆகிலும், இவர் அவதரித்தருளி, அவைதிகஸமயங்களாலே நசித்துப் போன லோகங்களை வெள்ளம்கண்டு ஸஹிக்கமாட்டாதே அந்த அவைதிகஸமயங்களை நசிப்பித்து தம்முடைய கீர்த்தியாலே லோகங்களெல்லாவற்றிலும் வ்யாபித்து, க்ரூரபாபியானவென்பக்கலிலே ப்ரவேசித்து, என்னுடைய பாபங்களெல்லாம் நசித்துப்போம்படி பண்ணி, பின்பு பெரியபெருமாளுடைய அழகிய திருவடிகளோ டே ஸம்பந்திப்பித்தார்; இப்படி ஒருகார்யத்தை உத்தேசித்து அநேககார்யங்களைச் செய்தார். இப்படி இந்தவெம்பெருமானார்செய் தருளும் ஆச்சர்யங்களைக்கண்டீரே! என்று வித்தராகிறார்.

வ்யா.—(பார்த்தானறுசமயங்கள்பதைப்ப) (அறுசமயங்கள்) பௌத்த சார்வாக சாக்ய உலூக்ய பாசுபத காணாபத்யங்க ளென்கிற வேதபாஹ்யஸமயங்களாறென்னுதல்; அன்றிக்கே அநுஷ்டான தசையிலே அத்யந்தஹேயங்களானவை யென்னுதல்; (பதைப் பப்பார்த்தான்) இப்படிப்பட்ட வேதபாஹ்ய ஸமயங்களெல்லாம் நிர்மூலமாய்ப்போம்படி அவற்றை கடாக்ஷித்தார். பதைத்தல்-அடித் தல். ([illegible]) (இவ்வொளதாபத்ரறைத்ரத்வநுபடபவனங்கள்பாதித் திருநகத்தத்வித்தாத்த ஸ்தோமகூலம் தபகவிகமதவ்யத்தனத் வர்த்தகீதா) என்று ஆழ்வானும் அருளிச்செய்தாரிறே. (இப்பார் முழுதும் போர்த்தான் புகழ்கொண்டு) லோகமெல்லாம் திவ்யபத்த மாகப்பண்ணி வேதமக்குளெல்லாம் வைவசமாய்த்து. இப்படிப்பட்ட

http://acharya.org

பூமியெங்கும் பண்டிதபாமரஸாதாரணமாகத் தம்மைக்கொண் டாடும்படி தம்முடைய கீர்த்தியை ஸர்வதிக்கிலும் வ்யாபிப்பித் தார். போர்த்தல் – மூடுதல்.

(புன்மையிலோனிடை) வந்தேறியான பாபங்களென்று மின்றிக்கே, "வெம்புமுற்றக்கைப்பு மிருவதுபோல்" என்கிறபடி யே காண்தோறும் என்னாலே நிரக்கழியச் செய்யப்பட்டவையாய், ([illegible]) (பாபாசாரவஸ) என்றும், ([illegible]) (தேத் வகபுஞ்ஜதேயபாய:) என்றும் சொல்லுகிறபடியே அந்த பாபங் களையே ஒருவடிவாகவுடையனாகையாலே அத்யந்தபாபியானவென் னிடத்திலே. (தான்புகுந்து) அடியேன் ஒரு ஸாதநாநுஷ்டானம் பண்ணாதே யிருக்கச்செய்தேயும், அர்த்தியாதே யிருக்கச்செய்தே யும், நிருபாதிகாபேக்ஷமாகத் தாமே நிர்ஹேதுகமாகவந்து ப்ரவே சித்து.

(இருவினை) இரண்டு வகைப்பட்டவினை; புண்யபாபங்களென் றபடி. அன்றிக்கே, (இருவினை) இருமை-பெருமையாய், ([illegible]) ([illegible]) ([illegible]) ([illegible]) (யத் ப்ர ஹ்மகல்பநியுதாநுபவேப்யநாச்யம் தத்கில்பிஷம்ஸ்ருஜதிஜந்துரிஹ க்ஷணார்த்தே) (பாபாநாம்ப்ரதமோஸ்ம்யஹம்) (மயிதிஷ்டதிதுஷ் க்ருதாம்ப்ரதாநே) (அநுமையம்யபராதசக்ரவர்த்தி) என்கிறபடியே அநுபவப்ராயச்சித்தங்களாலும் எத்தனையேனும் நாமுடையவ ராலும் நிவர்த்திப்பிக்கவரிதான என்னுடைய மஹா பாபங்களை யென்றபடி. (நீர்த்தான்) இவற்றை அநாயாஸேந மணலிலேயெ ழுதினவெழுத்தைத் துடைப்பாரைப்போலே துடைத்தார். (வாரொ ன்றிலவினை மாய்ந்தனவோ கர்மமொருங்கிற்றுக் கண்டில மால்) என்றும், (கம்மெனுதேஹைவிட்டோடித் தூரதன்பாய்த் தனவே) என்றும் சொல்லுகிறபடியே வாஸநையோடே போக் கினாரென்றபடி.

(நீர்த்து) அந்தப்படி ஸ்நானம்பண்ணி அபிக்கையாக்கி யிரு க்கையன்றிக்கே இப்படி பாபங்களையெல்லாம் போக்கி. (அரங்கன்) எட்டாநிலமான பரமபதத்திலேபோய் ஆச்ரயி என்றும், யோக மார்க்கத்தாலே அந்தர்யாமியை ஆச்ரயியென்றும், இப்படி அநே கங்களானவற்றை உபதேசித்துப் போருகையன்றிக்கே அத்யந்த ஸுலபராய்க்கொண்டு கண்ணிருந்தவிடத்திலே யிருக்கிற பெரிய பெருமாளுடைய. (செய்யதாளிணையோடார்த்தான்) (அரங்கத் தம்மான் திருக்கமலபாதம்) என்கிறபடியே தர்சநீயமாய் பாவநத்வ போக்யத்வங்களுக்கு பாஞ்சஜந்யமான திருவடிகளோடே

http://acharya.org

ஸம்பந்திப்பித்தார். சேஷசேஷிபாவஸம்பந்தத்தை அறிவிப்பித்தாரென்றபடி. ஆர்த்தல் - பந்தித்தல்.

(இவை யெம்மிராமாநுசன்செய்யுமற்புதமே) இவ்வளவும் சொன்னவையெல்லாம் எங்களுக்காக அவதரித்தருளின எம்பெருமானார் செய்தருளும் அத்புதகார்யங்கள். அற்புதம் - அத்புதம். பித்ருவாக்ய பரிபாலநம் பண்ணவேணுமென்று காட்டுக்குப்போய் அவ்வளவிலே நில்லாதே ராக்ஷஸரையெல்லாம் ஸம்ஹரித்துத் திருவபிஷேகங்கட்டுவித்து மஹாராஜருக்கும் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கும் ஐச்வர்யங்களைக் கொடுத்தும் போந்த சக்ரவர்த்தித்திருமகனைப் போலே, ஒன்றுசெய்யவென்றுவொருப்பட்டு அநேகமான அதிமாநுஷ சேஷ்டிதங்களைப்பண்ணியருளினார் காணும் இவரும். இப்படியே மஹாபுருஷர்கள்படியிருப்பது. க்ஷுத்ரபுருஷர்களாகில் உபக்ரமத்திலே அநேகப்ரகல்பங்களைச்சொல்லி கார்யஸமயம்வந்தவாறே வருந்தியும் அல்பமாகிலும் செய்யமாட்டார்களென்றதாய்த்து.()

உரை.—அ.—ஐம்பத்துமூன்றாம்பாட்டு. "பார்த்தானறுசமயங்கள்பதைப்ப" என்று பாஹ்யஸமயங்களைக் குலையப்பண்ணி இவ்விபூதியில் இவர் ஸ்தாபித்தவர்த்தமேதென்ன; ஸகலசேதநாசேதநங்களும் ஸர்வேச்வரனுக்கே சேஷமென்கிற விலக்ஷணமான அர்த்தத்தை ஸ்தாபித்தருளினார்.

மூ.—அற்புதஞ்செம்மையிராமாநுசனென்னையாளவந்த
கற்பகங்கற்றவர்காமுறுசீலன்கருதரிய
பற்பலுயிர்களும்பல்லுலகியாவும்பரனதென்னும்
நற்பொருடன்னையிந்நானிலத்தேவந்துநாட்டினனே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்னையாள	என்னை அடிமைகொள்ளுகைக்காக,	அற்புதம்	ஆஸ்சர்யபூதராய்,
வந்த	நான் இருந்தவிடம் தேடிவந்த,	செம்மை	ஆச்ரிதருடையவெண்ணத்தைப்பார்த்துக் கைவிடாதே, நீரேறுமேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப் போலே தம்மை அவர்களுக்கீடாக அமைத்துப் பரிமாறும் ஆர்ஜவகுணயுக்தராய்,
கற்பகம்	பரமோதாரராய்,		
கற்றவர்	அறிவுடையார்,		
காமுறு	ஆசைப்படும்படியான,		
சீலன்	சௌசீல்யத்தை யுடையராய்,		
	அதிமாநுஷமான செயல்களைச் செய்கையாலே,		

http://acharya.org

பதம்.	உரை.
இராமாநுசன்	எம்பெருமானார்,
கருதரிய	நினைக்கப் புக்கால் நினைத்துத் தலைக்கட்டவரிதாம்படி,
பற்பல்லுயிர்களும்	அனேகமான ஆத்மாக்களும்,
பல்லுலகியாவும்	அவர்களுக்குவாஸஸ்தானமாய் அனேகமாயிருக்கிற லீலாலோகங்களும்,
பரனது	ஸர்வஸ்மாத்பரனுக்குசேஷம்,
என்னும்	என்கிற,
நற்பொருள்தன்னை	திவ்யார்த்தத்தை,
இந்நானிலத்தே	இந்த லோகத்திலே,
வந்து	ஒருவராபேக்ஷியாமலிருக்கத் தாமே வந்து,
காட்டினன்	ஸ்தாபித்தருளினார்.

கல்பகத்திற் காட்டில் இவர்க்கு விசேஷம் - அடிமை கொள்ளுகையும், இருந்தவிடம்தேடி வருகையும். காமுறுதல் - விரும்புதல். பற்பல்லுயிர்கள்-பலபலவான வுயிர்கள்; அனேகமான உயிர்களென்றபடி. "பல்லுலகில்யாவும்" என்றும் பாடம் சொல்லுவர்கள், [எழுத்தேற்றம் வருகையால் அதுசேராது. ஆனால் "பல்லுலகியாவும்" என்றால் எழுத்தேற்றம் வாராதோ வென்னில்; "உரைக்கின்றன னுமக்கியான்" என்கிறவிடத்திற் போலவே, "பல்லுலகியாவும்" என்கிறவிடத்தில் இகரமும் குற்றியலிகரமாய் வண்ணம் கெடாமைக்குக் கழியுண்கையாலே எழுத்தேற்றம் வாராது. காட்டுதல் - ஸ்தாபித்தல். (௫௨)

வ்யா.—அ—ஐம்பத்தொன்றாம்பாட்டு. "பார்த்தனணுசம வம்சம்பணைப்ப" என்று - பரத்வமையங்கிலைக் குலேயப்பண்ணினீரென்றும், "அரங்கன்செய்யதாளிணையோடார்த்தான்" என்று - பரமபுருஷார்த்த ஸாம்ராஜ்யத்தைக் கொடுத்தாரென்றும் சொன்னீர், அம்மாத்ரமேயோ அவர்செய்ததென்னில்; அவ்வளவேயன்று, ஸகலாபேக்ஷிதங்களையும், அபேக்ஷாநிரபேக்ஷமாக கல்பகம்போலே கொடுக்குமவராய் ஜ்ஞானசெல்வத்தையுடையராய் அத்யாஶ்சர்யபூதராய் ஆர்ஜவகுணயுக்தரானவெம்பெருமானார், ஸகலலோகங்களிலுமிருக்குமுள்ள ஸகலாத்மாக்களும் ஸர்வஸ்மாத்பரனுக்கே சேஷபூதரென்று இந்தலோகத்திலே ப்ரதிஷ்டிப்பித்தருளினார்.

வ்யா.—(என்னையாள) ஸ்ரீயப்பதியினுடைய திவ்யாஜ்ஞையாலே ஸகலலோகோஜ்ஜீவந விஷயமாக அவதரித்தாரேயாகிலும், (எதிர்சூழல்புக்குஎனைத்தோர்பிறப்புமெனக்கேஅருள்கள் செய்ய) என்கிறபடியே லோகத்தாரெல்லாரிலும், (நீசனேன்நிறைவொன்றுமிலேன்) என்கிறபடியே அத்யந்த நிக்ருஷ்டனான என்னிடத்திலே க்ருபைபண்ணி வந்தருளி அடியேனை அடிமை கொள்ளுகைக்காக.

http://acharya.org

(வந்தகற்பகம்) தம்மையொருவரை ரக்ஷிக்கைக்காக அவதரித்தாரென்றன்றைக்காணும் இவருடைய திருவுள்ளத்திலோடுகிறது. (வந்தகற்பகம்) நித்யவிபூதியில்நின்றும் லீலாவிபூதிக்கு எழுந்தருளின கல்பகம். கல்பகம்போலே அபேக்ஷிதார்த்தப்ரதரானவர். ஜடமாய் ஸ்தாவரமாய் ஐஹிகபுருஷார்த்தமாத்ரப்ரதமாய் ஒருதேசவிசேஷத்திலே தானேயிருப்பதொன்றிறே அந்தகல்பகமிருப்பது; இந்தகல்பகம் அதில்நின்றும் அதிவிலக்ஷணமாய் அப்ராக்ருதமாய், ([illegible]) (அஜஹத்ஸ்வர்க்கமபவர்க்கவைபவம்) (கலமந்தமில்லதோர்கற்பகவீர்) (நல்லபதத்தால் மனைவாழ்வர்கொண்ட பெண்டிர்மக்கள்) என்கிறபடியே - ஐஹிகாமுஷ்மிக ஸமஸ்த புருஷார்த்தங்களையும் கொடுக்கவல்ல ஔதார்யத்தையுடைத்தாய் உபய விபூதியிலும் வ்யாபித்திருப்பதாய் நித்யமாய் நிற்பதொன்றிறே. ஆகையாலே, (வந்தகற்பகம்) என்று - சாகாசந்த்ரந்யாயேந ஏகபுத்த்யாரோபத்துக்காகச்சொன்னவித்தனை. நானிருந்தவிடம் தேடிவந்து விஷயீகரித்தவிது மஹௌதார்யமிறே! என்றுவித்தராய்க்காணும் (வந்தகற்பகம்) என்கிறார்.

(கற்றவர் காமுறு சீலன்) ஸகல சாஸ்த்ரங்களையும் அப்யஸித்தத்தாலே ஞானாதிகராய், (உன்னையொழிய வொருதெய்வம் மற்றறியா, மன்னுபுகழ்சேர் வடுகநம்பி) என்றுகொண்டாடப்படுகிற வடுகநம்பி, கிடாம்பியாச்சான் முதலான முதலிகள், வ்யாமுக்தராய் ஆசைப்படும்படியான ஸ்வபாவத்தையும் ஸௌசீல்யத்தையுமுடையராய். அன்றிக்கே, பெரியவன் தாழ்ந்தவருடனே புரையறக்கலந்து பரிமாறுகையாகிற சீலகுணத்தை யுடையவரென்றுமாம். காமுறுதல் - விரும்புதல். எம்பெருமானார் கோயிலிலே வாழுகிறகாலத்திலே ஒருநாள் மத்யாஹ்நசமயத்திலே திருக்காவேரியிலே நீராடித் திரும்பவும் எழுந்தருளுகிறவளவிலே வழியிலே திருக்கோட்டியூர்நம்பி எதிரே எழுந்தருள, எம்பெருமானாரும் அத்தமணலிலே ஸாஷ்டாங்கமாக தண்டனிட்டு நிற்க, நம்பியும் அவரைக்கடாக்ஷித்து "எழுந்திரும்" என்றருளிச் செய்யாதே வெறுமனே யிருந்தவாறே, அச்சேர்த்தியைக் கிடாம்பியாச்சான் கடாக்ஷித்தருளி, "நம்பீ! இவரைக்கொல்ல நினைத்தீரோ" என்று சீறுபாறுசெய்து, மணலிலே ஸாஷ்டாங்கமாக விழுந்திருக்கிற எம்பெருமானாரை வாரியெடுத்துக் கொண்டார் என்று நம்முதலிகள் கோஷ்டியிலே ப்ரஸித்தமிறே.

(அற்புதம்செம்மை) அதிமாநுஷங்களான சேஷ்டிதங்களைப் பண்ணுகையாலே அற்புதராய் ஆச்ரிதருடைய கௌடில்யத்தைப் பார்த்துக்கைவிடாதே நீரேறுமேடெனிலே விரகாலே நீரேற்றுமாப்

போலே தம்மை அவர்களுக்கிடாக அம்மத்துப்பரிமாறும் ஆர்ஜவ குணத்தையுடையவரான. (இராமானுசன்) எம்பெருமானார். (கருதரிய) நினைக்கப்புக்கால் நினைத்துத் தலைக்கட்டவரிதாம்படி. (பற்பல்லுயிர்களும்) பலபடியான. பல்பலென்கையாலே-ஒருஜாதியிலே அனந்தமாய் அப்படிப்பட்ட ஜாதிகளுங்கூட அனந்தங்களாய், (எண்பெருக்கந்நலத்தொண்பொருள்) என்கிறபடியே எண்ணிறந்த ஆத்மாக்களும். (பல்லுலகியாவும்) அந்த ஆத்மாக்களுக்கு ஆவாஸஸ்தானமாய் அனந்தமாயிருக்கிற ஸகலலோகங்களும். (பரனதென்னும்) ([illegible]) (பரர்பரர்களும்) என்கிறபடியே ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் பரனாய் ஸ்ரீயப்பதியானவனுக்கே சேஷபூதமென்னும், (ஸர்வேச்வரோ ஸாதநாநிலைதத் வ்யாப்தாவபோதாமலாநந்தாநந்த யதோசிதக்ரமேண ஸர்வாத்மகாம் ஸாவித்ர - தேஜீந்த்ராநாஸாஸவேஷாதமுகை: வ்யாநிதஸித்யந்தித்: வ்யாஸீநிஷயமுகோசக்யமங்களவபுஷ்ஸ்ரீபூமிநீளாதிப:) ([illegible]) என்கிறபடியே - போக்யபோகோபகரணபோகஸ்தாந போக்த்ருத்வங்களெல்லாம் ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுக்கே சேஷபூதமென்கிற.

(நற்பொருள்தன்னை) யதாவஸ்த்திதமாயிருக்கிற அர்த்தத்தை. அன்றிக்கே, இப்படிப்பட்ட சீரியவர்த்தத்தை. (இக்காலியத்தே வத்து) இந்தலோகமெல்லாம் உஜ்ஜீவிக்கைக்காக தாமேவந்தவதரித்தருளி. (நாட்டினனே) ஒருவரும் அபேக்ஷியாதிருக்கச்செய்தே நிர்ஹேதுகமாகவே ப்ரதிஷ்டிப்பித்தருளினார். நாட்டுதல்-ஸ்த்தாபித்தல். சிலர்க்கு ஒருகாலத்திலே உபதேசித்துப்போனமாத்ரமேயன்றிக்கேலோகத்தாரெல்லாரும் ஸர்வகாலமும் அநுபவித்து உஜ்ஜீவிக்கும்படியாக ஸ்ரீபாஷ்யாதிமுகேந ப்ரதிஷ்டாபநம் பண்ணியருளினாரென்றதாய்த்து. ([illegible]) (யதண்டமண்டாந்தரகோசரஞ்சயத்தசோத்தராண்யாவரணாநியானிச - குணா: ப்ரதானம் புருஷ: பரம்பதம் பராத்பரம்ப்ரஹ்மச தே விபூதய:) என்று ஆளவந்தாரு மருளிச்செய்தாரிறே.

கற்பகத்தைக் காட்டில் இவருக்கு விசேஷம் - அடிமை கொள்ளுகையும் இருந்தவிடத்தே வருகையும். "பல்லுலகியாவயும்" என்றும் பாடம் சொல்லுவர்கள். எழுத்து ஏற்றமாகையாலே அது சேராது; ஆனால் "பல்லுலகியாவும்" என்றால் எழுத்தேற்றம் வாராதோ வென்னில்; "உணர்க்கின்றனனுமக்கியான்"!

http://acharya.org

என்கிற இடத்திலேபோலவே, "பல்லுலகியாவும்" என்கிறவிடத்திலே இகரம் குற்றியலிகரமாய்வலந்தணைக்கெடாமைக்குக் கழியுண்கையாலே எழுத்தேற்றம்வாராதென்று ஜீயரு மருளிச்செய்தாரிறே. ... ... (ருங)

உரை.—அ.—ஐம்பத்துநாலாம்பாட்டு. இப்படி எம்பெருமானார் யதார்த்தஸ்தாபநம்பண்ணியருளின ஸ்வபாவத்தைக்கண்டு, பாஹ்யஸமயங்களுக்கும், வேதத்துக்கும் திருவாய்மொழிக்கு முண்டான ஆகாரங்களை யருளிச்செய்கிறார்.

மூ.—நாட்டியநீசச்சமயங்கள்மாண்டன;நாரணனைக்
காட்டியவேதங்களிப்புற்றது;தென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்டமிழ்மறைவாழ்ந்தது;மண்ணுலகில்
ஈட்டியசீலத்திராமாநுசன்றனியல்வுகண்டே. (ருச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஆச்ரிதரான சேதநரோடே தம்பெருமையையும் அவர்கள் சிறுமையையும் பாராதே கலந்து பரிமாறி,	நீசம்	வேதபாஹ்யங்களாகையாலே தண்ணிதான,
மண்ணுலகில்	பூலோகத்திலே,	சமயங்கள் மாண்டன	சமயங்கள் நசித்தன;
ஈட்டிய	மேன்மேலும் திரட்டிக்கொண்ட,		பூர்வபாகம் ஆராதநஸ்வரூபத்தையும், உத்தரபாகம் ஆராத்ய ஸ்வரூபத்தையும் சொல்லுகையாலே,
சீலத்து	சீலகுணத்தையுடையரான,	நாரணனை	"[illegible]" "வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்கிறபடியே உபயவிபூதி யுக்தனான ஸர்வேச்வரனை,
இராமாநுசன்றன்	எம்பெருமானாருடைய,		
இயல்வுகண்டு	ஸ்வபாவத்தைக் கண்டு,		
	ஆதித்ய தர்சநத்தில் அந்தகாரம் கழிந்து *அம்புஜாதங்கள் அலருமாப்போலே,	காட்டிய வேதம்	ப்ரகாசிப்பித்த வேதமானது,
நாட்டிய	ஸ்வயுக்தி ஸ்தாபிதங்களாய்,	களிப்புற்றது	நமக்கு இனி ஒரு குறையில்லை யென்று ஹர்ஷித்தது;

* "அம்புஜாதங்கள் அலருமாப்போலே" என்றும் பாடம்.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
தென்	ஸர்வப்ரகாரவிலக்ஷணமான,	வாட்டமிலா	ஒருகுறையின்றிக்கே யிருப்பதாய்,
குருகை	திருநகரியைத் தமக்கு வாஸஸ்தாநமாகவுடையராய், பகவ ததுபவபரீவா ஹரூபமான ஸ்வ ஸூக்திகளாலே லோகத்துக்குபகரித் தருளின,		ஜ்ஞாநப்ரப்ருதிமோக்ஷாந்தமான ஸகல பலங்களையும் கொடுக்கும்,
வள்ளல்	பரமோதாரரான ஆழ்வாரருளிச்செய்ததாய், பாஹ்ய குத்ருஷ்டிகளால் அஸிதாஸ்யமாகையாலே,	வண்	ஔதார்யத்தை யுடைத்தாயிருக்கிற,
		தமிழ்மறை	த்ராவிட வேதமான திருவாய்மொழி,
		வாழ்ந்தது	ப்ராப்தைச்வர்யமாய்த்து.

களிப்புறுதல் - கர்வித்தல். வாட்டம்-ஸங்கோசம், சட்டுதல்-இரட்டுதல். இயல்வு-ஸ்வபாவம். (௫௪)

ஸ்வா.—அ.—ஐம்பத்துநாலாம்பாட்டு. மெல்லாம் - எம்பெருமானார் தர்மநிர்ணயம்பண்ணினாரென்றும், வேதார்த்தநிர்ணயம் பண்ணினாரென்றும் ஆழ்வாருடைய திவ்யஸூக்திகளிலேதானே அவகாஹித்தாரென்றும் சொன்னீர், ஆன பின்பு அத்தால் தர்மங்களுக்கும் வேதங்களுக்கும் ஆழ்வாருடைய அருளிச் செயல்களுக்கு முண்டான ஆகாரத்தைச் சொல்லவேண்டாவோ வென்ன; தர்மங்களடங்கலும் வேரோடேகூட நசித்துப்போந்தன, வேதமானது பூலோகத்திலே "எனக்காரும் நிகரில்லை" என்று கர்வித்திருந்தது, அருளிச்செயல்களெல்லாம் அனைவரும் உஜ்ஜீவிக்கும்படி நித்யாபிவ்ருத்திகளாய்க் கொண்டிருந்தன வென்கிறார்.

ஸ்வா.—(நாட்டியநீசச் சமயங்கள் என்று தொடங்கி) (மண்ணுலகில்) அஜ்ஞாநத்துக்கு விளைநிலமான பூலோகத்திலே, (நாட்டியவிலத்து) உபயவிபூத்யைச்வர்யத்தைப் பெற்ற தம்முடைய மாஹாத்ம்யத்தையும் மௌனிகளுடைய சிறுமையையும்பாராதே திருக்கோட்டியூரிலே பரவஸ்த்ரவிப்ரகமற எல்லார்க்கும், குஹ்யதமமாகத் தாம்பெற்ற சரமச்லோகார்த்தத்தை வெளியிட்டு, கொங்கில் பிராட்டியையும், இரட்டைத் திருப்பதியிலே மாடுமேய்க்கிற பெண்பிள்ளையையும், மேல் நாட்டுக்கெழுந்தருளுகிறபோது காட்டிலே ஒருஇடையனையும், மற்றுமவைமுதலானவர்களையும்,

http://acharya.org

நிர்ஹேதுகமாக விஷயீகரித்துக் கலந்து பரிமாறி மேன்மேலெனத் திரட்டிக்கொண்ட சௌசீல்யத்தையுடையரான. சட்டுதல் - திரட்டுகை. (இராமாநுசன்தன்) எம்பெருமானாருடைய. (இயல்வு கண்டு) ப்ரதிபக்ஷப்ரதிக்ஷேபகத்வ தர்மமார்க்கப்ரதிஷ்டாபகத்வாதி ஸ்வபாவங்களைக்கண்டு. இயல்வு - ஸ்வபாவம்.

(சாட்டியதீச் சமயங்கள் மாண்டன) சோழமண்டலத்திலேயிருக்கிற திவ்ய தேசங்களில்கோயில்களெல்லாம் ஜைந்யாடம்பரரான பாஷண்டிகள் பிடுங்கிப் பொகட்டுச் சிவாலயங்களைக் கட்டுவிக்கும்போது திருமங்கைமன்னன் திருவவதரித் தருளி அந்த பாஷண்டிகளுடனே ப்ரஸங்கித்து அவர்களைவென்று திவ்ய தேசங்களைக் கட்டடங்க நிர்வஹித்தார்; ஆனவத்தார், சோழன் ஸபையிலே ருத்ரபக்ஷ பாதிகளோடே ப்ரஸங்கித்து அவர்களை வென்று அந்தராஜாவாலே அர்த்தராஜ்யத்தைப் பெற்றார்; இன்று அப்படியன்றிக்கே இவர் தம்முடைய காலத்திலே தானே அவ்வ்யபதேச்ய னென்பதொருவன் "வொத்பாதாரநாஸ்தி" என்று சாஸநத்தைவெழுதி இந்த பூமண்டலத்திலே ஸ்தாபிப்பதாக அநேக பாகவதபாகவதத்ரோஹங்களைப் பண்ணிக்கொண்டுபோக்க "சீரும் மாண்டன" என்கிறபடியே இவருடையயத்நமின்றிக்கே இவர் தம்முடைய அப்ரதிமப்ரபாவத்தைக் கண்டபோதே கழுத்திலே புண்பட்டுக் க்ரிமிகண்டனுமாய் நசித்தான் என்றும், காளஹஸ்தியில் நின்றும் சைவர்கள் திரண்டுவந்து திருவேங்கடமுடையானைத் தங்களுடைய கர்த்தாவானார் என்று வழக்குப்பிடித்து அக்காலத்திலே ராஜாவான யாதவராயனாலேயும் பரிஹரிக்கவரிதாம்படி திருமலையை ஆக்ரமிக்க; அப்போது திருவேங்கடமுடையானுடைய விஷயீகாரத்தாலே எம்பெருமானார் எழுந்தருளி அவர்களை பராஜிதராக்கினவாறே அவர்களெல்லாரும் தலையறுப்புண்டுபோனார்களென்றும், மேல் நாட்டிலே பௌத்தஜைநமதத்தார் ப்ரபலராய் அவ்விடத்தில் ராஜாவும் அவர்களுடைய சிஷ்யனாய் அத்தேசத்திலே தத்வப்ரதீக்ஷர் இருக்கவும் கூட வசிதாய்ப்போக் திருக்காலத்திலே இவரும் யாத்ருச்சிகமாக அத்தேசத்திலே சில காலமெழுந்தருளியிருக்க, அந்தராஜாவும் இவருடைய வைபவத்தை கேளித்து அந்த பௌத்தர்க்கும் எம்பெருமானார்க்கும் ப்ரஸங்கம் பண்ணுவித்து அவர்களுடைய குத்ருஷ்டி கல்பநத்தையும், எம்பெருமானாருடைய வைதிக கல்பநத்தையும் கண்டு விரக்தனாய் இவர்திருவடிகளிலே ஆச்ரயித்து, பட்டாசார்யன் காலத்திலும் கழியாதே வேர்பாய்க் கிடக்கிற பௌத்தருடையவும் ஜைநருடையவும் தலைகளை யறுப்பித்து அத்தேசத்திலே அப்படிப்பட்ட நீசமதங்கள் தலையெடாதபடி பண்ணினாரென்றும் ப்ரஸித்தமிறே.

http://acharya.org

(காட்டியவித்யாதி) ஆதித்யதர்சநத்தில் அந்தகாரம் நசிக்குமாப் போலே இவருடைய வைபவங்களைக்கண்டு ப்ரமாணதர்க்கங்க ளன்றிக்கே ஸ்வயுக்தியில் ஸ்தாபிதங்களாய், எத்தனைதாமுடையவ ராலும் நிவர்த்திப்பிக்க அசக்யங்களாய், வேதபாஹ்யங்களானவை யாலே அதிநீசங்களாயிருக்கிற அவைதிகமதங்களெல்லாம் நிர் மூலமாய்ப் போயின. (நாராயணனைக்காட்டிய வேதம்களிப்புற்றது) (నారాయణపరం బ్రహ్మ తత్త్వం నారాయణః పరః, నారాయణపరో జ్యోతిరాత్మా నారాయణః పరః, యచ్చ కించిజ్జగత్యస్మిన్ దృశ్యతే శ్రూయతేపి వా, అన్తర్బహిశ్చ తత్సర్వం వ్యాప్య నారాయణః స్థితః) (நாராயணபரம்ப்ரஹ்மதத்வம்நாராயணபர:, நாராயணபரோஜ்யோதிராத்மாநாராயணபர:, யச்சகிஞ்சிஜ்ஜகத்யஸ்மின் த்ருச்யதேச்ரூயதேபிவா, அந்தர்ப்பஹிச்சதத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித:) என்றும், (నారాయణాద్బ్రహ్మా జాయతే) (நாராயணாத்ப்ரஹ்மாஜாயதே) என்றுதொடங்கி, (నారాయణ ఏవేదం సర్వం, యద్భూతం యచ్చ భవ్యం, నిష్కళంకో నిరంజనో నిర్వికల్పో నిరాఖ్యాతః శుద్ధో దేవ ఏకో నారాయణః, న ద్వితీయోస్తి కశ్చిత్, య ఏవం వేద) என்றும், "(ఏకో హ వై నారాయణ ఆసీత్ న బ్రహ్మా నేశానః) என்றும், (దివ్యో దేవ ఏకో నారాయణః) என்றும் - நாராயணபரத்வத்தைக் காட்டுகிற வேதமானது பூர்வோத்தரபாகங்களிரண்டிலும் வைத்துக்கொண்டு, பூர்வ பாகம் ஆராதநகர்மஸ்வரூப ப்ரதிபாதகமாகையாலும், உத்தர பாகம் ஆராத்யப்ரஹ்மஸ்வரூபோபாய புருஷார்த்தப்ரதிபாதக மாகையாலும், இரண்டுக்கும் ஏகசாஸ்த்ரத்வத்தை இவ்வெம்பெரு மானார் ஸமர்த்தித்த ஆஸேதுஹிமாசல ப்ரதிஷ்டைபண்ணுகை யாலே இனி நமக்கொருகுறைகளுமில்லையென்று தேஜிஷ்டமாய்க் கொழுத்து பூரித்துக்கொண்டு இந்தலோகத்திலே காலிட்டு ஸஞ்சரியாநின்றது. களித்தல் - கர்வித்தல்.

(தென்குருகைவள்ளல் வாட்டமிலாவண்டமிழ் மறைவாழ்ந் தது) (திருவழுதிநாடென்றும் தென்குருகூரென்றும்) என்னும் படி தென்தேசத்துக்கெல்லாம் அலங்கார பூதமாய் தர்சநீயமான திருநகரியைத் தமக்குத் திருவவதாரஸ்தலமாகவுடையராய் பகவத் ஸ்வரூபரூபகுண விபூதிகளை யநுபவிக்க அநுபவிக்க உள்ளடங்கா மேதநுபவபரீவாஹரூபங்களாய், "மொழிபட்டோடும் கவியமுதி னுகர்ச்சி யுறுமோமுழுதுமே" என்று - தம்மாலே ச்லாகிக்கப்படு மவையான ஸ்வஸூக்திகளை லோகத்தாரெல்லார்க்கும் ஸர்வாதி காரமாம்படி உபகரித்தருளும் பரமோதாரரான நம்மாழ்வா ராலே அருளிச்செய்யப்பட்டதாய் பாஹ்யகுத்ருஷ்டிகளால் அசா ல்யமாகையாலே ஒருகுறையுமின்றிக்கே யிருப்பதாய், "தன் பதத்தால் மனிவாழ்வர் கொண்டபெண்டிர்மக்களே" என்கிற படியே - ஐஹிகபுருஷார்த்தங்களையும், "மாளிறையாவிரத்தி

http://acharya.org

இவைபத்தும்வீடே" "இவைபத்தும் பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள்நிலாவுவரே" "அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே" என்கிறபடியே ஆமுஷ்மிகமான பரமபுருஷார்த்தத்தையும் கொடுக்கக்கடவதான ஔதார்யத்தை யுடைத்தாயிருக்கிற த்ராவிடவேதமான திருவாய்மொழியானது "சடகோபன் தண்டமிழ்நூல்வாழ" என்கிறபடியே - ஸமஸ்தப்ரபந்நஜநங்களும் மங்களாசாஸநம்பண்ணும்படி உஜ்வலமாய்த்து. வாட்டம் - ஸங்கோசம்.... ... ... (௫௪)

உரை.—அ.—ஐம்பத்தஞ்சாம்பாட்டு. எம்பெருமானார்வைபவத்தைக் கண்டு வேதம் கர்வோத்தரமாயிற் றென்றார் - கீழ்; இப்படி ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தாமே, ஸகலவேதங்களும் பூமியிலே நிஷ்கண்டகமாக நடக்கும்படி பண்ணின ஔதார்யத்திலே ஈடுபட்டு அவரை ஆச்ரயித்திருக்கும் குடி எங்களை ஆளவுரிய குடியென்கிறார் - இதில்.

மூ.—கண்டவர்சிந்தைகவருங்கடிபொழில்தென்னரங்கன்
தொண்டர்குலாவுமிராமாநுசனைத்தொகையிறந்த
பண்டருவேதங்கள்பார்மேல்நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலைமேவித்தொழுங்குடியாமெங்கள்கோக்குலமே.

பதம்.	உரை.
தொகையிறந்த	(அநந்தா வை வேதா:) என்கிற படியே ஒரு தொகையில்லாதபடி அநந்தமாய்,
பண்டரு வேதங்கள்	உதாத்தாதியான ஸ்வரங்களுக்குப்ரகாசகங்களாயிருக்கிற வேதங்களானவை,
பார்மேல் நிலவிட	பூமியிலே வர்த்திக்கும்படி,
பார்த்தருளும்	பண்ணியருளின,
கொண்டலை	பரமோதாரராய்,
கண்டவர் சிந்தை	கண்டவர்கள் நெஞ்சை,
கவரும்	அபஹரியா நிற்பதாய்,

பதம்.	உரை.
கடி.	பரிமளத்தை யுடைத்தான,
பொழில்	திருச் சோலைகளையுடைத்தாய்,
தென் அரங்கன்	தர்சநீயமான கோயிலிலே நித்யவாஸம் பண்ணுகிறபெரியபெருமான்
தொண்டர்	திருவடிகளுக்கு சேஷபூதரானவர்கள்,
குலாவும்	அந்த வைபவத்துக்குத்தோற்றுக் கொண்டாடும்படியிருக்கிற,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
மேவி	தத்வைபவத் திலே ஈடுபட்டு,
தொழும் குடி.	விஷயாந்தர விமுகராய் ஆச்ரயித் திருக்கும்குலம்,

http://acharya.org

பதம்.	உரை.
எங்கள் கோக்குலமாம்	தங்களைப்பற்றினவருக்கேதர்மமென்றிருக்குமெங்களை ஆளவுரியகுலமாயிருக்கும்.

எங்கள் கோக்குடி யென்றது-எங்களுக்குக்கோவானகுடி என்றபடி. கண்டவர் சிந்தைகவரும் என்றவிது-பெரிய பெருமாளுக்கு விசேஷணமாகவுமாம். கடி-மணம். குலாவுதல்-கொண்டாட்டம். நிலவுதல்-வர்த்தித்தல். பண்டருவேதங்கள்என்கிறவிடத்தில் பண்டேயுள்ளதாய் அநாதியாயிருக்கின்ற வேதங்களென்று, வேதங்களினுடைய அநாதித்வத்தையும் அபௌருஷேயத்வத்தையும் சொல்லுகிறதாகுமோவென்னில்; (பண்டைவருவேதம்)என்றுபாடமாயிற்றாகில் அப்படிப்பொருள் சொல்லலாம்; பண்டுஎன்கிறசப்தம்-பூர்வகாலத்துக்கு வாசகமாயிருந்ததே யல்லது பூர்வகாலீநமானதுக்குவாசகமாகமாட்டாமையாலே அப்படி சொல்லப்போகாது; (பண்டை நான்மறை)(பண்டைக்குலம்)(பண்டையோமல்லோம்) என்கிறது, (பண்டு நாற்றுவர்) (பண்டு மின்றும்) (பண்டொருநாளாலின்னிலைவளர்ந்த) என்றும்இத்யாதிஸ்தலங்களிலே இந்தவிபாகம் கண்டு கொள்வது. ... ... (௫௫)

வ்யா.—அ.—ஐம்பத்தஞ்சாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - வேதமானது எம்பெருமானுடைய வைபவத்தைக்கண்டுகர்வித்து,தனக்கு ஒருவரும் ஸத்ருசமாகமாட்டார்களென்று பூலோகத்திலே ஸஞ்சரியாநின்றதென்றார்; இதிலே-அப்படி அந்தவேதங்களை ஒருவர்அபேக்ஷியாதேயிருக்கத் தாமே நிஷ்கண்டகமாக ப்ரவர்த்திப்பித்த ஔதார்யத்தையுடையராய் வைலக்ஷண்யமேகோஹாமாய்,பரிமளத்தையுடைய திவ்யோத்யானங்களாலே சூழப்பட்டு தர்சநீயமான கோயிலுக்கு ஸ்வாமியான பெரியபெருமாளுடைய அடியாரான ஆழ்வார்களைக்கொண்டாடுகிற எம்பெருமானாருடைய இந்த ஸ்வபாவங்களிலே யீடுபட்டு ஆச்ரயித்திருக்குமவர்களுடைய குலத்தார், எங்களை ஆளக்கடவ ஸ்வாமித்வத்தையுடைய குலத்தாரென்கிறார்.

வ்யா.—(தொகையிறந்த) வேதங்களை எண்ணப்புக்கால், "அநந்தா வை" "அநந்தாவைவேதா:" என்கையாலே எண்ணித் தலைக்கட்டப்போகாதிறே. தொகை - எல்லை. இப்படி ஒருதொகையிலடங்காதபடி அநந்தமாய். (பண்டருவேதங்கள்) பண் என்று - ஸ்வரமாய், அதுதானும் இங்கு உதாத்தாநுதாத்த ஸ்வரிதப்ரசயாத்மகமாய், அந்தஸ்வரங்களும் சாகாபேதேந பஹுவிதங்களாய், அவற்றுக்குப்ரகாசகமானவேதங்களென்னுதல்;எல்லார்க்கும் அவ்வவர்பரிஜ்ஞானத்தைக் கொடுக்கவல்ல வேதங்களென்னுதல்.

http://acharya.org

([illegible]) (ஸமஸ்தாக்ஷராத்யர்த்தஸ்வரூப ப்ரவேசயதீதி வேத:) என்று ஆராதனாதிப்ரயோஜனமான அர்த்தத்தை அபேக்ஷித்தவர்களுக்கு அடைவே பதிவிப்பிக்குமதாகையாலே வேதமென்று பேராயிருக்கிறது.

(பண்டருவேதங்கள்) என்கிறவிடத்தில், பண்டென்றுபூர்வ காலீநமாய், அரு என்று-தெரியவரிதாயிருக்கும் வேதங்களென்று பொருளானாலோவென்னில்; பண்டு என்று - காலமாத்ரவாசகமாகையாலே காலீநத்தைச்சொல்லமாட்டாது, பண்டை என்றால் காலீநத்தைச்சொல்லலாம்; - (பண்டைநான்மறை) (பண்டைக்குலம்) (பண்டைவோமல்லோம்) என்று - இவை காலீநத்துக்கு உதாஹரணங்கள். (பண்டுநூற்றுவர்) (பண்டொருநாள்) என்று இவை பூர்வகாலவாசகத்துக்கு உதாஹரணங்கள். ஆகையாலே, பண்டு என்ற பதம்பண்ணிலும் காலபர்யாயப்ரோமித்ததின்றி யொழிய - காலீநபரமாகமாட்டாது. ஆக பண்தரு என்றுபதச்சேதம்பண்ணினால்தான் ஸாமஞ்ஜஸ்யமென்று உரையிலேஜீயருமருளிச்செய்தாரிறே. இப்படியிருக்கின்ற ருக்யஜுஸ்ஸாமாதர்வணரூப சதுர்வேதங்களும், பாசர பாராசர்ய ப்ராசேதஸாதி பரமருஷிகளாலே அவகாஹிக்கப்பட்ட வேதாந்தங்களும், (பார்மேல்) மனுஷ்யர்திலியிலே, (நிலவிடப்பார்த்தருளும்) ஜகத்பௌத்ராதி பாத்யவை வேதோபேடிமுடிவித்து வேதங்களே ஆஜ்ஞையுடைமாகலம் வ்யாபிக்கும்படி பண்ணியருளின. நிலவுதல் - வர்த்தித்தல். இவர்தாம் வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யரிறே. (கொண்டல்) ஜலத்தால விபாகமற வர்ஷிக்கும் மேகமென்னலாம்படி வதாந்யராய்.

(கண்டவர் சிந்தைகவரும்) பூர்வகண்டத்வயபரீஸரஸ்ஸிக்கத்தி லோபகண்டாயமானிர்மோத ஸ்திமிதஸாருகாதாதிதப்ரஹ்மகோஷம், மார்க்கேமார்க்கேபுஷ்பிதநிவன ஹ்ருச்யமாரபயக்காரபாடிம்யக்தாரபுராபிபுரிஸ்ரீமதீரங்கதாமந: ([illegible]) என்கிறபடியே தன்னைப் பார்க்கிறவர்களுடைய மநஸ்ஸை அபஹரித்துத் தன்வசமாக்கி, பார்த்தபோது "திரும்பவும்காண்கிறதெப்போதோ" என்று ஆகாங்க்ஷிக்கும்படி யிருப்பதாய், கவருகை-க்ரஹிக்கை. (கடிபொழில்தென்னரங்கன்) பரிமள ப்ரசுரங்களான சோலைகளாலே சூழப்பட்டும், விமாந மண்டப கோபுர ப்ராகார உத்யாநங்களாலே நிபிடமாயும், திவ்ய பதாகங்களாலே அலங்க்ருதமாயு மிருக்கையாலே தர்சநீயமாயிருக்கிற கோயிலிலே நித்யவாஸம்பண்ணி அதுவே நிருபகமாம்படி யிருக்கிற திருவரங்கச் செல்வனுடைய, கடி-பரிமளம்.

http://acharya.org

"கண்டவர் சிந்தைகவரும் கடி" என்று - பரிமளத்துக்கு விசேஷணமாகச் சொல்லவுமாம். அன்றிக்கே, (கண்டவர் சிந்தை கவரும் - தென்னரங்கன்) என்று - பெரியபெருமாளுக்கு விசேஷணமாகச் சொல்லவுமாம். (ஸ்ருதா:) (ஸர்வகந்த:) என்று சொல்லப்படுகிற வைலக்ஷண்ய ஸ்பர்சமாத்ரத்தாலே காணும் அவ்விடத்தே யிருக்கிற திருச்சோலைகளுக்கு (கடிபொழில்) என்று திருமிகும்படி பரிமளமுண்டாயது. (தொண்டர்குலாவும்) (கண்டேன் திருவரங்கமேயான்திசை) என்றும், (இனியறிந்தேன் தென்னரங்கத்தெந்தை) என்றும், (தேனார்திருவரங்கம்) என்றும், (பண்டரங்கமேயதுவும்) என்றும், (நீடகொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய்) என்றும், (அரங்கத்தரவணையில் பள்ளிகொள்ளும் கடல்வண்ணரு கருமேனியம்மான் றன்னைக் கண்ணாரக்கண்டு) என்றும், (அணியரங்கத்தே கிடந்தாய்) என்றும், (அரங்கத்தம்மா) என்றும், (அண்டர்கோனணியரங்க னென்னமுதினைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே) என்றும், (மின்னணிமிழையணிடக்கே வணிபொழில்-திருவரங்கத்தம்மானே) என்றும் - அவருடைய போக்யதையிலே யீடுபட்டிருக்கிற பொய்கையார் தொடக்கமான ஆழ்வார்கள் பத்துப்பேரையும், (அன்றெரித்த திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தேயிருத்தும்) இத்யாதிகளில் சொல்லுகிறபடியே கொண்டாடி நிற்கிற. அவர்கள் பக்கலிலே எப்போதும் ப்ரதிபத்தி பண்ணிக் கொண்டு போருகிறவென்றபடி. குலாவுதல் - கொண்டாட்டம்.

(இராமாநுசனை) எம்பெருமானாரை. (மேவித்தொழுங்குடி.) அவருடைய ஸ்வபாவங்களிலே அத்யபிநிவிஷ்டசித்தராய் விஷயாந்தரவிமுகராய் ஆச்ரயித்திருக்குமவர்களுடைய திருவம்சத்தாரடங்கலும். (ஆமெங்கள் கோக்குடியே) தத்ஸம்பந்திகளே உத்தேச்யரென்றிருக்கும் எங்களை அடிமைகொள்ள வல்லவருடைய திருவம்சத்தாராவர். நமக்கு ஒருவருக்குமேயன்று, நம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் இக்குடியொன்றுமே வகுத்த சேஷியென்றவாறும் இவருடைய ப்ரதிபத்தி யிருக்கும்படி. அன்றிக்கே, எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயித்தவர்கள் எந்தக் குலத்திலே அவதரித்தாலும் "தக்குலமே எங்களை யெழுதிக்கொள்ளவல்லவராமியாமென்று 'யோஜிக்கவுமாம். ([illegible]) (த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌ ய: தத்தாஸதைகரஸதாவிரதாமமாஸ்து) என்று இவ்வர்த்தத்தையே பட்டரும் ப்ரார்த்தித்தருளினது. ([illegible]) என்று அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே. (குலந்தாங்குசாதிகள்

http://acharya.org

நாலிலுங்கீழிழிந்தெத்தனை, நலந்தானிலாத சண்டாளசண்டாளர்க ளாகிலும், வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளெ ன்றுள், கலந்தார் அடியார் தம்மடியாரெம்மடிகளே) என்றாப் போலே அருளிச்செய்தாராய்த்து. ... ...(ருரு)

உரை.—அ.— ஐம்பத்தாறும்பாட்டு. “கொண்டலைமேவித் தொழுங்குடியாமெங்கள் கோக்குலம்” என்று இவர் சொன்ன வாறே, முன்பும் ஒரோவிஷயங்களில்நின்றால் இப்படியன்றோ நீர் சொல்லுவது, இதுவும் அப்படியன்றோவென்ன; எம்பெருமானா ரை ஆச்ரயித்தபின்பு என்வாங்மநஸ்ஸுக்கள் இனி வேறொரு விஷயமறியாதென்கிறார்.

மூ.—கோக்குலமன்னரைமூவெழுகாலொருகூர்மழுவால்
போக்கியதேவனைப்போற்றும்புனிதன்புவனமெங்கும் .
ஆக்கியகீர்த்திஇராமாநுசனையடைந்தபின்என்
வாக்குரையாதென்மனம்நினையாதினிமற்றொன்றையே. ()

பதம்.	உரை.
கோக்குல மன்னரை	ஐச்வர்யத்தாலே ராஜகுலத்தை ப்ராபிக்கையன்றிக்கே க்ஷத்ரியகுலோத்பவரான ராஜாக்களை,
மூவெழு கால்	“இருபத்தொரு காலரசுகளை கட்ட” என்கிறபடியே இருபத்தொருகால்,
ஒரு	அத்விதீயமாய்,
கூர்	கூரியதாயிருக்கிற,
மழுவால் போக்கிய	மழுவாலே நிரஸித்த,
தேவனை	விரோதிநிரஸநப்ரயுக்தமான ஐச்வர்யத்தையுடைய ஸர்வேச்வரனை,
போற்றும்	அத்குணஜிதராய்க்கொண்டு ஏத்தாநிற்பாராய்,
புனிதன்	ஸ்வஸம்பந்தத்தாலே அசுத்தரையும் சுத்தராக்கவல்ல பரமபாவநபூதராய்,
	“இப்பார் முழுதும் போர்த்ததோர் புகழ்கொண்டு” என்கிறபடியே,
புவனமெங்கும்	லோகமெங்கும்,
ஆக்கிய	வ்யாபிக்கும்படிபண்ணின,
கீர்த்தி	கீர்த்தியையுடைய,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
அடைந்தபின்	ஆச்ரயித்தபின்பு,
இனி	மேலுள்ளகாலமெல்லாம்,
மற்றொன்றை	வேறொரு விஷயத்தை,
என்வ	என்னுடையவாக்கானது,
உரையாது	சொல்லாது;
என்மனம்	என்னுடைய மனஸ்ஸானது,
நினையாது	ஸ்மரியாது.

http://acharya.org

பதம். உரை.

போற்றுதல்-புகழுதல். புனிதன்-சுத்தன். கரணங்களுக்கு இவ்விஷயத்தில் அநந்யார்ஹதாஸம்படியிலேத ப்ராவண்யத்தைக் கண்டப்ரீதியிறு சயத்தாலே,''என்வாக்கு,என்மனம்'' என்றுதனித்தனியே அனுஸந்தித்தருளிச்செய்கிறார். ''அடைக்கத்தற்பின் வாக்குரையாது, என்மனம்நினையாது'' என்றும் பாடம் சொல்லுவர்கள். பரசுராமாவதாரம் அநவரத புத்தி வலே அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யமன்றோ, ''போக்கிய தேவனைப்

பதம். உரை.

போற்றும் புனிதன்'' என்பரென்னெனில்; அதுக்குக் குறையில்லை; விரோதி நிரஸனம் பண்ணின உபகாரத்துக்குத் தோற்று ஸ்துதிக்கிற மாத்ரமொழிய தத் உபாஸனை அல்லாமையாலே, ''மன்னுடங்கமழுவலங்கைக் கொண்ட இராம நம்பி'' என்றும், ''வென்றிமாமழுவேந்தி முன் மண்மிசை மன்னரை மூவெழுகால்கொன்றதேவா'' என்றும், ஆழ்வார்களருளிச்செய்ததும் விரோதிநிரஸனவ்யாபாரத்துக்குத் தோற்றுத் துதித்ததித்தனையிறே. ... (௫௰)

அவ.—அ.—ஐம்பத்தொன்றாம்பாட்டு. "கொண்டலைமேவித் தொழுங்குடியாமெங்கள் கோக்குடி" என்றுசொன்னவாறே, நீர் இப்போது எம்பெருமானுடைய கல்யாணகுணங்களை யநுபவித்துவித்தராய்ச்சொன்னீர், நீர்விஷயாந்தரங்களைவிரும்பினபோது முற்காலத்தில் அப்படியேயன்றோ சொல்லுவது, ஆகையாலே உமக்கு இது ஸ்வபாவமாய்விட்டபின்பு இவரையே பற்றியிருக்கிறேனென்று நீர் நிலைநிற்கக்கடவதோவென்று சிலர் ஆக்ஷேபிக்க; அவர்களைக்குறித்து நான் துர்வாஸனையாலே விஷயாந்தரங்களை விரும்புவதாக யத்நித்தேனாகிலும் என்னுடைய வாக்கும் மனஸ்ஸும் அவற்றைவிரும்ப இசையாதேயிருக்கிறதென்கிறார்.

வ்யா:—(போக்குமன்னரை) த்ரேதாயுகத்திலே கார்த்தவீர்யார்ஜுநனென்பானொருராஜா மஹாபலபராக்ரமசாலியாய் ஒருவரும் எதிரின்றிக்கே இப்படியிருக்கிற காலத்திலே ஒருநாள் ஜமதக்நி மஹரிஷியினுடைய ஆச்ரமத்திலேசென்று ப்ராணங்காத் சாத்ய கர்வத்தாலே அவனை ஹிம்ஸித்துப்போக; அந்தரிஷிபுத்ரனான ஸ்ரீபரசுராமாழ்வான் அச்செய்தியைக் கேட்டு மிகவும் குபிதனாய் தத்க்ஷணத்திலே தானே அந்தராஜனைக் கொன்றும் நிர்வ்ருத ஜக்யமான கோபம் சமியாமையாலே "ராஜகுலத்தையெல்லாம் நிக்ஷத்ரமாகப் பண்ணக்கடவோம்" என்று ஸங்கல்பித்து பூமியிலுள்ள ராஜாக்களையெல்லாம் ஸம்ஹரித்து பிதுர்தர்ப்பணம் பண்ணிக்கொண்டுபோக்க பின்னையும் க்ஷத்ரியகுலம் உத்பந்நமாய்க் கொழுந்துவிட்டுப் படர்ந்தவாறே அத்தைக்கண்டு திரியட்டும் முன்புபோலே நிக்ஷத்ரமாகப் பண்ணி, இப்படி

http://acharya.org

இருபத்தொருதரம் முறை க்ஷத்ரியராஜாக்களையெல்லாம் ஸம்ஹரித்து அவர்களுடைய ரக்தத்தாலே தர்ப்பணம் பண்ணினு ரென்று ப்ரஸித்தமிறே. அப்படி சேஷாவிஷ்டனும் நின்றபோது வே றொரு குலத்திலே பிறந்தார் ராஜ்யம் பண்ணிக்கொண் டிருந்தா லும் அவர்கள்வழிபோகாதே க்ஷத்ரிய குலமாத்ரத்தையே ஸம்ஹ ரித்தபடியை யருளிச்செய்கிறார்.

(கோக்குலமன்னரை) வேறொருகுலத்தில் பிறந்து ஐச்வர்யத் தாலே ராஜகுலத்தை ப்ரயிக்கையன்றிக்கே ஸாக்ஷாத்க்ஷத்ரிய குலோத்பவரான ராஜாக்களை. (மூவெழுகால்) மூவெழுதரம். "இரு பத்தொருகாலரசுகளைகட்ட" என்கிறபடியே - இருபத்தொருதரம் முறையென்றபடி. (ஒருகூர்மழுவால்) ஆவேசாவதாரமான ஸ்ரீ பரசுராமாழ்வானுக்கு நிருபமமா யிருக்கையாலே அத்விதீயமாய் இருபத்தொரு பர்யாயம் க்ஷத்ரியரை ஸம்ஹரிக்கத் தக்கதான கூர்மையையுடையதாகையாலே. (போக்கியதேவனை) விரோதிநிரஸ நப்ரயுக்தமான ஔஜ்ஜ்வல்யத்தையுடைய ஸர்வேச்வரனை யென்ற படி. இப்படிப்பட்ட தொழில்களெல்லாம் அந்த அவதாரத்தில் பண்ணின க்ரீடையாகையாலே ஏவம்ப்ரகாரமான க்ரீடாயுக்தனை யென்றுதல். (போற்றும்) ஆச்ரயித்திருக்கிற; மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டிருக்கிற. போற்றுதல்-புகழ்தல். ([illegible]) (விரஸபாயஸதுஷ்க்ரதம்) என்கிறபடியே ஆச்ரிதவிரோதி நிரஸநசீலமாகிறகுணத்திலே தோற்று ஏத்தாநின்றார்களாலும், மஹாபாரத பாஞ்சராத்ராதிகளாலும், நம்முடையபூர்வாசார் யர்களாலும், ப்ரஹ்மருத்ராதிஜங்கம்யாவேசாவதாரங் கள் அநுபாஸ்யமென்று பஹுமுகமாகச் சொல்லியிருக்க, எம் பெருமானார் பரசுராமாழ்வானை ஏத்துகிறவிது சேருமோவென் னில்; அந்த அவதாரம் எம்பெருமானுடைய அநுக்ஞாயுக்த ஜீவாவேச மாகையாலே அவனாலே செய்யும் அரசத்துக்கு எம் பெருமானார் ஈடுபட்டு ஸ்துதித்தாரென்று சொன்னோ மித்தனை யொழிய உபாஸநம் பண்ணுகிறாரென்று சொல்லாமையா லே விரோதமில்லை. (மன்னடங்கமழுவலங்கைக் கொண்டவிராமநம்பீ) என்றும், (வென்றிமாமழுவேந்தி முன்மண் மிசை மன்னரை மூவெழுகால் கொன்றதேவா) என்றும், மயர் வறமதிநலமருளப்பெற்றவர் அருளிச்செய்ததும் விரோதிநிரஸ நவ்யாபாரத்துக்குத் தோற்று. (புனிதன்) பகவத்மங்களாசாஸ நத்தாலே பரிசுத்தஸ்வபாவராய், தம்மை ஆச்ரயித்தவர்களையும், ([illegible]) (ஆத்மஸாம்யாவஹத்வாத்) என்று சொல் லப்பட்ட ஸ்வஸாம்யத்தை யுடையராம்படி பண்ணவல்லபாவந மர். புனிதன்-சுத்தன். (புவநமெச்சுமாக்கியிரித்தி) "இப்பார்

http://acharya.org

முழுதும் போர்த்தான் புகழ்கொண்டு" என்கிறபடியே - இந்த லோகமெங்கும் வ்யாபிக்கும்படி பண்ணின கீர்த்தியையுடையவரான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (அடைந்தபின்) ஆச்ரயித்த பின்பு. இங்கே, "அடைந்ததற்பின்" என்றும் பாடம்சொல்லுவர்கள். ஆகிலும் அர்த்தபேதமில்லை. (இனி மற்றொன்றை) மேலுள்ள காலமெல்லாம் வேறொரு விஷயத்தை. (என்வாக்குரையாது, என் மநம் நினையாது) முற்காலமெல்லாம் அநந்யபரஷணத்தையும் அநந்யகீர்த்தநத்தையும் பண்ணிக்கொண்டு போந்தவென்னுடைய வாக்கானது எம்பெருமானாரை ஆச்ரயித்தபின்பு அவருடைய திவ்ய குணங்களையே கீர்த்த்யாநிற்கு மித்தனையொழிய வேறொன்றைக் கீர்த்திக்கமாட்டாது. முற்காலமெல்லாம் பாபசிந்தனையைத் தானே பண்ணிக்கொண்டு போந்த என்மநஸ்ஸானது அவரை ஆச்ரயித்த பின்பு அவருடைய திவ்ய குணங்களிலே ஈடுபட்டு ஸர்வதா அவைதன்னை மநநம் பண்ணிக்கொண்டிருக்கு மித்தனையொழிய வேறொன்றை ஸ்மரிக்கமாட்டாதென்று அருளிச்செய்தாராய்த்து. ([illegible]) (த்ரவிக்ர்தவிசித்ரஸாதி விகல்ரூப விபூதய:-ராமாநுஜ பதாம்போஜஸமாஸ்ரயண ஸாலிந:) என்னக்கடவதிறே. (ருஎ)

உரை.—அ.— ஐம்பத்தேழாம்பாட்டு. "இனியென்வாக்குரையாது, என்மநம் நினையாது" என்பானென், விபூதி இதுவாகையாலே அஜ்ஞாநம் வளருமேயென்ன; எம்பெருமானாரை இந்த லோகத்திலே லபித்தபின்பு, விவேகமின்றியே கண்டதொன்றை விரும்பக்கடவ பேதைத்தனம் ஒன்றுமறியேனென்கிறார்.

ருஅ.—மற்றொருபேறுமதியாதரங்கன்மலரடிக்கே
ஆளுற்றவரே தனக்குற்றவராக்கொள்ளுமுத்தமனை
நற்றவர்போற்றுமிராமாநுசனையிந்நாநிலத்தே
பெற்றனன்பெற்றபின்மற்றறியேனொருபேதைமையே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மற்றொரு பேறு	வேறொரு ப்ரயோஜநங்களை,	தனக்குற்றவராக	தமக்கு பந்துபூதராக,
மதியாது	ஒன்றாக நினையாதே,	கொள்ளும்	அங்கீகரிக்கும்,
அரங்கன்	பெரிய பெருமாளுடைய,	உத்தமனை	உத்தமாதிகாரிகளாய், ஸம்பந்தத்வ அபிமானப்ரதத்துக்கு ஸ்வரூபாநுரூபத்வாதிகளாலே ஸர்வதா பல்லக்கலிலும் வைத்துக் கொண்டு,
மலர்	ஸௌகுமார்யபோக்யமான,		
அடிக்கு	திருவடிகளுக்கு,		
ஆளுற்றவரே	அடிமையே புருஷார்த்தமென்று அதிலே ஊன்றியிருக்குமவர்களையே,		

http://acharya.org

பதம்.	உரை.
நற்றவர்	விலக்ஷண தபஸ்ஸான ப்ரபத்தி தர்மத்திலே நிஷ்டரானவர்கள்,
போற்றும்	தம்முடைய வைபவத்தையே சொல்லிப் புகழும்படியான,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
இந்நானிலத்தே	இந்தலோகத்திலே,
பெற்றனன்	லபித்தேன்;
பெற்றபின்	லபித்ததற்குப்பின்பு,
மற்று	இத்தையொழிய,
ஒருபேதைமை அறியேன்	ப்ராப்தாப்ராப்த விவேகம் பண்ணாதே கண்டதொன்றிலே மேல் விழுகைக்கு அடியான அஜ்ஞாநம் கண்டிலேன்.

ஆதலால் மேலும் உண்டாகக் கூடாதென்று கருத்து.... (இ)

வ்யா.—அ.—ஐம்பத்தேழாம்பாட்டு. "இனியென்வாக்குரையாது, என்மனம் நினையாதுமற்றொன்றையே" என்றீர், உ இருள் தருமாஞாலத்திலே இக்கலியிலே இந்நியமம் நிலைநிற்குமோ, "சஞ்சலம்ஹி மந:" (சஞ்சலமன்றோமனஸ்) என்று - மனஸ்ஸு ஒருவிஷயத்தில் தானே ஸர்வகாலமும் நிற்கமாட்டாதிறே; ஆகையாலே மற்றொரு காலத்திலே மனஸ்ஸு வ்யபிசரித்து அஜ்ஞாநத்தை விளைத்ததோ வென்று ஆசங்கித்தவர்களைக்குறித்து, நீங்கள் சொன்னதே ஸத்யம், ஆகிலும் நான் முன்பு இருந்தபோதை நான்போலே யன்று இக்காலம், இப்போது தந்தாமுடைய பாரமைகாந்த்யத்தாலே ஸ்ரீரங்கநாதனுடைய பரம போக்யமான திருவடிகளுக்கு அடிமைப்படுகையே பரமபுருஷார்த்தமென்று அத்யவஸித்திருக்குமவர்களையே தமக்கு பந்துபூதராக அங்கீகரித்துக்கொண்டு, ப்ரபந்நகுலோத்தேச்யராய் ஸர்வதபஸ்ஸுக்களிலும் வைத்துக்கொண்டு விலக்ஷணதபஸ்ஸான சரணாகதி தர்மத்திலே நிஷ்டரானவர்கள் தம்முடைய வைபவத்தைச்சொல்லிப் புகழும்படியான எம்பெருமானாரை இந்தலோகத்திலே லபித்தேன், ஆனபின்பு, ப்ராப்தாப்ராப்த விவேகமின்றிக்கே கண்டதொன்றை விரும்பக் கடவதான அஜ்ஞாநமானது என்னிடத்திலே சேரக்கண்டிலேனென்கிறார்.

வ்யா.—(மற்றொருபேறுமதியாது) "[illegible]" (ஸமஸ்தங்களிலேயோருடைய ப்ரபத்திக்கே [illegible]:- [illegible] ஆனவீம் [illegible]-

http://acharya.org

கவென்னுகைத்தபடி விஷ்ணுவை ஸர்வஸ்ரேஷ்டனாகவும்பரமம், ஸர்வசேஷி யத்தினைத்தேவ பரஞன்றோப தாநதாஜநா: - காம்மல்லதைன்னைத் தார்தஜ்ஞரான: ப்ரபத்யகதேவதேவதா:) என்று ப்ரதிபாதித்த படியே யத்துக்களுடைய உபதேசாதிகளாலே தெளிந்துகொண்டு, [illegible] “[illegible]” “அவைவரம் கித்தயக்கேரமாம்” “வைஷ்ணவாநாம் த்ரிகரணைகாச்ருகத்தக - மவிதாநவதேவதா கேஷப்ரத்ஸ்வவிதாரிணீ” என்றிதைபடியே ததேதேதைகிழ்ட்டாராய், “[illegible]” “ஸாக்ஷாத்பலைகலக்ஷ்யத்வப்ரதிபத்தெள கேவலா: பக்த்யுபாயமையு க்ஷணப்ரபத்தியை க்ஷணமாகக்ரது” என்னும்படி தேவதாந்தர மந்த்ராந்தர ப்ரயோஜநாந்தரங்களைஸ்மரியாத பாரமைகாந்த்யத் தாலே. மதிக்கை-விரும்புகை.

கொம்படையிலே குத்தியும் ப்ரதிவாதிகளை நிரஸநம் பண்ணுகைக்கு வந்தபடியை யருளிச்செய்கிறார். "சங்கொடுசக்கர மேந்துந் தடக்கையன்" என்கிறபடியே ஸர்வேச்வரன் எப்போதும் திருவாழியையும் திருச்சங்கையும் ஏந்திக்கொண் டிருக்கிறாப்போலே இவரும் வேதரூபமான பெருந்தண்டை ஏந்திக்கொண்டிருக்கிறார்களும், (குவலயத்தே மண்டிவந்தேன்றது) நீங்கள் தன்னரசநாடாக எண்ணி நடத்துகிற ஆஸேதுஹிமாசலமாக வேங்கடாசல யாதவாசல சாரதாபீடாதி திவ்யஸ்தலங்களிலே எதிர்கொண்டு ப்ரத்யவஸ்த்தானம் பண்ணின வாதிகளைக்கட்டடங்க நிரஸித்துக் கொண்டுவந்து உங்கள்மேலே எதிர்த்தது. மண்டுதல்— நெருங்குதல். ஏன்றுதல்-எதிர்த்தல். (வாதியர்காள்) பாஹ்யகுத்ருஷ்டிகளை ஸமிஷ்டாவாய்க்கொண்டு வாதியர்களாயுள்ளீர். (உங்கள்வாழ்வற்றதே) சிஷ்யர்களும் ப்ரசிஷ்யர்களுமாய்ப் பணைத்திருந்த உங்களுடைய ஸம்பத்து முடிந்ததே. சிஷ்யப்ரசிஷ்ய பர்யந்தமாய்க் கொண்டு வர்த்திக்கவேணுமென்று நீங்கள் நினைத்திருந்த உங்களுடைய துர்மதங்க ளடங்கலும் நிகழ்டமாய்ப்போயின வென்றபடி. "சங்கரபாஸ்கரயாதவபாட்ட ப்ரபாகரர்தங்கள் மதம், சாய்வுற வாதியர்மாய்குவரென்னச் சதுமறை வாழ்ந்திடுமே" என்று இவ்வர்த்தத்தை ஜீயருமருளிச்செய்தருளினாரிறே. "[illegible]" "கணுதபரிபாடிபி:" என்கிற ச்லோகமும், "[illegible]", "காதாதாதகதாகாசம்" என்கிறச்லோகமும் இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணமாக அநுஸந்தேயம். ... ... (௬௪)

உரை.—அ.—அறுபத்தஞ்சாம்பாட்டு. இப்படி வேழ்க்கருளின எம்பெருமானார், பாஹ்யகுத்ருஷ்டி நிரஸநார்த்தமாக உபதேசித்தருளின ஜ்ஞானத்தால் பலிதங்களை யநுஸந்தித்து ப்ரீதராகிறார்.

௬௫.—வாழ்வற்றதுதொல்லைவாதியர்க்கென்றும்மறையவர்தம்
தாழ்வற்றதுதவந்தாரணிபெற்றதுதத்துவநூல்
கூழற்றதுகுற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்கந்
நாழற்றதுநம்மிராமாநுசன்தந்தஞானத்திலே. (௬௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நம்	நம்முடைய நாதரான,		பகிருள்ளவன்றோ மேவுமுண்டாமாப்போலே, [இது,]
இராமாநுசன்	எம்பெருமானார்,	தொல்லை	பழையதாய்ப் போரு
தந்த	உபகரித்தருளின,	வாதியர்க்கு	வாதங்களை யுடைய பாஹ்யகுத்ருஷ்டிகளுக்கு,
ஞானத்திலே	ஜ்ஞானத்தாலே,		

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாழ்வற்றது	வாழ்வுபோயிற்று; கலிபோனவாறேபயிர் தலைபெறுமாப்போலே அவை போகையாலே,	தாரணி	பூமி,
என்றும்	ஸர்வ காலத்திலும்,	தவம்பெற்றது	பாக்யத்தை யுடைத்தாயிற்று;
மறையவர் தம்	வைதிகரானவர் தங்களுடைய,	தத்துவநூல்	தத்வபரமான சாஸ்த்ரங்களில்,
தாழ்வற்றது	குறைவுபோயிற்று; "ஏத்தவல்லார் திசிதலால்தலமுடைத் தித்தாணிதானே" என்கிறபடியே பாஹ்யக் கிரஸ்தராய் வைதிகர் தலைபெற்று பரிகலித ஸஞ்சாரம் பிறக்கையாலே,	கூழ்மெல்லாம் அற்றது	ஸம்ஶயங்களெல்லாம் தீர்ந்தது;
		குற்றமெல்லாம் பதித்த	ஸர்வதோஷ லக்கமான,
		குணத்தினர்க்கு	ஸ்வபாவத்தையுடையவர்களுக்கு,
		அக்காழற்றது	அக்குற்றம் தீர்ந்தது. இதொருக்குஞானவைய மிருக்கும்படியே செய்யாகுத்து.

ஞானத்திலேயென்றது-த்ரிதியார்த்தே ஸப்தமி. தாழ்வு-குறைவு. தவம்-பாக்யம். கூழ்ப்பு-ஸம்ஶயம். காழ்-குற்றம். (கூ௩)

வ்யா.—அ.—அறுபத்தஞ்சாம்பாட்டு. இப்பாட்டிலே - எம்பெருமானார் இவ்வுபதேசார்த்தை வெழுந்தருளினவாறே ப்ரதிவாதிகளுடைய வாழ்வு வேருடனே தகித்துப்போனபடியைச் சொல்லி, இதிலே - அவருடைய ஸ்ரீஸூக்திஞானத்தாலே பாஹ்ய குத்ருஷ்டிகளுக்குண்டான விநாஶத்தையும் லோகத்தார்க்கெல்லாமுண்டான ஸம்ருத்தியையும் பலபடியாக வருளிச் செய்துகொண்டு ப்ரீதராகிறார்.

வ்யா.—(நம்மிராமானுசன்தந்த ஞானத்திலே) எங்களுக்கு வகுத்த சேஷியான எம்பெருமானார், தம்முடைய க்ருபாபாத்ரத்தாக்கிக்கொண்டு நிர்ஹேதுகமாக உபகரித்தருளின ஞானத்தாலே, "த்ருதியார்த்தே ஸப்தமி" என்கிற ப்ரக்ரியையாலே ஞானத்திலே யென்று நிர்த்தேசிக்கிறார். இனி அத்தாலே பலித்ததை யருளிச் செய்கிறார் (வாழ்வற்றதென்று தொடங்கி) (வாதியர்க்கு) ப்ரதிவாதிகளான சங்கர பாஸ்கர யாதவ பாட்ட ப்ராபாகர பௌத்த சார்வாகாதிகளுக்கு. (தொல்லை வாழ்வற்றது) இவருடைய அவதாரத்துக்குமுன் காலத்திலே ப்ரதிவாதிகளுக்கு வாழ்வு, வேதத்தை அங்கீகரித்

http://acharya.org

திருக்கைச்செய்தே அறிவின்றத்தன்மையறியாதே குத்ருஷ்டி கல்பகங்களாகச் சிலகற்பனைகளைப் பண்ணி லோகத்தையெல்லாம் மூலையடியேநடத்திக்கொண்டுபோருகையும், வேதத்திலே சிலதோஷங்களை ஆரோபித்து அது அப்ரமாணமென்று சொல்லுகையும், அப்படிப்பட்ட வாழ்வு இவரவதரித்து உபகரித்த ஜ்ஞாநத்தாலே அடியற்றுப்போச்சுது. "என்றும்" என்கிறபதம் காகாக்ஷிந்யாயேந பூர்வோத்தர பதங்களுக்கு விசேஷணமாயிருக்கிறது.

(என்றும்-தொல்லைவாழ்வற்றது) அற்றது அற்றது என்றது—"உப [illegible] "ஆமூல ஸ்மாலவித்தமார்த்திதே' விஸ்மாஸ்ய பக்ஷிபரேணபத்-காமவிஸ்மரணமறிவிலியா" என்னுமாப்போலே. இத்தால்-விரோதிகளானவற்றைப்போக்கடித்த * ஆற்றலைச் சொன்னபடி. சதுர்வேதிகளாயப்ராமாணிகருக்கு, இவருடைய அவதாரத்துக்கு முற்காலமெல்லாம் பாஹ்யகுத்ருஷ்டிகள் லோகமெங்கும் வ்யாபித்திருக்கையாலே வைதிகமார்க்கமெல்லாம் தலைசாய்த்திருக்கையாகிற தாழ்வு என்று மற்றது. "தொல்லை" என்று இங்கும் அநுஷங்கிக்கக் கடவது. (தொல்லையான தாழ்வு) அநாதிகாலமே தொடங்கி இடைவிடாதே வந்த தாழ்வு. "தொல்லை" என்றது; வாதியர்க்கு விசேஷணமாய்-பழையதாய்ப் போருகிற வாதங்களையுடைய பாஹ்யகுத்ருஷ்டிகளென்னுமாம். தாழ்வு-குறைவு.

(தாழ்வு என்று மற்றது) இனி மேலுள்ள காலத்தில் ஒருகாலும் மறுவவிடாதே வாவலைபோட்டபோயிற்றென்றபடி. லோகத்திலே பயிரையுடையவன் க்ருஷிபண்ணினால் அந்தப் பயிரிலே சட்டடங்கக்களைவ்யாபித்து அத்தைத் தலையெடுக்கவொட்டாதேயிருந்ததாகில் அந்தக்களைகளை வேரைப்பிடுங்கிப்போகட்டு அந்தப் பயிரை அபிவ்ருத்தமாம்படி பண்ணுமாப்போலே, ஈச்வரனுடைய க்ருஷிக்கு விஷயபூதரான அநுகூலரானவரும் பாஹ்யகுத்ருஷ்டிகளாலே தலை சாய்ந்துபோனபின்பு அவர்களை நிரஸித்து அந்த சேதநரையெல்லாம் அபிவ்ருத்தமாம்படி பண்ணினாரென்னும்.

(தவம்தரணிபெற்றது) பூமியானது பாக்யத்தைப்பெற்றது. தவம்-பாக்யம். "[illegible]" "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்" என்ற அவதாரமேபிறே "[illegible]" "தர்மஸம்ஸ்தாபநார்த்தாய" என்றது. ப்ரதிவாதிகள் பாஹுள்யத்தைக்கொண்டு பூமியிலே காணப்படாதபின்பு பாகவதர்கள் தங்களுடைய குறையெல்லாம் தீர்ந்து ப்ரகாசித்தார்களாகையாலே பூமியிலே தர்மமானது எங்குமொக்க வ்யாபித்தது. "[illegible] । [illegible]

http://acharya.org

* "ஆண்மையை" என்றும்பாடம்.

[Grantha text]'' ''புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்தக்ஷயாயச, ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர:'' என்னக் கடவதிறே.

(தத்துவநூல் கூழ்த்தது) பரவஸ்து தத்வயாதாத்ம்ய ப்ரதிபாதகமாயிருக்கிற ஸாஸ்த்ரரூபமான வேதமானது குத்ருஷ்டிகளாலே கலக்கப்பட்டு இவ்வளவும் பதறாசாரமாய் வ்யவஸிதத்துப்போய், இப்போது இவர் ஸ்ரீபாஷ்யத்தை யருளிச்செய்கையாலே, ''[Grantha text]'' ''யஸ்ஸ்ருதிஸ்ம்ருதி ஸூத்ராணாமந்தர்ஜ்வரமஸீஸமத்'' என்கிறபடியே லோகத்திலெல்லார்க்கும் ஜ்ஞாநப்ரதாநத்தையும் வேதங்களுக்கு யதாவத்தத்தையும் பண்ணுகையாலே காலுஷ்யம்போய் நிஸ்ஸம்ஸயமாக தத்வார்த்தங்களை ப்ரகாஸிப்பிக்குமதாய்த்து. கூழ்ப்பு-ஸம்ஸயம். இவருடைய உபதேசத்தாலே ப்ரமாதாக்களுக்கு தத்வபரமான ஸாஸ்த்ரங்களிலே ஸம்ஸயங்களெல்லாம்போய்த்தின வென்றுமாம். தத்துவம்-தத்வம். நூல்-ஸாஸ்த்ரம்.

(குற்றமெல்லாம்பதித்த குணத்தினர்க்கக்கூழ்த்தது) ''[Grantha text]'' ''பரவச்சயச்சதுரிதம் ஸகலஞ்சஜந்தோ ஸ்தாவச்சதத்ததிஹஞ்சமமாஸ்திதஸ்ய'' என்கிறபடியே-ஸமஸ்த துரிதங்களும் வ்யாபித்திருக்கிற குணக்கேடுடையவர்களுக்கு இவருடைய ஜ்ஞாநப்ரதாந வைபவத்தாலே அவர்களுடைய பாபமெல்லாம் தணிந்தது. ''[Grantha text]'' ''க்ஷிப்ரம்பவதி தர்மாத்மா ஸஸ்வச்சாந்திம் நிகச்சதி'' என்கிறபடியே குணத்திலுண்டான தோஷங்களெல்லாம் நிவர்த்தங்களாய் ஜ்ஞாநநிஷ்டர்களானார்களென்றபடி. கூழ் - குற்றம். இதொரு வைபவமிருக்கும்படியென்! என்று வித்தராகிறார். ... (௬௫)

உரை.—அ.—அறுபத்தாறும்பாட்டு. ''நம்பிராமாநுசன் தந்த ஞானத்திலே'' என்று எம்பெருமானார் உபதேசித்தருளின ஜ்ஞாந வைபவத்தை யருளிச்செய்தார்-கீழ்; இதில்-அவருடைய மோக்ஷப்ரதாந வைபவத்தை யருளிச்செய்கிறார்.

மூ.—ஞானங்கனித்தநலங்கொண்டுநாடொறுநைபவர்க்கு
வானங்கொடுப்பதுமாதவன்வல்வினையேன்மனத்தில்
ஈனங்கடிந்தவிராமாநுசன்றன்னையெய்தினர்க்குத்
தானங்கொடுப்பதுதன்றகவென்னுஞ்சரண்கொடுத்தே. ( )

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாதவன்	ச்ரியப்பதியான ஸர்வேச்வரன்,	ஞானங்கனித்த	ஜ்ஞாந விபாக ரூபமான,
வானங்கொடுப்பது	மோக்ஷம் கொடுப்பது,	நலங்கொண்டு	ப்ரேமத்தையுடையரான,

http://acharya.org

பதம்.	உரை.
	அத்தப்ரேமாநுரூபமாகத் தன்னை ப்ரகாசிப்பித்து அநுபவிப்பித்து அவ்வநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யம் செய்வது எப்போதோ என்கிற ப்ராப்யத்வரையாலே உருபகலாவிராமூழியாய்க்கொண்டு,
நாடொறும்	நாள்தோறும், [கு;
நைபவர்க்கு	சிதிலராமவர்களுக்
வல்வினையேன்	மஹாபாபியான வென்னுடைய,
மனத்தில்	மநஸ்ஸில்,
ஈனம்கடிந்த	தோஷத்தைப்போக்கியருளின,
இராமாநுசன்றன்னை	எம்பெருமானார்தம்மை,

பதம்.	உரை.
எய்தினர்க்கு	அடைந்தவர்களுக்கு,
அத்தானம் கொடுப்பது	வானம் என்றுசொன்ன அத்தானத்தைக்கொடுத்தருளுவது,
தன்	தம்முடைய,
தகவென்னும்	க்ருபையென்று சொல்லப்படுகிற
சரண்	ஸாதநத்தை.
கொடுத்து	அவர்களுக்குக்கைம்முதலாகக் கொடுத்து. இதொருமோக்ஷ ப்ரதாநமிருக்கும்படியே! என்று கருத்து.

ஞானம்கனிந்த நலம் என்று - ஞானத்தினுடைய பக்வதசையான ப்ரேமமென்றபடி. நலம்-ஸ்நேஹம். (௬௬)

வ்யா.—அ.— அநுபந்தாநுபாட்டு. "நம்பிராமாநுசன் தந்த ஞானத்திலே" என்று எம்பெருமானார் உபகரித்தருளின ஜ்ஞாநவைபவத்தைக் கீழ்ப்பாட்டிலே யருளிச்செய்து, இதிலே, ஈச்வரன் மோக்ஷத்தைக் கொடுக்கும்போது சேதநர்பக்கலிலே சிலவற்றை யபேக்ஷித்தே அதைக்கொடுப்பன்; இவர் அப்படியன்றிக்கே தம்முடைய க்ருபாமாத்ரத்தாலேக் கொண்டுகொள்ளும் சேதநருக்கு மோக்ஷத்தைக்கொடுப்பது என்று இவர் தம்முடைய மோக்ஷப்ரதாநவைபவத்தை யருளிச்செய்கிறார்.

வ்யா.—(மாதவன்) ([illegible]) (எக்ஷம்பானதுதத்ர் ஷீகேஹேரஸ்தேவர கருணவருபயா - ரக்ஷகன்னாராவித்தாக்கேத வேதாக்தோஷணமிபே தே" என்றும், "அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கை யுறைமார்பா" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸர்வேச்வரன் சேதநனைக் கைக்கொள்ளும்போது பெரியபிராட்டியாரோடே கூடவிருந்தே கைக்கொள்ளுவது என்று ஸகலவேதாந்தஸித்தாந்த மாகையாலே அவளுக்கு வல்லபனான ஸர்வேச்வரன். (வானம்

http://acharya.org

கொடுப்பது). "பரமாகாசம்" என்றும், "நலமந்த மில்லதோர் நாடு" என்னும் பெயர்களையுடைத்தான ஸ்ரீவைகுண்டத்தை ஒரு சேதநனுக்குக் கொடுப்பது.

(ஞானங் கனிந்த நலங்கொண்டு) ஸ்வஸ்வாமி பாவம்பற்ற ஜ்ஞானத்தை முதலிலே பெற்று, ததநந்தரம் அவிச்சிந்நஸ்ம்ருதிஸந்தாநரூபமாய், "[illegible]" - ஆப்ரயாணாத் அநுவர்த்தமாநமாக மாநஸப்ரத்யக்ஷமாய்க்கொண்டு பரிபக்வமாய் ப்ரீதிரூபாபந்நமான பக்தியை யுடையராய். நலம்-ஸ்நேஹம். அதாவது-பக்தி. (நாடொறும் ஏழையர்க்கு) "[illegible]" "விளம்பேதப்ராப்திர்ப்பஜநவிஷயேகல்ப விபுலம்" என்னும்படி ஜநநபயம் பெரிதாயிருந்தாலும் விளம்ப முண்டாயிருக்கையாலே வருந்த செவியிலே ப்ராபித்து அநுபவித்த அநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யங்களைச்செய்வதெப்போதோ! என்கிற ப்ராப்யத்வராதிசயத்தாலே ஒரு பகலாயிர மூழியாய், ப்ராப்தியளவும், (கலாவமும் நெஞ்சழியும் கண்சுழலும்) என்கிற படியே நாள்தோறும் நிலைகுலைபவரான அதிகாரிகளுக்கு. ஏழை-சாபல்யம். இது லோக ஸம்ஸ்க்ருத ஸித்தமாயிருக்கை.

(வல்வினையேன் மனத்தி லீனக்கடிந்த விராமாநுசன்) இப்போது அநுபவ ப்ராயச்சித்தங்களாலும் கழியாதே யிருக்கிற ப்ரபலபாபங்களைப்பண்ணின என்னுடைய நெஞ்சிலே குடிகொண்டிருக்கிற கீழ்மையான அந்த பாபவாஸனையை நிவர்த்திப்பித்த எம்பெருமானார். (தன்னை யெய்தினர்க்கு) தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு. "[illegible]" என்னும்படி பின்னே உறங்காவில்லிதாஸர், வடுகநம்பி முதலானவர்களுக்கு. (அத்தானங்கொடுப்பது) ஸகல ஸாத்யமாய் ஸாதந ஸப்தகாங்கமான பக்திரூப ஸாதநத்தாலே ஸாதிக்கத்தக்கதான அந்தஸ்தானத்தைக்கொடுத்தருளுவது.

(தன்தகவென்னும் சரண்கொடுத்தே) தம்முடைய க்ருபை யாகிற ஸாதநத்தைக் கைம்முதலாகக் கொடுத்து. அத்தையும் ஆச்ரயிக்கும் சேதநர் ஸாதநமாக நினைக்கவொண்ணாதென்று தாமே பொதுவாக கல்பித்து பரம புருஷார்த்த லக்ஷணமோக்ஷத்தை வருத்தமறக் கொடுப்பதென்றபடி. (எய்தினர்க்கு) என்று ஸாமாந்யேந அருளிச்செய்கையாலே-ஆச்ரிதருடைய ஜாதிகுணவ்ருத்தாதிகளை அபேக்ஷியாதே ஆநுகூல்யத்தையே பற்றாசாகக்கொண்டு ஸர்வருக்கும் அத்தானத்தைக் கொடுப்பதென்னுமிடம் தோற்றுகிறது. தச்சப்தத்தாலே - ப்ரஹ்மாதிகளுக்குங் கூட எட்டாத

http://acharya.org

ஸலையென்றும் தோற்றுகிறது. இத்தால்-இவருடைய மோக்ஷப்ர தாத்ருத்வத்தை அருளிச்செய்தாராய்த்து "மாமலராள் கோன் மடியின் வைத்துநக்கும் வாழ்வு நமக்கெதிராசனருளும் வாழ்வே!" என்று இத்தை ஜீயரு மநுஸந்தித்தாரிறே. ... ... (௬௬)

உரை.—அ.—அறுபத்தேழாம்பாட்டு. எம்பெருமானாருடைய ஜ்ஞாந ப்ரதத்வ மோக்ஷப்ரதத்வங்களை அருளிச்செய்து நின்றார்-கீழ்; பகவத்ஸமாச்ரயணத்துக் குறுப்பான கரணங்களொன்றும் வ்யபிசரியாதபடி எம்பெருமானார், ஸ்வோபதேசத்தாலே நியமித்து ரக்ஷித்திலராகில் இவ்வாத்மாக்களுக்கு வேறு ரக்ஷகராரென்று ஸ்வகதமாகவநுஸந்தித்து விஸ்மயிக்கிறார்-இதில்.

மூ.—சரணமடைந்த தருமனுக்காப் பண்டு நூற்றுவரை
மரணமடைவித்த மாயவன் தன்னை வணங்க வைத்த
கரணமிவையுமக் கன்றென்று இராமாநுசனுயிர்கட்
கரணங்கமைத்திலனேலரணார்மற் றிவ்வாருயிர்க்கே. (௬௭)

பதம்.	உரை.
சரணமடைந்த	தான்கொடுத்த கரணங்களைக்கொண்டு "சரமேயம்" என்றே திருவடிகளை ஆச்ரயித்த,
தருமனுக்கா	தர்மபுத்ரனுக்காக,
பண்டு	முற்காலத்திலே, "தன்னை வணங்கோம்" என்று அதார்மிகளாய் ஆச்ரிதவைரிகளான,
நூற்றுவரை	துர்யோதநாதிகள் நூற்றுவரையும்,
மரணமடைவித்த	மரணத்தை ப்ராப்பித்த,
மாயவன்	ஆஸ்சர்யசக்தியுக்தனான ஸர்வேச்வரன்,
தன்னை வணங்க வைத்த	தன்னை ஆச்ரயிக்கைக்கு உபகரணங்களாக வைத்த,

பதம்.	உரை.
கரணமிவை	கரணங்களிவை;
உமக்கன்று	உங்களுக்கு சேஷமாயுள்ளதொன்றன்று;
என்று	என்று இப்படி அந்வய வ்யதிரேகங்களிரண்டாலும் கரணங்களினுடைய பகவதர்த்தத்வத்தை ப்ரகாசிப்பித்து,
அங்கு	கரணங்களைக்கொண்டு வ்யபிசரிக்கிற ஸமயத்திலே,
இராமாநுசன்	எம்பெருமானார்,
உயிர்கட்கு	ஆத்மாக்களுக்கு,
அரண்	ரக்ஷையை,
அமைத்திலனேல்	கற்பித்திலராகில்,

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
இவ்வாருயிர்க்கு அரணார்	இவ்வாத்மாவுக்கு, வேறு ரக்ஷகராவார், ஒருவருமில்லையென்பது கருத்து.		அரண்-ரக்ஷை. அமைத்தல்-சமைத்தல். மாயவன் தன்னை வணங்கவைத்த என்பது-வமைந்தபதமாக யோஜிக்கவுமாம். (௬௮)

வ்யா.—அ. — அநுபத்தேறமாம்பாட்டு. கீழ்ச்சொன்னபடியே-எம்பெருமானாருடைய ஜ்ஞாநப்ரதாந வைபவத்தையும் மோக்ஷப்ரதானவைபவத்தையு மருளிச்செய்து,இதிலே-இத்தனையுங்காரப் போருமை ஸம்ஸாரிகளைப் பார்த்து, அதிலே செவிதாராமல் போகமோக்ஷசூக்யஸவிருக்கவுங்களுக்கு, புருஷார்த்தமோக்ஷஸாதனமாகவை யாத்ரிகம் பண்ணுகைக் குடலாக அடியிலே கொடுத்தகாசனுனிகளைக்கொண்டு வ்யபிசாரியாதே ஸர்வேச்வரனை ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்று எம்பெருமானார் உபதேசித்திலராகில் இந்த சேதனருக்கு வேறு ரக்ஷகராரென்று சொல்லாநின்றுகொண்டு, அவ்வழியாலே எம்பெருமானார் தம்முடைய மஹோபகாரத்வத்தைக் கொண்டாடுகிறார்.

வ்யா.—(சரணமடைந்த தருமனுக்கா) ([illegible]) (ஸகலத்தோபலத்தீவிதா) என்னும்படியான பெரியபிராட்டியார் தானே, ([illegible]) (விஹிதங்களையித்தமுமுமுக்ஷுஸ்வாநுஷ்டேயத்தை-தேனை மாத்ரமுபாயமாகப் பற்றிக்கொள்ளச் சொல்லி) என்று கீதோபதேசத்திலே உபதேசிக்கிறதும் இவ்வுபாய ஸாதனத்தைப்போலே, (தர்மம்) (ஸுதேவம்) என்கிறதுக்கையன்றிக்கே, "[illegible]" "[illegible]" "த்ரௌபத்யாச்ரிதான் மைத்ரேயகம்ஸக்ருத்ஜ்ஞார்த்தம்" "க்ருஷ்ணாச்ரயா க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்கிறபடியே சரணாகதரான தர்மபுத்ரன் தொடக்கமான பாண்டவர்களுக்காக.

(பண்டு நூற்றுவரை) அநுபூதனார், நமக்குத்வாபரயுகத்தை காலம் புராதநமானபடியாலே (பண்டு) என்கிறார். இப்படிப்பட்ட பூர்வகாலத்திலே,மஹாபாரதத்திலே"நூற்றுவர்"என்றதொகையிட்டுச்சொல்லப்பட்ட துர்யோதநாதிகள் நூற்றுவரையும். (மரணமடைவித்த) ([illegible]) ([illegible]) (மனையலவேதனிதறுதாபூர்வமேவநிமித்தமாத்ரமபவஸவ்யஸாசின்) (காலோஸ்மி லோகக்ஷயக்ருத்ப்ரவ்ருத்த:) என்கிறபடியே மரணத்தை ப்ராபிப்பித்த. ஸம்ஹரிப்பித்தவென்றபடி.

(மாயவன்) பகலை இரவாக்கியும், "ஆயுதமெடேன்" என்ற ப்ரதிஜ்ஞையைவிட்டு ஆயுதத்தையெடுத்தும், யுத்தாரம்பத்த

http://acharya.org

ளை அர்ஜுநனை இறக்கி, பதாமுமமாக உபதேசித்து, ([illegible]) (க்ருஷ்ணபவமாகுதல்) என்னும்படி பண்ணி, தன்னுடைய பெருமை பாராதே ஆச்ரித பரவசனாய் லோகத்துக்கெல்லாம் ஸாக்ஷியாக தூத்ய ஸாரத்யங்களைப் பண்ணின ஆச்சர்ய குண சேஷ்டிதங்களையுடைய க்ருஷ்ணன்.

(தன்மெய்வணங்கவைத்தகாரணமிலை) [illegible] "விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும்-பூர்வமேவக்ருதா ப்ரஹ்மன் ஹஸ்தபாதாதி ஸம்யுதா" என்றும், "[illegible]" "ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முரரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம் பாணித்வந்த்வ ஸமர்ச்சயாச்யுத கதாஸ்ஸ்ரோத்ரத்வய த்வம் ச்ருணு-க்ருஷ்ணம் லோகய லோசநத்வய ஹரேர்கச்சாங்க்ரியுக்மாலயம் ஜிக்ர க்ராண முகுந்த பாததுளஸீம் மூர்த்தந் நமாதோக்ஷஜம்" என்றும் ஸ்வசரணகமல பரிசரணார்த்தமாக ஸர்வேச்வரனாலே உண்டாக்கப்பட்ட இந்த்ரியங்கள்.

(உமக்கன்றென்று) இப்படி ஸம்ஸாரநிஸ்தரணத்துக்கு உபாயமாகக்கொடுத்த கரணங்களைக்கொண்டு, நதியைக்கடக்கக்கொடுத்த தெப்பத்தைக் கொண்டு அத்தைக் கடவாதே ப்ரவாஹத்துடனே போவாரைப்போலே * ஆக்கையின் வழியுழன்று * யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை பூண்டுகொண்டு திரிபவர்களைக் கண்டு, உமக்கன்றென்று-இந்தக்கரணங்களைக் கொண்டு நீங்கள் அநுபவிக்கைக்காகவன்றென்று. (இராமாநுசன்) இந்த எம்பெருமானார். (உயிர்கட்கு) அசேதநங்களுக்கு உபதேசிக்கப்போகாதிறே, இந்த ஆத்ம ப்ரகரணத்துக்கு சாகையாலே இவர்களுடைய ஸத்தாவிநாசங்கண்டு ஸஹியாதே பரமக்ருபையாலே சேதநரைக் குறித்து, கரணங்களை உமக்கு விநியோகித்துக் கொள்ளுகைக்கன்றென்று.

(ஆரணங்கமைத்திலனேல்) அங்கு அஜ்ஞராய் தேஹாத்ம ப்ரமத்திலே நிஷ்டராக அவ்வசேதநருடைய ஸ்வபாவத்துக்குத் தகும்படி உபதேசித்தும், பாஷ்யாதிமுகேந ரக்ஷித்தும் அவர்களுக்கு அமரும்படி தம்முடைய ஸம்பந்திகளான பேர்களாலும் அவ்வவ்விஷயங்களிலே போதித்திலராகில். (இவ்வாருயிர்க்கு) "[illegible]" "ஏவமாத்மநிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:" என்கிற ஸம்ஸாரசக்ரநிமக்நரான ஆத்மாக்களுக்கு.

http://acharya.org

(அரணர்) வேறொரு ரக்ஷகாந்தரமுண்டோ, "[illegible]" "தேசமன்னவனுமிவனிக்கப்பட்டிருக்கராம்" என்றும், "[illegible]" "தத்தேசவியிலிருமியிபதம் தேவிகாதேவாகைக்கு" என்னும் சொல்லுகிறபடியே தேவரே ரக்ஷகரென்றறுதியிட்டு. "[illegible]" "கசேத்ரமகாநுஜேத்தேவனுமாசதுக்கசதுரவர், மாமவஸ்ந்நாம் ப்ரபத்யஸ்தேஜக்தவேர்ஹக்த மாத்ரம்" என்னக்கடவதிறே. ... ... (௬௭)

உரை.—அ.—(அதைபத்தெட்டாம்பாட்டு.) இப்படி பகவத் ஸமாச்ரயணத்துக்கு உடைத்தானத்தலையும், ஆச்ரயித்தாக்களை யில் அவ்வளவிலே நடுப்பு போகக்கடவதானவித்தேசத்திலே என்றுத்மாவும் மங்களாம் எம்பெருமானுனை ஆச்ரயித்திருக்குமவர் கள்ளுணங்களிலே சென்று ப்ரவணமாய்த்து; ஆன பின்பு எனக்கு ஸத்ருசரில்லையென்கிறார்.

மூ.—ஆரெனக்கின்றுநிகர்சொல்லில்மாயனன்றைவர்தெய்வத்
தேரினிற்செப்பியகீதையின்செம்மைப்பொருள்தெரியப்
பாரினிற்சொன்னவிராமாநுசனைப்பணியும்நல்லோர்
சீரினிற்சென்றுபணிந்ததென்னாவியுஞ்சிந்தையுமே.(௬௮)

பதம். உரை.

மாயன் "[illegible]" "பார்த்தம் ரதமேறி மாதுலர் சாரதி ஸர்வலோகங்களையும் ஈசாக" என்கிறபடியே ஸாரத்ய ஸ்த்தாரத்தத் தலே தன்னுடைய ஆச்ரித பாரதந்த்ர்யத்தை ஜகத்ப்ரஸித்தமாக்கின ஆச்சர்யபூதன்,

அன்று "[illegible]" என்கிற உபயஸேநாமத்யத்திலே பல போகங்களையி

பதம். உரை.

மாமகா:" என்கிறபடியே சாரதியான அர்ஜுநன் கையில் வில்லையும் போகட்டு சோகாவிஷ்டனாய், "[illegible]" "சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" என்கிற அக்காலத்திலே,

ஐவர் பாண்டவர்களுடையவராய்,*

தெய்வம் தன்னுடைய திருவடிகளோட்டைச் சம்பந்தமே இவ்வுமாயிருக்குமவர்,

* அடைத்தேதற்குத்-தொலைப்புத்தமுப்பயக்கத்தன.

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேரினில்	திருத்தேர்த் தட்டிலே நின்று,	நல்லோர்	விலக்ஷணரானவர்களுடைய,
செப்பிய	அருளிச்செய்த,	சீரினில்	கல்யாண குணங்களிலே,
கீதையின்	ஸ்ரீகீதையினுடைய,	சென்று	இவ்வருகே ஒன்றில் கால் தாழாதே சென்று,
செம்மைப் பொருள்	ஸ்வரஸமான அர்த்தத்தை,	என் ஆவியும்	என்னாத்மாவும்,
தெரிய	ஸுவ்யக்தமாம்படி, தேரிலே அர்ஜுனனை விஷயமாக அவனருளிச் செய்தாப்போலன்றிக்கே,	சிந்தையும்	மநஸ்ஸும்,
		பணிந்தது	அத்தைவிடு முடியும் என்னும்படி ப்ரவணமாய் விட்டது;
பாரினில் சொன்ன	பாரிலே ஸர்வவிஷயமாக அருளிச்செய்த,	சொல்லில்	சொல்லுமளவில்,
		ஆர்	யார்தான்,
இராமாநுசனை	எம்பெருமானாரை,	எனக்கு இன்று நிகர்	எனக்கு இன்றொத்தார்.
பணியும்	ஆஶ்ரயிக்கிருக்கும்,		

செம்மை-செவ்வை. பணிதல்-தாழ்தல். சிந்தை-அந்தஃகரணம்.

வ்யா.—அ.— அறுபத்தெட்டாம்பாட்டு. இப்பாட்டிலே, எம்பெருமானாருடைய ஜ்ஞாந ப்ரதாநவைபவத்தையும் மோக்ஷப்ரதாநவைபவத்தையும் இந்த்ரியபரவசரான சேதநரைக்குறித்து அவருடைய ஸதாசார்யத்வ ப்ரகாரத்தைத் தெளிவித்து, மஹாபாரதஸமரத்திலே திருத்தேர்த் தட்டிலே உபதேசித்த பகவத்கீதைக்கு ஸ்வரஸார்த்தத்தை அருளிச்செய்த எம்பெருமானாரை ஆஶ்ரயித்த ஸாத்விகருடைய கல்யாணகுணங்களிலே என்னுடைய ப்ராணனும் மநஸ்ஸும் த்வரித்துப்போய் அங்கே கால் தாழ்ந்தது; ஆனபின்பு இப்போது வ்யபதேஶ்யரைக் கணிசித்துச் சொல்லத்தொடங்கில் எனக்கு ஸத்ருஶர் லோகத்தில் ஆருளரென்று தமக்குண்டான அதிஶயத்தைச் சொல்லுகிறார்.

வ்யா.—(மாயன்) "[illegible]" "மயாத்யக்ஷேண ப்ரக்ருதிஸ்ஸூயதே ஸசராசரம்" "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ:" என்கிறபடியே ஸர்வஜகத்காரணபூதனாய் அந்நிக்கே, ஸௌஶீல்யத்தையிலே இருக்கும் பூதநாஶகட யமளார்ஜுநாதிநிரஸநங்களும், கோவர்த்தன கோபாலன்ஜீவ்ருத்தி கோவர்த்தநோத்தாரணமும், யஶோதா அக்ரூர தாத்ததாகளிலும் அர்ஜுனோதத்வ த்ருநிருக்கு விஶ்வரூபப்ரதர்ஶனமும் முதலான ஆஶ்

http://acharya.org

சர்ய சேஷ்டிதங்களையுடையவனென்னுதல். இப்படிப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனும். (அன்று) "தத்ர தாவத் பாண்டவாநாம் குருணாஞ்ச யுத்தே ப்ராரப்தே பகவாந் புருஷோத்தம: ஸர்வேச்வர: ஜகதுபக்ருதிமர்த்ய: பார்த்தம் ரதிநமாத்மாநஞ்ச ஸாரதிம் ஸர்வலோக ஸாக்ஷிகஞ்சகார" என்கிற ஸமயத்திலே. (ஐவர்தெய்வத்தேரினில்) பஞ்சபாண்டவர்களுக்கு விஜயம் கொடுக்கைக்காக, "தெய்வத்தேர்" என்கிறது. அர்ஜுநனுக்கு தேவதாப்ரஸாதத்தாலேவந்ததேரென்னுதல்; அன்றிக்கே, தேவதேவனான க்ருஷ்ணனுடைய ஸ்ரீபாதஸம்பந்தத்தாலேவந்த அதிசயத்தைவிட்டுச்சொல்லுதல். இப்படிப்பட்ட திருத்தேர்த்தட்டிலே. (செப்பிய) "[illegible]" "கார்ப்பண்யதோஷோபஹதஸ்வபாவ: ப்ருச்சாமித்வாம் தர்ம ஸம்மூடசேதா: - யச்ச்ரேயஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹிதந்மே ஶிஷ்யஸ்தேஹம் ஶாதிமாம்த்வாம்ப்ரபந்நம்" என்று - ப்ரபந்நனான அர்ஜுநனைக்குறித்து, "[illegible]" "உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்ஶிந: - [illegible]" என்று ஜீவேச்வரபேதமும் ஜீவபரஸ்பரபேதமும் உபக்ரமித்து, "[illegible]" "அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று அபயப்ரதாநம் பண்ணின ச்லோகமனைவும் மோக்ஷசாஸ்த்ரமாக உபதேசித்த.

(கீதையின்) பகவத்கீதையினுடைய. (செம்மை) செவ்வை. ஆர்ஜவம். ஆதிமத்யாவஸாநங்களிலே கருபதஸங்கர ஸ்ரீநாதஞக்நநீர்த்தநீனைப்போலே தத்வத்தை உபதேசிக்கவேணுமென்று உபக்ரமித்துவுமேலும்முடைய குதர்ஷ்டிபக்ஷத்துக்கு அநுரூபமாகச் சில அர்த்தங்களைக் கலந்து, பூர்வோத்தர விருத்தமாகச் சொல்லுகையன்றிக்கே பரஸ்பரவிரோதாவபோதமாய் உபநிஷத்துக்களோடே ஏகவாக்யதாபந்நமான. (பொருள்) தாத்பர்யத்தை. (தெரியப்பாரினிற்சொன்ன) லோகத்திலே தத்வவிவேகஞ்ஞரான ஜனங்களுக்கு தத்வஹித புருஷார்த்தங்களை விசதமாகத் தெளியும்படி ஸ்ரீபாஷ்யத்தைப்பண்ணின. (ராமாநுஜனை) எம்பெருமானாரை. (பணியுமநல்லோர்) "[illegible] ப்ரபத்யே" "ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம்ப்ரபத்யே" என்று ஆச்ரயித்த மஹாத்மாக்கள். ஆழ்வான்முதலானவர்களென்றபடி. (சீரினில்) அவருடைய கல்யாணகுணங்களில். (சென்றுபணிந்தது) "ஒருபகலாயிரமூழி" "[illegible]" "க்ஷணமாத்ரஞ்சகல்பஸமம் மந்யதே" என்னும்படி அவருடைய கல்யாணகுணங்கள் ஸந்தானமின்றிக்கே இருக்கமாட்டாத ப்ராவண்யத்தாலே தவித்துச்சென்று

http://acharya.org

அந்த கல்யாணகுணங்களிலே, "மொழியைக்கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாம் குழியைக்கடக்கும் நம் கூரத்தாழ்வான்" என்று ஆழங்காற்பட்டது. "[illegible]" "வாசாமநீஷாவபுஷாசயுஷ்மத்பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம்-கூராதிநாதகுருகேசமுகாத்யபும்ஸாம்" என்று ஜீயரும் அருளிச்செய்தாரிறே. அதேதென்றால் (என்னுவியும் சிந்தையுமே) இவ்வளவாக என்னுடைய ஸித்தத்தைத் தெளியாதே மறைத்துப்போன என்னுடைய ப்ராணனும் மநஸ்ஸுமே இப்போது இப்படி வணங்குமாயிருக்கிறது. ... ... (௬௮)

உரை.—அ.—அறுபத்தொன்பதாம்பாட்டு. இதில் எம்பெருமானார் திருவடிகளில் பக்தருடையவர்கள் விஷயத்தில் தமக்குண்டான அபிப்ராயவைபவத்தை அநுஸந்தித்து தர்ப்பதாய், ஈச்வரனிலுங் காட்டில், இவர், இவ்விஷயத்தில் பண்ணின உபகாரஸம்ருத்திவிசேஷமாக அத்தையநுஸந்தித்து வித்தராகிறார்-இதில்.

மூ.—சிந்தையினோடு கரணங்கள்யாவுஞ்சிதைந்து முன்னாள்
அந்தமுற்றாழ்ந்தது கண்டு இவையென்றனக்கன்றருளால்
தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன் தானது தந்து
எந்தை இராமாநுசன் வந்தெடுத்தனனின்றென்னையே. ( )

பதம்.	உரை.
முன்னாள்	ஸ்ருஷ்டிக்கு பூர்வகாலத்திலே,
சிந்தையினோடு	ப்ரதாநகரணமான மநஸ்ஸோடே கூட,
கரணங்கள் யாவும்	ஸர்வகரணங்களும்,
சிதைந்து	அழிந்து,
அந்தமுற்று	நாசத்தையடைந்து
ஆழ்ந்ததுகண்டு	அசித்விசேஷிதமாம்படி தரைப்பட்டபடி கண்டு,
அவை	அந்தக்கரணங்களை,
என்றனக்கு	அசித்கல்பனுக்கிடக்கிற எனக்கு,
அன்று	அக்காலத்திலே, "[illegible]" "கரணகளேபரைர்க் கடயிதும் தயமாநமநா:" என்கிறபடியே,
அருளால் தந்த	க்ருபையாலே உபகரித்தருளின,
அரங்கனும்	பெரியபெருமாளும், கரணங்களைத் தந்த உபகாரி,
தன் சரண் தந்திலன்	தம்முடைய சரணங்களைத் தந்திலர்;
இராமாநுசன்	எம்பெருமானார்,
எந்தை	எனக்கு ஜநகராய்க் கொண்டு
வந்து	வந்து, "அரங்கன் செய்ய

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.
	தானினைவோடொடர்த்தான்'' என்னும்படி,	என்னை	ஸம்ஸாரார்ணவமக்நனான என்னை,
		இன்று எடுத்தனன்	இன்று எடுத்தருளினார்.
தான்	தாம்,		இது என்ன உபகாரமே! என்று கருத்து. (சுஎ)
அது தந்து	அந்தத் திருவடிகளைத் தந்தருளி,		

அவ.—அ.—அறுபத்தாறாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்த மஹாத்மாக்களுடைய கல்யாணகுணங்களிலே தமக்குண்டான ப்ரீதி ப்ரகர்ஷத்தைச் சொல்லி நிர்த்தராய், இதில்-ஸர்வசேதநர்களும் ஸம்ஸார தசையில் மனஸ்ஸோடேகூட ஸர்வவிஷயங்களையும் இழந்து அசித் கல்பராய்க் கிடக்கிற தசையைக்கண்டு, அப்படிப்பட்ட எனக்கு அபேக்ஷாநிரபேக்ஷமாகத் தம்முடைய நிர்ஹேதுகபரமக்ருபையாலே கரண களேபரப்ரதாநம்பண்ணின பெரியபெருமாளும் ஸ்ருஷ்டிமாத்ரமொழிய, அவ்வோபாதி ஸம்ஸாரஸம்பந்தத்தைவிடுத்து தம்முடைய திருவடிகளைத்தந்திலர்; இப்படி அதிதுர்லபமான வஸ்துவை நமக்கு பிதாவான எம்பெருமானார், தம்முடைய திருவடிகளை உபாயோபேயமாக எனக்குத்தந்து இப்போது என்னை ஸம்ஸாரத்தில்நின்றும் எடுத்தருளினாரென்கிறார்.

வ்யா.—(சிந்தையினொடு கரணங்கள்யாவும் சிதைந்து) "[illegible]" "மநஷ்ஷஷ்டேந்த்ரியாணி" என்கிறபடியே இந்த்ரியங்களிலே மநஸ்ஸு ப்ரதாநமாகையாலும், அவைகளுக்கு மநஸ்ஸஹகாரமில்லாவிடில் தன்கார்யங்களிலே அகிஞ்சித்கரங்களாய்ப் போகையாலும். மநஸ்ஸையெடுத்தது இதரேந்த்ரியங்களுக்கும் உபலக்ஷணம். இப்படி ஏகாதசேந்த்ரியங்களும் ப்ரளயகாலத்திலே சேர்ந்து, "[illegible]" "ப்ருதிவ்யப்ஸு லீயதே" என்று தொடங்கி, "[illegible]" "தம:பரே தேவ ஏகீபவதி" என்னும்படியே சொன்னக்ரமத்திலே லயித்து ஸூக்ஷ்மாவஸ்த்தையைப் பெற்று.

(அந்தமுற்றாழ்ந்தது) ஸர்வமும் உபஸம்ஹ்ருதமாய் அசித் விசேஷிதமாய்க் கிடக்கிற தசையிலே. (முன்னாள்) ஸ்ருஷ்டே: பூர்வகாலத்திலே. (கண்டு) "[illegible]" "ததைக்ஷத பஹுஸ்யாம்ப்ரஜாயேயேதி" என்றும், "[illegible]" "கரணகளேபரைர்க்கடயிதும் தயமாநமநா:" என்றும்-அர்த்தித்வநிரபேக்ஷமாக நிர்ஹேதுக க்ருபையாலே நமக்கு பரிகரமாம்படியையும், "[illegible]"

http://acharya.org

[illegible]'' "விசித்ராதேஹஸம்பத்திரீஸ்வராய நிவேதிதும், பூர்வமேவக்ருதாப்ரஹ்மன் ஹஸ்தபாதாதிஸம்யுதா"
என்றும் — ஸ்வசரணகமலத்திலே பரிசர்யார்த்தமாக.

(அவை) என்றது - மதன்னையும் தபோக்த்ரியங்களையும் கூட்டி. (அன்று) ஸ்ருஷ்டிகாலத்திலே. (என்றனக்கு அருளாலி) ஜீவர்களுக்கு கரணகளேபர ப்ரதானம்பண்ணியருளின (அரங்கனும்) அப்படிப்பட்டவன் நாசன்தனுக்கின்றால் அடியேனுடைய ஸம்ஸாரதுக்கத்தை ஸஹிக்கமாட்டாதே கூப்பிட்ட த்வநி அவனுடைய செவிப்பட வில்லையென்று ஆகியிருக்கலாமோ, ஸர்வஶக்தனாகியிருக்கிறானென்று ஆகியிருக்கலாமோ, அவன் அடியேனுடைய ஹ்ருதயத்திலே நித்ய ஸந்நிஹிதனாயிருக்கிறான், ஸர்வரையும் ரக்ஷிக்கவேணுமென்று உத்யோகமுடையனாய் அபயஹஸ்தத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறான்; தாத்ருசனும்.

(தன் சரண்) "[illegible]'' "[illegible]'' "[illegible]'' "[illegible]'' "[illegible]'' "ஸர்வேஸ்வரதோவாஸ்பதமாமகந்தி" "விஷ்ணோஃபதேபரமே மத்வ உத்ஸ:" "தவமந்திபமாகவபாதபங்கஜம்" "கநகபூஷாஸ்கந்தாங்கிகப்ரத்வஜாதி சித்ராங்குஸவஜ்ரலாஞ்சனம் த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" "ததாநமம் பலவத்பரதாம்பு ஜத்வயமஹீசனா ஸங்க்ரஹிஷ்யாமி" "ஏதத்ரேஹாவஸாநேமாம் த்வத்பாதம் ப்ராபயஸ்வயம்'' என்னும்படி ஸம்ஸாரதுக்கநிவ்ருத்தி பூர்வகமாக பரமபுருஷார்த்தமான தம்முடைய ஸ்ரீசரணாரவிந்தத்தை.

(தந்திலன்) சேர்த்துக்கொண்ட தில்லை. என்னுடைய அநாதிகர்மபாரதந்த்ர்யத்தைப்பார்த்துப்ரதமஸங்கல்பரூபமாய் ஸம்ஸாரப்ரவர்த்தகமான தம்முடைய நிக்ரஹஸங்கல்பத்தை ப்ரவர்த்திப்பித்தானென்றபடி. "[illegible]'' "ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:" என்றும், "[illegible]'' "ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம்'' என்றும், "[illegible] [illegible] [illegible] [illegible]'' "[illegible]'' "ஸம்ஸாரமருகாந்தாரே துர்வ்

ஜிஹ்வாக்ரஸீமனே - விஷயஸங்கருள்மாட்டே தீக்ஷாபாதமமா ஸீதி - புத்ரதாரக்ருஹக்ஷேத்ர மித்ரத்ரவ்யங்களும்புகுந்தவிடமே - கர்த்தவ்யாகர்த்தவ்யவிவேகரஹிதம் பரிப்ராந்தமிருக்கிறதது: - அஜ்ஞானாந்ததமஸா த்ருஷ்ணார்த்தமவனை காங்க்ஷமமம்-ஜீர்ணமாக்ஷிபலாரோக்யம் தேவலம் க்லேசஸாதனம் சரீரம்" "அவிவேககநாந்ததிங்முகேபஹுதா ஸந்தத துஃகவர்ஷிணி - பகவந்பவதுர்த்தினே" என்னும் சொல்லப்பட்ட ஸம்ஸாரஸாகரத்திலே நிமக்நனாயிருக்க.

(எந்தையிராமானுசன்) "[illegible]" "ஸகலவித்யாதர்சனஸுஜனப்ரதரச்சேஷ்டாஜநக" "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" "[illegible]" "அன்றிப்பாலில்மேலி செய்வேதுலக்கமேமாததேவிது:" என்றிறபடியே அதாச னேதென்ன "நாராயண சரணௌ" என்றதனைக் கொடுத்தபிதாவான எம்பெருமானார். (இன்றுவந்து) இந்த தசையிலே ஸ்ரீபெரும்பூதூரிலே அவதரித்து. காஞ்சிநகரத்திலே தேவராஜருடைய அநுக்ரஹம் பெற்றிருந்து என்னை உத்தரிக்கவேணுமென்று நானிருந்த தேசத்தைத் தேடிவந்து. பகவத்ஸ்வீகாரத்தாலே அநேக கர்ஷிகளைப் பண்ணி என்னை பரிக்ரஹித்து. (தானது தந்து) "[illegible]" "யச்சேவண்பகவிதுப்ரதிபக்ஷவிதக்ஷேமம்ஸிதிலோப்ரபந்தமாரிமாசவ்யம் ப்ரபக்கம்" என்ற உபனிஷத்துக்களும் அர்த்திபரதேயிருக்கத் தானே நிர்ஹேதுகமாக, ஸ்ரீரங்கநாதனுக்கும் கொடுக்க அசக்யமான அந்த நாராயண சரணத்வந்த்வங்களை உபாயோபேயமாகக் கொடுத்து.

(என்னையேயெடுத்தனன்) அழுந்தினார் திருவுள்ளத்திலே நுமிறைது தம்மையே உத்தரித்தாரென்று காணும். (என்னையே) ப்ரபலபாபிஷ்டனான வென்னையே, ஸர்வசக்தியுக்தனான ஸர்வேச்வரனாலும் எடுக்க அசக்யனான என்னையே உத்தரித்தார். சிறுதாட பரமமான அர்த்தத்தைக்கொண்டு சொல்லுகிறேன், இதற்கு உதாஹரணம் அடியேனே. ஸம்ஸாரஸாகரத்தில் நின்றும் உத்தரித்தார். "[illegible]" "மக்னானுத்தரதே லோகான் காருண்யாச்சாஸ்த்ர பாணினா" என்றவர்த்தத்தை ப்ரத்யக்ஷமாகக் கண்டேன். ஸ்வாநுபவத்தாலே தெளிந்தேனென்றதாயிற்று.

... ... (௬௯)

உரை—அ.—எழுபதாம்பாட்டு. எம்பெருமானார் செய்தருளின உபகாரத்தையநுஸந்தித்து வித்தரானார்-கீழ்; அநந்தரம் செய்த அபராதத்திற்காட்டிலும் செய்யவேண்டு மம்ஸம் அதிசயித்திருக்கிற படியை அநுஸந்தித்து அவருடைய திருமுகத்தைப்பார்த்து ஸ்வாபேக்ஷிதத்தை விண்ணப்பஞ்செய்கிறார்-இதில்.

http://acharya.org

என்னையும்பார்த்தென்னியல்வையும்பார்த்தெண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கிலருள்செய்வதேநலமன்றிஎன்பால்
பின்னையும்பார்க்கில்நலமுளதேஉன்பெருங்கருணை
தன்னையென்பார்ப்பரிராமாநுசவுன்னைச்சார்ந்தவரே. (௭௦)

பதம்.	உரை.
என்னையும் பார்த்து	அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே ஸப்தாதி விஷயங்களிலே பழகி, "[illegible]" "ராமாநுஜார்ய விஷயீக்ருதமப்யஹோ மாம் பூயஃப்ரதர்ஷயதி வைஷயிகோ விமோஹ:" என்கிறபடியே தேவரீர் அங்கீகரித்தருளின பின்பும் துர்வாஸநாப்ராபல்யத்தாலே விபரீதருசி பூண்டிட்டிருக்கிற என்னையும் பார்த்தருளி, அத்தருசியது குணமாக விஷயாந்தரங்களிலே மண்டித்திரிகிற என்னுடைய
இயல்வையும்பார்த்து	துர்வ்ருத்தத்தையும் பார்த்தருளி, தோஷமே பச்சையாக அங்கீகரிக்கைக் கிடமாயிருக்கின்ற,

பதம்.	உரை.
எண்ணில்	அஸங்க்யேயமான,
பல்குணத்த	அநேக குணங்களையுடைய,
உன்னையும் பார்க்கில்	தேவரீர் தம்மையும் பார்த்தருளில், இதுக்குமுன்பு செய்தவோபாதியே மேலுண்டான அம்சத்துக்கும்,
அருள்செய்வதே நலம்	நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணியருளுகையே நல்லது;
அன்றி	இதுவொழிய,
பின்னையும் பார்க்கில்	மீளவும் ஆராயுமளவில்,
என்பால்	என்பக்கல்,
நலமுளதே	ஒரு நன்மை யுண்டோ; நன்மை யுண்டாயே காரியம் செய்ய வேணுமென்னில்,
உன்னைச்சார்ந்தவர்	தேவரீர் திருவடிகளை ஆச்ரயித்திருப்பார்
உன்	தேவரீருடைய,
பெருங்கருணை தன்னை	நிரவதிக க்ருபைதன்னை,
என்பார்ப்பர்	என்றுதான் காண்பர்கள். குறையக்காணோ வென்று கருத்து.

குறையக் காண்கையாவது - இதுவும் இத்தனையோ வென்று நினைக்கை. இயல்வு - வ்ருத்தம். என்பாலென்றது - என்னிடத்திலென்றபடி. ... ... (௭௦)

http://acharya.org

அவதா.—எழுபதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே-எம்பெருமானார் தமக்குப் பண்ணியருளின உபகாரத்தை யநுஸந்தித்து நிர்ப்பரரானாய், இதிலே-என்னையும் என்னுடைய தார்ஷ்ட்யத்தையும், தேவரீருடைய அப்ரதிமப்ரபாவத்தையும் ஆராய்ந்துபார்த்தால் என்னை விஷயீகரித்துக் கைக்கொள்ளுகையே நல்லது, இதுவொழிய என் நிரக்ஷியச் செய்த அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு, மீளவும் ஆராயுமளவில் என்னிடத்திலே நன்மையென்று பேரிடலாவதொரு நினைவுங்கூடக் கிடையாமையாலே என்னைக் கைவிடவேண்டி வருகையாலே ஸர்வோத்தமரான தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபையை தேவரீர்திருவடிகளை ஆச்ரயித்தவர்கள் என்சொல்லுவர்களோவென்று பேர்கொண்டுபோர விண்ணப்பஞ் செய்கிறார்.

வ்யா.—(என்னையும்பார்த்து) ஸர்வஜ்ஞரான தேவரீர் இவ்வளவும் என்னை நிர்ஹேதுகமாக பரிக்ரஹித்து, பஹுப்ரகாரமாக சிக்ஷித்து உபதேசித்து ஸத்பதத்திலே நடப்பித்து உபகரித்தாலும் அவற்றையெல்லாம் அநிருத்திகராம்படி பண்ணக்கடவதாய் "அகாரிகர்ம ப்ரவர்த்தாரக்த அக்ர்த்யகாரணி பாபவாஸனா ஆவிர்தனைவயாலே விபரீதருசியுமுடையனாயிருக்கிறவென்னையும் பார்த்து. (என்னியல்வையும் பார்த்து) "[illegible]" "ஸமர துஜுர்ச்யவிஷய க்ர்தமப்யவதேறாமரவ்யூஷப்ரதர்சுயதி யைஷயிகேஷிமோதும்" என்கிறபடியேதேவரீர் அங்கீகரித்தருளினபின்பும் துர்வாஸநாவசத்தாலே அத்தருச்யநுகுணமாக துர்விஷயங்களிலே மண்டித்திரிகிற என்னுடைய வ்ருத்தியையும் பார்த்து. இயல்வு-ப்ரவ்ருத்தி.

(என்னிலம் பல்குணத்த வுன்னையும் பார்க்கில்) அனைத்தேயங்களாய் அநேகங்களாய் கல்யாணதமங்களாய், தோஷங்களேயே பச்சையாக அங்கீகரிக்கைக்குடலான வாத்ஸல்யாதி குணங்களையுடையராய், "[illegible]" "[illegible]" "பெருமேதாவாகவைக்யாதேநவா ஸ்ரீபதிர்யேவத்தின் ஸாத்வீகை: - விதர்க்யாய மஹாப்ராஜ்ஞரு:" என்னும்படியான ப்ரபாவத்தையுடைய தேவரீர் தம்மையும் நன்றாகப்பார்த்தால். "[illegible]" "மதிமையாக்கியத்தச்சேதநசேரவிக்கருணையாத்" என்கிறபடியே பகவத்குணங்களுக்குத் தொகையுண்டாகிலும் இவருடைய குணங்களுக்குத் தொகையில்லையென்றாகாணும் அமுதனாருடைய திருவுள்ளத்திலோடுகிறது.

(அருள்செய்வதே நலம்) "[illegible]" "பரம

காருணிக [illegible] - இதிவிதை: [illegible] கருணீகதராகுரு" என்கிறபடியே தேவரீர் பரமகாருணிகர், அடியேன் அத்யந்தபாபிஷ்டன். "[illegible]" "[illegible]" "அஹமஸ்ம்யபராதசக்ரவர்த்தீ கருணே த்வஞ்ச குணேஷு ஸார்வபௌமீ - விதுஷீஸ்திதிமீத்ருஶீம் ஸ்வயம்மாம் வ்ருஷசைலேச்வரபாதஸாத்குருத்வம்" "த்வயாபிலப்தம் பகவந்நிதாநீமநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:" என்கிறபடியே வாத்ஸல்யாதி குணங்களுக்கெல்லாம் உத்தீபகமான தேவரீருடைய க்ருபாகுணத்துக்குப் பூர்ண விஷயமான அடியேனை வாத்ஸல்ய நிதியான தேவரீர் உபேக்ஷிக்கலாமோ, தேவரீருக்கு அலப்யலாபமன்றோ அடியேனை அங்கீகரிக்கை. என்னைப்போன்ற பாபிஷ்டனை ரக்ஷிக்கை தேவரீருடைய கல்யாணகுணங்களுக்கு ஒரு பரபாகம் பெறுகையன்றோ. ஆக இதுக்கு முன்பு செய்ததோ பாதி மேலுண்டான அம்சத்துக்கும் நிர்ஹேதுகமாக க்ருபைபண்ணி யருளுகையே ச்ரேஷ்டம். ஈச்வரன் விஷயமாக ஆழ்வான் பணித்த வார்த்தை, தேவரீருடைய விஷயீகாரதார்ட்யமன்றோவென்று அபிப்ராயமாய் இப்படிச் சொல்லுகிறார் காணும் இவர்.

(இராமாநுச) எம்பெருமானாரே. (அன்றி) இதொழிய வேறொன்றை ஆராயுமளவில். (என்பால்) இப்படிப்பட்ட அடியேன் விஷயமாக. (பின்னையும் பார்க்கில்) இதொழியத் திரும்பியும் ஆராய்ந்து பார்க்குமளவில். (நலமுளதே) ஒரு நன்மையுண்டோ. நன்மைகொண்டு ஒருகார்யம் செய்யவேண்டுவதென்னென்னில் (உன்னைச்சார்ந்தவரே) தேவரீருடைய திருவடிகளை ஆச்ரயித்து விச்வஸித்திருக்கும் ஜ்ஞானாதிகரெல்லாரும். (உன்பெருங்கருணை தன்னை என்பார்ப்பர்) மஹோபகாரரான தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபைதன்னை என்னுக்கண்டிருப்பர். இதுவேயோ! என்று குறையக்காணுக்களோ என்றபடி. "அதிகாரமுண்டேலரங்கர் இரங்காரோ, அதிகாரமில்லாதார்க்கன்றோ வெதிராசா நீயிரங்கவேண்டுவது, நீயும் அதிகாரிகளுக்கே யிரங்கிலென் செய்வோம்பாவம்" என்று இவ்வர்த்தத்தை ஜீயரும் அருளிச்செய்தாரிறே. ()

உரை.—அ.—எழுபத்தோராம்பாட்டு. இவர் இப்படி விண்ணப்பம்செய்தவாறே எம்பெருமானாரும் ஒக்குமிறேயென்று இசைந்து தம்முடைய விசேஷ கடாக்ஷத்தாலே இவருடைய ஜ்ஞானத்தை ஸ்வவிஷயத்திலே ஊன்றும்படி விசதமாக்கியருள, தாம் லபித்த அம்சங்களை அநுஸந்தித்து க்ருதார்த்தராகிறார்.

http://acharya.org

மூ— சார்ந்ததென்சிந்தையுன்றாளிணைக்கீழன்புதான்மிகவும்
கூர்ந்ததத்தாமரைத்தாள்களுக்குன்றன்குணங்களுக்கே
தீர்ந்ததென்செய்கைமுன்செய்வினைநீசெய்வினையதனால்
பேர்ந்ததுவண்மையிராமானுசவெம்பெருந்தகையே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்மை	கொள்ளுமவன் சிறுமையையுங்கொடுக்கிறதின் சீர்மையையும் பாராதே கொடுக்கும் ஔதார்ய குணத்தையுடையவராய்,	என்செய்கை	என்னுடைய வ்ருத்தி,
எம்	அந்த ஔதார்யத்தாலே என்னை எழுதிக்கொண்ட,	உன்றன்	தேவரீருடைய அநுபவஜநித ப்ரீதிகாரிதையானபோலே,
பெருந்தகை	பெருமையையுடைய,	குணங்களுக்கே	அந்த குணங்களுக்கே,
இராமானுச	உடையவரே,	தீர்ந்தது	அற்றுத்தீர்ந்தது;
என்	என்னுடைய,	முன்செய்வினை	பூர்வக்ருதகர்மம்,
சிந்தை	* சிந்தையாகிய நெஞ்சானது;	நீ	அதுக்குநிவர்த்தகரான தேவரீர்,
உன்	வகுத்த சேஷியான தேவரீருடைய,	செய்	செய்த,
இணை	பரஸ்பர ஸத்ருசமான,	அருவினையதனால்	அந்தச்செயலாலே,
தாள்கீழ்	திருவடிகளின் கீழ்,	பேர்ந்தது	மலை பெயர்த்தாற்போலே விட்டு நீங்கிற்று.
சார்ந்தது	* நிழலும் அடிதாறும்போலே பொருந்திவிட்டது;		ஆகையின்பு எனக்கொரு குறைகளுமில்லையென்று கருத்து..
அத்தாமரைத்தாள்களுக்கு	அந்தப்பரம போக்யமான திருவடிகளுக்கு,		
அன்புதான்	ஸ்நேஹமானதுதான்,		
மிகவும்	நிரவதிகமாம்படி,		
கூர்ந்தது	மிக்கது;		

நீசெய்வினையென்றது-அவர் செய்தருளின விசேஷகடாக்ஷத்தை. "நீசெய்வினையதனால்" என்றுபாடமானபோது - மத்கர்ம நிவர்த்தகமாக தேவரீர் செய்த க்ருஷிகளாலே யென்கை. கூர்தல்-மிகுதி. ... ... (எக)

வ்யா.—அ.—எழுபத்தோராம்பாட்டு. இப்படி இவர் சேர்க்கொடுசேர விண்ணப்பம் செய்தவாறே எம்பெருமானாரும், "ஒக்கும் ஒக்கும்" என்று இசைந்து தம்முடைய விசேஷ கடாக்ஷத்

http://acharya.org

நாலே இவருடைய கரணங்களெல்லாம் ஸ்வவிஷயத்திலேதா(ம்)
னென்றியிருக்கும்படி பண்ணியருள, அவருடைய திருமுகமண்
டலத்தைப் பார்த்து பரமகுஹ்யமான அர்த்தத்தை ப்ரகாசிப்பி
க்கும்படியான ஔதார்யத்தையுடைய எம்பெருமானாரே! என்
ஸம்போதித்து, தம்முடைய மனஸ்ஸை அவருடைய திருவடிகளிலே
சேர்த்து அமைத்திருக்கிறபடியையும், அத்திருவடிகளின் போக்ய
தையிலே ஈடுபட்டு ப்ரேமமானது தமக்கு மிக்கபடியையும், தா
அவருடைய குணங்களிலே அத்யபிநிவிஷ்டராய்க்கொண்டு தத்பார
வச்யத்திலே யிருக்கிறபடியையும், தம்முடைய பூர்வவ்ருத்த கர்மமெ
ல்லாம் அவருடைய விஷயீகாரத்தாலே தம்மைவிட்டு * கம்மெ
தே ஓடிப்போனபடியையும் ஹ்ருஷ்டராய்க்கொண்டு விண்ணப்ப
செய்கிறார்.

வ்யா.—(வண்மையிராமாநுச) வஸிஷ்டசண்டாளவிபா
கமற எல்லார்தலையிலும் தன் திருவடிகளைவைத்த ஸ்ரீவாமனனை
போலவும் ஜலஸ்தல விபாகமற வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகத்தை
போலவும், அநாலோசித விசேஷ சேஷலோக சரண்யரா
கொள்ளுகிறவர்களுடைய சிறுமையையும் கொடுத்தருளுகிற த
முடையபெருமையையும் பாராதே பரமகுஹ்யமான அர்த்தத்தை
ப்ரகாசமாகக் கொடுக்கும் ஔதார்ய குணத்தையுடைய எ
பெருமானாரே. (எம்பெருந்தகையே) அந்த ஔதார்யத்தாலே
என்னை யெழுதிக்கொண்ட பரமசேஷியே.

(சார்ந்ததென்சிந்தை புன்தாளிணைக்கீழ்) தேவரீரோடேகூட
அடியேனும் ஏகதேசவாஸியாயிருந்துவைத்து ஒருநாளும் தே
ரீர்திருவடிகளிலே ஆச்ரயம்செய்யாதே "[illegible]" "நகேமயம்"
என்றிருக்கிற அடியேனுடைய மனஸ்ஸானது, "சஞ்சலம்ஹி:"
"சஞ்சலம்ஹிமனः" என்றும் "நின்றவா நில்லாநெஞ்சு" என்றும்
சொல்லப்படுகிற நிலை மாண்டுபோய், "[illegible]" "த்ரவிக்ர
விரிஞ்சாதி" இத்யாதிப்படியே ப்ரஹ்மருத்ராதிகளுடைய ஸம்பத்
தை ஒருபொருளாக நினைப்பிடாத மஹாத்மாக்களாலே ஆச்ரயிக்க
த்தக்க தேவரீருடைய திருவடிகளின்கீழே, கர்மகாலத்திலே ஆதித்
யகிரணங்களாலே தப்தனானவன் நிழலையும் தடாகத்தையு முடைத்
தான செடியின்கீழே புகுமாப்போலே அவற்றினுடைய போக்ய
தை இரண்டும் கூடியிருக்கையாலே அவற்றின் பௌஷ்கல்யத்தி
லே ஈடுபட்டு, முன்பு தாம்பட்ட ஸம்ஸாரதாபமெல்லாம் தீரும்
படி * நிழலும் அடிதாறும் போலே அவிரளமாகப் புக்குப்
பொருந்திவிட்டது.

(அன்புதான் மிகவும் கூர்ந்தது அத்தாமரைத்தாள்களுக்கே)
தாமரைப்பூப்போலே செவ்வி மாறாக் குளிர்த்தி முதலான

http://acharya.org

பாக்யத்தையுடைய அத்திருவடிகள் விஷயமாக எனக்குப் ப்ரீதியா-ம் மேன்மேலெனப் பெருகி மிக்கது. கூர்தல் - மிகுதி. (உன்றன் அன்பர்களுக்கே நிரந்தரத்தொண்டு செய்கை) இத்தனைகாலமும் விஷயாந்தர ப்ரவணனாய் விஷயங்களுக்குப்போந்த வென்னுடைய கர்த்தவ்யமெல்லாம், வருத்த செய்யான தேவரீருடைய குணங்களை ஐஸ்வர்யத்தி-னிட்டு ப்ரேரிக்கப் பண்ணக்கடவ தாகையாலே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அக்குணங்களுக்கே பத்தாத்-ர்த்தது. "[illegible]" "நித்யகிங்கர ப்ரஹர்ஷயிஷ்ய" என்கிற ச்லோகத்திலே இவ்வர்த்தத்தை ஜீயரும் ப்ரார்த்தித்தரு-ளினாரிறே.

(முன்செய்வினை நீசெய் வினைகளும் போக்கி) "அநாதிகால [illegible]" என்னும்படியான என்னுடைய பாபகர்ம-மெல்லாம் அவற்றுக்கு எதிர்த்தட்டாக நிவர்த்தகமாயிருந்துள்ள தேவ-ரீருடைய கடாக்ஷமிறைவேறி அதுதன்னாலே மலைபோக்கப்போலே வாஸனையுமாகவிட்டு நீங்கிற்று. கர்த்ருவாசகபதமையிவ்வர்த்த-மானை, "முன்செய்வினையாம்" என்கிற வாக்யத்துக்கு, "[illegible]" "த்விஷத்பாபகர்த்ருவாம்" என்கிறபடியே ஆசார்ய-நேத்ரன துரிதங்களும் பொருளாகக்கடவது. "[illegible]" என்றவனும் ஸம்ப்ரதாயமொருசரணமிறே. "நீசெய்வினை" என்றது - இவர் பெரியபெருமாள் திருவடிகளிலே பண்ணியருளின ப்ரபத்தியை. "[illegible]" "ஸகலத்ரவேதி" என்கிற ச்லோகத்திலே இவ்வர்த்தத்தை ஜீயருமருளிச்செய்தா-ரிறே. "நீசெய்வனவைகளும்போக்கி" என்று பாடமானபோது - என்னுடைய பாபகர்மங்களெல்லாம் தேவரீருடைய ப்ரதமகடா-க்ஷத்தாலே போயிற்றென்று பொருளாகக்கடவது. இப்படியான பின்பு அடியேனுக்கு ஒருகுறைகளுமில்லையென்றதாயிற்று. (௭௧)

உரை.—அ.—எழுபத்திரண்டாம்பாட்டு. எம்பெருமானாரு-டைய ஔதார்யத்தாலே தாம் பெற்றபேற்றை அநுஸந்தித்து-க்ருதார்த்தரானார்-கீழ்; இன்னமும் அந்த ஔதார்யத்தாலே தமக்கு அவர் செய்தருளின மஹோபகாரத்தை அநுஸந்தித்து வித்தராகி-றார் - இதில்.

௭௨.—கைத்தனன்தீயசமயக்கலகரைக்காசினிக்கே
உய்த்தனன்தூயமறைநெறிதன்னையென்றுன்னியுள்ளம்,
நெய்த்தவன்போடிருந்தேத்துநிறைபுகழோருடனே,
வைத்தனனென்னையிராமானுசன்மிக்கவண்மைசெய்தே ()

http://acharya.org

பதம்.	உரை.
இராமாநுசன்	எம்பெருமானார்,
மிக்கவண்மைசெய்து	அதிசய ஔதார்யத்தைப் பண்ணி,
தீய	தோஷங்களான,
சமயம்	மதங்களைப் பற்றி நின்று,
கலகரை	கலஹஞ்செய்கிறவர்களை,
கைத்தனன்	நிரஸித்தருளினார்;
தூய	பரிசுத்தமான,
மறைநெறி தன்னை	வேதமார்க்கத்தை,
காசினிக்கு	பூமியிலே,
உய்த்தனன்	நடத்தியருளினார்;
என்றுன்னி	என்று அநுஸந்தித்து,
உள்ளம்நெய்த்து	அந்தர்யம் ஸ்நிக்தமாய்,
அவ்வன்போடிருந்து	அந்த ஸ்நேஹத்தோடேயிருந்து,
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணுகின்றுள்ள,
நிறைபுகழோருடனே	பரிபூர்ண குணரோடே இவனுமொருவனென்று பரிகணிக்கும்படி,
என்னைவைத்தனன்	என்னை வைத்தருளினார்;
	இப்படிச் செய்தருளுவதே! என்று கருத்து.

அதவா, நிறைபுகழோருடனே வைத்தனன் என்றது-அவர்களுக்கு நடுவே வர்த்திக்கப்போகாதவென்னை, "அடியரோடிருந்தமை" என்கிறபடியே ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவே வர்த்திக்கும்படி பண்ணினாரென்னவுமாம். கைத்தல்-கடிதல். உய்த்தல், செலுத்துதல். அவ்வன்போடு என்கிறவிடத்தில், வகரவொற்றுக்குறைந்து கிடக்கிறது. அன்றிக்கே, நெய்த்தவன்பு என்று ஒருபதமாக யோஜிக்கவுமாம். அன்புநெய்த்திருக்கையாவது-ஸ்நேஹமாயிருக்கையன்றிக்கே தயறுண்டிருக்கை. உள்ளம்நெய்த்த அவ்வன்பென்றது-உள்ளத்தில் நெய்த்தவன்பென்றபடி. (௭௨)

வ்யா.—அ.—எழுபத்திரண்டாம்பாட்டு. இப்பாட்டிலே. எம்பெருமானார், தம்முடைய ஔதார்யத்தாலே இவருடைய அபேக்ஷிதத்தைக் கொடுத்தருள, இவர்தாம் அவர்தம்மாலே லபித்த புருஷார்த்தங்களை அநுஸந்தித்து க்ருதார்த்தரானார்; இதிலே-எம்பெருமானார் தம்முடைய ஔதார்யாதிசயத்தாலே அதிதோஷங்களான வேதபாஹ்யருடைய மதங்களைப் பற்றி நின்று கலஹிக்குமவர்களை நிரஸித்தாரென்றும், அத்யந்த பரிசுத்தமான வேதமார்க்கத்தை பூமியிலே வெகுமொக்க நடத்தியருளினாரென்றும் அநுஸந்தித்துக்கொண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸ்தோத்ரம் பண்ணுகின்றுள்ள பெரியோர்களோடே கலந்து பரிமாறும்படி அடியேனை வைத்தருளினாரென்று அநுஸந்தித்து வித்தராகிறார்.

http://acharya.org

வ்யா.—(இராமாநுசன்) "[illegible]" "வசீவதாந்ய:" என்னும்படியே இவ்வளவும் ஔதார்யகுணத்தைக்கொண்டு ப்ரதிபாதிக்கப்பட்ட எம்பெருமானார். (மிக்கவண்மைசெய்து) "கொள்ளக் குறைவற்றிலங்கிக்கொழுந்துவிட்டோங்கிய வள்ளல் தனத்தினால்" என்கிறபடியே கொடுக்கக் கொடுக்க ஒருகுறைகளுமின்றிக்கே சாணேபிடித்த மாணிக்கம்போலே மிகவும் ப்ரகாசிக்கிற ஔதார்யகுணத்தாலே லோகத்தையெல்லா முத்தரிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி.

(கைத்தனன்தீயசமயக்கலகரை) வேதபாஹ்யர்களாகையாலே அதிஹேயங்களான பௌத்தஜைநமாயாவாதிகளுடைய குத்ருஷ்டி மதங்களிலே விஜ்ஞாநத்தைக்கொண்டு க்ஷணிகமென்றும், தத்வம்ஜ்ஞாநமாத்ர மென்றும், ப்ரபஞ்சம் மித்யையென்றும், ப்ரஹ்மம் சின்மாத்ரமென்றும் பேதத்தை நிரஸித்தும், வாங்மாத்ரத்தாலே வேதத்தை அங்கீகரித்துவைத்து அதிலே குத்ருஷ்டி கல்பநங்களைப் பண்ணியும், அவ்வோமதத்திலே வேதத்தை மித்யாகோடியிலேயாக்கியும், இப்படி துஸ்தர்க்கங்களைச்சொல்லி கலஹிக்குமவர்களை நிரஸித்தருளினார். கைத்தல்-கடிதல். இவர்களுடைய ப்ரஸங்கங்களெல்லாம் கலஹங்களைவிளைக்குமித்தனையொழிய வித்வத்ஸம்மதங்களான ப்ரஸங்கங்களன்றுகாணும். திருக்காஞ்சீபுரத்தருகே பௌத்தரையும், திருமலையிலே சைவரையும், சாரதாபீடத்திலே மாயாவாதிகளையும் நிரஸித்தபடி ஸர்வலோகப்ரஸித்தமிறே. "[illegible]" "காதாகதாரகதாராம்" என்னக் கடவதிறே.

(காசினிக்கேயுய்த்தனன் தூயமறைநெறிதன்னை) (காசினிக்கே) "[illegible]" "அவிவேககநாந்ததிங்முகே பஹுதா" இத்யாதியாலும், "[illegible]" "ஸம்ஸாரமருகாந்தாரே" இத்யாதியாலும் சொல்லப்படுகிற இருள் தருமா ஞாலத்திலே யிருந்து ஸம்ஸரித்துக்கொண்டு கஷ்ட ப்ரயாஸப் போக்த்ரு சேதநரை உத்தரிக்கைக்காகவே. காசினி-பூமி. பூமியிலுள்ளசேதநரையென்றபடி. இவர்களுடைய து:கபரம்பரைகளைக் கண்டு பொறுக்கமாட்டாத பரமக்ருபாபூர்வக ஔதார்யத்தாலே.

(தூயமறைநெறிதன்னை) ப்ரம ப்ரமாத விப்ரலம்பாதிகளும், புருஷ சேமுஷீதோஷமாலிந்யமும், ஸ்வப்ராமாண்யத்தில் இதராபேக்ஷையுமின்றிக்கே யிருக்கிறதாகையாலே, "சுடர்மிகுசுருதி" என்னும்படி அத்யந்த பரிசுத்தமான வேதத்தினுடைய மார்க்கத்தை. "[illegible]" "ச்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா" என்கிறபடி பகவதாஜ்ஞாரூபங்களான பரமவைதிக தர்மங்களையென்றபடி.

http://acharya.org

"மறை" என்ற திருப்பதத்தாலே பூர்வோத்தரகாண்டரூபமான பாகங்களும், ப்ரதிபாத்ய விஷயமும் ஸூசிப்பிக்கப்படுகிறன.

ஆக ஸ்ருதிஸ்ம்ருதிசோதிதங்களான ஸாமாந்யவிசேஷதர்மங்களையும், "[illegible]" "[illegible]" "[illegible]" என்றும், "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே ஸகல வேதங்களிலுமுடைய ஸாரதமமாத்தமமான சரணாகதிதர்மத்தையும். (உய்த்தனன்) நடப்பித்தார். உய்த்தல்-நடத்துதல். நெறி-மார்க்கம்.

(என்றுன்னி) இவ்விரண்டையும்செய்தாரென்று த்ருடாத்யவஸாயபூர்வகமாக அநுஸந்தித்து. (உள்ளம்நெய்த்தவன்போடு) திருவுள்ளம் ஸ்நிக்தமாய் அந்தஸ்நேஹத்தோடே. "அவ்வன்போடு" என்று சொல்லவேண்டியிருக்க வகாரமும் குறைந்து "அவன்பு" என்று கிடக்கிறது. அன்றிக்கே, நெய்த்தவன்பென்று - உள்ளத்திலே நெய்த்தவன்பென்றபடி. (இருந்தேத்தும்) இப்படிப்பட்ட ஸ்நேஹத்தோடே இருந்துகொண்டு, அந்த ஸ்நேஹமானது வர்த்தனம்பண்ணவே, "[illegible]" "பாஷண்டத்ருமஷண்டதாவதஹந" இத்யாதிப்படியே அவரை ஸ்தோத்ரம்பண்ணுகின்றன.

(நிறைபுகழோருடனே) பரிபூர்ணரானவரோடே. "அடியார்கள் குழாங்களை - உடன்கூடுவதென்று கொலோ" என்று ப்ரார்த்திக்கவேண்டாதபடி இங்கேதானே. (வைத்தனனென்னை) என்னைச் சேர்த்தருளினார். "[illegible]" "[illegible]" "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத்பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம் - கூராதிநாத குருகேசமுகாத்யபும்ஸாம் பாதாநுசிந்தநபரஸ் ஸததம் பவேயம்" "த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌ யஸ் தத்தாஸதைகரஸதா விரதாமமாஸ்து" என்று இத்தையே ஜீயரும் ப்ரார்த்தித்தருளினார். ... ...(௭௨)

உரை.—அ.—எழுபத்துமூன்றாம்பாட்டு. இவர் இப்படி வித்தராகிற இத்தைக் கண்டவர்கள், உமக்கு உஜ்ஜீவந ஹேதுவான ஜ்ஞாநப்ரேமங்களுண்டாகையாலே தரித்திருக்கலாமேயென்ன; தம்முடைய ஔதார்யாதிசயத்தாலே இந்தலோகத்திலுள்ளார்க்குத் தாமே ஸகலார்த்த யதார்த்தோபதேசத்தைப்பண்ணின எம்பெருமானாரை அநுஸந்தித்திருக்கும் பலமொழிய எனக்கு வேறொரு தரிப்பில்லையென்கிறார்.

http://acharya.org

மூ.—வண்மையினாலுந்தன் மாதகவாலும் மதிபுரையும்
தண்மையினாலுமித் தாரணியோர்கட்குத் தான் சரணாய்
உண்மைநல் ஞானமுரைத்த இராமாநுசனையுன்னுந்
திண்மையல்லாலெனக்கில்லை மற்றோர்நிலை தேர்ந்திடிலே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
தன்	அர்த்த கௌரவம் பாராதே உபகரிக்கைக்குறுப்பான தம்முடைய,	தான் சரணாய்	தாமே ரக்ஷகராய்க்கொண்டு,
வண்மையினாலும்	ஔதார்யத்தாலும்,	உண்மை	பாரமார்த்திகமாய்,
	துக்கி கண்டுபொறுக்க மாட்டாத,	நல்	விலக்ஷணமான,
மாதகவாலும்	பரமக்ருபையாலும்,	ஞானமுரைத்த	ஜ்ஞானத்தை உபதேசித்த,
மதிபுரையும்	தாபஹராமாய் ஆஹ்லாதகரமான சந்த்ரனைப்போலேயிருக்கிற,	இராமாநுசனை	எம்பெருமானாரை,
தண்மையினாலும்	தண்ணளியாலும்,	உன்னும்	ரக்ஷகராக அநுஸந்தித்திருக்கும்,
இத்தாரணியோர்கட்கு	அறிவினால் குறைவில்லாத இந்த விபூதியிலுள்ளவர்களுக்கு,	திண்மையல்லால்	பலமொழிய,
		தேர்ந்திடில்	ஆராய்ந்துபார்க்கில்,
		எனக்கு	அடியேனுக்கு,
		மற்றோர்நிலையில்லை	வேறொரு தரிப்பில்லை.

தண்மை-தட்பம். அதாவது-குளிர்த்தி. திண்மை-திண்ணிமை. அதாவது-மிடுக்கு. (௭௧.)

வ்யா.—அ.—எழுபத்தொன்றாம்பாட்டு. இப்பாட்டிலே - எம்பெருமானார், தம்முடைய ஔதார்யத்தாலே தம்மை தம்முடைய சேர்த்தியிலே கூட்டியருளினரென்று அநுஸந்தித்து இவர் வித்தராயிருந்தவாறே, அருகேயிருந்தவர்கள், உமக்கு அவர்கள் பக்கலிலே ஜ்ஞானப்ரேமங்களுண்டாகையாலே அவற்றைக்கொண்டு ஈடேறலாமேயென்ன, ஔதார்யத்தாலும், அதுக்கு ஹேதுவான பரமக்ருபையாலும், ஸகல ஜந்துக்களையும் ரக்ஷிக்கும்போது ஒருபாடு செய்யாமைக்குடலாய் ஆஹ்லாதகரனான சந்த்ரனைப்போலேயிருக்கிற தண்ணளியாலும், இந்த பூலோகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் கட்டடங்கத் தாமே ரக்ஷகராய்க்கொண்டு, யதாவஸ்த்திதமாய் விலக்ஷணமான ஜ்ஞானத்தை உபதேசித்தருளின எம்பெருமானாரே ரக்ஷகரென்று அநுஸந்தித்துக்கொண்டிருக்கையே நான் ஈடேறுகைக்கு உடலாய்விடுமித்தனையொழிய என்னுடைய ஜ்ஞானப்ரேமங்கள் அதுக்குடலன்றென்கிறார்.

http://acharya.org

வ்யா.—(வண்மையினாலும்) அர்த்தகௌரவத்தையும், அதி கம்பீரத்வத்தையும் பாராதே ஸர்வரையும் ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பிக்குமதான ஸ்ரீபாததீர்த்தத்தையும், திருவடிகளையும் லோகமெல்லாம் பருகும்படியாகவும் ஸேவிக்கும்படியாகவும் ஸாளக்ராமத்திலே ப்ரதிஷ்டிப்பிக்கைக்கும் பரமகுஹ்யமான சரம ச்லோகார்த்தத்தை பூர்ணமாகக் கொடுக்கைக்கும், "[illegible]" "தத்வேநயச்சிதசிதீச்வரதத்ஸ்வபாவபோகாபவர்க்கததுபாயகதீருதார:" என்றுப் போலே ஸ்ரீபாஷ்யாதிப்ரபந்தங்களைப் பண்ணியருளி ஸர்வவிஷயமாக உபகரிக்கைக்கு உடலான தம்முடைய ஔதார்யத்தாலும்.

இப்படிப்பட்ட ஔதார்யத்துக்கு மூலமேதென்றால் (தன் மாதகவாலும்) "[illegible]" "ஏவம்ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: - ஜீவே துக்காகுலே விஷ்ணோ: க்ருபாகாப்யுபஜாயதே" என்றும், "[illegible]" "ஸந்தப்தம் விவிதைர்துக்கைர்துர்வசைரேவமாதிபி:" என்னும்படியே ஸம்ஸாரசக்ரத்திலே விழுந்து அழுந்திக்கிடக்கிற ஸம்ஸாரிகளுடைய துர்க்கதியைக்கண்டு பொறுக்கமாட்டாத பரமக்ருபையாலும். (தன்மாதகவாலும்) [illegible] ஸ்வாபாவிகமாய் அத்யந்த விலக்ஷணமாய், [illegible] என்னும்படியான தம்முடைய கருணையாலும்.

(மதிபுரையுந் தண்மையினாலும்) ஸர்வஜநாஹ்லாதகனான சந்த்ரனைப்போலே ஸர்வஜநஹ்ருதயங்களையுங் கொண்டு மதுரமான தண்ணளியாலும். தண்மை - குளிர்த்தி. புரை - பெருமை. "[illegible]" "[illegible]" என்கிறபடியே - [illegible] பண்ணிக்கொண்டுபோருகையன்றிக்கே பித்த ரோகத்துக்கு மருந்தாகப் பாலைக்குடிப்பாரைப்போலே ஸர்வப்ரகாரத்தாலும் ஆஹ்லாதகமான தண்ணளியை வடிவாகக்கொண்டிருப்பதென்றபடி.

* (இத்தாரணியோர்கட்குத் தான் சரணாய்) இப்புடைவையிலே, "[illegible]" "உபாஸ்மர்தா" என்றும், "[illegible]" "உபாயோபேயபாவேந தமேவ ஸரணம்வ்ரஜேத்" என்றும் "ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் குலைத்துக்கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமானமொழியகதியில்லை" என்று சொல்லுகிற கட்டளையாலே தாம் மோக்ஷகராய், "[illegible]

http://acharya.org

* இதற்குச் சரியான பாடத்தை கோசாக்ஷரங்களிற் காண்கொள்க.

க்ஷுணோ[illegible]" "[illegible]" "[illegible]ர்த்தாகாத்ரஸம்பவ:" "தஸ்மிந்ராமாநுஜார்யே குருரிதிசபதம்பாதி ஸாக்ஷாத்ருதார்த்தம் ஸமிஷ்டஸ்ரீமத்குருணாம் குலமிதமகிலம் தஸ்ய நாதஸ்யசேஷ:" என்னக்கடவதிறே.

(உண்மைநன்ஞானமுரைத்த) தத்வஹித புருஷார்த்த யதாத்ம்ய ஹிதரூபமாய் ஸாரதமமாயிருக்கிற ஜ்ஞாநத்தை உபதேஸித்த. "[illegible]" "பரஜ்ஞத்வாஸ்தமபாஸ்த்ரஸாஸ்த்ராக இவாம்ர்தம் - ஸர்வஜ்ஞ ஸாஸாரதய்யத்புஷ்பேப்ய இவ ஷட்பத:" என்னக்கடவதிறே. (இராமாநுசனை உன்னுந் திண்மையல்லால்) எம்பெருமானாரே சேஷியென்று அத்யவஸித்திருக்கும்படியொழிய. திண்மை-திண்ணிமை. அதாவது-மிடுக்கு. (மற்றோர்நிலை தேர்ந்திடில்-எனக்கில்லை) என்றாகக்கொண்டு நிரூபித்துப்பார்த்தால் என்னுடைய ஜ்ஞாநமும் ப்ரேமமும் தொடக்கமான வேறு நிலையும் எனக்கில்லை. அகிஞ்சநனும் அவர்க்கு ஸத்யமாயிருக்கிற அடியேனுக்கு நாஸமாக மாட்டாதென்று தம்முடைய பாரமைகாந்த்யத்தை யருளிச்செய்தாராய்த்து. ... ... (௭௪)

உரை.—அ.—எழுபத்துநாலாம்பாட்டு.கீழ்ப்பாட்டில்-"உண்மை நன்ஞானம்" என்று ப்ரஸ்துதமான யதார்த்தஜ்ஞானத்துக்கு விரோதிகளான பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸித்தருளினவையில், ஸர்வேஸ்வரனிலுங்காட்டில் அதிகமாகவே செய்தருளின ப்ரகாரத்தை அநுஸந்தித்து வித்தராகிறார்-இதில்.

மூ.—தேரார்மறையின்திறமென்றுமாயவன்றீயவரைக்
கூராழிகொண்டுகுறைப்பதுகொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம்மிராமாநுசனவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பதப்போதொருசிந்தைசெய்தே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
மறையின்	நித்யாபௌருஷேயமாய் ப்ரத்யக்ஷாதி ப்ரமாண விலக்ஷணமாய் ஆப்ததமமாய் ஸமஸ்தசேதந ஹிதாஹித ஜ்ஞாபகமாயிருக்கிற தம்முடைய ஸாஸந ரூபமான		ருத்துன்னவேதத்திறுடைய,
		திறம்	ப்ரகாரத்தை,
		தேரார் என்று	நிரூபித்து அறிகிலர்களென்று,
		மாயவன்	ஆச்சர்ய ஜ்ஞாநஸக்திகளையுடைய ஸர்வேஸ்வரன்,

http://acharya.org

பதம்.	உரை.
தீயவரை	ஸ்வாஜ்ஞாதி லங்கந பரரான துஷ்டரை,
குறைப்பது	சேதித்தருளுவது,
கூர் ஆழி கொண்டு	கூரிய திருவாழியாலே;
கொண்டல் அனைய	ஸர்வவிஷயமாக உபகரிக்கும்படியாலே மேகத்தோடொக்கச் சொல்லலாம்படியான,
வண்மை	ஔதார்யத்தை யுடையராய்,
ஏரார்	அத்யுத்தமமான,
குணத்து	கல்யாணகுணங்களை யுடையராய்,
எம்	நமக்கு சேஷிகளாயிருக்கிற,
இராமாநுசன்	எம்பெருமானார்,
அவ்வெழில் அம்மறையில்	அந்த விலக்ஷணமான வேதத்தில்,
சேராதவரை	அப்ராமாண்ய புத்தியாலும் அபார்த்த ப்ரதிபத்தியாலும் பொருந்தாதநிலையுடையவர்களை,
சிதைப்பது	பங்கித்தருளுவது,
அப்போதொரு சிந்தைசெய்தே	தாதாத்விகைகளான யுக்திகளாலே.

இதொருவீர்யமிருக்கும்படியே! என்று கருத்து.

குறைக்கை - சேதிக்கை. சிதைக்கை - அழிக்கை. அப்போதொருசிந்தை செய்கையாவது - அப்போதொரு விசாரத்தைப் பண்ணுகை. ... ... (எச)

அவ.—அ.—எழுபத்துநாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே - எம்பெருமானார், தம்முடைய பரமக்ருபாகார்யமான ஔதார்யத்தாலே சேதநரெல்லாரையும் குறித்து யதாவஸ்திதஜ்ஞாநோபதேசம் பண்ணியருளினாரென்று அருளிச்செய்து, இதிலே-ஸதஸத்விவேகஶூந்யராய் ஸ்வாஜ்ஞாதிலங்கநம் பண்ணிப் போருகிற துஷ்டரை, ஸர்வேஶ்வரன் அநேகாவதாரங்களையும் அநேகயத்நங்களையும் பண்ணி சக்ராயுதந்தனைக்கொண்டு வருத்தத்தோடே நிரஸித்தவேபாதியன்றிக்கே, தாம் உபதேசித்த ஜ்ஞாநத்துக்கு விரோதிகளாய் ஜ்ஞாநலவ துர்விதக்தராய்க்கொண்டு திரண்டு கிடக்கிற பாஹ்யகுத்ருஷ்டிகளை தாதாத்விகையான வொருயுக்தியாலே நிரஸித்தாரென்று அவர்தம்முடைய வைபவத்தைக்கொண்டாடுகிறார்.

வ்யா.—(மறையின்திறம்) "[illegible]" "வாசாவிரூப நித்யயா" என்கிறபடியே நித்யமாய், "[illegible]". "அபௌருஷேயதோஷோஜ்ஜிதமா நித்யமிதிர்முக்த வேதாக்யாக்ஷரராஶயே" என்கிறபடியே- ப்ரமப்ரமாதாதிதோஷதுஷ்டபுருஷப்ரணீதமன்றிக்கே அபௌரு

http://acharya.org

த்தியருளினபின்பு. இப்படிக் கிருபைபண்ணியருளின தேவரீருடைய மஹாப்ரபாவமிருக்கிறபடி என்? சீர் - அழகும், மஹத்வமும். ஒன்றுதல் - கூடுதல். தெரியுமில் - ஆராய்ந்து பார்க்குமளவில். தெரிதல் - ஆராய்தல். (மாறு - இல்லை) ஒப்பில்லை. "[illegible]" ([illegible]) என்கையாலே - உன்னுடைய சீருக்கும் இணை தனக்கு ஒப்பாகமாட்டாதென்னுங்காணும் இவருடைய திருவுள்ளத்திலோடுகிறது. "[illegible]" ([illegible] தம்பக்த பரிசர்யாதாத்பர்யம்) என்று சொல்லுகையாலே- இவ்வர்த்தம் ஸம்ப்ரதிபந்நமிறே. மாறு - ஒப்பு.

அன்றிக்கே, அரங்கன்செய்யதாளிணைகள் - பேர்வின்றி - சோர்வின்றி புன்றன் இணையடிக்கீழ் தொண்டுபட்டவர்பால் சார்வின்றி நின்ற வெனக்கு - இன்று பெற்றேன் இராமாநுசா - உன் சேர்ந்தியருமைக்கு - தெரியுமில் - மாறு இல்லை என்று அநுவதித்து-பலவிச்சேஷத்தைச் சொல்லுகையாலே பெரியபெருமாள் திருவடிகளிலே ஸக்தனும் அந்தரங்கரானோதியருடையப்ரபாவத்தை அறியப்பெறாதே தேவரீர் திருவடிகளுக்கு சேஷமாயிருப்பார் பக்கல் சேரப்பொருந்த வெனக்கு அத்தை இன்று லபிப்பித்தருளின தேவரீருடைய அப்ரதிமப்ரபாவமிருக்கிறபடி என்? ஆராய்ந்து பார்க்கில் ஒருவரும் ஸத்ருசரில்லையென்று பொருள் சொல்லவுமாம். ... ... (அக)

உரை.—அ.—எண்பத்திரண்டாம்பாட்டு. "அரங்கன்செய்யதாளிணைகள் பேர்வின்றி யின்று பெறுத்தும்" என்று மேல்சொன்னபேற்றுக்குடலாகத்தமக்குப்பண்ணின உபதேசத்தை அநுஸந்தித்துவித்தராய் எம்பெருமானார் என்னதார்மிகரோவென்கிறார்.

மூ.—தெரிவுற்றஞானஞ்செறியப்பெறாதுவெந்தீவினையால்
உருவற்றஞானத்துழல்கின்றவென்னையொருபொழுதில்
பொருவற்றகேள்வியனாக்கிநின்றானென்னபுண்ணியனோ
தெரிவுற்றகீர்த்தியிராமாநுசனென்னுஞ்சீர்முகிலே.(அஉ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தெரிவுற்ற	ஸ்தானை விவேகத்தில் ஊற்றுத்தை புடைத்தாயிருக்கும்,	உருவற்ற	ஒருவஸ்து பூதமாகக்கொண்டு வடிவுபட்டிராத,
ஞானம்	ஞானத்தை,	ஞானத்து	ஞானத்தைப்பற்றி;
செறியப் பெறாது	சேரப்பெறாதே,	உழல்கின்ற என்னை	ஒன்றிலும் ஊன்றில்லாமல் தட்டுத்திரிகிற வென்னை,
வெந்தீவினையால்	அதிக்ரூரமான கர்மத்தாலே,		சிகாலம் கூடியன்றிக்கே,

பதம்	உரை.
ஒருபொழுதில்	ஒரு க்ஷணகாலத்திலே,
பொருவற்ற	உபமாந ரஹிதமான,
கேள்வியனாக்கி	ச்ருதத்தையுடையேனாம்படி பண்ணி,
நின்றான்	பூமியிலே வந்து அவதரித்தருளினார்; "திக்குற்ற கீர்த்தி" என்கிறபடியே விசேஷஜ்ஞர் அவிசேஷஜ்ஞர் என்னும் விபாகமற எல்லார்க்கும்,
தெரிவுற்ற	ப்ரகாசித்திருந்துள்ள,
கீர்த்தி	குணவத்தா ப்ரதையை யுடையராய், "குணந்திகழ் கொண்டல்" என்கிறபடியே,
சீர்முகிலே என்னும்	பரமோதாரரான,
இராமாநுசன்	எம்பெருமானார்,
என்னபுண்ணியனோ	என்ன தார்மிகரோ.

பதம். உரை.

"உருவற்ற ஞானத்து" என்று பாடமானபோது, உருவென்று - அழகாய், அதாவது - நன்மையாய், அது அறுகையாவது - இன்றிக்கே யொழிகையாய், நன்மை யென்பது தோன்றாதொழிந்த ஜ்ஞானத்திலே யென்கை. அப்போது "தெரிவுற்ற ஞானம்" இத்யாதிக்கு - ஸநகாதியோகத்தில் வைத்தமுடையவஜ்ஞானத்தை ப்ரகாசிக்கப்பெறாதே ப்ரபல கர்மத்தாலே ஒரு நன்மையின்றிக்கேயொழியுமா யிருக்குமுன்னாளுக்கதிலே, "நன்று பல்லோர்கள் தொழுதல்லோம்" என்கிறபடியே நாநாவிதயோனி களிலே ஜநிப்பது மரிப்பதாய்த் தட்டித்திரிகிறவென்னை என்று பொருளாகக்கடவது. தெரிவு-விவேகம். உறுதல் - வைத்தம். அன்றிக்கே, தெரிவுற்ற ஞானம் என்று - ப்ரகாசயுக்தமான ஜ்ஞானமென்றாய் தத்வஸ்திதியை யதாதர்சம்பண்ணுவதுக்குறுப்பான விமலஜ்ஞானமென்னவுமாம். தெரிவுற்ற கீர்த்தி - ப்ரகாசயுக்தையான கீர்த்தி. சீர்முகில் சீரியமுகில்; அழகிய முகிலென்னவுமாம். (

வ்யா — அ. —(எண்பத்திரண்டாம்பாட்டு.) "அரங்கன் செய்ய தாளிணைகள் பேர்வின்றி யின்று பெறுத்துமிராமாநுசன்" என்று இப்ரஸ்துதமான பரமபுருஷார்த்தத்துக்கு உபாயமாக ஸாதனாந்தர ப்ரவ்ருத்திகளிலே மண்டியிருந்து அவ்வஜ்ஞாநத்தைப் பெறமாட்டாதே அதிக்ரூரமான துஷ்கர்மத்தாலே தேஹாத்மாபிமானியாய்க்கொண்டு ஒன்றிலும் ஒருகதி யின்றிக்கே தட்டித்திரிகிற என்னை, "ஆண்டுகள் நாள் திங்கள்" என்றாப்போலே ஒருகாலம் கூடுவன்றிக்கே ஒருக்ஷணமாத்ரத்திலே தானே நிர்ஹேதுகமாக தத்வஹித புருஷார்த்தங்களை தத்யாதாத்ம்யத்தளவு முபதேசித்து,

http://acharya.org

உபமாநரஹிதமான ஶ்ருதத்தையுடையரும்படியன்றிக்கே ஸர்வ விஷயமாக வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகமென்னலாம்படி பரமோதாரரானஎம்பெருமானுக்கன்றி நான் அடிமையென்று அநுஸந்தித்தருளிச்செய்தாரிறே.

வ்யா.—(தெளிவுற்றஞானம்செறியப்பெறாது) தெளிவு - விவேகம். அதாவது - ஆத்மாநாத்மவிஷயமாயிருக்குமவ்ன புத்தி விசேஷம். ஆத்மவஸ்து உபாதேயமென்றும், அநாத்மவஸ்து அநித்யமத்து த்யாஜ்யமென்றும் விவேகிக்கையென்றபடி. (உற்றஞானம்) அதிலே ஊற்றத்தையுடைத்தாயிருக்கும் ஞானம். உறுதல் - ஊற்றம். "[illegible]" ([illegible]) என்று ஶ்ருதியும்சொல்லிற்றிறே. "[illegible]" "[illegible]" (அமாநித்வமடம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம், ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ: - இந்த்ரியார்த்தேஷு வைராக்யமநஹங்கார ஏவ ச, ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்ஶநம் - அஸக்திரநபிஷ்வங்க: புத்ரதாரக்ருஹாதிஷு, நித்யம் ச ஸமசித்தத்வமிஷ்டாநிஷ்டோபபத்திஷு - மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ, அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்த்த தர்ஶநம், ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக்தமஜ்ஞாநம் யததோऽந்யதா) (ஸாவித்யாயாவிமுக்தயே) என்கிறபடியே-மோக்ஷஸாதநவிசேஷ பரிபூர்ணஜ்ஞாநமென்றபடி. அன்றிக்கே, தெளிவுற்றஞானமென்றது-ப்ரகாஶயுக்தஜ்ஞாநமென்றதாய் தத்வத்ரிதய யதாதர்ஶநம் பண்ணுகைக்குறுப்பான ஜ்ஞானமென்னவுமாம். தெளிவு - ப்ரகாஶம். உறுதல் - பொருந்துதல். (செறியப் பெறாது) ப்ராபிக்கப்பெறாதே.

(வெந்தீவினையால்) அநாதிகாலமே பிடித்து இவ்வளவாக நித்யஸம்ஸாரியாய்ப்போந்த என் நிரக்ஷமியச் செய்த அக்ருத்யகரணாதிகளாலே. "வெம், தீ" என்கிற விசேஷணங்களாலே - அதினுடைய அதிக்ரௌர்யம் தோற்றுகிறது. (உருவற்றஞானத்து) உருமாய்த்துவிடக்கிற ஜ்ஞானத்தோடே. ஜ்ஞானத்தினுடைய ஊத்தைதயெல்லாம் போய்த்தென்றபடி. "[illegible]" (அஜ்ஞாநமேதுக்கம்) என்கையாலே-இவ்விஷயங்களை அவகாஹிக்கிற ஜ்ஞானமெல்லாம் உருவற்றஜ்ஞானமித்தனையிறே. உரு-வடிவானதை

 http://acharya.org

யாதும், “[illegible]” (அர்த்தத்தை நெஞ்சு விபோஷிதம் விசதமாகத் தயாரிபம்) என்கையாலே - அதிக்கு வடிவு விஷயமே யாகையாலும், “ஊக்கம்” என்கையாலே - அவ் விஷயாக்காரம் ஸ்ரீயப்பதியாகையாலே தத்விஷயம் ஆன அவகாஹிக்கிற ஞானமெல்லாம், “உருவற்ற ஞானம்” என்னக் குறையில்லையிறே. (உருவின்மையெல்லை) பக்தி ப்ரபத்தி ரூபமான ஸாதனங்களிலே யுன்றிலேயாகிலும் ஒருநிஷ்டையின்றிக்கே கொண்டிப் பசுப்போலே ஸ்வைராசாரியாய்த் தட்டித்திரிகிற அடியேனை. “உருவற்ற ஞானத்து” என்று - பாடமானபோது - உரு என்று - அழகாய், அதாவது - நன்மையாய், அதுவையாவது - இன்றிக்கே பொழிகையாய் - நன்மைபெறாதொழிகிற ஞானத்திலே, “நன்று பல்லோர்கள் தோழமைகொள்ளும்” என்கிறபடியே ஸாதித்த போகங்களில் ஈடுபடுவது விசிப்பதாய்த் திரிகிற வென்னை என்று பொருளாகக்கடவது.

(திருமொழியில்) “[illegible]” (ஸமித்பாணியாய் ஸ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் தன்னையணுகித்தனக்குப் பணிந்தவனுக்கு ஸம்யக்ப்ரசாந்த சித்தாய ஸமான்விதாய, ஏனாக்ஷரம் புருஷம் வேதஸத்யம் ப்ரோவாசதாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம்) என்றும், “[illegible]” (தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஸ்நேந ஸேவயா - உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:- [illegible] - பரீக்ஷ்ய [illegible]) என்றும், “[illegible]” (ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ ஸமுசித சரிதஸ் தத்வபோதாபிலாஷீ ஸுஸ்ருஷுஸ் த்யக்தமாந: ப்ரணிபதநபர: ப்ரஸ்நகாலப்ரதீக்ஷ:- ஸாந்தோ தாந்தோநஸூயு: ஸரணமுபகதஸ் ஸாஸ்த்ரவிஸ்வாஸஸாலீ ஸிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதம் தத்வதஸ் ஸிக்ஷணீய:) என்றும் பஹுப்ரகாரமாகச் சிஷ்யனுடைய நன்மையைப் பரீக்ஷித்தே உபதேசிக்கவேணுமென்று ஸாஸ்த்ரம் சொல்லாநிற்கச்செய்தேயும், உபதேசத்துக்காகத் தாம் திருக்கோட்டியூர் நம்பியையணுகியிருந்து பதினெட்டுத்தரமெழுந்தருளியிருக்கச்செய்தேயும் அவற்றையெல்லாம் தம்முடைய ஔதார்யத்தாலே கடக்கக்கொண்டு என்னைக்கடாக்ஷித்த அத்தனைத் திலேதானே.

http://acharya.org

(பொருவற்றகேள்வியனாக்கி) "ந்யாஸவித்யை" (ஸமாஷ்டேதபஸ்ஸு கர்மஸு) என்கிறபாஷ்யகாரத்தை உட்கொண்டு உபமாநரஹிதமான ஸ்ருதத்தையுடையேனும்படி பண்ணியருளி. பொருவு-உபமாநம். "தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:" "தன்மாக்கியமானமேஷாம்தபஸாமதிரிக்தமாஹு:" என்றும், "ஸத்க்ருத்ய ஸர்வாண்யநுஷ்டாய கர்மாணி ஸாத்யம் ப்ரபத்திர்" "ஸத்கர்மயிஷ்டாபூர்த்தாதி ஸாங்க்யயோகவித்தமா - ஸர்வஜ்ஞபிரமாணஞ்சு தஸ்ய கலாம்கோடிதமீமபி" என்றும், "வேதேஷு கீதாஸு ஸர்வேஷு" (வேதவேதாந்தங்களிலே ஸர்வேச்வரமதத்துரூடனே) என்றுஞ் சொல்லுகிறபடியே ஸர்வோத்தமையான ப்ரபத்தியை உபதேசித்து ப்ரபந்நனும்படி பண்ணியருளி யென்றபடி. (நின்றான்) "அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம். க்ருதக்ருத்ய: ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ" (அபிஷிச்யசலங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்-க்ருதக்ருத்யஸ்ததாராமோ விஜ்வர:ப்ரமுமோதஹ) என்றாப்போலே க்ருதக்ருத்யராய் இத்பூமியிலே தனிக்கோல் செலுத்திக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அவ்வளவும்,"ஸந்திஷ்டமாநா:"(ஸந்நிஹிதமானா:) என்னும்படி யிருந்தாரென்னும்.

(தெரிவுற்றகீர்த்தி இராமாநுசனென்னும் சீர்முகிலே) "நிக்ருஷ்டகீர்த்தி" என்கிறபடியே விசேஷஜ்ஞர் அவிசேஷஜ்ஞர் என்னும் விபாகமற எல்லார்க்கும் ப்ரகாசியா நின்றுள்ள குணவத்தாப்ரதையையுடையராய், "குணம் திகழ்கொண்டல்" என்கிறபடியே என்னுமொக்க பரமோதாரரானஎம்பெருமானார் (தெரிவுற்றகீர்த்தி) ப்ரகாசயுக்தையான கீர்த்தி. சீர்முகில்-சீரியமுகில். முகிலுக்குச்சீர்மையாவது-ஜலஸ்த்தலவிபாகமறவர்ஷிக்கை. (என்னைப்புண்ணியனே) என்னதார்மிகரே. "அந்தருஷ்யஸம்ஸ்ருஷ்டேஸு" "பத்ரம் க்ருதம் ப்ரதிஷ்டம்" என்கிறபடியே ஸர்வேஸ்வரனுடைய முகமலர்த்திக்காக அவனை இப்படி திருத்தி அங்கீகரிக்கலாம்படி பண்ணியருளினரென்றதாய்த்து. (௮௮)

உரை.—௮.— எண்பத்தெட்டாம்பாட்டு. "பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான்" என்னை;உம்முடைய ச்ருதத்துக்கு ஸ்வாபத்தி பெற்று, எல்லார்க்கு மொவ்வாதே பாராவுகதியென்ன; ப்ரபத்தி பண்ணி பரமபதம்பெறுவார்கோடியிலன்று,தேவரீர் திருவடிகளாகிற மோக்ஷத்தை தேவரீர் ஔதார்யத்தாலே பெறுமவனானேனென்கிறார்.

௮௯.—சீர்கொண்டு பேரறஞ்செய்து நல்வீடுசெறிதுமென்னும்
பார்கொண்டமேன்மையர்கூட்டனல்லே னுன்பதயுகமாம்
ஏர்கொண்டவீட்டையெளிதினிலெய்துவனுன்னுடைய
கார்கொண்டவண்மையிராமாநுசவிதுகண்டுகொள்ளே.

http://acharya.org

பதம்.	உரை.
சீர்கொண்டு	சம்யக்ஞாநிகள், ஆநிருசம்ஸ்யாஸம்பததித்வங்கள்குணிவிச்வாஸங்களாதிற ல்பரவ விசேஷங்களையுடையராய்
பேறருஞ் செய்து	பரம தர்மமாகிற ப்ரபத்தியைப் பண்ணி, ஆத்மாநுபமாத்ரமான கைவல்யம் போலன்றிக்கே,
நல்வீடு	பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தை,
செறிதுமென்னும்	ப்ராபிப்போமென்னும்,
பார்கொண்ட	பூமியெங்கும் வ்யாப்தமான,
மேன்மையர்கூட்டனல்லேன்	ப்ரபாவத்தையுடைய பகவத்ப்ரபந்நருடைய திரளுக்குட்பட்டவனல்லேன்;
இராமாநுச	உடையவரே!,
உன்	தேவரீருடைய,
பதயுகமாம்	திருவடிகளிரண்டுமாகிற,
ஏர்கொண்ட வீட்டை	ஸர்வ விலக்ஷணமான மோக்ஷத்தை,
எளிதினில் எய்துவன்	அநாயாஸேந ப்ராபிப்பன்;
	அதற்கு ஹேது,
கார்கொண்ட	ஸர்வவிஷயமாக ஸர்வகாலத்திலும் உபகரிக்கையாலே மேகத்தை ஜயித்திருக்கும்;
உன்னுடைய வண்மை	தேவரீருடைய ஔதார்யம்,
இது	
கண்டுகொள்	இதுதான் சொல்லவேணுமோ, அநுஷ்டாநத்தாலே கண்டுகொள்ளமாட்டீரோ.

"நல்வீடுபெறுதும்" என்றும் பாடஞ் சொல்லுவர்கள்; பார்கொண்டமேன்மை - விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற பூமியிலுள்ளாரெல்லாராலும் கைக்கொள்ளப்பட்ட உத்கர்ஷமென்னவுமாம். ஏர்கொண்ட வீட்டிலென்று பாடமானபோது தேவரீர்திருவடிகளிரண்டுமாகிற விலக்ஷணமோக்ஷத்திலே அநாயாஸேந சேர்வனென்றபடி. ஏர் - அழகு; சொல்லை-உடைத்தானக். திருவடிகளை மோக்ஷமாகச் சொன்னது - ஆசார்யநாத்வத்தாலே. "ஸ்ரீ..." "முக்திர் மோக்ஷோ மஹாநந்த:" என்னக் கடவதிறே. ... ...(அ௩)

வ்யா.—அ.—கீழ்ப்பாட்டிலே - இவர் தம்முடைய நிஷ்டைக்கும் போக்குவீடாக, "பொருவற்ற கேள்வியனாக்கி நின்றேன்" என்று சொன்னவாறே அத்தைக்கேட்டருளி உபமாநரஹிதமான ச்ருதத்தையுடையராம்படி பண்ணியருளினேனென்று நீர் நம்மை ச்லாகித்தீர், உம்மை பொருளாக்கி நாம் அப்படி பண்ணினது,

http://acharya.org

ஒருக்காட்டாக அப்படியன்றி பரமபதத்திலே கொண்டுபோகை க்கு பத்ரங்களைச் சாயன்றோ நாம் அவதரித்தது, ஆகையாலே உங் களுக்கும் உம்மை யொழிந்தார்க்கும் தன்னிலே வ்யாவ்ருத்தி யேதே ன்று எம்பெருமானுக்குத் திருவுள்ளமாக; இவர் அவர்திருமுக மண்டலத்தைப் பார்த்து, என் என்னை யொழிந்தாரெல்லாரை யும்போலே பலச்சாதநநிலைப் பண்ணி பரமபதத்தைப் ப்ராபிப் போமென்றிருக்கேனல்லேனானும். தேவரீர்திருவடிகளாகிற மோக்ஷத்தைத் தேவரீர் ஒருதாசவர்த்தாலேக்கையைப்பண்ணப்பெறக் கடவேனென்று கேஷேவிண்ணப்பம்செய்கிறார்.

வ்யா.—(சீர்கொண்டு) "[illegible]" "[illegible]" இத் யாதிகளாலே சொல்லப்படுகிற ஸமஸ்தமாதிகளென்றும், "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்றும், "என்னால் செய்கேன் யாரேகளைகண் என்னை யென்செய்கின்றாய்" என்றும் சொல்லப்படுகிற ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களென்ன, "[illegible]" "ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம்" என்றும், "[illegible]" "ஜ்ஞாநீத்வாத்மைவமே மதம்" என்றும்சொல்லப்படுகிறஜ்ஞாநித்வாதிகளென்ன இவைதொடக்கமான அதிசயித ஸேஷத்வாதிகுணங்களை யுடையராய். கொள்கை - உடைத்தாகை. (பேறஞ்செய்து) "[illegible]" "த்யாஜ்யமேவாத தபஸாமபிக்ரமாதூர:" என்றும், "[illegible]" "ஸர்வகு ஹ்யதமம்பூய:" என்றும் சொல்லுகிறபடியே பரமகுஹ்யமாய்ப்பரம தர்மமாய் ஸ்வரூபாநுரூபமானப்ரபத்தியைப்பண்ணி. அதாகிறது:- "[illegible]" "ஸ்வஸ்வதந்த்ரபாதப் மேயாத ஜிஹபுரஷிர்ப்பரோ நிர்ப்பயோஸ்மி" என்கிறபடியே- ஆத்மாத்மீயங்களினுடைய ரக்ஷணபாரத்தை அவன்பக்கலிலே போக ட்டுக்கைக்கைப்ராஜுபோதரஞ நிர்ப்பரராயிருக்கை. "பலத்துக்கு ஆத்மஜ்ஞானமும் அப்ரதிஷேதமும்வேண்டுவது" என்று பிள்ளையரு மருளிச் செய்தாரிறே. பேர் - பெருமை. அறம் - தர்மம்.

(நல்வீடுசெறிதுமென்னும்) வீடு - மோக்ஷம். ப்ராப்யவஸ்த் தரகம். அதாவது - "[illegible]" "ஸ்வாத் மாநுபூதிரியாலே முக்திருக்தா" என்கிறபடியே கைவல்யமும் மோக்ஷமாகையாலேதத்வ்யாவ்ருத்யர்த்தமாக "நல்வீடு" என்று அத் தைவிசேஷிக்கிறார். வீட்டுக்கு நன்மையாவது - ஸ்வாத்மாநுபவ மாத்ரமான கைவல்யம்போலே அல்பமாயும் அஸ்திரமாயு மிருக்கையன்றிக்கே, "ஸமமத்தமில்லதோர்காடு" என்கிறபடியே அபரிமிதானந்தரூபமாய், "நலக்கேபோகவெலைக்கொண்டும்" என் கிறபடியே பகவதநுபோகமா யிருக்கை. (செறிதுமென்னும்)

http://acharya.org

இப்படிப்பட்ட பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷத்தை ப்ராபிப்போமென்னும். "கல்வீடுபெறும்" என்னும் பாடம் சொல்லுவர்கள்; ஆகிலும் அர்த்தபேதமில்லை. "[illegible]", "[illegible]" "போகமாத்ரஸாம்யலிங்காச்ச" "யத்வைபஸ்யந் [illegible]" என்று - ஸ்வாத்மாநுபவரூப கைவல்யலக்ஷணமோக்ஷத்தையும், பகவத்ப்ராப்திரூப பரமபுருஷார்த்த லக்ஷணமோக்ஷத்தையும், ஸ்தாநபரமஸாம்யங்களைலேஷிப்பித்து தொகைச்சிலுமருளிச் செய்தாரிறே. (பார்கொண்டமேன்மையர்) பூமியெங்குமொக்க வ்யாப்தமான ப்ரபாவத்தையுடையவரென்னுதல்; விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற பூமியிலுள்ளாரெல்லாராலும் கைக்கொள்ளப்பட்ட வுத்கர்ஷத்தையுடையவரென்னுதல். கொள்கை - வ்யாபிக்கையும், ஸ்வீகரிக்கையும். (கூட்டனல்லேன்) இப்படிப்பட்ட பகவத்ப்ரபந்நருடைய கோஷ்டியிலேயும்பட்டவர்களிலே பொருவனுமிருக்கிறவனல்லேன்.

ஆகில் உம்முடையபடி யெங்ஙனேயென்னச் சொல்லுகிறார் (உன்பதயுகமாமேர்கொண்ட வீட்டை) தேவரீர்திருவடிகளிரண்டுமாகிற விலக்ஷணமோக்ஷத்தை. "[illegible]" "[illegible]" "[illegible]", "குருசேவாபராயணம்" "குருசேவாபராகதி:" "பரமூலமுபாகமிஷ்யாமி பாகவதபர்யவஸாநிதம்" என்றும், "[illegible]" "நித்யம் யதிவரசரணௌ ஶரணம் மமேதம்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வப்ரகார விலக்ஷணமான மோக்ஷத்தை. ஏர் - அழகு. (எளிதினி லெய்துவன்) வருத்தமறப்ராபிப்பன். "உன்பதயுகமாமேர்கொண்டவீட்டில்" என்று பாடமானபோது - தேவரீர்திருவடிகளிரண்டுமாகிற விலக்ஷணமோக்ஷத்திலே யென்றபடி. இவர் இப்பெருப்பேறு பெற்றபின்பு பகவல்லாபத்தையும் ஒருபொருளாக நினைக்கமாட்டார் காணும். திருவடிகளை மோக்ஷமாகச் சொன்னது - ஆநந்தாவஹத்வத்தாலே.

இப்படிச்சொன்னால் உமக்கு இந்தப்ராப்யலாபம் எத்தாலே? அத்தைச்சொல்லிக்காணீரென்ன (உன்னுடையகார்கொண்டவண்மை) "அதுவுமவனதின்னருளே" என்கிறபடியே தேவரீருடைய ஔதார்யமே அதுக்கு ஸாதநமென்கிறார். "கார்கொண்ட" என்கிற விசேஷணத்தாலே - மேகத்திலிதுக்கு சீர்மைக்குண்டான வ்யாவ்ருத்தி சொல்லுகிறார். மேகமானது காலமாகவும் வர்ஷிக்கக்கடவதாய் அப்போதும் அபேக்ஷிதவிடங்களிலே வர்ஷியாதே ஸமுத்ரத்திலும் பர்வதாக்ரத்திலும் அரண்யப்ரதேசத்திலும் வர்ஷிக்கும்; இவருடைய ஔதார்யம் அப்படியன்றிக்கே, கொள்ளக்குறை

வந்நிலங்கிக் கொழுந்துவிட்டோங்கி யிருப்பதானவைபோலே ஸர்வ காலத்திலும் ஸர்வர்க்கும் ஸர்வபலங்களையும் கொடுத்துக்கொண்டிருந்து, மநுஷ்யர்களைப்போலே யிருக்கிற. மநுஜ மேகத்தை பராஜிதமாக்கி என்னை ஸ்வாதீநமாக எழுதிக்கொண்ட தென்றபடி. இப்படிப்பட்ட தேவரீருடைய பரமக்ருபாபூர்வகமாக இந்த ஔதார்யமொன்றுமே அந்தபலத்துக்கு ப்ராபகமென்றபடி. (இராமாநுசா) எம்பெருமானாரே. (இதுகண்டுகொள்ளே) இதுதான் சொல்லவேணுமோ, கையிலங்கு நெல்லிக்கனிபோலேயிருக்கிற இவ்வர்த்தத்தைத்தேவரீர் கண்டுகொள்ளமாட்டீரோ, அடியேன் சொல்லக் கேட்டருளவேணுமென்னுமொருநிர்ப்பந்தமுண்டோ. "[illegible]" «ஸுலபம்ஸ்வகுரும்த்யக்த்வா துர்லபம்யஉபாஸதே லப்தம்த்யக்த்வாதநம் மூடோ குப்தமந்வேஷதிக்ஷிதௌ" என்னக்கடவதிறே. (அசு)

உரை.—அ.—என்பத்தாறாம்பாட்டு. மேல்பெறும் அம்ஸம் கிடக்கச்செய்தே இதுக்குமுன்பு தாம்பெற்றவைதமக்கு ஒரு அவதி யுண்டோவென்கிறார்.

கண்டுகொண்டேனெம்மிராமாநுசன்றன்னைக்காண்டலுமே, தொண்டுகொண்டேனவன்றொண்டர்பொற்றாளிலென் றொல்லைவெந்நோய், விண்டுகொண்டேனவன்சீர்வெள்ளவாரியைவாய்மடுத்தின்று, உண்டுகொண்டேனின்னமுற்றனவோதிலுலப்பில்லையே. ( )

பதம்.	உரை.
எம்இராமாநுசன்றன்னை	இவர் நம்மோடு ஸஜாதியரல்லர் நம்மையுத்தரிக்கவந்தவரென்று அஸ்மத்ஸ்வாமியான எம்பெருமானாரை,
கண்டுகொண்டேன்	உள்ளபடிகண்டுகொண்டேன்;
காண்டலுமே	இப்படி தர்சித்தவளவிலே, அவர் தம்மளவிலே நின்றுவிடாதே,
அவன்தொண்டர்	அவர்க்கு அநந்யார்ஹரானவர்களுடைய,
பொன்தாளில்	அழகிய திருவடிகளிலே,
தொண்டுகொண்டேன்	அடிமைப்பட்டேன்;
என்	என்னுடைய,
தொல்லை	அநாதியாய்,
வெம்	அதிக்ரூரமான,
நோய்	கர்மங்களை,
விண்டுகொண்டேன்	நீக்கிக் கொண்டேன்;
அவன்	அவருடைய,
சீர்வெள்ளவாரியை	குணபூர்ணமாகிற ஸமுத்ரத்தை, பெருவிடாயர் மடுவிலே வாய்மடுத்துப் பருகுமாப்போலே,
வாய்மடுத்து	பெரிய அபிநிவேசத்தோடே,

http://acharya.org

பதம்.	உரை.
இன்றுண்டுகொண்டேன்	இன்று புஜித்துக் கொண்டேன்;
இன்னம்	இன்னமும்,
உற்றன	நான் பெற்றவற்றை,
ஓதில்	சொல்லில்,
உலப்பில்லை	அதுக்கு ஒரு முடிவில்லை.

பதம்.	உரை.
	காண்டலுமே என்றது - கண்டவளவிலே என்றபடி. தொண்டுகொண்டேன் என்றது தொண்டுபட்டேன் என்றதொரு முழுச்சொல்லு; அடிமையைக் கைக்கொண்டேன் என்னுதல். விண்டுதல் - நீங்குதல். வாரி - ஸமுத்ரம். உலப்பு - முடிவு. ... ...(அ௪).

அவ.—அ.—என்பத்துநாலாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே ப்ரதமபர்வநிஷ்டர்கோஷ்டியிலே அந்வயமாகே யிருக்கிறவென்னை சரமபர்வமான எம்பெருமானார் திருவடிகளே பரமப்ராப்யமாக இவனை வ்யவஸித்திருக்கிறானென்று லோகத்தாரெல்லாரும் மதிக்கும்படி பண்ணியருளினரென்று சொல்லி, இதிலே - எனக்கு வகுத்த சேஷியான எம்பெருமானாரைக் கண்ணாரக்கண்டு அந்தக்காட்சியோடே முந்துவிட்டோடிப் படர்ந்து ததீயபர்யந்தமாக வளருமவைபோலே அவர்களுடைய திருவடிகளிலே அடிமைப்பட்டு அதிக்ரூரமான தங் கர்மங்களைக் கட்டடங்கவிடுத்துக்கொண்டு அவருடைய கல்யாண குணாம்ருதத்தை வாயார அள்ளிக்கொண்டு பருகினேன், இன்னமும் பெற்றவற்றைச் சொல்லப்புக்கால் மேல்பெறவேண்டுமவற்றுக்கு ஒரு தொகையின்றிக்கே யிருக்கச்செய்தே இவைதன்னை ஒருவாசகமிட்டு என்னால் சொல்லித் தலைக்கட்டப் போகாதென்கிறார்.

வ்யா.—(கண்டுகொண்டேன்) “[illegible] | [illegible]” “ஸஹஸ்ரபோகிஸமீகிரமில்லேயபோ கண்டத் ஸலோஜ்வலகாரம் விமலோபவீதம் - உத்யத்திவாகரமிவ முல்லணுர் த்தபுண்ட்ரமுருபாதவஸ்துயதிராஜதேஹோ மமாக்ஷே” என்று ப்ரார்த்தித்துப்பெறவேண்டின வடிவழகை ஆகஸ்மிகமாகக் கண்ணாரக் கண்டுகொண்டேன். “கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்,” “திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழு மருக்கனணி நிறமுங்கண்டேன்” இத்யாதிப்படியே உ மயர்வறமதிநலமருளப்பெற்றவர்கள் ததீயரைக்கண்டாப்போலே ஸாக்ஷாத்கரித்தேனென்றபடி. கீர்த்தம் கண்ட ப்ராகாரமேதென்னில் (எம்மிராமாநுசன்றன்னை) “[illegible]” “ஸவிநோராமாநுஜஸ்ஸ்வாமீ” என்றும், “[illegible] | [illegible]” “ஸோஹேதுவாகன க்யாதோவா ஸ்ரீபதிர்வேதநாத்விகைஷ-விதர்க்யாய மஹாப்ராஜ்

http://acharya.org

ளுபஜீவநாய'' என்னும் சொல்லுகையாலே இவர் தம்முடைய கோடியிலேயொருவரல்லர், எங்களை ஸம்ஸாரத்தினின்றும் உத்தரிக்கைக்காக பரமபதத்தினின்றும் ஈனிருத்தவிடத்தேடி வந்தவர் என்றத்யவஸித்துக்கொண்டு அம்மத்யவஸாயியான எம்பெருமானாருடையபடியை உள்ளபடிகண்டேனென்றபடி.

(காண்டலுமே தொண்டுகொண்டேன் அவன்தொண்டர்பொற்றாளில்) இப்படிதர்சித்தவளவிலே அத்யபிநிவேசமானது மென்மேலும் பெருகிவைத்து தம்மளவிலே வடிப்போகாதே அவருக்கு அந்தரங்கரான நம்பியைத் தொடர்ந்து அவர்களுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளிலே எல்லாவடிமைகளும் செய்யவாக அடிமைப்பட்டேன். "காண்டலுமே" என்றது - கண்டவளவிலே யென்றபடி. தொண்டுகொண்டேன் என்றது - தொண்டு பட்டேனென்று ஒருமுழுச்சொல்லு. அடிமையைக்கொண்டேனென்னுதல். "[illegible]'' "த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌ யஸ்த்வத்தாஸதைகரஸதாவிரதாமமாஸ்து'' என்று ஸ்ரீபருமபேசித்தருளினாரிறே. (என்தொல்லைவெந்நோய் விண்டுகொண்டேன்) இப்படிதாஸ்யத்திலே அன்வயிக்கவே அநாதிகாலார்ஜிதங்களாய் ஸர்வேச்வரனுடைய நிக்ரஹரூபமாயிக் குடலாய் அதிக்ரூரங்களான கர்மங்களினுடைய பலமான என்னுடைய ஆத்யாத்மிகாதி துக்கங்களையெல்லாம் கட்டடங்க விடுவித்துக்கொண்டேன். விள்ளுதல் - நீங்குதல்.

(அவன் சீர்வெள்ளவாரியை) அந்த எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களாகிற மஹாஸமுத்ரத்தை; ப்ரவாஹியாகிற ஸமுத்ரத்தையென்றபடி. அவருடைய கல்யாணகுணங்கள் அனேகங்களாகையாலே அவற்றுக்கு நிஸ்ஸீமமாய்க்கொண்டு பரிச்சேத்யமான ஸமுத்ரத்தைப் போலேயாகச்சொல்லவொண்ணுதென்று கரைபுரண்டு ப்ரவாஹியாகிற ஸமுத்ரத்தைப் போலேயாகச்சொல்லுகிறார். விஷயம் அபூர்வமாயிருக்கிறாப்போலே இதுவும் அபூர்வமாய்க்காணு மிருப்பது. அன்றிக்கே அவருடைய கல்யாணகுணபூரமாகிற ஸமுத்ரத்தையென்னுதல். வாரி - ஸமுத்ரம். (வாய்மடுத்து இன்று உண்டுகொண்டேன்) ஆதித்யகிரணங்களாலே தப்தரும் த்ருஷார்த்தருமானவன் மடுவிலே புக்கு வாய்மடுத்து அக்கினைப்பருகுமாப்போலே அமுதனும் இவருடைய விஷயீகாரத்தைப் பெறுமளவும் ஸாம்ஸாரிகதுக்கதாபதப்தராகையாலே அந்த இடரையெல்லாம் தீரும்படி இவருடைய விஷயீகாரத்தைப்பெற்று இவர்தம்மருகேசென்று அந்தக்கல்யாணகுணாம்ருதத்தைப் பெரிய அபிநிவேசத்தோடே வாய்மடுத்து அநுபவித்துக்களித்தேனென்

http://acharya.org

கிறார். க்ஷீராதி ஸத்பதார்த்தங்கள் எமக்கு ரஸித்திருக்கிறாப்போலேயும், "பாலேபோல்சீர்" என்னும்படியான அவருடைய கல்யாண குணங்கள் இவருக்கு ரஸிக்கிறபடி. வாய்மடுத்துண்கையாவது - வாயைத்திறந்து அவற்றுக்கு வாசகமான ஸப்த ராசியையிட்டு அவைதன்னையே யனுபவிக்கை.

(இன்னமுதத்தை) இவ்வளவும் சொல்லிப்போந்த இவையன்றிக்கே இன்னமும் அவர்தம்மாலே நான்பெற்றபேற்றை. (ஓதில்) சொல்லப்புக்கால். (உலப்பில்லை) முடிவில்லை. நான் பெற்றவற்றுக்கு ஒருதொகையில்லாமையாலே கணக்கிட்டுச் சொல்லமாட்டுகிறிலேனென்கிறார். உலப்பு - முடிவு. ... ... (அச)

உரை.—அ.—எண்பத்தஞ்சாம்பாட்டு. "இராமாநுசன்றன்னைக் கண்டுகொண்டேன், அவன்றொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்" என்றீர், இரண்டில் உமக்கு வேற்றுமையிலேயென்ன; எம்பெருமானார்க்கு அனந்யார்ஹராயிருப்பார் திருவடிகளையொழிய என்னாத்மாவுக்கு வேறொருபற்றில்லையென்கிறார்.

அரு—ஓதியவேதத்தினுட்பொருளாயதனுச்சிமிக்க
சோதியைநாதனெனவறியாதுழல்கின்றதொண்டர்
பேதைமைதீர்த்தவிராமாநுசனைத்தொழும்பெரியோர்
பாதமல்லாலென்றனாருயிர்க்கியாதொன்றும்பற்றில்லையே.

பதம்.	உரை.
ஓதிய	நாங்கள் அதிகரித்திருக்கிற,
வேதத்தின்	வேதத்தினுடைய,
உட்பொருளாய்	ஆந்தர ப்ரமேயமாய், "ஸ்ரவஸிகீதா" "ச்ருதிசிரஸி விதீப்தே" என்கிறபடியே,
அதன் உச்சி	அந்தவேதசிரஸ்ஸிலே,
மிக்க சோதியை	மிகவும் ப்ரகாசியா நிற்கிறவனை
நாதன் என அறியாது	ஸர்வநாதனென்று அறியாதே,
உழல்கின்ற தொண்டர்	வ்யஸநிக்க விஷயங்களிலே தொண்டு பட்டுழன்று திரிகிறவர்களுடைய,
பேதைமை	அப்ராப்த விஷய ஸங்கத்துக்கடியான அஜ்ஞானத்தை,
தீர்த்த	போக்கியருளின,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
தொழும்	தொழுகையே நிரூபகமாம்படியான,
பெரியோர்	பெருமையை யுடையவர்களுடைய,
பாதமல்லால்	திருவடிகளை யொழிய,
என்றனாருயிர்க்கு	என்னாத்மாவுக்கு,

பதம்.	உரை.
வாறொன்றும்	வேறு ஏதேனுமொரு
பற்றில்லை	அபாச்ரயமில்லை.

“பேறொன்றுமிற்கும்” என்னும் பாடம்சொல்லுவர்கள். “ஆருயிர்க்கெயாதொன்றும்” என்கிறவிடத்தில் உகரத்தின்மே லேறின இகரம் குற்றியலிகரமாகையாலே, “பல்லுயிராயும்” என்றவிடத்திற்போலே வண்ணம்கெடாமைக்கு அழிக்கை, பூர்வாபரங்களுக்குறுக்கப் படிஞெழுத்தாக எண்ணக்கடவது. (அ௫)

வ்யா.—அ.— என்பது தஞ்சாம்பாட்டு. “இராமாநுசன்றன் இணை - கண்டுகொண்டேன்” என்றும், “அவன்தொண்டர்பொற்றுளில்-தொண்டுகொண்டேன்” என்றும் தத்விஷயத்திலும் ததீய விஷயத்திலும் இப்படி ஈடுபடாநின்றீர், ஆனால் இவ்விரண்டிலும் வைத்துக்கொண்டு உமக்கு எத்விஷயத்திலே ஊற்றமிருக்குமென்ன; அருகேயிருந்து கேட்டவர்களைக்குறித்து நாம் அதிகரித்துப்போந்த வேதத்தினுடைய பொருளைக்கொண்டு அத்தவேதசிரஸ்ஸுக்களான வேதாந்தங்களிலே ப்ரதிபாதிதனானவனே நமக்குவகுத்த சேஷியென்று அறியப்பெறாதே அப்ராப்த விஷயங்களிலே தொண்டுபட்டும் தாரகங்களிலே இட்டுப்பட்டும் போருகிற ஸம்ஸாரிகளுடைய அறிவுகேட்டை விடுவித்த எம்பெருமானார்க்கு அநந்யார்ஹசரணர்களுடைய திருவடிகளையொழிய என்னுடைமைக்கு வேறொரு அபாச்ரயமில்லையென்கிறார்.

வ்யா.—(திவ்யவேதத்தினுட்பொருளைக்) “[illegible]” “[illegible]” “[illegible]” “[illegible]” “அஷ்டவர்ஷம்ப்ராஹ்மணமுபநயீத, தமத்யாபயேத்” “ஸ்வாத்யாயோத்யேதவ்ய:” “வேதமநூச்யாசார்யோந்தேவாஸிநமநுஶாஸ்தி” “ஸ்வாத்யாயாந்மாப்ரமத:” என்கிறபடியே - அத்யயநவிதிபாரதந்த்ர்யத்தாலே, நாம் அதிகரித்த வேதத்தினுடைய அவாந்தர ப்ரமேயமாய், “[illegible]” “பதிம்விஶ்வஸ்யாத்மேஶ்வரம்” என்றும், “[illegible]” “ஸர்வதந்த்ரஸமாநதந்த்ரம்” என்றும்சொல்லுகிறபடியே ஸாரதமமாய்,

(அதனுச்சியிக்கசோதியைநாதனெனவறியாது) “[illegible]” “வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்ய:” என்றும், “[illegible]” “வேதவேத்யேபரேபும்ஸி” என்றும், “[illegible]” “வேதேராமாயணேபுண்யே” என்றும், “[illegible]” “ஆதௌமத்யேததாந்தேசவிஷ்ணு: ஸர்வத்ரகீயதே” என்றும், “உளன்சுடர்மிகுசுருதியுள்” என்றும், “[illegible]” “ஸ்ருதிஶிரஸிவிதீப்தே” என்றும் சொல்லுகிறபடியே

http://acharya.org

வேதவிதக்ரேஸரர்களாலே கட்டடங்கப்ரதிபாதிக்கப்படுமவர், "[illegible]" "[illegible]" "[illegible]" "தெளிவுற்ற [illegible] ஸாம்ராஜ்யம்" என்கிறபடியே நிரவதிகமாக ப்ரகாசிக்கிற [illegible], "[illegible]" "[illegible]" என்கிறபடியே [illegible] ப்ராப்ய [illegible] (உழன்றெந் தொண்டர்) "[illegible]" "[illegible]" என்றும், "[illegible]" "[illegible]" என்றும், "[illegible]" "[illegible] - [illegible] - [illegible]" என்றும் சொல்லுகிறபடியே [illegible] என்றுமொக்க [illegible], "[illegible]" "[illegible]" என்றும், "[illegible]" "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே - [illegible] சொல்லுகிறபடியே [illegible] பெரியபெருமாளுடைய.

(பேறுமளித்த) "[illegible]" "தேவும் எப்பொருளும் படைக்க [illegible] - [illegible]" என்கிற ஸர்வேச்வரனைப்போலே, "[illegible]" "பரபக்த்யாதிகளையுடையரான - ஸ்ரீமானான [illegible] ராமாநுஜமுனிவரர்" என்றும் - [illegible] அப்ராப்ய [illegible] அனுக்ரஹத்தை [illegible] போக்யமென்றிருக்கிறார். (இராமாநுசன் தொழும் பெரியோர் பாதமல்லால்) இப்படியவர் வேதாந்த [illegible] எம்பெருமானாரைத் [illegible] ரக்ஷகராக அனுபவித்திருக்கும் மஹாத்மாக்களுடைய பரமப்ராப்யமான திருவடிகளை

http://acharya.org

பொழிய. பெரியோர்- ஆழ்வான், ஆண்டான், பிள்ளான்தொடக்க மானவர்கள்படி. (தொழும்பெரியோர்) "அடியைத் தொடர்ந் தெழுமனங்கள்" என்று சொல்லவேண்டும்படி அவனை ஆச்ரயி த்திருந்த பாண்டவர்கள், "பெரியோர்" என்றேபடியே உருவற்ற ஞானாகாரப்போக்தாக்கள்; இவரை ஆச்ரயித்தவர்களுக்கு அப்ப டிப்பட்ட குறையொன்று மின்றிக்கே அத்தாலேயிப்படிப்பட்ட பெருமையொன்றுமேனாலும் மூத்படவுண்டானது. (என்றனுயி ர்க்கு) "அவன்தொண்டர் பொற்றாளில் தொங்குமேன் டேன்" என்னும்படியான அத்யவஸாயத்தோடே போந்திருக் கிறவென்னுடைய விலக்ஷணமான ஆத்மாவுக்கு. (யாதொன்றும் பற்றில்லையே) வேறொரு அபாச்ரயமில்லை. "......" "வாசா யதீந்த்ர" என்கிறச்லோகத்தாலே இவ்வர்த்தத்தையும் ஜீயரு மருளிச்செய்தாரிறே. ... ... (அ௬)

உரை.—அ.—என்பத்தாறும்பாட்டு. "இராமாநுசனைத் தொ ழும் பெரியோர்பாதமல்லாலென்றனுயிர்க்கு யாதொன்றும் பற்றில் லை" என்றவனந்தரம், முன்பு அப்ராப்தவிஷயங்களைப் பற்றியிருப் பாரை பந்துக்களாக நினைத்து அவர்களளவிலே தாம்ப்ரவணராய்ப் போந்தபடியை யநுஸந்தித்து, இனி அது செய்யேன், எம்பெ ருமானாரைச்சிந்திக்கும்மனமுடையார் யாரேனுமாகிலும் அவ ர்கள் என்னை ஆளவுரியவர்களென்கிறார்.

மூ.—பற்றாமனிசரைப்பற்றியப்பற்றுவிடாதவரே
யுற்றாரெனவுழன்றோடிநையேனினியொள்ளியநூல்
கற்றார்பரவுமிராமாநுசனைக்கருதுமுள்ளம்
பெற்றாரெவரவரெம்மைநின்றாளும்பெரியவரே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பற்றா	ஒன்றுக்கும்பற்றாத,	ஓடி	அவர்கள் முகத்தில் விழிக்கப் பெறாதே போதே வென்று ஓடி,
மனிசரை	அசாத்ரமநுஷ்யரை,		அவர்களுடைய அச்சேஷ்டிதச்சேஷ்டிதங்களில் துண்டான அநர்த்த சோகத்தாலே,
பற்றி	ஆச்ரயித்து,		
அப்பற்று விடாதவரே	அந்தஆச்ரயணம் விடாதே நிற்குமவர்களையே,		
உற்றாரென	பந்துக்க ளென்று அநுஸந்தித்து,		
உழன்று	அவர்பின்னே திரிந்துழன்று,	இனிநை யேன்	இனி...
	அவர்கள் விஷயமான ப்ராவண்யத்தாலே,		

http://acharya.org

பதம்.	உரை.
ஒள்ளிய	ஸ்வயாக்ஷமாக ப்ரகாசிப்பிக்கும்,
நூல்	சாஸ்த்ரங்களை,
கற்றார்	அதிகரித்திருக்குமவர்கள், தங்கள் கல்விக்கு ப்ரயோஜந மிதுவென்று,
பரவும்	ப்ரேமத்தாலே அடைவு கெட ஸ்தோத்ரம் பண்ணுகின்றவன்ன,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
கருதும்	அநுஸந்திக்கையே யாத்ரையா யிருக்கும்,
உள்ளம்	மனஸ்ஸை,
பெற்றார்	நிதிபெற்றாப்போலே லபித்திருக்குமவர்கள்,
எவர்	யாவர் சிலர், அவர்கள் குலசரண கோத்ரங்கள் ஏதேனுமாகவமையும்;
அவர்	அவர்கள்,
எம்மை	நம்மை,
நின்றாளும்	இவ்வாத்மா உள்ளளவும் ஒருபடிப்பட அடிமை கொள்ளும்,
பெரியவர்	மஹாநுபாவர்.

அதவா, பற்றுமனிசர் இத்யாதிக்கு-ஸூத்ரம் துஷ்யமை ஆச்ரயித்து அந்த ஆச்ரயணம்விடாதே அவர்களையே உத்தாரகராக அநுஸந்தித்து உழன்று ஓடிநைதலே யென்னவுமாம். (அ௬)

வ்யா.—அ.—எண்பத்தாறாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே,"இராமாநுசனைத்தொழும் பெரியோர் பாதமல்லாலென்றனாருயிர்க்கி யாதொன்றும் பற்றில்லை" என்று-தம்முடைய நிஷ்டையைச்சொன்னார். இப்பாட்டிலே - மூன்றுகாலமெல்லாம் அப்ராப்த விஷயங்களைத் தங்களுக்கு அபாச்ரயமாகப் பற்றிக்கொண்டு போந்து அவர்களைபந்துக்களாக நினைத்து அவர்களளவிலே,"தாயே தந்தையென்னுந் தாரமே கிளைமக்களென்றும்" என்கிறபடியே தாம் அபிமானித்த ப்ரகாரங்களைப் போந்தபடிகளை யநுஸந்தித்து [illegible]; அப்படி செய்யக் கடவேனல்லேன், நல்ல ஜ்ஞாந புருஷார்த்தங்களை உள்ளபடி யறியக்கடவரான பெரியோர்களாலே ஸ்துதிக்கப் படுகிற எம்பெருமானாரைச் சிந்திக்கும் மநஸ்ஸை, நிதிபெற்றாப் போலே லபித்தவர்கள் ஆரேனுமாகிலும் அவர்களே என்னை ஆளவுரியவர்களென்கிறார்.

வ்யா.—(பற்றுமனிசரைப்பற்றி)"பெரியேனாயினபின் பிறர்க்கே யுழைத்தேழையானேன்" என்றும், "ஏதத்ப்ரஹ்மணம்""பாத்ர வ்யாபாரலோலா" என்றுஞ் சொல்லுகிறபடியே ஐம்பதி ஸர்வ வ்யாபாரங்களைய் ஆபதிஅரக்ஷகராயுமிருக்கையாலே ஒன்றுக்கும் பற்றுதன்-ஸத்ரமதுஷ்யமை ஸ்வரூபநாசகமான அடிமைத்தொ

http://acharya.org

ழில்செய்வதாக ஆச்ரயித்து. (அப்பற்றுவிடாதவரே) அந்த ஆச்ரயணத்தை விடமாட்டாதவரே. (உற்றாரெனவுழன்றோடி) இப்படி ஆபாஸபந்துக்களானவர்களை மாத்ருபித்ருபௌத்ராதிகளான ஸர்வவிதபந்துக்களென்றும் நிர்வாஹகரென்றும் ரக்ஷகரென்றும் ப்ரமித்து அவர்கள் பின்னே திரிந்து அவர்களைப் பார்க்குமளவும் நின்றவிடத்தில் நிற்கவொட்டாத அதிமாத்ர ப்ராவண்யத்தாலே அவர்களிருந்தவிடம் தேடிக்கொண்டு ஓடி. அவர்கள் தன்னிலும் தண்ணியரென்று அறியமாட்டாதே அவர்களாலே என்றனக்கு ஒருபுருஷார்த்தஸித்தி யுண்டென்று அவர்கள்சிறுக்களுக்குப் பலபடியாலும் மோதி. ஓடி - ஓடிப்போயென்றபடி. (நையெனினி) எம்பெருமானாருடைய விஷயீகாரத்தைப் பெற்றபின்பு இப்படி செய்து மிதிலருகேன். அவர்களுடைய ஸம்ச்லேஷவிச்லேஷங் களிலுண்டான ஹர்ஷசோகங்களாலே மிதிலருகேனென்றபடி.

அன்றிக்கே, (பற்றாமனிசர்) இத்யாதிக்கு - க்ஷுத்ரமனு ஷ்யரை யாச்ரயித்து அந்த ஆச்ரயணம் விடாதே அவர்களையே உற்றாராக அநுவர்த்தித்து உழன்று ஓடுகையென்று பொருளாகவுமாம். “[illegible]” “ஈச்வரத்வாரபாலிர்விதர்த்திகா ஆராவிகாயை ஸநிவேதயமஞ் சவி:” என்கிறப்போலே அவர்களுக்கு ஒரு கைங்கர்யமென் கிறாரானும்.

(ஒன்றியநூல்கற்றார் பரவும்) “[illegible]” “[illegible]” “ருசோயஜூம் ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச - ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம் யச் சான்யதபி வாங்மயம்” “ஸ்வஜ்ஞாநப்ராபகஞ்ஜ்ஞாநம் ப்ராப்யஞ்ஜ்ஞாநம் முமுக்ஷுபி: ஜ்ஞாநத்ரயமுபாதேயமேதந்ந்யந்நகிஞ்சந” என்றும், “சுடர்மிகுசுருதி” என்றும் சொல்லுகிறபடியே ஸகலவேதஸங்க்ர ஹமாய் தத்வஹிதபுருஷார்த்தங்களை உள்ளபடி ப்ரகாசிப்பிக்கு மதான ரஹஸ்யத்ரயத்தை ஸ்வாசார்யரான எம்பெருமானாருடைய ப்ரஸாதத்தாலே பெற்று, அதுக்கு ஆந்தர ப்ரமேயமாய் தத்வார்த் த்வரூபமாய் ஸாரதமமாயிருந்துள்ள அர்த்தம், “[illegible]” “[illegible]” “ஆசார்யதேவோபவ” “தேவமிவ ஆசார் யமுபாஸீத” என்றும், “[illegible]” “யஸ்யதேவே பராபக்திர் யதாதேவே ததாகுரௌ” என்றும், “[illegible]” (தேவவத்ஸ்யாதுபாஸ்ய:) என்றும், “[illegible]” “தஸ்மிந்ராமாநுஜார்யே குருரிதி சபதம்பாதி நாந்யத்ர” என்கையாலே - எம்பெருமானாரேயென்று

http://acharya.org

தெளிந்து நிலைபெற்றிருக்குமவர்கள் தந்தாமுடைய கல்விக்கு ப்ரயோஜநம் இதுவேயென்று ப்ரேமத்தாலே அடைவுகெட ஸ்தோத்ரம் பண்ணுகின்றன.

(இராமானுசனை) எம்பெருமானாரை. (கருதுமுள்ளம் பெற்றவர்) "[illegible]" "ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே" என்றும், "[illegible]" "சரணமேமி ராமாநுஜம்" என்றும், "ராமானுசமுனிவன் வாய்த்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன்" என்றும், "இதத்தாயிராமானுசன்" என்றும் சொல்லுகிறபடியே அநுஸந்திக்கையே யாத்ரையாயிருக்கும் திருவுள்ளத்தையுடையவர், "எக்குற்றவாளரெது பிறப்பேதியல்வாக நின்றோர்" என்கிறபடியே குற்றத்தையும் தண்ணிய ஜந்மத்தையும் நிஷித்த வ்யாபாரத்தையுமுடையவராகிலும்.

(அவர் எம்மை நின்றாளும் பெரியவரே) அப்படிப்பட்ட குற்றத்தையும் பிறப்பையும் இயல்வையுமுடையவர்களே நமக்கு சேஷிகளாய், நம்மை யாவதாத்மபாவியாக அடிமைகொள்ளாதே ஒருபடிப்பட நின்று பரதேவதாவிநியோகார்ஹமாம்படி ஆளாகின்றன ஸ்வாமிகள். "பயரேனுமவர்கண்டீர்" "அவரெம்மை நின்றாளும் பெரியவரே" என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தாரிறே. "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "ஸ்வபசோபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக:" "[illegible]" பத்திரண்ட [illegible] என்னக்கடவதிறே. ... ... (அ)

உரை.—அ.—எண்பத்தேழாம்பாட்டு. சேதநருடைய ஜ்ஞாநவ்யவஸாயங்கள் கலக்கும்படி ஆக்ரமியாநின்றன கலிகாலத்திலே நமக்கு இந்த வ்யவஸாயம் ஒருபடிப்பட நில்லாதிறே யென்ன; அதை ஆக்ரமிப்பது எம்பெருமானாராலே உபக்ரமமான ஜ்ஞாநத்திலே அகப்படாதாயுள்ளவர்களை யென்கிறார்.

http://acharya.org

மூ.—பெரியவர்பேசிலும்பேதையர்பேசிலுந்தன்குணங்கட்
குரியசொல்லென்றுமுடையவனென்றென்றுணர்வின்மிக்
தெரியும்வண்கீர்த்தியிராமாநுசன்மறைதேர்ந்துலகில்[கோர்
புரியும்நன்ஞானம்பொருந்தாதவரைப்பொருங்கலியே. ()

பதம்.	உரை.
பெரியவர்	பேசுகைக் கீடான ஜ்ஞாந ஶக்திகளை யுடையரா யிருக்கும் பெருமையுடையவர்,
பேசிலும்	சொல்லிலும்,
பேதையர்.	அஜ்ஞாந ஶக்தி களுக்கு எல்லையா யிருக்கும் அளவிலிகளானவர்கள்,
பேசிலும்	சொல்லிலும், அவர்களுடைய ஜ்ஞாநஶக்திகளா லெல்லைகாண வொண்ணாதபடியாய் இவர்களுடைய அஜ்ஞாநாஶக்திகளால் தமக்குஞ்சிறியனென்று மீள வேண்டாதபடியாய்,
தங்குணங்கட்குரிய	இப்படித்தங்கள் குணங்களுக் கீடாகப் பேசலாம்படி யிருக்கிற,
சொல்	தம்முடைய ஸ்வரூபாதிகளுக்கு வாசகமான ஶப்தங்களை,
என்றும்	ஸர்வ காலத்திலும்,
உடையவ னென்றென்று	உடையரா யிருக்குமவரென்று,

பதம்.	உரை.
உணர்வில் மிக்கோர்	ஜ்ஞாநாதிகரானவர்கள்,
தெரியும்	பலகாலும் விவேகித்தநுஸந்தியா நின்றுள்ள,
வண்கீர்த்தி	திவ்ய கீர்த்தியை யுடையரான,
இராமாநுசன்	எம்பெருமானார்,
மறை	வேதத்தை,
தேர்ந்து	ஆராய்ந்து,
உலகில்	லோகத்திலே,
புரியும்	உபகரித்தருளின,
நன்ஞானம்	விலக்ஷணமான ஜ்ஞாநத்தில்,
பொருந்தாதவரை	சேராதவர்களை,
கலிபொரும்	கலி மேலிட்டு நலியும்.

அந்த ஜ்ஞாநத்தில் சேர்ந்தவர்களை நலியாதென்று கருத்து.

"குணங்கட்குரிய சொல்லென்று முடையவன்" என்று பாடமானபோது - தங்களுடைய ஜ்ஞாநஶக்திகளும் அஜ்ஞாநாஶக்திகளுமாகிற குணங்களுக் கீடாகப் பேசும் ஶப்தமித்தனையெல்லாம் இவையென்றுதல், இது போருமென்றுதல் சொல்லச் சேர்த்தியாயிராதே, அபரிச்சேத்யமஹிமாவாலும் அளவிறந்த ஸௌஶீல்யத்தாலும் சேரும்படியா யிருக்கும் ஸ்வாமியென்னும் பொருளாகக்

http://acharya.org

பதம்.	உரை.	பதம்.	உரை.

கடவது. ஒன்றுதல் - கூடுதலாய் - சேர்ந்திக்கு வாசகமாகிறது. "நன்குணங்கட்கு" என்றும் பாடம்சொல்லுவர்கள். அப்போது, பெரியவர் பேசிலுமாம், பேதையர் பேசிலுமாம், அவரவர்களளவுக்கிடாகப் பேசலாம்படி தம்முடைய குணங்களுக்கு ப்ராப்தமான சொல்லையென்று முடையாயிருக்குமவனென்று பொருளாகக் கடவது. உரியவென்றது-தக்கவென்றபடி. தெரிதல் - விவேகித்தல். வன்மை - அழகு. தேர்தல் - ஆராய்தல். புரிதல் - கொடுத்தல். பொருந்துதல் - சேருதல். ... ... (அஎ)

வ்யா.—அ.—எண்பத்தேழாம்பாட்டு. "அவரெம்மைநின்றாளும்பெரியவரே" என்று—ததீயர்விஷயமாக உமக்குண்டான ப்ராவண்யத்தைச்சொன்னீர், ஆனால்சேதநருடைய ஜ்ஞாநவ்யவஸாயப்ரேமங்கள் கலக்கும்படி ஆச்சர்யமாயின்றன்றோ இந்த கலிகாலத்திலே உமக்குஇப்படிப்பட்டவ்யவஸாயம் என்றுமொக்கவொருபடிப்பட்டிருக்கக் கூடுமோவென்று அருகேயிருப்பார் சிலர்கேட்க; பரத்வஸௌலப்யாதி குண பரிபூர்ணராகையாலே, அளவுடையாரும் அறிவிலிகளாயுமிருக்கிற அதிகாரிகள் ஸ்தோத்ரம் பண்ணப்புக்கால் அவரவர்களுடைய அதிகாரத்துக்குத் தகுதியான பேச்சுக்களாலே பேசுகைக்கீடானஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடையரான எம்பெருமானாராலே உபதேசிக்கப்பட்ட விலக்ஷணஜ்ஞாநத்தைப் பெறாதேயிருந்தவர்களை அந்தகலிகாலம் ஆக்ரமித்து ஜ்ஞாநப்ரமஸத்தைப்பண்ணுமித்தனையொழிய அந்த ஜ்ஞாநத்தைப் பெற்றவென்னை ஆக்ரமிக்கமாட்டாது, ஆகையாலே எனக்குஇந்தவ்யவஸாயம் யாவதாத்மபாவியாக நடக்கத்தட்டில்லையென்று திருவுள்ளமாகஅருளிச்செய்கிறார்.

வ்யா.—(பெரியவர்பேசிலும்) ஸ்தோத்ரம்பண்ணுகைக்கீடான ஜ்ஞாநஶக்திகளையுடையராயிருக்கும் பேரளவுடையார் ஸ்தோத்ரம் பண்ணிலும். (பேதையர்பேசிலும்) ஸ்தோத்ரம்பண்ணாதே கைவாங்கியிருக்கைக்கீடான அஜ்ஞாநாஶக்திகளுக்கிடமாயிருக்கும் அறிவிலிகள் ஸ்தோத்ரம் பண்ணிலும். ஜ்ஞாநாதிகரானவர்கள் தங்களுடைய ஜ்ஞாநஶக்த்யாதிகளாலெல்லைக்காணவொண்ணாத வைபவத்தையுடையவரென்று ஸ்தோத்ரத்தில் நின்றும் மீளவேண்டும்படியும், அஜ்ஞரானவர்கள் தங்களுடைய அஜ்ஞாநாஶக்திகளையநுஸந்தித்துக்கொண்டு அவருடையவைபவமெங்கே, அஜ்ஞரான நாமெங்கே? அவர் வைபவத்தை நாம் ஸ்துதிக்கை வஸிஷ்டனைச் சண்டாளன் ஸ்தோத்ரம்பண்ணப்போனபடியா

http://acharya.org

மென்ற ஸ்தோத்ரத்தில்நின்றும் மீளவேண்டி வந்தபடி. (தன் குணங்கட்குரிய சொல்லென்றுமுடையவன்) அவ்விருவருடையவும் ஜ்ஞாநசக்த்யாதிகளுக்கும் அஜ்ஞாநாசக்த்யாதிகளுக்கும் தரும்படி தம்மை யமைத்துவைத்து அவற்றுக்குத் தகுதியாக அவ்விருவரும் ஸ்துதிக்கலாம்படியிருக்கிற தம்முடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளுக்குத் தனித்தனியே வாசகமான சப்தங்களெல்லாவற்றையுமுடையவர். ஸநந்தநாதிகள் ஸர்வஜ்ஞத்வாதிகளையும் தெளிந்துக்கொண்டு போந்த மாஹாத்ம்யத்தையுடையவ ரானாப்போலே எத்தனையேனும் ஜ்ஞாநசக்த்யாதிகளையுடையாரும் அவருடையவையத்துக்குத் தகுதியாகப் பாசுரமிட்டுச்சொல்லமாட்டார்கள். இப்படியானபின்பு அஜ்ஞாநாசக்திகளையுடையவர்க்குச் சொல்லவேண்டாவிறே. ஆனாலும் அவர்கள் தந்தாமுடைய பக்திபலாத்காரத்தாலே வந்து நிற்கப்புக்கால் அவர்களுடைய ஸ்துதிக்குத் தகுதியாம்படி தம்மையமைத்து விஷயமாக்கின ஸௌசீல்யகுண ஸித்தியென்றபடி. என்று என்றது-இப்படி சொல்ல வென்றபடி. "தம்குணங்கட்கு" என்று பாடமானபோது - தந்தாமுடைய ஜ்ஞாநசக்திகளும் அஜ்ஞாநாசக்திகளுமாகிற குணங்களுக்கீடாகப் பேசும் சப்தமித்தனையிகையென்றுதல், இது பொருந்தென்றுதல், சொற்சேர்த்தியாலேசதே அபரிச்சேத்யமஹிமையாலும் அளவிறந்த ஸௌசீல்யத்தாலும் சேரும்படியிருக்கும் ஸ்வாமியென்று பொருளாகக்கடவது. ஒன்றுதல்-கூடுதலாய்-சேர்த்திக்கு வாசகமாகிறது. இதுவே யதார்த்தம், விஸத்ருசமாகச் சொன்னார்களல்லர் என்று அவர்கள் பண்ணும் ஸ்தோத்ரங்களினுடைய ஸமீசீநதையைத் தாபிக்கையென்றபடி. உரியவென்றது - தக்கவென்றபடி. உடையவனென்றது-ஸ்வாமியென்றபடி. "தம்குணங்கட்கு" என்றும் பாடஞ்சொல்லுவர்கள்; அப்போது - பெரியவர் பேசினுமாம், பேதையர்பேசினுமாம், அவர்கள் தந்தாமுடைய அளவுகளுக்கீடாகப் பேசலாம்படி தம்முடைய குணங்களுக்கு ப்ராப்தமான சொல்லையென்று முடையவரா யிருக்குமவரென்று பொருளாகக்கடவது.

(உணர்வில்மிக்கோர்) ஜ்ஞாநசக்தியினில் மிக்கார் "இவர்களே ஸர்வஜ்ஞர்கள் இவர்களே ஸர்வஶக்தர்கள்" என்னும்படி மஹர்ஷிமதிக்கல் மதிக்கப்பெற்றவர்கள். (தெரியும் வண்கீர்த்தி) தெளிந்துகொண்டு, "கவிபுக்கெழுக்கண்டுகொண்மின்" என்னும்படி பவித்ரதாசர்ய விஸ்தாரத்தைக் கொடுக்கும்படியாயிருக்கிற அழகிய கீர்த்தியையுடையவரான. தெரிதல்-விவேகித்தல். வண்மை-அழகு. (இராமாநுசன்) எம்பெருமானார். (மறைதேர்ந்தவன்) "[illegible]" "தம்பிரானுமக்கதகம்" என்கிறபடியே தன்னுடைய உட்பொருளைத் தெரியப்புக்கார்க்கு தான் அதிஸூக்ஷ்மமாயிருக்கையாலே வேதத்துக்கு "மறை" என்று பேராய்த்து. இப்படிப்பட்ட வேதத்தை, "[illegible]

http://acharya.org

ஷீ" "இதிஹாஸபுராணாப்யாம்வேதம்ஸமுபப்ரும்ஹயேத்" என்றபடியே உபப்ரும்ஹணத்தைக்கொண்டு அர்த்தவிசேஷாதிகளெல்லாம் ஸாரதமமாக நிர்ணயித்து வேதார்த்தஸங்க்ரஹ ஸ்ரீபாஷ்யாதிகளைப் பண்ணியருளினவென்றபடி. தேர்தல் - ஆராய்தல்.

(உலகில் புரியும்நன்ஞானம்) இந்த ஜ்ஞானப்ரகாரமான லோகத்திலே அவற்றை வ்யாக்யானம்பண்ணி ஆசார்யஸிம்ஹாஸனமாக எல்லார்க்கும் உபதேசித்த விலக்ஷணமான ஜ்ஞானத்திலே. புரிதல்-கொடுத்தல். (பொருந்தாதவரை) இப்படியெல்லார்க்கும் உபதேசித்துப் போகாநிற்க,உபயக்கொண்டாரைப்போலேவிஸ்வாஸமாகத் யுமையாரும் சர்ப்பமிர்ப்பாக்யமையாரும் அக்ஷமியாதவர்களை. உபதேசத்துக்கு கூட்டபடாதவர்களையென்றபடி. பொருந்துதல் சேருதல். (பொருங்கலியே) கலிதோஷம்வந்து ஆக்ரமிக்கும். கலிவந்து மேலிட்டு கலியத்தொடங்குமென்றபடி. ஆகையாலே எம்பெருமானாருடைய விஷயீகாரத்தாலே அந்த விலக்ஷணஜ்ஞானத்தைப் பெற்றிருக்குமவர்கள் எவர்களேயாகிலும் அவர்களை கலிகலியமாட்டாதென்றதாய்த்து. "காலனும் புலனும் லைத்துக் கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து - காலவிட்டுழிதருகின்றோம் நமன்றமர்தலைகள் மீதே" என்று இவ்வர்த்தத்தைத் தொண்டரடிப்பொடியாழ்வாரும் அருளிச்செய்தாரிறே. "[illegible]" "கருப்பாகலதாமயவிஷயமுகச்சக்தி" என்றசுருதியும், "[illegible] [illegible]" "[illegible]" "பரிஹாரமதுரைப்ரகப்ரஸ்தக் ப்ரபூததமைக்யர்களும்வைஷ்ணவாசாம்" என்றும், "த்யஜபடதூரதரேணதாநபாபாந்" என்றும் சமநும் தன்னுதவரைக்குறித்துச் சொன்னானிறே. ... (அஎ)

அவ.— எண்பத்தெட்டாம்பாட்டு. எம்பெருமானார் உபதேசித்தஜ்ஞானத்தில் அந்வயமில்லாதாரைக் கலிதோஷம் நலியுமென்றார் - கீழ்; அந்தஜ்ஞானத்தை உபதேசிக்கைக்காக அவர் வந்து அவதரித்தபடியை யநுஸந்தித்து, எம்பெருமானாராகிற ஸிம்ஹம் குத்ஸிதானபுறச்சமயவாதிகளாகிற புலிகளை நிரஸிப்பதாக லோகத்திலே வந்தப்ரகாரத்தைச்சொல்லிஸ்தோத்ரம்பண்ணக்கடவேனென்கிறார்.—இன்று.—

கலிமிக்கசெந்நெற்கழனிக்குறையல்கலைப்பெருமா
னொலிமிக்கபாடலையுண்டுதன்னுள்ளந்தடித்ததனால்
வலிமிக்கசீயமிராமாநுசன்மறைவாதியராம்
புலிமிக்கதென்றிப்புவனத்தில்வந்தமைபோற்றுவனே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
கலிமிக்க	உழுவது நடுவது அறுப்பதாய்ச் செல்லுகிற ஆரவாரத்தால் மிக்க,	செந்நெல்	செந்நெற்கள் விளைகின்ற,
		கழனி	வயல்களையுடைய,

http://acharya.org

பதம்.	உரை.
குறையல்	திருக்குறையலூருக்கு நிர்வாஹகராய்,
	•திருத்தமிழ் நூற்புலவராகையாலே,
கலை	சாஸ்த்ர ரூபமான ப்ரபந்தங்களைச் செய்தருளின,
பெருமான்	வைபவத்தையுடையரான திருமங்கையாழ்வாருடைய,
மிக்கவொலி பாடலை	"ஒலிகெழுபாடல்" என்னும்படி மிக்க த்வநியையுடைத்தான திருமொழியை,
உண்டு	தாரகமாகவும் போஷகமாகவும் போக்யமாகவும் அநுபவித்து,
தன்	தம்முடைய,
உள்ளம் தடித்து	திருவுள்ளம் பூரித்து,
அதனால்	அத்தாலே,
	ப்ரதிபக்ஷ நிரஸநத்தை ஸஹியாதபடி,
வலிமிக்க	அதி ப்ரபலமான,
சீயம்	ஸிம்ஹம்போலே இருக்கிற,
இராமாநுசன்	எம்பெருமானார்,
	பாஹ்யரைப்போலன்றிக்கே,
மறை	வேதங்களை அங்கீகரித்துக்கொண்டு நின்று,
வாதியராம்	வாதங்களைப்பண்ணி லோகத்தை நலிப்பிக்கிற,
புலிமிக்க தென்று	குத்ருஷ்டிகளாகிற புலிகள் மிக்கதென்று,
	ஸாதும்ருகங்களை நலிய வல்லன துஷ்டம்ருகமான புலிமிக்க காட்டிலே அவை தன்னை நிரஸிக்க வந்ததொரு ஸிம்ஹம் வந்து தனிப்படுமாபோலே,
இப்புவனத்தில்	கர்மபூமியாக ஸ்ரீ குத்ருஷ்டிகள் வர்த்திக்கிற இந்த பூமியிலே
வந்தமை	தம்முடைய அவதரித்தப்ரகாரத்தை,
போற்றுவன்	ஸ்துதிக்கக் கடவேன்.

கலி - ஆரவாரம்; மிடுக்குமாம். அப்போது பூசலைச்சொல்லுகிறது. கழனி-வயல். சீயம்-ஸிம்ஹம். போற்றுதல்-புகழுதல்.

வ்யா.—அ.—எண்பத்தெட்டாம்பாட்டு. இப்பாட்டில் - எம்பெருமானார் உபதேசித்த ஜ்ஞாநத்தில் அந்வயமில்லாதாரை கலி ப்ரயுக்தமானதோஷம் ஆக்ரமித்து நலியுமென்று சொல்லி இதிலே. அந்த ஜ்ஞாநத்தை லோகத்தார்க்கெல்லாம் உபதேசிக்கைக்காக

http://acharya.org

அவர் உயிர்வலின்றமையின்றும் உமன்னின்தலத்துநிற்றபடியை யநுஸந்தித்து, செந்நெல்கள் விளையாநின்றுள்ள வயல்களையுடைய திருக்குறையலூர்க்கு ஸ்வாமியான திருமங்கையாழ்வாருடைய திவ்யப்ரபந்தரூபமான பெரியதிருமொழியை அநுபவித்துக்களித்து, ப்ரதிபக்ஷிகளுடைய கர்வத்தையும் ஸஹிக்கமாட்டாதே ப்ரபலமான ஸிம்ஹம்போலேயிருக்கிற எம்பெருமானார், வேதபாஹ்யரைப்போலன்றிக்கே வேதத்தைப்ரமாணமாக இசைந்து அதற்கு விபரீதார்த்தங்களைச்சொல்லி லோகத்தை மயிப்பித்த குத்ருஷ்டிகளாகிற புலிகள் தன்னாக ஏற்றுக்கொண்டு நடையாடமாட்டாநின்ற அவர்களுடைய மதங்களை நிரஸிக்கைக்காகஅவர்கள் நடையாடுகிற இந்தபூமியிலே வந்தவதரித்தப்ரகாரத்தை ஸ்துதிக்கக் கடவோமென்கிறார்.

வ்யா,—(கலிமிக்கசெந்நெல்கழனி) உழுவது நடுவது அறுப்பதாய்க்கொண்டு ஸர்வகாலமும் செல்லுகிற ஆரவாரத்தால் மிக்க செந்நெல்லையுடைத்தான கழனிகளையுடைய. கலி - ஆரவாரம். அன்றிக்கே, "கலி" என்று - மிடுக்காய் ஸாரவத்தான பூமியிலே விளைந்தசெந்நெலென்னுதல். தத்தத்காலங்களிலே விளைந்து விளைந்த பயிராகையாலே ஸாரமாக விளையாநிற்கிற பயிரென்னுதல். கழனி-வயல். (குறையல்கலைப்பெருமான்) இப்படிப்பட்ட செந்நெல்களோடே கூடின வயல்களையுடைத்தாகையாலே, "மன்னிய சீர் தென்குறையலூர்" என்கிறபடியே - ஸம்பத்துக்களையுமுடைத்தான திருக்குறையலூருக்கு நிர்வாஹகராய், "இருந்தமிழ் நூல்புலவன்" என்கிறபடியே - ஸமஸ்தரூபங்களான திவ்யப்ரபந்தங்களைச் செய்தருளி உபகரித்த மஹோபகாரகரான திருமங்கையாழ்வாருடைய. "குறையல்பிரானடிக்கீழ்" என்ற இப்ரபந்தஸித்திலேயும் இவருடைய உபகாரத்தை அநுஸந்தித்தாரிறே. செய்நன்றியறிதலில் க்ருதஜ்ஞராய்ப் போருகிறவர் இவரும் அவருமே காணும்.

(ஒலிமிக்கபாடலை) இம்மஹோபகாரகராலே அருளிச்செய்யப்பட்ட திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் தொடக்கமான திவ்யப்ரபந்தங்களை "இன்பப்பாடல்" என்கிறபடியே-அநுஸந்திக்கப் புக்கவர்களுக்கு அர்த்தஜ்ஞாநமும் போக்யதையாலும் ஆனந்தம் மிகுதியாய்க்கைபுரண்டிருக்கையாலேமிடுக்க, "கலியனொலிமாலை" என்கிறபடியே பெருமிடறு செய்து அநுஸந்திக்கவேண்டுகையாலே மிக்கத்வநியையுடைத்தானப்ரபந்தங்கள். "மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங்கூறவதாரப் பண்ணியருளின திவ்யப்ரபந்தங்களென்றபடி. ஒலி - த்வநி. அந்தப்ரபந்தங்களைதாரகமாகவும் போஷகமாகவும்

http://acharya.org

போக்யமாகவும் நினைத்துக்கொண்டு மூர்த்தமிட்டாக வநுபவித்து. (தன்னுள்ளந்தடித்து) அவ்வநுபவஜநிதப்ரீதியாலே தம்முடைய திருவுள்ளம்பூரித்து. இவ்வநுபவத்தாலே வாஹ்யப்ரதிபக்ஷநிரஸனத்துக்குத் தகுதியான மிடுக்கு அவருக்குண்டானது. தடித்தல்-பூரிக்கை. (அதனால் வலிமிக்கசீயம்) அந்த பரிபூர்ணஜ்ஞாநமாகிற மிக்க பலத்தையுடையராய் ஸிம்ஹம்போலே யிருக்கிற. (இராமாநுசன்) எம்பெருமானார். ப்ரதிபக்ஷ தர்ஸநத்தை ஸஹியாதே அவர்களை பக்நராகப்பண்ணுமவராகையாலே, "வலிமிக்கசீயம்" என்கிறார். வலி - பலம். சீயம் - ஸிம்ஹம். (மறைவாதியராம்) வேதாப்ராமாண்யவாதிகளான பௌத்தாதிகளைப்போலன்றிக்கே வேதத்தைப்ராமாணமாக அங்கீகரித்துவைத்து அதுக்கு அபார்த்தங்களைச்சொல்லி இவற்றைக்கொண்டு துர்வாதம்பண்ணி லோகத்தாரெல்லாரையும் ப்ரமிப்பித்துவஶீகரித்துக்கொண்டுபோருகிற குத்ருஷ்டிகளாகிற. (புலிமிக்கதென்று) புலிகள்மிக்கதென்று. நிவாரகரில்லாமையாலே அவை தனிக்கோல் செலுத்தாநின்றன வென்று. (இப்புவனத்தில் வந்தமை) ஸாதும்ருகங்களை நலியாநின்றுள்ள துஷ்டம்ருகமானபுலிமிக்ககாட்டிலே அவைதன்னை நிரஸிக்கவற்றானதொரு ஸிம்ஹம்வந்து தலைப்படுமாப்போலே ஸன்மத தூஷகரான குத்ருஷ்டிகள் வர்த்தித்து தனிக்கோல் செலுத்துகிற இத்தபூமியிலே தந்மததூஷகரைக்கொண்டு விண்ணின்தலைநின்றும் வந்து அவதரித்தப்ரகாரத்தை. (போற்றுவனே) ஸ்துதிக்கக்கடவேன். போற்றுதல்-புகழ்தல். "[illegible]" "குணப்ரகாஶவேத்திமாத்" என்கிறபடியே அவர்தம்முடைய குணசேஷ்டிதங்களைப் புகழக்கடவேனென்றருளிச்செய்தாராயித்து. ()

உரை.—அ.—எண்பத்தொன்பதாம்பாட்டு. "போற்றுவன்" என்று புகழுவதாக ஒருப்பட்டவர் அதுநிமித்தமாகத் தமக்குண்டான பயத்தை எம்பெருமானார்தமக்கு விண்ணப்பஞ்செய்கிறார்.

ரூ.—போற்றருஞ்சீலத்திராமாநுசநின்புகழ்தெரிந்து
சாற்றுவனேலது தாழ்வது தீரிலுன்சீர்தனக்கோர்
ஏற்றமென்றேகொண்டிருக்கிலுமென்மனமேத்தியன்றி
யாற்றகில்லாதிதற்கென்னினைவாயென்றிட்டஞ்சுவனே. ()

பதம்.	உரை.	பதம்.	உரை.
போற்றரும்	"நாளு மென்புகழ் கோவுணிலம்" என்னுமாப் போலே புகழ்ந்து தலைக்கட்டவரிதான	சீலத்திராமாநுச	சீலகுணத்தையுடையவரே,
		நின்	தேவரீருடைய,
		புகழ்	கல்யாணகுணங்களை
		தெரிந்து	விவேகித்து,

http://acharya.org

பதம்.	உரை.
சாற்றுவனேல்	ஸோசப்ரயித்து மனம்படி பேசவேனுமில், வைசிஷ்ட்ட குணங்களை சண்டாளன் வர்ணித்துப்பேசுகை அவற்றுக்கு அவத்யமாய்த் தலைக்கட்டு மாப்போலே,
அது	அது,
தாழ்வு	இழிவாகவிருக்கும்;
அதுநிகில்	அப்படி பேசுகிற அத்தைத் தவிரில்,
உன்சீர் தனக்கு	தேவரீர் குணங்களுக்கு,
ஓரேற்றமென்று கொண்டேயிருக்கிலும்	ஒரு உத்கர்ஷமாயிருக்குமென்று கொண்டே இராநிற்கச் செய்தேயும்,
என்	என்னுடைய,
மனம்	மனஸ்ஸானது,
ஏத்தியன்றி	தேவரீர் குணங்களை ஸ்தோத்ரம் பண்ணி யொழிய,
ஆற்றகில்லாது	தரிக்கமாட்டுகிற தில்லை; "மூர்க்குப்பேசுகின்று விவனென்று முனிவர் வேறுமென்னுளிருக்கா நின்றேன்" என்று மாப்போலேயிரா நின்றது என்னுடைய தசை,
இதற்கு	இதுக்கு,
என்னினைவாயென்றிட்டு	தேவரீர் ஏதுதிருவுள்ளம் பற்றுகிறதோ வென்று,
அஞ்சுவன்	பீதனாகின்றேன்.

சாற்றுதல் - ப்ரகாசமாகச் சொல்லுதல். (அகூ)

வ்யா.—அ.—எண்பத்தொன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே, ஸ்வேதப்ரதாரகராய் லோகத்தாரெல்லாரையும் விபரீதஜ்ஞானராக்கி ப்ரமிப்பித்து கலிப்பித்துப்போந்த குத்ருஷ்டிகளாகிற புலிகளை பக்தர்களுக்கு அவதரித்தவமிக்க சேமானஎம்பெருமானாரை ஸ்துதிக்கிறேனென்று வ்யவஸாயத்தை ஆவிஷ்கரித்து, இதிலே - தம்முடைய பூர்வவ்ருத்தத்தை அநுஸந்தித்துக்கொண்டு புகழ்ந்து தலைக்கட்டவரிதான பரிலகுணத்தையுடையரான எம்பெருமானாருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்து, மஹாப்ரபாவமுடையரானதேவரீரை அத்யந்தாதமனான் நான்ஸ்துதிக்கை தேவரீர்க்கு அவத்யமாய்த் தலைக்கட்டக்கடவ தாகையாலே ஸ்துதியாதே யொழிகையே தேவரீர்க்கு அதிசயமிறே. ஆனாலும் ஸ்தோத்ரம்பண்ணாதொழியில் என்மனஸ்ஸு ஆறியிராது, இப்படி யானபின்பு, "மூர்க்குப்பேசுகின்றுவிவன்" என்று தேவரீர் திருவுள்ளத்தில் என்னவோநிறதோ என்று நான் அத்தை நினைத்து எப்போதும் பீதனாகநின்றேனென்று விண்ணப்பம் செய்கிறார்.

http://acharya.org

வியா.—(போற்றருஞ்சீலத்திராமானுச) எத்தனையேனும் தரமுடையவர்க்கும் ஸ்துதித்துத்தலைக்கட்டவரிதான சீலகுணத்தையுடைய எம்பெருமானாரே. இவருடைய சௌசீல்யம்பின்னை புறங்காயின்றி நானே, ஊமைமுதலானோரிடத்திலே காணப்பட்டதிறே. (நானுமென்புகழ் சேவுள சீலமே) என்றும், "[illegible]" "ஸீலவாந்" என்றுஞ் சொல்லப்படுகிற ஸர்வேச்வரனுடைய சீலகுணத்தை புகழ்ந்துதலைக்கட்டினும் இவர்தம்முடைய சீலகுணத்தைப் புகழ்ந்து தலைக்கட்டவரிதாயிருக்குமென்னுமதுவும் இவர்தம்முடைய திருவுள்ளத்தி லோடுகிறது.

(மின்புகழ்தெரிக்கு சாற்றுமவேல்) "[illegible]" "தத்வேனயஸ்ய மஹிமார்ணவ ஸீகராணு: ஶக்யோ ந மாதுமபி ஸர்வபிதாமஹாத்யை:" என்றும், "[illegible]" "யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத்வல்லபோபி ப்ரபு:- நாலம் மாதுமியத்தயா" என்றுஞ் சொல்லப்படுகிற தம்பதங்களைப்போலே, "[illegible]" "[illegible]" என்கிறபடியே அகத்தியஞானாவபோலே பெரியமதிப்பையுடையராய், "[illegible]" "மதுப்ரணமமண்டலரூபகமண்டலம்பரம் தீர்த்தபரிமண்டலம் த்ரிவிதத்வியூஹர்ஸம்- தபோஞ்ஜிதத்தர்ஞ்சலம் தவீதவாதிபக்ஷயவைபவம் ஸமாதிருண ஸாகரம் ஸாணமெமிர மாதுஷும்" என்கிறபடியே ஸர்வோத்தரரான தேவரீருடைய சௌசீல்ய சௌலப்யாதி கல்யாணகுணங்களை நன்றாகத் தெரிக்கு அவற்றை எல்லாருமறியும்படி ப்ரகாசமாகச் சொல்லுகைக்குப்பெறுமின். தெரித்தல் - ஆராய்தல். சாற்றுதல் - ப்ரகாசமாகச் சொல்லுதல்.

(அதுதாழ்வு) விலக்ஷணகுணங்களைச் சொல்லாதவனைச் சொல்லித் தப்பெனில் அது அவனுக்கு அவத்யமாய்த் தலைக்கட்டுமாப்போலே நான் பண்ண தொடுப்பட்ட அத்தன்மை தேவரீர்க்கு அவத்யமாய்த் தலைக்கட்டும். "இமையோர் பலரும் முனிவரும் புனைந்த கண்ணி நீர் சாந்தம்புகையோ டேந்தி வணங்கினால் - உன்பெருமைமாசூணாதோ மாயோனே" என்று - ப்ரதம பர்வத்திலே ஆழ்வாரும் இப்படியே அருளிச் செய்தாரிறே. "[illegible]" "ஆக்ஷேபத்வந்தக்ரமணல்பயநீக்ஷ ஏர்துயை" என்று ஜீயரும் ஸ்தோத்ரமுகேன இவ்வர்த்தத்தை யருளிச்செய்தாரிறே. (அதுநீகில்) உமக்கு அவத்யாவஹமான அத்தன்மையை நான் பண்ணுதொழியில். நீங்குதல் - தவிருதல்.

http://acharya.org

(உன்சீர்தனக்கு ஓரேற்றமென்றே கொண்டிருக்கிலும்) "[illegible]" "தர்ஶிக்த விரிஞ்சாதி திவ்யருபமபூதய:-ராமாநுஜ பதாம்போஜ ஸமாஸ்ரயண ஸாலிந:" என்கிறபடியே ஸ்வாச்ரிதரான சேதநரை, "[illegible]" "தமிதாசனி தர்ஜூயமே" என்னும்படியான தேவரீர்தம்முடைய ஸாம்யத்தைக் கொடுக்கத் தக்க மஹாப்ரபாவத்தையுடையரான தேவரீருடைய கல்யாண குணங்களுக்கு அதிசயமாயிருக்குமென்று இவ்வர்த்தத்திலே வ்யவஸிதனாயிருந்தேனே யாகிலும், (என்மனமேத்தியன்றி யாற்றகில்லாது) "[illegible]" "சஞ்சலம்ஹிமந:" என்றும், "நின்றவாவில்லாநெஞ்சு" என்றும் சொல்லுகிறபடியே அதிசஞ்சலமாய் அதிசபலமாய் தேவரீருடைய ப்ரபாவத்தை உள்ளபடி யறியமாட்டாதவென்னுடையமனஸ்ஸானது தாம்இவ்விஷயத்தைப் புகழுகை, உபசாரபூர்வகமாகப்பண்ணும் அபசாரமென்று அறியமாட்டாதே தேவரீருடையகுணங்களை அடைவுகெட ஸ்தோத்ரம் பண்ணியொழியத் தரிக்கமாட்டுகிறதில்லை.

(இதற்கென்னினைவாயென்றிட்டு) இப்படிப்பட்ட வென்னுடைய ஸாஹஸோத்யோகத்துக்கு தேவரீர்திருவுள்ளத்திலே என்னாக நினைப்பிடுகிறதோ வென்று கருத்து. (அஞ்சுவனே) தேவரீருடைய மேன்மையையும் என்னுடைய தண்மையையும் அடைவே பார்த்து அஞ்சாநின்றேன். "மூர்க்குப்பேசுகின்று இவனென்று முனிவாயேலு மென்னுள்ளிருக்கமாட்டேன்" என்னுமாப்போலே யிராநின்றது என்னுடைய தசை. இதுக்கு தேவரீர் என் திருவுள்ளம்பற்றுகிறதோவென்று பீதனாக நின்றேனென்று தாத்பர்யம். ... ... (அகூ)

உரை.—அ.—தொண்ணூறாம்பாட்டு. இவர், "அஞ்சுவன்" என்றவாறே இவர் பயமெல்லாம் போம்படி குளிரகடாக்ஷிக்க, அத்தாலே நிர்ப்பீதராய் ஸம்ஸாரத்திலும் ஏதேனுமொன்று இவ்விஷயத்திலே ஆநுகூல்யத்தைப்பண்ணிப் பிழைத்துப் போகாதிருக்க, சேதநர் து:க்கக்லேசத்தை அநுபவிப்பதே! என்று இன்னாதாகிறார்.

மூ.—நினையார்பிறவியைநீக்கும்பிரானையிந்நீணிலத்தே
எனையாளவந்தவிராமாநுசனையிருங்கவிகள்
புனையார்புனையும்பெரியவர்தாள்களில்பூந்தொடையல்
வனையார்பிறப்பில்வருந்துவர்மாந்தர்மருள்சுரந்தே. (கூ0)

http://acharya.org

பதம்.	உரை.
பிறவியை	தம்மை நினைத்தவர்களுடைய ஜந்மத்தை,
நீக்கும்	போக்கும்,
பிரானை	உபகார சீலரான இவரை,
நினையார்	நினைக்கிறார்களில்லை; உ நிகரின்றி நின்ற என் நீசதையை யுடைய வென்னை அங்கீகரித்து தம்முடைய குணங்களுக்கு தேசிகனாய் வாசகமிடும்படி பண்ணி இப்படியே ஆளுகைக்காக,
இந்நீணிலத்தே	இப்பூமிப் பரப்பெல்லாம் இடக்கச் செய்தே,
எனையாள வந்த	தான் இடந்த விடம் தேடிவந்த,
இராமாநுசனை	எம்பெருமானாரை,
இருங்கவிகள்	தத்த்வ ப்ரகாசகமான பெரிய கவிகளை,
புனையார்	தொடுக்கிறார்களில்லை;
	தங்கள் கவிபுனையமாட்டுகிற நிரக்ஷரராகில்,

பதம்.	உரை.
புனையும்	அவர் விஷயமாகக் கவிகளைத் தொடுக்கும்,
பெரியவர் தாள்களில்	மஹா ப்ரபாவருடைய திருவடிகளிலே,
பூந்தொடையல்	பூமாலைகளை,
வனையார்	ஸமர்ப்பிக்கிறார்களில்லை;
மாந்தர்	இத்தனைக்கும் யோக்யமான ஜந்மத்தைப் பெற்றிருக்கிறவர்கள்,
மருள்சுரந்து	அறிவுகேடுமிக்கு,
பிறப்பில் வருந்துவர்	ஜந்மஸாகரம் அகப்படாநின்றார்கள்; ஐயோ! இவர்கள் பாக்யஹீநதை இருந்தபடியென்னென்று கருத்து.

"நினையார் பிறவியை நீக்கும் பிரானை" என்றும்பாடம் சொல்லுவர்கள். புனைதல் - தொடுத்தல். வனைதல்-செய்தல். இத்தால் - ஸமர்ப்பிக்கையைச்சொன்னபடி. வருந்துதல் - துக்கித்தல். () (கூ௦)

